
கிராம சுயராஜ்யம்











காந்திய இலக்கியச் சங்கம் மதுரை-20

கிராம சுயராஜ்யம்

மகாத்மா காந்தி

தமிழாக்கம் : அ. இராமசாமி

காந்திய இலக்கியச் சங்கம்

காந்தி மியூஸியம், மதுரை 625 020

✆ 0452 - 2533957

Email: glsmadurai20@gmail.com.

நூலின் பெயர்	:	கிராம சுயராஜ்யம்
ஆசிரியர் பெயர்	:	மகாத்மா காந்தி
தமிழாக்கம்	:	அ. இராமசாமி
பொருள்	:	சமூகம்
வெளியிட்டோர்	:	காந்திய இலக்கியச் சங்கம், மதுரை – 625 020.
அச்சிட்டோர்	:	ஸ்ரீகுரு கிராபிக்ஸ், 2/340, சக்திநகர் 2வது குறுக்குத் தெரு, அய்யர் பங்களா, மதுரை – 14
பதிப்பு&பிரதிகள்	:	இரண்டு பதிப்புகள் 7,000 பிரதிகள் 3–ம் பதிப்பு – டிசம்பர் 2011
பிரதிகள்	:	2000
விலை	:	**ரூ. 80.00**

Title	:	Grama Swarajyam (Village Swaraj)
Author	:	Mahatma Gandhi
Translation	:	A. Ramasamy
Subject	:	Social
Publisher	:	Gandhian Literature Society, Madurai - 625 020
Printed by	:	ShriGURU Graphics, 2/340, Sakthi Nagar 2nd Cross St., Ayyar Bungalow, Madurai-14
Edition & Copies	:	1 to 2nd Edition 7,000 Copies Third Edition : 2011 December
Copies	:	2000
Price	:	**Rs. 80.00**

பதிப்புரை

இன்றும் நமது தாய்த்திருநாடு கிராம இந்தியாவாகத் தான் இருக்கின்றது. ‘‘இந்தியா கிராமங்களில் வாழ்கின்றது’’ என்ற காந்தியடிகளின் கருத்து இன்றைக்கும் நூற்றுக்கு நூறு உண்மையாக இருப்பதைக் காண்கின்றோம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றி பல்வேறு வகையான கொள்கைகளும் கருத்துக்களும் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வளர்ச்சி பெற்ற நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப் பெற்றவை. நமது நாட்டின் சூழ்நிலைக்கு அவை எந்த அளவிற்கு ஒத்து வரும் என்பது கேள்விக்குரியதாகும்.

நமது நாட்டில் ஏறத்தாழ எழுபது சதவிகித மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். இந்தியக் கிராமங்களின் பின்புலமும், இயல்புகளும் தனிவகையானவை. இங்குள்ள சிக்கல்களும், செயல்படும் சக்திகளும் வேறு வகையானவை. இங்கு மேலை நாட்டு வளர்ச்சி முறைகளைப் பின்பற்றினால் எதிர்பார்க்கும் விளைவுகள் ஏற்படாது.

காந்தியடிகள், எல்லோரும் இன்புற்று வாழ்கின்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க விரும்பினார். அந்த சமுதாயம் எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி தெளிவான, தீர்க்கமான கருத்துக்களைக் கொண்டிருந்தார். தனது இலட்சிய சமுதாயத்தை முதலில் நமது நாட்டில் உருவாக்கக் கருதினார். அண்ணலின் நிர்மாணத் திட்டங்கள் இந்த நோக்கில் உருவானவையே.

இந்தியாவில் அமைகின்ற ஒப்பிலாத சமுதாயத்தின் அடிப்படையாக கிராமங்கள் இருப்பதை உணர்ந்த காந்தியடிகள், கிராம வளர்ச்சியைப் பற்றி தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்தார். அவரது கருத்துக்கள் எல்லாம் அவரது நடைமுறை அனுபவத்தைச் சார்ந்து உருவானவை. அவரைப் போன்று சமுதாய வளர்ச்சிக் கருத்துக்களில் சாதனைகள் செய்து சாதனைகள் புரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்று கருதலாம்.

நமது நாட்டில் விடுதலைக்குப் பிறகு விரைந்து முன்னேற்றம் காண சமுதாய வளர்ச்சித் திட்டத்தைச் (Community Development Programme) செயல்படுத்திய பொழுது வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு வழிகாட்ட நூல்கள் தேவைப் பெற்றன. அப்பொழுது காலத்தேவையை நிறைவேற்றும் வகையில் காந்திய அறிஞர் எச். எம். வியாஸ் முயன்று, அண்ணலின் கருத்துக்களை முறைப்படுத்தி தொகுத்து, ''கிராம சுயராஜ்யம்'' என்ற நூலாக வெளியிட்டார்.

பொதுவாக கிராம வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவர்களும், குறிப்பாக கிராம வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துகின்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களின் சுரங்கமாக இந்நூல் திகழ்கின்றது.

தமிழக அரசின் ஊழியர்களின் தேர்வுக்குரிய நூலாகவும் இது அமைந்திருக்கின்றது.

காந்தியத் தொகுதிகளில் ஒன்றாக முன்பு வெளிவந்த நூல், இப்பொழுது தனி நூலாக உங்கள் கைகளில் தவழ்கின்றது.

இந்நூலின் உள்ளடக்கக் கருத்துக்கள் எல்லாம் நமது கல்வியில் இடம் பெற வேண்டியவை. குறைந்த அளவில் பட்ட வகுப்பு மாணவர்களாவது இவற்றைத் தெரிந்திருந்தால் அவர்களது வாழ்க்கை நோக்கில் வரவேற்கத்தக்க மாறுதல் ஏற்படலாம். நமது நாட்டுக் கல்வியாளர்கள் இதனைப் பற்றி எண்ணிப்பார்க்கலாம்.

பல நூல்களை ஒரு முறை படித்தால் போதும். சில நூல்களை மறுபடியும், மறுபடியும் படிக்க வேண்டும். அப்படிப்பட்ட நூல்களில் ஒன்றுதான் இந்நூல்.

எல்லா வகையான மக்களும் படிக்க வேண்டிய நூல் என்பதால் அதற்கேற்ற முறையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றோம்.

எல்லா நூலகங்களிலும் இருக்க வேண்டியது இந்நூல்.

மதுரை
31–12–2011

காந்திய இலக்கியச் சங்கம்

பொருளடக்கம்

வாசகருக்கு vii

முன்னுரை 1

முகவுரை 6

அத்தியாயம்

1. சுயராஜ்யம் என்றால் என்ன? 27
2. இலட்சிய சமுதாயத்தின் சித்திரம் 36
3. எத்திசையில் நம்பிக்கை தோன்றுகிறது? 39
4. நகரங்களும் கிராமங்களும் 56
5. கிராமங்களுக்கு உரிய இடம் 68
6. கிராம சுயராஜ்யத்தின் அடிப்படைத் தத்துவங்கள் 74
7. உணவுக்காக உடல் உழைப்பு 87
8. சமத்துவம் 96
9. தர்மகர்த்தாக் கொள்கை 99
10. சுதேசி 104
11. சுயதேவைப் பூர்த்தியும் கூட்டுறவும் 114
12. பஞ்சாயத்து ராஜ்யம் 122
13. ஆதாரக் கல்வி 132
14. விவசாயமும் கால்நடை வளர்ப்பும் - I 157
15. விவசாயமும் கால்நடை நலனும் - II 166
16. விவசாயமும் கால்நடை நலனும் - III 175
17. விவசாயமும் கால்நடை நலனும் - IV 181

18. விவசாயமும் கால்நடை நலனும் - V 200

19. கதரும் நூல் நூற்பும் 212

20. மற்ற கிராமக் கைத்தொழில்கள் 239

21. கிராமப் போக்குவரத்து 272

22. நாணயம், பரிமாற்றம், வரி 280

23. கிராமத் துப்பரவு 283

24. கிராமத்தில் உடல்நலம், சுகாதாரம் 286

25. உணவு 312

26. கிராமப் பாதுகாப்பு 327

27. கிராம ஊழியர் 334

28. அரசாங்கமும் கிராமங்களும் 371

29. இந்தியாவும் உலகமும் 378

30. இராம ராஜ்யம் 384

ஆதார நூல்கள் 395

வாசகருக்கு

என்னுடைய எழுத்துக்களை விரும்பிப் படிப்பவர்களுக்கும், அவைகளில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கும் நான் ஒரு விஷயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

முன்னால் சொன்னதிலிருந்து முரண்படாது எதையும் கூற வேண்டுமென்பதில் நான் அக்கறைப்பட்டுக் கொள்வதில்லை. சத்தியத்தை நாடி நான் சென்றதில் நான் ஏற்கனவே கொண்டிருந்த பல கருத்துக்களை விட்டு, புதிதாகப் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறேன். எனக்கு வயதாகி விட்டதென்றாலும், எனது ஆன்மா வளர்ச்சியடையாது நின்றுவிட்டதென்றோ அல்லது எனது ஊனுடல் போய்விட்ட பின்பும் என் வளர்ச்சி நின்று விடுமென்றோ நான் எண்ணுவதில்லை. ஆகையால், எனது அக்கறையெல்லாம், க்ஷணத்துக்கு க்ஷணம் சத்தியத்தின் அழைப்புக்கு, எனது ஆண்டவனின் கட்டளைக்குப் பணிந்து செல்வதேயாகும். ஆகவே எனது இரண்டு வாசகங்களுக்கிடையே ஏதாவது முரண்பாடு இருப்பதாக வாசகருக்குத் தெரிந்தால் - அந்த முரண்பாட்டைக் கண்ட பின்பும் எனது மதியின் நன்னிலையில் அவருக்கு நம்பிக்கை இருப்பதானால் - ஒரே பொருளைப் பற்றிய இரண்டு வாசகங்களில் எது பிந்தியதோ அதை அவர் எடுத்துக் கொள்வது நலம்.

ஹரிஜன் 29–4–1933 **மோ. க. காந்தி**



முன்னுரை

''கிராம சுயராஜ்ய''த்தைப் பற்றி மகாத்மா காந்தி எழுதியவைகளில் முக்கியமானவைகளைப் பொறுக்கி யெடுத்து, ஒரு புத்தக வடிவில் நவஜீவன் பதிப்பகத்தார் வெளியிடுகின்றனர் என்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். விவசாயம், கிராமத்தொழில், கால்நடை வளர்ப்பு, போக்குவரத்து, ஆதாரக்கல்வி, சுகாதாரம், உடல்நலம் உள்படக் கிராம வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப்பற்றி காந்திஜியின் கருத்துக்கள் என்னவென்பது இந்தி வெளியீட்டில் அடங்கியிருக்கின்றன. அரசியல் பொருளாதார சக்தியை விரிவான முறையில் பரவல் மயமாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தியாவில் பஞ்சாயத்து ராஜ்யத்தை ஸ்தாபிக்க நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், ஏராளமான அதிகாரிகளுக்கும் அதிகாரச் சார்பற்ற ஊழியர்களுக்கும் இந்தப் புத்தகம் மிகவும் உபயோகமுள்ளதாய் இருக்கும். பெரும்பாலும் மேற்கு ஜனநாயக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஏதோ ஒரு வகைத் திட்டம் என்று சமுதாய வளர்ச்சி இயக்கத்தைக் கருதி விடக் கூடாது; இந்திய நிலைமைகளையும் பரம்பரையையும் அது அனுசரித்து இருப்பது அவசியம். ஆகையால், இந்த இயக்கத்தில் பங்கு கொள்வதற்காகப் பயிற்சி அளிக்கப்படும் எல்லா ஊழியர்களும் கிராமப் புனருத்தாரணத்தின் பல்வேறு அம்சங்களில் போதுமான அறிவுபடைத்தவர்களாய் இருக்க வேண்டுமென்பது தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்தியாவின் திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைப்பற்றி காந்திஜிக்கு இருந்த அனுபவத்தையும் அவர் கொண்டிருந்த கருத்துக்களையும் நாம் கவனியாது விட்டுவிடுவோமானால், நம்முடைய ஜனநாயகம் நல்ல அஸ்திவாரத்தில் உருவாவதற்குப் பெரிய இடையூறு செய்தவர்களாவோம்.

நவீன முறையில் தொழில் மயமாக்குவதைப்பற்றி காந்திஜி பத்தாம் பசலிக் கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்று எண்ணுவது தவறாகும். உண்மையைச் சொல்லப் போனால், யந்திர மயமாக்குவதை முழுமையாக அவர் எதிர்க்கவில்லை. யந்திரங்கள் மீது கொண்டுள்ள வெறியைத் தான் அவர் வன்மையாக எதிர்த்தார். கிராமங்களில் உள்ள கோடிக்கணக்கான கைவேலைப்பாட்டுத் தொழிலாளிகளுக்கு வேலை தரக்கூடிய சிறிய யந்திரங்களில் செய்யக்கூடிய ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் அவர் வரவேற்றார். பெரிய தொழிற்சாலைகளில் மொத்தமாகப் பொருள்களை உற்பத்தி செய்து குவிப்பதைக் காட்டிலும், பொது மக்கள் தங்களுடைய வீடுகளிலும் குடிசைகளிலும் பொருள்களை உற்பத்தி செய்வதை ஆதரித்தார். இந்தியாவில் உடலால் உழைக்கும் சக்திவாய்ந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் முழுநேர வேலை அளிக்க வேண்டுமென்பதில் காந்திஜி மிகவும் ஆவலுடன் இருந்தார். நாட்டுப்புறங்களில் கிராம, குடிசைத் தொழில்களைத் திறமையான முறையில் நிறுவுவதன் மூலந்தான் இந்தக் குறிக்கோளைச் சாதிக்க முடியும் என்பதை அவர் நிலை நாட்டினார். கிராமப்புறங்களில், பயன்படுத்தப்படாது சும்மாயிருக்கும் மனித சக்தியைப் பூரணமாகப் பயன்படுத்தாத எந்தப் பொருளாதாரத் திட்டத்தையும் சரியான தென்றோ அல்லது விஞ்ஞான பூர்வமானதென்றோ கூற முடியாது. ‘‘பஞ்சத்தால் அடிபட்டு, வேலையற்றிருக்கும் மக்களுக்கு, வேலையாகவும், (உணவுக்கான உறுதி என்ற முறையில்) சம்பளமாகவும் கடவுள் தோன்ற வேண்டும். அந்த ஏழை மக்கள், கடவுள் இவ்வாறு காட்சி அளிப்பதைத் தான் ஏற்பார்கள்’’ என்று காந்திஜி (‘‘காந்திஜி பொன்மொழிகள்’’ - திரு. என். கே. போஸ் திரட்டியவை - பக்கம் 49) கூறியிருக்கிறார். முழுவேலை அளிக்க வேண்டுமென்ற இந்த லட்சியத்தை இப்போது மேற்கு நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு - அதிலும் குறிப்பாக, நிறைய மக்கள் தொகையுள்ளவையும் மக்கள் தொகை வேகமாகப் பெருகிக் கொண்டு வருகிறவையுமான வளர்ச்சியடையாத நாடுகளுக்கு - இது

அடிப்படையானது என்று அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்துடன் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்துவதைக் காட்டிலும், முழு வேலை அளிப்பது மிகவும் விரும்பத்தக்கது என்பது கால்பிரெய்த் கருத்து. ''செழிப்பான சமுதாயம்'' பக்கம் 155)

கிராமப் பஞ்சாயத்துக்கள் என்ற அமைப்பின் மூலம் பொருளாதார, அரசியல் சக்தியைப் பரவல் மயமாக்க வேண்டுமென்பதை மகாத்மா காந்தி ஆணித்தரமாக வலியுறுத்தினார். இந்தியாவில் உள்ள பஞ்சாயத்து முறையை விஞ்ஞான பூர்வமாக நாம் அமுல் நடத்துவதினால், நாட்டுப் புறத்தின் பொருளாதார, சமூக பலத்தை அது உருவாக்குமென்பது மட்டுமல்லாது, வெளிநாட்டுப் படையெடுப்பு என்ற அபாயத்துக்கு எதிராக, தேசீயப் பாதுகாப்புச் சக்திகளையும் பலப்படுத்தும் என்ற திட்டவட்டமான கருத்து அவருக்கு இருந்தது. கிராமதானத்தின் மூலம், இந்தியக் கிராமங்களைக் கூட்டுறவு சமுதாய அடிப்படையில் அமைக்க வேண்டிய உடனடி அவசியத்தை ஆச்சார்ய வினோபாபாவேயும் அதிகம் வலியுறுத்திக் கொண்டு வருகிறார். இவ்வாறு ஜனநாயகத்தைப் பரவல் மயமாக்குவது அல்லது பஞ்சாயத்து ராஜ்யத்தை அமைப்பது என்ற லட்சியத்தை, பத்தாம்பசலி எண்ணங்களை அடிப்படையாகக் கொண்ட, பகுத்தறிவுக்கு இடமில்லாத வெறும் மன உணர்ச்சியாலான திட்டம் என்று கருதிவிடக்கூடாது. மேற்கு நாட்டில் தற்போதுள்ள நவீன பொருளாதார, அரசியல் சிந்தனைகளைப் படித்துப் பார்க்கும் போது, ஜனநாயகமானது ஒரு நிலையான அஸ்திவாரத்துடன் ஸ்தாபிதமாவதற்குப் பரவல் மயமான ஸ்தாபனங்கள் அத்தியாவசியம் என்று இப்போது கருதப்படுவதாகத் தெரிகிறது. ''சமூக நடவடிக்கையில் மனிதனுக்குள்ள நம்பிக்கையைப் புத்துயிர் பெறச் செய்ய வேண்டுமானால், அரசாங்கத்தைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அதனுடைய அலுவல்களைப் பரவல் மயமாக விநியோகிக்க வேண்டும்'', என்று பேராசிரியர் ஜோட் கூறுகிறார். (''நவீன அரசியல்

சித்தாந்தம்'', பக்கம் 120-21) ''பேபியன் சோஷலிசம்'' என்ற நூலில் பேராசிரியர் கோல் வலியுறுத்திக் கூறுகிறார். ''நம்முடைய ஆண்களும் பெண்களும் பரவலாகக் கூட்டுமுறையில் செயலில் ஈடுபடுவதற்கான சக்தியை ஊட்ட, சிறு ஜனநாயகங்களின் மூலமாக நம்முடைய சமுதாயத்தை நிர்மாணிக்கத் தொடங்க வேண்டும்''. இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, இந்தியாவின் கிராமப் புறங்களில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் மேற்கொள்ளப்பட்டுள்ள பஞ்சாயத்து ராஜ்யம் என்ற சோதனையானது, காந்திஜி கனவு கண்ட ''கிராம சுயராஜ்யம்'' என்னும் லட்சியத்தை அடையச் சரியான வழியாகும்.

இவைகளுக்கெல்லாம் மேலாக, லோகாயத நலன்களை மட்டும் அடிப்படையாகக் கொண்ட சமூக, பொருளாதார அமைப்பு காந்திஜியின் லட்சியமல்ல என்பதை நாம் நம்முடைய மனதில் தெளிவாகக் கொள்ள வேண்டும். எளிய வாழ்க்கையும், உயர்ந்த எண்ணமும் என்ற குறிக்கோளே உயர்ந்தது என்று அவர் கொண்டார். அவர் உயர்ந்த தரமான வாழ்க்கைக்காகப் பாடுபட்டாரேயொழிய, உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்காக மட்டும் பாடுபடவில்லை. ''உண்மையான நாகரிகம் என்பது நமது தேவைகளைப் பெருக்கிக் கொண்டுபோவதில் இல்லை. மனமார நமது தேவைகளைக் குறைத்துக் கொள்வதில் தான் இருக்கிறது'' என்று காந்திஜி கூறினார்.

துரதிருஷ்டவசமாக பொருளாதார வாழ்க்கையில் உள்ள இந்த தார்மீக, அறநெறி அம்சமானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அலட்சியம் செய்யப்படுகிறது; இதனால் உண்மையான மனித நலனுக்குப் பாதகம் ஏற்படுகிறது. ''விரிவான அடிப்படையில், விரைவாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், சரக்குகளில் முதலீடு செய்வதுடன், மனிதனிலும் முதலீடு செய்ய வேண்டும். இது உடனடியான அவசியம்'', என்று நவீனப் பொருளாதார வல்லுனர்கள் இப்போது வலியுறுத்தி வருகின்றனர்.

''பொருளாதார, அரசியல் ஜனநாயகம் வெற்றி பெறுவதற்குத் தக்க திறமையும், ஒழுக்க குணமும் உள்ள தனிப்பட்டவர்கள் போதுமான அளவில் இருக்க வேண்டும்'' என்று பேராசிரியர் ஸ்கும்பீடர் கூறுவது சரியே (''முதலாளித்துவம், சோஷலிசம், ஜனநாயகம்''). இதே கருத்தைத் திரு. கிராஸ்லேண்ட், ''செல்வ வளம் நிறைந்த ஒரு சகாப்தத்தை அனுபவிக்க, எந்தெந்தக் கோட்பாடுகள் நமக்கு உதவியாக இருக்குமோ, அந்தக் கோட்பாடுகளை மறந்துவிட்டு, அவ்வித சகாப்தத்தில் நுழைய நாம் விரும்பவில்லை'' என்ற வார்த்தைகளில் அழகாகக் கூறுகிறார். (''சோஷலிச எதிர்காலம்'', பக்கம் 529). ஆகையால் காந்திஜி கனவு கண்ட ஒரு புது இந்தியாவை நிர்மாணிக்கும் பெரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், அதிகாரிகள், அதிகாரிகளல்லாதார் ஆகிய எல்லோரும் நம்முடைய திட்டத்தில் உள்ள இந்த மனித, தார்மீக அம்சத்தை நன்கு ஞாபகத்திற் கொள்ள வேண்டும்.

புதுடில்லி, 13–11–1962 **ஸ்ரீமன் நாராயண்**

முகவுரை

மனித சமுதாயத்தின் ஐக்கியம் என்னும் லட்சியம் உலக ராஜதந்திரிகளையும், விஞ்ஞானிகளையும், இலக்கிய கர்த்தாக்களையும், பாமரர்களையும் இன்று கவர்ந்திருக்கும் அளவு இதுவரை வேறு எந்தக்காலத்திலுமே கவர்ந்ததில்லை. ஸ்ரீ அரவிந்தரின் வார்த்தைகளில் கூறவேண்டுமானால், ''மனித ஒருமைப்பாடு என்னும் லட்சியம் ஓரளவு தெளிவற்ற முறையில், நமது உணர்வின் முன்பகுதிக்கு இன்று வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய சகாப்தத்தின் அறிவு வளர்ச்சியும் மற்ற லோகாயத சூழ்நிலைகளும் சில குறிப்பிடத்தக்க விஞ்ஞான கண்டுபிடிப்புகளை அளித்திருக்கின்றன. இவ்விஞ்ஞான கண்டுபிடிப்புகள், உலகத்திலுள்ள மிகப்பெரிய அரசையும் ஒரு நாட்டிலுள்ள சிறிய மாகாணத்தைப் போன்று கருதும் அளவுக்கு உலகத்தைச் சிறிதாக்கி இருக்கிறது.''* ஆர்னால்ட் டாயின்பீயும் சரியாகக் கூறுகிறார் : ''தொழில் நுணுக்கத்தில் மேற்கு நாடுகளுக்குள்ள தீரமானது - ஏற்கனவே புலமை அழகுடன் கூறப்பட்டதுபோல - தொலைவு என்பதே இல்லாமற் செய்துவிட்டது. அதே சமயம், வரலாற்றிலேயே முதன்முதலாக, மனித வர்க்கத்தை அழிக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதங்கள் மனிதர்களிடம் கிடைக்குமாறு செய்திருக்கிறது.

ஒன்றுபட வேண்டும்

நாம் ஏன் ஐக்கியமடையவேண்டும் என்று கூறுவதற்கான காரணம் ஒருபுறம் வியப்பூட்டக்கூடிய தென்றாலும், மற்றொருபுறம் எல்லோரும் அறிந்ததே. 'உலகம் ஒன்றாக வேண்டும் அல்லது ஒன்றுமே இல்லாமலாகிவிடும்' என்ற அழகான சொற்களில் இது வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அணு சகாப்தத்தில் யுத்தத்தை நாம் ஒழிக்காவிட்டால்,

---

* *''மனித ஒருமைப்பாட்டு லட்சியம்'' என்ற நூலிலிருந்து.*

யுத்தமானது நம்மை ஒழிக்கத்தான் போகிறது என்பது இன்றைய உலகில் அரசியல் உணர்வுள்ள ஒவ்வொரு ஆண், பெண்ணுக்கும் வெளிப்படையாகத் தெரியும்''.**

பிட்ரிம் சோரோகின், தம்முடைய ஒப்பில்லாத சொற்களில், உலகின்முன் தற்போதுள்ள பிரச்னையைக் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார் : ''யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களிலிருந்து ஒருபுறம் ரத்தம் வடிந்துகொண்டிருக்கிறது; மற்றொருபுறமோ அணுசக்தியால் எழுந்துள்ள அழிவுப் பூதங்களைக் கண்ட பயம். இந்த நிலைமையில், தற்போது தன்முன்னுள்ள மரண வலையிலிருந்து தப்புவதற்கான ஒரு வழியை மனித வர்க்கம் ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. பழியுடன் மரணமடைய வேண்டாம்; வாழ்வு வேண்டும் என்று அது கெஞ்சுகிறது. யுத்தத்திற்குப் பதிலாக அமைதியை அது விரும்புகிறது. வேற்றுமையின் இடத்தில் அன்புவேண்டும் என்ற பசி அதற்கு அதிகம். ஒழுங்கின்மை இருக்கும் இடத்தில் ஒழுங்கை நிலை நிறுத்த வேண்டும் என்பதை அது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இதைக் காட்டிலும் சிறந்ததாக மனித சமுதாயம் இருக்க வேண்டும். அதிக விவேகம் வேண்டும். மனித யந்திர நாகரிகத்தில் உள்ள ரத்தந்தோய்ந்த கந்தல் ஆடைகளைக் காட்டிலும் அழகான, மெல்லிய ஆடைகள் தன் உடலுக்கு வேண்டும் என்றெல்லாம் கனவு காண்கிறது. முட்டாள்தனமாக அது ஒரு மரண வலையில் சிக்கிக் கொண்டதாகையால், இருப்பதா அல்லது இறப்பதா என்ற தவிர்க்க முடியாத பிரச்னை அதற்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நிரந்தரமாக வாழ்வதற்கும் அமரத்வம் அடைதற்கும் என்ன செய்வது என்ற கேள்விக்கு விடை காண்பதில் முன் எக்காலத்திலும் இருந்ததைக் காட்டிலும் அது அதி தீவிரத்துடன் ஈடுபட்டிருக்கிறது.''*

---

* *''ஒரே உலகமும் இந்தியாவும்'' என்ற நூலிலிருந்து இந்த நூலில் குறிப்பிடப்படும் டாயின்பீயின் மேற்கோள்களெல்லாம் இந்தப் புத்தகத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன.*

''மனிதவர்க்கத்தின் புனருத்தாரணம்'' என்ற நூலிலிருந்து.

உலக அரசாங்கம்

மரண அபாயத்தை விளைவிக்கும் ஆயுதங்களால் தற்போது மனித வர்க்கத்துக்கு அறைகூவல் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித அறைகூவலுக்கு உள்ளாகியிருக்கும் மனிதவர்க்கம், சரியான வழியில் செயல்படத் தவறிவிட்டால், அதற்குள்ள மாற்றுவழி பூரண அழிவுதான். மனித வர்க்கம் காப்பாற்றப்படுவதே உலக அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுவதில் தான் இருக்கிறது. யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதனால் ஏற்பட்ட அவசியம் இதைத் தவிர்க்க முடியாததாகச் செய்துவிட்டது. உண்மையான உலக அரசாங்கத்தை ஸ்தாபிப்பது என்பதற்கோ, ஏற்கனவே உள்ள தேசீய அரசாட்சிகளை ஒழித்து விடுவதென்பதுதான் பொருளாகும்.

இம்சைப்பாதை கூடாது

எவ்வாறு உலக அரசாங்கத்தை அமைப்பதென்பது ஒரு முக்கியமான கேள்வி. ஏனென்றால், தேசிய ஆட்சிகளை அகற்றுவதென்பது நடைமுறையில் எளிதான காரியமல்ல. கீழ்க்கண்டவாறு காந்திஜியைப் போன்று கூறக் கூடியவர்கள் உலகில் ஒரு சிலரே இருப்பார்கள் : ''உலக நாடுகளெல்லாம் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டுமென்பதற்குத் தயாராயிருக்கிறோம். சுதந்திரத்தைக் காட்டிலும் இதற்கு நாம் அதிகம் தயார். இவ்வாறு நாம் கூறுவதில் சாத்தியமற்றதோ அல்லது பெருமைப்படத் தக்கதோ எதுவும் இருப்பதாக நான் எண்ணவில்லை..... தன்னல மறுப்பின் இயற்கையான வளர்ச்சி இதுதான். அதாவது, சமூகத்தின் நலனுக்காகத் தனிப்பட்ட மனிதன் தனது சொந்த நலனைத் தியாகம் செய்கிறான். ஜில்லாவின் நலனுக்காக ஒரு சமூகம் தனது நலனைத் தியாகம் செய்கிறது. இதே போன்று, மாகாணத்துக்காக ஜில்லாவும், தேசத்துக்காக மாகாணமும், உலகத்திற்காக தேசமும் தங்கள் நலனைத் தியாகம் செய்கின்றன''. ஆர்னால்ட் டாயின்பீ கூறுவதாவது : ''இந்த அணுசக்தி யுகத்தில்,

நம்முடைய ராஜதந்திரிகளிடம் நாம் எதிர்பார்க்கும் மன உணர்வு, அசோகனிடமிருந்த மன உணர்வு தான் (அதாவது அஹிம்சை தான்). ஐக்கியம் இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது. ஆனால் இந்தத் தவிர்க்க முடியாத குறிக்கோளை வன்முறையின் மூலம் நாம் இனிமேலும் அடைய முடியாது. மனித வர்க்கத்தின் ஐக்கியத்திற்காக நம் காலத்தில் நாம் பயன்படுத்தக்கூடிய ஒரே சாதனம் மனமாற்றம் தானே யொழிய நிர்ப்பந்தம் அல்ல. அணுசக்தி யுகத்தில் பலாத்காரத்தைப் பயன்படுத்துவதானது மனித சமுதாயத்தை ஐக்கியப்படுத்துவதற்கு உதவாது; அதற்குப் பதிலாக நம்மை நாமே அழித்துக் கொள்வதில்தான் போய் முடியும். அசோகன் தன்னுடைய காலத்தில் மனச்சாட்சியின் காரணமாக மட்டும் எந்தக் கொள்கையைப் பின்பற்றினானோ, அந்தக் கொள்கையை இந்த சகாப்தத்தில் மனச்சாட்சி மட்டுமல்லாது பயத்தின் காரணமாகவும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ‘‘இவ்வாறாக, இம்சைப் பாதையானது மனித வர்க்கத்தைப் பொறுத்தவரை எல்லாக் காலத்துக்குமே மூடப்பட்டு விட்டது என்பது தெளிவாகிறது. ஸ்ரீ பரதன் குமரப்பாவின் ‘‘கிராமீயம்’’ என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில், மகாத்மாகாந்தி கூறினார் :

‘‘நம்முடைய சந்ததியில் ஏற்பட்டுள்ள கடந்த இரண்டு யுத்தங்களும், இப்படிப்பட்ட பொருளாதார அமைப்புக்கள் முற்றிலும் பயனற்றவை என்பதை மெய்ப்பித்திருக்கின்றன. தற்செயலாக, இந்த யுத்தங்கள், யுத்தம் என்பதே பயனற்றது என்பதையும் நிரூபித்திருக்கின்றன’’. ஆகவே இப்போது உதயமாகியிருப்பது அஹிம்சா சகாப்தம் என்று நாம் கூறலாமா? உலகிலுள்ள அரசியல்வாதிகளெல்லாம், அலட்சிய பாவத்துடன் செய்யப்பட்டது போன்று, ஒதுக்கப்பட்டிருந்த இந்த வற்றாத அஹிம்சை என்னும் கருவூலத்திலிருந்து வளம் பெறுவதைத் தவிர உலகத்திற்கு வேறு வழியே இல்லை. இந்தியா நிறைவேற்ற வேண்டிய ஒரு திட்டவட்டமான குறிக்கோள் இருக்கிறது என்று காந்திஜி நம்பினார். அவர் கூறுகிறார். ‘‘துன்பத்தினால் முணங்கிக்

கொண்டிருக்கும் ஒரு உலகிற்கு, சுதந்திரமான எழுச்சி பெற்ற இந்தியாவிடம் ஒரு செய்தி இருக்கிறது. அதுதான் சமாதான, நல்லெண்ணச் செய்தி''. மற்றொரு சமயம் அவர் கூறினார் : ‘‘இரத்தம் சிந்தி மரணம் அடைவதன் மீது உலகத்திற்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இதிலிருந்து மீளுவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்க உலகம் முயன்று கொண்டிருக்கிறது. இந்த வேட்கையில் உலகத்திற்கு வழிகாட்டும் பெருமை இந்தப் புராதன நாடாகிய இந்தியாவுக்குக் கிடைக்கும் என்று நம்பி நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன்''. ஆர்னால்ட் டாயின்பீ கருத்துப்படி, உலகிற்கு இந்தியா விசேஷமாக அளித்தது அதனுடைய தாராளமும், பரந்த மனோபாவமுந்தான்... எதிர்கால சந்ததியினர் திருப்பிப் பார்க்கும்போது, ஐக்கியமடைந்த மனித குலத்திற்கு இந்தியா இயல்பாக அளித்த வெகுமதிகள் இவை என்பதை உணருவார்களென நான் நம்புகிறேன்''.

பரவல் மய அமைப்புகள்

தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ராணுவ பலமே முடிவான வழியென்று இருக்கும் வரை உலக அரசாங்கத்தின் மூலம் உலக அமைதியை ஸ்தாபிப்பது வீண் கனவாகவே இருக்கும். நமக்கு நிரந்தரமான அமைதி இருக்க வேண்டுமானால், பலாத்காரத்தைப் பூரணமாகக் கைவிட்டு விட வேண்டும். தார்மீக அதிகாரத்துடன் அமைக்கப்பட்ட ஒரு உலக அரசாங்கத்தினால் தான் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும். பெரிய நாடுகளோ, சிறியனவோ எல்லாவற்றிற்கும் சமத்துவமும் சகோதரத்துவமும் வழங்கக் கூடிய அடிப்படையில் அமைந்த ஒரு உலக சமஷ்டி அரசாங்கமானது, உலக அமைதியைப் பாதுகாப்பதில் எவ்வளவோ உதவ முடியும். மற்றபடி, உலக அரசாங்கம் மட்டும் சமாதானத்துக்கு உறுதி அளித்துவிட முடியாது. ஏனென்றால் யுத்தத்திற்கான மூலகாரணங்கள், முரண்பாட்டை வளர்க்கக் கூடியவாறு அமைந்துள்ள பல்வேறு தேசங்களின் சமூக, பொருளாதார முறைகளில் இருக்கின்றன. ஆகவே அடிப்படையிலிருந்து இதை

மாற்றினாலொழிய உலக சமாதானம் என்பது ஒரு கற்பனையாகவே இருக்கும். ஆகையால் ஒரு உலக அமைப்பானது, உண்மையான ஜனநாயகம் செயல்படுவதற்கு உறுதி தரவேண்டும். சுரண்டல் எந்த முறையில் அல்லது உருவில் இருந்தாலும், அதை அகற்ற வேண்டும். சிறு சிறு அமைப்புகள்தான் உண்மையான ஜனநாயகம் செயல்படுவதற்கு உதவுகின்றன; தனிப்பட்டவர் முழுவளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பை அளிக்கின்றன. எந்த அளவிற்குப் பெரிதாக அமைப்புகள் இருக்கின்றனவோ அந்த அளவுக்குத் தனிப்பட்டவர் முயற்சியும் சுதந்திரமும் குறைச்சலாக இருக்கும். எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதிலும், எல்லோரையும் ஒருங்கு திரட்டிச் செயல்படுத்துவதிலும் பெரிய அமைப்புகள் அக்கறையாக இருக்கும். ஆகையால், அவை தனிப்பட்ட மனிதர்கள், சிறு குழாம்கள் ஆகியவற்றின் வளர்ச்சியைத் தடுத்துவிடும்; இறுதியில் தேக்கமடைவதிலும், சிதைவுபடுவதிலும் போய் முடியும். ஆகையால் நிரந்தரமான உலக சமாதானத்தை அடைவதற்கு, தற்போதுள்ள அரசியல், பொருளாதார முறைகள் சீரமைக்கப்பட வேண்டும்; பரவல் மயமான சிறு அமைப்புகளை நிர்மாணிக்கக் கூடிய முறையில், புனரமைக்கப்பட வேண்டும். இல்லையேல், உலக சமாதானத்தை ஸ்தாபிக்கும் குறிக்கோளே கெட்டுவிடும்: உலக அரசாங்கம் அமைப்பதும் அபாயத்திற்குள்ளாகும். இதைத் தொடர்ந்து தீர்க்க முடியாத பல பெரிய பிரச்னைகள் கிளம்பும். ஆகையால், நாம் பரவல் மயமான அரசியல், சமூக அமைப்புகளை வரவேற்பது தவிர்க்க முடியாதது.

பல்வேறு சுவைகள்

கூட்டு வாழ்க்கையானது சிறுசிறு, எளிய அமைப்புகளில் குவிந்திருக்கும் போது அதிக மகிழ்ச்சிகரமானதாகவும், பல்வேறு சுவைகள் கலந்ததாகவும், பலனளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது என்பதற்கு மனித வர்க்கத்தின் அனுபவமே சான்று பகர்கிறது. சிறு அமைப்புகளில் தான் வாழ்க்கைச் செறிவு இருக்கிறது. ஒரு விசாலமான பகுதிக்குள்

பரந்து கிடக்கும் மக்கள் ஒரு கூட்டு அமைப்பின் கீழ் வாழ்ந்தால் அதில் போதுமான இணைப்போ அல்லது செழிப்போ இருக்காது.

புராதன கிரேக்க நகர அரசுகளும் இந்திய கிராமக் குடியரசுகளும், எல்லாவகையிலும் வளமும், ஆக்கமும் நிறைந்த வாழ்க்கை வளர்ச்சிக்கு முன்னுதாரணங்களாகத் திகழ்கின்றன.

நேருஜியின் கருத்து

பண்டித ஜவஹர்லால் நேரு எழுதினார் :

''இந்த கிராம சுயாட்சி முறைதான் ஆரிய அரசியலமைப்புக்கு அஸ்திவாரமாக இருந்தது. இதுதான் அதற்குப் பலமும் அளித்தது. மன்னருடைய அனுமதியில்லாமல் எந்தப் படைவீரனும் ஒரு கிராமத்துக்குள் நுழையக் கூடாது என்று கூறும் அளவுக்கு கிராம சபைகள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் அக்கறையாக இருந்தன. 'ஒரு அதிகாரியைப் பற்றி கிராம வாசிகள் குறை கூறும்போது, மன்னரானவர் தனது குடிமக்களின் சார்பில் இருக்கவேண்டுமே தவிர, அதிகாரியின் சார்பில் பேசக் கூடாது' என்று நீதிசாரர் கூறுகிறார். மேலும், ''பலபேர் அதிகாரியைப் பற்றி புகார் சொன்னால் அந்த அதிகாரியைப் பதவியிலிருந்து நீக்கி விடவேண்டும். ஏனெனில் பதவி மோகத்தால் போதை அடையாதவர் யார் தான் இருக்கிறார்கள்?'' என்றும் அவர் கேட்கிறார். இவைகள் எல்லாம் விவேகமான வார்த்தைகள் - அதிலும் குறிப்பாக, எத்தனையோ அதிகாரிகள் இன்று தவறான முறையில் நடந்து தவறான முறையில் நம்மை ஆட்சி செய்யும்போது!

''மிகவும் சமீப காலத்தில் - 1830-இல் இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் கவர்னரான சர் சார்லஸ் மெட்கால்ப், கிராம சமுதாய அமைப்புக்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு விவரித்தார் : 'கிராம சமுதாயங்கள் சிறு குடியரசுகளாக விளங்கின. அவைகளுக்குத் தேவையான ஒவ்வொன்றும்

அவைகளுக்குள்ளேயே இருந்தன. கிட்டத்தட்ட வெளிநாட்டு உறவுகளிலிருந்து அவை துண்டிக்கப்பட்டவைகளாக இருந்தன. மற்றவைகளெல்லாம் நீடிக்க முடியாத போது அவை நீடித்தன. இந்தக் கிராம சமுதாயங்களின் கூட்டமைப்பு - ஒவ்வொன்றும் ஒரு தனி, சிறு அரசாங்கமாக இருந்து கூட்டாக அமைவது - அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் பெருமளவு உதவியது. பெருமளவு சுதந்திரத்தையும் உரிமையையும் அனுபவிக்கவும் உதவியது'.

கிராம வாழ்க்கைச் சித்திரம்

''இந்த வர்ணனையானது பழைய கிராம முறையை நன்கு பாராட்டுகிறது. கிட்டத்தட்ட எல்லாமே நாட்டுப்புற வாழ்க்கை முறையாக இருந்த ஒரு சித்திரத்தை நாம் காண்கிறோம். கிராம மக்கள் அனுபவித்த ஸ்தல சுதந்திரம், உரிமை ஆகியவைகளெல்லாம் எவ்விதச் சந்தேகத்திற்கும் இடமின்றி நல்லதுதான். இதில் மற்றும் பல நல்ல அம்சங்களும் இருந்தன... கிராமக் குடியரசுகளைப் புனரமைக்கும் வேலை, அவை புனர் ஜென்மம் அடையுமாறு செய்யும் வேலை இன்னும் நம்மால் செய்யப்பட வேண்டியிருக்கிறது.''*

அஹிம்சையின் சின்னம்

காந்திஜி கற்பனை செய்த கிராம சுயராஜ்யத்தின் அமைப்பு, பழைய பஞ்சாயத்துக்கள் புத்துயிர் பெறுமாறு செய்வதல்ல. ஆனால் தற்போதைய உலகச் சூழ்நிலையில் சுதந்திரமான கிராம சுயராஜ்ய அமைப்புகளைப் புதிதாக அமைப்பதாகும். கிராம சுயராஜ்யம் என்பது, அரசியல் பொருளாதாரம், சமூக இயல் ஆகிய துறைகளில் அஹிம்சையின் ஒரு நடைமுறைச் சின்னமாகும்.

---

* "Glimpses of World History" *என்ற நூலிலிருந்து.*

கம்யூனிச சித்தாந்தத்தைவிட உயர்ந்தது

காந்திஜி கருத்தின்படி ஒரு இலட்சிய சமுதாயம் என்பது அரசாங்கம் என்பதே இல்லாத ஒரு ஜனநாயகமாகும் - அதாவது அறிவு விளக்கம் பெற்ற மக்களின் அரசியலற்ற நிலை. இப்படிப்பட்ட சமுதாயத்தில் சமூகம் கொஞ்சமும் குறைபாடில்லாததாகி விடுவதால், தானே தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்கிறது. ''இலட்சிய சமுதாயத்தில் அரசியல் அதிகாரம் என்பதே இல்லை. ஏனென்றால் அங்கு அரசாங்கமே கிடையாது''. ஒரு இலட்சியத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதென்பது இயலாது என்று காந்திஜி நம்பினார். எனினும் ''இலட்சியமானது, ஒரு கோட்டைப் பற்றி யூக்லிட், கூறிய சித்தாந்தத்தைப் போன்றது. யூக்லிட் கருத்தின்படி, ஒரு கோட்டிற்கு அகலம் என்பதேயில்லை. ஆனால் யாரும் இப்படிப்பட்ட கோட்டை இதுவரை வரையவில்லை: வரையவும் முடியாது. ஆனால் இந்த இலட்சியக் கோட்டை மனதிற்கொண்டுதான் ஜியோமிதி என்னும் கணக்கில் நாம் முன்னேற்றங் காண்கிறோம்.'' அரசியல் துறையில் அவர் நமக்கு கிராம சுயராஜ்யத்தை அளித்தார். கிராம சுயராஜ்யமானது, அவருடைய அரசாங்கமற்ற ஜனநாயக இலட்சியத்தைப் பற்றிய கண்ணோட்டத்தை நெருங்கி வரக்கூடியது. எந்த அரசாங்கம் குறைச்சலாக மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறதோ, அந்த அரசாங்கம் தான் சிறந்தது என்று அவர் கருதுகிறார். கம்யூனிச சித்தாந்தப்படி, ''அரசாங்கம் தானே ஒடுங்கி விடுவதுதான்'' இறுதியானது. ஆனால் தனியாதிக்கமுள்ள ருசிய அரசாங்கத்தில், எல்லா அதிகாரங்களுமே அரசாங்கத்திடம் குவிந்து கிடக்கின்றன. எந்தக் காலத்திலாவது அங்கு அரசாங்கம் ஒடுங்கிவிடுமா என்பதை நம்புவது கடினமாக இருக்கிறது. மகாத்மா காந்தி ஒரு காரிய சாத்திய இலட்சியவாதி என்ற முறையில், அரசாங்கமற்ற ஜனநாயகம் என்னும் இலட்சியம் நடைமுறையில் உபயோகமானது என்பதை உணர்ந்து ''கிராம சுயராஜ்யம்'' என்னும் இலட்சியத்தை நம் முன் வைத்தார். இந்த இலட்சியமானது அரசாங்கம் ஒடுங்குவதாக இல்லாமல்,

அரசாங்கம் பரவல்மயமாக விநியோகமாகும்படி செய்வதாகும். இவ்வாறு, கிராம சுயராஜ்யம் என்பது, ''அரசாங்கம் ஒடுங்க வேண்டும்'' என்ற நீண்டகால இலட்சியத்தைப் போன்றல்லாமல், நடைமுறை சாத்தியமான ஒரு வரம்புக்குள் இருக்கிறது.

தனிப்பட்டவனுக்கு என்ன இருக்கிறது?

தற்போதைய ஜனநாயக அமைப்புகளெல்லாம் கட்சி ஆதிக்கமுள்ள அதிகாரத்தை நோக்கமாகவும் தேர்தலை மத்தியமாகவும் கொண்ட, மத்திய மயமான, சிக்கல் நிறைந்த அமைப்புகளாகும். அநேகமாக எல்லா அரசியல் முறைகளிலுமே - முதலாளித்துவ சோசலிச, கம்யூனிச முறைகளில் எதுவாக இருந்தாலும் - அவற்றில் அதிகாரம் குவிந்து கிடக்கிறது; இதனால் அவை எளிதில் செயல்பட முடியாதபடி பளுவானவையாகவும் அளவுக்கு மீறிய பாரமுள்ளவையாகவும் இருக்கின்றன. வாக்காளர்கள் தான் நாட்டின் எஜமானர்கள் என்று அழகாகக் கூறப்பட்டாலுங் கூட, தனிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் என்று எதுவுமில்லை. அவ்வப்போது நடைபெறும் தேர்தல்களில் வாக்களிப்பதற்காக அவர்கள் வருகிறார்கள். அதன்பின் அடுத்த தேர்தல் வரை தூங்கப் போய்விடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட கால வரையறையில், ஒரு தனிப்பட்ட மனிதர் செய்யக்கூடிய ஒரே அரசியல் நடவடிக்கை இதுதான். ஒரு மத்திய மயமான கட்சி முறை அமைப்பில் வரும் உத்தரவிற்கிணங்க அவன் இதைச் செய்கிறான். பெரும்பாலும் மத்திய மயமான பொருளாதார சக்திகளின் கைக்கருவிகளாக இருக்கும் பத்திரிகைகள் காட்டும் வழியில் அவன் இதைச் செய்கிறான். அரசாங்கத்தின் கொள்கையை உருவாக்குவதில் தனிப்பட்டவருக்கு இருக்கும் அதிகாரம் கிட்டத்தட்ட எதுவுமே இல்லை என்று சொல்லலாம். ஒரு சேமநல அரசாங்கமாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு தனியாதிக்க அரசாங்கமானாலும் சரி, தனிப்பட்ட மனிதனானவன், மனித உருவில் இருந்தாலும், நன்றாக உண்டு பேசாமடந்தையாக பிறர் செலுத்துகிறபடி நடக்கும் மிருகமாகத்தான் இருக்கிறான்.

பஞ்சாயத்து அமைப்பு

இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் செயலாற்ற வேண்டுமென்று காந்திஜி விரும்பினார். ஆகையால் அவர் கூறினார். ''மத்திய அரசாங்கத்தில் இருபது பேர் அமர்ந்து கொண்டு உண்மையான ஜனநாயகம் செயல்படுமாறு செய்யமுடியாது. அது அடித்தளத்திலிருந்து, ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்த மக்களாலும் செயல்படுத்தப்பட வேண்டும்.'' கிராம சுய ராஜ்யத்தில் ஒவ்வொரு கிராமமும் முழு அதிகாரம் படைத்த பரவல் மயமான சிறு அரசியல் யூனிட்டாக இருப்பதால், ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் அரசாங்கத்தில் நேரடி அதிகாரம் இருக்கும். தனிப்பட்ட மனிதனே தனது அரசாங்கத்தைத் தான் விரும்பியபடி அமைக்கிற சிற்பியாவான். கிராம அரசாங்கமானது ஐந்து பேர் கொண்ட பஞ்சாயத்தினால் நடத்தப்பெறும். இந்த ஐந்து பேரும் குறைந்த அளவாக நிர்ணயிக்கப்பட்ட சில தகுதிகளைப் பெற்ற வயது வந்த கிராமவாசிகளைக் கொண்டு ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பஞ்சாயத்திற்கு, கிராமத்தின் எல்லை முழுவதற்குள்ளும் எல்லாவிதமான அதிகாரமும் இருக்கும். பஞ்சாயத்தில் தண்டனை அளிக்கக்கூடிய எந்த முறையும் இருக்காதாதலால், அது சட்டசபை, நீதிமன்றம், நிருவாகம் ஆகிய மூன்றும் ஒன்றாய் இணைந்ததாக இருக்கும்.

குடிப் பொறுப்புள்ள பிரஜைகள்

இப்படிப்பட்ட ஒரு அரசாங்க முறையில், அரசாங் கத்தின் அதிகாரத்தினாலல்லாது தன்னைத் தானே கட்டுப் படுத்திக் கொள்ளக்கூடிய பிரஜைகள் இருப்பார்கள். எல்லா விஷயங்களுக்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்கக் கூடியவர்களுக்குப் பதிலாக, நன்கு வளர்ச்சி பெற்ற குடிப் பொறுப்பும் தன் முயற்சியும் உள்ளவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

உண்மையான ஜனநாயகத்தின் கடமை

ஒரு உண்மையான அரசியல் முறையின் கீழ், தனிப்பட்ட மனிதன்தான் சரியான அதிகாரம் படைத்தவனா

வான். ஆகையால் உண்மையான ஜனநாயகம், அதாவது சுயராஜ்யம் என்பது தனிப்பட்ட மனிதனின் வளர்ச்சிக்காகவும் முழுச் சுதந்திரத்துக்காகவும் பாடுபடும்.

அரசியல் நோய்களுக்கு மருந்து

இவ்வாறு காந்திஜி மனதிற்கண்ட கிராம சுயராஜ்ய மானது, ஒரு உண்மையான, ஜீவசக்தி நிறைந்த ஜனநாயகமாகும். தற்போதைய அரசியல் முறையில் இருக்கும் பல குறைபாடுகளுக்கு அது ஒரு சக்தி வாய்ந்த நிவாரணமாக இருக்கிறது. இப்படிப்பட்ட பரவல்மயமான, உண்மையான ஜனநாயக அமைப்பானது உலக சமுதாயம் முழுவதற்குமே அளிக்கக்கூடிய செய்தியும் இருக்கிறது.

உயிரளிக்கும் பொருளாதாரம்

காந்திஜியைப் பொறுத்தவரை, நம் குறிக்கோளே அரசியல் அதிகாரம் என்பதல்ல. ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் மக்கள் தங்களுடைய நிலையை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான ஒரு சாதனமாகவே அரசியலை அவர் கொண்டார். ஆகையால் அவர் தமது புகழ் பெற்ற ''கடைசி உயிலிலும் ஏற்பாட்டிலும்'', 'இந்தியா அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டது என்றாலும் - இந்தியாவிலுள்ள நகரங்கள், பட்டணங்கள் ஆகியவைகளுக்கு அப்பால் - இங்குள்ள ஏழு இலட்சம் கிராமங்களின் சமூக, தார்மீக, பொருளாதார விடுதலையை நாம் அடைந்தாக வேண்டியிருக்கிறது'' என்று சொன்னார். இதில் கிராம சுய ராஜ்யம் அல்லது பஞ்சாயத்து ராஜ்யத்தின் ஒரு சித்திரமும் திட்டமும் இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால், இது முழு அதிகாரம் நிறைந்த ஒரு அஹிம்சா பூர்வமான, சுயதேவைப் பூர்த்தியுள்ள, பொருளாதார யூனிட் ஆகும். மேற்கு நாட்டுப் பொருளாதாரமானது செல்வத்தை மையமாகக் கொண்டது. அதைப் போன்றல்லாமல் காந்திஜி கருத்தில் இருந்த கிராம சுயராஜ்யம் மனிதனை மையமாகக் கொண்டது. ஆகவே மேற்கு நாட்டுப் பொருளாதாரம் மரணப் பொருளாதாரம் என்றால், காந்திஜியுடையது உயிரளிக்கும் பொருளாதாரமாகும்.

கிராம ஊழியர் கடமை

காந்திஜி கருத்தின்படியான கிராம சுயராஜ்யத் திட்டத்தில் கிராம ஊழியன் என்பவன் இயற்கையாகவே கேந்திரமான பதவி வகிக்கிறான். இவனுடைய கடமைகள் என்னவென்பதைக் காந்திஜி பின்வருமாறு வகுத்துச் சொல்கிறார் : **"கிராம ஊழியரானவர், ஒரு கிராமமானது விவசாயம், கைத்தொழில்கள் ஆகியவற்றின் மூலம் சுய தேவைப் பூர்த்தியடையுமாறு செய்வார்; கிராம மக்களுக்குத் துப்புரவையும் உடல்நலத்தையும் போதிப்பார்; கிராம மக்கள் மத்தியில் உடல்நலக் குறைவும் நோயும் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பார்; ஆதாரக் கல்வி அடிப்படையில் பிறப்பிலிருந்து மரணம் வரை கிராம மக்கள் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்வார்".**

தனிப்பட்ட மனிதனே ஒரு "யூனிட்"

உலக சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆர்வங்கொண்ட உலக அரசியல்வாதிகள், மேலேயிருந்து கீழே செயல்படுத்தக்கூடிய திட்டங்களைப் போட எண்ணுவார்கள். ஆனால் காந்திஜியோ, கீழேயிருந்து நிர்மாணித்து மேலே செல்லக்கூடிய திட்டம் வகுக்க எண்ணுகிறார். ஆகையால் அவர் கூறுகிறார், ''சுதந்திர மானது கீழேயிருந்து ஆரம்பமாகும். ஒவ்வொரு கிராமமும், முழு அதிகாரம் படைத்த ஒரு குடியரசு அல்லது பஞ்சாயத்தாக இருக்கும். ஆகவே, உலகம் முழுவதுமே எதிர்த்து வந்தாலும் தன்னைப் பாதுகாக்கக்கூடிய அளவு தனது நிருவாகங்களைத் தானே நிருவகிக்கக் கூடியதாகவும் சுயபலம் பெற்றதாகவும் ஒவ்வொரு கிராமமும் இருக்க வேண்டும் என்றாகிறது. வெளியிலிருந்து வரும் எந்தத் தாக்குதலிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், இயலாவிடில் அழிந்து போகவும் தயாராயிருக்குமாறு அதற்குப் பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறாக இறுதியாகப் பார்க்கும்போது, தனிப்பட்ட ஒவ்வொரு மனிதரும் ஒரு யூனிட்டாக இருப்பார்கள்''. காந்திஜி கருத்துப்படி, ''அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டிருக்க

வேண்டும் என்ற ஓயாத முயற்சியே சுயாட்சி - அந்த அரசாங்கம் வெளிநாட்டு அரசாங்கமாய் இருந்தாலும் சரி, அல்லது தேசிய அரசாங்கமாய் இருந்தாலும் சரி, வாழ்க்கையின் ஒவ்வொரு சின்னக் காரியத்துக்கும் மக்கள் அரசாங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், சுதந்திர அரசாங்கமென்பதும் வருந்தத்தக்கதாகிவிடும்''. கிராம சுயராஜ்யத்தில் முடிவான அதிகாரமானது தனிப்பட்ட மனிதரிடம் தான் இருக்கும். கிராம சுயராஜ்யத்தின் முழுத்தோற்றத்தையும் அவன் காண வேண்டுமென்றால், முதலில் அவன் சுதந்திரம் பெற்றாக வேண்டும். அணு எப்படியோ அண்டமும் அப்படி. இவ்வாறாக, கிராம சுயராஜ்யம் என்பது - அதில் உள்ள தனிப்பட்ட மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு சுதந்திர உணர்ச்சி பெற்றவர்களாய் இருக்கிறார்களோ, அதன் பிரதிபிம்பமாக இருக்கும். ஆகையால் கிராம ஊழியரானவர் முதலில் உண்மையான கல்வி அளிப்பதில் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். மூளை, இதயம், உடல் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து வளர்ச்சி பெறச் செய்யக்கூடியதாய் இந்தக் கல்வி இருக்க வேண்டும். காந்திஜி செய்த தவத்தின் பலனாகக் கிடைத்தது தான் **நைதலீம்** அல்லது ஆதாரக் கல்வி. இந்த மூன்றும் ஒருங்கிணைந்தவராக அவதரித்தவர் தான் காந்திஜி. அஹிம்சா உணர்ச்சி ஆதாரக் கல்வி என்னும் முழுத்திட்டத்திலும் ஊடுருவிப் பாய்கிறது. கைத்தொழில் மூலம் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் ஒரே சமமாக வளர்ச்சியடையச் செய்வதுதான் ஆதாரக் கல்வியின் நோக்கம். ஆதாரக் கல்வியின் அடிப்படையில் பெற்ற உண்மையான கல்வி என்னும் மூலதனத்தைக் கொண்டு, கிராம சுயராஜ்யத்தை அமைப்பதில் பிரஜைக்கு ஒரு பெரிய முக்கியத்துவம் உண்டு.

கிராம சுயராஜ்யம் என்பது மனிதனை மையமாகக் கொண்ட, சுரண்டலற்ற, பரவல்மயமான, எளிய பொருளாதார முறையாகும். மக்கள் எல்லோரும் தாமாக முன்வந்து கூட்டுறவாகப் பாடுபடுவது என்ற அடிப்படையில் அது தனது பிரஜைகள் எல்லோருக்கும் முழு வேலை அளிக்கும்.

உணவு, உடை, மற்ற வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகள் ஆகியவற்றில் சுயதேவைப் பூர்த்தி செய்வதற்காகப் பணியாற்றும்.

நவீன பொருளாதார முறை

நவீன பொருளாதார முறைகளெல்லாம் புலன்நுகர்ச்சியையும், தேவைகளைப் பெருக்கிக் கொள்வதையும், பொருளாதாரம் வேறு, தார்மிகம் வேறு என்று பிரித்துப் பார்ப்பதையும் அடிப்படையாகக் கொண்டவையாகையால், பெரிய இயந்திரமயமான, சிக்கல் நிறைந்த அமைப்புக்களாக உள்ளன. வேலையில்லாத் திண்டாட்டம், போதுமான வேலையின்மை, பொருளாதார திவால், சுரண்டல், மார்க்கெட்டுகளைப் பிடிப்பதற்காக வெறிபிடித்து அலைவது, மூலப்பொருள்களுக்காகப் பிறநாடுகளை அடிமைப் படுத்துவது போன்ற பல கேடுகள் இருக்கின்றன. போட்டிகள், முரண்பாடுகள், வர்க்கப்போராட்டங்கள் ஆகியவை சமூக அமைப்பையே அரித்து விடுகின்றன; தனிப்பட்ட மனிதனை அடிமையாக்குகின்றன; மனிதனை இயந்திரத்தை ஓட்டுவதற்கு உதவக்கூடியவனாகத்தான் நடத்துகின்றன. அவனைக் கேவலம் இயந்திரத்துடன் இணைந்த ஒரு பகுதியாக்கி விடுகின்றன. அவன் தனது ஆன்மாவைக் கொல்லக்கூடியவாறு ஒரே மாதிரியான வேலையைத் திருப்பித் திருப்பிச் செய்வதனால், தனது நுண்மையான உணர்ச்சியையே இழந்து விடுகிறான். ஆகவே, தொழிற் சாலையில் உடலை அலுக்க வைக்கும் கொடுமையிலிருந்து தப்புவதற்காக, திரைப்படக் கொட்டகைகளுக்கும், மதுக்கடைகளுக்கும், விலை மகளிர் இல்லங்களுக்கும் ஓடுகிறான். சமூகமானது தனிச்சலுகை பெற்றவர்கள், சலுகையற்றவர்கள், பணக்காரர், ஏழைகள் என்று பிரிவினையாகி விடுகிறது. இன்றைய சமுதாயத்தில் உள்ளதைப் போன்ற ஏற்றத்தாழ்வு - கோடீஸ்வரன், வாழ்க்கையில் எவ்வித இலட்சியமும் இல்லாமல் ஆடம்பரத்தில் மூழ்கிக் கிடப்பதும் கஷ்டப்பட்டு உழைப்பவன் தனது உடலையும் உயிரையும் சேர்த்து வைத்திருக்கப்

போதுமானது இல்லாமல் இருப்பதும் - ஒரு போதும் இருந்ததில்லை. மிக உயர்ந்த அளவில் தொழில் நுணுக்க முன்னேற்றம் அடைந்துள்ள பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளே வேலையில்லாத் திண்டாட்டத்தை இன்னும் தீர்த்து வைக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவிலோ இந்த வேலையில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய அளவில் உச்சக் கட்டத்துக்குப் போய்விட்டது. ஏனெனில், இந்தியாவின் மிகப்பெரிய ஜனத்தொகை அதன் ஏழு இலட்சம் கிராமங்களிலும் பரவிக்கிடக்கிறது; இம்மக்களோ சந்ததி சந்ததியாகப் பிரதானமாய் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள்.

உலகிற்கு இதுதான் மருந்து

காந்திஜி நீண்ட காலம் தேடியதன் பலனாகக் கிடைத்தது கிராம சுயராஜ்யம். இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்களுடன் இதய பூர்வமாக ஒன்றிப்போன காந்திஜி, இந்தியாவின் நோய்களைத் தீர்ப்பதற்கு - ஏன், உலகின் நோய்களையே தீர்ப்பதற்கு - ஒரு தவறாத மருந்தாக இந்தச் சஞ்சீவியைக் கூறினார். உலகின் வரலாற்றை நாம் எடுத்துப் பார்த்தோமானால், எல்லா இடங்களிலுமே விவசாயிகள் சுரண்டப்பெற்று, பட்டினியாக வாழுங் கட்டத்தில் இருந்திருக்கிறார்கள். 5-10-’45 ஆம் தேதியன்று பண்டித நேருவுக்கு எழுதிய கடிதமொன்றில் காந்திஜி கூறினார் :

‘‘இந்தியா உண்மையான சுதந்திரம் அடைய வேண்டுமென்றால், இந்தியாவின் மூலமாக உலகமும் உண்மையான சுதந்திரம் அடைய வேண்டுமென்றால், இன்றோ நாளையோ ஒரு உண்மையை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதாக இருக்கும். அதாவது மக்கள் கிராமங்களில் வாழவேண்டியிருக்குமேயொழிய நகரங்களில் அல்ல; குடிசைகளில் வாழவேண்டியிருக்குமேயொழிய மாளிகைகளில் அல்ல. இது எனக்கு நிதரிசன உண்மையாகப் புலப்படுகிறது. நகரங்களிலும் மாளிகைகளிலும், கோடிக்கணக்கான மக்கள், ஒருவருடனொருவர் அமைதியாக

வாழ முடியாது. அப்போது அவர்கள் இம்சையிலும் அசத்தியத்திலும் ஈடுபடுவதைத் தவிர வேறு வழி இருக்காது''.

உலகிற்கு வரக்கூடிய கதி

''சத்தியமும் அஹிம்சையும் இல்லாவிட்டால் மனிதர்களுக்கு அழிவைத்தவிர வேறு எதுவுமே இருக்காது என்று நான் கருதுகிறேன். கிராம வாழ்க்கையின் எளிமையில்தான் நாம் சத்தியத்தையும் அஹிம்சையையும் உணர முடியும். இந்த எளிமையைச் சர்க்காவிலும், சர்க்கா எந்தெந்த சித்தாந்தங்களுக்காக இருக்கிறதோ அந்த சித்தாந்தங்களிலும் தான் நாம் சிறந்த முறையில் காண முடியும். உலகம் இன்று தவறான பாதையில் போய்க் கொண்டிருந்தால் அதற்காக நான் அஞ்சக்கூடாது. ஒரு வேளை இந்தியாவும் அந்த வழியாகச் செல்லலாம். விளக்கை வேகமாகச் சுற்றி நர்த்தனமாடிக் கொண்டுவரும் விட்டிற் பூச்சியானது இறுதியில் அதில் விழுந்து மடிவதைப் போன்ற கதி இந்தியாவுக்கும் ஏற்படலாம். ஆனால், அக்கதி இந்தியாவுக்கு ஏற்படாமலும் அதன் மூலம் உலகத்திற்கு ஏற்படாமலும் பாதுகாக்க வேண்டியது, எனது கடைசி மூச்சு உள்ள வரையிலுமுள்ள கடமையாகும்''.

பலதுளி பெரு வெள்ளம்

''தன்னுடைய உண்மையான தேவை என்ன வென்பதை அறிந்து அதனுடன் மனிதன் திருப்தியடைவதுடன் சுயதேவைப் பூர்த்தியும் அடைய வேண்டும் என்பதே நான் கூறியதன் சாரம். இந்தக் கட்டுப்பாடு அவனுக்கு இல்லையேல், அவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியாது. பார்க்கப் போனால், பலதுளி பெரு வெள்ளம் ஆவதுபோல் இந்தப் பெரிய உலகம் தனிப்பட்ட மனிதர்களால் ஆனதே .... இது உலகறிந்த உண்மையாகும்''.

அவசியத் தேவைகள்

இவ்வாறு, தானே முன்வந்து மனிதன் வறிய வாழ்க்கையை ஏற்று எளிமையாக இருப்பதைக் காந்திஜி

கொள்கையாகக் கொண்டிருந்தார். இதனால் மனிதனுக்கு அவசியமான வசதிகளை அவன் அனுபவிக்கக் கூடாது என்பதல்ல. ஒவ்வொருவருக்கும் சத்துள்ள உணவும், தேவையான உடையும், இருப்பிட வசதியும் அளிக்க வேண்டும் என்று அவர் கூறினார்; உயிருடன் வாழும் ஒவ்வொருவருக்கும் உணவு பெற உரிமையுண்டு என்று நம்பினார். அவர் கூறினார் : ''இந்தியாவில் ஏற்படவிருக்கும் பொருளாதார அமைப்பில், ஏன், உலகம் முழுவதிலும் அமைக்கப்படும் பொருளதார அமைப்பில் கூட, யாரும் உணவு இல்லை, உடை இல்லையென்று வருந்துவதாய் இருக்கக் கூடாது. இதுதான் எனது கருத்து. வேறு வார்த்தைகளில் கூறப்போனால், ஒவ்வொருவருக்கும் தனது ஜீவனத்தை நடத்தப் போதுமான வேலை கிடைக்க வேண்டும். வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளை உற்பத்தி செய்யும் சாதனங்கள் மக்கள் கையில் இருந்தால்தான் எல்லா இடங்களிலும் இந்த இலட்சியத்தை நாம் அடைய முடியும். ஆண்டவன் படைத்த காற்றும் தண்ணீரும் எவ்வாறு இலவசமாகக் கிடைக்கிறதோ அல்லது கிடைக்க வேண்டுமோ அவ்வாறு இந்தப் பொருள்களெல்லாம் இலவசமாகக் கிடைக்க வேண்டும்; மற்றவர்கள் சுரண்டலுக்கு வழிகொடுக்கும் சாதனங்களாகி விடக்கூடாது. எந்த நாடோ அல்லது மக்கள் இனமோ இவைகளை ஏகபோகமாக்கிக் கொள்வது நியாயமற்றதாகி விடும். இந்த எளிய கோட்பாட்டை நாம் புறக்கணிப்பதானது, இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த நாட்டில் மட்டுமல்லாது உலகின் மற்றப் பகுதிகளிலும் நாம் இன்று காணும் ஆதரவற்ற நிலைமைக்குக் காரணமாகும்''.

அஹிம்சைப் பொருளாதார அமைப்பு

எல்லா பிரஜைகளுக்கும் முழு வேலை அளிக்கக்கூடிய இப்படிப்பட்ட அஹிம்சாபூர்வமான பொருளாதார அமைப்பை நிர்மாணிக்க, தொழில் மயமாக்குவது, குவியல் முறையில் தொழில்களை அமைப்பது, அவசியமற்ற இயந்திரங்களைப் பயன்படுத்துவது ஆகியவை கூடா என்று அவர் சொன்னார்.

நகரங்களை, கிராமங்களைச் சுரண்டும் அமைப்புகளாக அவர் கருதினார். இந்நகரங்களை, நாட்டின் மேனியில் ஏற்பட்டுள்ள கொப்புளங்களென்று கூட அவர் சொன்னார். எதிர்கால உலக அமைப்புக்கு உயிர் தரக்கூடியவை கிராமங்கள் தான் - அதாவது, நிர்ப்பந்தமோ, பலாத்காரமோ இல்லாது எல்லா நடவடிக்கைகளும் பரஸ்பர ஒத்துழைப்பின் பேரில் நடைபெறும் சிறிய, அமைதியான கூட்டுறவுகள் தான் என்றார். கிராம சுயராஜ்யம் என்னும் மாளிகையில், உயர்ந்தவர்களும் இல்லை, தாழ்ந்தவர்களும் இல்லை. எல்லோரும் சமமானவர்களே. அங்கே ஜாதி, இன வேறுபாடுகள் இருக்கமாட்டா. தீண்டாமை இருக்காது. ஹிந்து முஸ்லிம் சச்சரவுகள் இருக்கமாட்டா. எல்லாத் தனிப்பட்ட மனிதர்களுக்கும் அவரவர்களுடைய இயற்கையான அந்தஸ்தும் உயர்நிலையும் கிடைக்கும்.

உலகத்திற்கு முன் மாதிரி

முழு வேகத்துடன் செயலாற்றும் கிராம சுயராஜ்ய மானது, உலகமே பின்பற்றக்கூடிய ஒரு முன்மாதிரியாக, உலகிற்கு இந்தியா அளிக்கும் ஒரு பரிசாக விளங்கும். உலகமெங்கிலும், தன்னைத் தானே ஆண்டுகொள்ளும் கிராம அமைப்புகள், உயர்ந்த கலாசாரமும் புத்திக் கூர்மையும் தீவிரமும் உள்ள ஆண் பெண்களின் உயிருள்ள சகோதரத்துவமாக இருக்கும். இவ்வித சமுதாயத்தில் வாழ்வது என்பதே ஒரு பெரிய பாட போதனை; வாழ்க்கை இலட்சியம் ஈடேறிய மாதிரி. அங்குள்ள வாழ்க்கையானது ஒருவர் தம்முடைய இயல்பான திறமைகளை வெளிப்படுத்திக் கொள்வதாகவும், பரஸ்பர மரியாதை உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்வதாகவும், பரஸ்பர சேவையின் மூலம் அன்பை வெளிப்படுத்திக் கொள்வதாகவும் இருக்கும். கலாசாரம், கலை, கவிதை, வர்ணந் தீட்டுதல், விஞ்ஞானம் ஆகியவையெல்லாம் அங்கு முழு நிறைவை அடையும். அது பூலோகத்தில் நடைபெறும் ஆண்டவன் சாம்ராஜ்யமாக இருக்கும்.

பஞ்சாயத்துகள் கடமை

கிராம சுயராஜ்யத்திற்கு இப்படிப்பட்ட உயர்ந்த சக்தி இருக்கிறது. அது ஜீவனுள்ளதாகவும் உண்மையானதாகவும் இருக்குமாறு செய்வது நம் எல்லோரையும் பொறுத்ததே. அப்பிதாவின் கனவை நிறைவேற்றுவது, அவருடைய வாரிசுகளின் கடமையாகும். அவரிடமிருந்து ஒரு அழியாத, மதிப்புமிக்க சொத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். ஆகையால் தற்போதுள்ள மாகாண அரசாங்கங்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைப்பதற்கான சட்டங்களை இயற்றியதும் அவைகளுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கியதும் நியாயமே. காந்திஜி மனதிற் கண்ட கிராம சுயராஜ்ய அமைப்பின் சித்திரத்தைக் கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய கவனத்திற் கொண்டு, அவரால் கூறப்பட்ட வழி துறைகளில் செயலாற்றுவார்கள் என நம்புகிறோம்.

கண்ணோட்டம் அவசியம்

காந்திஜி என்ன கண்ணோட்டத்துடன் கிராம சுயராஜ்யத்தைப் பற்றிச் சிந்தித்தாரோ, அதே கண்ணோட்டத்துடன், அதை அமுல் நடத்த வேண்டும். கிராமப் பஞ்சாயத்தின் பொறுப்புக்களை ஏற்பவர்கள், ஜாதி, மத, இன வேறுபாட்டுக்கு அப்பாற்பட்ட சுயநலமற்ற தொண்டுணர்ச்சியும் அன்புணர்ச்சியும் கொண்டுள்ளவர்களாக இருக்கவேண்டும். இல்லையேல் காந்திஜி எதிர்பார்த்த உயர்ந்த பலன்கள் கிராம சுயராஜ்யத்திலிருந்து கிடைக்க மாட்டா.

உண்மையான சேவா உணர்ச்சி

கிராம அமைப்புகளைப் பற்றிப் பண்டித நேரு கூறிய சொற்களை நாம் இப்போது நினைவுபடுத்திக் கொள்வோம். ''ஒரு தனிப்பட்ட மனிதனோ அல்லது கோஷ்டியோ எந்த அளவு பிறரிடமிருந்து ஒதுங்கி இருக்கிறதோ அந்த அளவுக்கு அது தன்னையே மையமாகக் கொண்டதாகவும், தன்னல

உணர்ச்சி கொண்டதாகவும், குறுகிய மனோபாவங் கொண்டதாகவும் ஆகக் கூடிய அபாயம் இருக்கிறது''.* சமூக விரோத உணர்ச்சிகளாலும், ஜாதியினாலும், குறுகிய மனோபாவத்திலும் நமது கிராமங்கள் தற்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களை வெற்றியாக்கும் வழியானது பஞ்சணை விரித்து மலர்கள் தூவப்பட்டிருக்கவில்லை. கிராமத் தலைவர்களிடமிருந்து உண்மையான சேவா உணர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. புராதனப் பெருமைமிக்க இந்த நாடு சரியான சந்தர்ப்பத்தில் உயர்ந்து இந்தியாவின் இலட்சியத்தை நிறைவேற்றுமாக. அதன் மூலம் உலகிற்குச் சேவை செய்த பெரும் புகழில் பங்கு பெறுமாக!

இந்நூல்

கிராம சுயராஜ்யத்தைப் பற்றி மகாத்மா காந்தி எழுதியவைகளை ஒன்றுபடுத்தி, அவருடைய சிந்தனைகளை ஒரு கோர்வையாகக் கூற இந்நூலில் முயற்சி செய்யப் பட்டிருக்கிறது. ஒரே மாதிரியாக இருக்க வேண்டு மென்பதற்காக, செயப்பாட்டு வினையில் இருந்த சில வாசகங்கள் செய்வினை வாசகங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் சில வாசகங்கள் சிறிது மாற்றப்பட்டுள்ளன அல்லது நீக்கப்பட்டுள்ளன; மற்றப்படி மூலம் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளது.

இத்தொகுப்புக்கு முன்னுரை எழுதி உதவியதற்காக ஸ்ரீமன் நாராயணுக்கு நான் கடப்பாடுள்ளவனாயிருக்கிறேன்.

22–11–1962

எச். எம். வியாஸ்

* "Glimpses of World History" *என்ற நூலிலிருந்து.*

கிராம சுயராஜ்யம்

அத்தியாயம் 1

சுயராஜ்யம் என்றால் என்ன?

சுயராஜ்யம் என்பது ஒரு புனிதமான சொல், வேதச் சொல். சுயக்கட்டுப்பாட்டுடன் கூடிய சுய ஆட்சி என்பது இதன் பொருளாகும். விடுதலை என்பதற்கான ஆங்கிலச் சொல் இருக்கிறதே (Independence) அதைப்போன்று, எல்லாக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்டிருப்பது என்பது அதன் பொருள் அல்ல.[1]

தேசத்துக்கு உள்ள உரிமை

ஒவ்வொரு நாடும் எவ்வாறு உணவு உண்ணவும் நீர் அருந்தவும் மூச்சுவிடவும் தகுதி பெற்றதாய் இருக்கிறதோ அதைப்போல, ஒவ்வொரு தேசமும் தனது விவகாரங்களைத் தானே நிருவகித்துக் கொள்ளத் தகுதி உடையதாய் இருக்கிறது - மோசமாக நிருவகிப்பதாக இருந்தாலும் சரி.[2]

வயது வந்தவர்களில் மிகப் பெரும்பாலான மக்கள் அவர்கள் ஆண்களாய் இருந்தாலும் பெண்களாய் இருந்தாலும், உள்நாட்டில் பிறந்தவர்களாய் இருந்தாலும் வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களாய் இருந்தாலும் - அவர்கள் சம்மதத்தைப் பெற்று இந்திய அரசாங்கம் அமைக்கப்படுவதையே சுயராஜ்யம் என்று நான் கூறுகிறேன். இம்மக்கள் தங்கள் உடலுழைப்பால் அரசாங்கத்தின் சேவைக்கு உதவியவர்களாய் இருக்க வேண்டும்; தங்களுடைய பெயர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டவர்களாய் இருக்க வேண்டும்... ஒரு சிலர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதனால் உண்மையான சுயராஜ்யம் வந்து விடாது. ஆனால், **அதிகாரம் துஷ்பிரயோகமாகும் போது, அதை எல்லோரும் எதிர்ப்பதற்கான சக்தி கிடைப்பதே உண்மையான சுயராஜ்யமாகும்**. வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால்,

அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் மக்களுக்குள்ள சக்தியை அவர்களுக்குப் பயிற்றுவிப்பதன் மூலமே உண்மையான சுயராஜ்யத்தைப் பெறமுடியும்.[3]

நம் இயல்புக்குத் தக்கமுறை

அரசியல் விடுதலை என்று கூறுவதன் மூலம், பிரிட்டிஷ் காமன்ஸ் சபையையோ அல்லது ருசியாவில் உள்ள சோவியத்கட்சியையோ அல்லது இத்தாலியிலுள்ள பாசிஸ ஆட்சியையோ அல்லது ஜெர்மனியிலுள்ள நாசிஸ ஆட்சியையோ நாம் அப்படியே 'காபி' அடிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. அவர்களுடைய இயல்புக்குத் தக்க முறைகளை அவர்கள் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று நம்முடைய இயல்புக்குத் தக்க முறையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். இம்முறை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நான் கூறமுடியாது. நான் இதை ராமராஜ்யம் - அதாவது, நூற்றுக்கு நூறு தார்மீக சக்தியை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சி - என்று விவரித்திருக்கிறேன்.[4]

சுய ஆட்சி

சுய ஆட்சி என்பது முற்றிலும் நமது உள்பலத்தைப் பொறுத்தது. மிகப் பெரிய கஷ்டங்களையும் எதிர்த்துப் போராட நமக்குள்ள சக்தியைப் பொறுத்தது. சுயாட்சியை அடைவதற்கும் அதை நிலை நிறுத்துவதற்கும் ஓயாத முயற்சி செய்ய வேண்டியது அவசியம். உண்மையில், இவ்விதத் தொடர்ந்த முயற்சிக்கு அவசியமில்லாத சுயாட்சியானது அர்த்தமில்லாதது. அரசியல் சுயாட்சி, அதாவது பெரும்பான்மையான ஆண், பெண்களுக்கான சுயாட்சி என்பது தனிப்பட்டவர் சுயாட்சியைக் காட்டிலும் உயர்ந்ததல்ல வென்பதையும், ஆகவே தனிப்பட்ட சுயாட்சியை எந்த முறைகளால் அடைய முடியுமோ அந்த முறைகளாலேயே அரசியல் சுயாட்சியை அடைய வேண்டுமென்றும் சொல்லிலும் செயலிலும் எடுத்துணர்த்த நான் முயன்றிருக்கிறேன்.[5]

சுயாட்சி என்பது அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து - அது தேசீய அரசாங்கமாகவிருந்தாலும் சரி, வெளிநாட்டு அரசாங்கமாக இருந்தாலும் சரி - சுதந்திரமாக இருக்க ஓயாது செய்யப்படும் முயற்சியாகும். வாழ்க்கையின் ஒவ்வொரு தேவைக்கும், சுயராஜ்ய அரசாங்கத்தை மக்கள் எதிர்பார்ப்பதாக இருந்தால் சுயராஜ்ய அரசாங்கம் வருந்தத்தக்கதாகப் போய்விடும்.[6]

என் கருத்துப்படி, நம்முடைய நாகரிகத்தை அப்படியே சுயராஜ்யம் பாதுகாக்கும். நான் பல விஷயங்களை எழுத விரும்புகிறேன். ஆனால் அவைகளெல்லாம் இந்திய ஸ்லேட்டிலேயே எழுதப்படவேண்டும். நான் மேற்கு நாடுகளிலிருந்து கடன் பெறத் தயாராக இருப்பேன். ஆனால் அந்தக் கடனை என்னால் வட்டியுடன் திருப்பிச் செலுத்த முடிவதாய் இருக்க வேண்டும்.[7]

எப்போது பலம் பெறும்

பெரும்பான்மையாக விசுவாசமான, தேசிய மனோபாவம் உள்ள மக்கள் இருக்கும்போது தான் சுயராஜ்யத்தைப் பாதுகாக்க முடியும். தங்களுடைய சொந்த நலன் உள்பட எல்லாவற்றையுங் காட்டிலும் தேசத்தின் நலனே இவர்களுக்குப் பிரதானமானது. ''பலரால் ஆளப்படும் ஆட்சி'' என்பதுதான் சுயராஜ்யம் என்பதன் பொருளாகும். இந்தப் ''பலர்'' ஒழுக்கமில்லாதவர்களாக வோ அல்லது சுயநலம் உள்ளவர்களாகவோ இருக்கும்போது, அவர்களுடைய அரசாங்கம் அராஜகமாக இருக்குமேயல்லாது வேறெதுவுமாக இருக்க முடியாது.

சுய ராஜ்யம் யாருக்கு?

என்னுடைய கனவின்படி ஆன சுயராஜ்யம், அல்லது நம்முடைய கனவின்படியான சுயராஜ்யத்தில் இன, மத வேறுபாடுகள் எதுவும் இருக்கமாட்டா. படித்தவர்களின் ஏக போக ஆதிக்கமாகவோ அல்லது பணக்காரர்களின் ஏகபோக ஆதிக்கமாகவோ அது இராது. சுயராஜ்யம் என்பது விவசாயி உள்பட எல்லோருக்கும் சொந்தமானதாக இருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக ஊனமடைந்தவர்கள், குருடர்கள், உடலால் உழைத்தும் பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு அது நிச்சயமாகச் சொந்தமானமானதாய் இருக்க வேண்டும்.[9]

இந்துக்கள் ஆட்சியா?

இந்திய சுயராஜ்யமானது, பெரும்பான்மை வகுப்பினராகிய இந்துக்களின் ஆட்சியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இதைக் காட்டிலும் பெரிய தவறு எதுவும் இருக்க முடியாது. இது உண்மையானால் நான் அதை சுயராஜ்யம் என்று அழைக்க மாட்டேன்; என்னுடைய பலம் உள்ள அளவுக்கு அதை எதிர்த்துப் போராடுவேன். என்னைப் பொறுத்தவரை இந்திய சுயராஜ்யம் என்பது மக்களுடைய ஆட்சியேயாகும். அதாவது நீதியின் ஆட்சியாகும்.[10]

நம் நாகரிகம்

சுயராஜ்யமென்பது நம்மைப் பண்படுத்துவதற்காகவும், நம்முடைய நாகரிகத்தைப் பரிசுத்தப்படுத்தி, நிலைப்படுத்துவதற்காகவும் இல்லாவிட்டால், அதனால் ஒரு காசுக்குக் கூடப் பயன் இல்லை. நம்முடைய நாகரிகத்தின் சாரமே நமது விவகாரங்கள் எல்லாவற்றிலும் - அது பொது விவகாரமோ அல்லது தனிப்பட்ட விவகாரமோ - ஒழுக்கத்துக்கு நாம் தலையாய முக்கியத்துவம் அளிக்கிறோம் என்பதுதான்.[11]

பூரண சுயராஜ்யம்

பூரண சுயராஜ்யம் என்றால் என்ன? மன்னரைப் போன்றே விவசாயிகளுக்கும், செல்வ வளம் படைத்த நிலப் பிரபுவைப் போன்றே நிலமில்லாத உழவனுக்கும், இந்துக்களைப் போன்றே முஸ்லிம்களுக்கும், ஜெயின், யூதர், சீக்கியர்களைப் போன்றே பார்சிகளுக்கும் கிறிஸ்துவர் களுக்கும் சுயராஜ்யம்: அதாவது சாதி, மத வாழ்க்கை அந்தஸ்து போன்ற எந்தவிதமான வேறுபாடும் இன்றி எல்லோருக்கும் சுயராஜ்யம் என்பது பொருள்.[12]

ஒரு சார்பற்றது

சுயராஜ்யம் என்ற சொல்லைக் கொண்டு நாம் பார்த்தாலும் சரி, அல்லது அதை அடைவதற்காக நாம் உறுதியெடுத்துக் கொண்டிருக்கிறோமே அந்த மார்க்கம் - அதாவது, சத்தியம் அஹிம்சை ஆகிய எதை எடுத்துக் கொண்டு பார்த்தாலும், அவை எல்லாமே சுயராஜ்யம் ஒருவரைக் காட்டிலும் மற்றவருக்கு அதிகமாக இருப்பதோ அல்லது ஒரு சாராருக்குச் சார்பாகவும் மற்றொரு சாராருக்கு விரோதமாகவும் இருக்கும் என்பதோ சாத்தியமற்றதாகச் செய்து விடுகிறது.[13]

வாழ்க்கையின் அவசியத் தேவைகள்

நான் கனவு காணும் சுயராஜ்யம் ஏழை மகனின் சுயராஜ்யம். மன்னர்கள், பணக்காரர்கள் ஆகியோர் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளை அனுபவிப்பதைப் போன்று நீங்களும் அவைகளை அனுபவிக்க வேண்டும். ஆனால் இதற்காக மன்னர்களைப் போன்று நீங்களும் அரண்மனைகள் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதல்ல. மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு இவைகள் அவசியமில்லை. நீங்களோ, நானோ அதில் மூழ்கிப் போய்விடுவோம். ஆனால் ஒரு பணக்காரன் அனுபவிக்கக் கூடிய சாதாரண வாழ்க்கை வசதிகளையெல்லாம் நீங்களும் பெறவேண்டும். இவ்வித வசதிகள் எல்லாம் உங்களுக்கு உத்தரவாதமாக்கப்படா விட்டால், சுயராஜ்யம் பூர்ண சுயராஜ்யமாகாது என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.[14]

ஒதுங்கியிருப்பது சுயராஜ்யம் அல்ல

தனித்து ஒதுங்கிய விடுதலையைப் பூரண சுயராஜ்யம் என்று நான் கூறவில்லை. ஆனால் நலமான கண்ணியமான சுதந்திரத்தையே கூறுகிறேன். என்னுடைய தேசியம் வேகமானதாக இருக்கலாம். ஆனாலும் அது பிறரிடமிருந்து பூரணமாக ஒதுங்கியதல்ல. எந்த தேசத்தையே அல்லது தனிப்பட்ட மனிதரையோ துன்பத்திற்குள்ளாக்குவதற்காக

அது உருவாக்கப்படவில்லை. சட்டவிதிகள், அவை தார்மிகமானவையாக இருப்பதைப் போன்று அவ்வளவு சட்ட பூர்வமானவையல்ல. 'அயலானுடைய சொத்திற்குத் தீங்கு விளைவிப்பதற்காக உன் சொந்த சொத்தைப் பயன்படுத்தாதே' என்ற நிரந்தர உண்மையில் நான் நம்பிக்கை வைத்திருக்கின்றேன்.[15]

சித்தாந்தமும் நடைமுறையும்

சத்தியத்தின் மூலமும் அஹிம்சையின் மூலமும் பூரண சுயராஜ்யம் பெறுவதன் பொருள் ஒவ்வொரு அங்கமும் சுதந்திரம் பெறுவதென்பதாகும். ஒரு தேசத்தில் இந்த அங்கம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி; இன, நிற, மத வேறுபாடின்றி இந்தச் சுதந்திரம் கிடைக்க வேண்டும். இந்தச் சுதந்திரமானது ஒரு போதும் தான் மட்டும் அனுபவித்துக் கொள்வதல்ல. ஆகையால் உள்ளேயும் வெளியேயும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதற்கு முற்றிலும் உகந்ததே இது. யூக்லிட் தனது சித்தாந்தத்தில் கூறியபடி எவ்வாறு கோட்டை வரை முடியாதோ அதே போன்று ஏட்டில் உள்ள தத்துவத்தை நூற்றுக்கு நூறு நடைமுறையில் கொண்டு வரமுடியாது. நடைமுறையானது சித்தாந்தத்தி லிருந்து கொஞ்சம் இறங்கியதாகவே இருக்கும். ஆகையால் சத்தியத்தையும், அஹிம்சையையும் நடைமுறையில் நாம் எந்த அளவுக்கு நெருங்குகிறோமோ அந்த அளவுக்குத் தான் பூர்ண சுயராஜ்யம் பூர்ணமானதாகவிருக்கும்.[16]

அரசியல் அதிகாரம் வேண்டுமா?

இவைகளெல்லாம், பூரண சுயராஜ்யத்திற்கு நாம் என்ன பொருள் கொள்கிறோம், பூரண சுயராஜ்யத்தின் மூலம் நாம் என்ன விரும்புகிறோம் என்பதைத் தான் சார்ந்திருக்கின்றன. பூரண சுயராஜ்யம் என்றால் மக்களிடையே எழுச்சி ஏற்பட வேண்டும் என்பதும், தங்களுடைய உண்மையான நலம் என்னவென்பதை மக்கள் அறிந்து உலகமே எதிர்த்து வந்தாலும் அதைக் காப்பாற்றக் கூடிய திறமையும் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்பதும் பொருளானால், பூரண சுயராஜ்யத்தின் மூலம்

மனப்பூர்வமான ஒற்றுமை நமக்குத் தேவையானால், உள்ளேயிருந்தோ, வெளியிலிருந்தோ வரும் ஆக்கிரமிப்பிலிருந்து நாம் தப்பிக்க விரும்பினால், பொது மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்தில் நாம் படிப்படியாக முன்னேற்றங்காண விரும்பினால், அரசியல் அதிகாரம் வேண்டுமென்பதில்லை. நம்மிடம் உள்ள அதிகாரத்தைக் கொண்டு செயலாற்றுவதன் மூலமே நம் இலட்சியத்தை அடையலாம்.[17]

நான்கு முக்கிய அம்சங்கள்

சுயராஜ்யத்தைப் பற்றிய எனது கருத்தைக் குறித்துத் தப்பபிப்பிராயப்பட வேண்டாம். பிறருடைய ஆட்சியிலிருந்து நாம் முழு விடுதலை பெறவேண்டும், முழுப் பொருளாதார சுதந்திரம் பெற வேண்டும் என்பதுதான் **சுயராஜ்யத்தைப்** பற்றி நான் கொண்டுள்ள கருத்து. ஆகவே, ஒருபுறம் உங்களுக்கு அரசியல் சுதந்திரம் இருக்கிறது. மற்றொரு புறம் பொருளாதார சுதந்திரம் இருக்கிறது. இதைத்தவிர, மற்றும் இரு பக்கங்களும் இதில் உண்டு. இவைகளில் ஒருபுறம் தார்மீக, சமூக அம்சமாகும். அதற்கு இணையான மற்றொரு புறம் தர்மம். அதாவது, மதம் என்பதன் உயர்ந்த நிலை. இதில் இந்து மதம், இஸ்லாம், கிறிஸ்துவ மதங்கள் முதலிய எல்லாம் சேர்ந்திருக்கின்றன. - ஆனால் அவைகளுக்கெல்லாம் இது உயர்ந்தது... இதை நாம் சுயராஜ்யத்தின் சதுர வடிவம் என்று அழைக்கலாம். இவைகளில் எந்தக் கோணம் சரியாக இல்லாவிட்டாலும் இது சதுரமாக இருக்க முடியாது.[18]

அசத்தியம் கூடாது

நம்முடைய சுயராஜ்யத்தைச் சத்தியம், அஹிம்சை ஆகியவற்றின் மூலம் போராடிப் பெறவும், செயலாற்றவும், நிலை நிறுத்தவும் வேண்டும் என்ற உறுதி நம் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். அப்போதுதான் எனது கருத்தின்படியான சுயராஜ்யம் கிடைக்கும். அசத்தியமான, பலாத்காரம் உள்ள முறைகளின் மூலம் உண்மையான ஜனநாயகத்தையோ அல்லது சுய ராஜ்யத்தையோ நாம்

அடைய முடியாது. இதன் காரணம் எளிது. அசத்தியத்தையும் பலாத்காரத்தையும் நாம் பயன்படுத்தினால், ஏற்படக்கூடிய இயற்கையான விளைவு எதிரிகளை நசுக்குவது அல்லது ஒழித்துக் கட்டுவதாகவும், அதன் மூலம் எல்லா எதிர்ப்பையும் அகற்றுவதாகவும் இருக்கும். இதன் மூலம் தனிப்பட்டவர் சுதந்திரம் கிட்டாது. கலப்படமில்லாத அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் கட்சியின் கீழ்தான் தனிப்பட்டவருக்குப் பூரண சுதந்திரம் கிடைக்க முடியும்.[19]

கடமை தான் பெரிது

அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட சுய ராஜ்யத்தில், மக்கள் தங்களுடைய உரிமைகளை அறிந்திருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய கடமைகளை அறிந்திருக்க வேண்டியது மட்டும் அவசியமாகும். உரிய உரிமையை அளிக்காத கடமை எதுவும் இல்லை. ஒருவனுடைய கடமைகளைச் சரிவரச் செய்வதால் கிடைக்கக்கூடியவை தான் உண்மையான உரிமைகளாகும். ஆகையால் தாங்கள் எந்த அரசைச் சேர்ந்தவர்களோ அதற்குத் தொண்டாற்றுபவர்களுக்குத் தான் உண்மையான குடியுரிமை கிடைக்கும். அவர்கள் தான் தங்களுக்குக் கிடைக்கும் உரிமைகளைச் சரிவரப் பயன்படுத்த முடியும். ஒவ்வொருவருக்கும் பொய் சொல்லவோ அல்லது காலித்தனத்தில் ஈடுபடவோ உரிமையுண்டு. ஆனால் இப்படிப்பட்ட உரிமையைப் பயன்படுத்துவதானது பயன்படுத்துபவருக்கும், சமூகத்துக்கும் தீங்கு செய்வதாகும். ஆனால் சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடிப்பவருக்குத் தன் மதிப்புக் கிடைக்கிறது. இந்தத் தன் மதிப்பானது அவருக்கு உரிமைகளை வழங்குகிறது. தங்களுடைய கடமைகளைச் செய்வதன்மூலம் உரிமைகளைப் பெறுபவர்கள், சமூகத்தின் சேவைக்காகத்தான் அவைகளைப் பயன்படுத்துகிறார்கள். ஒருபோதும் தங்களுக்காகப் பயன்படுத்துவதில்லை. தனிப்பட்டவர் சுதந்திரத்தின் மொத்தம் தான் மக்களுடைய சுயராஜ்யம் என்பது. இப்படிப்பட்ட சுயராஜ்யம், பிரஜைகள் என்ற முறையில் தனிப்பட்டவர்கள் ஆற்றும் கடமையின்

மூலம் கிடைப்பதுதான். இதில் யாரும் தங்களுடைய உரிமைகளைப் பற்றி எண்ணுவதில்லை. இவைகள் தேவையாக இருக்கும்போது, கடமையை அதிகச் சிறப்பாகச் செய்தால், இவை கிடைத்து விடுகின்றன.[20]

அஹிம்சா பூர்வ சுயராஜ்யம்

அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட சுயராஜ்யத்தில், யாரும் யாருக்கும் எதிரியல்ல. பொதுவான இலட்சியத்திற்கு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பங்கைச் செய்கிறார்கள். எல்லோருக்கும் எழுதப்படிக்கத் தெரியும். அவர்களுடைய அறிவானது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கிறது. நோய் நொடி என்பது மிக மிகக் குறைச்சலாகவிருக்கும் பரம ஏழை என்று யாரும் இருக்க மாட்டார்கள். உழைக்க முன்வரும் யாருக்கும் அங்கு வேலை கிடைக்கும். இப்படிப்பட்ட அரசாங்கத்தில் சூதாட்டத்துக்கும் குடிக்கும் ஒழுக்க ஈனத்துக்கும் வகுப்பு வேற்றுமைக்கும் இடம் கிடையாது. பணக்காரர்கள் தங்களுடைய பணத்தைப் புத்திசாலித்தனமாகவும் பயனுள்ள முறையிலும் உபயோகப்படுத்துவார்கள்: ஆடம்பரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் உலக இச்சைகளை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளவும் விரையம் செய்யமாட்டார்கள். கைவிரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பணக்காரர்கள் தங்க மாளிகைகளில் வாழ்வதென்பதும் கோடிக்கணக்கான மக்கள் சூரிய வெளிச்சமோ காற்றோ புகாத பரிதாபகரமான சிறுகுடிசைகளில் வாழ்வதென்பதும் நடைபெறாது. அஹிம்சா பூர்வமான சுயராஜ்யத்தில் பிறருடைய நியாயமான உரிமைகளில் யாரும் குறுக்கிடமாட்டார்கள்; அதே சமயம் யாரும் நியாயமற்ற உரிமைகளையும் பெற முடியாது. நன்றாக அமைக்கப்பட்டுள்ள ஒரு அரசில், அநியாயமான முறையில் பதவியையோ சொத்தையோ கைப்பற்றிக் கொள்வது சாத்தியமில்லாத ஒன்றாகையால், அப்படிப்பட்டவர்களிடமிருந்து அவைகளைக் கைப்பற்றிப் பலாத்காரத்தைக் கடைப்பிடிப்பதென்பதற்கு அவசியமே இல்லாமற் போய்விடுகிறது.[21]

அத்தியாயம் 2

இலட்சிய சமுதாயத்தின் சித்திரம்

உயர்வு தாழ்வு இராது

[புதுடில்லியில் உள்ள பங்கி காலனியில் (தோட்டிகள் குடியிருப்பில்) ஒரு நாள் காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்ற போது, ஒரு பாடல் பாடப்பெற்றது. சுதந்திர இந்தியாவைப் பற்றி காந்திஜி மனக் கண்ணில் கண்ட சித்திரத்தின் முக்கிய அம்சங்களெல்லாம் அதில் இடம் பெற்றிருப்பதை அவர் உணர்ந்தார். அது அப்படியே அவர் மனதைப் பற்றிக் கொண்டது. அவரே அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, அதைப் பெதிக் லாரன்ஸ் பிரபுவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். அந்தப் பாடல் பின்வருமாறு :]

துயரம் துன்பம் தோன்றிடும் ஆசை
அயர்(வு) ஏமாற்றம் ஆத்திரம் இல்லா
அன்பின் கங்கை அமைவுறப் பாய்ந்து
இன்பம் எங்கும் இசைவுறப் பொங்கும்
எல்லா மனமும் ஒருதிசை ஏகும்;
செல்லும் காலச் சிந்தனை இல்லா
அனைவரும் வேண்டும் அனைத்தையும் பெற்று
வினை செய் கொள்முதல் விற்பனை தன்னில்
பண்டங்கள் தம்மைப் பரிமாறுதலாய்,
அண்டம் முழுதும் அச்சினில் வார்த்தாற்
போலே தன்னலப் புகைச்ச லிலாத
ஆண்டான் அடிமை ஆருமிலாத
மாண்புறு நாட்டின் மக்கள் நாமே;
எங்கும் பேரொளி வீசுவ தெனினும்
பொங்கும் வெம்மை புலனுறல் இல்லை;
அத்தகை நா(டு)உன் அகத்தினில் உளது
சுத்த சுயராஜ்ய சுதேசியும் அதுவே
உன்னுடை உளமே உன்னுடை வீடு
வெற்றி! வெற்றி! விழுமிய வெற்றி!
பெற்றிடுவான் இதைப் பேணி விழைபவன்.

[காந்திஜி கனவு கண்ட இந்தியாவின் ஒரு தோற்றமாகவே இந்தப்பாடல் உருவாகிறது.]

ஜாதி, இன பேதமற்ற ஒரு சமுதாய அமைப்பின் சித்திரம் இது. இதில் கோபுரத்தைப் போன்று ஒன்றுக்கு மேல் ஒன்றாக இருக்கும் பிரிவுகள் இருக்கமாட்டா. அதற்கு மாறாக, ஒரு வட்டத்தில் இருக்கும் பல புள்ளிகளைப் போல் சமத்துவமான பிரிவினைகளே இருக்கும். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்பது இருக்காது; எல்லாப் பதவிகளுக்கும் சம அந்தஸ்தும் சம ஊதியமும் தான் உண்டு; தேவைக்கும் அதிகமாக வைத்திருப்பவர்கள் தங்களுடைய வசதிகளைச் சொந்த நலனுக்காக வைத்துக் கொள்ளாமல், தேவைக்கும் குறைவாய் உள்ளவர்களுக்குத் தொண்டு செய்வதற்குத் தங்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறநிதியாகக் கருதுவார்கள். எந்த ஒரு தொழிலையும், சொந்த முன்னேற்றத்திற்காக அல்லாமல் சமுதாயத்துக்குச் சேவை செய்வதன் மூலம் திறமையை வெளிப்படுத்தவும் தங்களைத் தாங்களே உணரவும் உதவக்கூடிய ஒரு சாதனமாகக் கருதித் தேர்ந்தெடுப்பார்கள்.[1]

சுதேசி உலகம்

இந்தச் சமுதாய அமைப்பில் எல்லாப்பதவிகளுக்கும் ஒரே அந்தஸ்தும் ஊதியமுமே இருப்பதால், பரம்பரையாக வந்த திறமைகள் சொந்த லாப ஆசையில் பலியிடப்பட மாட்டா. அதற்குப் பதிலாக அவை சந்ததி சந்ததியாகப் பாதுகாத்து வளர்க்கப்படும். ஜீவனற்ற முறையில் வரம்பில்லாது நடத்தப்படும் போட்டிகளின் இடத்தில் சமுதாய சேவைக் கோட்பாடு இடம் பெறும். ஒவ்வொருவரும் போதுமான ஓய்வும், வாய்ப்பும், கல்வி கலாச்சார வசதிகளும் பெற்ற உழைப்பாளியாக இருப்பார்கள். கைவேலைப் பாடுள்ள குடிசைத் தொழில்களும் சிறுசிறு தீவிர விவசாயக் கூட்டுறவுப் பண்ணைகளும் நிறைந்த கவர்ச்சிமிக்க ஒரு உலகமாக அது இருக்கும்; வகுப்புவாதத்துக்கோ, ஜாதிக்கோ இடம் இருக்காது. முடிவாகச் சொல்லப்போனால் அது ஒரு சுதேசி உலகம். அதில் பொருளாதார எல்லைகள் குறுகலாகவும் தனிப்பட்டவர் சுதந்திரத்தின் எல்லைகள் அதிக பட்ச அளவுக்கு விசாலமாகவும் வரையப்பட்டிருக்கும். ஒவ்வொருவரும் தங்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலை

களுக்குப் பொறுப்பானவர்களாய் இருப்பார்கள்; அதே போன்று, மொத்தமாக எல்லோரும் சமூகத்துக்குப் பொறுப்பானவர்களாய் இருப்பார்கள்; 'ஒன்றைஒன்று சார்ந்தது, ஒன்றை அளித்தால்தான் மற்றொன்றைப் பெற முடியும்' என்ற கொள்கையின் அடிப்படையில், உரிமைகளும் கடமைகளும் ஒழுங்குபடுத்தப்படும்; ஒரு முழு அங்கத்துக்கும் அதன் பாகத்துக்கும் மோதல் இருக்காது; தேசியம் என்பது குறுகிய, சுயநலமுள்ள, ஆக்கிரமிப்பு மனோபாவங் கொண்ட தத்துவமாகி விடும் அபாயம் இருக்காது. சர்வ தேசியமானது வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இராது; தெளிவில்லாத சில பொதுக் கோட்பாடுகளின் குழப்பமான, மங்கலான தோற்றத்துக்காக நிதர்சனமான ஒன்றை இழந்து விடும் ஆபத்தும் இருக்காது.[2]

இலட்சிய 'கற்பனை'

அங்கு பாப்பர்களோ, பிச்சைக்காரர்களோ, உயர்ந்தவர்களோ, தாழ்ந்தவர்களோ, இலட்சாதிபதிகளான முதலாளிகளோ அல்லது அரைப்பட்டினி கிடக்கும் தொழிலாளிகளோ இருக்கமாட்டார்கள். போதை அளிக்கும் மதுவோ, மருந்தோ இருக்காது. ஆண்களுக்கு இயற்கையாக அளிக்கப்படும் மரியாதை பெண்களுக்கும் அளிக்கப்படும். ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாரின் கற்பும் பரிசுத்தமும் அக்கறையுடன் பாதுகாக்கப்படும். ஒருவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், தமது மனைவியைத் தவிர மற்றப் பெண்களைத் தம்முடைய தாயாகவும், சகோதரியாகவும், மகளாகவும் - அவரவர் வயதுக் கேற்றவாறு - நடத்துவார். அங்கு தீண்டாமை என்பது இருக்காது. எல்லா மதங்களுக்கும் சமத்துவமான மரியாதை அளிக்கப்படும். மக்கள் எல்லோரும் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தாமாகவே முன்வந்து உடல் உழைப்பு அளிப்பார்கள். நான் இவ்வாறு கூறுவதைக் கேட்பவர்கள் அல்லது படிப்பவர்கள், நல்ல காலை வெயிலில் எனது படுக்கையில் நீட்டிப் படுத்துக்கொண்டு, இந்தக் கற்பனை உலகில் சஞ்சரிப்பதற்காக, என்னை மன்னிப்பார்களாக![3]

அத்தியாயம் 3

எத்திசையில் நம்பிக்கை தோன்றுகிறது?

தொழில் மயம் ஒரு சாபக்கேடு

தொழில் மயம் என்பது மனித வர்க்கத்திற்கு ஒரு சாபக் கேடாக முடியப் போகிறது என்று நான் அஞ்சுகிறேன். தொழில் மயமென்பது பிறரைச் சுரண்டுவதற்கு உங்களுக்குள்ள சக்தி, உங்களுக்குக் கிடைக்கக்கூடிய வெளி நாட்டு மார்க்கெட்டுகள், போட்டியிடுபவர்கள் இல்லாதிருப்பது ஆகியவைகளை முற்றிலும் சார்ந்திருக்கிறது. இந்தச் சாதகமான அம்சங்களெல்லாம் இங்கிலாந்திற்கு இப்போது நாள்தோறும் குறைந்து கொண்டு வருவதனால் தான், அங்கு வேலையில்லாதிருப்போர் தொகை நாள்தோறும் உயர்ந்து கொண்டே செல்கிறது. இதில் இந்தியர் பகிஷ்காரம் ஒரு கொசுக்கடி மாதிரிதான். இங்கிலாந்தின் நிலைமை இதுவானால், இந்தியாவைப் போன்ற ஒரு பரந்த நாடு, தொழில் மயமாவதன் மூலம் நன்மை அடையலாம் என எதிர்பார்க்க முடியாது. உண்மையில், இந்தியா பிற நாடுகளைச் சுரண்ட முற்படும் போது - அது தொழில் மயமானால் அவ்வாறு செய்து தானாக வேண்டும் - பிற நாடுகளுக்கு ஒரு சாபக்கேடாக இருக்கும். உலகிற்கு ஒரு அபாயமாகவும் இருக்கும். பிற நாடுகளைச் சுரண்டுவதற்காக, இந்தியாவைத் தொழில் மயமாக்க வேண்டுமென நான் ஏன் எண்ணவேண்டும்? தற்போதுள்ள பரிதாபமான நிலைமையை நீங்கள் அறியவில்லையா? நம்முடைய முப்பது கோடி மக்களுக்கு நம்மால் வேலை தேட முடியும்போது, இங்கிலாந்து அங்குள்ள முப்பது இலட்சம் மக்களுக்கு வேலை தேட முடியவில்லை. இங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய அறிவாளிகளையெல்லாம் திணறவைக்கும் பிரச்னையாக இது இருக்கிறது. தொழில் மயத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. இங்கிலாந்திற்கு

எதிராக அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகள் வெற்றிகரமாகப் போட்டியிடுகின்றன. இந்தியாவில் உள்ள ஆலைகளைக் கைவிரல் விட்டு எண்ணிவிடலாம் என்றாலும், அதுவும் இங்கிலாந்துக்கு ஒரு போட்டியே. இந்தியாவில் எழுச்சி ஏற்பட்டிருப்பதைப் போன்றே, இந்தியாவைக் காட்டிலும் மிக அதிகமான இயற்கை, தாது, மனித வளமுள்ள தென்னாப்பிரிக்காவிலும் எழுச்சி ஏற்படலாம். ஆப்பிரிக்காவில் உள்ள உடல் பலம் பொருந்திய இனத்தவரின் முன் பலம் பொருந்திய பிரிட்டிஷாரும் சித்திரக்குள்ளர்களாகத் தான் தோன்றுவார்கள். அவர்கள் கண்ணியமானவர்களாயினும் நாகரிகமற்ற இனத்தவர் தானேயென்று நீங்கள் சொல்லலாம். அவர்கள் நிச்சயமாக கண்ணியமானவர்களே; ஆனால் நாகரிகமற்றவர்களல்ல. ஒரு சில ஆண்டுகளில், மேற்கு நாட்டவர் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனைக் களமாக ஆப்பிரிக்கா இராது என்பதை அவர்கள் காண்பார்கள். ஆகவே, மேல் நாடுகளுக்கே தொழில் மயத்தின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருந்தால், இந்தியாவிற்கு அது இன்னும் அதிக இருள் சூழ்ந்ததாக இராதா?[1]

இயந்திரம் தான் காரணம்

'தற்போதுள்ள குழப்பங்களுக்கு என்ன காரணம்?' இது பலவீனமான நாடுகளைப் பலம் பொருந்திய நாடுகள் சுரண்டுவது என்று நான் சொல்லமாட்டேன். அதற்குப் பதிலாக, சகோதர நாடுகளைச் சகோதர நாடுகள் சுரண்டுவதாகும். இயந்திரம்தான் இந்த நாடுகள் சுரண்டுவதைச் சாத்தியமாக்கி இருக்கிறது. இயந்திரங்கள் மீது நான் கொண்டுள்ள ஆட்சேபணைக்கு இந்த உண்மையே அடிப்படையான காரணமாகும். அதை மட்டும் வைத்துக் கொண்டு பார்த்தால் இயந்திரம் ஒரு உயிரற்ற பொருளே. அதை நல்ல காரியத்துக்கோ அல்லது கெட்ட காரியத்துக்கோ பயன்படுத்தலாம். ஆனால் அது எளிதாகக் கெட்ட காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதை நாம் அறிவோம்.[2]

தொழில் மயத்தை ஒழிப்போம்

உண்மையில், மேற்குநாடுகள் தங்களுக்குத் தெவிட்டும் அளவுக்குத் தொழில் மயத்தையும் சுரண்டலையும் கையாண்டிருக்கின்றன. உண்மையென்னவெனில் இந்தத் தொழில் மய நாகரிகமெல்லாம் தீயதானதால், அது ஒரு நோயேயாகும். வெறும் முழக்கங்கள் அல்லது சொற்றொடர்களில் நாம் மயங்கிவிடக் கூடாது. நீராவிக் கப்பல்கள், தந்திகள் ஆகியவற்றுடன் எனக்கு விரோதம் இல்லை. தொழில் மயமும், மற்றும் அதைச் சார்ந்தவைகளும் இல்லாமல் இவை இருக்கமுடியும். அவை தான் முடிவானவை என்பதல்ல. மனிதவர்க்கத்தின் நிரந்தரமான நலனுக்கு அவை எந்த வகையிலும் தவிர்க்க முடியாதவையல்ல. நீராவி, மின்சாரம் ஆகியவற்றின் உபயோகமெல்லாம் இப்போது நமக்குத் தெரிந்திருப்பதால், அவைகளை உரிய காலத்திலும் தொழில் மயத்தை எவ்வாறு தவிர்ப்பது என்பதைக் கற்றுக்கொண்ட பிறகும் நாம் பயன்படுத்தலாம். ஆகையால் நம்முடைய முக்கிய அக்கறையெல்லாம் எப்படியாவது தொழில் மயத்தை ஒழிப்பதுதான்.[3]

ஒருவருக்கு உணவு, மற்றொருவருக்கு விஷம்

இந்த நாகரிகத்தில் தணியாத லோகாயத ஆசை ஒரு புறமும் அதனால் விளையக்கூடிய யுத்தம் மற்றொரு புறமும் இருக்கிறது. அதன்மீது அவநம்பிக்கை வைத்துள்ள, விஷயமறிந்தவர்களுடைய தொகை, நாளுக்குநாள் கூடிக் கொண்டு போகிறது. ஆனால் நல்லதோ கெட்டதோ, மேற்கு நாட்டவர் கருத்துப்படி இந்தியா ஏன் தொழில் மயமாக வேண்டும்? மேற்குநாட்டு நாகரிகம் நகரத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கிலாந்து அல்லது இத்தாலியைப் போன்ற சிறிய நாடுகள், தங்களுடைய முறைகளை நகர் மயமாக்க முடியலாம். மிகக் குறைந்த ஜனத்தொகையுடைய அமெரிக்காவைப் போன்ற ஒரு பெரிய

நாடு ஒரு வேளை வேறு எதுவுமே செய்ய முடியாது. ஆனால் ஒரு பெரிய நாடு - நெருக்கமான ஜனத்தொகையைக் கொண்ட நாடு - இதுவரை தனக்காகப் பயன்பட்ட புராதன கிராமப்புற பரம்பரையைக் கொண்ட ஒருநாடு - மேற்கு நாட்டின் மாதிரியைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை; பின்பற்றவுங் கூடாது. ஒரு சூழ்நிலையில் உள்ள ஒரு நாட்டுக்கு நல்லதாய் இருப்பது, மாறுபட்ட சூழ்நிலையில் உள்ள மற்றொரு நாட்டிற்கு நல்லதாய் இருக்குமென்பதில்லை. ஒரு மனிதனுக்கு உணவாய் இருப்பது மற்றொரு மனிதனுக்கு விஷமாகிறது. ஒரு நாட்டின் பூகோள அமைப்புக்கு, அதன் கலாசாரத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு உண்டு. வடதுருவ, தென் துருவப் பகுதிகளில் வாழ்பவர்களுக்கு தோலாலான கோட் அவசியமாக இருக்கலாம். ஆனால், மத்திய ரேகைப் பகுதியில் வாழ்பவர்களை அது மூச்சுத் திணற வைத்துவிடும்.[4]

கஷ்டம் எதில் இருக்கிறது?

தற்போதுள்ள கஷ்டம் பொறுக்க முடியாதது என்பதில் ஐயப்பாடே இல்லை. கொடுமையான வறுமை நீங்கியாக வேண்டும். ஆனால் தொழில் மயமாவது அதற்குப் பரிகாரம் அல்ல. மாட்டு வண்டிகளை உபயோகப்படுத்துவதனால் கஷ்டம் வந்துவிடவில்லை. நம்முடைய சுயநலமும், அண்டை அயலார்களிடம் நமக்கு அனுதாப உணர்ச்சி இல்லாததுந்தான் அதற்குக் காரணம். நம்முடைய அண்டை, அயலார்களிடம் நமக்கு அன்பு இல்லையென்றால், எந்த மாறுதலும் - அது எவ்வளவுதான் புரட்சிகரமானதாக இருந்தாலும் - நமக்கு எந்தவிதமான நன்மையும் பயக்க முடியாதது.[5]

மனிதர் வேறு, முறை வேறா?

எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் நான் அந்த முறையை இன்றே அழித்துவிடுவேன். அவைகளை மிகவும் பயங்கரமான ஆயுதங்கள் தான் அழிக்கும் என்ற நம்பிக்கை

மட்டும் எனக்கிருந்தால், அவைகளையும் பயன்படுத்துவேன். இந்தப் பயங்கர ஆயுதங்கள் தற்போது நிருவாகத்திலுள்ள வர்களை அழிக்குமானாலும், முறையை ஸ்திரப்படுத்தத் தான் செய்யும் என்பதனால்தான் நான் தயங்குகிறேன். மனிதர்கள் கடைப்பிடிக்கும் முறையை அல்லாது மனிதர்களையே அழிப்பவர்கள், பின்னால் அந்த முறைகளையே கடைப்பிடித்து, அவர்கள் யாரை அழித்தார்களோ அவர்களைக் காட்டிலும் மோசமானவர்களாய் விடுகிறார்கள். மனிதர்கள் கடைப்பிடிக்கும் முறை அவர்களுடன் ஒழிந்துவிடும் என்ற தவறான நம்பிக்கையில்தான் இவர்கள் மனிதர்களை அழிக்கிறார்கள். தீமையின் மூல வேர் எங்கேயிருக்கிறது என்பது இவர்களுக்குத் தெரியாது.[6]

தொழில்கள் எம்முறையில்?

பெரிய அளவில் தொழில் மயமாக்குவதானது, கிராமங்களை எல்லாவகையான சுரண்டலுக்கும் இலக்காக்கத்தான் செய்யும். ஏனென்றால் போட்டி, விற்பனைக்கான மார்க்கெட் பிடித்தல் என்ற பிரச்னைகளெல்லாம் வந்துவிடுகின்றன. ஆகவே, கிராமம் சுய தேவைப்பூர்த்தி அடையுமாறு செய்வதிலும், பிரதானமாக உபயோகத்திற்காகவே உற்பத்தி செய்வதிலும் நாம் ஒரு மனதான கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. தொழில்களில் இந்த அம்சம் நிலை நிறுத்தப்படுவதாக இருந்தால், கிராமவாசிகள் தாங்களே செய்யவும் வாங்கவும் கூடிய கருவிகளையும் நவீன இயந்திரங்களையும் உபயோகப்படுத்துவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது.[7]

இந்தியாவின் கடமை

எல்லா நாடுகளுக்கும் எல்லா வகையிலும் தொழில் மயம் அவசியம் என்று நான் நம்பவில்லை. இந்தியாவைப் பொறுத்த வரை இது சரியல்ல. புலம்பிக் கொண்டிருக்கும் இந்த உலகத்திற்கு ஒருவகையில் இந்தியா தனது கடமையைச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன்.

ஆயிரக்கணக்கான தனது குடிசைத் தொழில்கள் வளர்ச்சியடையுமாறு செய்வதன் மூலமும், உலகுடன் சமாதானமாக வாழ்வதன் மூலமும் அது எளிய, ஆனால் உயர்ந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். பணப் பூதத்தை ஆராதனை செய்வதன் மூலம் கிடைத்துள்ள அதிவேகத்தை அடிப்படையாகக் கொண்ட சிக்கல் நிறைந்த லோகாயத வாழ்க்கையானது உயர்ந்த சிந்தனையுடன் ஒத்துப்போகாது. கண்ணியமாக வாழுங் கலையை நாம் கற்றுக்கொண்டால்தான், வாழ்க்கையின் அழகுகளெல்லாம் சாத்தியமாகும்.

ஒரு ஐயப்பாடு

‘உலகம் இன்று மேலும் மேலும் ஆயுதபாணியாகிக் கொண்டு வருகிறது. ஆடம்பரமான ஒரு சூழ்நிலைக்கு மத்தியில் வாழ்கிறது. இப்படிப்பட்ட ஒரு உலகத்தில், எவ்வளவுதான் பெரிய நாடாக இருந்தாலும் எவ்வளவு தான் மக்கள் தொகை கொண்டதாக இருந்தாலும், அது தனித்து ஒதுங்கியிருந்து எளிய வாழ்க்கை வாழ முடியுமா?’ என்ற கேள்வி ஒரு சந்தேகவாதியின் மனதில் எழலாம். இதற்கான பதில் நேரடியானது, லேசானது, எளிய வாழ்க்கை சிறந்தது என்றால் நாம் முயற்சி செய்து பார்ப்போமே? முயற்சி செய்பவர் ஒருவராய் இருந்தாலென்ன அல்லது ஒரு சிறு குழுவாய் இருந்தாலென்ன?

ஐரோப்பிய நாகரிகம்

ஐரோப்பிய நாகரிகம் நிச்சயமாக ஐரோப்பியர்களுக்கு நல்லதுதான். ஆனால் நாம் அதை அப்படியே பின்பற்ற ஆரம்பித்தால், அது இந்தியாவின் அழிவில் முடிந்துவிடும். இதனால், அதில் நல்லதாக இருப்பதை, ஏற்றுக் கொள்ளத் தகுதியாக இருப்பதை நாம் கடைப்பிடிக்கக் கூடாது என்று நான் கூறவில்லை. அதே சமயம், அதில் என்னென்ன தீமை ஊடுருவியிருந்தாலும் அதை ஐரோப்பியர்கள் அகற்றக்கூடாது என்று நான் கூறுவதாகவும் ஆகாது. லோகாயத வசதிகளை ஓயாது தேடுவதும் அவைகளை மேலும் மேலும் பெருக்கிக்

கொண்டு செல்வதும் ஒரு தீமையேயாகும். ஆகையால் நான் தைரியமாகக் கூறமுடியும்: தாங்கள் எந்த வசதிகளுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்களோ அவைகளின் சுமையால் ஐரோப்பியர்கள் அழிந்துபோகாமல் இருக்க வேண்டுமானால், ஐரோப்பியர்களே தங்களுடைய கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும் என்று. என்னுடைய கணிப்பு தவறாக இருக்கலாம். ஆனால் இந்தியாவானது ஆடம்பர வாழ்க்கையை நாடிச்சென்றால் மரணத்தை எதிர்நோக்குவதாகவே முடியும். ஆகவே ஒரு மேற்கு நாட்டுத் தத்துவ சாஸ்திரியின் 'எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும்' என்ற கோட்பாட்டை நாம் நமது உள்ளத்தில் பதித்து வைத்துக் கொள்வோம். இன்று கோடிக்கணக்கான மக்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ முடியாது. பொதுமக்களுக்காகச் சிந்திக்கிறோம் என்று கூறும் நமக்கு ஒரு அபாயம் இருக்கிறது. அதாவது உயர்ந்த வாழ்க்கையை நோக்கிச் செல்ல முயலும் வீண் முயற்சியில், நாம் உயர்ந்த சிந்தனையை இழந்துவிடுவோம்.[9]

இது புனிதமானதல்ல

''அமெரிக்க செல்வத்தை நாம் அடைவோம்; ஆனால் அதன் முறைகளை மட்டும் விலக்கிவிடுவோம்'' என்று நம்முடைய நாட்டில் பலர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு முயற்சி செய்யப்பட்டால், அதன் தோல்வி அதன் தலையிலேயே எழுதப்பட்டிருக்கும் என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். ஒரே நிமிஷத்தில் நாம் விவேகமானவராகவும், நிதானமானவராகவும், ஆத்திரமுள்ள வராகவும் இருக்க முடியாது... ஆலைச் சிம்னிகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் புகையாலும் ஓயாத இரைச்சலாலும் கோரமாக்கப்பட்ட இந்தப் பூமியில் தேவர்கள் கால் வைக்க மாட்டார்கள். இந்த பூமியின் சாலைகளில் என்ஜின்கள் விரைந்தோடிக் கொண்டிருக்கின்றன. இவைகள் எண்ணற்ற கார்களை இழுத்துச் செல்கின்றன. இந்தக் கார்களிலோ மனிதர்கள் மூட்டைகள் போல் அடைந்து கிடக்கிறார்கள். இந்த மனிதர்களுக்கு எங்கே, எதற்காகச்

செல்கிறோம் எனத் தெரியாது. பெரும்பாலும் இவர்கள் தாமத புத்தியுடையவர்களாய் இருக்கிறார்கள். மீன்கள் பெட்டிகளில் அடைக்கப்பட்டிருப்பது போன்று வசதியில்லாத முறையில் அடைபட்டுச் செல்வதனால் இவர்களுடைய நிதானம் வளராது. இவர்கள் முற்றிலும் அயலவர்கள் மத்தியிலேயே செல்கிறார்கள். முடிந்தால் அவர்கள், இவர்களை வெளியேற்றி விடுவார்கள். அதே போன்று இவர்களால் முடிந்தால் அவர்களையும் வெளியேற்றி விடுவார்கள். இப்படிப்பட்ட உலகில் தேவர்கள் காலடி எடுத்து வைக்கமாட்டார்கள். இவைகளெல்லாம் லோகாயத முன்னேற்றங்களின் சின்னங்களாகக் கருதப்படுவதனால் தான் நான் இவைகளைக் கூறுகிறேன். உண்மையில் இவை மகிழ்ச்சிக்கு எள்ளளவு கூடத் துணை செய்வதில்லை.[10]

தீமைகள் ஒரு போதும் நீங்கா

தொழில் மயமாக்க வேண்டுமென்று பண்டித நேரு விரும்புகிறார். ஏனென்றால், அதைச் சோஷலிச மயமாக்கி விட்டால், முதலாளித்துவத்தின் தீமைகளெல்லாம் போய் விடும் என்று அவர் நம்புகிறார். ஆனால் என்னுடைய கருத்து வேறு. தொழில் மயமாக்குவதிலேயே இந்தத் தீமைகளெல்லாம் இயற்கையாக இருக்கின்றன. எவ்வளவு தான் சோஷலிச மயமாக்கினாலும் இத்தீமைகளைப் போக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.[11]

ஆன்மாவை இழந்து வாழ்வா?

தொழில் மயத்தைத் தெய்வமாக வழிபடும் நாடு ருசியாதான். அந்த நாட்டை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அங்குள்ள வாழ்க்கை என்னைக் கவரவில்லை. பைபிளிலுள்ள வாசகத்தை மேற்கோளாகக் காட்டுவதானால், ‘‘ஒரு மனிதன் தனது ஆன்மாவை இழந்து உலகத்தையே பெற்றாலும் அதனால் அவனுக்கு என்ன பயன்?’’ இக்காலச் சொற்களில் கூறுவதானால், ஒருவன் தன்னுடைய தனித் தன்மையை இழந்து, ஒரு இயந்திரத்தில் உள்ள ஆணியைப் போன்று ஆகிவிடுவது மனித கௌரவத்துக்கே தாழ்ந்த

செயலாகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் சக்தியுள்ள, முழு வளர்ச்சியடைந்த அங்கத்தினராக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கிராமங்கள் சுயதேவை பூர்த்தி உள்ளவையாக வேண்டும். ஒருவர் அஹிம்சையின் அடிப்படையில் சேவை செய்வதாக இருந்தால், இதைத் தவிர வேறு எந்தப் பரிகாரமும் எனக்குத் தெரியவில்லை. இப்போது எனக்கு இதில் அழுத்தமான நம்பிக்கை இருக்கிறது.[12]

ஆண்டவன் காப்பானாக!

மேற்குநாட்டு முறையில் இந்தியா ஒருபோதும் தொழில் மயமாகாதிருக்க ஆண்டவன் காப்பாற்றுவாராக. ஒரே ஒரு சிறிய தீவான இங்கிலாந்தின் பொருளாதார ஏகாதிபத்தியம், இன்று உலகத்தைச் சங்கிலிகளால் கட்டி வைத்திருக்கிறது. முப்பது கோடி மக்களைக் கொண்ட ஒரு தேசம் முழுவதும் இப்படிப்பட்ட பொருளாதாரச் சுரண்டலில் இறங்கிவிட்டால், அது அட்டை உறிஞ்சுவதுபோல் உலகத்தின் ரத்தத்தையே உறிஞ்சிவிடும்.[13]

தப்பிச் செல்ல விரும்பக் கூடாது

மேற்குநாடுகள் தங்களுடைய ரத்தம் தோய்ந்த வழியில் ஏற்கனவே சோர்வடைந்து போய்விட்டதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்த வழியில் இந்தியாவுக்குக் கதிமோட்சம் இல்லை. எளிய, ஆன்மீக வாழ்விலிருந்து தோன்றும் ரத்தம் சிந்தாத அமைதி வழியில்தான் இருக்கிறது. தன்னுடைய ஆன்மாவை இழந்துவிடக் கூடிய அபாயமான கட்டத்தில் இந்தியா இருக்கிறது. அவ்வாறு இந்தியா தன் ஆன்மாவை இழந்து வாழ முடியாது. ஆகவே சோம்பேறித் தனத்துடனும் உதவியற்ற முறையிலும், ''மேற்கு நாடுகளிலிருந்து வரும் மோதுதலிலிருந்து நாம் தப்ப முடியாது'', என்று அது கூற முடியாது. தன்னுடைய நலனுக்காகவும் உலகத்தின் நலனுக்காகவும் அதை எதிர்ப்பதற்கான பலம் இந்தியாவுக்கு இருக்க வேண்டும்.[14]

இலட்சியமும் நடைமுறையும்

''இலட்சிய அடிப்படையில் பார்த்தால், எல்லா இயந்திரங்களும் கூடாதென்று நீங்கள் கூறுவீர்களல்லவா?''

''இலட்சிய அடிப்படையில் எல்லா இயந்திரங்களும் கூடாதென்றுதான் நான் சொல்வேன். மோட்சம் அடைவதற்கு உதவாத இந்த உடல் எவ்வாறு கூடாது என்றும் ஆன்மா பூரண விடுதலை பெற வேண்டுமென்றும் நான் சொல்வேனோ அதே போன்று, எல்லா இயந்திரங்களும் கூடாதென்றுதான் சொல்வேன். ஆனால் இயந்திரங்கள் இருக்கத்தான் செய்யும். ஏனெனில், உடல் எவ்வாறு தவிர்க்க முடியாதோ அதே போன்று இயந்திரங்களும் தவிர்க்க முடியாதவையாக இருக்கும். நான் ஏற்கனவே உங்களிடம் கூறியது போல, இந்த உடம்பே ஒரு பரிசுத்தமான இயந்திரந்தான்; ஆனால், ஆன்மா உயர்ந்த நிலையை அடைவதற்கு இது தடங்கலாக இருந்தால் இதை நாம் நிராகரிக்க வேண்டியதே.[14]

இந்தியா முழுவதும் ஒருவர் நிலமானால்?

இயந்திரத்திற்கு அதற்குரிய இடம் உண்டு. அது நிலைத்து விட்டது. ஆனால் அத்தியாவசியமான மனித உழைப்புக்குள்ள இடத்தை இயந்திரம் ஆக்கிரமித்துக் கொள்ள விடக்கூடாது. அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு கலப்பை நல்லதுதான். ஆனால் ஏதாவதொரு வழியில், இந்தியா முழுவதையும் உழுவதற்குச் சக்திவாய்ந்த ஒரு இயந்திர சாதனத்தை ஒருவர் கண்டுபிடித்து அவரே உழுது உற்பத்தியை எடுத்துக்கொண்டு, கோடிக்கணக்கான மக்களுக்கு வேறு வேலை எதுவும் இல்லாமற் போய் விட்டால் அவர்கள் பட்டினி கிடப்பார்கள். ஒரு வேலையும் இல்லாது சோம்பியிருப்பதால், மந்தம் பிடித்தவர்களாகப் போய் விடுவார்கள். இவ்வாறு ஏற்கனவே பலர் ஆகியும் இருக்கிறார்கள். இந்த விரும்பத்தகாத நிலைக்கு மேலும் பலர் தாழ்ந்து போய்விடுவார்களென்ற அபாயம் ஒவ்வொரு மணிநேரமும் இருந்து கொண்டிருக்கிறது.[15]

வேறு வேலை தர வேண்டும்

குடிசைத் தொழில் இயந்திரத்தில் ஒவ்வொரு முன்னேற்றம் செய்யப்படுவதையும் நான் வரவேற்பேன். அதே சமயம், கோடிக்கணக்கான விவசாயிகளுக்கு அவர்களது இல்லங்களில் நாம் வேறு வேலை அளிக்கத் தயாராய் இருந்தாலொழிய, மின்சாரத்தால் இயங்கும் நூற்புக் கதிர்களின் மூலம் உடல் உழைப்பிற்கு இடமில்லாமற் செய்துவிடக் கூடாது.[16]

எல்லோருடைய நலன்களையும் பாதுகாக்கக் கூடியவாறு இயந்திரங்களைப் பயன்படுத்துவதே சட்டபூர்வமானது.[17]

இராட்டைதான் ஒரே வழி

இந்தியாவில் உள்ள கொடிய வறுமையையும் அதனால் ஏற்படக்கூடிய சோம்பேறித்தனத்தையும் தவிர்க்க முடியுமானால், மிகப்பெரிய இயந்திரங்களை உபயோகப்படுத்துவதையும் நான் வரவேற்பேன். வறுமையை ஓட்டுவதற்கும் உழைப்புக்கும் செல்வத்துக்கும் பஞ்சம் இல்லாமற் செய்வதற்கும் கையால் நூல் நூற்பது தான் ஒரே வழியென்று நான் கூறியிருக்கிறேன். நூற்புயந்திரமே ஒரு விலை மதிக்கவொண்ணா இயந்திரந்தான். இந்தியாவின் விசேஷ நிலைமைக்கு ஏற்றவாறு அதில் சில சீர்திருத்தங்கள் செய்ய நான் முயன்றிருக்கிறேன்.[18]

வரவேற்கும் இயந்திரங்கள்

''எல்லா இயந்திரங்களையுமே நீங்கள் எதிர்க்கிறீர்களா?''

ஆணித்தரமாக, 'இல்லை' என்பதுதான் எனது பதில். இயந்திரம் விவேகமற்ற முறையில் பெருகிக்கொண்டு போவதைத்தான் நான் எதிர்க்கிறேன். இயந்திரம் வெற்றியடைவது போல் தோன்றுகிறது என்றாலும் அதைக் கண்டு நான் மனக் குழப்பமடைந்துவிடவில்லை. அழிவை

விளைவிக்கக் கூடிய இயந்திரங்கள் எல்லாவற்றையுமே, விதி விலக்கில்லாமல் நான் எதிர்க்கிறேன். ஆனால், தனிப்பட்டவர்களுடைய உழைப்பை மீதப்படுத்துபவையும் கோடிக்கணக்கான குடிசைகளின் சுமையைக் குறைக்கக் கூடியவையுமான இயந்திரங்கள், மற்ற எளிய கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றையும் நான் வரவேற்கத்தான் வேண்டும்.[19]

உழைப்பை மீதப்படுத்துவதில் தவறு

இயந்திரங்கள் மீதுள்ள வெறியைத்தான் நான் ஆட்சேபிக்கிறேனேயொழிய, இயந்திரங்களையல்ல. உழைப்பை மீதப்படுத்தும் இயந்திரம் என்று சொல்கிறார்களே, அதன் மீதுதான் வெறி இருக்கிறது. ஆயிரக்கணக்கான பேருக்கு வேலை இல்லாமல் போய், அவர்கள் தெருக்களில் பட்டினியால் சாகும்வரை, மக்கள் உழைப்பை மீதப்படுத்திக் கொண்டே போகிறார்கள். நானும் நேரத்தையும் உழைப்பையும் மீதப்படுத்த விரும்புகிறேன். மனித வர்க்கத்தில் ஒரு பகுதியினருக்காகவல்ல, எல்லோருக்காகவும் ஒரு சிலரிடம் மட்டும் செல்வம் குவிவதை நான் விரும்பவில்லை. ஆனால், எல்லோர் கைக்கும் செல்வம் கிடைக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். இன்று இயந்திரமானது கோடிக்கணக்கான மக்கள் மீது ஒரு சிலர் குதிரை ஏறத்தான் உதவுகிறது. இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கக்கூடிய தூண்டுதல் பேராசையே தவிர உழைப்பை மீதப்படுத்த வேண்டுமென்பதல்ல. இவ்விதமான அமைப்பு இருப்பதைத்தான் நான் என்னுடைய பலத்தையெல்லாம் கொண்டு எதிர்க்கிறேன்.

எப்போது இயந்திரம் உதவும்?

''அப்படியானால் நீங்கள் இயந்திரங்கள் என்பதற்காக இயந்திரங்களை எதிர்க்கவில்லை. இன்று அவை வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு வழியாகின்றனவே அவைகளைத்தான் எதிர்க்கிறீர்கள்.''

இதற்கு, எவ்விதத் தயக்கமும் இல்லாமல் 'ஆம்' என்று சொல்வேன். ஒரு விஷயத்தையும் சேர்த்துச் சொல்லலாம். விஞ்ஞானபூர்வமான உண்மைகளும் கண்டுபிடிப்புகளும் பேராசையின் சாதனங்களாய் இருப்பது முதலில் நிற்க வேண்டும். அப்போது தொழிலாளர்கள் தங்கள் சக்திக்கு மீறி உழைக்க வேண்டியது இருக்காது. இயந்திரம் முட்டுக்கட்டையாக இருப்பதற்குப் பதிலாக உதவியாக இருக்கும். இயந்திரங்களையெல்லாமல் ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதற்காக அல்லாமல் அவைகளை ஒரு வரையறைக்குள் நிறுத்துவதற்காக நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.

சில விதி விலக்குகள்

''தர்க்கபூர்வமாக இதை வாதிக்கும்போது, இயந்திரத்தால் இயக்கப்படும் நுணுக்கமான பெரிய இயந்திரங்களெல்லாம் போகவேண்டுமென்று பொருளாகுமல்லவா?''

அது போக வேண்டியதுதான், ஆனால் ஒரு விஷயத்தை நான் தெளிவாக்க விரும்புகிறேன். இதில் தலையாய முக்கியத்துவம் மனிதனுக்குத்தான். இயந்திர மானது மனிதனுடைய உறுப்புக்களைச் சூம்பிப் போகுமாறு செய்துவிடக்கூடாது. புத்திசாலித்தனமான முறையில் சில விதி விலக்குகள் அளிக்கலாம் என்று நான் கூறுகிறேன். உதாரணமாக, சிங்கர் தையல் இயந்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களிலேயே உபயோகமான ஒரு சிலவற்றில் அதுவும் ஒன்றாகும். அந்தச் சாதனத்தில் ஒரு பெரிய காதல் காவியமே அடங்கியிருக்கிறது. தன்னுடைய மனைவி தனது கைகளாலேயே அலுப்புத்தட்டும் முறையில் துணியை மடித்துத் தைத்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட சிங்கர், அவள்மீது கொண்ட அன்பின் காரணமாக, அவளுக்கு இந்த அனாவசியமான வேலை இல்லாமல் செய்வதற்காகத் தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதனால் அவர் அவளுடைய உழைப்பைக் குறைத்தது

மட்டுமல்லாமல், ஒரு தையல் இயந்திரத்தை வாங்க முடிந்த ஒவ்வொருவர் உழைப்பையும் குறைத்துவிட்டார்.

மக்களுக்காகத் தொழிற்சாலை

''அப்படியானால் இந்த சிங்கர் தையல் இயந்திரங்களைச் செய்வதற்கு ஒரு தொழிற்சாலை இருக்க வேண்டுமே? அதில் மின்சாரத்தால் இயக்கப்படும் சாதாரண வகை இயந்திரம் இருக்க வேண்டுமல்லவா?''

ஆம். ஆனால், இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் தேசியமயமாக வேண்டும் அல்லது அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்று கூறும் அளவுக்கு நான் ஒரு சோஷலிசவாதியாவேன். மிகவும் கவர்ச்சிகரமான, இலட்சிய அடிப்படையில் அமைந்த சூழ்நிலைகளில் தான் செயலாற்ற வேண்டும். இலாபத்திற்காக அல்லாமல், மனிதவர்க்கத்தின் நலனுக்காகச் செயலாற்ற வேண்டும். நோக்கம் பேராசையாக இல்லாது அன்பாக இருக்க வேண்டும். தொழிலாளர்களுடைய நிலைமையில் ஒரு மாறுதல் வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். செல்வத்தின் மீதுள்ள இந்தப் பைத்தியக்காரத்தனமான வெறி நிற்க வேண்டும். தொழிலாளர்களுக்கு வாழ்க்கைக்குக் கட்டுப்படியான ஊதியம் கிடைக்கும் என்பது மட்டுமல்லாமல் அலுப்புத் தட்டாத ஒரு வேலையும் தினந்தோறும் கிடைக்கும் என்ற உறுதி வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயந்திரமானது அதில் பணியாற்றும் மனிதனுக்கு எந்த அளவு உதவியாக இருக்கிறதோ அந்த அளவு அரசாங்கத்திற்கோ அல்லது அந்த இயந்திரத்தின் சொந்தக்காரருக்கோ உதவியாக இருக்கும். தற்போதுள்ள பைத்தியக்காரத்தனமான வெறி நிற்கும். நான் ஏற்கனவே கூறியதுபோல, கவர்ச்சிகரமானதும் இலட்சியபூர்வமானதுமான சூழ்நிலைகளில் தொழிலாளி வேலை செய்வான். என் மனத்திலுள்ள விதிவிலக்குகளில் இது ஒன்றுதான். தையல் இயந்திரத்தின் அடிப்படையில் அன்பு இருக்கிறது. இதில் தலையாய முக்கியத்துவம் தனிப்பட்ட மனிதனுக்கே.

தனிப்பட்ட மனிதனுடைய உழைப்பை மீதப்படுத்துவதே குறிக்கோளாய் இருக்க வேண்டும். உண்மையான மனிதாபிமான உணர்ச்சியே நமது நோக்கமாய் இருக்க வேண்டுமேயொழிய, பேராசையல்ல. பேராசை இருக்கு மிடத்தில் அன்பை வையுங்கள். எல்லாம் சரியாகப் போய் விடும்.''[20]

இயந்திர சகாப்தத்தை எதிர்க்கவில்லை

''ஓ, நீங்கள் இந்த இயந்திர சகாப்தத்தையே எதிர்க்கிறீர்கள், எனக்குத் தெரிகிறது.''

அவ்வாறு சொல்வது என்னுடைய கருத்துக்களைக் கேலி செய்வதாகும். இயந்திரம் என்பதற்காக இயந்திரத்தை நான் எதிர்க்கவில்லை. ஆனால், அது நம் மீது ஆதிக்கம் செலுத்தும் போது நான் அதைப் பூரணமாக எதிர்க்கிறேன்.

ஏழ்மை அடைந்தது எப்போது?

''நீங்கள் இந்தியாவைத் தொழில் மயமாக்க மாட்டீர்கள்.''

இல்லை. உண்மையில், என்னுடைய கருத்தின்படி அதைத் தொழில் மயமாக்குவேன். கிராம சமுதாயங்கள் மறுமலர்ச்சி அடையுமாறு செய்ய வேண்டும். இந்தியாவிலுள்ள நகரங்களின் தேவைகளையெல்லாம் கிராமங்கள் ஒரு காலத்தில் உற்பத்தி செய்து அளித்து வந்தன. நம்முடைய நகரங்கள் வெளிநாடுகளின் மார்க்கெட்டுகளான பின், வெளிநாடுகளிலிருந்து மலிவான, போலியான சரக்குகளைக் குவித்து கிராமங்கள் வறட்சியடையுமாறு செய்தபின், இந்தியா ஏழ்மை அடைந்தது.

பெருந்தொழிலில் ஏன் ஈடுபடவில்லை?

''அப்படியானால், நீங்கள் பழைய இயற்கைப் பொருளாதாரத்துக்குக் கொண்டு செல்வீர்கள்?''

ஆம். இல்லையேல் நான் திரும்பி நகரங்களுக்குச் செல்ல வேண்டியதிருக்கும். என்னால் ஒரு பெரிய தொழில் நடத்த முடியுமானாலும் அந்த ஆசையை நான்

வேண்டுமென்றே தியாகம் செய்கிறேன். இதை ஒரு தியாகமாக நான் செய்யவில்லை. என்னுடைய உள்ளமே அதற்கு எதிராகக் கொதித்து எழுந்ததால் அவ்வாறு செய்தேன். நாட்டில் நடைபெற்றுவரும் கொள்ளையிலும் அழிவிலும் - இது நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனக்கும் பங்கு இருக்கக் கூடாது. ஆனால் அதே சமயம் வேறொரு வகையில் நான் கிராமத்தைத் தொழில் மயமாக்கிக் கொண்டிருக்கிறேன்.[21]

உற்பத்தி - விநியோகம்

மனித வர்க்கத்தின் தேவைகளையெல்லாம் இயந்திரம் அளித்து விட முடியும் என்பதை ஒரு கணம் நாம் ஒப்புக் கொள்வோம். ஆனாலும் சில குறிப்பிட்ட பகுதிகளில் உற்பத்தி குவியுமாறு அது செய்துவிடும். அப்போது, விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக நீங்கள் சுற்று வழியில் செல்ல வேண்டியதிருக்கும். அதே சமயம், எங்கெங்கு எந்தெந்தப் பொருள்கள் தேவையாக இருக்கின்றனவோ அங்கேயே அவை உற்பத்தியாகி விநியோகமானால், அது தானாகவே ஒழுங்குபடுத்தப்படும். அங்கு ஏமாற்றுதலுக்கு அதிக வாய்ப்பு இருக்காது. வணிகச் சூதாட்டத்துக்கு ஒரு வாய்ப்புமே இருக்காது... உற்பத்தியும் நுகர்வும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் நடைபெறும் போது, உற்பத்தியை அளவில்லாது எந்த வகையிலும் வேகப்படுத்தும் ஆசை மறைந்து போய்விடும். நம்முடைய தற்போதைய பொருளாதார முறையால் ஏற்படக் கூடிய எண்ணற்ற கஷ்டங்களும் பிரச்னைகளும் முற்றுப் பெற்று விடும்... அதிலும் நிச்சயமாக மொத்த மொத்தமாக உற்பத்தி செய்வது நின்று விடும். ஆனால் தனிப்பட்ட முறையில் மக்களின் சொந்த வீடுகளிலேயே உற்பத்தி செய்வது மட்டும் மொத்தமாக இருக்கும். கோடிக்கணக்கானவர் தங்கள் தங்கள் வீடுகளில் உற்பத்தி செய்வதை மொத்தமாகக் கணக்கிட்டார்களானால், பிரம்மாண்டமான அளவில் மொத்த உற்பத்தி இராதா?... தற்போது நீங்கள் மொத்த உற்பத்தி செய்வது மிகவும் தொழில் நுணுக்கம் நிறைந்த இயந்திரங்களின் உதவியுடன் மிகக் குறைந்த மக்களால்

உற்பத்தி செய்யப்படுவதாகும்....... என்னுடைய இயந்திர மானது மிகவும் சாதாரண வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். இதை நான் கோடிக்கணக்கானவர் வீட்டு உபயோகத்துக்கு அளிக்க முடிய வேண்டும்.[22]

சுயபலத்தை நம்புவோம்

தொழில் இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்பதை நான் அறிவேன். ஆகவே, தொழில் மயமாவதற்கு நான் எதிராக இருக்க முடியாது. ஆனால் இயந்திரத் தொழில்களைப் புகுத்துவதைப் பற்றி எனக்கு மிகுந்த கவலை ஏற்படுகிறது. இயந்திரமானது வெகு வேகமாக உற்பத்தி செய்கிறது. அதனுடன், என்னால் புரிந்து கொள்ள முடியாத ஒருவகைப் பொருளாதார முறையையும் கொண்டு வந்து விடுகிறது. ஏதாவது ஒரு பொருள், அதனால் விளையும் நன்மைகளைக் காட்டிலும் அதிகத் தீமைகளைச் செய்வதாக இருந்தால், நான் அப்பொருளை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தியாவில் வாயிருந்தும் ஊமையாக இருக்கும் கோடிக்கணக்கான மக்கள் சுகாதாரத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் ஆன்மீக ரீதியாக வளர்ச்சியடைய வேண்டுமெனவும் விரும்புகிறேன். ஆயினும் இதற்கு இயந்திரம் நமக்குத் தேவையில்லை. எத்தனையோ பேர் - மிக மிக அதிகமானபேர் வேலையில்லாது இருக்கின்றனர். நான் மேலும் அறிவு விளக்கம் பெறும்போது, அப்போதும் இயந்திரம் நமக்கு அவசியமெனத் தெரிந்தால், நிச்சயமாக அவைகளை வைத்துக் கொள்வோம். நமக்குத் தொழில் வேண்டும். நாம் முயற்சியுடன் செயலில் ஈடுபடுபவர்களாவோம். மேலும் மேலும் நம்மையே நாம் நம்பியிருப்போம். அவ்வாறு செய்யும்போது மற்றவர்களுடைய வழிகாட்டுதலை அதிகம் பின்பற்ற மாட்டோம். நமக்கு அவசியமானால் - அவ்வாறு அவசியமாகும் போது - இயந்திரங்களைப் புகுத்துவோம். அஹிம்சை அடிப்படையில் நம்முடைய வாழ்க்கையை ஒரு முறை உருவாக்கிக் கொண்டால், இயந்திரத்தை எவ்வாறு நமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வருவது என்பதை அறிந்து கொண்டவர்களாவோம்.[23]

அத்தியாயம் 4

நகரங்களும் கிராமங்களும்

இருவகைச் சிந்தனையாளர்கள்

இன்றைய உலகில் இருவகைச் சிந்தனையாளர்கள் இருக்கின்றனர். ஒரு வகைச் சிந்தனையாளர்கள் உலகை நகர மயமாக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். மற்றொரு வகைச் சிந்தனையாளர்கள் உலகைக் கிராம மயமாக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். கிராம நாகரிகமும், நகர நாகரிகமும் முற்றிலும் வேறுபட்டவையாகும். ஒன்று இயந்திரத்தையும் தொழில் மயமாக்குவதையும் சார்ந்திருக்கிறது; மற்றொன்று கைவேலைப்பாட்டுத் தொழில் களைச் சார்ந்திருக்கிறது. நாம் பின்னதற்கே முதன்மை தருகிறோம்.

வேண்டுவது "பொய்யாமை"

சொல்லப்போனால் தொழில் மயமாக்குவதென்பதும் பெரும் அளவில் உற்பத்தி செய்வதென்பதும் சமீப காலத்தில் வந்தவை தான். எந்த அளவு மகிழ்ச்சி பெருகுவதற்கு அது உதவியாயிருக்கிறது என்பதை நாம் அறிய மாட்டோம். ஆனால் இதைத் தொடர்ந்து அண்மைக் காலத்தில் உலகப் போர்களும் ஏற்பட்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். இரண்டாவது உலக யுத்தம் முடிந்தாலுங் கூட, மூன்றாவது உலக யுத்தத்தைப் பற்றிப் பேசப்படுவதைக் கேட்கிறோம். நம்முடைய நாடு தற்போது இருப்பதைப் போன்று தரித்திர திசையில், துன்பமான நிலையில் ஒருபோதும் இருந்ததில்லை. நகரத்திலுள்ள மக்களுக்குக் கொள்ளை லாபமும், நல்ல ஊதியமும் கிடைக்கலாம். ஆனாலும் கிராம மக்களின் ரத்தத்தை உறிஞ்சுவதன் மூலமே இது சாத்தியமாகிறது. இலட்சக்கணக்காகவோ அல்லது கோடிக்கணக்காகவோ பணம் வசூலிக்க நாம் விரும்பவில்லை. நம்முடைய வேலைக்கு எல்லாக் காலத்திலுமே பணத்தை நம்பியிருக்கவும் நாம் விரும்பவில்லை. இலட்சியத்துக்காக நம்முடைய உயிரையும் தியாகம் செய்ய நாம் தயாராய் இருந்தால் பணம் என்பது

ஒன்றுமேயில்லை; நமக்கு நம்பிக்கை வேண்டும்; நாம் நமது உள்ளத்திற்குப் பொய்யாது நடந்து கொள்ள வேண்டும். இவைகள் மட்டும் நமக்கு இருக்குமானால், நம்முடைய மூலதனமான ரூ.30 இலட்சத்தைப் பரவல் மயமாகக் கிராமங்களில் முதலீடு செய்து, ரூ.300 கோடி பெறுமான தேசிய சொத்தைச் சம்பாதித்து விடலாம். இந்த முக்கியமான காரியத்தைச் செய்ய, நமக்குத் தேவையானது கிராமங்களைச் சுயதேவைப் பூர்த்தியுள்ளவைகளாகவும் சுயபலத்தில் நம்பிக்கையுள்ளவைகளாகவும் ஆக்குவதே. ஆனால் ஒரு எச்சரிக்கை. சுயதேவைப் பூர்த்தி பற்றிய என்னுடைய தத்துவம் குறுகிய நோக்கம் கொண்டதல்ல. அதில் சுயநலத்துக்கோ வீம்புக்கோ இடமில்லை.[1]

கிராமங்களின் அவல நிலை

இந்தியாவிலுள்ள நகரங்களில் காணப்படும் செல்வத்தைக் கண்டு, நாம் ஏமாந்துவிடக் கூடாது. இங்கிலாந்திலிருந்தோ அல்லது அமெரிக்காவிலிருந்தோ அது வரவில்லை. ஏழைக்கும் ஏழையாக இருப்பவர்களின் ரத்தத்திலிருந்து வருகிறது. இந்தியாவில் ஏழு இலட்சம் கிராமங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. சில கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டன. வங்காளத்திலும், கர்னாடகத்திலும், மற்ற இடங்களிலும் பட்டினியாலும் நோயாலும் மாண்ட ஆயிரக்கணக்கானோரைப் பற்றி எந்த விதமான புள்ளி விவரங்களுமில்லை. கிராம மக்களுடைய நிலவரம் என்னவென்பதைப் பற்றி அரசாங்க தஸ்தாவேஜுகளிலிருந்து எதையும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் நானே ஒரு கிராமவாசியாகையால், கிராமங்களில் உள்ள நிலை எப்படியிருக்கும் என்பதை நான் நன்கு அறிவேன். கிராமப் பொருளாதாரமும் எனக்குத் தெரியும். மேலேயிருந்து அழுத்தும் பாரம், கீழேயுள்ளவர்களை நசுக்கிக் கொண்டிருக்கிறது.

நாம் அவர்கள் முதுகில் ஏறியிருப்பதைவிட்டுக் கீழே இறங்க வேண்டும். இதுதான் நாம் செய்ய வேண்டியதெல்லாம்.

ஆலை வளர்ச்சி கூடாது

பம்பாயிலுள்ள ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் அடிமைகளாகி விட்டார்கள். ஆலைகளில் வேலை செய்யும் பெண்களின் நிலையோ அதிர்ச்சி அளிப்பதாய் இருக்கிறது. ஆலைகளே இல்லாதபோது, இந்தப் பெண்களெல்லாம் பட்டினி கிடந்து கொண்டிருந்தார் களா? இயந்திர வெறி வளருவதானால், நம் நாடு துரதிருஷ்டம் பிடித்த நாடாகிவிடும். நான் இப்போது சொல்லப் போவது, எல்லோரும் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கைக்கு விரோதமானதாகத் தோன்றலாம். ஆனால் நான் அதைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாஞ்செஸ்டருக்குப் பணத்தை அனுப்பி, மோசமான மாஞ்செஸ்டர் துணியைக் கூட வாங்கி உபயோகிக்கலாம். இந்தியாவில் ஆலைகளைப் பெருக்கிக் கொண்டு போவது மட்டும் கூடாது. மாஞ்செஸ்டர் துணியை உபயோகப் படுத்துவதன் மூலம், நாம் பணத்தைத் தான் வீணாக்கு கிறோம். ஆனால் அதே மாஞ்செஸ்டரை இந்தியாவில் உருவாக்குவதன் மூலம், நம் ரத்தத்தைக் கொட்டித்தான் அந்தப் பணத்தை மீதப்படுத்துகிறோம். ஏனென்றால், நம்முடைய தார்மீக அம்சமே உறிஞ்சப்பட்டு விடுகிறது. என்னுடைய அறிக்கைக்கு ஆதரவாக, ஆலை அதிபர்கள் கூறியவைகளே சாட்சியம் கூறுகின்றன. தொழிற்சாலைகளின் மூலம் பணத்தைத் திரட்டியவர்கள் மட்டும் மற்ற பணக்காரர்களை விட நல்லவர்களாக இருந்துவிடப் போவதில்லை. ஒரு இந்திய ராக்பெல்லர் அமெரிக்க ராக்பெல்லரை விடச் சிறந்தவராய் இருப்பார் என்று எண்ணுவது அறிவீனமாகும். ஏழையாக இருக்கும் இந்தியா சுதந்திரம் பெறமுடியும். ஆனால் ஒழுக்கக் கேடான முறைகளின் மூலம் வளம் பெற்ற இந்தியா தனது சுதந்திரத்தை மீண்டும் அடைவதென்பது மிகக் கடினமானதாகும். இந்தியாவில் உள்ள பணக்காரர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரிக்கிறார்கள் என்பதை நாம் அடக்கத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியதாகத்தான் இருக்கிறது; அது எவ்வளவு நிலையாக இருக்கிறதோ அந்த

அளவுக்கு அவர்கள் நிலைமையும் ஸ்திரமாக இருக்கும். பணமானது ஒருவனை நிராதரவானவனாக்குகிறது. இதே அளவு தீமையான மற்றொன்று காம இச்சையால் இழைக்கப்படும் பாவமாகும். இரண்டுமே விஷங்கள்தான். ஒரு பாம்பின் கடி, இந்த இரண்டையுங்காட்டிலும் குறைந்த நச்சுத்தன்மை வாய்ந்ததாகும். பாம்பின் கடி உடலுக்கு மட்டுந்தான் தீங்கிழைக்கும் என்றால், இந்த இரண்டும் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் அழித்துவிடும். ஆகையால் ஆலைத் தொழில் வளர்ச்சியைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைந்துவிட முடியாது.[3]

உற்பத்தி செய்தும் பட்டினி

ஏழைக் கிராமவாசிகள் வெளிநாட்டு அரசாங்கத்தால் சுரண்டப்படுகிறார்கள். நம்முடைய சொந்த நாட்டு மக்களாலும் - நகரவாசிகளாலும் கூட அவர்கள் சுரண்டப்படுகிறார்கள். அவர்கள் உணவை உற்பத்தி செய்து கொடுத்துவிட்டுப் பட்டினியால் வாடுகிறார்கள்; பால் உற்பத்தி செய்தும் அவர்களுடைய குழந்தைகளுக்குப் பால் கிடைப்பதில்லை. இது வெட்கப்பட வேண்டிய ஒரு நிலை. ஒவ்வொருவருக்கும் சத்துள்ள உணவும், குடியிருப்பதற்கு வசதியான வீடும், குழந்தைகளின் கல்விக்கு வேண்டிய வசதிகளும் போதுமான வைத்திய வசதியும் இருக்க வேண்டும்.[4]

நகரங்கள் அவசியமற்றவை

இந்தியாவில் உள்ள சுமார் ஆறு நவீன நகரங்கள் நாடு என்னும் உடலில் உள்ள அவசியமற்ற புடைப்பு அல்லது வீக்கத்தைப் போல இருக்கின்றன. தற்போதைக்கு இவை, கிராமங்களின் ரத்தத்தை உறிஞ்சும் தீயச் செயலைச் செய்கின்றன. துடுக்கான முறையில் நகரங்கள் இன்று செய்யும் தவறுகளெல்லாம், கிராமங்களின் வாழ்வுக்கும் சுதந்திரத்துக்கும் ஓயாத தொந்தரவாக அமைந்திருக்கின்றன.[5]

உலகமெங்கிலும் போர் நடைபெற்றதற்கு நகரவாசிகள் காரணமே தவிர, கிராமவாசிகளல்ல.[6]

சுரண்டல் மயம்

நகரங்களின் வளர்ச்சி கெட்டது, மனித வர்க்கத்துக்கும் உலகத்துக்கும் துரதிருஷ்டமானது; இங்கிலாந்துக்கும், நிச்சயமாக இந்தியாவுக்கும் துரதிருஷ்டமானது. இந்தியாவை அதனுடைய நகரங்களின் வழியாகத்தான் பிரிட்டிஷார் சுரண்டியிருக்கின்றனர். நகரங்கள் கிராமங்களைச் சுரண்டியிருக்கின்றன. கிராமங்களின் ரத்தம் என்னும் சிமெண்டைக் கொண்டுதான், நகரங்கள் என்னும் பெரிய மாளிகைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. நகரங்களின் ரத்தக் குழாய்களில் அளவுக்கு மீறி ஓடி அவைகளைப் புடைக்க வைக்கும் ரத்தம் மீண்டும் கிராமங்களின் ரத்தக் குழாய்களில் ஓடவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.[7]

நோய் எப்போது குணமாகும்?

'நகரம் இந்திய அரசியல் என்னும் உடல் அமைப்பில் உள்ள கட்டி அல்லது வீக்கம்' என்று நீங்கள் கூறுகிறீர்கள். இந்தக் கட்டிகள் விஷயத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்?

ஒரு டாக்டரிடம் சென்றீர்களானால், உடம்பிற்கு வந்துள்ள கட்டி விஷயத்தில் என்ன செய்யவேண்டும் என்று அவர் கூறுவார். கத்தியின் மூலம் அதை அகற்ற வேண்டும்; அல்லது, பிளாஸ்டர் அல்லது மாவு போட்டு அதைக் குணப்படுத்த வேண்டும். எட்வர்ட் கார்ப்பெண்டர், நாகரிகம் என்பது நாம் குணப்படுத்த வேண்டிய ஒரு நோய் என்று கூறினார். பெரிய நகரங்களின் வளர்ச்சி என்பது அந்த நோயின் ஒரு அறிகுறிதான். ஒரு இயற்கை வைத்தியன் என்ற முறையில் இயல்பாகவே, உடல் பரிசுத்தமடைவதன் மூலம் இயற்கையாக அது குணமடைவதையே நான் விரும்புவேன். நகரங்களில் உள்ளவர்களுடைய உள்ளங்கள் கிராமங்களில் பற்றுக் கொண்டிருந்தால், உண்மையிலேயே அவர்கள் கிராம மனோபாவம் கொண்டவர்களாக இருந்தால், மற்ற எல்லா விஷயங்களும் தானே நடக்கும்; கட்டியும் விரைவில் குணமடையும்.[8]

தவறான கருத்து

இந்தியா என்பது இங்குள்ள ஒரு சில நகரங்கள் மட்டுமல்ல; அதற்குப் பதிலாக, இங்குள்ள ஏழு இலட்சம் கிராமங்களே இந்தியாவாகும் என்று நான் நம்பி எண்ணற்ற சமயங்களில் கூறியுமிருக்கிறேன். ஆனால், நகரங்களிலேயே இந்தியா இருக்கிறது என்றும் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவே கிராமங்கள் படைக்கப்பட்டனவென்றும் நகரவாசிகளாகிய நாம் கருதி வந்திருக்கிறோம். அந்த ஏழை மக்களுக்கு உண்ணவும் உடுக்கவும் போதிய உணவும் உடையும் கிடைத்ததா என்றோ, அல்லது வெய்யிலிலிருந்தும், மழையிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்க அவர்களுக்கு ஒரு குடிசை இருக்கிறதா என்றோ நாம் ஒரு போதும் எண்ணிப் பார்த்தது கிடையாது.[9]

பரிதாப உணவு

பொதுவாக நகரவாசி கிராமவாசியைச் சுரண்டி வருகிறான். உண்மையில் அந்த ஏழைக் கிராமவாசியின் உழைப்பிலேயே இவன் வாழ்ந்து வருகிறான் என்பதை நான் கண்டிருக்கிறேன். அநேக பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்திய மக்களின் நிலவரங்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆனால் நான் அறிந்தவரை யாரும், இந்திய கிராமவாசி உயிர் வாழ்வதற்குப் போதுமான அளவு வசதிகூட அவனுக்கு இருப்பதாகக் கூறவில்லை. அதற்கு மாறாக, இந்தியாவிலுள்ள மக்களில் பெரும்பாலோர் பட்டினியின் எல்லையில் வாழ்கிறார்கள் என்றும் பத்துச் சதவீதத்தினர் அரைப்பட்டினி கிடக்கிறார்கள் என்றும் கோடிக்கணக்கான மக்கள் சிறிது உப்பு, மிளகாய், கஞ்சி அல்லது வறுத்த தான்யம் ஆகியவைகளுடன் வாழ்ந்தாக வேண்டியிருக்கிறது என்றும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மாதம் வாழ முடியுமா?

நம்மில் யாராவது இந்த உணவில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டால், ஒரு மாதத்துக்கு மேல் உயிர் வாழ முடியாது அல்லது மூளைக் கோளாறு வந்து விடும் என்று

நீங்கள் நிச்சயமாக நம்பலாம். ஆயினும் நம் கிராமவாசிகளோ நாள்தோறும் இந்த நிலையில் தான் வாழ்கின்றனர்.[10]

உழைப்பைப் பறித்துக் கொள்வதா?

''மக்கள் தொகையில் எழுபத்தைந்து சதவீதத்தினருக்கு மேல் விவசாயிகள். ஆனால் கிட்டத்தட்ட அவர்களுடைய உழைப்பு முழுவதையுமே நாம் பறித்துக் கொண்டாலும் அல்லது பிறர் பறித்துக் கொள்ள அனுமதித்தாலும் சுயாட்சி என்பதற்கு அர்த்தமில்லாமற் போய்விடும்.'' [11]

கிராமங்களில் தங்க வேண்டும்

தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் சக்தி நகரங்களுக்கு உண்டு. கிராமத்தைத்தான் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்களிடமுள்ள தவறான கருத்துக்களை நாம் போக்க வேண்டும். அவர்களுடைய மூட நம்பிக்கைகளையும் குறுகிய கண்ணோட்டத்தையும் நாம் அகற்றவேண்டும். அவர்கள் மத்தியில் தங்கி, கல்வியையும் நல்ல விஷயங்களையும் பரப்பி அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொண்டால்தான் நாம் இதைச் செய்ய முடியும். வேறு எவ்வகையிலும் நாம் இதைச் செய்ய முடியாது.[12]

இலட்சிய கிராமவாசிகளாக வேண்டும்

''நாம் இலட்சிய கிராமவாசிகளாக இருக்க வேண்டும். மற்றப்படி, சுகாதாரத்தைப் பற்றி வேடிக்கையான கருத்துக்களைக் கொண்டுள்ள கிராமவாசிகளாக, எப்படிச் சாப்பிடுகிறோம், என்ன சாப்பிடுகிறோம் என்பதைப் பற்றிய சிந்தனையற்ற கிராமவாசிகளாக நாமும் இருந்துவிடக் கூடாது. அவர்களில் பெரும்பாலானவர்கள் செய்வதைப் போல், எப்படியாவது சமைத்து, எப்படியாவது சாப்பிட்டு, எப்படியாவது வாழ்வோம் என்று நாம் இருக்கக்கூடாது. சிறந்த உணவு என்னவென்பதை நாம் அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்க வேண்டும். வெறும் விருப்பு

வெறுப்புகளுக்கு நாம் ஆளாகக் கூடாது. அவைகளின் ஆழத்தை வேரூன்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.'' [13]

பாட்டாளிகளுடன் ஐக்கியப்படுத்திக் கொள்க

''கூனிப்போயுள்ள தங்கள் முதுகில் அடிக்கும் வெய்யிலில் நாளெல்லாம் உழைக்கும் கிராமவாசிகளுடன் நாம் நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும். கிராமவாசிகள் குளித்து, வேட்டி துவைத்துச் சட்டிபானைகள் கழுவும் ஒரு குளத்திலிருந்து, அவர்களுடைய கால்நடைகள் தண்ணீர் குடித்துப் படுத்துப்புரளும் ஒரு குளத்திலிருந்து, நாம் தண்ணீர் எடுத்துக் குடிக்க நம் மனம் ஒப்புக் கொள்ளுமா என்பதைப் பார்க்க வேண்டும். அப்போது தான் நாம் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாவோம். அதுவரையில் அல்ல. அப்போது அவர்களும் நம்முடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பார்கள். இது உண்மை. நான் இதை எழுதுவது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை.'' [14]

அதிகச் செலவில்லாமல்...

''அதிகச் செலவில்லாமல் அவர்கள் தங்களுக்கு வேண்டிய காய்கறிகளையும், கீரைகளையும் பயிரிட்டு தங்களுடைய உடல் நலத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு நாம் எடுத்துக் காண்பிக்க வேண்டும். கீரைகளை வேக வைக்கும் போது உணவுச் சத்துக்களில் பலவற்றை நாம் இழந்து விடுகிறோம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.'' [15]

குப்பைமேட்டு வாசம்

''நேரத்தையும், சுகாதாரத்தையும், பணத்தையும் எவ்வாறு சிக்கனப்படுத்துவது என்பதை அவர்களுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். நம்முடைய கிராமங்களைக் குப்பை மேடுகளென லயனல் கர்ட்டிஸ் வர்ணித்திருக்கிறார். நாம் அவைகளை 'மாதிரி கிராமங்களாக' மாற்ற வேண்டும்.

நம்முடைய கிராமவாசிகளைச் சுற்றிச் சுத்தமான காற்று இருக்கிறது. ஆனாலும் அவர்களுக்கு அது கிடைப்பதில்லை. புத்தம் புதிய காய்கறிகள் சுற்றி இருந்தாலும் அவர்கள் அவைகளை உண்பதில்லை. இவ்வாறு உணவு விஷயத்தில் ஒரு சமய (மிஷனரி) ஊழியனைப் போன்று நான் பேசுகிறேன். ஏனென்றால், கிராமங்களை அழகு மிக்கவையாக மாற்றவேண்டும் என்பதே என்னுடைய வாழ்க்கைப் பணியாகும்.'' [16]

கிராமங்களை நகரங்களாக்குதல்

இந்தியாவிலுள்ள கிராமங்கள் இன்று இருப்பதைப் போலவே என்றும் இருந்தனவா என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பதில் லாபமில்லை. அவைகள் ஒருபோதும் தற்போதிருப்பதைக் காட்டிலும் நல்ல நிலையில் இருக்கவில்லையென்றால், நாம் எந்தப் புராதன கலாசாரத்தைப் பற்றிப் பெருமை கொள்கிறோமோ அதன் குறையைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. ஆனால் அதே சமயம், இதைக் காட்டிலும் அவை சிறந்த நிலையில் இருந்திருக்கவில்லையென்றால், நம்மைச் சுற்றிலும் நாம் பார்க்கிறோமே அந்தச் சீரழிவிலிருந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அது தப்பி உயிர் வாழ்வது எப்படி? தேசத்தின் நலனைக் கருதும் ஒவ்வொருவனுக்கும் உள்ள கடமை, இந்தச் சீரழிவை எவ்வாறு தடுப்பது என்பதுதான். அல்லது இதை வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், நகரங்களில் வாழ்வது எவ்வளவு சுகமாக இருக்கிறது என்று கருதுகிறார்களோ அவ்வளவு சுகமாகக் கிராம வாழ்க்கையும் இருக்கிறமாதிரி, இந்தியாவிலுள்ள கிராமங்களைப் புனருத்தாரணம் செய்வது எப்படி? உண்மையில் ஒவ்வொரு தேசபக்தனின் கடமையும் அதுதான். ஒருவேளை, கிராமவாசிகள் சீர்திருத்தத்திற்குத் தகுதியற்றவர்களாய்ப் போயிருக்கலாம். கிராம நாகரிகத்திற்குரிய காலம் கடந்து போய்விட்டதாய் இருக்கலாம். ஏழு இலட்சம் கிராமங்களும், ஏழு நூறு நகரங்களுக்குத் தற்போதுள்ளதைப் போல் 3 கோடி மக்களையல்லாமல் 30 கோடி மக்களைத் தாங்கும்

நகரங்களுக்கு - நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட நகரங்களுக்கு - இடம் அளிக்க வேண்டியதாக இருக்கலாம். இந்தியாவின் கதி அதுவாக இருக்குமானால் அதுவும் ஒரே நாளில் வந்துவிடப் போவதில்லை. ஏராளமான கிராமங்களையும், கிராமவாசிகளையும் அழிப்பதற்கும் மீதமுள்ளவர்களை நகரவாசிகளாகவும் மீதமுள்ளவைகளை நகரங்களாகவும் ஆக்குவதற்கும் காலமாகும்.[17]

புரட்சிகரமான மாறுதல் வேண்டும்

கிராம இயக்கம் என்பது கிராமவாசிகளைப் போலவே, நகர மக்களுக்கும் பயிற்சி அளிப்பதாகும். நகரங்களிலிருந்து வந்துள்ள ஊழியர்கள் கிராம மனோபாவத்தை வளர்த்துக் கொள்வதுடன், கிராமவாசிகளைப் போலவே வாழும் கலையையும் கற்கவேண்டும். இதன் பொருள், கிராமவாசிகளைப் போன்று அவர்கள் பட்டினி கிடக்க வேண்டும் என்பது அல்ல; பழைய வாழ்க்கை முறையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் இருக்கவேண்டும் என்பதுதான் இதன் பொருளாகும்.[18]

ஒரே வழி

இதற்கான ஒரேவழி, அவர்கள் மத்தியில் அமர்ந்து, அவர்களுடைய புரவலர்களாக நம்மைக் கருதிக் கொள்ளாமல் அவர்களுடைய தோட்டிகளாகவும் நர்ஸ்களாகவும் பணியாட்களாகவும் உறுதியாக இருந்து சேவை செய்வதுடன், நம்முடைய தவறான எண்ணங்கள், உணர்ச்சிகள் எல்லாவற்றையும் மறந்து விடுவதாகும். ஒரு விநாடி ‘சுயராஜ்யத்தை’க்கூட நாம் மறந்துவிடுவோம். யார் இருப்பது ஒவ்வொரு கட்டத்திலும் நம்மை வருத்துகிறதோ அந்தச் செல்வந்தர்களையும் மறந்து விடுவோம். இந்தப் பிரச்னைகள் (நாம் மறந்து விட்டாலும்) ஒருபுறம் இருக்கத்தான் செய்யும். பெரிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். நாமோ கிராமத்தின் அடக்கமான பணியைத் தீர்த்து வைப்போம். இப்போது இது அவசியமாக இருக்கிறது. நம்முடைய இலட்சியத்தை நாம் அடைந்த

பிறகும் இது அவசியமாக இருக்கும். உண்மையென்னவெனில், கிராமப்பணி வெற்றியடைந்த பின், அதுவே நம்மை நமது இலட்சியத்தின் அருகே கொண்டு வந்து சேர்க்கும்.[19]

நகரங்கள் செய்த கேடு

கிராம சமுதாயங்கள் மறுமலர்ச்சியடையுமாறு செய்ய வேண்டும். இந்திய நகரங்களுக்கு அவைகளுடைய தேவைகளெல்லாவற்றையும் இந்திய கிராமங்கள்தான் உற்பத்தி செய்து கொடுத்தன. ஆனால், நம் நகரங்களெல்லாம் வெளிநாட்டு மார்க்கெட்டுகளாகி, வெளிநாடுகளிலிருந்து விலை குறைந்த, போலிச் சாமான்களைக் கொண்டுவந்து குவித்து நமது கிராமங்களை வற்ற வைத்த போது இந்தியா ஏழை நாடாகி விட்டது.[20]

நகர - கிராம உறவு

கிராமங்களிலிருந்து நகரங்கள் பலமும் பொருளும் பெறுகின்றன. இதற்குப் போதுமான கைம்மாறு அளிக்க வேண்டும் என்பதை நகரங்கள் உணரவேண்டும். சுயநலத்துடன் கிராமங்களைச் சுரண்டுவதற்குப் பதிலாக, இந்த எண்ணம் அவைகளுக்கு வரவேண்டும். அப்போது தான், நகரங்களுக்கும், கிராமங்களுக்குமிடையே நல்ல, ஒழுங்கான ஒரு உறவு ஏற்படும். இந்த மகத்தான, உயர்ந்த சமூகப் புனருத்தாரணப் பணியில் நகரத்துக் குழந்தைகள் ஏதாவது சேவை செய்ய வேண்டுமென்றால், அவர்கள் எந்தத் தொழில்களின் மூலம் கல்வி கற்க வேண்டுமோ அந்தத் தொழில்கள் கிராமங்களின் தேவைக்கு நேரடியாகத் தொடர்புள்ளவையாக இருக்க வேண்டும்.[21]

எனது அடிப்படை

நாம் ஒரு கிராமப் பரம்பரையின் வழி வந்தவர்கள். இந்தியாவின் பெரும் பரப்பு, இங்குள்ள மக்கள் தொகை, நிலைமை, சீதோஷ்ண நிலை ஆகியவைகளையெல்லாம் கவனிக்கும்போது இந்த நாடு கிராம நாகரிகத்திற்காகப்

படைக்கப்பட்டது போல் எனக்குத் தோன்றுகிறது. அதனுடைய குறைகளெல்லாம் எல்லோரும் நன்கு அறிந்தவை தான். ஆனால், அவைகளில் ஒன்றுகூடத் தீர்க்க முடியாதது என்பதல்ல. இதை வேரோடு பிடுங்கி, இதன் இடத்தில் ஒரு நகர நாகரிகத்தை வைப்பதென்பது சாத்தியமற்றதாகத் தோன்றுகிறது. ஏதாவது கடுமையான நடவடிக்கைகளின் மூலம், மக்கள் தொகையை முப்பது கோடியிலிருந்து முப்பது இலட்சம் அல்லது அதிகமாகப் போனால் மூன்று கோடியாகக் குறைக்க நாம் தயாராக இருந்தாலொழிய, இது சாத்தியமாகாது. ஆகையால் 'தற்போதுள்ள கிராம நாகரிகத்தைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்; அதில் இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்ட குறைகளையெல்லாம் நீக்க முயற்சி செய்ய வேண்டும்' என்ற அடிப்படையிலேயே நான் சில யோசனைகளைக் கூற முடியும். [22]

அத்தியாயம் 5

கிராமங்களுக்கு உரிய இடம்

சுயராஜ்யத்தை ஸ்தாபித்தல்

சுயராஜ்யத்தை ஸ்தாபிப்பதென்பதே நம் கிராமங்களுக்குச் சேவை செய்வதுதான், மற்றவையெல்லாம் வீண் கனவே.[1]

நம்முடைய கிராமங்கள் அழிந்தால், இந்தியாவும் அழிந்துவிடும். அது மேலும் இந்தியாவாக இருக்காது. உலகில் பாரதத்திற்குரிய பணி அதன் கையை விட்டுப் போய்விடும்.[2]

நகரத்தில் சுரண்டல் நீங்கவேண்டும்

இந்தியாவிலுள்ள கிராமங்கள் இந்நாட்டைப் போன்றே மிகப்பழமையானவை. நகரங்களோ வெளிநாட்டு ஆதிக்கத்தின் படைப்புகள்தான். இந்த இரண்டில் எது நமக்கு வேண்டும்-கிராமமயமான இந்தியாவா அல்லது நகரமயமான இந்தியாவா - என்பதை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும். இன்று நகரங்கள்தான் ஆதிக்கம் செலுத்தி, கிராமங்களின் வளத்தைக் கரந்துவிடுகின்றன. இதனால் கிராமங்கள் நாசமடைந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆதிக்கம் போய், கிராமங்களுக்கு நகரங்கள் துணையாக இருந்து உதவவேண்டுமென்று என்னுடைய கதர் மனோபாவம் எனக்குக் கூறுகிறது. கிராமங்களைச் சுரண்டுவது திட்டமிட்டு நடைபெறும் பலாத்காரந்தான். அஹிம்சையின் அடிப்படையில் சுயராஜ்யத்தை நிர்மாணிப்பதற்கு, கிராமங்களுக்கு உரிய இடத்தை நாம் அளித்தாக வேண்டும்.[3]

ஒரு உண்மை

இந்தியா உண்மையான சுதந்திரம் அடையவேண்டுமானால், அதன்மூலம் உலகமும் உண்மையான சுதந்திரம் பெறவேண்டுமானால், வெகு விரைவிலோ அல்லது சிறிது

காலந்தாழ்த்தியோ ஒரு உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும். அதாவது, மக்கள் கிராமங்களில்தான் வாழ வேண்டியிருக்கும், நகரங்களிலல்ல; குடிசைகளில்தான் வாழ வேண்டியிருக்கும், மாளிகைகளில் அல்ல. கோடிக்கணக்கான மக்கள் நகரங்களிலும் மாளிகைகளிலும் அமைதியுடன் ஒருபோதும் வாழ முடியாது. அவ்வாறு வாழும் போது இம்சையையும் அசத்தியத்தையும் கடைப்பிடிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறுவழி இருக்காது.

இந்தியா அழிய விடக்கூடாது

சத்தியமும் அஹிம்சையும் போய்விட்டால், மனித வர்க்கத்துக்கு அழிவைத் தவிர வேறு எதுவும் மிஞ்சாது. எளிமையான கிராமிய வாழ்க்கையில்தான் சத்தியத்தையும், அஹிம்சையையும் நாம் கண்டு உணர முடியும். இந்த எளிமையை, மிகச் சிறந்த முறையில், ராட்டையில் காணலாம். ராட்டை எதெதன் சின்னமாக இருக்கிறதோ அவைகளிலும் காணலாம். உலகம் இன்று தவறான பாதையில் போய்க் கொண்டிருந்தால் அதற்காக நாம் அஞ்சக்கூடாது. ஒருவேளை இந்தியாவும் அந்த வழியில் சென்று, விளக்கொளியில் வேகமாகச் சுற்றி ஆனந்த நர்த்தனமாடிக் கொண்டுவரும் விட்டிற்பூச்சி முடிவில் அதிலேயே மடிவதைப்போல் தன்னைத்தானே சுட்டுப் பொசுக்கிக் கொள்ளலாம். ஆனால் இப்படிப்பட்ட கதி எதுவும் நேராமல் இந்தியாவையும், இந்தியாவின் மூலம் உலகையும் பாதுகாக்க எனது கடைசி மூச்சு உள்ளவரை நான் முயற்சி செய்யவேண்டியது என் கடமையாகும்.[4]

கிராம சுயராஜ்யம்

கிராம சுயராஜ்யத்தைப் பற்றிய என்னுடைய கருத்து என்னவென்றால், அது ஒரு பூரணக் குடியரசாக, தன்னுடைய ஜீவாதாரமான தேவைகளுக்காக அண்டை அயலார்களை எதிர்பார்க்காத பூரணக் குடியரசாக இருக்கும். அதே சமயம் எதெதற்குப் பிறரைச் சார்ந்திருப்பது அவசியமோ அவைகளில் பிறரைச் சார்ந்திருக்கும். ஆகவே, ஒவ்வொரு

கிராமமும் தனது உணவுக்குத் தேவையான பயிர்களையும், துணிக்குத் தேவையான பருத்தியையும் விளைவிப்பதில் முக்கிய கவனம் செலுத்தும். கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமும் வயதானவர்கள் ஓய்வு பெறுவதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்குமான இடமும் கிராமத்தில் இருக்க வேண்டும். இதற்கு மேலும் நிலம் இருப்பதானால், கஞ்சா, புகையிலை, அபின் போன்றவைகளைத் தவிர மற்ற உபயோகமான பணப்பயிர்களை விளைவிக்கலாம். ஒரு நாடக அரங்கு, பள்ளிக்கூடம், பொது மண்டபம் ஆகியவைகளையும் கிராமம் பராமரித்து வரும். சுத்தமான தண்ணீர் விநியோகிக்கக்கூடிய தண்ணீர் விநியோக நிலையமும் சொந்தமாக இருக்கவேண்டும். குடிநீராக மட்டும் உபயோகப்படுத்த வேண்டுமென்று கட்டுப்படுத்தப்பட்ட குளம் அல்லது கிணறுகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யலாம். ஆதாரப்பள்ளி இறுதி வகுப்புவரை கல்வி கட்டாயமாக இருக்கும். முடிந்தவரை எல்லா நடவடிக்கைகளுமே கூட்டுறவு அடிப்படையில் நடைபெறும். இன்று இருப்பதைப்போன்று படிப்படியாக, பல்வேறு அளவு களில் தீண்டாமையைக் கொண்ட சாதிகள் இருக்கமாட்டா.

கிராமப் பஞ்சாயத்து

சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை என்ற ஆயுதங் களுடன் அஹிம்சையே ஒரு கிராமத்தின் ‘அதிகார பலமாக’ இருக்கும். கிராமத் தொண்டர் படையில் சேவை செய்ய வேண்டுமென்பது கட்டாயமாக இருக்கும். கிராமத்தில் உள்ள ஒரு பட்டியலிலிருந்து வரிசைக்கிரமப்படி, இத்தொண்டர் படைக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வயது வந்த கிராம மக்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் ஐவரைக் கொண்ட பஞ்சாயத்தினரால், கிராம ஆட்சி நடைபெறும். சில குறிப்பிட்ட தகுதிகள் உள்ள கிராம மக்கள் - ஆண், பெண் ஆகிய இருபாலாரும் - பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்தந்தக் கிராம எல்லைக்குள் இவர்களுக்குப் போதுமான அதிகாரங்கள் இருக்கும். சாதாரணமாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் முறையில்

தண்டனை எதுவும் இருக்காதாகையால், இந்தப் பஞ்சாயத்தே அந்தந்த ஆண்டில் கிராம சட்ட சபையாகவும், நீதிமன்றமாகவும், ஆட்சிக் குழுவாகவும் இருக்கும். தற்போதுள்ள அரசாங்கத்தில் கூட - கிராமங்களுடன் அதற்குள்ள ஒரே பயனுள்ள தொடர்பு கிஸ்தி வசூல் செய்வதுதான் - அதன் குறுக்கீடு அதிகம் இல்லாமல் எந்தக் கிராமமும் மேற்கண்டவாறான ஒரு குடியரசாகலாம். பக்கத்திலுள்ள கிராமங்களுடனும் அல்லது மத்தியமான ஒரு அமைப்பிருந்தால் அதனுடனும் உள்ள தொடர்புகளைப் பற்றி நான் இங்கு ஆராயவில்லை. ஒரு கிராம அரசாங்கம் எப்படியிருக்கும் என்பது பற்றிய மேற்போக்கான விவரங்களைத் தெரிவிப்பதே எனது நோக்கம். அங்கு தனிப்பட்டவர் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பரிபூரண ஜனநாயகம் இருக்கும். தன்னுடைய சொந்த அரசாங்கத்தின் சிற்பியாக ஒவ்வொருவரும் இருப்பார்கள். அஹிம்சைப்படிதான் கிராமவாசியும் அவரது அரசாங்கமும் நடக்க முடியும். உலகம் முழுவதையும் எதிர்க்கக்கூடிய சக்தி படைத்தவர்களாக அவரும், அவரது கிராமத்தினரும் இருப்பார்கள். ஏனென்றால், தன்னுடைய கௌரவத்தையும், தனது கிராமத்தின் கௌரவத்தையும் பாதுகாப்பதற்காக மரணத்தையும் ஏற்க வேண்டுமென்பதே. ஒவ்வொரு கிராமவாசியும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறையாக அங்கு கொள்ளப்படும்.

ஒரு கிராமம் ஒருவருக்கு

மேலே விவரிக்கப்பட்டதில் சாதாரணமாக முடியாதது எதுவும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு கிராமத்தை அமைக்க ஒருவனுக்கு வாழ்நாள் முழுவதுமே ஆகிவிடலாம். உண்மையான ஜனநாயகத்தையும், கிராம வாழ்வையும் விரும்பும் ஒருவர், ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு, அதைத் தனது உலகமாக எண்ணி, அந்த ஒரு வேலையிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தினால், அவருக்கு நல்ல பலன் கிடைக்கும். உடனடியாகத் தன்னை ஒரு கிராமத் தோட்டியாகவும், நூற்பவராகவும்,

காவற்காரராகவும் வைத்தியராகவும் பள்ளி ஆசிரியராகவும் ஆக்கிக் கொண்டு அவர் தன் சேவையைத் தொடங்க வேண்டும். யாரும் அவரை அணுகாவிட்டால், தோட்டி வேலை செய்வதுடனும், நூற்பதுடனும் அவர் திருப்தியடைய வேண்டும்.[5]

இலட்சியக் கிராமம்

ஒரு இலட்சிய இந்தியக் கிராமம் நூற்றுக்கு நூறு சுகாதாரம் உள்ளதாக இருக்கும். போதுமான வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ள முறையில், ஐந்து மைல் சுற்றளவுக்குள் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு, அங்கு குடிசைகள் கட்டப்பட்டிருக்கும். அந்தந்த வீட்டுக்காரர் தங்களுடைய சொந்த உபயோகத்துக்காகக் காய்கறிகள் பயிரிட்டுக் கொள்ளவும், தங்கள் கால்நடைகளைக் கட்டுவதற்கும் ஏற்ற முறையில் இந்தக் குடிசைகளில் முற்றங்கள் இருக்கும். கிராமத் தெருக்களிலும் சந்துகளிலும் முடிந்த அளவுக்குத் தூசி இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும். அந்தந்தக் கிராமத்தின் தேவைக்கேற்ற அளவுக்கு அங்கு கிணறுகள் இருக்கும். இந்தக் கிணறுகளில் எல்லோரும் தண்ணீர் எடுக்கலாம். எல்லோரும் வழிபடக் கூடிய ஆலயங்கள், ஒரு பொது மந்தை, கால்நடை மேய்வதற்கான பொது இடம், ஒரு கூட்டுறவுப் பால்பண்ணை, தொழிற்கல்வியை மையமாகக் கொண்ட ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவை அங்கு இருக்கும். சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கப் பஞ்சாயத்தும் இருக்கும். தனக்கு வேண்டிய தானியங்கள், காய்கறி, பழம், கதர் ஆகியவற்றை அது உற்பத்தி செய்து கொள்ளும். ஒரு மாதிரிக் கிராமத்தைப் பற்றிய எனது பரவலான கருத்து இதுதான்... நல்ல கெட்டிக்காரர்கள் வழிகாட்டுவதானால், கிராமவாசிகள் தங்களுடைய கிராம வருமானத்தை (தனிப்பட்டவர் வருமானத்தை அல்ல) இரட்டிப்பாக்க முடியும். நம்முடைய கிராமங்களில் எல்லையற்ற வளம் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலுமே இது வாணிகத்துக்குப் பயன்படும் என்று கூறமுடியாது. ஆனால், கிட்டத்தட்ட

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதை ஸ்தல அபிவிருத்திக்காகப் பயன்படுத்தலாம். இதிலுள்ள மிக மோசமான நிலைமை என்னவென்றால், கிராமவாசிகள் தங்களுடைய நிலையை அபிவிருத்தி செய்து கொள்ளக் கொஞ்சங்கூட விரும்பாதது தான்.

சுகாதாரமே முதல் பிரச்னை

கிராம ஊழியர் தீர்க்கவேண்டிய முதல் பிரச்னை, கிராமத்தின் சுகாதாரம் பற்றியது. எல்லாப் பிரச்னைகளிலுமே மிகவும் அலட்சியம் செய்யப்பட்டிருப்பது இதுவே. இது உடல்நலத்தைப் பாதிப்பது மட்டுமல்லாமல், நோயையும் வளர்க்கிறது. கிராம ஊழியர் மனமுவந்து தோட்டியானால், முதலில் மலத்தை எடுத்து உரமாக்குவார்; தெருக்களைப் பெருக்குவார். இவைகளைச் செய்துவிட்டுத் தான் மற்ற கிராம சேவைகளில் புகுவார். மலஜலத்தை எங்கு எவ்வாறு கழிப்பது என்பதை மக்களுக்கு அவர் எடுத்துக் கூறுவார். சுகாதாரத்தின் அவசியத்தைப் பற்றியும் அதை அலட்சியம் செய்ததால் ஏற்பட்ட பெருந்தீங்கைப் பற்றியும் விளக்குவார். தான் கூறுவதைக் கிராமவாசிகள் பொருட்படுத்திக் கேட்டாலும், கேட்காவிட்டாலும் அந்த ஊழியர் தொடர்ந்து தன் பணியைச் செய்து கொண்டிருப்பார்.[6]

அறிவுள்ள மக்கள் வாழ்வார்கள்

என்னுடைய இலட்சியக் கிராமத்தில் அறிவுக் கூர்மையுள்ளவர்கள் இருப்பார்கள். மிருகங்களைப் போன்று இவர்கள் அழுக்கிலும், இருட்டிலும் வாழமாட்டார்கள். அங்குள்ள ஆண்களும் பெண்களும் சுதந்திரமானவர்களாக, உலகில் யாரையும் எதிர்த்து நிற்கக் கூடிய சக்தி படைத்தவர்களாக இருப்பார்கள். பிளேக், காலரா, அம்மை போன்ற நோய்கள் அங்கு வரா. யாரும் சோம்பேறியாக இருக்கமாட்டார்கள்; சுகபோகத்திலும் புரளமாட்டார்கள். ஒவ்வொருவரும் தன்னுடைய பங்கு உடல் உழைப்பை அளிக்க வேண்டியிருக்கும்... இப்படிப்பட்ட சமுதாயத்தில் ரயில், தபால், தந்தி போன்றவையும் இருப்பது சாத்தியமே.[7]

அத்தியாயம் 6

கிராம சுயராஜ்யத்தின் அடிப்படைத் தத்துவங்கள்

1. மனிதனின் உயர்வு - முழுவேலை

தலையாய முக்கியத்துவம் மனிதனுக்குத்தான்.[1]

நம்முடைய இலட்சியம் மனித வர்க்கம் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமென்பதாகும். அந்த மகிழ்ச்சி மன, தார்மிக, சம்பந்தமான முழு வளர்ச்சியுடன் இருக்க வேண்டும். ‘ஆன்மிக’ என்ற சொல்லின் பொருளிலேயே ‘தார்மிக’ என்ற சொல்லை நான் பயன்படுத்துகிறேன். பரவல்மயத்தின் கீழ் இந்த இலட்சியத்தை நாம் சாதிக்க முடியும். அஹிம்சா பூர்வமான ஒரு சமுதாய அமைப்பில் குவியல் முறை பொருந்தாது.[2]

அவசியமான பொருள் உற்பத்தி

யாருமே உணவுக்காகவோ, உடைக்காகவோ கஷ்டப்பட நேராமல், இந்தியாவின் பொருளாதார அமைப்பு - ஏன், உலகின் பொருளாதார அமைப்பே - இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால், வரவு செலவு கட்டுபடியாகக் கூடியவாறு ஒவ்வொருவருக்கும் போதுமான வேலை கிடைக்க வேண்டும். வாழ்க்கைக்கு அவசியமாகத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய சாதனம் மக்கள் கையிலேயே இருந்தால் தான் இந்த இலட்சியத்தை எல்லோரும் அடைய முடியும். ஆண்டவன் படைத்த தண்ணீரும் காற்றும் எவ்வாறு இலவசமாகக் கிடைக்கிறதோ அல்லது கிடைக்க வேண்டுமோ அதேபோன்று இவைகளும் எல்லோருக்கும் இலவசமாகக் கிடைக்க வேண்டும். மற்றவர்களுடைய சுரண்டலுக்கு இடமளிக்கக்கூடிய வியாபாரப் பொருளாக அவை ஆகிவிடக் கூடாது. எந்த நாடும் அல்லது மக்கள் கூட்டமும் அதில் ஏகபோக பாத்தியதை கொண்டாடுவது நியாயமற்றதாகும். இந்தச் சாதாரணமான கோட்பாட்டை அலட்சியம்

செய்ததுதான், இந்த துரதிருஷ்டம் வாய்ந்த நாடு மட்டுமல்லாமல் உலகிலுள்ள பிற பகுதிகளில் கூட மக்களிடையே நாம் காணும் ஆதரவற்ற நிலைக்குக் காரணம் ஆகும்.[3]

தார்மீக அம்சம்

தார்மிகக் கோட்பாடுகளை அலட்சியம் செய்யக்கூடிய பொருளாதாரம் உண்மையான பொருளாதாரம் அல்ல. பொருளாதாரத் துறையிலும் அஹிம்சையின் நியதியை விரிவுபடுத்த வேண்டும். இதற்கு சர்வதேச வாணிகத்தை ஒழுங்குபடுத்துவதில் தார்மிக கோட்பாடுகளையும் ஒரு அம்சமாகக் கருத வேண்டும். அதற்குக் குறைவான எதுவும் அஹிம்சைக் கோட்பாட்டை விரிவுபடுத்தியதாகாது.[4]

வாழும் உரிமை

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ உரிமையுண்டு. ஆகையால் தனக்கு உணவு தேடிக் கொள்வதற்கான பணத்தைத் தேடிக்கொள்ள உரிமை உண்டு. அவசியமான போது தனக்கு வேண்டிய உடை, இருப்பிட வசதிகளைப் பெறுவதற்கான பணத்தைத் தேடுவதற்கான உரிமை உண்டு.[5]

சமுதாயத்தின் உரைகல்

உலகிலுள்ள மத நூல்களெல்லாம், 'எதிர்காலம் பற்றிய கவலை வேண்டாம்' என்ற விதியைக் கூறுகின்றன. நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தில், ஒருவன் தனது வாழ்க்கையை நடத்துவது மிக எளிதான காரியமாய் இருக்க வேண்டும். அப்படித்தான் இருக்கவும் செய்கிறது. உண்மையில், ஒரு நாட்டில் ஒழுங்கு நிலவுகிறது என்பதற்கான உரைகல், அதில் எத்தனை கோடீஸவரர்கள் இருக்கிறார்கள் என்பதல்ல; அந்நாட்டு மக்களிடையே பட்டினி இல்லாமல் இருக்கிறதா என்பதுதான்.[6]

மனித சக்தி முக்கியம்

ஒரு நாட்டிலுள்ள மூலப் பொருட்களைவிட, அங்குள்ள மனித சக்தி அதிக ஆற்றல் வாய்ந்தது. ஆகவே ஒரு நாட்டு மூலப்பொருட்களை மட்டும் பயன்படுத்தி அங்குள்ள மனித

சக்தியை அலட்சியம் செய்யும் எந்தத் திட்டமும் சமநிலை வாய்ந்ததாக இருக்க முடியாது. ஆகவே இவ்விதத் திட்டத்தால் மனித சமுதாயம் ஒருபோதும் சமத்துவம் அடைய முடியாது.

இந்தியாவிலுள்ள மனித சக்தியையெல்லாம் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதுதான் உண்மையாகத் திட்டமிடுவதாகும்.[7]

நல்ல உடல் நலமுள்ள ஒரு ஆண் அல்லது பெண் உணவோ வேலையோ இல்லாமல் இருக்கும் வரை, நாம் ஓய்வு பெறுவதற்கோ அல்லது வயிறார உண்பதற்கோ வெட்கப்பட வேண்டும்.[8]

கடமையும் பரிகாரமும்

பறவைகளையும் மிருகங்களையும் போலவே ஒவ்வொரு மனிதருக்கும் தன் வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளைப் பெறச் சமமான உரிமை இருக்கிறது. ஒவ்வொரு உரிமைக்கும் ஒரு கடமை உண்டு. ஒவ்வொரு உரிமைக்கும் அபாயம் வரும்போது அதை எதிர்ப்பதற்கான ஒரு பரிகாரமும் தேவை. ஆகையால், மூலாதாரமான அடிப்படைச் சமத்துவத்தை உறுதிப் படுத்துவதற்கான கடமைகளையும், பரிகாரங்களையும் காணவேண்டியது தான். இதற்கு வேண்டிய கடமை, உடலால் உழைப்பதாகும். என்னுடைய உழைப்பின் பலன் எனக்குக் கிடைக்காமல் யார் செய்கிறார்களோ அவர்களுடன் ஒத்துழையாமல் இருப்பது, இந்த உரிமையை நிலைநாட்டுவதற்கான பரிகாரமாகும்.[9]

2. உடல் உழைப்பு

உடலால் உழைக்காதவனுக்கு, சாப்பிடுவதற்கு என்ன உரிமை இருக்கமுடியும்?[10]

‘நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உங்களுடைய உணவைச் சம்பாதியுங்கள்’, என்று பைபிள் கூறுகிறது. தியாகங்கள் பல்வேறு விதமான வகைகளில் இருக்கலாம். எல்லோரும் தங்கள் தங்கள் உணவுக்காக உழைத்துவிட்டார்களானால், எல்லோருக்கும் போதுமான

உணவும், ஓய்வும் கிடைக்கும். அப்போது மக்கள் தொகை அளவுக்கு மீறிப் போகிறது என்ற பேச்சே இராது. நாம் தற்போது காண்பதைப் போல வறுமைக்கும், நோய்க்கும் இடமிருக்காது. இப்படிப்பட்ட உழைப்பே மிக உயர்ந்த தியாகமாக இருக்கும். இதைத் தவிர தங்களுடைய உடலாலோ மனதாலோ மக்கள் மற்றும் பல காரியங்களைச் செய்வார்கள். ஆனாலும் இவைகளெல்லாம் பொது நலனுக்காக அன்பினால் மேற்கொள்ளப்படும் உழைப்பாகும். இவ்வாறு செய்யும்போது பணக்காரரும் இருக்கமாட்டார்கள், ஏழைகளும் இருக்கமாட்டார்கள்; உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களும் இருக்கமாட்டார்கள். தீண்டத்தக்கவர்களென்றும், தீண்டத்தகாதவர்களென்றும் இருக்க மாட்டார்கள்.[11]

வேண்டிய கவிதை

பட்டினி கிடக்கும் மக்களுக்கு வேண்டிய கவிதை ஒன்றே ஒன்றுதான். அதுதான் உயிரூட்டும் உணவு. அதைப் பிறர் அவர்களுக்குக் கொடுக்க முடியாது. அதை அவர்கள்தான் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். இதை நெற்றி வேர்வை நிலத்தில் விழப்பாடுபட்டுத்தான் அவர்கள் தேடிக்கொள்ள முடியும்.[12]

கிராமங்களுக்குத் திரும்புதல்

கிராமங்களுக்குத் திரும்புங்கள் என்று கூறுவதன் பொருள் என்ன? உடல் உழைப்பு பற்றிய கடமையையும் மற்றும் அதைச் சார்ந்த பொறுப்புகளையும் திட்டவட்டமாக மனமுவந்து ஏற்றுக் கொள்வதாகும்.[13]

அறிவுபூர்வமான வேலை முக்கியமானதுதான். வாழ்க்கையில் அதற்கு ஒரு இடம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் நான் வலியுறுத்துவது உடல் உழைப்பின் அவசியத்தையே. இந்தக் கடமையைச் செய்யாமல் யாரும் இருக்கக்கூடாது என்றே நான் கூறுகிறேன்.[14]

தனது உணவுக்காக உழைக்க வேண்டுமென்றே மனிதனை ஆண்டவன் படைத்தார். வேலையில்லாமல் சாப்பிடுபவர்களைத் திருடர்கள் என்று அவர் கூறினார்.[15]

3. சமத்துவம்

உண்மையான அறநெறி, நல்ல பொருளாதாரமாக இருக்க வேண்டும் என்பதைப் போலவே உண்மையான பொருளாதாரம் ஒருபோதும் உயர்ந்த அறநெறிக்கு முரணாகப் போவதில்லை. பணப்பூதத்தை ஆராதிக்கும் ஒரு பொருளாதாரம், பலமுள்ளவர்கள் பலமில்லாதவர்களைச் சுரண்டிச் சொத்தைத் திரட்டும் ஒரு பொருளாதாரம், ஒரு தவறான துயர் நிறைந்த விஞ்ஞானமாகும். அது மரணத்திற்குக் காரணமாகிறது. அதற்கு மாறாக உண்மையான பொருளாதாரம் சமூக நீதிக்காகப் பாடுபடும். மிகவும் பலவீனமானவர்கள் உள்பட எல்லோருடைய நலனையும் அது சமத்துவமாக வளர்க்கும். கண்ணியமான வாழ்க்கைக்கு அது இன்றியமையாததாகும்.[16]

எல்லோருக்கும் சமத்துவமான அந்தஸ்தை ஏற்படுத்த நான் விரும்புகிறேன்.[17]

"சம விநியோகம்"

எல்லோருக்கும் ஒரே அளவாகப் பொருட்களை விநியோகம் செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியம். ஆனால் நான் அறிந்தவரை, இதைச் சாதிக்க முடியாது என்று தோன்றுகிறது. ஆகையால் அவரவர் தேவைக்கு ஏற்ற அளவு பொருட்களை விநியோகம் செய்யவேண்டுமென்று நான் பாடுபடுகிறேன்.[18]

அஹிம்சை அரசு எப்போது சாத்தியம்?

அஹிம்சாபூர்வமான சுதந்திரத்துக்குள்ள ராஜபாட்டை பொருளாதார சமத்துவம்தான். பொருளாதார சமத்துவத்துக்காகப் பாடுபடுவதென்பது, மூலதனத்துக்கும் உழைப்புக்கும் நிரந்தரமாக உள்ள சண்டையை ஒழித்துக் கட்டுவதாகும். ஒருபுறம் நாட்டின் செல்வமெல்லாம் ஒரு சில பணக்காரர்களிடம் குவிந்து கிடக்கிறது. மற்றொருபுறம் உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றிக் கோடிக்கணக்கான மக்கள் அரைப்பட்டினி கிடக்கின்றனர். ஆகவே பொருளாதார சமத்துவத்துக்காக உழைப்ப தென்பது, இந்தப் பணக்காரர்களுடைய செல்வத்தைக்

குறைப்பதும், அரைப்பட்டினி கிடக்கும் மக்களுடைய நிலையை உயர்த்துவதுமாகும். பணக்காரர்களுக்கும் பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருக்கும் வரை, அஹிம்சை முறையிலான அரசாங்கம் சாத்தியமில்லை என்பது தெளிவு. சுதந்திர இந்தியாவில், மிகப் பெரிய பணக்காரர்களுக்குள்ள அதிகாரம், பரிதாபகரமான குடிசைகளில் வாழும் ஏழைத் தொழிலாளி மக்களுக்கும் இருக்கும். ஆகையால் சுதந்திர இந்தியாவில், புது டில்லியில் உள்ள மாளிகைகளுக்கும் ஏழைகளின் ஓட்டைக் குடிசைகளுக்குமிடையே உள்ள முரண்பாடு ஒரு நாள்கூட நீடிக்க முடியாது. பணத்தையும் பணத்தினால் வரும் அதிகாரத்தையும் செல்வந்தர்கள் தாங்களாகவே விட்டுக் கொடுத்து, பொது நலனுக்காக அவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் என்றாவது ஒருநாள் பலாத்காரமான, ரத்தப்புரட்சி ஏற்பட்டுவிடும். என்னுடைய தர்மகர்த்தா முறை எவ்வளவோ ஏளனத்துக்கு உட்பட்டிருந்தாலுங்கூட, தர்மகர்த்தா முறையை நான் விட்டுவிடப் போவதில்லை. அதைக் கடைப்பிடிப்பது கஷ்டமானது என்பது உண்மையே. அதே போன்று அஹிம்சையைக் கடைப்பிடிப்பதும் கஷ்டமானதே. ஆனால் இந்த உச்சிமலை மீது ஏறியே தீருவதென்று 1920 ஆம் ஆண்டிலேயே நாம் உறுதி செய்து கொண்டோம்.[19]

தேவைக்கேற்ற வசதி

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய இயற்கையான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பணவசதி இருக்க வேண்டும். அதற்கு மேலும் இருக்கக்கூடாது. சமத்துவ விநியோகம் என்பதன் உண்மையான பொருளே இதுதான். உதாரணமாக, ஒரு மனிதனுடைய ஜீரணசக்தி பலவீனமானதாய் இருக்கிறது. அவனுக்கு வேண்டிய ரொட்டிக்குக் கால் இராத்தல் மாவு போதும் என்று வைத்துக் கொள்ளுங்கள். மற்றொருவருக்கு ஒரு இராத்தல் மாவு தேவையாக இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இரண்டு பேருக்கும் அவரவர் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வசதி இருக்க வேண்டும். இந்த இலட்சியத்தை

நிறைவேற்ற வேண்டுமானால், சமுதாய அமைப்பு முழுவதையுமே மாற்றியமைக்க வேண்டும். அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயம் வேறு எந்த இலட்சியத்தையும் பால் வார்த்து வளர்க்க முடியாது. இந்த இலட்சியத்தை அடைய ஒரு வேளை நம்மால் முடியாது போகலாம். ஆனால் இதை நாம் மனதிற்கொண்டு, இதை நெருங்கிச் செல்வதற்காக, ஓயாது உழைக்க வேண்டும். நம்முடைய இலட்சியத்தை நெருங்கி நாம் செல்வதற்கேற்ற அளவு நாம் மனத் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவோம். அந்த அளவுக்கு ஒரு அஹிம்சா பூர்வமான சமுதாயம் அமைவதற்கு உதவியவர்களுமாவோம்.[3]

4. தர்மகர்த்தா முறை

பணக்காரர்களெல்லாம் தங்களுடைய தேவை போக உபரியாகத் தங்களிடம் உள்ள சொத்துக்குத் தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டும் என்பதே சமத்துவக் கொள்கையின் ஆணி வேராக இருக்க முடியும் என்பது உறுதி. ஏனெனில் இந்தக் கொள்கையின்படி அவர்கள் தங்களுக்கு அண்டையில் வாழபவர்களைக் காட்டிலும் ஒரு ரூபாய்கூட அதிகமாக வைத்திருக்கக்கூடாது. இந்த நிலையை எவ்வாறு அடைவது? அஹிம்சா பூர்வமாகவா? அல்லது, பணக்காரர்களுடைய சொத்துக்களைப் பிடுங்கிக் கொள்வதன் மூலமாகவா? இவ்வாறு செய்யவேண்டுமானால் நாம் இயற்கையாகவே இம்சையைக் கடைப்பிடிக்க வேண்டியதிருக்கும். இவ்வித இம்சைச் செயல்கள் சமூகத்திற்கு நன்மை செய்யமாட்டா. அவைகளால் சமூகம் நஷ்டமடையத்தான் செய்யும். ஏனெனில் பணம் சம்பாதிப்பது எப்படி என்பதைத் தெரிந்த ஒருவரின் சேவையைச் சமூகம் இழந்து விடுகிறது. ஆகையால் அஹிம்சாபூர்வமான வழியே சிறந்ததென்பது தெளிவு. இந்த வழியின்படி, பணக்காரர் அவருடைய சொத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கப் படுவார். அதில் தனக்கு அவசியமாகத் தேவையானதை மட்டும் அவர் உபயோகித்துக் கொள்வார். மீதமுள்ள சொத்தைச் சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தும் ஒரு

தர்மகர்த்தாவாக அவர் விளங்குவார். தர்மகர்த்தாவானவர் நாணயமாக நடந்து கொள்வார் என்ற அடிப்படையிலேயே இந்த வாதத்தை நான் கூறுகிறேன்.

நம்பிக்கை தோற்றால்?

எனினும் நாம் எவ்வளவோ முயன்றும் பணக்காரர்கள் ஏழைகளின் உண்மையான 'பாதுகாவலர்'கள் ஆகாவிட்டால், ஏழைகள் மேலும் மேலும் நசுக்கப்பட்டுப் பட்டினியால் செத்துக் கொண்டிருந்தால், என்ன செய்வது? இந்தச் சிக்கலான பிரச்னைக்குப் பரிகாரம் காண என்றும் தோல்வி யடையாத சரியான வழிகளாக, அஹிம்சா பூர்வமான ஒத்துழையாமையையும் சட்ட மறுப்பையும் நான் கண்டிருக்கிறேன். சமூகத்தில் ஏழைகளுடைய ஒத்துழைப்பு இல்லாமல் பணக்காரர்கள் செல்வத்தை குவிக்க முடியாது. இந்த அறிவு ஏழைகளிடம் ஆழ்ந்து பரவினால், அவர்கள் பலம் பெற்றவர்களாவார்கள். தங்களைக் கொடுமையான பட்டினி நிலைக்குக் கொண்டுவந்துள்ள ஏற்றத் தாழ்வுகளி லிருந்து அஹிம்சாபூர்வமாகத் தங்களை விடுவித்துக் கொள்வது எப்படியென்பதைத் தெரிந்து கொள்வார்கள்.[20]

5. பரவல் மயம்

இந்தியா அஹிம்சை வழியில் செல்ல வேண்டுமானால், அது அநேக காரியங்களைப் பரவல் மயமாக்க வேண்டும். போதுமான பலாத்கார பலம் இல்லாமல், குவியல் முறையை நீடித்துப் பாதுகாக்க முடியாது. எடுத்துச் செய்வதற்கு எந்தச் சாமானும் இல்லாத எளிய வீடுகளுக்குப் போலீசைக் காவலாகப் போட வேண்டியதில்லை. கொள்ளைக்காரர்களிடம் இருந்து காப்பாற்றுவதற்காக, பணக்காரர்களுடைய மாளிகை களுக்குப் பலமான காவல் போட வேண்டும். அதே போன்று தான் பெரிய தொழிற்சாலைகளும், நல்ல இராணுவ, கடல், விமானப்படைகளைக் கொண்ட நகரமயமான இந்தியாவைக் காட்டிலும் கிராமிய மயமான இந்தியாவில் வெளிநாட்டுப் படையெடுப்பு அபாயம் குறைச்சலாகவே இருக்கும்.[21]

சுரண்டலும் இம்சையும்

தொழிற்சாலை நாகரிகத்தை அடிப்படையாக வைத்து நீங்கள் அஹிம்சை என்னும் மாளிகையை நிர்மாணிக்க முடியாது. ஆனால் சுயதேவைப் பூர்த்தியுள்ள கிராமங்களில் அதை நிர்மாணிக்க முடியும். எனது மனக்கண்ணில் நான் கற்பனை செய்துள்ள கிராமியப் பொருளாதாரத்தில் சுரண்டல் என்பதற்கே இடமில்லை. சுரண்டலே இம்சையின் சாரமாகும்.[22]

6. சுதேசி

வெகுதூரத்திலிருந்து கிடைப்பவைகளை விலக்கி, நமது சுற்றுப்புறங்களையும், அவைகளில் உள்ள மக்களின் சேவையையும் பயன்படுத்திக் கொள்ளும் உணர்ச்சி இருக்கிறதே அதுதான் சுதேசியாகும்.

எது அறிவீனம்?

நாம் சுதேசிய தத்துவத்தைப் பின்பற்றுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உங்களுடைய கடமையும் என்னுடைய கடமையும் என்ன? நமக்குத் தேவையான பொருட்களை அண்மையில் உள்ளவர்கள் அளிக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன செய்வதென்று தெரியாது இருப்பவர்கள் விஷயத்தில், அப்பொருள்களை அவர்கள் எவ்வாறு நமக்கு வழங்கமுடியும் என்று கற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல யோக்கியமான, வேலையில்லாத அண்டை அயலார்கள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையிலேயே இதை நான் கூறுகிறேன். இவ்வாறு செய்யும்போது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும் சுயதேவைப் பூர்த்தி உள்ளதாகவும் கிட்டத்தட்ட பூரணத்துவம் உடையதாகவும் இருக்கும். மற்ற கிராமங்களில் உற்பத்தியாகாத பொருட்களை மட்டும் அந்தக் கிராமங் களுக்கு ஒரு கிராமம் அனுப்பி வைக்கும். இவ்வாறு நான் கூறுவதெல்லாம் அபத்தமாகத் தோன்றும். அல்லது, இந்தியாவே ஒரு அபத்தமான நாடுதான். அன்பு கனிந்த முகமதியன் ஒருவன் நாம் குடிப்பதற்காகச் சுத்தமான

தண்ணீரை அளிக்கத் தயாராய் இருக்கும்போது, தாகத்தால் தொண்டை வறட்சியடையுமாறு வைத்துக் கொண்டிருப்பது அறிவீனமாகும். ஆயினும் ஒரு முகமதியன் வீட்டிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பதைவிட, ஆயிரக்கணக்கான இந்துக்கள் தாகத்தால் செத்துப்போகவும் தயாராயிருப்பார்கள். அதே சமயம், இந்த அறிவீனமான மனிதர்கள், இந்தியாவில் உற்பத்தியான ஆடைகளையே அணிய வேண்டும். இந்தியாவில் உற்பத்தியான உணவுப் பொருட்களையே சாப்பிட வேண்டும் என்று தங்களுடைய மதம் கூறுவதாக உணரும்போது, மற்ற ஆடை எதையும் அணிய மறுத்துவிடுவார்கள். மற்ற உணவை அருந்தவும் மறுத்து விடுவார்கள்.[23]

சுதேசி பக்தன்

உண்மையான சுதேசி பக்தன் அந்நியனிடம் குரோதம் கொள்ளமாட்டான். உலகில் யார் மீதும் அவனுக்கு விரோத உணர்ச்சி இருக்காது. சுதேசி என்பது வேற்றுமை உணர்ச்சியின் வழி வந்தது அல்ல. அது சுயநலமற்ற தொண்டின் தத்துவம். தூய்மையான அஹிம்சை அல்லது அன்பில்தான் அதன் அடிப்படை இருக்கிறது.[24]

7. சுயதேவைப் பூர்த்தி

சமூகத்தின் ஒரு மூல அங்கம், அதாவது யூனிட், ஒரு கிராமமாக இருக்க வேண்டும். அல்லது அதை, நிர்வகிக்கத் தக்க ஒரு சிறு மக்கள் தொகுதி என்று கூறலாம். இலட்சிய அடிப்படையில் பார்த்தால் இந்த மக்கள் தொகுதி, தன்னுடைய ஜீவாதாரமான தேவைகளில் ஒரு ‘யூனிட்’ என்ற முறையில் சுயதேவைப் பூர்த்தி உள்ளதாக இருக்கும்.[25]

ஒவ்வொரு கிராமத்தின் முதல் அக்கறை, தனது உணவுக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும், துணிக்கு வேண்டிய பஞ்சையும் உற்பத்தி செய்வதாகும்.[26]

ஒவ்வொரு கிராமமும் தனது உணவுக்கும் உடைக்கும் சுய தேவைப் பூர்த்தி உள்ளதாகச் செய்ய வேண்டும் என்பதுதான் கதரின் மைய உண்மை.

பரவல்மயப் பஞ்சு

நூல் நூற்பவர்களே தங்களுக்கு வேண்டிய பஞ்சை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். அல்லது, ஒவ்வொரு கிராமமும் கிட்டத்தட்ட தனக்கு வேண்டிய பஞ்சைத் தானே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இல்லையேல் கதரில் சுயதேவைப் பூர்த்தி செய்வதென்பது வெற்றி பெறாது. அதாவது குறைந்தது கதர் சுயதேவைப் பூர்த்திக்காவது பஞ்சு உற்பத்தி பரவல் மயமாக வேண்டுமென்றாகிறது.[27]

சுய ஆதரவு

ஒவ்வொரு கிராமமும் சுய ஆதரவு பெற்றதாய் இருக்க வேண்டும். உலகத்தையே எதிர்த்துப் போராட வேண்டியிருந்தாலும், தன்னுடைய விவகாரங்களைத் தானே நிர்வகிக்கத் தக்க சக்தி உடையதாக இருக்க வேண்டும்.[28]

8. கூட்டுறவு

கூடியவரை ஒவ்வொரு காரியமும் கூட்டுறவு அடிப்படையிலேயே நடைபெற வேண்டும்.[29]

பாய் பின்னுபவர்களைக் காட்டிலும் விவசாயிகளுக்குக் கூட்டுறவு முறை எவ்வளவோ அவசியமானதாகும். நிலம் அரசாங்கத்துக்குச் சொந்தமானது. ஆகையால், கூட்டுறவு அடிப்படையில் அதில் பயிரிடும்போது, அதிலிருந்து மிக அதிகமான பலன் கிடைக்கிறது.

கூட்டுறவானது நூற்றுக்கு நூறு அஹிம்சை அடிப்படையிலேயே இருக்க வேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.[30]

9. சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரக முறையுடனும், ஒத்துழையாமையுடனும் கூடிய அஹிம்சையே ஒவ்வொரு கிராம சமுதாயத்தின் அதிகாரமாக அல்லது ஆயுதமாக இருக்கும்.[31]

10. சர்வமத சமத்துவம்

ஒவ்வொரு மதத்துக்கும் அதற்குரிய முழு, சமத்துவ இடம் உண்டு. நாமெல்லாம் ஒரு கம்பீரமான மரத்தில் உள்ள இலைகள், இந்த மரத்தின் வேர் மண்ணுக்குள் ஆழமாகப் பதிந்திருக்கிறது. ஆகையால் இந்த மரத்தை வேருடன் ஆட்டி, அசைத்துவிட முடியாது.[32]

11. பஞ்சாயத்து ராஜ்யம்

கிராம ஆட்சியானது ஐந்து பேர்கொண்ட பஞ்சாயத்தினால் நடைபெறும். இந்த ஐந்துபேரும் (ஆண், பெண்கள் உள்பட) வயது வந்த கிராமவாசிகளால், ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கும் கிராம மக்களுக்கு இருக்க வேண்டிய சில தகுதிகள் நிர்ணயிக்கப்படும்.[33]

அதுவே நீதிமன்றம்

சாதாரணமாகத் தண்டனைகள் என்று எவை கருதப் படுகின்றனவோ அவைகளை விதிக்கும் முறை எதுவும் இருக்காது. ஆகையால் இந்தப் பஞ்சாயத்தில் பதவி வகிக்கும் ஓராண்டுக் காலத்துக்கு இதுவே சட்டசபையாகவும், நீதிமன்றமாகவும், நிர்வாக சபையாகவும் இருக்கும்.[34]

கிராமவாசிகள் அல்லது கிராமிய மனோபாவங் கொண்ட வயது வந்த ஐந்து ஆண் அல்லது பெண்களைக் கொண்ட ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு யூனிட்டாக இருக்கும்.

ஒன்றுக்கொன்று பக்கத்திலிருக்கும் இவ்வித இரு பஞ்சாயத்துக்கள் ஒரு செயற்குழுவாக இருக்கும். இந்தக் குழுவின் தலைவர் இந்த இரு பஞ்சாயத்துக்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தலைவர்கள் தேர்தல்

இப்படிப்பட்ட நூறு பஞ்சாயத்துக்கள் இருக்கும்போது, ஐம்பது முதல் 'கிரேடு' தலைவர்கள், தங்களிடையே இருந்து ஒரு இரண்டாவது 'கிரேடு' தலைவரைத் தேர்ந் தெடுப்பார்கள். அதே போன்று, தேர்தல் நடைபெறும். முதல்

கிரேடு தலைவர்கள் இரண்டாவது ‘கிரேடு’ தலைவர்களின் கீழ்ப் பணியாற்றுவார்கள். இருநூறு பஞ்சாயத்துக்கள் கொண்ட இணைத் தொகுதிகள் அமைக்கப்படும். இந்தியாவிலுள்ள பஞ்சாயத்துக்களெல்லாம் இவ்வாறு ஒன்று சேர்க்கப்படும் முறையில் இத்தொகுதிகள் அமைக்கப்படும். ஒவ்வொரு தொகுதிப் பஞ்சாயத்தும் தனது இரண்டாவது கிரேடு தலைவரை, அதற்கு முந்திய தொகுதியைப் போன்று தேர்ந்தெடுக்கும். இரண்டாவது கிரேடு தலைவர்களெல்லாம் தங்கள் தங்கள் பகுதிகளுக்குச் சேவை செய்வது போக, கூட்டாக இந்தியா முழுவதற்கும் சேவை செய்வார்கள். இரண்டாவது கிரேடு தலைவர்கள் - தாங்கள் அவசியமென்று கருதும்போது - தங்களிடையே இருந்து ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். இவர், தமக்கு விருப்பமான சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட தொகுப்புகளுக்குத் தலைவராக இருந்து அவைகளின் வேலைகளை ஒழுங்குபடுத்துவார்.

12. ஆதாரக் கல்வி

உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றிலும்; குழந்தையிடமும், மனிதனிடமும் எவை மிகச் சிறந்த அம்சமாகப் பொதிந்து கிடக்கின்றனவோ அவைகள் எல்லாவற்றையும் வெளியே கொண்டு வருவதுதான் கல்வி. கல்வியென்று நான் குறிப்பிடும்போது இதையே கூறுகிறேன். எழுத்தறிவிப்பது என்பது கல்வியின் முடிவு அல்ல. ஏன், அதன் ஆரம்பங்கூட அல்ல. ஆணையும் பெண்ணையும் படிக்க வைக்கக் கூடிய ஒரு சாதனம் அது. அவ்வளவுதான். எழுத்தறிவிப்பதென்பது மட்டும் கல்வியாகாது. ஆகையால் குழந்தைக்கு ஒரு உபயோகமான கைத்தொழிலைக் கற்றுக் கொடுப்பேன். இப்பயிற்சி ஆரம்பமான தேதியிலிருந்து அது ஏதாவதொன்றை உற்பத்தி செய்யுமாறு செய்வேன். இவ்வாறு தான் நான் ஒரு குழந்தைக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்குவேன். இவ்வாறாக ஒவ்வொரு பள்ளியும் தன் செலவைத் தானே சரிக்கட்டக்கூடியதாக ஆகும். இதில் ஒரு நிபந்தனையென்னவென்றால், இந்தப் பள்ளிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டும்.[36]

அத்தியாயம் 7

உணவுக்காக உடல் உழைப்பு

சோம்பேறித்தனம் கூடாது

அந்த மாபெரும் இயற்கை, நாமெல்லோரும் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உணவைத் தேடிக் கொள்ள வேண்டுமென்றே விரும்புகிறது. ஆகையால் ஒருவர் ஒரு நிமிஷத்தை வீணாக்குவதாய் இருந்தாலும், அவர் அந்த அளவுக்குத் தனது அண்டையில் உள்ளவர்களுக்கு ஒரு சுமையாக இருக்கிறார். அவ்வாறு செய்வது அஹிம்சையின் முதல் பாடத்தையே மீறுவதாகும். அஹிம்சையென்பது சமநிலையான, கண்ணியமான முறையில் பிறரைப் பற்றி அக்கறை கொள்வதாகும். இவ்வாறில்லையேல் அஹிம்சைக்குப் பொருளே இல்லை. ஒரு சோம்பேறிக்கு இந்த அடிப்படையான எண்ணம் இல்லாமற் போய்விடுகிறது.[1]

ருசியர் கருத்து

மனிதன், தன் கையாலேயே உழைத்துச் சாப்பிட வேண்டுமென்ற தெய்வீக நியதியை முதன் முதலில் வலியுறுத்தியவர் டி.எம். ஸாண்டாரெப் என்ற ருசிய எழுத்தாளர் ஆவார். டால்ஸ்டாய் இதை நன்கு விளம்பரப் படுத்தி, பலருக்குத் தெரியுமாறு செய்தார். என்னுடைய கருத்தின்படி, கீதையின் மூன்றாவது அத்தியாயம் இதே கோட்பாட்டைத் தான் வலியுறுத்துகிறது. யக்ஞம் செய்யாது உண்பவன், திருடிய உணவையே உண்டவனாகிறான் என்று அங்கு கூறப்பட்டிருக்கிறது. இங்கே யக்ஞம் என்பது உடல் உழைப்பையே குறிப்பிடுகிறது.

பகுத்தறிவின் முடிவும் இதுவே

பகுத்தறிவின்படி பார்த்தாலும் இதே முடிவுக்குத் தான் நாம் வருவோம். உடல் உழைப்புச் செய்யாத மனிதனுக்கு, சாப்பிடுவதற்கு எவ்வாறு உரிமை இருக்க முடியும்? ‘நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு, நீ உனது உணவை

உண்பாயாக!' என்று கூறுகிறது பைபிள். ஒரு கோடீஸ்வரன் நாள் பூராவும் தனது படுக்கையிலேயே படுத்துப் புரள்கிறான். பிறர் அவனுக்கு உணவை ஊட்டி விடுகின்றனர் என்று வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு அவன் நீண்ட காலம் தள்ள முடியாது. அவனுக்கு வாழ்க்கை அலுத்துப் போய்விடும். ஆகையால் அவன் தேகப் பயிற்சி செய்து பசியை உண்டாக்குகிறான். தனது உணவைப் பிறர் உதவியின்றித் தானே உண்கிறான். ஆகவே, ஏழையோ, பணக்காரரோ இவ்வாறு தேகப் பயிற்சி செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறதென்றால், அது ஏன் உபயோகமான, உணவுக்கான உழைப்பாக இருக்கக் கூடாது? சுவாசப் பயிற்சி செய்ய வேண்டுமென்றோ அல்லது கரளாக் கட்டை சுற்ற வேண்டுமென்றோ யாரும் விவசாயிக்குக் கூறுவதில்லை. மனித சமுதாயத்தில் பத்தில் ஒன்பது பேர் மண்ணில் பாடுபட்டுத்தான் வாழ்கிறார்கள். ஆகவே மீதமுள்ள பத்தில் ஒரு பகுதியினரும், இந்த மிகப் பெரும்பாலோருடைய முன் மாதிரியைப் பின்பற்றினால், தங்களுடைய உணவுக்கு வேண்டிய அளவாவது உடல் உழைப்புச் செய்தால், உலகம் எவ்வளவு மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத்துடனும், அமைதியுடனும் இருக்கும்?

உயர்வு தாழ்வு நீங்கும்

உலகம் முழுவதும் முதலாளி - தொழிலாளி சண்டை இருக்கிறது. ஏழைகள் பணக்காரர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். எல்லோரும் உணவுக்காக உழைப்பதானால், உயர்வு தாழ்வுகள் அகன்றுவிடும். அப்போதும் பணக்காரர்கள் இரு'ப்பார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய சொத்தின் தர்மகர்த்தாக்களாகத் தான் தங்களைக் கருதிக் கொள்வார்கள்; பெரும்பாலும் பொது நலனுக்காகவே அதைப் பயன்படுத்துவார்கள்.

உடல் உழைப்புக்கள் எவை?

அஹிம்சையைக் கடைப்பிடிப்பவருக்கும், சத்தியத்தை ஆராதனை செய்பவருக்கும், பிரம்மச்சரியத்தை

இயற்கையான முறையில் அனுஷ்டிப்பவருக்கும் உணவுக்காக உடல் உழைப்புச் செய்வது ஒரு வரப்பிரசாதமாகும் என்று கூறுவது முற்றிலும் சரி. விவசாயத்தின் விஷயத்தில் தான் இந்த உழைப்புச் சரியாக அமைந்திருக்கிறது. ஆனால் தற்போதைய நிலையில் ஒவ்வொருவரும் அதை மேற்கொள்ளும் நிலைமையில் இல்லை. ஆகையால் ஒருவர் மண்ணில் உழுவதற்குப் பதிலாக நூற்கலாம் அல்லது நெய்யலாம்; கொல்லர் அல்லது தச்சு வேலை செய்யலாம். ஆனால் இவ்வாறு செய்யும்போது, சிறந்த இலட்சியமான வேலை விவசாயமே என்று கருத வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குத்தானே தோட்டியாக இருக்கலாம். உணவு உண்பதைப் போலவே மலத்தைக் கழிப்பதும் அவசியமான ஒரு செயல். தன்னுடைய கழிவுப் பொருளைத் தானே அப்புறப்படுத்த வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இது சாத்தியமில்லை யென்றால் ஒவ்வொரு குடும்பமுமாவது, தனது துப்புரவு வேலைகளுக்குத் தானே பொறுப்பேற்க வேண்டும்.

தோட்டி என்ற உணர்வு

சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் தான் தோட்டி வேலை செய்ய வேண்டுமென்பதில் ஏதாவது பெரிய தவறு இருக்க வேண்டுமென்று நான் பல ஆண்டுகளாகவே கருதி வந்திருக்கிறேன். இந்த அத்தியாவசியமான சுகாதார சேவைக்கு, மிகத் தாழ்ந்த அந்தஸ்தை முதன் முதலாக அளித்தவர் யாரென்பதைப் பற்றி வரலாற்றுப் பூர்வமான எழுத்துச் சான்று எதுவும் நம்மிடம் இல்லை. அது யாராக இருந்தாலும் சரி, அவர் நமக்கு எந்தவித நன்மையும் செய்யவில்லை. நம்முடைய குழந்தைப் பருவத்திலிருந்தே நாமெல்லாம் தோட்டிகள் என்ற எண்ணத்தை நாம் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். இதை உணர்ந்த ஒவ்வொரு வரும் தோட்டியாக உடல் உழைப்பை மேற்கொள்ளத் தொடங்க வேண்டியதுதான், அதற்கு மிக எளிதான வழி. இவ்வாறு புத்திக்கூர்மையுடன் செய்யப்படும் தோட்டி வேலையானது, மனிதனின் சமத்துவத்தை உண்மையாக நிலைநாட்டுவதற்கு உதவும்.[2]

கடமை வந்தால் உரிமை

உரிமைகளின் உண்மையான பிறப்பிடம் கடமைதான். நாமெல்லோரும் நம் நம் கடமையைச் செய்வதாக இருந்தால், உரிமைகளை அடைவதற்கு நீண்ட காலமாகாது. கடமைகளைச் செய்யாமல், உரிமைகளைப் பெறுவதில் முனைந்துவிட்டால், கொள்ளிவாய்ப் பேயைப் போன்று அது நம்மை ஏமாற்றிக் கொண்டே சென்றுவிடும். நாம் எவ்வளவு அதைத் துரத்துகிறோமோ அவ்வளவு அது தூரத்தில் பறந்து போய்விடுகிறது. இதே போதனையைத்தான் கீழ்க்கண்ட தெய்வீகச் சொற்களில் கண்ணன் கூறுகிறார்; ''செயலில் ஈடுபட வேண்டியதே உன் வேலை. பலனைப் பற்றிக் கருதாதே.'' செயல் என்பது கடமை; பலன் என்பது தான் உரிமை.[3]

கடமை, கழுவாய்

அத்தியாவசியத் தேவைகளைப் பெறுவதில் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் உரிமையிருப்பதைப் போலவே ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை இருக்கிறது. ஒவ்வொரு கடமைக்கும் உரிய ஒரு உரிமை உண்டு. அதற்கு வரும் அபாயத்தைச் சமாளிப்பதற்கான ஒரு கழுவாய் உண்டு. ஆகையால் ஆதாரமான, அடிப்படையான சமத்துவத்தை வெளிப்படுத்துவதென்பது அதற்குரிய கடமைகளையும் கழுவாய்களையும் கண்டுபிடிப்பதுதான். இது தொடர்பான கடமை, உடலால் உழைப்பதாகும். இது தொடர்பான கழுவாய், எனது உழைப்பின் பலனை யார் அபகரிக்கிறார்களோ அவர்களுடன் ஒத்துழையாமையை மேற்கொள்வதாகும்.

உணவுக்கான உழைப்பு

எல்லோருமே, வேறெதற்காகவுமல்லாமல் தங்களுடைய உணவுக்காக உழைப்பதாக இருந்தால், எல்லோருக்கும் போதுமான உணவும் ஓய்வும் இருக்கும். அளவுக்கு மீறிய மக்கள் தொகை இருப்பதாக அப்போது

கூக்குரல் இருக்காது. நோய் நொடி இருக்காது. தற்போது நாம் காண்பதைப் போல், வறுமை தாண்டவமாடாது. இப்படிப்பட்ட உழைப்பானது, தியாகத்தின் உச்சமாக இருக்கும். மனிதர் தங்களுடைய உடலாலோ, மனதாலோ வேறு எத்தனையோ காரியங்களைச் செய்யலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் இவைகளெல்லாம் பொது நலனுக்காக அன்பின் அடிப்படையில் செய்யப்படுவதாக இருக்க வேண்டும். அப்போது ஏழை, பணக்காரர் என்பது இருக்காது. உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், தீண்டத் தகாதவர்கள், தீண்டத் தக்கவர்கள் என்பவர்களெல்லாம் இருக்க மாட்டார்கள்.

உழைப்பின் சிறப்பு

நாம் அடைய முடியாத ஒரு இலட்சியமாக இது இருக்கலாம். ஆனால் நாம் அதற்காக முயற்சியைக் கைவிட வேண்டுமென்பதில்லை. தியாகத்தின் நியதியை - அதாவது நாம் எதற்காக உயிர் வாழ்கிறோமோ அதை - நாம் நிறைவேற்றாமல் இருந்தாலுங்கூட, நம்முடைய அன்றாட உணவுக்கு வேண்டிய உடல் உழைப்பைச் செய்தோ மானால், இந்த இலட்சியத்திற்கு மிக அருகில் சென்றவர் களாவோம்.

செய்து பார்க்கட்டும்

நாம் அவ்வாறு செய்தோமானால், நம்முடைய தேவைகளெல்லாம் மிக மிகக் குறைந்துவிடும். உணவும் எளிமையானதாகிவிடும். அப்போது நாம் உயிர் வாழ்வதற்காகச் சாப்பிட வேண்டும். சாப்பிடுவதற்காக உயிர் வாழக்கூடாது. இந்தத் தத்துவம் சரிதானா என்ற ஐயப்பாடு உள்ளவர் தன்னுடைய உணவிற்காக நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுப் பார்க்கட்டும். தன்னுடைய உழைப்பினால் கிடைக்கும் பொருட்களிலிருந்து அவர் மிகச் சிறந்த இன்பத்தை அடைவார். அவருடைய உடல் நலம் அபிவிருத்தி அடையும். தான் இதற்கு முன் அனுபவித்த அநேக பொருட்கள் தேவையற்றவை என்பதைக் காண்பார்.[5]

உடல் உழைப்பும், சமூகத்தொண்டும்

புத்திசாலித்தனமான உடல் உழைப்பு என்றும் மிக உயர்ந்த சமூகத் தொண்டாகும்.

இதில் உடல் உழைப்பு என்பதன் முன் 'புத்திசாலித் தனமான' என்ற சொல்லைச் சேர்த்துள்ளேன். உடல் உழைப்பானது சமூகத் தொண்டாக வேண்டுமானால், அதற்கு ஒரு திட்டவட்டமான கருத்து இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே அச்சொல்லைச் சேர்த்திருக்கிறேன். இல்லையேல் ஒவ்வொரு தொழிலாளியும் சமூகத்தொண்டு செய்வதாகவே ஆய்விடும். ஒருவகையில் அவன் சமூகத் தொண்டு செய்கிறான் என்பது உண்மையே. ஆனாலும், இங்கு நாம் எடுத்துக்கொண்டது அதைக் காட்டிலும் முக்கியமான ஒன்றாகும். எல்லோருடைய பொது நன்மைக்காகவும் உழைக்கும் ஒருவன் சமூகத்துக்காகச் சேவை செய்கிறான். அவன் தனது உழைப்புக்கேற்ற பலனைத் பெறத் தகுதியுள்ளவனுமாகிறான். ஆகையால் அப்படிப்பட்ட உடல் உழைப்பானது, சமூகத் தொண்டிலிருந்து வேறுபட்டதல்ல.[6]

அரவமில்லாத புரட்சி

மூளையைக் கொண்டு ஒரு மனிதன் தனக்கு வேண்டிய உணவைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடாதா? கூடாது. உடலின் தேவைகள் உடலால்தான் நிறைவு செய்யப்பட வேண்டும். ''பிசாசுக்கு உரிய பலியைப் போட்டுத்தான் ஆக வேண்டும்'' என்ற பழமொழி இங்கு சரியாகப் பொருந்துகிறது. வெறும் அறிவினால் மட்டும் ஆகும் உழைப்பு, ஆன்மாவுக்குத்தான். அது ஆன்மாவுக்கு மட்டுந்தான் திருப்தி அளிக்கும். அதற்குப் பணத்தை ஒரு போதும் எதிர்பார்க்கக் கூடாது. ஒரு இலட்சிய சமுதாயத்தில் டாக்டர்களும், வக்கீல்களும் மற்றும் அவர்களைப் போன்றவர்களும் சமூகத்தின் நலனுக்காகவே உழைப் பார்கள். தங்களுடைய சொந்த நலனுக்காக உழைக்க மாட்டார்கள். உடல் உழைப்பு நியதிக்குப் பணிவதானது சமுதாய அமைப்பில் ஒரு சத்தமில்லாத புரட்சியை

ஏற்படுத்திவிடும். உயிர் வாழப் போராடுவதற்குப் பதிலாகப் பரஸ்பரம் சேவை செய்வதற்கான போராட்டம் வரும். இதுவே மனிதன் அடையக்கூடிய வெற்றி. காட்டுமிராண்டிகளின் சட்டம் போய், மனிதனைப் பற்றிய சட்டம் அங்கு இடம் பெறும்.

உண்மைப் பொருள் என்ன?

கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வது என்பதன் பொருள் என்ன? உடல் உழைப்பு என்னும் கடமையையும், அது எதெதைக் குறிக்கிறதோ அவைகளையும் ஒருவன் தானாக முன்வந்து ஏற்பதுதான் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வதென்பது. ஆனால் குணதோச விமர்சனம் செய்யும் ஒருவன், ''இந்தியாவின் கோடிக்கணக்கான குழந்தைகள் இன்று கிராமங்களில் தான் வாழ்கின்றன. ஆயினும் அவை அரைப்பட்டினியாகத்தான் இருக்கின்றன'' என்று சொல்வான். அந்தோ, இது நூற்றுக்கு நூறு உண்மையே. ஆனால் அதிருஷ்டவசமாக ஒன்றை நாம் அறிவோம். அதாவது அவர்களுடைய பணிவு இருக்கிறதே அது அவர்களுடைய மனமுவந்த பணிவாகாது. தங்களால் உடல் உழைப்பைத் தவிர்க்க முடியுமானால் ஒருவேளை அவர்கள் அப்படிச் செய்திருக்கலாம். அல்லது அண்மையில் உள்ள நகரம் ஒன்றில் அவர்களுக்கு இடங்கிடைக்குமானால் அங்கு ஓடோடிச் சென்றுவிடலாம். கட்டாயமாக ஒரு எஜமானுக்குப் பணிவதென்பது அடிமையின் நிலையாகும். தகப்பனுக்கு மனமுவந்து பணிவதென்பது மகனுக்குரிய மாண்பாகும். அதேபோன்று, உடல் உழைப்பின் நியதிக்குக் கட்டாயத்தின் பேரில் பணிவதென்பது வறுமை, நோய், அதிருப்தி ஆகியவற்றைத் தான் வளர்க்கிறது. அது ஒரு வகையான அடிமை நிலை. மனமுவந்து பணிவதென்பது திருப்தியையும் உடல் நலத்தையும் அளிக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்; மற்றப்படி வெள்ளியும் தங்கமுமல்ல.

பிச்சையெடுத்தல்

உடல் ஆரோக்கியமாக இருந்தும் நாணயமான வழியில் தனது உணவுக்காக உழைக்காத ஒரு மனிதனுக்கு

இலவசமாக ஒருவேளை உணவு அளிப்பதைக்கூட எனது அஹிம்சை ஏற்றுக் கொள்ளாது. எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால், இலவச உணவுகள் அளிக்கப்படும் ஒவ்வொரு சத்திரத்தையும் நிறுத்திவிடுவேன். இது நம் நாட்டைத் தாழ்த்தி, சோம்பேறித்தனத்தையும், மந்தத்தையும், ஏமாற்றுதலையும் ஊக்குவித்திருக்கிறது. இது சட்டத்தை மீறிக் குற்றம் செய்வதற்கு துணை செய்துள்ளது. இவ்வாறு தவறான முறையில் தர்மம் செய்வதானது, ஒரு நாட்டின் ஆன்மிக அல்லது லோகாயத சொத்தைப் பெருக்குவதற்கு எந்த வகையிலும் உதவுவதில்லை. தர்மம் செய்தவருக்குத் தவறான பெருமையை அளிக்கிறது. இவ்வாறு தர்மம் செய்பவர், சில ஸ்தாபனங்களைத் திறந்து, அவைகளுக்காக உழைக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஆரோக்கியமான, சுத்தமான சூழ்நிலைகளில் உணவு அளிப்பதாக இருந்தால் அது எவ்வளவு அழகான, விவேகமான செயலாக இருக்க முடியும்? இராட்டையோ அல்லது பஞ்சு சம்பந்தமான ஏதாவதொரு வேலையோ அவர்களுக்குச் சிறந்ததாக இருக்கும் என்று தனிப்பட்ட முறையில் நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் இந்த வேலையைத் தேர்ந்தெடுக்காவிட்டால் வேறு ஏதாவது ஒரு வேலையைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால், ''உழைக்கா விட்டால் உணவு இல்லை'' என்பது மட்டும் அனுசரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நகரிலும் அததற்குரிய பிச்சைக்காரர்கள் பிரச்னை இருக்கிறது. இந்தப் பிரச்னை கஷ்டமானதாகவும் இருக்கிறது. இப்பிரச்னைக்குப் பணக்காரர்கள் தான் பொறுப்பாவர். சோம்பேறிகளுக்கு இலவச உணவை அள்ளிப்போடுவது எளிய காரியம் என்பதை நான் அறிவேன். ஆனால், உணவு பரிமாறப் படுவதற்குமுன் நாணயமான வேலை செய்தாக வேண்டியிருக்கக் கூடிய ஒரு ஸ்தாபனத்தைக் கட்டிக்காப்பது எவ்வளவோ கஷ்டமானதாகும். பொருளாதார அடிப்படையில் பார்த்தால், ஆரம்பக்கட்டத்தில், வேலை வாங்கிய பின் உணவு அளிப்பதற்கு ஆகும் செலவானது தற்போது இலவசமாக உணவு அளிக்கப்படுவதற்காகும் செலவைக் காட்டிலும் அதிகமானதாக இருக்கும். ஆனால் நீண்ட கால

அடிப்படையில் பார்த்தால் அது மலிவாக இருக்கும் - இந்நாட்டில் ஏற்கனவே வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் சோம்பேறிகளின் எண்ணிக்கையை மேலும் பெருக்கிக் கொண்டு போக நாம் விரும்பாவிட்டால்.[8]

நொண்டி முடம்

பிச்சையெடுப்பதை ஊக்குவிப்பது தவறு என்று நான் கூறினாலும் வேலையும் உணவும் அளிக்காமல் எந்தப் பிச்சைக்காரனையும் நான் வெளியே அனுப்பமாட்டேன். அவன் வேலை செய்யாவிட்டாலோ உணவு இல்லாமலும் அவனை அனுப்பிவிடுவேன். நொண்டி முடமாக இருந்து உடலால் உழைக்க முடியாமல் இருப்பவர்களுக்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கவேண்டும். எனினும், போலியாகக் குருடனைப் போல் நடித்து, ஏன், உண்மைக் குருடனாக இருப்பதில் கூட எவ்வளவோ ஏமாற்றுதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன - ஏமாற்றிப் பணம் சம்பாதித்து அநேக குருடர்கள் பணக்காரர்களாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஆசை ஏற்படுமாறு செய்வதைக் காட்டிலும் அவர்களை ஒரு புகலிடத்தில் சேர்ப்பது நல்லதாக இருக்கும்.[9]

அத்தியாயம் 8

சமத்துவம்

ஏற்றத்தாழ்வு இயற்கையே

சமுதாயத்தைப் பற்றி என்னுடைய கருத்து இதுதான். நாமெல்லோரும் சமத்துவமாகவே பிறக்கிறோம். ஆகவே, சமத்துவ வாய்ப்புப் பெற உரிமையுண்டென்பது அதன் பொருளாகிறது. ஆனாலும் எல்லோருக்கும் சமத்துவமான திறமையில்லை. சமத்துவமான திறமையிருப்பதும் மனித இயற்கையில் சாத்தியம் இல்லை. உதாரணமாக எல்லோருக்கும் சமமான உயரம், நிறம், புத்திக் கூர்மை முதலியவை இருக்க முடியாது. ஆகையால் இயற்கையாகவே சிலருக்கு அதிகம் சம்பாதிக்கவும் மற்றும் சிலர் குறைச்சலாகச் சம்பாதிக்கவும் திறமை பெற்றவர்களாய் இருப்பார்கள். திறமையுள்ளவர்களிடம் அதிகப் பொருள் இருக்கும். அவர்கள் தங்களுடைய திறமையை இதற்காகப் பயன்படுத்திக் கொள்வார்கள். அவர்கள் மட்டும் தங்களுடைய திறமையை அன்போடு பயன்படுத்துவதாய் இருந்தால், அரசாங்கத்தின் கடமையைச் செய்தவர்களா வார்கள். இப்படிப்பட்டவர்கள் வேறு நிபந்தனை எதுவுமின்றி, தர்மகர்த்தாக்களாக நடந்து கொள்வார்கள். அறிவுத் திறன் உள்ளவன் அதிகமாகச் சம்பாதிப்பதை நான் அனுமதிப்பேன். அவனுக்குள்ள திறமைக்காக நான் மனம் புழுங்கமாட்டேன். ஆனால் அவனுக்கு அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானமெல்லாம், நாட்டின் நலனுக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும் - எவ்வாறு ஒரு தகப்பன், மக்களுடைய வருமானங்களெல்லாம் அந்தக் குடும்பத்தின் பொதுநிதிக்குப் போகின்றனவோ அதைப்போல.[1]

விளைவு என்ன?

சமத்துவ விநியோகத்தின் உண்மையான விளைவு எம் முறையில் இருக்கும்? ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது இயற்கையான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவு பணவசதி இருக்கும். அதற்கு மேல் இராது.

உதாரணமாக, ஒரு மனிதனுக்கு ஜீரணசக்தி மோசம் என்றும் அவனுக்குக் கால் இராத்தல் மாவு போதும் என்றும் வைத்துக் கொள்வோம். மற்றொரு மனிதனுக்கு ஒரு இராத்தல் தேவையாக இருக்கிறது. அப்போது இவ்விருவருமே தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருப்பார்கள். இந்த இலட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டுவர, சமுதாய அமைப்பு முழுவதையுமே திருத்தி அமைக்க வேண்டியிருக்கும். அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயம் வேறு எந்த இலட்சியத்தையும் கடைப்பிடிக்க முடியாது. நாம் இலட்சியத்தை அடையமுடியாமல் இருக்கலாம். ஆனால் நாம் இதை மனதிற்கொண்டு, அதனை அடைவதற்காக ஓயாது பாடுபட்டு வரவேண்டும். நம்முடைய இலட்சியத்தை நோக்கி நாம் முன்னேறும் அளவிற்கு ஏற்ப, நமக்கு மனநிறைவும் மகிழ்ச்சியும் கிட்டும். அந்த அளவுக்கு நாம் ஒரு அஹிம்சாபூர்வமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவியவர்களாவோம்.[2]

வருமானத்தில் சமத்துவம்

உங்களுடைய சேவையைப் பணமாக மாற்றுவதற்குப் பதிலாக, நாட்டின் சேவைக்காகப் பயன்படுத்துங்கள். நீங்கள் ஒரு வைத்தியராக இருந்தால், உங்களுடைய வைத்தியத் திறமையையெல்லாங் காண்பிப்பதற்கு, இந்தியாவில் போதுமான நோய்கள் இருக்கின்றன. நீங்கள் ஒரு வக்கீலாக இருந்தால் இந்தியாவில் போதுமான கருத்து வேறுபாடுகளும் சண்டைகளும் இருக்கின்றன. அதிகப்படியான சச்சரவை வளர்க்காமல், அந்தச் சண்டைகளில் சமரசத்தை ஏற்படுத்தி, வழக்குத் தொடருவதை நிறுத்தலாம். நீங்கள் ஒரு எஞ்ஜினியராக இருந்தால், நம்முடைய மக்களின் தேவைக்கும் வசதிக்கும் ஏற்றதும் அதே சமயம் ஆரோக்கிய வாழ்விற்கு உகந்ததும், தூய காற்று வசதி உள்ளதுமான மாதிரி வீடுகளைக் கட்டுங்கள். நீங்கள் கற்றதில், வீணாகப் போவதென்பது எதுவுமே இல்லை. (இந்தக் கேள்வியைக் கேட்டவர் ஒரு சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட். அவரை நோக்கி காந்திஜி கூறியதாவது :) காங்கிரசின் கணக்குகளையும்

அதைச் சார்ந்த ஸ்தாபனங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்வதற்கு எல்லா இடங்களிலுமே தணிக்கையாளர்கள் தேவையாக இருக்கிறார்கள். இந்தியாவுக்கு வாருங்கள் - நான் உங்களுக்குப் போதுமான வேலையும், அதற்கு வேண்டிய கூலியும் - அதாவது ஒரு நாளைக்கு நான்கு அணா கொடுக்கிறேன். இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் சம்பாதிப்பதைக் காட்டிலும் இது அதிகமாகும்.[3]

வழக்கறிஞராகத் தொழில் செய்வதென்றால், ஒரு கிராமத் தச்சனுடைய ஊதியத்தைக் காட்டிலும் அவர் நாள்தோறும் அதிக ஊதியம் பெறவேண்டும் என்பதல்ல.[4]

இந்தியாவுக்கு உரிய இலட்சியம்

உலகமெல்லாம் கண்டு பொறாமைப்படக்கூடிய அளவுக்கு இந்தியா ஒரு முன்மாதிரியான சுதந்திர வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால், இங்குள்ள தோட்டிகள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், வணிகர்கள், மற்றவர்கள் ஆகிய எல்லோரும் அன்றாடம் செய்யும் நாணயமான உழைப்பிற்கு ஒரே சமத்துவமான ஊதியம் பெறவேண்டும். இந்திய சமுதாயம் ஒரு போதும் இந்த இலட்சியத்தை எட்டாமல் இருக்கலாம். ஆயினும் இந்தியா மகிழ்ச்சி நிறைந்த நாடாக இருக்க வேண்டுமானால், வேறு எந்த இலட்சியமும் அல்லாமல் இந்த இலட்சியத்தை நோக்கித்தான் ஒவ்வொரு இந்தியனும் தனது வாழ்க்கைக் கப்பலைச் செலுத்திக் கொண்டுபோக வேண்டும்.[5]

அத்தியாயம் 9

தர்மகர்த்தாக் கொள்கை

சொத்தில் நியாய உரிமை

ஓர் உதாரணத்திற்கு, பிதுரார்ஜிதமாகவோ அல்லது எனது தொழில் காரணமாகவோ எனக்கு நிறையச் சொத்து ஏற்பட்டு விடுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது, அந்தச் சொத்தெல்லாம் எனக்குச் சொந்தமானதல்லவென்பதை நான் உணர வேண்டும். எனக்குச் சொந்தமானதெல்லாம் நான் கண்ணியமான வாழ்க்கை நடத்துவதற்குரிய உரிமைதான் - அதாவது இந்தியாவிலுள்ள மற்ற கோடிக்கணக்கான மக்கள் அனுபவிப்பதைப் போன்ற ஒரு வாழ்க்கை நடத்துவதற்குள்ள உரிமைதான். என்னுடைய சொத்தின் எஞ்சிய பகுதியெல்லாம் சமுதாயத்திற்குச் சொந்தமானதே - அதைச் சமுதாயத்தின் நலனுக்காகவே பயன்படுத்த வேண்டும். ஜமீன்தார்கள், மன்னர்கள் ஆகியோருடைய சொத்துக்கள் சம்பந்தமாக சோசலிசக் கொள்கை நாட்டின்முன் அறிவிக்கப்பட்டபோது, நான் மேற்கண்ட எனது கோட்பாட்டைக் கூறினேன். இந்தத் தனி உரிமை படைத்த வகுப்பினரை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். நானோ அவர்கள் பேராசைக்கும், சொத்தாசைக்கும் அப்பாற்பட்டவர்களாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்களுக்குச் சொத்து இருந்தாலுங்கூட, உடலால் உழைப்பவர்களுடைய நிலைக்கு அவர்கள் இறங்கி வரவேண்டுமென்று விரும்புகிறேன். உழைப்பாளிக்கு ஒரு சொத்து இருக்கிறது. அதுதான் அவன் உழைப்பதற்கு உரிய சக்தி. இந்தச் சொத்தைக் காட்டிலும் ஒரு செல்வந்தர் தனது சொத்துக்குக் குறைச்சலான உரிமை படைத்தவரே என்பதைத் தொழிலாளி உணர்ந்து கொள்ள வேண்டும்.

நடைமுறையில் சாத்தியமா?

இந்த வியாக்கியானப்படி, எத்தனைபேர் உண்மையான தர்மகர்த்தாக்களாக இருக்கமுடியும் என்பது

வேறு விஷயம் இந்தக் கோட்பாடு சரியானதென்றால், இதைப் பலர் கடைப்பிடித்து வாழ்கிறார்களா அல்லது ஒரே ஒருவர்தான் கடைப்பிடிக்கிறரா என்பது முக்கியமல்ல. இது சரிதான் என்று உணர்கிறீர்களா என்பதுதான் பிரச்னை. நீங்கள் அஹிம்சைக் கொள்கையை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால், நீங்கள் அதன்படி வாழ முயற்சி செய்ய வேண்டும். இதில் வெற்றியடைவதாய் இருந்தாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி. இதை நடைமுறையில் கடைப்பிடிப்பது கஷ்டம் என்று நீங்கள் கூறலாம். ஆனாலும், இந்தத் தத்துவத்தில், அறிவினால் புரிந்துகொள்ள இயலாத எதுவும் இருப்பதாகக் கூறமுடியாது.[1]

அரசும் இம்சையும்

தர்மகர்த்தா முறையென்பது சட்டபூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு கற்பனையென்று நீங்கள் சொல்லலாம். ஆனால் மக்கள் அதைப்பற்றி ஓயாது சிந்தனைசெய்து, அதன்படி நடக்க முயன்றால், உலக வாழ்க்கையானது தற்போதுள்ளதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாக அன்பினால் இயங்கும். ஒரு புள்ளியைப்பற்றி யூக்லிட் கூறியுள்ள சித்தாந்தம் போன்று முழு தர்மகர்த்தா முறை யென்பதும் தத்துவரீதியாகக் கூறக் கூடியதே. அதே போன்று அடைய முடியாததே. ஆனால் நாம் அதற்காக முயற்சி செய்தால், மற்ற எந்த முறையைக் காட்டிலும் இதன்மூலம் சமத்துவத்தை நோக்கி அதிகம் முன்னேற முடியும்... முதலாளித்துவத்தை இம்சை முறைகளின் மூலம் அரசாங்கம் அடக்கி விடுமானால், அந்த இம்சைச் சுழலில் அரசாங்கமே அகப்பட்டுக் கொள்ளும். ஒரு போதும் அதனால் அஹிம்சையை வளர்க்க முடியாது. ஒரு கட்டுக்கோப்பாக நிறுவப்பட்டும் குவியல் முறையிலும் உள்ள இம்சையின் பிரதிநிதியே அரசாங்கம். தனிப்பட்டவருக்கு ஆன்மா இருக்கிறது. ஆனால் அரசாங்கமானது ஆன்மா இல்லாத ஒரு இயந்திரமாகும். ஆகையால் இம்சையினாலேயே உயிர்வாழும் அரசாங்கத்தை இம்சையிலிருந்து விலக்க முடியாது. ஆகையால் நான் தர்மகர்த்தாத் தத்துவத்தையே அதிகம் விரும்புகிறேன். அரசாங்கத்துடன் கருத்து

வேறுபடுபவர்கள் மீது அரசாங்கம் மிக அதிகமான இம்சையைப் பயன்படுத்தலாம் என்ற அச்சம் எப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. சம்பந்தப்பட்ட மக்கள் தர்மகர்த்தாக்களாக நடந்து கொண்டால், நான் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியடைவேன். அவர்கள் அதில் தவறி விட்டாலோ, மிகக் குறைந்த அளவு இம்சையைப் பிரயோகம் செய்து அரசாங்கத்தின் மூலமாக நாம் அவர்களுடைய சொத்தை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்குமென நம்புகிறேன்... (அதனால் தான் வட்டமேஜை மகாநாட்டில், ''ஒவ்வொரு செல்வந்தரின் சொத்தையும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். நஷ்டஈடு கொடுத்தோ, கொடுக்காமலோ அவசியமான இடங்களில் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்'' என்று கூறினேன்). ஆகையால் நான் தனிப்பட்ட முறையில் அதிகம் விரும்பக்கூடியது, அரசாங்கத்தின் கைகளில் அதிகாரம் குவிந்திருக்கக் கூடாது என்பதைத் தான்... அதற்குப் பதிலாக, தர்மகர்த்தா எண்ணம் விரிவடைவதைத்தான் அதிகம் விரும்புகிறேன். என்னுடைய கருத்துப்படி, தனிப்பட்டவர் சொத்துரிமையில் உள்ள இம்சையானது அரசாங்கத்தின் இம்சையைக் காட்டிலும் குறைச்சலான தீங்கு பயக்கக் கூடியதே; எனினும், தவிர்க்க முடியாத நிலையில் மிகக் குறைந்த அளவு அரசாங்க உடைமை இருப்பதை நான் ஆதரிப்பேன்.[2]

சூத்திரம் அன்பே

அஹிம்சை அடிப்படையில் சமூகத்தை அமைக்கவோ அல்லது நடத்தவோ முடியாது என்று கூறுவது இந்தக் காலத்தில் ஒரு நாகரிகமாகப் போய்விட்டது. இந்த வாதத்தை நான் எதிர்க்கிறேன். ஒரு குடும்பத்தில், தகப்பனார் மகனுடைய கன்னத்தில் அறைந்தால் திருப்பி அறைய வேண்டுமென்று மகன் எண்ணுவதில்லை. தகப்பனார் கன்னத்தில் அறைந்ததனால் ஏற்பட்ட வலிக்காக மகன் அவர் சொன்னபடி கேட்பதுமில்லை. அதற்கு மாறாக, அதன் பின்னணியில் தகப்பனார் வைத்திருக்கும் அன்பிற்காகத் தான் அவன் பணிகிறான். சமூகம் எவ்வாறு நடைபெறுகிறது அல்லது நடைபெற வேண்டும் எள்பதைச் சுருக்கமாக

இவ்வாறு கூறலாம் என்பது என் கருத்து. குடும்பத்தின் விஷயத்தில் எது உண்மையோ அதுவே சமுதாயத்தின் விஷயத்திலும் உண்மை. ஏனென்றால் சமுதாயம் என்பது ஒரு பெரிய குடும்பமேயாகும்.[3]

அஹிம்சை சமுதாயப் பண்பு

அஹிம்சையானது தனிப்பட்டவருக்கு இருக்க வேண்டிய சிறப்பு மட்டுமல்ல. மற்றவைகளைப் போன்று பண்படுத்தி வளர்க்க வேண்டிய ஒரு சமுதாயப் பண்புமாகும். சமுதாயத்தில் உள்ள பரஸ்பரத் தொடர்புகளில், பெரும்பாலும் அஹிம்சையின் மூலமே காரியங்கள் நடைபெறுகின்றன. இதை மேலும் விஸ்தாரமாக, தேசிய, சர்வதேசிய அடிப்படையில் விரிவுபடுத்த வேண்டும் என்றே நான் கேட்கிறேன்.[4]

நிலைக்கும் தத்துவம்

என்னுடைய தர்மகர்த்தாத் தத்துவம் வெறும் தற்காலிக ஏற்பாடல்ல. நிச்சயமாக அது ஏமாற்றுதலுமல்ல. மற்ற தத்துவங்களெல்லாம் போனபின்பு கூட இது நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதற்குத் தத்துவ சாஸ்திர அங்கீகாரமும், மத அங்கீகாரமும் உண்டு. சொத்து வைத்திருப்பவர்கள் இத்தத்துவத்தின்படி நடக்கவில்லையென்பதற்காக இத்தத்துவம் பொய்யென்று ஆகிவிடாது. அது சொத்துள்ளவர்களுடைய பலவீனத்தைத் தான் காண்பிக்கும். வேறு எந்தத் தத்துவமும் அஹிம்சைக்கு உகந்ததாகாது. அஹிம்சை வழியில் தவறு செய்பவர் தன் தவற்றைத் திருத்திக் கொள்ளாவிட்டால், தன்னுடைய முடிவுக்குத் தானே கருவியாக இருக்கிறார். ஏனென்றால், ஒன்று, அஹிம்சா பூர்வமான ஒத்துழையாமை மூலம் அவர் தனது தவற்றை உணருமாறு செய்யவேண்டும். அல்லது, அவர் சமூகத்திலிருந்தே பூரணமாகத் துண்டிக்கப்பட்டு விடுவார்.[5]

தியாகத்தால் செல்வம்

'பொதுவாகப் பணக்காரர்கள் - சொல்லப்போனால் பெரும்பாலோர் - பணம் சேர்ப்பதில் வழியைப் பற்றி யோசிப்பதில்லை'யென்று ஒரு கருத்து நிலவுகிறது. இந்தக்

கருத்தை எவ்விதத் தயக்கமும் இன்றி நான் ஏற்றுக் கொள்கிறேன். அஹிம்சா முறையை அனுஷ்டிக்கும் போது ஒவ்வொருவருக்கும் ஒரு நம்பிக்கை வேண்டும். அதாவது, எவ்வளவு தான் ஒருவன் சீர்கெட்டுப் போயிருந்தாலும் திறமையுடனும் மனிதாபிமானத்துடனும் முயற்சி செய்தால் அவனைத் திருத்திவிட முடியும் என்று நம்ப வேண்டும். மனிதர்களிடமுள்ள நல்லெண்ணத்தை நாம் தூண்டி, அதற்குரிய பிரதிபலன் கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்த இலாபத்திற்காக மட்டுமல்லாமல், எல்லோருடைய நன்மைக்காகவும் தங்கள் திறமையையெல்லாம் பயன் படுத்துவதானால், அது சமூக சேமத்துக்கு உதவக்கூடிய தாகத் தானே இருக்கும்? ஒவ்வொருவரும் தன்னுடைய திறமையைப் பூரணமாகப் பயன்படுத்த முடியாத அல்லது இதில் அவர்களைச் சக்தியற்றவர்களாக ஆக்கிவிடக்கூடிய ஒரு 'செத்த' சமத்துவத்தை நாம் விரும்பவில்லை. இப்படிப்பட்ட சமூகம் இறுதியில் அழிந்தே போய்விடும். ஆகையால், எல்லோருடைய நலனுக்கும் ஆன முறையில் பணக்காரர்கள் கோடிக்கணக்காகச் (நாணயமான முறையில்தான்) சம்பாதிக்கலாம் என்று நான் கூறிய ஆலோசனை முற்றிலும் சரியானது தான் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். *''தேன த்யக்தேன புஞ்ஜீதா:' என்பது அசாதாரணமான ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மந்திரம். தற்போது ஒவ்வொருவரும் தனக்காகவே வாழ்கிறார்கள். தனது அண்டை அயலாருக்கு என்ன நேருகிறது என்பதைப் பற்றிய அக்கறை இல்லாது வாழ்கிறார்கள். அதற்குப் பதிலாக, மனிதவர்க்கத்தில் புதுவாழ்க்கை முறையை உருவாக்க இம்மந்திரமே எல்லோருடைய நலனுக்காகவும் ஒரு நிச்சயமான வழியாகும்.[6]

* *'எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணம் செய்து, உங்கள் பங்கை மாத்திரம் அனுபவியுங்கள்'.* *- ஈச உபநிடதம்.*

அத்தியாயம் 10

சுதேசி

சுதேசி என்றால் என்ன?

தூரத்தில் உள்ளவைகளைக் காட்டிலும் நமது அண்டையில் உள்ளவைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நம்மை ஒரு வரையறைப்படுத்தும் உணர்ச்சி இருக்கிறதே அதுதான் சுதேசி உணர்ச்சியாகும். இந்த விளக்கத்தின்படி நாம் வாழ வேண்டுமானால், மதத்தைப் பொறுத்தவரை, என்னுடைய புராதன மதத்தையே அனுஷ்டிக்க வேண்டும். அதுதான் என் பக்கத்தில் உள்ள மதச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்வதாகும். என் மதத்தில் குறைபாடுகள் இருப்பதாக நான் கண்டால், அதனுடைய குறைகளைப் போக்குவதன் மூலம், அதற்கு நான் சேவை செய்ய வேண்டும். அரசியல் துறையில், நாம் உள்நாட்டு ஸ்தாபன அமைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவைகளிடம் குறைபாடுகள் இருப்பதானால், அக்குறைகளை நீக்குவதன் மூலம் அவைகளுக்குச் சேவை செய்ய வேண்டும். பொருளாதாரத் துறையில் என்னுடைய பக்கத்தில் வாழ்பவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை மட்டுமே நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் பூரணத்துவம் அடையாமல் இருந்தால், அவைகளிடம் திறமைக் குறைவு தென்பட்டால், அவைகள் திறமையுடன் பூரணத்துவம் பெறுமாறு செய்து அத்தொழில்களுக்குச் சேவை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட சுதேசியை நடைமுறை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால், அது பொற்காலத்துக்கு வழிகோலும் ...

மதத்தில் சுதேச உணர்ச்சி

நான் மேலே விவரித்துள்ளவாறு, சுதேசியின் மூன்று பிரிவுகளையும் பற்றி நாம் சுருக்கமாக ஆராய்வோம். இந்து மதமானது; பழமையைப் பேணும் மதமாகிவிட்டது. ஆகவே அது ஒரு பலம் பொருந்திய சக்தியாக இருக்கிறது. இந்த மதம் இவ்வாறு பலம் பொருந்திய சக்தியாக இருப்பதன்

காரணம், அதற்கு அடிப்படையாக உள்ள சுதேசி உணர்ச்சியே ஆகும். அது மிகமிகச் சகிப்புத்தன்மையுள்ள மதம் - ஏனெனில் மதம் மாற்றுவதில் நம்பிக்கையிலாத மதம்; கடந்த காலத்தில் அது எவ்வாறு விரிவடைந்ததோ அதைப் போன்று விரிவடைந்து செல்லும் சக்தி வாய்ந்த மதம். அது தான் புத்த மதத்தைத் துரத்திவிட்டது என்று சிலர் தவறாக எண்ணுகிறார்கள். அது புத்தமதத்தைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அதில் வெற்றியும் கண்டிருக்கிறது. சுதேசி உணர்ச்சியின் காரணமாக, ஒரு இந்து தன்னுடைய மதத்தை மாற்றிக் கொள்ள மறுக்கிறான். அதுதான் சிறந்தது என்று அவன் கருதுவது அதற்கு அவ்வளவு காரணமல்ல; ஆனால் அதில் சீர்திருத்தங்கள் செய்து நிறைவு செய்து கொள்ளலாம் என்பதை அவன் அறிந்திருக்கிறான். நான் இந்து மதத்தைப் பற்றிச் சொன்னது மற்றப் பெரிய மதங்களின் விஷயத்திலும் உண்மையாகும். ஆனால் இந்து மதத்தின் விஷயத்தில் இது விசேஷ உண்மையாக இருக்கிறது. இங்குதான் நான் சொல்லவந்த முக்கியமான அம்சம் வருகிறது. நான் கூறுவது உண்மையானால், இந்தியாவில் உள்ள பெரிய கிறிஸ்தவ மதச் சபைகள் இதைக் காட்டிலும் சிறந்த முறையில் கிறிஸ்தவ மதப் பண்பிற்காகச் சேவை செய்யலாமல்லவா? அவர்கள் ஏற்கனவே செய்த காரியங்களுக்காக, செய்து கொண்டிருக்கும் காரியங்களுக்காக இந்தியா எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே, இக்கிறிஸ்து மதச் சபைகள் தங்களுடைய அன்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டும், மத மாற்றக் கொள்கையைக் கைவிட்டும் கிறிஸ்தவ மதத்திற்குச் சேவை செய்யலாம் அல்லவா?

சாதி அமைப்பு

இவ்வாறு சுதேசி உணர்ச்சியை நீடித்துக்கொண்டே சென்று, உள்நாட்டு ஸ்தாபனங்களை நான் கவனிக்கும்போது, கிராமப் பஞ்சாயத்துக்கள் என்னைக் கவருகின்றன. இந்தியா உண்மையில் ஒரு குடியரசு நாடு. அது ஏன் குடியரசு நாடாக இருக்கிறது என்பதற்கு, அது குடியரசு நாடு என்பதுதான் காரணம். இதற்கு எதிராக வந்த ஒவ்வொரு அதிர்ச்சியிலிருந்தும் அது உயிர் தப்பியிருக்கிறது. சிற்றரசர்களும், பேரரசர்களும் - அவர்கள் இந்தியாவைச்

சேர்ந்தவர்களாயினும் சரி, வெளிநாட்டைச் சேர்ந்தவர்களாயினும் சரி - வரி வசூலித்ததில் தவிர வேறு எவ்வகையிலும் இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவில்லை. குடிமக்களும் அரசனுக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்துவிட்டு, மற்றப் பெரும்பாலான காரியங்களில் தங்கள் விருப்பப்படி நடந்து கொண்டு வந்திருக்கின்றனர். சாதிகள் என்ற விரிவான அமைப்பானது, சமுதாயத்தின் மத சம்பந்தமான தேவைகளை மட்டுமல்லாமல், அதனுடைய அரசியல் தேவைகளையும் நிறைவு செய்தது. சாதி முறைகளின் மூலம் கிராமவாசிகள் தங்களுடைய உள்விவகாரங்களை நிருவகித்துக் கொண்டார்கள். மன்னர்களின் அடக்குமுறை ஏதாவது இருந்தாலும் அதன் மூலமே நிவாரணங் கண்டார்கள். சாதி முறையின் மூலம் இவ்வாறு ஆச்சரியமான முறையில் ஒரு அமைப்பை ஸ்தாபித்த ஒரு தேசத்திற்கு ஸ்தாபனத்தைக் கட்டியமைக்கும் சக்தி இல்லையென்று எவ்வாறு கூறமுடியும்? ஹரித்துவாரில் நடைபெறும் கும்பமேளாவை ஒருவன் பார்த்தால் போதும்... கடுமையான பெரு முயற்சி எதுவும் இல்லாமல் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட யாத்திரீகர்களுக்குச் சிறந்த வெற்றிகரமான முறையில் உணவையும் மற்ற தேவைகளையும் அளிக்க முடிந்த ஒரு அமைப்பு எவ்வளவு திறமை வாய்ந்ததாக இருக்க முடியும் என்பது புலனாகும். ஆயினும் பொதுவாக நமக்கு ஒரு அமைப்பை ஸ்தாபிக்கும் திறமையில்லையென்று கூறுவது இன்று ஒரு நாகரிகம் போலாகிவிட்டது. புதுப் பரம்பரையில் வளர்க்கப்பட்டவர்கள் விஷயத்தில் இது ஓரளவு உண்மை என்பதையும் நான் தயக்கத்துடன் கூறிக்கொள்கிறேன்.

தாய்மொழிக் கல்வி

நாமே நம்மை அழித்துக் கொள்ளும் அளவுக்கு சுதேசி உணர்ச்சியிலிருந்து விலகிச் சென்றிருக்கிறோம். இதன் காரணமாக, பயங்கரமான ஒரு முட்டுக்கட்டையால் அவதிப் படுகிறோம். படித்தவர்களாகிய நாம் ஒரு வெளிநாட்டு மொழி மூலமாகவே நம்முடைய கல்வியைக் கற்றுக்கொண் டிருக்கிறோம். இதனால் தான் பொதுமக்கள் மத்தியில் எந்த

விதமான பிரதிபலனையும் ஏற்படுத்த முடியவில்லை. பொது மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்க நாம் விரும்புகிறோம்; ஆனால் அது நம்மால் முடிவதில்லை. ஆங்கில அதிகாரிகளை அவர்கள் எந்த அளவு அங்கீகரிக்கிறார்களோ அந்த அளவு தான் நம்மையும் அங்கீகரிக்கிறார்கள். அவர்கள் இந்த இருசாராரிடமுமே தங்களுடைய உள்ளங்களைத் திறந்து காட்டுவதில்லை. அவர்களுடைய அபிலாஷைகளும் நம்முடைய அபிலாஷைகளும் ஒன்றுபடுவதில்லை. இதனால் ஒரு இடைவெளி ஏற்பட்டு வருகிறது. ஆகவே நீங்கள் பார்ப்பது, ஒரு அமைப்பை ஸ்தாபிப்பதற்கான திறமைக் குறைவைக் காண்பிக்கவில்லை. அதற்கு மாறாக, பிரதிநிதிகளுக்கும் அவர்கள் யாருடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்களோ அந்த மக்களுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதையே காண்பிக்கிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் நாம் நமது தாய்மொழி மூலம் கல்வி கற்றுக் கொண்டிருப்போ மானால், நமக்கு மூத்தவர்களும் நமது வேலையாட்களும், நமது அண்டை அயலில் உள்ளவர்களும் நமது அறிவினால் பலன் அடைந்திருப்பார்கள். இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் போலவே, ஒரு 'போசு'ம் ஒரு'ரே'யும் கண்டுபிடித்தவையும் ஒவ்வொரு வீட்டுச்சொத்துமாகி யிருக்கும். தற்போதுள்ள நிலைமையிலோ பொதுமக்களைப் பொறுத்தவரை வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுடைய கண்டுபிடிப்புகளும் இவைகளும் ஒன்றாகத் தான் இருக்கின்றன. கல்வியின் எல்லாத்துறைகளுமே தாய்மொழி மூலம் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தால், அவை நம்முடைய வளத்தை வியப்பளிக்கக் கூடிய முறையில் உயர்த்தியிருக்கும் என்பதை நான் தைரியமாகக் கூற முடியும். கிராமத்துப்புரவு முதலிய பிரச்னைகளெல்லாம் நீண்ட காலத்திற்கு முன்பே தீர்க்கப்பட்டிருக்கும். கிராமப் பஞ்சாயத்துக்கள் விசேஷ ஜீவனுள்ள ஒரு சக்தியாகியிருக்கும். அநேகமாக, இந்தியாவும் தனது தேவைகளுக்கு ஏற்ற ஒரு சுயாட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கும். அதனுடைய புனித பூமியில் திட்டமிட்டுப் படுகொலைகள் நடக்கக்கூடிய கேவலமான காட்சியைப் பார்க்க நேரிடாது. இப்போதும் இதைச் சீர்திருத்தி அமைக்கக் காலம் பிந்திப் போய்விடவில்லை.

சுதேசியிலிருந்து விலகக்கூடாது

இப்போது சுதேசியின் கடைசிப் பிரிவுக்கு வருவோம். பொருளாதார வாழ்விலும், தொழில் துறையிலும் சுதேசியிலிருந்து நாம் விலகிச் சென்று அழிவை ஏற்படுத்திக் கொண்டோம். இன்று பொதுமக்களை வருத்தும் கொடிய வறுமைக்குப் பெரும்பாலும் இதுவே காரணம். இந்தியாவுக்கு வெளியேயிருந்து ஒரு பொருள்கூட இறக்குமதியாகாமல் இருந்தால், இன்று இந்தியா பாலும் தேனும் பெருக்கெடுத்தோடும் ஒரு நாடாக இருந்திருக்கும். ஆனால் அது தான் இல்லை. நாமும் பேராசையுள்ளவர்களாய் இருந்தோம். இங்கிலாந்தும் பேராசையுள்ள நாடாக இருந்தது. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே இருந்த தொடர்பு தவறான அடிப்படை கொண்டதாக இருந்தது என்பது தெளிவு. ஆனால் ஏதோ தவறுதலாக இந்தியாவில் இங்கிலாந்து இருக்கவில்லை. இந்திய மக்களுடைய நலனுக்காக இந்த நாட்டை ஆளுவதே தன்னுடைய கொள்கை என்று அது அறிவித்திருக்கிறது. இது உண்மையாக இருக்குமானால், இலங்காஷயர் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். சுதேசித் தத்துவம் ஒரு சரியான தத்துவமாக இருக்குமானால், இலங்காஷயர் தனக்கு எந்தவிதமான தீங்கும் ஏற்படுத்திக் கொள்ளாமல் - முதலில் வேண்டுமானால் அதற்கு ஒரு அதிர்ச்சி ஏற்படலாம் - ஒதுங்கிக் கொள்ளலாம். சுதேசியென்பது பழிக்குப்பழி வாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு பகிஷ்கார நடவடிக்கையல்ல என்பதுதான் எனது கருத்து. எல்லோரும் பின்பற்ற வேண்டிய ஒரு மதக்கோட்பாடு அது என்று நான் கருதுகிறேன். நான் ஒரு பொருளாதார நிபுணன் அல்ல; ஆனாலும் இங்கிலாந்து எளிதாக சுயதேவைப் பூர்த்தியுள்ள ஒரு நாடாக முடியுமென்றும், அது தனக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் தானே உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்றும் எடுத்துக்கூறும் சில ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்திருக்கிறேன். இது முற்றிலும் கேலிக் கூத்தான ஒரு சித்தாந்தமாக இருக்கலாம். உலகிலேயே மிகப் பெரிய இறக்குமதியாளர்களில் இங்கிலாந்து ஒன்றாக இருப்பது ஒன்றே ஒருவேளை இந்தச் சித்தாந்தம் பொய் என்பதற்குச் சிறந்த சான்றாக இருக்கும். ஆனால் இந்தியா

தனக்காக வாழ் முடிவதற்குள், இலங்காஷயருக்காகவோ அல்லது வேறு எந்த நாட்டிற்காகவோ வாழ முடியாது. அது தன்னுடைய தேவைகளுக்காகத் தனது எல்லைக்குள்ளேயே ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்; உற்பத்தி செய்து கொள்ள நாம் உதவவேண்டும். அப்போதுதான் அது தனக்குத்தானே சுயதேவைப் பூர்த்தி செய்து கொண்டு வாழமுடியும். பைத்தியக்காரத்தனமான, அழிவை ஏற்படுத்தக்கூடிய போட்டியென்னும் புயலில் அது சிக்கிக் கொள்ள வேண்டியதில்லை. அப்படிச் சிக்கிக்கொள்ள வேண்டிய அவசியமும் கிடையாது. இந்தப் போட்டிதான் உடன்பிறப்பாளர் கொலைக்கும், பொறாமைக்கும் மற்றும் பல தீங்குகளுக்கும் வழிகோலுகிறது. ஆனால் இந்நாட்டில் உள்ள பெரிய கோடீஸ்வரர்கள், உலகப்போட்டியில் இறங்குவதை யார் தடுக்க முடியும்? நிச்சயமாகச் சட்டத்தின் மூலம் இதைச் செய்யமுடியாது. பொதுமக்கள் கருத்தின் சக்தியும் சரியான கல்வி முறையும் இத்துறையில் பெருமளவு சாதிக்க முடியும். கைத்தறித் தொழிலானது சாகும் நிலையில் இருக்கிறது. என்னுடைய சுற்றுப் பிரயாணங்களின் போது எத்தனை நெசவாளர்களைப் பார்க்க முடியுமோ அத்தனை பேர்களைப் பார்க்க விசேஷ கவனமெடுத்துக் கொண்டேன். ஒரு காலத்தில் சீருடனும், சிறப்புடனும் நடந்து கொண்டுவந்த இந்தத் தொழிலை அவர்கள் எவ்வாறு இழந்து விட்டார்கள். எத்தனைக் குடும்பங்கள் இத்தொழிலிருந்து ஓய்வு பெற்று விட்டன என்பதைக் கண்டபோது எனக்குத் துக்கம் தாளவில்லை.

அபத்தம் நிறைந்த நாடா?

நாம் சுதேசித் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதாக இருந்தால், நம்முடைய தேவைகளை அளிக்கக்கூடிய அண்டை அயலார்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இது உங்களுடைய கடமையும், என்னுடைய கடமையுமாகும். அவர்களுக்கு எவ்வாறு இதைச் செய்வது என்று தெரியா விட்டால் நாம் கற்பிக்க வேண்டும். நல்ல வேலை தேடக்கூடிய நிலையில் உள்ள அண்டை அயலார்கள் இருக்கிறார்கள் என்ற கருத்திலேயே இதைக் கூறுகிறேன். அப்போது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும் கிட்டத்தட்ட சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய, தனக்கு

வேண்டியவைகளையெல்லாம் தன்னுள் அடக்கிய, ஒன்றாக இருக்கும். அதில் உற்பத்தியாக முடியாத அவசியமான பொருட்களைத்தான் பிற கிராமங்களுடன் அது பரிமாறிக் கொள்ளும். இது அபத்தமாகத் தோன்றலாம். நல்லது, இந்தியாவே ஒரு அபத்தம் நிறைந்த நாடு தானே? அன்பு நிறைந்த முகமதியன் ஒருவன், குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீர் கொடுக்க முன்வரும்போது, அதை மறுத்துவிட்டு, ஒருவன் தனது தொண்டை வறட்சியாக வைத்துக்கொண் டிருப்பது அபத்தந்தான். ஆயினும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் தண்ணீர்த் தாகத்தினால் சாவார்களே தவிர, ஒரு முகமதியன் வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடிக்க மாட்டார்கள். இந்தியாவில் உற்பத்தியான துணிகளையே உடுத்தவேண்டும் என்றும், இந்தியாவில் விளைவிக்கப்பட்ட உணவையே உண்ண வேண்டும் என்றும் தங்கள் மதம் கூறுகிறது என்று இதே அபத்தமான மனிதர்கள் உணர்ந்து விட்டார்களானால், அவர்களே மற்ற துணிகளை உடுக்கவும் பிற உணவை உண்ணவும் மறுத்து விட முடியும்.

பாதுகாப்பு வரி

உயர்ந்த மக்கள் வழியையே சாதாரண மக்கள் பின்பற்றுவார்கள்; பகவத் கீதையில் உள்ள ஒரு ஸ்லோகம் சுருக்கமாக இவ்வாறு பொருள்படும். சமுதாயத்தில் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள சுதேசிப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்களானால் - அது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு எவ்வளவுதான் வசதிக்குறைவாக இருந்தாலும் - தீங்கை அகற்றிவிடும். வாழ்க்கையின் எந்தத் துறையிலும் சட்டத்தின் மூலம் குறுக்கிடுவதை நான் வெறுக்கிறேன். ரொம்ப உயர்ந்த நிலையில் கூட, சட்டம் சற்றுக் குறைந்த தீங்கு பயக்கக் கூடியதாக இருக்குமே தவிர வேறொன்றும் இல்லை. ஆனால் நானே வெளிநாட்டுச் சரக்குகளுக்குப் பாதுகாப்பு வரி விதிப்பதைச் சகித்துக் கொள்வேன்; இல்லை வரவேற்பேன். இல்லை, இல்லை அதற்காக வாதாடுவேன். பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய நேட்டால், மற்றொரு பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதியான மௌரீஷியசிலிருந்து வந்து சர்க்கரைக்கு வரி விதித்ததன் மூலம் தன்னுடைய சர்க்கரைக்குப் பாதுகாப்பு அளித்தது. ஆனால் இங்கிலாந்தானது இந்தியாவின் மீது சுதந்திர வணிகத்தை

வலுக்கட்டாயமாகப் புகுத்தி இந்தியாவுக்குத் தீங்கு செய்து விட்டது; இது இங்கிலாந்துக்கு உணவாக இருந்திருக்கலாம். ஆனால் நம்முடைய நாட்டுக்கு விஷம்.

சுதேசி ஒரு மதக் கோட்பாடு

எப்படியும் இந்தியா தனது பொருளாதார வாழ்வில் சுதேசியத்தை ஏற்க முடியாது என்று அடிக்கடி வலியுறுத்தப் பட்டு வருகிறது. இந்த ஆட்சேபணையைக் கூறுபவர்கள், சுதேசியை ஒரு வாழ்க்கை நியதியாகக் கருதுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை இது வெறும் தேசிய முயற்சி தான் - தன்னல மறுப்புச் செய்ய வேண்டியிருந்தால் மேற் கொள்ளப்படத் தகாத முயற்சி. ஆனால் நான் இங்கு விவரித்துள்ளபடி, சுதேசி என்பது ஒரு சமயக் கட்டுப்பாடு. தனிப்பட்டவர்களுக்கு உடல் அளவில் எவ்வளவு வசதிக் குறைவை ஏற்படுத்தினாலும் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடு. இதனுடைய மந்திர சக்தியின் கீழ், இந்தியாவில் உற்பத்தியாகாதது என்பதற்காக ஒரு குண்டுசி அல்லது குத்தூசி கிடைக்காமல் இருப்பது எவ்வித அதிர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டியதில்லை. ஒரு சுதேசியவாதி, தான் இன்று அவசியமெனக் கருதும் நூற்றுக்கணக்கான பொருட்கள் இல்லாமலே வாழக் கற்றுக் கொள்வான். ஆனால், நடைமுறைச் சாத்தியமற்றவைகளையெல்லாம் கூறி, தமது மனத்தில் சுதேசிக்கு இடமளிக்காமல் செய்பவர்கள், விடாமுயற்சியின் மூலம் அடைய வேண்டிய ஒரு இலட்சியமே சுதேசி என்பதை மறந்து விடுகிறார்கள். ஒரு சில குறிப்பிட்ட பொருட்களுக்காக மட்டும் சுதேசியைக் கடைப்பிடிப்பது என்று வரையறுத்துக் கொண்டாலும் - அதாவது இந்தியாவில் வாங்க முடியாத பொருட்களைத் தற்காலிகமாக உபயோகப்படுத்திக் கொள்வது என்று வைத்துக் கொண்டாலும் - நாம் சுதேசி என்னும் இலட்சியத்தை நோக்கிச் சென்றவர்களேயாவோம்.

நோக்கமும் வாழ்க்கையும்

சுதேசிக்கு எதிராகக் கூறப்படும் மற்றொரு ஆட்சே பணையை நான் இங்கு ஆராய வேண்டியிருக்கிறது. சுதேசி மிகவும் சுயநலமான ஒரு தத்துவம், நாகரிகமான தார்மிகக் கோட்பாட்டில் அதற்கு எந்தவித இடமுமேயில்லை என்று சில எதிர்ப்பாளர்கள் கூறுகிறார்கள். இவர்கள் கருத்துப்படி,

சுதேசியத்தை அனுஷ்டிப்பது காட்டுமிராண்டித்தனத்துக்குத் திரும்பிச் செல்வதாகும். இந்தக் கருத்தை விரிவாக ஆராய்வதில் நான் இறங்க முடியாது. ஆனால் சுதேசியம் தான் அடக்கத்துக்கும் அன்புக்கும் ஏற்ற ஒரே தத்துவமாகும். என்னுடைய குடும்பத்துக்கே என்னால் சேவை செய்ய முடியாதபோது இந்தியா முழுவதற்கும் சேவை செய்ய முன்வருவது அதிகப் பிரசங்கித்தனமாகும். இதைக்காட்டிலும் என்னுடைய குடும்பத்தின் விஷயத்தில் எனது முயற்சியை யெல்லாம் ஒருமுகப்படுத்தி, அவைகளின் மூலம் இந்தத் தேசம் முழுவதற்குமே, ஏன், மனித வர்க்கம் முழுவதற்குமே சேவை செய்வதாகக் கருதிக் கொள்வது சிறந்ததாக இருக்கும். இதுதான் அடக்கம், இதுதான் அன்பு. நமது செயலின் தன்மை நம்முடைய நோக்கத்தைப் பொறுத்தே இருக்கிறது. மற்றவர்களுக்கு என்ன கஷ்டங்களை விளைவிக்கிறேன் என்பதை எண்ணிப் பார்க்காது, நான் எனது குடும்பத்துக்குப் பாடுபடலாம். உதாரணமாக, மக்களிடமிருந்து பணம் பிடுங்குவதற்கு இடமளிக்கக் கூடிய ஒரு வேலையை நான் ஏற்கலாம். அதன் மூலம் நான் பணக்காரனாகிக் கொள்கிறேன். குடும்பத்தின் நியாய விரோதமான பல கோரிக்கைகளைப் பூர்த்தி செய்கிறேன். ஆனால், உண்மையில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நான் குடும்பத்துக்கும் சேவை செய்தவனாக மாட்டேன். நாட்டிற்கும் சேவை செய்தவனாகமாட்டேன். இதற்குப் பதிலாக, கடவுள் எனக்குக் காலையும் கையையும் கொடுத்திருப்பது என்னுடைய வாழ்வுக்கும் என்னை நம்பியிருப்பவர்களுடைய வாழ்வுக்கும் உழைப்பதற்காகவேயென்பதை நான் ஒப்புக் கொள்ளலாம். அப்போது, என்னுடைய வாழ்க்கையையும் நான் நேரடியாக யாருடன் தொடர்பு கொள்ள முடியுமோ அவர்களுடைய வாழ்க்கையையும் உடனடியாக எளிமைப் படுத்தியவனாவேன். பிறருக்குத் தீங்கு செய்யாமல் எனது குடும்பத்திற்கு உழைத்தவனாவேன். ஒவ்வொருவரும் இந்த வாழ்க்கை வழியைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது ஒரு இலட்சிய சமுதாயம் தானாகவே உருவாகிவிடும். ஆனால் எல்லோருமே ஒரே சமயத்தில் இந்த நிலையை அடைந்து விடமாட்டார்கள். இந்த உண்மையை உணர்ந்து அதை நடைமுறைக்குக் கொண்டு வர முயலும் நம்மைப் போன்றவர்கள், இந்த மகிழ்ச்சிகரமான நாளை முன்கூட்டியே தெளிவாகத் தெரிந்து அது வருவதை

வேகப்படுத்தலாம். இந்த வாழ்க்கைத் திட்டத்தின்படி, வேறு நாடுகளையெல்லாம் ஒதுக்கி விட்டு இந்தியாவுக்கு மட்டும் தான் பாடுபடுவதாகத் தோன்றும். ஆனால் இதன்மூலம் நான் வேறு எந்த நாட்டிற்கும் தீங்கு செய்யவில்லை. என்னுடைய தேசபக்தி தனித்து ஒதுங்கியதாகவும் அதே சமயம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியதாகவும் இருக்கும். மிகுந்த அடக்க மனோபாவத்துடன் எனது கவனத்தை என்னுடைய தாய் நாட்டுடன் வரையறுத்து நிறுத்திக் கொள்கிறேன். அந்த அளவில், அது தனித்து ஒதுங்கிய பிரிவுணர்ச்சியுள்ளது. ஆனால், இதற்காக நான் செய்யும் சேவை போட்டி மனோபாவமோ விரோத உணர்ச்சியோ கொண்டதாக இராததால், பிறருடைய நலனையும் தன்னுள் அடக்கியதாக இருக்கிறது. ''அண்டை வீட்டுக்காரர் சொத்துக்குத் தீங்குண்டாகுமாறு உன் சொத்தைப் பயன்படுத்தாதே'' என்பது ஒரு சட்ட சம்பந்தமான முதுமொழி மட்டுமல்ல, அது ஒரு மாபெரும் வாழ்க்கைத் தத்துவமுமாகும். அஹிம்சை அல்லது அன்பை நல்ல முறையில் அனுஷ்டிப்பதற்கான ஒரு திறவுகோல் அது.[1]

குரோதம் கூடாது

மற்ற நல்ல காரியங்களைப் போலவே சுதேசியையும் போலி வணக்கத்திற்குரிய பொருளாக்கிவிட்டால், அதற்குச் சமாதி கட்டியதாகிவிடும். நாம் எச்சரிக்கையாக இருந்து தவிர்க்க வேண்டிய அபாயம் இது. வெளிநாட்டுப் பொருட்கள் என்பதற்காக மட்டும் அவைகளை ஏற்க மறுப்பதும், ஒரு நாடு எந்தப் பொருட்களின் உற்பத்திக்குத் தகுதியற்றதாக இருக்கிறதோ அந்தப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவதும் அறிவீனமாகி விடும்; சுதேசி உணர்ச்சிக்கும் இது விரோதமானதாகும். உண்மையான சுதேசி பக்தன் ஒரு வெளிநாட்டான் மீது எந்த விதமான குரோத உணர்ச்சியும் கொள்ளமாட்டான். பூமியில் யார்மீதும் அவனுக்கு விரோத எண்ணம் இருக்காது. சுதேசி என்பது வெறுப்புணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பண்பல்ல. பரிசுத்தமான அஹிம்சையை அதாவது, அன்பை மூலமாகக் கொண்ட சுயநலமற்ற சேவைத் தத்துவமே அது.[2]

அத்தியாயம் 11

சுயதேவைப் பூர்த்தியும் கூட்டுறவும்

கூட்டுறவும் இயந்திரமும்

நான் மனதில் கற்பனை செய்துள்ள சமுதாய அமைப்புக்கு அடிப்படையானவை சத்தியமும் அஹிம்சையும் ஆகும். நாம் சமூகத்திற்கு ஒரு சுமையாக இருக்கக் கூடாதென்பது நம்முடைய முதற்கடமையாகும். அதாவது நாம், நம்மையே சார்ந்தவர்களாய் இருக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்துடன் பாாத்தால், சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்வதே ஒருவகைச் சேவைதான். நாம் சுயதேவைப் பூர்த்தியுள்ளவர்களானபின், நம்முடைய ஓய்வு நேரத்தைப் பிறருடைய சேவைக்காகப் பயன்படுத்துவோம். எல்லோருமே சுயதேவைப் பூர்த்தியுள்ளவர்களாய் விட்டால், யாரும் கஷ்டவான்களாக இருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமையில், யாருக்கும் சேவை செய்ய வேண்டுமென்ற அவசியமே இல்லை. ஆனால் நாம் இன்னும் அந்தக் கட்டத்தை அடையவில்லை. ஆகையால், சமூகத்தொண்டைப் பற்றி எண்ண வேண்டியதிருக்கிறது. நாம் சுயதேவைப் பூர்த்தி அடைவதில் பூரணவெற்றி அடைந்துவிட்ட பின்புகூட, மனிதன் ஒரு சமூகப்பிராணியாக இருப்பதால், ஏதாவது ஒருவகையில் சேவையை ஏற்கத்தான் வேண்டிவரும். அதாவது மனிதன் எந்த அளவு தன்னைச் சார்ந்திருக்கிறானோ அந்த அளவு பிறரையும் சார்ந்திருக்கிறான். சமூகத்தை நல்ல ஒழுங்கான முறையில் வைத்திருப்பதற்கு ஒருவரையொருவர் சார்ந்திருப்பது அவசியமாகும்போது அது சார்பு ஆகாது, கூட்டுறவு ஆகிவிடும். கூட்டுறவில் இனிமை இருக்கிறது. கூட்டுறவாக வாழ்பவர்களில் யாரும் பலமானவர்கள் அல்லது பலவீனமானவர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒவ்வொருவரும் பிறருக்குச் சமம்தான். பிறரைச் சார்ந்திருப்பதில், நிராதரவான நிலை இருக்கிறது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்குத் தன்னைச் சார்ந்தவர்களோ அந்த அளவு பிறரையும் சார்ந்தவர்களாவர். அதில் என்னுடையது அல்லது உங்களுடையது என்ற பேச்சுக்கே இடமில்லை. எல்லோருமே கூட்டுறவாளர்கள்

தான். அதே போன்று ஒரு சமூகத்தை எடுத்துக்கொண்டால், அல்லது ஒரு தேசத்தையோ அல்லது மனித வர்க்கம் முழுவதையுமோ எடுத்துக் கொண்டால், எல்லோருமே கூட்டுறவாளர்கள்தான். இப்படிப்பட்ட ‘‘கூட்டுறவுச் சித்திரம்’’ ஒன்றை நாம் கற்பனை செய்ய முடியுமானால், ஜீவனற்ற இயந்திரத்திலிருந்து நாம் எந்தவிதமான ஆதரவையும் பெறவேண்டிய அவசியம் இல்லையென்பதைக் காணலாம். இயந்திரத்தினால் மிக அதிகமான உதவியைப் பெறுவதற்குப் பதிலாக, மிகக் குறைந்த பயனைப் பெறுவோம். இதில் தான் சமூகத்தின் உண்மையான பாதுகாப்பும் பந்தோபஸ்தும் இருக்கின்றன.[1]

கிராம சுயதேவைப் பூர்த்தி

உணவு, உடை மற்ற அவசியமான பொருட்கள் ஆகியவைகளின் விஷயத்தில் கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தி உள்ளவைகளாக இருக்கவேண்டும். சுயதேவைப் பூர்த்தியைப்பற்றி என்னுடைய கருத்து இதுதான். ஆனால் இதில்கூட அளவுக்கு மீறி நாம் போய்விட முடியும். ஆகையால் என்னுடைய கருத்தை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். சுயதேவைப் பூர்த்தியென்பது குறுகிய நோக்கமல்ல. சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்வதென்பது, முற்றிலும் நமக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் நாமே வைத்துக் கொள்வது என்பதாகாது. எந்தவிதமான சூழ்நிலையிலும் நமக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் நாம் உற்பத்தி செய்து கொள்ள முடியாது. ஆகவே, நம்முடைய இலட்சியம் பூரண சுயதேவைப் பூர்த்தியென்றாலும், நம்மால் கிராமத்தில் உற்பத்தி செய்து கொள்ள முடியாத பொருட்களை வெளியிலிருந்து பெற வேண்டும். உற்பத்தி செய்ய முடிந்த பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்தால்தான் அவைகளைக் கொடுத்து, நம்மால் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை வாங்க முடியும்.[2]

சிறந்த இலட்சியம்

எவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் சொந்தமாக நிலம் வைத்துக்கொண்டு, தனக்கு வேண்டிய உணவுத் தானியங்

களைப் பயிரிட்டு, சமைத்து, உண்பது சிறந்த இலட்சியமோ அதேபோன்று, ஒவ்வொரு குடும்பமும் தனக்கு வேண்டிய பருத்தியை விளைவித்து நூற்று, நெய்து, உடுத்திக் கொள்வதும் சிறந்த இலட்சியமாகும்.[3]

சுயபலம்

உணவைப் பொறுத்தவரை, இந்தியாவில் நிறையச் செழிப்பான நிலம் இருக்கிறது. போதுமான தண்ணீர் இருக்கிறது; மனித சக்திக்குப் பஞ்சம் இல்லை... பொது மக்களுக்கு, சுய பலத்தை நம்பியிருக்குமாறு நாம் பயிற்றுவிக்க வேண்டும். தங்களுடைய சொந்த பலத்திலேயே நிற்கவேண்டும் என்பதை அவர்கள் ஒருமுறை உணர்ந்து விட்டார்களென்றால், சூழ்நிலையே புத்துயிர் பெற்றுவிடும்.

கதர் சுய உற்பத்தி

இந்தியாவுக்கு எவ்வளவு பருத்தி தேவையோ அதைக் காட்டிலும் அதிகமாக இங்கு உற்பத்தியாகிறது. மக்கள் தாங்களே நூற்று, ஆடையை நெய்து கொள்ளவேண்டும். தங்களுக்கு வேண்டிய கதரைத் தாங்களே உற்பத்திசெய்து கொள்ளவேண்டும். ஒரு தடவை தங்களுக்கு வேண்டிய உணவையும் உடையையும் உற்பத்தி செய்து கொள்ளத் தொடங்கிவிட்டார்களென்றால், அது அவர்கள் கண்ணோட்டம் முழுவதையுமே மாற்றிவிடும்.[4]

சுய தேவைப் பூர்த்தி

சுயதேவைப் பூர்த்தியென்பது ஒரு பெரிய சொல்..... கிராமங்கள் தங்களுடைய ஜீவாதாரமான தேவைகளுக்கு சுயதேவைப் பூர்த்தியுள்ளவைகளாக வேண்டும். திருடர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோரிடமிருந்து வரும் வெளி அபாயம், நோயாலும் கருத்து வேறுபாடுகளாலும் ஏற்படும் உள் குழப்பம் ஆகியவற்றிலிருந்து தங்களைப் பாது காப்பதற்குத் தங்களையே நம்பியிருக்க வேண்டும். இவ்வாறு இருக்காவிட்டால், கிராமங்கள் அழிந்து போய்விடும். ஆகையால் 'சுய தேவைப்பூர்த்தி'யென்பதற்குப் பருத்தி பயிரிடுதல், உணவுப் பயிர்களும், கால்நடைகளுக்கு

வேண்டிய தீனியும் உற்பத்தி செய்தல் என்பது பொருளாகும். இதைச் செய்தாலொழிய பட்டினிதான் மீதமாக இருக்கும். தன்னைத் தானே சார்ந்திருத்தல் என்பதற்குக் கூட்டு வாழ்க்கை அமைப்பு என்பது பொருளாகும் - அதாவது, கிராமங்களில் உள்ள அறிவாளிகளைக் கொண்டு மத்தியஸ்தம் செய்வதன் மூலம் உள்கருத்து வேறுபாடுகளை அகற்றுதல் - கிராமத் துப்புரவு, சாதாரணமாக வரக்கூடிய நோய்கள் ஆகியவைகளின் விஷயத்தில் கூட்டாகக் கவனம் செலுத்துவதன் மூலம் சுத்தத்தைப் பாதுகாத்தல், இவைகளுக்குத் தனிப்பட்டவர்கள் முயற்சி போதாது. திருடர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோர் ஜம்பம் தங்கள் கிராமங்களில் பலிக்காது என்பதைக் கூட்டு முயற்சியின் மூலம் நிருபித்து, கிராமவாசிகள் தங்கள் பலத்தை உணரச் செய்ய வேண்டும். கூட்டாக அஹிம்சையைக் கடைப்பிடிப் பதன் மூலம் இதைச் சிறந்த முறையில் செய்யமுடியும். ஆனால் அஹிம்சைக்கானவழி ஊழியர்களுக்குத் தெளிவாகா விட்டால், இம்சையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய அவர்கள் தயங்கமாட்டார்கள்.[5]

கதரில் தன்னிறைவு

நூல் நூற்பவர்களே பருத்தியை விளைவிக்க வேண்டும் அல்லது குறைந்தது ஒவ்வொரு கிராமமுமாவது விளைவிக்க வேண்டும். இல்லையேல், கதரில் சுயதேவைப் பூர்த்தியென்பது ஒரு போதும் வெற்றியடையாது. கதரில் சுய தேவைப் பூர்த்தி பெறுவதற்காகவாவது, பருத்தி விளைச் சலைப் பரவல் மயமாக்க வேண்டும் என்றாகிறது. இதற்கு, நாம் எந்தெந்த கிராமங்களில் சேவை செய்கிறோமோ அந்த கிராமங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் நமக்குத் தேவையாக இருக்கும். ஏனென்றால் நூல் நூற்பவர் ஒவ்வொருவருக்குமே பருத்தி பயிரிடுவதற்கு எவ்வளவு குறைச்சலாகவும் நிலம் இருக்கும் என்று சொல்ல முடியாது. கதரில் சுயதேவைப் பூர்த்தி என்ற தத்துவத்தை ஒப்புக் கொண்டால்தான், அகில இந்திய நூல் நூற்போர் சங்கம் இருப்பது நியாயமாகும். ஆனால் இத்துறையில் குறிப்பிடத் தக்க அளவு அது இன்னும் முயலவில்லை.[6]

அடுத்த வீட்டுச் சேவை

கடவுளுடைய படைப்பில் எது நமக்கு மிகவும் அருகில் இருக்கிறதோ, எது நமக்கு மிக நன்றாகத் தெரியுமோ அதற்குத்தான் நாம் சேவை செய்யமுடியும். நமது அடுத்த வீட்டுக்காரரிடமிருந்து நாம் நமது சேவையைத் தொடங்க முடியும். நம்முடைய முற்றம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது; அடுத்த வீட்டுக்காரர் முற்றமும் சுத்தமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய குடும்பத்திற்குச் சேவை செய்ய வேண்டியதுதான். ஆனால் குடும்பத்திற்காகக் கிராமத்தின் நலனைப் பலியிடக்கூடாது. கிராமத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதிலேயே நம் சொந்த கௌரவமும் அடங்கி இருக்கிறது. ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் நமக்குள்ள வரம்பைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் வாழக்கூடிய உலகத்தைப்பற்றி எந்த அளவு அறிந்து கொண்டிருக்கிறோமோ அந்த அளவுக்குத் தான் நமது சேவைத்திறன் அமைகிறது. இதை இன்னும் எளிய முறையில் விளக்குகிறேன். நம்முடைய அண்டை வீட்டுக்காரர் நலனை, நம்முடைய முற்றத்திலுள்ள குப்பையை அடுத்த வீட்டு முற்றத்தில் கொட்டுவது மனித வர்க்கத்துக்கு நாம் செய்யும் சேவையாக இராது. அதற்குப் பதிலாகக் கேடாகத்தான் இருக்கும். நம்முடைய பக்கத்து வீட்டுக்காரருக்குச் சேவை செய்வதிலிருந்து நாம் நமது சேவையைத் தொடங்குவோம்.[7]

கூட்டுறவு விவசாயம்

விவசாயத்தைப் பொறுத்தவரை, நிலம் மேலும் துண்டு படாமல் தடுக்க நாம் நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். கூட்டுறவு விவசாயத்தில் ஈடுபடுமாறு மக்களை ஊக்குவிக்க வேண்டும்.[8]

இதை மட்டும் செய்தால்?

ஒரு கிராமமானது கூட்டுறவாகத் தனக்கு வேண்டிய பஞ்சை விளைவிக்கலாம். இதை மட்டும் நாம் செய்தால், விலையிலோ உழைப்பிலோ ஸ்தலத்தில் உற்பத்தியான துணியைக் காட்டிலும் இறக்குமதியான எந்தத் துணியும்

சிறந்ததாய் இருக்க முடியாது என்பதை எளிதாகக் காணலாம். நமது சக்தியை மிகவும் பாதுகாக்க இது உதவுகிறது.[9]

பிறர் சார்பு

மிருகங்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்துவது அவனுடைய சமூக இயல்புதான். இதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சுதந்திரமாக இருப்பது மனிதனுடைய உரிமை. ஆனால் அதே அளவு பிறரைச் சார்ந்திருக்க வேண்டியதும் அவனுடைய கடமையாகிறது. 'நான் யாரையும் சார மாட்டேன். என்னை மட்டுமே சார்ந்தவனாக இருப்பேன்' என்று இறுமாப்புள்ள ஒரு மனிதன்தான் சொல்ல முடியும்:... துணித் தேவையைப் பொறுத்தவரை, கிராமவாசிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு நாம் செய்ய முடியாமற் போகலாம். ஆனால், கூட்டாக ஒவ்வொரு கிராமமும் சுயதேவைப் பூர்த்தி உள்ளதாகுமாறு சீரமைப்பது சாத்தியமே.[10]

கூட்டுறவு முயற்சி

கடந்த ஆண்டில் சென்னையில் நான் ஒரு கூட்டுறவு சங்கத்தில் பேசினேன். அப்போது, கையால் நூல் நூற்பதைப் பரப்புவதன் மூலம் உலகம் இதுவரை அறிந்த மிகப் பெரிய கூட்டுறவு சங்கத்தை நிறுவ முயற்சி செய்து கொண்டிருப்பதாகச் சொன்னேன். இவ்வாறு நான் உரிமை கொண்டாடியது நியாயமற்றதாகாது. வேண்டுமானால், அது எனது ஆசையை வெளிக்காண்பிப்பதாக இருக்கலாம். ஆனால் அதே சமயம் இது பொய்யல்ல. ஏனென்றால், கையால் நூல் நூற்பதில் கோடிக்கணக்கான மக்கள் ஒத்துழைத்துத்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால், அதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது.

நூற்புக் கேந்திரம் கூட்டுறவு நிலையம்

ஒரு நல்ல கேந்திரம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப் பார்ப்போம். மத்திய தலைமை அலுவலகத்தில் நூற்போருக்கு வேண்டிய பருத்தி சேகரிக்கப்படுகிறது. பல்வேறு கேந்திரங்களிலும் இந்தப் பருத்தி அறைக்கப்படு

கிறது. இதன்பின் அது பட்டை போடுபவர்களிடம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதைப் பட்டைகளாகக் கொடுக்கிறார்கள். இப்போது இப்பஞ்சு நூற்போரிடம் அளிப்பதற்குத் தகுதியானதாகிவிட்டது. நூற்பவர்களோ தங்களுடைய நூலை ஒவ்வொரு வாரமும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, புதுப்பட்டைகளையும் கூலியையும் பெற்றுச் செல்கிறார்கள். இவ்வாறு கிடைத்த நூல், நெய்வதற்காக நெசவாளர்களிடம் அளிக்கப்படுகிறது. அவர்கள் நூலை வாங்கிக் கொண்டு போய் நெய்து கதராகக் கொடுக்கிறார்கள். இந்தக் கதரை இப்போது நெசவாளர்களுக்கு - பொது மக்களுக்கு விற்க வேண்டும். இவ்வாறாக, மத்திய அலுவலகமானது ஓயாது மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. சாதி, மத, நிற வேறுபாடில்லாமல் ஏராளமான மக்களுடன் உயிரோட்டமுள்ள தொடர்பு கொள்ள வேண்டும். ஏனென்றால் இலாபத் தொகையைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பது கேந்திரத்துக்கு இல்லை. தன்னைப் பற்றிய சுயநலம் இல்லை. மிகவும் ஏழையான மக்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புத் தான் அதற்கு இருக்கிறது. இந்தக் கேந்திரம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், ஒவ்வொரு வகையிலும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். இந்தப் பரந்த ஸ்தாபனத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அதற்கும் உள்ள தொடர்பு, முற்றிலும் ஆன்மிகமானது அல்லது தார்மிகமானது. ஆகையால் ஒரு நூற்புக்கேந்திரம் என்பது ஒரு கூட்டுறவு சங்கம், பருத்தி அறைப்பவர்கள், பட்டை போடுபவர்கள், நூற்பவர்கள், நெசவாளர்கள், கொள்முதல் செய்பவர்கள் ஆகிய எல்லோருமே அதன் அங்கத்தினர்கள். இவர்கள் எல்லோரும் ஒரு பொதுப்பிணைப்போடு, பரஸ்பர நல்லெண்ணத்தோடு, சேவா உணர்ச்சியோடு சேர்ந்திருக்கிறார்கள்.[11]

நாணயம் முக்கியம்

கூட்டுறவு முயற்சி வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால், அங்கத்தினர்கள் நாணயமானவர்களாக இருக்க வேண்டும். கூட்டுறவின் சிறப்பை அறிந்திருக்க வேண்டும். கூட்டுறவு முயற்சிக்குத் திட்டவட்டமான

முற்போக்கான இலட்சியம் இருக்கவேண்டும். மிக அதிகமான வட்டி வாங்கி, அதிகப் பணம் சேர்க்க வேண்டும் என்பதற்காகக் கூட்டுறவாகப் பணம் வைத்திருப்பது தவறான இலட்சியமாகும். ஆனால் கூட்டுறவு விவசாயப் பண்ணையோ அல்லது பால் பண்ணையோ அமைப்பது நிச்சயமாக நல்ல இலட்சியம்தான். அது தேசத்தின் நலனை வளர்க்கும். இப்படிப்பட்ட உதாரணங்களைப் பெருக்கிக்கொண்டே போகலாம். இந்த எண்ணற்ற சங்கங்கள் எதற்காகத்தான் இருக்கின்றன என்பது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. இந்தச் சங்கங்களில் தங்கள் வேலையை அறிந்த நாணயமான இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்களா? நிருவாகம் செய்பவர்கள் நாணயமில்லாமல் இருக்கும்போதும் இலட்சியம் நல்ல இலட்சியமாக இல்லாத போதும் இப்படிப்பட்ட இயக்கங்கள் படுமோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன; அடிக்கடி ஏற்படுத்தியிருக்கின்றன என்றும் சொல்லலாம்.[12]

அத்தியாயம் 12

பஞ்சாயத்து ராஜ்யம்

விடுதலைக்கு முந்திய பஞ்சாயத்துகள்

முறை அவசியம்

'பஞ்சாயத்து' என்ற சொல்லுக்குப் புராதனச் சிறப்பு உண்டு. அது ஒரு நல்ல சொல். கிராமத்தாரால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஐந்து பேரைக் கொண்ட ஒரு சபை என்பது தான் அந்தச் சொல்லின் பொருள். இந்தியாவில் இருந்த எண்ணற்ற கிராமக் குடியரசுகளில் நடந்து வந்த ஆட்சி முறையையே அது குறிக்கிறது. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கமே, ஈவிரக்கமின்றி, ஒரு தம்பிடியும் விடாது வரி வசூல் செய்தது. அந்த முறையால் இந்தக் கிராமக் குடியரசுகளைக் கிட்டத்தட்ட அழித்துவிட்டது. இந்த வரி வசூல் முறையால் ஏற்பட்ட அதிர்ச்சியை அக்குடியரசுகளால் தாங்க முடியவில்லை. இந்தப் பழைய முறைக்கு உயிர் அளிக்க இப்போது காங்கிரஸ்காரர்கள் முயலுகின்றனர்; பரிபக்குவமற்ற ஒரு முயற்சி செய்கின்றனர்; கிராமத்திலுள்ள வயதான பெரியவர்களுக்கு சிவில், கிரிமினல் அதிகாரங்கள் வழங்க முயலுகின்றனர். 1921-இல் முதன் முதலாக இந்த முயற்சி செய்யப்பட்டது. அது தோல்வியடைந்தது. மீண்டும் அது முயற்சி செய்யப்படுகிறது. விஞ்ஞான ரீதியாக இல்லா விட்டாலும் முறையாகவும் கண்ணியமாகவும் செய்யப்படா விட்டால் அது தோல்வியடைவது உறுதி.

கிரிமினல் அதிகாரமா?

''உத்திரப்பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களில் கற்பழித்தல் போன்ற கிரிமினல் வழக்குகளைக் கூடப் பஞ்சாயத்துகள் (என்று கூறப்படுபவை) விசாரித்துத் தீர்ப்புக் கூறியுள்ளன'' என்று நான் நைனிடால் சென்றிருந்தபோது என்னிடம் கூறப்பட்டது. நீதி அளிக்கும் வகை முறை தெரியாத பஞ்சாயத்துகளாலும் பாரபட்சமான பஞ்சாயத்து களாலும் கூறப்பட்ட சில விநோதமான தீர்ப்புக்களையும் நான் கேள்விப்பட்டேன். இது உண்மையானால் மிகவும்

மோசமாகும். ஒழுங்கற்ற முறையில் செயல்படும் பஞ்சாயத்து கள் தங்கள் சுமையைத் தாங்கவோ தாங்க முடியாது நொறுங்கி விடும். ஆகையால் கிராம ஊழியர்கள் பின்பற்றுவதற்குக் கீழ்க்கண்ட விதிமுறைகளைக் கூறுகிறேன்:-

1. அந்தந்த மாகாண காங்கிரஸ் குழு எழுத்து மூலமாக அனுமதி அளிக்காமல் எந்தப் பஞ்சாயத்தும் அமைக்கப்படக் கூடாது.

2. தண்டோராப் போட்டு, பொதுக்கூட்டம் கூட்டியே பஞ்சாயத்து முதலில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

3. இந்தப் பஞ்சாயத்தைத் தாலுகாக் குழு சிபாரிசு செய்ய வேண்டும்.

4. இப்படிப்பட்ட பஞ்சாயத்துகளுக்குக் கிரிமினல் வழக்குகளில் தீர்ப்புக் கூறும் அதிகாரம் இருக்கக்கூடாது.

5. சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தங்கள் வழக்கைப் பஞ்சாயத்துக்கு அனுப்புவதாக இருந்தால், சிவில் வழக்குகளை அது விசாரிக்கலாம்.

6. எந்தப் பிரச்னையையும் பஞ்சாயத்து அனுப்புமாறு யாரும் நிர்ப்பந்திக்கப்படக்கூடாது.

7. எந்தப் பஞ்சாயத்துக்கும் அபராதம் விதிக்க அதிகாரம் இருக்கக் கூடாது. அதற்கு தார்மிக பலம் இருக்க வேண்டும். அது கண்டிப்பான நடுநிலை வாய்ந்ததாய் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் மனமுவந்து அதன் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாய் இருக்க வேண்டும். இந்த மூன்றுமே, சிவில் வழக்குகளில் தீர்ப்புக் கூறுவதற்கு அது பெற்ற அதிகாரமாய் இருக்க வேண்டும்.

8. தற்போதைக்கு சமூக பகிஷ்காரமோ அல்லது வேறு எந்தவிதமான பகிஷ்காரமோ இருக்கக் கூடாது.

9. ஒவ்வொரு பஞ்சாயத்தும் கீழ்க்கண்ட காரியங் களைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் :-

(அ) கிராமத்தில் உள்ள பையன்கள், பெண்களின் கல்வி

(ஆ) கிராமத் துப்புரவு

(இ) அதன் வைத்திய வசதி

(ஈ) கிராமக் கிணறுகள் அல்லது குளங்களை மராமத்துச் செய்தல்; அவைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்.

(உ) தீண்டப்படாதவர்களின் முன்னேற்றத்தையும், அவர்களுடைய அன்றாடத் தேவைகளையும் கவனித்தல்.

10. ஒரு பஞ்சாயத்து, தான் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாதங்களுக்குள் மேலே 9-ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றத் தவறி விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அல்லது, கிராம மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்றத் தவறிவிடுகிறது. அல்லது வேறு ஏதாவது குற்றம் செய்து கண்டனத்திற்கு உள்ளாகிறது. இவையெல்லாம் மாகாண காங்கிரஸ் குழு முன் நிரூபணமாகிவிட்டால், அந்தப் பஞ்சாயத்தை மாகாண காங்கிரஸ் குழு கலைத்துவிடலாம். அதன் இடத்தில் வேறொரு பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

உண்மையான அதிகாரம்

ஆரம்ப காலத்தில் அபராதம் விதிக்கவோ சமூக பகிஷ்காரம் செய்யவோ பஞ்சாயத்துக்களுக்குக் கட்டாயம் அனுமதி இருக்கக் கூடாது. கிராமங்களில், சமூக பகிஷ்காரம் செய்வதென்பது, கல்வி அறிவில்லாமலும் பகுத்துப் பார்க்கும் திறன் இல்லாமலும் உள்ளவர்கள் கையில், ஒரு அபாயமான ஆயுதமாகிவிடுகிறது. அபராதம் விதிக்கும் அதிகாரம் கூடக் குறும்புத்தனத்துக்கு இடம் அளித்துவிடும். பஞ்சாயத்துகளை அமைக்கும் நோக்கமே பாழ்பட்டுப் போகுமாறு செய்துவிடும். உண்மையிலேயே ஒரு பஞ்சாயத்து மக்கள் ஆதரவு பெற்றதாய் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். 9-வது பிரிவில் கூறப்பட்டுள்ளது போன்ற ஆக்க வேலைகளைச் செய்து, தனது ஆதரவை மேலும் பெருக்கிக் கொள்கிறது. இப்படிப்பட்ட பஞ்சாயத்தானது, தனது தார்மிக செல்வாக்கின் மூலமே தனது தீர்ப்பும் அதிகாரமும் மக்களால் மதிக்கப்படுமாறு செய்ய முடியும். யாருக்கும் கிடைக்கக்கூடிய எந்த அதிகாரத்தைக் காட்டிலும் இதுதான் உயர்ந்தது என்பதில் சந்தேகமே இல்லை. இந்த அதிகாரத்தை யாரும் பிடுங்கிக் கொள்ள முடியாது.[1]

சுதந்திர இந்தியாவில் பஞ்சாயத்துகள்

சுதந்திரம் என்பது என்ன?

சுதந்திரம் என்பது இந்திய மக்களின் சுதந்திரமாக இருக்க வேண்டும். இப்போது அவர்கள் மீது ஆட்சி நடத்துபவர்களுடைய சுதந்திரமாக இருக்கக் கூடாது. ஆட்சி செலுத்துபவர்கள், அவர்களுடைய காலடியின் கீழ் உள்ள மக்களை நம்பி இருப்பவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் பொது ஜன சேவகர்களாகவும், மக்களுடைய விருப்பப்படி நடக்கத் தயாராய் இருப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

கிராமத்துக்குப் பயிற்சி

சுதந்திரம் கீழேயிருந்து தான் ஆரம்பிக்கவேண்டும். ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாகவோ அல்லது முழு அதிகாரம் உள்ள பஞ்சாயத்தாகவோ இருக்கும். ஆகையால் ஒவ்வொரு கிராமமும் சுயதேவைப் பூர்த்தி உள்ளதாக இருக்க வேண்டும் என்றாகிறது. உலகம் முழுவதுமே எதிர்த்து வந்தாலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு அது தனது காரியங்களைத் தானே நிருவகித்துக் கொள்ள வேண்டும் என்றாகிறது. வெளியிலிருந்து வரும் எந்தத் தாக்குதலையும் எதிர்த்துச் சமாளிக்க அதற்குப் பயிற்சி அளிக்கப்படும். அதில் அழியவும் தயாராயிருக்குமாறு பயிற்றுவிக்கப்படும். ஆகவே, இறுதியாகப் பார்த்தால் தனிப்பட்ட ஒவ்வொரு மனிதரையுமே ஒரு 'யூனிட்'டாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால், அண்டையில் உள்ளவர்களுடைய உதவியையோ அல்லது உலகத்தின் உதவியையோ சாராமல் வாழ்வது என்பது அர்த்தமல்ல. அவர்கள் மனமுவந்து அளிக்கும் உதவியை ஏற்றுக் கொள்வதில்லையென்றும் பொருள் அல்ல. நல்லுறவு கொண்ட சக்திகள் சுதந்திரமாகவும் விருப்பத்தின் பேரிலும் இணைந்து வேலை செய்வதாக இருக்கும். இப்படிப்பட்ட ஒரு சமூகமானது உயர்ந்த பண்பாடு உள்ளதாக நிச்சயம் அமையும். இதில் ஒவ்வொரு ஆண் அல்லது பெண்ணுக்கும் தனக்கு வேண்டியது என்னவென்பது தெரியும். அதுமட்டுமல்ல, தனக்குச் சமத்துவமாக உழைக்கும்

மற்றொருவருக்கு எது கிடைக்கவில்லையோ அதை யாரும் விரும்பக் கூடாது என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

சத்தியம், அஹிம்சை

இந்தச் சமூகமானது, சத்தியத்தையும் அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்டு இயங்க வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கையில்லாமல் சத்தியமும் அஹிம்சையும் சாத்தியமில்லை என்பது எனது கருத்து. கடவுள் என்பது என்ன? தானே இயங்கக் கூடிய, எல்லாம் அறிந்த ஒரு ஜீவ சக்தியையே கடவுள் என்று நான் குறிப்பிடுகிறேன். உலகில் நாம் அறிந்த சக்திகளையெல்லாம் தன்னுள் அடக்கிய ஒரு சக்தி இது. ஆனால் இந்தச் சக்தி வேறு எதையும் சார்ந்திருப்பதில்லை. மற்ற சக்திகள் எல்லாம் அழிந்த பின்பும், அல்லது செயலற்றுப் போய்விட்ட பின்பும், இந்தச் சக்தி மட்டும் இருந்து கொண்டேயிருக்கும். எங்கும் நிறைந்த இந்த ஜீவ சக்தியில் நம்பிக்கை கொள்ளாது, நான் உயிர் வாழ்வதில் பொருளே இருக்க முடியாது.

கூட்டு வாழ்க்கை

எண்ணற்ற கிராமங்கள் கொண்ட இந்த அமைப்பிலே எப்போதும் விரிவடைந்து கொண்டு போகும் பல தொகுதிகள் இருக்கும். ஆனால், இவை ஒன்றின் மீது ஒன்று குதிரை ஏறிக் கொண்டிருக்கமாட்டா. வாழ்க்கையென்பது கீழே குறுகி மேலே விரிந்து செல்லும் கோபுரமாக இராது. அதற்குப் பதிலாக அது ஒரு விசாலமான சமுத்திரத்தைப் போன்ற வட்டமாக இருக்கும். இந்த வட்டத்தின் மையம் தனிப்பட்ட மனிதன் தான். கிராமத்துக்காக அழியவும் அவன் தயாராய் இருப்பான். கிராமமோ பல கிராமங்கள் கொண்ட ஒரு தொகுதிக்காக அழியத் தயாராய் இருக்கும். இறுதியில் எல்லாமே, தனிப்பட்டவர்கள் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து நடத்தும் ஒன்றுபட்ட வாழ்க்கையாக இருக்கும். இவர்கள் தற்பெருமை கொண்டு ஒருவரையொருவர் ஆக்கிரமிக்கும் எண்ணம் உடையவர்களாய் இருக்கமாட்டார்கள். எப்போதும் அடக்கமாக இருந்து, அந்த விசாலமான சமூகத்தின் பெருமையைப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

சாத்தியமா?

ஆகையால், வளையம் வளையமாகக் கிராமத் தொகுப்புகளைக் கொண்ட இவ்விதச் சமுதாய அமைப்பில் கடைசி வளையமானது உள்ளேயிருக்கும் பகுதியை நசுக்க எண்ணாது, அதற்குப் பதிலாக உள்ளேயிருக்கும் பகுதிகளுக் கெல்லாம் தன் பலத்தைக் கொடுத்து, அவைகளிடமிருந்து தான் பலம் பெற்றுக் கொள்ளும். 'இவைகள் எல்லாம் வெறுங்கற்பனை; சிந்தனைக்கு உரியவையல்ல' என்று சிலர் என்மீது குறை கூறலாம். யூக்லிட் வர்ணித்துள்ள இலக்கணப்படி ஒரு புள்ளியை யாரும் வரைய முடியாது. ஆனாலும் அதற்கு என்றும் அழியாத ஒரு முக்கியத்துவம் உண்டு. அதைப் போலவே இனிமேல் வரும் மனித வர்க்கத்துக்கு, எனது இந்த விளக்கமும் தனி முக்கியத்துவம் உள்ளதாகும். இந்தச் சித்திரம் சாத்தியமானது. அதைப் பூரணமாக ஒரு போதும் அடைய முடியாது. என்றாலும் இந்தியா அதற்காக வாழட்டும். நமது இலட்சியம் என்னவென்பதை நாம் சரியாக வகுத்து அதைப்பற்றித் தெளிவான கருத்துக் கொண்டிருக்க வேண்டும். அதை நாம் நெருங்குவதற்கு முன், இது அவசியம். இந்தியாவில் என்றாவது ஒருநாள் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக விளங்கினால், என்னுடைய கருத்து நிரூபணமாகி விட்டதாக நான் சொல்வேன். கடையன் எனப்படுபவனும் உயர்ந்தவர் களுக்குச் சமமாக இருப்பான். அதாவது, முதல் கடைசி என்று யாரும் இருக்க மாட்டார்கள்.

அசைக்க முடியாது

எனது இலட்சிய சமுதாயத்தைப்பற்றிய இந்தச் சித்திரத்தில், ஒவ்வொரு மதத்துக்கும் சமத்துவமான முழுப் பங்கு இருக்கிறது. நாமெல்லோரும் ஒரு பெரிய விருட்சத்தின் இலைகளைப் போன்றவர்கள். வேர்கள் பூமியில் ஆழப் பதிந்துள்ளதால், அடிமரத்தை இலேசாக அசைத்துவிட முடியாது, எவ்வளவு பலம் வாய்ந்த புயலானாலும் அதை அசைக்க முடியாது.

பல இயந்திரங்கள் மனிதர் உழைப்பைப் போக்கக் கூடியவை. சிலருடைய கையில் அதிகாரத்தைக் குவித்துவிடக்

கூடியவை. அப்படிப்பட்ட இயந்திரங்களுக்கு இந்தச் சமுதாயத்தில் இடம் இல்லை. பண்பாடுள்ள மனித குடும்பத்தில் உழைப்புக்குத் தனி இடம் உண்டு. தனிப்பட்ட மனிதனுக்கு உதவக் கூடிய ஒவ்வொரு இயந்திரத்துக்கும் அதில் இடம் உண்டு. ஆனாலும் இந்த இயந்திரம் எதுவாக இருக்கக் கூடும் என்பதை இன்னும் நான் சிந்திக்கவில்லை. சிங்கர் நூற்பு இயந்திரத்தைப்பற்றி நான் யோசித்துப் பார்த்தேன். ஆனால் அது கூட இன்றியமையாததல்ல. எனது இலட்சிய சித்திரத்தைப் பூர்த்தி செய்ய அது எனக்கு அவசியம் இல்லை.[2]

என்ன செய்ய வேண்டும்?

பின் நாம் என்னதான் செய்ய வேண்டும்? நம்முடைய பஞ்சாயத்து ராஜ்யம், அதாவது உண்மையான ஜனநாயகம் என்ற கனவு நிறைவேற வேண்டுமே? இது நிறைவேற வேண்டுமென்றால், மிகத் தாழ்ந்த, கடை நிலையில் உள்ள இந்தியனையும் நாட்டில் உள்ள மிக உயர்ந்தவனுக்குச் சமமாக எண்ண வேண்டும். இந்தியாவையே ஆள்பவருக்குச் சமமாக எண்ணவேண்டும். எல்லோரும் பரிசுத்தமானவர் களே என்பதுதான் இதற்கு அடிப்படை. ஏற்கனவே பரிசுத்தமாக இல்லாவிட்டால் பரிசுத்தமாவார்கள் என்பது அடிப்படை. பரிசுத்தமும் விவேகமும் இணைந்து செல்ல வேண்டும். அப்போது ஒரு வகுப்புக்கும், மற்றொரு வகுப்புக்குமிடையே ஒருவன் வேறுபாடு காணமாட்டான். அரிஜனுக்கும், உயர்ந்த சாதிக்காரருக்குமிடையே வித்தியாசம் பாராட்டமாட்டான். ஒவ்வொருவரும், மற்ற எல்லோரையும் தனக்குச் சமத்துவமாகக் காண்பார்கள். அன்பு என்னும் வலைக்குள் இணைப்பார்கள். யாரும் பிறரைத் தீண்டத்தகாதவர் என்று எண்ணமாட்டார்கள். உழைக்கும் தொழிலாளியையும், பணக்கார முதலாளியை யும் நாம் சமத்துவமாகவே கருதுவோம். நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டு நாணயமாக வாழ்வதெப்படி என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருப்பார்கள். மூளையைக் கொண்டு உழைப்பதற்கும் உடலால் உழைப்பதற்குமிடையே வேறுபாடு பாராட்டமாட்டார்கள். இந்தப் பரிபூரண நிலையை நாம் விரைவாக அடைவதற்காக, நாமே தோட்டிகளாவோம்.

விவேகமுள்ளவன் அபினையோ, மதுவையோ மற்ற லாகிரி களையோ, ஒருபோதும் தொடமாட்டான். ஒவ்வொருவரும் சுதேசியை வாழ்க்கை நியதியாகக் கொள்வார்கள். தனது மனைவி தவிர மற்றப் பெண்களை - அவரவர் வயதிற்கு ஏற்பத் தனது தாயாகவும், சகோதரியாகவும், மகளாகவும் கொள்வான். உள்ளத்தில் காமவேட்கை கொள்ளமாட்டான். அவசியம் ஏற்படும்போது, உயிரைப் பலிகொடுக்கத் தயாராய் இருப்பான். மற்றொரு உயிரைப் பலிவாங்க ஒருபோதும் விரும்பான். அவன் ஒரு சீக்கியனாக இருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுடைய குருவின் ஆக்ஞைப்படி தன்னந்தனியாக இருந்து போரிட அவனுக்குத் தைரியம் இருக்கவேண்டும். அவர்களுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்ட ''ஒன்றே கால் இலட்சம்'' பேருக்கு எதிராக இருந்து, ஒரு அங்குலம்கூட விட்டுக் கொடுக்காது போராட அவனுக்கு தைரியம் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு பாரத புத்திரனுக்குத் தற்போது அவனுடைய கடமை என்னவென்பதைச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை அல்லவா?[3]

பஞ்சாயத்தின் கடமைகள்

அக்கால இந்தியா

சீனாவிலிருந்தும் மற்ற உலக நாடுகளிலிருந்தும் பல பெரிய மனிதர்கள் அக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார்கள். ஞானத்தைப் பெற்றுச் செல்லும் ஆவலுடன் இங்கு வந்தார்கள். இதற்காக, பிரயாணத்தில் ஏற்பட்ட எத்தனையோ இடைஞ்சல்களை அவர்கள் தாங்கிக் கொண்டார்கள். இந்தியாவில் அக்காலத்தில் திருட்டே இருந்ததில்லையென்று அவர்கள் கூறியிருக்கின்றனர். மக்கள் சத்தியவான்களாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் இருந்திருக்கின்றனர். வீட்டுக் கதவுகளுக்குப் பூட்டுப் போட்டுப் பூட்டவேண்டிய அவசியம் இருந்ததில்லை. தற்போது இருப்பதைப் போல் ஏராளமான சாதிப் பிரிவினைகளும் அக்காலத்தில் இருந்ததில்லை. ஆகவே அந்தச் சத்தியத்தையும் உழைப்பையும் மீண்டும் உயிர்ப்பிப்பது பஞ்சாயத்துகளின் கடமையாகும். தகராறுகளைத் தீர்க்க வேண்டுமானால் நீதிமன்றங்களுக்குச்

செல்லக் கூடாது என்பதைக் கிராமவாசிகளுக்குப் பஞ்சாயத்துக்கள் போதிக்க வேண்டும். எந்தவிதமான செலவும் இல்லாமல் விரைவாக நீதி கிடைக்க இது உதவும்; போலீசாரும், இராணுவமும் இல்லாமல் செய்யவும் உதவும்.

கால்நடைகள்

அப்புறம் கால்நடைகள் அபிவிருத்தியிலும் பஞ்சாயத்துகள் கவனம் செலுத்த வேண்டும். பால் உற்பத்தி படிப்படியாக அதிகரிக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். போதிய கவனம் இல்லாததால், நமது கால்நடைகள் இன்று நிலங்களுக்கு ஒரு சுமையாக இருக்கின்றன. பசு வதைக்காக முஸ்லிம்களைக் குறை சொல்வது முற்றிலும் அறியாமையாகும். சரியாகப் பசுக்களைக் கவனிக்காமல் அங்குலம் அங்குலமாகக் கொல்பவர்கள் இந்துக்களே. சித்திரவதை செய்து சிறிது சிறிதாகக் கொல்வதானது, மொத்தமாகக் கொன்று விடுவதைக் காட்டிலும் எவ்வளவோ கொடுமையாகும்.

கம்போஸ்ட் உரம்

கிராமத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதிலும் பஞ்சாயத்து கவனம் செலுத்த வேண்டும். நிலத்திற்கு நல்ல உரமிடுவதன் மூலம் இதைச் சாதிக்கமுடியும். கால்நடைகள், மனிதர்கள் மலஜலத்தைக் குப்பை கூளத்துடன் கலந்து சிறந்த உரமாக்கலாம். திருமதி மீராபென் முயற்சியின் பேரில் டில்லியில் அண்மையில் நடைபெற்ற கம்போஸ்ட் உரமாநாடு, இதை எடுத்துக் காண்பித்திருக்கிறது. இந்த உரம் நிலத்தின் வளத்தை அதிகரிக்கும். இதன் பின் கிராமமும், கிராம மக்களும் சுத்தமாக இருப்பதில் பஞ்சாயத்து கவனம் செலுத்த வேண்டும். கிராம மக்கள் உடலால் மட்டும் அல்லாமல் மனதிலும் சுத்தமானவர்களாய் இருக்கவேண்டும்.

திரைப்படக் கொட்டகை

திரைப்படக் கொட்டகை இருக்கக்கூடாது. மக்களுக்கு அறிவைப் புகட்டத் திரைப்படம் ஒரு நல்ல சாதனம் என்று

மக்கள் கூறுகிறார்கள். ஒரு காலத்தில் அவ்வாறு ஏற்படலாம். ஆனால் இப்போது திரைப்படங்களால் பெருந்தீமை ஏற்படுவதையே நான் காண்கிறேன். நமது நாட்டு விளையாட்டுகள் இருக்கின்றன. கிராமவாசிகள் மத்தியிலிருந்து போதை அளிக்கும் குடிகளையும், மருந்துகளையும் ஒழிக்க வேண்டும். உங்களுடைய கிராமத்தில் தீண்டாமையின் சாயல் ஏதாவது இருந்தால், அதைப் போக்குவீர்கள் என்று நம்புகிறேன். இந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும், பார்சிகளும், கிறிஸ்துவர் களும் உடன்பிறந்தவர்களைப் போல வாழ வேண்டும். நான் சொல்லியுள்ளதையெல்லாம் நீங்கள் நிறைவேற்றினீர் களானால், உங்களுக்கு உண்மைச் சுதந்திரம் வந்துவிட்டதாகும். உங்களுடைய மாதிரி கிராமத்தைப் பார்க்கவும் உற்சாகம் பெறவும் இந்தியாவெங்குமிருந்து மக்கள் வருவார்கள்.[4]

அத்தியாயம் 13

ஆதாரக் கல்வி

I

ஆதாரக்கல்வி என்றால் என்ன?

''ஆதாரக் கல்வியென்பது கைவேலை மூலம் கல்வி கற்றுக் கொடுத்தல்'', என்று பொதுவாகச் சொல்வார்கள். இது சரிதான். ஆனால் இது முழு உண்மையல்ல. இந்தப் புதுக்கல்வியின் அடிப்படை இருக்கிறதே, அது இன்னும் எவ்வளவோ ஆழமானது. மனித சமுதாயத்தின் ஒவ்வொரு வகையான நடவடிக்கையிலும் சத்தியத்தையும், அஹிம்சையையும் அனுஷ்டிப்பதிலேயே ஆதாரக் கல்வி இருக்கிறது - அது தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும் சரி, கூட்டு வாழ்க்கையாக இருந்தாலும் சரி, வாழ்க்கையிலுள்ள பல்வேறு நடவடிக்கைகளிலும் ஊடுருவியிருக்கும் சத்தியத்தையும், அன்பையும் பற்றிச் சிந்தித்தபோதுதான் கை வேலையின் மூலம் கல்வி கற்பிக்கலாம் என்ற சிந்தனை எழுந்தது. அன்பின் அடிப்படையாகப் பார்த்தால், உண்மையான கல்வியானது எல்லோருக்கும் எளிதாகக் கிடைப்பதாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமவாசிக்கும் அவருடைய அன்றாட வாழ்வில் உதவுவதாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட கல்வியைப் புத்தகங்களிலிருந்து பெறமுடியாது. புத்தகங்களையும் அது சார்ந்திராது. பல்வேறு மதப் பிரிவினைகளுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அது மதக் கல்வி என்று எப்படிச் சொல்ல முடியுமென்றால், அது உலகப் பொதுமதத்தைக் குறிக்கும். எந்த மதத்திலிருந்து பல்வேறு மதங்களும் தோன்றினவோ அவைகளைக் குறிக்கும். ஆகையால் வாழ்க்கை என்னும் புத்தகத்திலிருந்து அது கற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்குச் செலவு எதுவும் இல்லை. உலகத்திலுள்ள எந்தச் சக்தியாலும் பறிக்கப்பட முடியாதது இது.[1]

உடல், மனம், ஆன்மா

கை, கால், கண், காது, மூக்கு போன்ற அவயவங் களுக்குச் சரியான பயிற்சி அளிக்க வேண்டும். அதன் மூலம்

தான் உண்மையான அறிவு தரும் கல்வியைப் பெறமுடியும். இதை வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஒரு குழந்தையின் அவயவங்களையெல்லாம் புத்திசாலித்தன மான முறையில் பயன்படுத்த வேண்டும். அப்போது, அது அதனுடைய அறிவைச் சிறந்த முறையிலும் வேகமாகவும் வளர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும். அதே சமயம், மனதும் உடலும் ஒரே சமயத்தில் வளர்ச்சியடைய வேண்டும். அவைகளுக்கு ஏற்ப ஆன்மாவும் வளர்ச்சி பெற வேண்டும். இவ்வாறு இல்லாமல் மனம் மட்டும் வளர்ச்சியடைவதானது ஒரு பக்கம் அதிகமான சமநிலையில்லாத வளர்ச்சியாக முடியும். ஆன்மிகப் பயிற்சி என்று நான் கூறுவதன் மூலம் இதயத்தைப் பண்படுத்தும் கல்வியையே கூறுகிறேன். சரியான முறையில் எல்லாவகையிலும் மனம் வளர்ச்சி அடையவேண்டும். இதற்கு, குழந்தையின் உடல், ஆன்மா ஆகிய இரண்டும் எந்த அளவு பயிற்றுவிக்கப்படுகின்றனவோ அந்த அளவு மனமும் வளர்ச்சியடைய வேண்டும். இவையெல்லாமே பிரிக்க முடியாத ஒன்றேயாகும். இந்தத் தத்துவத்தின்படி இவைகளைத் தனித்தனியாக, ஒன்றின் சார்பு மற்றொன்றுக்கு இல்லாமல், அபிவிருத்தி செய்யலாம் என்பது முற்றிலும் தவறாகும்.

அறிவு சிதறும்

ஆகவே, உடல் மனம், ஆன்மா ஆகிய மூன்றுக்கும் இடையே சரியான, கட்டுக்கோப்பான இணைப்பும் ஒருமைப் பாடும் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், அதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் பட்டவர்த்தனமானவை, அவையெல்லாம் நம்மைச் சுற்றித்தான் இருக்கின்றன. ஆனால் நம்முடைய தற்போதைய தவறான தொடர்புகளால் அவைகளை அறிய முடிவதில்லை. நம்முடைய கிராம மக்களுடைய உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்து தங்களுடைய வயல்களில் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். ஆடுமாடுகளின் மத்தியிலேயே வாழ்கிறார்கள். அந்த ஆடுமாடுகள் எவ்வாறு

பாடுபடுகின்றனவோ அம்மாதிரி அதிகாலையிலிருந்து அந்திப்பொழுது வரை பாடுபடுகின்றனர். அவர்கள் வாழ்வதே அலுப்புத் தட்டிப்போன, யந்திரத்தைப் போன்று ஒரே வேலையைத் திருப்பித் திருப்பி ஓயாது செய்வதுதான். அறிவின் ஒரு சுடரொளியையோ அல்லது வாழ்க்கையின் உயர்ந்த நயங்களையோ அவர்கள் அறிய மாட்டார்கள். அவர்களுடைய மனதையும், ஆன்மாவையும் அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு எதுவும் இல்லாததால், அவர்கள் மிருகங்களின் நிலைக்குத் தாழ்ந்து விட்டனர். அவர்களைப் பொறுத்தவரை, வாழ்க்கை என்பது ஒரு வருத்தந்தரத்தக்க ஒரு குழப்பமயமாகும். இந்தச் சேற்றிலும் சகதியிலும் அவர்கள் எப்படியோ காலத்தைக் கடத்திச் செல்கின்றனர். அதற்கு மாறாக, இன்று நமது நகர்களில் உள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்றுக் கொடுக்கப்படுவது கல்வி என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இது உண்மையில் அறிவைச் சிதறச் செய்வதேயாகும். அங்கு அறிவுப் பயிற்சி என்பது உடல் உழைப்புக்குச் சம்பந்த மில்லாதது என்று கருதப்படுகிறது. ஆனால் உடலை நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருக்க ஏதாவதொரு செயற்கையான, ஜீவனில்லாத உடல் பயிற்சி முறையின் மூலம் இக்குறையைப் பூர்த்தி செய்து கொள்ள முயலுகின்றனர். இது வார்த்தைகளால் விவரிக்க முடியாத கேலிக்கூத்தாகும். இதனால் ஏற்படக்கூடிய முடிவும் படுபாதகமாய் இருக்கலாம். இந்த முறையில் உருவான ஒரு இளைஞனின் உடல், எந்த வகையிலும் ஒரு சாதாரண உழைப்பாளியின் உடலைப் போலத் தாக்குப்பிடிக்காது. மிகச் சிறிய உடல் பிரயாசையும் அவனுக்குத் தலைவலி அளித்துவிடும். வெயிலில் சிறிது நேரம் இருக்க நேரிட்டால் அவனுக்கு மயக்கம் வந்துவிடும். இவைகளுக்கெல்லாம் மேலான முக்கியமானதென்னவென்றால் இவைகளெல்லாம் முற்றிலும் 'இயற்கையாக'க் கருதப்படுகின்றனவென்பது தான். இதயத்தின் குணாம்சங்களைப் பொறுத்தவரை, அவை ஒன்று அழிந்து போய்விடுமாறு செய்யப்படுகின்றன அல்லது கட்டுப்பாடு இல்லாமல் விரும்பியபடியெல்லாம் வளர அனுமதிக்கப்படுகின்றன. முடிவோ, தார்மிக, ஆன்மிகச்

சீர்கேடுதான். வேடிக்கை என்னவென்றால், இது ஏதோ பாராட்டத்தக்க காரியம் என்று கருதப்படுகிறது!!

உள்ளப் பயிற்சி

இதற்குப் பதிலாக, உள்ளத்திற்கு ஆரம்பத்திலிருந்தே பயிற்சி அளிக்கப்படும் ஒரு குழந்தையின் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நூல் நூற்றல், தச்சு வேலை, விவசாயம் போன்ற ஏதாவதொரு உபயோகமான வேலை அவனுடைய கல்விக்காகக் கற்றுக் கொடுக்கப்படுகிறது என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அவன் செய்ய வேண்டியிருக்கும் வேலையைப்பற்றியும் பயன்படுத்த வேண்டிய கருவிகளின் உபயோகம், உற்பத்தி ஆகியவை பற்றியும் அவனுக்கு விரிவாகப் புகட்டப்படுகிறது. இதனால் அவனுடைய உடல் அழகானதாகவும் சுகாதாரமுள்ளதாகவும் ஆகும். அது மட்டுமல்லாது, அவன் நல்ல திறனுள்ள, அறிவும் பெறுவான். இது வெறும் ஏட்டுப்படிப்பாக மட்டும் இராது. வாழ்க்கை அனுபவத்தை உறுதியான அடிப்படையாகக் கொண்டதாகவிருக்கும். அன்றாட அனுபவத்தில் பயனுள்ளதென்று மெய்ப்பிக்கப்பட்ட தாக இருக்கும். அவனுடைய அறிவுக் கல்வியில், கணக்கும் இடம் பெறும். அவனுடைய தொழிலைப் புத்திசாலித்தனமான முறையிலும் திறமையான முறையிலும் செய்யக்கூடியவாறு பல்வேறு விஞ்ஞானங்கள் பற்றிய போதனையும் இடம்பெறும். இத்துடன் புத்துணர்ச்சி ஊட்டுவதற்கான முறையில் இலக்கியக் கல்வியும் அளித்து விட்டால், கல்வி முற்றிலும் சமநிலையான முழுக் கல்வியாகிவிடும். அதில் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றுக்குமே முழு இடம் கிடைக்கும். இந்த மூன்றுமே ஒரு இயற்கையான, ஒத்திசைந்த முழுமைப் பொருளாக வளர்ச்சியடையும். மனிதன் வெறும் அறிவு மட்டுமல்ல. அல்லது வெறும் உடலோ, இதயம் அல்லது ஆன்மாவோ அல்ல. முழு மனிதனாக ஒருவனை உருவாக்குவதற்கு இந்த மூன்றும் சரியான முறையிலும் இணக்கமான முறையிலும் ஒன்று சேரவேண்டும். இவை மூன்றும் இணைவது கல்வியின் உண்மையான பொருளாதார மாகவும் அமைகிறது.[2]

நகரவாசிகளும் கிராமமும்

கிராமவாசிகளின் தேவைகளுக்கு மிகவும் ஏற்ற ஒரு கல்வியைப் புகட்ட நாம் விரும்புகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நாம் வித்தியாபீடத்தைக் கிராமங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். நாம் அதை ஒரு பயிற்சிப் பள்ளியாக்க வேண்டும். கிராமவாசிகளின் தேவைகளைப்பற்றி ஆசிரியர்களுக்கு நடைமுறைப் பயிற்சி அளிக்கும் முறையில் அதைப் பயிற்சிப் பள்ளியாக்க வேண்டும். நகரில் உள்ள ஒரு பயிற்சிப் பள்ளியின் மூலம், கிராமங்களின் தேவை என்னவென்பதை ஆசிரியர்களுக்குப் புகட்ட முடியாது. கிராமங்களின் மீது அவர்கள் அக்கறை கொள்ளுமாறும் செய்யமுடியாது. கிராமங்களின் மீது நகரவாசிகள் அக்கறை கொள்ளுமாறு செய்வதும், அவைகளில் அவர்கள் வாழுமாறு செய்வதும் எளிதான வேலையல்ல. சேவா கிராமத்தில் இதை நான் நாள்தோறும் நிதரிசனமாகப் பார்க்கிறேன். ஒரு வருஷம் நாங்கள் சேவா கிராமத்தில் தங்கியிருந்தது எங்களை கிராமவாசிகளாக்கி யிருக்கிறதா? பொது நலனுக்காக நாங்களும் அவர்களுடன் ஒன்றுபட்டிருக்கிறோமா? ''ஆம்'' என்று நான் உறுதியாகச் சொல்ல முடியாது.

எழுத்தறிவு முதலில் அல்ல

ஆரம்பக் கல்விக்கு வருவோம். எழுதப்படிக்க முதலில் சொல்லிக் கொடுப்பதன் மூலம் கல்வி கற்றுக் கொடுப்பது அவர்களுடைய அறிவு வளர்ச்சியைப் பாதிக்கிறது. இது தான் என்னுடைய உறுதியான கருத்து. குழந்தைகள் வரலாறு, பூகோளம், மனக்கணக்கு, (உதாரணமாக) நூற்புக்கலை ஆகியவற்றின் முதற்படியான சில விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்புதான் நான் அவர்களுக்கு எழுத்தறிவைப் புகட்டுவேன். இந்த மூன்றின் மூலமாகவும் நான் அவர்களுடைய அறிவை அபிவிருத்தி செய்யவேண்டும். ''தக்ளியின் மூலமோ அல்லது இராட்டையின் மூலமோ எவ்வாறு அறிவை அபிவிருத்தி செய்ய முடியும்?'' என்று கேட்கலாம். உயிரின்றி, வெறும் இயந்திரத்தைப் போன்று கற்றுக் கொடுக்கப்படாவிட்டால், இதன் மூலம் பிரமிக்கத்தக்க

அளவு நாம் அபிவிருத்தி செய்யலாம். ஒவ்வொரு வேலையின் காரணத்தையும் நீங்கள் குழந்தைக்கு விளக்கினீர்களானால் - தக்ளி அல்லது இராட்டையில் உள்ள இயந்திர நுட்பத்தை எடுத்துச் சொன்னால் - பஞ்சின் வரலாற்றை எடுத்துக் கூறி நாகரிகத்துக்கும் அதற்கும் உள்ள தொடர்பு பற்றி அவனுக்குப் புகட்டினீர்களானால் - எங்கே பருத்தி விளைகிறதோ அந்த வயலுக்கு நீங்கள் அவனை அழைத்துச் சென்றீர்களானால் - அவன் நூற்கும் நூல் சுற்றின் எண்ணிக்கையை எவ்வாறு எண்ணுவது, நூல் ஒரே அளவு பருமனாக இருக்கிறதா என்பதையும் அதன் நம்பரையும் எவ்வாறு கண்டுபிடிப்பது என்பவைகளை அவனுக்குக் கற்றுக் கொடுத்தால் - நீங்கள் அவனுக்குப் படிப்பில் அக்கறை ஊட்டியவர்களாவீர்கள். அதே சமயம் அவனுடைய கைக்கும் கண்ணுக்கும் மனதுக்கும் பயிற்சி அளித்தவர்களாவீர்கள். இந்தப் பூர்வாங்கப் பயிற்சிக்கு ஆறு மாதம் தரவேண்டும். அப்புறம் எழுத்தைக் கற்றுக் கொள்ளக் குழந்தை தயாராவான். அவன் இதை வேகமாகச் செய்ய முடியும் போது, சாதாரணப் படம் போடுவதைக் கற்றுக் கொள்ள அவன் தயாராகிவிடுவான். கணிதப்படங்கள், பறவைகளின் படங்கள் முதலியவைகளை வரைய அவன் கற்றுக் கொண்டபோது, எழுத்துக்களை அவன் அழகாக வரைவானே யொழியக் கோணல் மாணலாக எழுதமாட்டான். எனக்கு எழுத்தறிவு புகட்டப்பட்ட குழந்தைப் பருவத்தைப் பற்றி இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது எவ்வளவு சலிப்புத்தட்டும் வேலையாக இருந்தது என்பதை நான் அறிவேன். என்னுடைய அறிவு துருப்பிடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதைப்பற்றி யாரும் அக்கறைப்பட வில்லை. எழுத்துக்களை எழுதுவது ஒரு நுண்கலை என்று நான் கருதுகிறேன். சிறு குழந்தைகளின் மீது எழுத்துக்களைத் திணிப்பதன் மூலமும், அதை ஆரம்பமாக வைத்தே கல்வி கற்பிப்பதன் மூலமும் நாம் அந்த எழுத்தறிவையே கொலை செய்கிறோம். இவ்வாறு, உரிய காலத்துக்கு முன் நாம் குழந்தைக்கு எழுத்தறிவைக் கற்றுக் கொடுக்கும்போது எழுதுங்கலைக்கே தீங்கு செய்கிறோம். குழந்தையின் வளர்ச்சியும் தேக்கமுற்று நிற்குமாறு செய்கிறோம்.[3]

இந்தியாவில் உள்ளது கல்வியா?

கிராமக் கைத்தொழில்களைக் கல்வியின் ஆதாரமாகவும், மையமாகவும் வைக்க வேண்டியது அவசியம் என்பதைப் பற்றியோ அது முக்கியம் என்பதைப் பற்றியோ எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்தியாவில் உள்ள கல்வி ஸ்தாபனங்களில் கடைப்பிடிக்கப்படும் முறையைக் கல்வியென்று நான் அழைப்பதில்லை. கல்வியென்பது ஒரு மனிதனிடமுள்ள சிறந்த சாராம்சத்தை வெளிக் கொணருவதாகும். ஆனால் அதற்குப் பதிலாக இது மனம் ஒழுக்கக் கேடு அடையச் செய்வதாகும். எப்படியும் அது மனதிற்குச் சில தகவல்களைப் போதிக்கிறது என்பது உண்மையே. ஆனால், ஆரம்பத்திலிருந்தே கிராமக் கைத்தொழில்களை மையமாகக் கொண்டு மனத்திற்குப் பயிற்சி அளிக்கும் முறையானது மனதின் உண்மையான, கட்டுப்பாடான வளர்ச்சியை ஏற்படுத்தும். இதனால் அறிவின் சக்தி கட்டிக்காக்கப் பெறும். அதைப் போன்றுதான் ஆன்மிக சக்தியும்.[4]

எழுதுவதும் படிப்பதும்

என்னுடைய திட்டப்படி, கைச்சித்திரம் வரையவோ அல்லது எழுதவோ பழக்கப்படுத்தப்படுவதற்கு முன், சில கருவிகளைப் பயன்படுத்துவதற்கு கை பழக்கப்படுத்தப்படும். எழுத்துக்களையும், சொற்களையும் கண்கள் படிக்கும். இவ்வாறு படித்து, வாழ்க்கையில் மற்ற விஷயங்களை எவ்வாறு அவை அறிந்து கொள்ளுமோ அதே போன்று இவைகளையும் தெரிந்து கொள்ளும். பொருட்களின் பெயர்களையும் வாக்கியங்களின் பொருட்களையும் காதுகள் ‘புரிந்து கொள்ளும்’. இந்தப் பயிற்சி முழுவதுமே இயற்கையானதாகவும், பலன் தரக்கூடியதாகவும் இருக்கும். ஆகையால் இந்தியாவிலேயே மிகவும் விரைவாகவும், மலிவானதாகவும் இக்கல்வி இருக்கும். எனது பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகள், அவர்கள் எழுதுவதைக் காட்டிலும் விரைவாகப் படிப்பார்கள். அவர்கள் எழுதும்போது கோழி கிண்டுவது போல் கிறுக்கமாட்டார்கள். நான் இன்றும் செய்கிறேனே (எனது ஆசிரியர் வாழ்க!)

அதைப் போன்று செய்யமாட்டார்கள். அதற்குப் பதிலாக, நேரடியாகப் பார்த்த பொருட்களை அவர்கள் எவ்வாறு அழகான படங்களாக வரைவார்களோ அதே போன்று அழகான படங்களாக எழுத்துக்களை வரைவார்கள். என்னுடைய கற்பனைப்படி பள்ளிகள் எப்போதாவது அமைவதாக இருந்தால், படிப்பதைப் பொறுத்தவரை மிக விரைவில் அது கற்றுக் கொடுக்கும். உலகத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்த பள்ளிக்கூடங்களுடன் போட்டியிடும் அளவுக்குக் கற்றுக்கொடுக்கும். ஏன், எழுதுவதிலும் அவ்வாறே கற்றுக் கொடுக்கும். ஆனால் ஒன்று, எழுதுவதென்பது சரியாக எழுதுவதாய் இருக்கவேண்டும். தற்போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எழுத்துச் சரியாக இருப்பதில்லை.[5]

ஆதாரக் கல்வி

ஆதாரக் கல்விக்கான காலம் குறைந்தது ஏழு ஆண்டுகளாக நீடிக்கப்பட வேண்டும். மெட்ரிகுலேஷன் பரீட்சை வரை, எவ்வளவு பொது அறிவு கற்றுக் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவும் (ஆங்கிலம் நீங்கலாக) அதில் இடம் பெற வேண்டும். அத்துடன் கணிசமான தொழிற்கல்வியும் இருக்க வேண்டும்.

தொழிலின் உபயோகம்

பையன்களும், பெண்களும் முழு வளர்ச்சி அடைய வேண்டும். அவ்வாறு அவர்கள் முழு வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், முடிந்தவரை, எல்லாப் பயிற்சியையுமே இலாபம் தரக்கூடிய ஒரு தொழிலின் மூலமாக அளிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், கைத்தொழில் என்பது இரண்டு வகையாகப் பலனளிக்க வேண்டும். அதாவது, தன்னுடைய உழைப்பின் மூலம் ஒரு மாணவன் தனது பயிற்சிக்கான கட்டணத்தைச் செலுத்த முடிவதாக இருக்க வேண்டும். அதே சமயம் பள்ளியில் கற்றுக் கொள்ளும் இந்தத் தொழில் ஒரு மாணவனோ அல்லது மாணவியோ முழு ஆண் அல்லது பெண்ணாக வளர்ச்சியடைய உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

நிலம், கட்டிடம், சாதனம் ஆகியவற்றுக்கான செலவை யெல்லாம் மாணவன் உழைப்பின் மூலம் வரும் வருவாய் சரிக்கட்ட வேண்டியதில்லை.

தொழில்கள்

பஞ்சு, கம்பளி, பட்டு ஆகியவைகள் சம்பந்தமான எல்லா வேலைகளும், பருத்தியைச் சேர்ப்பது, சுத்தப்படுத்துவது, அரைப்பது, பட்டை போடுவது, நூற்பது, நூலுக்குச் சாயம் போடுவது, தரம்வாரியாகப் பிரிப்பது, பாவு போடுவது, முறுக்குப் போடுவது, தினுசு போடுவது, நெய்வது, எம்பிராய்டரி, தையல், காகிதம் செய்வது, வெட்டுதல், புத்தகம் பைண்ட் செய்தல், பெட்டி செய்தல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், வெல்லம் தயாரித்தல் ஆகிய வேலைகள் எல்லாம் நிச்சயமாக எளிதில் கற்றுக் கொள்ளக் கூடிய வேலைகள்தான். அதிக மூலதனம் இல்லாமல் நடத்தக் கூடிய தொழில்கள்தான்.

பிழைப்புக்குத் தயார் செய்தல்

இந்த ஆதாரக் கல்வியானது பையன்களும், பெண் களும் தங்களுடைய பிழைப்புக்கேற்ற சம்பாத்தியத்தைத் தேட உதவுவதாய் இருக்கவேண்டும். இவர்கள் படித்த தொழில்களில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசாங்கம் உறுதி தரவேண்டும். அல்லது இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை அரசாங்கம் நிர்ணய விலைகளில் வாங்கிக் கொள்ள வேண்டும்.[6]

கல்வியின் தொடக்கம்

ஆனால் ஒரு தேசம் என்ற முறையில் நாம் கல்வியில் எவ்வளவோ பின்தங்கியவர்களாய் இருக்கிறோம். ஆகவே, கல்வித் திட்டம் பணத்தை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், இந்தத் தேசத்தின் விஷயத்தில் நாம் நமது பொறுப்பை நிறைவேற்ற முடியாது. இந்தச் சந்ததியில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்ற முடியவே முடியாது. அதனால்தான், நான் இவ்வளவு தைரியமாக, கல்வியானது சுயதேவைப் பூர்த்தியுள்ளதாக இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறேன்.

ஆக்கரீதியான பணியில் எனக்கு மிகுந்த திறமையிருப்பதாக வெளியே உள்ள பெயரும் புகழும் போய்விடுமே என்ற எண்ணமே இல்லாது துணிச்சலாக இதைக் கூறுகிறேன். கல்வி என்பதன் மூலம், குழந்தையிடமும், மனிதனிடமும் உள்ள சிறந்ததை - மனம், உடல், ஆன்மா ஆகிய எல்லாவற்றிலும், வெளிக்கொணர வேண்டும் என்றே நான் பொருள் கொள்கிறேன். எழுத்தறிவித்தல் என்பது கல்வியின் முடிவு அல்ல. ஏன் ஆரம்பங்கூட அல்ல. ஆகையால், ஒரு உபயோகமான கைத்தொழிலைக் கற்றுக் கொடுப்பதன் மூலம் நான் குழந்தையின் கல்வியைத் தொடங்குவேன். அதற்குப் பயிற்சி அளிக்கும் நாளிலிருந்து அது ஏதாவது ஒன்றை உற்பத்தி செய்யப் பழகிக் கொள்ளும். இவ்வாறு ஒவ்வொரு பள்ளியும் சுயதேவைப் பூர்த்தி உள்ளதாகச் செய்யப்படும். இதற்குள்ள ஒரு நிபந்தனை என்னவென்றால், இந்தப் பள்ளிகளில் உற்பத்தியான பொருட்களை அரசாங்கமே வாங்கிக் கொள்ள வேண்டும்.

பொது அறிவு வாய்ப்பாடம்

இப்படிப்பட்ட ஒரு கல்வி முறையின் கீழ் மனதும், ஆன்மாவும் உன்னதமான வளர்ச்சியடைவது சாத்தியமே என நான் நம்புகிறேன். இதற்கு முக்கியமானது என்னவென்றால், ஒவ்வொரு கைத்தொழிலையும் கிளிப்பிள்ளைப் பாடம் போல் கற்றுக் கொடுக்காமல், விஞ்ஞான பூர்வமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு வேலையும், ஏன் எப்படி என்பது குழந்தைக்குத் தெரியவேண்டும். இதைப்பற்றி அழுத்தமான நம்பிக்கையில்லாமல் நான் எழுதவில்லை. ஏனென்றால், அனுபவத்தை அடிப்படையாக வைத்தே நான் இதைக் கூறுகிறேன். எங்கெங்கு நூல் நூற்பானது தொழிலாளர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறதோ அங்கெல்லாம், இந்த முறை கிட்டத்தட்டப் பூரணமாக அனுஷ்டிக்கப்படுகிறது. செருப்புத் தைக்கவும், ஏன் நூற்கவும் கூட இதே முறையில் நான் கற்றுக் கொடுத்திருக்கிறேன். அதில் நல்ல பலனும் கிடைத்திருக்கிறது. இந்த முறையில் வரலாறும் பூகோளமும் இடம் பெறாமல் இல்லை. இப்படிப்பட்ட பொது அறிவை வாய்ப்பாடமாகச் சொல்லிக் கொடுப்பதில் நல்ல பலன் கிடைக்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன். எழுதியும்

படித்தும் எவ்வளவு கற்றுக் கொடுக்கமுடியுமோ அதைப்போலப் பத்துமடங்கு இந்த முறையின் மூலம் கற்றுக் கொடுக்க முடியும். எழுத்துக் களைப் பின்னால் கற்றுக் கொடுத்துக் கொள்ளலாம். அதாவது, அவசியமானது எது, அவசியமில்லாதது எது என்பதை வேறுபடுத்திப் பார்க்க மாணவன் அறிந்து கொண்ட போது, அவன் (அல்லது அவள்) உணர்ச்சிகளை ஓரளவு வளர்த்துக் கொண்டபோது எழுத்தைக் கற்றுக் கொடுக்கலாம். இது புரட்சிகரமான முறைதான். ஆனால் இது எவ்வளவோ உழைப்பை மீதப்படுத்துகிறது. நீண்ட காலம் கற்றுக்கொள்ள வேண்டிய கல்வியை ஒரே ஆண்டில் கற்றுக்கொள்ள உதவுகிறது. ஆகவே எல்லாவகையிலும் இது சிக்கனமே. மாணவன் தனது கைத்தொழிலைக் கற்றுக் கொள்ளும் போதே கணக்கையும் கற்றுக் கொள்கிறான்.

மக்களின் அறியாமை

ஆரம்பக் கல்விக்குத்தான் நான் மிகப் பெரிய முக்கியத்துவம் அளிக்கிறேன். என்னுடைய கருத்துப்படி அது, ஆங்கிலம் மட்டும் இல்லாத தற்போதைய மெட்ரிகுலேஷன் படிப்புக்குச் சமமானதாக இருக்க வேண்டும். கல்லூரிப் படிப்பாளிகள் எல்லோரும் திடீரென்று தாங்கள் பெற்ற அறிவை மறந்துவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு சில இலட்சம் கல்லூரிப் படிப்பாளி களுடைய ஞாபக சக்தி போனதனால் ஒருவகையில் நஷ்டம் ஏற்படும். ஆனால் முப்பது கோடி மக்களைச் சூழ்ந்து இருந்து வந்திருக்கும் அறியாமை இருளினால் ஏற்பட்ட நஷ்டத்துடன் ஒப்பிட்டால் அந்த நஷ்டம் ஒன்றுமேயில்லை. தற்போது கோடிக்கணக்கான கிராமவாசிகள் மத்தியில் அறியாமை நிறைந்து கிடக்கிறது. எழுத்தறிவின்மையை மட்டும் கொண்டு இந்த அறியாமையைச் சரியாக அளவிட முடியாது.

உயர்தரக் கல்லூரிகள்

கல்லூரிப் படிப்பை நான் புரட்சிகரமாக மாற்றியமைப்பேன். தேசத்தின் அத்தியாவசியத் தேவைகளுக்கும் அதற்கும் தொடர்பு இருக்குமாறு செய்வேன். மெக்கானிகல் என்ஜினியர்களுக்கும் மற்ற என்ஜினியர்களுக்கும் பட்டங்கள் அளிக்கப்படும். அவர்கள்

பல்வேறு தொழிற்சாலைகளில் இணைந்து பணியாற்றுவார்கள். இந்தத் தொழிற்சாலைகள் தங்களுக்கு வேண்டிய பட்டதாரிகளின் பயிற்சிக்காகப் பணம் செலவழிக்க வேண்டும். இவ்வாறு, என்ஜினியர்களின் பயிற்சிக்காக டாடா ஸ்தாபனம் ஒரு கல்லூரி நடத்தும் என எதிர்பார்க்கலாம். அரசாங்கத்தின் மேற்பார்வையில் இந்தக் கல்லூரி நடைபெறும். ஆலைகளின் சங்கங்கள் கூட்டாக ஒரு கல்லூரி நடத்தலாம். இதில் தங்களுக்குத் தேவையான பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்கலாம். இதே போன்று மற்றும் பல தொழில்களைக் குறிப்பிடலாம். வணிகத்துக்கும் தனிக்கல்லூரி இருக்கும். இதற்கு மேல் கலை, மருத்துவம், விவசாயம் ஆகியவை இருக்கின்றன. அநேக தனிப்பட்ட கலைக்கல்லூரிகள் இன்று சுய தேவைப்பூர்த்தி உள்ளவை களாக இருக்கின்றன. ஆகையால் அரசாங்கம் தனக்குச் சொந்தமான கல்லூரியை நடத்த வேண்டிய அவசியம் இராது. மருத்துவக் கல்லூரிகள், அத்தாட்சி பெற்ற ஆஸ்பத்திரிகளுடன் இணைந்ததாக இருக்கும். தனவந்தர்கள் வைத்தியக் கல்லூரிகளின் மீது ஆசை வைத்திருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் தாங்களாகவே முன்வந்து வைத்தியக் கல்லூரிகளை ஆதரிக்கலாம். விவசாயக் கல்லூரிகள் உண்மையிலேயே விவசாயக் கல்லூரிகளாக இருக்க வேண்டுமானால், சுயதேவைப்பூர்த்தி உள்ளவைகளாக இருக்க வேண்டும். சில விவசாயப் பட்டதாரிகளைப்பற்றி எனக்கு வருந்தத்தக்க அனுபவம் உண்டு. அவர்களுடைய அறிவு வெறும் ஏட்டுப் படிப்புத்தான். அவர்களுக்கு நடைமுறை அனுபவம் இல்லை. வெளி உதவியின்றி சொந்த பலத்தில் கட்டுபடியாகக் கூடிய பண்ணைகளில், நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பண்ணைகளில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால், தங்களுடைய பட்டங்களைப் பெற்ற பின்பு அவர்கள் நேரடி அனுபவம் பெறவேண்டும் என்ற அவசியம் இருக்காது. தங்களுடைய அதிபர்கள் செலவில் அனுபவம் பெறவேண்டும் என்ற அவசியமும் இருக்காது.[7]

அறிவுக்கும் உழைப்பு அவசியம்

சரியான ஆசிரியர்களை மட்டும் அளியுங்கள்.

நம்முடைய குழந்தைகளுக்கு உழைப்பின் பெருமை கற்றுக் கொடுக்கப்பட்டு விடும். அதைத் தங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு ஒரு இன்றியமையாத அங்கமாகவும், சாதனமாகவும் கருத அவர்கள் கற்றுக் கொள்வார்கள். தங்களுடைய உழைப்பின் மூலம் தங்களுடைய படிப்புக்கு வேண்டிய கட்டணத்தைச் செலுத்துவதுதான் தேச பக்தியாகும் என்பதையும் உணருவார்கள். என்னுடைய யோசனையின் தாத்பர்யம் இதுதான். உற்பத்தி வேலைகளுக்காக மட்டும் கைத்தொழில்களைக் கற்கவேண்டும் என்பதல்ல. மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்காகவும் கற்கவேண்டும். ஏழு வயதுக்கு மேல் பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உற்பத்திக்கான உழைப்பின் மூலம் அவர்களுடைய உடலுக்கும் மனதுக்கும் பயிற்சி அளிக்கிறது. அப்புறமும் அப்பள்ளிகள் சுயதேவைப் பூர்த்தி உள்ளவை களாக முடியவில்லையென்றால், அப்பள்ளிகள் வெறும் ஏமாற்று வித்தைகளாகவும் அதிலுள்ள ஆசிரியர்கள் அடிமுட்டாள்களாகவுந்தான் இருக்கவேண்டும்.[8]

உழைப்பின் மூலம் கல்வி

"குழந்தைகள் மனதில் எல்லாவிதமான தகவல்களையும் வைத்துத் திணிக்க வேண்டும்" - இதுவரை நாம் ஒருமனதான கவனம் செலுத்தியதெல்லாம் இதில்தான். அந்த மனதைத் தூண்டி வளர்க்க வேண்டுமே என்பதைப்பற்றி நாம் ஒருபோதும் எண்ணிப் பார்த்ததில்லை. இப்போது இதை நாம் நிறுத்திவிடுவோம். உடல் உழைப்பின்மூலம் சரியான முறையில் குழந்தைக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதில் ஒரு மனதான கவனம் செலுத்துவோம். உடல் உழைப்பை ஒரு பக்க வேலையாக அல்லாமல், அறிவுப் பயிற்சிக்குப் பிரதான சாதனமாக வைத்துக் குழந்தைக்கு கல்வி கற்றுக் கொடுப்போம்.[9]

பள்ளிக் கல்வி

பள்ளிகளில் இப்போது கற்றுக்கொடுப்பவற்றில் ஆங்கிலம் தவிர மற்ற எல்லாம் இருக்கவேண்டும்.

அவைகளுடன் டிரில், இசை, சித்திரம் வரைதல் ஆகியவை களும் நிச்சயமாக ஒரு கைத்தொழிலும் இருக்கவேண்டும். பள்ளிகளில் நான் விரும்பும் கல்வி இதுவே.[10]

பொருளாதார வரவு செலவு

இந்தியாவில் ஆரம்பக்கல்வி இலவசமாகவும் கட்டாய மாகவும் இருக்க வேண்டும். இதில் உறுதியான நம்பிக்கை உள்ளவன் நான். உபயோகமுள்ள ஒரு கைத்தொழிலைக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர் களுடைய மன, உடல், ஆன்மீக சக்திகளைப் பண்படுத்து வதற்கு அதை ஒரு சாதனமாகப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு கற்றுக்கொடுப்பதன் மூலந்தான் மேலே நான் கூறியதைச் சாதிக்க முடியும். கல்வி தொடர்பாக நான் கூறும் இந்தப் பொருளாதார வரவுசெலவுக் கணக்குகளைக் கஞ்சத்தனமான யோசனையென்றோ அல்லது சம்பந்தா சம்பந்தமற்ற யோசனையென்றோ யாருங் கருதிவிட வேண்டாம். பொருளாதார வரவு செலவைப் பார்ப்பதால் எதுவுமே கஞ்சத்தனமாகி விடாது. உண்மையான பொருளாதாரம் மிக உயர்ந்த ஆன்மீக நெறிக்கு ஒருபோதும் விரோதமானதல்ல. அதே போன்று உண்மையான அறநெறி என்பதெல்லாம் நல்ல பொருளாதாரமாகத்தான் இருக்க வேண்டும்.[11]

நகரக் கல்வி

நகரப்பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க எப்படிப்பட்ட தொழில்கள் மிகச் சிறந்தவை? இது சம்பந்தமாகத் திட்டவட்டமான விதி எதுவும் கிடையாது. ஆனால் இதில் என் பதில் தெளிவானது. இந்தியாவில் உள்ள கிராமங்களுக்கு நான் புத்துயிர் கொடுக்க விரும்புகிறேன். இன்று நம்முடைய கிராமங்களெல்லாம் ஏதோ நகரங்களை ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அவ்வளவுதான். நகரங்கள் சுரண்டுவதற்காகவே அவை இருப்பது போல் தோன்றுகிறது. நகரங்களின் இணக்கத்தையே அவை சார்ந்து இருக்கின்றன. இது இயற்கைக்கு முரணானது. கிராமங்களிடமிருந்துதான் நகரங்கள் பலமும் வாழ்வும் பெறுகின்றன. இந்த கிராமங்களை சுயநலத்திற்காக நகரங்கள் சுரண்டுவதற்கு

விரும்பக்கூடாது. அதற்குப் பதிலாக, அக்கிராமங்களுக்குப் போதுமான அளவு பிரதி உபகாரம் செய்ய வேண்டும். அப்போது தான் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே நல்ல தார்மீக உறவு நிலவும். இந்தச் சமூகப் புனரமைப்பு ஒரு மாபெரும் பணி. பெருமை நிறைந்த பணி. இப்பணியில் நகரங்களில் உள்ள குழந்தைகளும் தங்கள் கடமையைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்ய வேண்டுமானால், அவர்கள் எந்தத் தொழில்களின் மூலம் தங்கள் கல்வியைப் பெற விரும்புகிறார்களோ அந்தத் தொழில்கள் கிராமங்களின் தேவைகளுடன் நேரடியாகத் தொடர்புள்ளவைகளாக இருக்க வேண்டும். நான் அறிந்தவரை பருத்தி சம்பந்தமான பல்வேறு வேலைகள்தான் - பஞ்சு அரைப்பது, சுத்தப்படுத்துவது ஆகியவற்றிலிருந்து நூல் நூற்பது வரை - இந்த நிபந்தனை களைப் பூர்த்தி செய்யும். அதன் அளவு வேறு எந்தத் தொழிலும் வெற்றி பெறாது. இன்றுகூடக் கிராமங்களில்தான் பருத்தி உற்பத்தியாகிறதென்றாலும் அது அரைக்கப்படுவதும் நூற்கப்படுவதும் நெய்யப்படுவதும் நகரங்களில்தான். ஆனால், ஆலைகளில் பருத்தி சம்பந்தமாக நடைபெறும் பல்வேறு வேலைகள் - ஆரம்பத்திலிருந்து இறுதிவரை - மனிதர்களையும் பொருட்களையும், இயந்திர சக்தியையும் மிகவும் வீணாக்குகின்றன.

கைத்தொழில் கல்வி அனுகூலம்

நூல் நூற்பது, பட்டை போடுவது போன்ற கிராமக் கைத்தொழில்களின் மூலம் ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பது எனது திட்டம். எனது இந்த திட்டம் ஒரு அரவமுமில்லாத மௌனமான சமூகப் புரட்சிக்கு முன்னோடித் திட்டமாகக் கருதப்படுகிறது. இதனால் மிகப் பெரிய பலன்கள் விளையும் என்று கருதப்படுகிறது. நகரத் துக்கும், கிராமத்துக்குமிடையே ஒரு நல்ல, தார்மீக உறவுக்கான அடிப்படையை அது ஏற்படுத்தும். தற்போது சமூகம் ஒரு நிலை இல்லாததாக இருக்கிறது. இதனால் பல தீங்குகள் ஏற்படுகின்றன. பல்வேறு வர்க்கங்களுக்குமிடையே உள்ள உறவு கசப்பானதாக இருக்கிறது. இக்குறைபாடு களை அகற்றுவதில் என்னுடைய திட்டம் உதவும். நம்முடைய கிராமங்கள் நாளுக்குநாள் சீர்கெட்டுக் கொண்டு போவதை

இது தடுக்கும்; ஒரு நியாயமான சமுதாய அமைப்புக்கான அஸ்திவாரமிடும். இப்படிப்பட்ட சமுதாய அமைப்பில் செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்குமிடையே இயற்கைக்கு முரணான முறையில் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகள் இருக்கமாட்டா. ஒவ்வொருவருக்கும் கட்டுபடியாகக் கூடிய ஊதியம் கிடைக்கும். சுதந்திரம் பெறுவதற்கான உரிமையும் கிடைக்கும். இரத்தம் சிந்த வேண்டிய ஒரு வர்க்கப் போராட்டம் இல்லாமல் இதை அடைய முடியும். அதுமட்டுமல்ல, இந்தியாவைப் போன்ற ஒரு பரந்த கண்டத்தைக் கைத்தொழில் மயமாக்குவதில் ஏற்படக்கூடிய பெரும் மூலதனச் செலவு இல்லாமல் இது கிட்டும். மேலும், நிராதரவான முறையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான இயந்திரத்தையோ அல்லது தொழில் நுணுக்கத்திறனையோ சார்ந்திருக்க வேண்டிய அவசியமும் இருக்காது. கடைசியாக இதனால் கிடைக்கக்கூடிய அனுகூலம் மிக உயர்ந்த தனித்திறன் எதுவும் இதற்குத் தேவைப்படாது என்பதே. இதனால் மக்களுடைய எதிர்காலம் அந்த மக்களின் கைகளிலேயே இருக்கும். ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார்? நகர மக்கள் நான் கூறுவதைக் கேட்பார்களா? அல்லது என்னுடைய குரல் விழலுக்கிறைத்த நீராகிவிடுமா? இந்தக் கேள்விகளுக்கும் மற்றும் இதைப்போன்ற கேள்விகளுக்கும் உரிய பதில் கிடைப்பது, என்னைக் காட்டிலும், நகரங்களில் வாழும் கல்வி அபிமானிகளையே அதிகம் சார்ந்தது.[12]

மனிதனின் முழு வளர்ச்சி

இப்படிப்பட்ட கல்வி அளிப்பதானால், அது தனது செலவைத்தானே சரிக்கட்டிக் கொள்ளக்கூடியதாய் இருக்கும். இதுதான் அதனால் நேரடியாக ஏற்படக் கூடிய விளைவு. ஆனால், அதன் வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய முக்கிய அம்சம் இதுவல்ல, கைவேலைப்பாட்டுத் தொழிலை விஞ்ஞான பூர்வமான முறையில் கற்றுக்கொடுப்பதன் மூலம், முழுமனிதனாக ஒருவன் வளர்ச்சியடைய முடியும் என்பது தான். உண்மையில், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் வரவு செலவு சரிக்கட்டக்கூடியதாக இதை ஆக்குவதாய் உறுதி மொழி அளிக்கும் ஒரு ஆசிரியரை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். மாணவன் தனது ஒவ்வொரு திறமைக்கும் வாய்ப்பு

இருக்கும் ஒரு கல்வியைக் கற்றுக்கொள்கிறான். இந்த உண்மையிலிருந்து தர்க்க ரீதியாகப் பெறக்கூடியதென்ன வென்றால் இக்கல்வி சுய ஆதாரமுள்ளதாய் இருக்கும் என்பதுதான். ஒரு கைத்தொழிலில் நாள்தோறும் மூன்று மணி நேரம் வேலை செய்யக்கூடிய ஒரு பையன் தனது வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தைத் தேடிக்கொள்ள முடியுமானால், தனது மன, ஆன்ம வளர்ச்சியின் மூலம் அந்த வேலையைச் சிறப்பிக்கிறவன் எவ்வளவு அதிகமாகச் சம்பாதிக்க முடியும்![13]

கிராமங்களே இந்தியா

நாட்டில் நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலை இருக்கிறதே அதிலிருந்து இயற்கையாக வளர்ச்சியடைந்தது ஆதாரக் கல்வி. உண்மையில், இச்சூழ்நிலையின் எதிரொலிதான் அது. ஆகையால் சூழ்நிலையை அனுசரித்து அதுவும் வளரும். இந்தியாவில் உள்ள ஏழு இலட்சம் கிராமங்களிலும் அதில் வாழும் கோடிக்கணக்கான மக்களிடமும் இந்தச் சூழ்நிலை பரவிக் கிடக்கிறது. நீங்கள் அவர்களை மட்டும் மறந்து விட்டீர்களானால், இந்தியாவையே மறந்தவர்களாவீர்கள். நகரங்களில் உண்மை இந்தியாவைக் காண முடியாது. இங்குள்ள எண்ணற்ற கிராமங்களில்தான் அது இருக்கிறது.

அடிப்படை அம்சங்கள்

ஆதாரக்கல்வியின் அடிப்படையான அம்சங்களாவன :-

1. எல்லாக் கல்வியும் தனது செலவைத் தானே சரிக்கட்டிக் கொள்ளக்கூடியதாய் இருக்க வேண்டும். அதாவது, இறுதியில் கணக்குப் பார்த்தால், மூலதனம் தவிர மற்ற நடைமுறைச் செலவுகளையெல்லாம் அளிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும். இந்த மூலதனமும் கரையாது அப்படியே இருக்கவேண்டும்.

2. இந்தக் கல்வியின் இறுதிக்கட்டம் வரை, கைவேலைத் திறமைக்கு இடம் இருக்கும். அதாவது, ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட காலம் ஒரு கைத்தொழிலில் மாணவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

3. எல்லாக் கல்வியுமே அந்தந்த மாநில மொழியின் மூலமே கற்பிக்கப்பட வேண்டும்.

4. இதில் தனித்தனி மதபோதனைக்கு இடமில்லை. சர்வ மதங்களுக்கும் சமரசமான அடிப்படை அறநெறிக்கு முழு இடமுண்டு.

5. இந்தக் கல்வி குழந்தைகளுக்கோ அல்லது வயதானவர்களுக்கோ, ஆண்களுக்கோ அல்லது பெண் களுக்கோ, யாருக்கு அளிக்கப்பட்டாலும், அதன் பயன் அம்மாணவர்களின் இல்லங்களுக்கும் கிடைக்கும்.

6. இந்தக் கல்வியைப் பெறக்கூடிய கோடிக்கணக்கான மாணவர்கள், தாங்கள் இந்தப் பரந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுவார்களாதலால், அவர்கள் பல்வேறு மாநிலங்களுக்கிடையே பேசக் கூடியதொரு மொழியைப் படித்துக் கொள்ள வேண்டும். இந்தப் பொது மொழியானது நாகரி அல்லது உருது லிபியில் எழுதப்பட்ட இந்துஸ்தானியாகத்தான் இருக்க முடியும். ஆகையால், மாணவர்கள் இரண்டு லிபிகளிலுமே தேர்ச்சி பெற வேண்டியது அவசியம்.[14]

II

தொழிலும் தொடர்பான பொருளும்

எல்லாப் பயிற்சியுமே ஏதாவதொரு ஆதாரமான தொழிலை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்க வேண்டும். 7 அல்லது 10 வயதான ஒரு குழந்தைக்கு ஒரு தொழிலின் மூலமாக நீங்கள் அறிவைப் போதித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அத்தொழிலுடன் சம்பந்தப்படாத பாடம் எதையுமே நீங்கள் ஆரம்பத்தில் எடுக்கக் கூடாது. நீங்கள் இதைச் செய்து வந்தால் ஆரம்பத்தில் நீங்கள் விலக்கி வைத்திருந்த பல விஷயங்களை அந்தக் கைத்தொழிலுடன் தொடர்பு படுத்துவதற்கான வழி வகைகளை நாளாவட்டத்தில் தெரிந்து கொள்வீர்கள். ஆரம்பத்தில் இவ்வாறு சில விஷயங்களை ஒதுக்கி வைப்பதன் மூலம், உங்களுடைய சக்தியையும் மாணவர்களுடைய சக்தியையும் மீதப்படுத்தியவர்களாவீர் கள். இன்று நம்மிடம் இக்கல்விக்கு வேண்டிய புத்தகங்கள் இல்லை. நாம் பின்பற்றக்கூடிய முன் மாதிரி இல்லை.

ஆகையால், நாம் மெதுவாகவே செல்ல வேண்டியிருக்கிறது. இதில் பிரதானமானது என்னவென்றால் ஆசிரியரின் மனம் புத்துணர்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதுதான். கைத்தொழிலுடன் தொடர்புபடுத்த முடியாத ஒரு விஷயத்தைக் காண்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது ஆத்திரமடைந்து விடாதீர்கள்; அதைரியமடைந்து விடாதீர்கள்; அதை விட்டுவிட்டு, தொடர்புபடுத்தக் கூடிய மற்ற விஷயங்களுடன் முன்னோக்கிச் செல்லுங்கள். வேறு ஆசிரியர் சரியான வழியில் சிந்தித்துப் பார்த்து அதையே தொடர்புபடுத்திக் காண்பிக்க முடியலாம். இவ்வாறு பலருடைய அனுபவங்களை நீங்கள் ஒருங்கு திரட்டினீர்களானால், உங்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய நூல்கள் கிடைக்கும். உங்களைப் பின்பற்றுபவர்களுடைய வேலையும் எளிதாகிவிடும்.

வாழ்நாள் முழுதும்

''இவ்வாறு சில பாடங்களை ஒதுக்கி வைக்கும் பணியை எவ்வளவு காலத்துக்குத்தான் செய்துகொண்டு போவது?'' என்று நீங்கள் கேட்கலாம். ''வாழ்நாள் முழுவதுந்தான்'' என்பதே எனது பதில். இவ்வாறு செய்து கொண்டே போகும்போது, முதலில் விலக்கி வைத்த பல விஷயங்களைப் பின்னால் சேர்த்துக் கொண்டிருப்பீர்கள். சேர்ப்பதற்குத் தகுதியான விஷயங்களெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கும். இறுதிவரை நீங்கள் ஒதுக்கி வைத்த ஒரு பொருள், மிகவும் மேற்போக்கானதாகவும் விலக்கி வைக்கத் தகுதியானதாகவும் இருக்கும். இவைகளை யெல்லாம் இறுதியில் நீங்கள் காண்பீர்கள். என்னுடைய வாழ்க்கை அனுபவம் இது தான். நான் எவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறோனோ அவ்வளவு காரியங்களை ஒதுக்கி வைத்திருக்கிறேன். இல்லையேல் அவ்வளவு காரியங்களைச் செய்திருக்க முடியாது.

கலைத்திறன் வளர்ச்சி

நம்முடைய கல்வி முறையைப் புரட்சிகரமாக மாற்றி யமைக்க வேண்டும். கையின் மூலமாக மூளைக்குப் பயிற்சி

அளிக்க வேண்டும். நான் ஒரு கவிஞனாக இருந்திருந்தால் கையிலுள்ள இந்த ஐந்து விரல்களின் அற்புதத்தைப் பற்றி நான் கவிதையே இயற்றியிருப்பேன். மனம்தான் எல்லாம். கையும் காலும் ஒன்றுமேயில்லை என்று நீங்கள் ஏன் எண்ண வேண்டும்? கைகளுக்குப் பயிற்சி அளிக்காதவர்கள், சாதாரணக் கல்விமுறை என்னும் நொடி நிறைந்த வண்டித் தடத்திலேயே செல்பவர்கள், வாழ்க்கையின் இசையை அறியாதவர்களாவார்கள். அவர்களுடைய கலைத்திறனுக் கெல்லாம் போதிய பயிற்சி தரப்படவில்லை. வெறும் வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு மூளை அலுத்துப் போகிறது. குழந்தையின் மனம் எங்கோ அலைய ஆரம்பித்து விடுகிறது. கை எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்துகொண்டிருக்கிறது. கண்கள் எதைக் காணக்கூடாதோ அதைக் கண்டு கொண்டிருக்கின்றன. காதுகள் எதைக் கேட்கக் கூடாதோ அதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் எதைச் செய்ய வேண்டுமோ, பார்க்க வேண்டுமோ அல்லது கேட்க வேண்டுமோ, அதை முறையே செய்வதோ, பார்ப்பதோ, கேட்பதோ இல்லை. சரியானது எது என்பதைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவில்லை. ஆகையால் அவர்களுடைய கல்வியே அவர்களுக்கு அழிவாக முடிகிறது. நல்லதற்கும் கெட்டதற்கும் வேறுபாடு காணக் கற்றுக் கொடுக்காத ஒரு கல்வி, நல்லதை ஏற்கவும் கெட்டதைத் தள்ளவும் கற்றுக் கொடுக்காத ஒரு கல்வி, கல்வி என்ற பெயருக்கே உரித்தானது அல்ல.

பழைய கருத்து

பழைய கருத்து என்னவென்றால், பள்ளிகளில் ஏற்கனவே உள்ள பாடத்திட்டத்துடன் ஒரு கைத்தொழிலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். அதாவது, கல்வியிலிருந்து முற்றிலும் தனியாக இந்தக் கைத்தொழிலை எடுத்துக் கொள்ள வேண்டும். இது அழிவுக்குக் கொண்டு செல்லும் ஒரு தவறு என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு தொழிலை ஆசிரியர் கற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய அறிவை இந்தத் தொழிலுடன் தொடர்புபடுத்திக் கொள்ள

வேண்டும். அப்புறம், அவர் தேர்ந்தெடுத்த கைத்தொழிலின் மூலம் தனது மாணவர்களுக்கு அறிவை போதிக்க முடியும்.

நூல் நூற்பும் கணக்கும்

உதாரணமாக நூல் நூற்பை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்குக் கணக்குத் தெரிந்திருந்தாலொழிய, நான் தக்ளியில் எத்தனை கெசம் நூல் நூற்றேன், அது எத்தனை சுற்றுவரும், நான் நூற்ற நூல் என்ன நம்பர் என்பதையெல்லாம் கணக்கிட முடியாது, இதைச் செய்ய வேண்டுமென்றால் எனக்கு எண்கள் தெரிந்திருக்க வேண்டும். மேலும், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும். சிக்கலான கணக்குகளைச் செய்வதற்குச் சில இடுகுறிகளை உபயோகப்படுத்த வேண்டும். அதற்கு அல்ஜீபிராக் கணக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதில் கூட ரோமன் எழுத்துக்களுக்குப் பதிலாக இந்துஸ்தானி எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுமென்றே நான் வலியுறுத்துவேன்.

ஜியோமிதியும் தக்ளியும்

அடுத்தபடியாக ஜியோமிதியை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தக்ளியின் அடித் தகட்டைக் காட்டிலும் ஒரு வட்டத்திற்குச் சிறந்த நேரடி உதாரணப் பொருள் இருக்கிறதா? இவ்வாறு, யூக்லிட் பெயரைச் சொல்லாமலேயே நான் வட்டத்தைப் பற்றிய எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்க முடியும்.

வரலாறும் பூகோளமும்

நூல் நூற்பின் மூலமாக பூகோளத்தையும் வரலாற்றையும் எவ்வாறு கற்றுக் கொடுக்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். சிறிது காலத்திற்கு முன்பு **"பஞ்சு - மனித வர்க்கத்தின் வரலாறு"** என்ற புத்தகத்தை நான் படிக்க நேர்ந்தது. அது என்னை மயிர்க்கூச்செரியுமாறு செய்தது. நான் ஒரு காதல் இலக்கியத்தைப் படித்ததைப் போல உணர்ந்தேன். முற்கால வரலாற்றுடன் அது தொடங்கியது. எப்போது எப்படிப் பஞ்சைப் பயிரிட்டார்கள். அது இப்போது

எந்தக் கட்டத்திற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. பல்வேறு நாடுகளுக்குமிடையே நடைபெறும் பஞ்சு வாணிகம் மற்றும் இதுபோன்ற விஷயங்கள் ஆகியவை அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருந்தன. இவ்வாறு பல்வேறு நாடுகளின் பெயர்களைச் சொல்ல நேரும்போது, இயற்கையாகவே அவைகளின் பூகோள அமைப்பையும் வரலாற்றையும் பற்றி நான் சிறிது சொல்லுவேன். யார் யார் ஆட்சிக் காலத்தில், பல்வேறு காலங்களில் ஏற்பட்ட வணிக உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டன? சில நாடுகள் பஞ்சை இறக்குமதி செய்ய, மற்றும் சில நாடுகள் துணியை இறக்குமதி செய்கின்றனவே. அது ஏன்? ஒவ்வொரு நாடும் தனக்கு வேண்டிய பஞ்சை ஏன் உற்பத்தி செய்யக்கூடாது? - இவை களைப் பற்றியெல்லாம் நான் விளக்குவேன். இது என்னைப் பொருளாதார சாஸ்திரத்துக்கும் விவசாய சாஸ்திரத்தின் அடிப்படையான அம்சங்களுக்கும் கொண்டு செல்லும். பஞ்சின் பல்வேறு வகைகள், எந்தெந்த நிலத்தில் அவை விளையும், அவைகளை எவ்வாறு பயிரிடுவது, எங்கிருந்து அவைகளைப் பெறுவது என்பன போன்ற தகவல்களை யெல்லாம் நான் அவருக்குக் கற்றுக்கொடுப்பேன். இவ்வாறு தக்ளியானது கிழக்கு இந்தியக் கம்பெனியின் வரலாறு முழுவதற்கும் - அவர்கள் என்ன காரணத்திற்காக இங்கு வந்தார்கள். அவர்கள் எவ்வாறு நம்முடைய நூற்புத் தொழிலை அழித்தார்கள். பொருளாதார நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்தவர்கள் பின்னர் எவ்வாறு அரசியல் அபிலாஷை கொண்டவர்களானார்கள். எவ்வாறு அது மொகலாயர்கள், மராத்தியர்கள் ஆகியோருடைய வீழ்ச்சிக்கும், ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்கும் காரணமாகியது. பின்னால் எவ்வாறு நம்முடைய காலத்தில் மக்களுடைய எழுச்சிக்கு வழிகோலியது என்ற வரலாற்றுக் கெல்லாம் - என்னை அழைத்துச் செல்லும். இவ்வாறாக இந்தப் புதுத்திட்டத்தில் கல்விக்குள்ள சாத்தியக் கூறுகளுக்கு எல்லையே இல்லை. மேலும், குழந்தையானது தனது மனதுக்கோ ஞாபகசக்திக்கோ அனாவசியமான பாரம் எதையும் ஏற்றிக் கொள்ளாமல் மிக விரைவாக இவைகளை யெல்லாம் கற்க முடியும்?

தக்ளியின் பல விஞ்ஞானங்கள்

இந்தக் கருத்தை நான் மேலும் விளக்குகிறேன். உடற் கூறு சாஸ்திர விஞ்ஞானி ஒருவர் அதில் நல்ல விஞ்ஞானி ஆவதற்கு, அந்த சாஸ்திரம் தவிர மற்றும் பல விஞ்ஞானங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். அதைப் போலவே ஆதாரக் கல்வியையும் ஒரு விஞ்ஞானமாகக் கருதுவதானால், எல்லையற்ற பல்வேறு வகைப்படிப்புக்கு நம்மை அது அழைத்துச் செல்லும். இப்போது தக்ளியின் உதாரணத்தை விரிவுபடுத்திப் பார்ப்போம். ஒரு மாணவ ஆசிரியன் இயந்திரம் போன்று நூற்கும் வேலையில் நல்ல தேர்ச்சி அடைய வேண்டியது தான். ஆனாலும், அவன் இதுமட்டுமல்லாது, அதன் அடிப்படை உணர்ச்சியிலும் ஏகாக்ரசித்தமான கவனம் செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட மாணவ ஆசிரியன் தக்ளியின் மீதும் அதன் பல்வேறு அம்சங்களின் மீதும் ஒரு மனதான கவனம் செலுத்துவான். ''இந்தத் தக்ளியின் தகடு பித்தளையாலும், எஃகினாலும் செய்யப்பட்டிருக்கிறதே அது ஏன்?'' என்று அவனே தன்னைக் கேட்டுக் கொள்வான். ஆதிகாலத் தக்ளியில் தகட்டை எப்படியோ செய்தார்கள். அதற்கு முந்திய புராதன காலத்தக்ளியின் ஸ்லேட் அல்லது ஓட்டால் 'தகடு'ம் மரக்குச்சியால் கதிரும் செய்யப்பட்டிருந்தன. இப்போது தக்ளி விஞ்ஞான பூர்வமான வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆகவே தகட்டைப் பித்தளையாலும், கதிரை எஃகாலும் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தக் காரணத்தை அவன் கண்டுபிடிக்க வேண்டும். இதன் பின்னர், அந்தத் தகட்டின் விட்டம் அந்தக் குறிப்பிட்ட அளவில் - கொஞ்சங்கூட அதிகமாகவோ, குறைச்சலாகவோ இல்லாமல் - இருக்கிறதே அது ஏன் என்பதை ஆசிரியர் தனக்குத் தானே கேட்டுக் கொள்ள வேண்டும். இந்தக் கேள்விகளுக்குத் திருப்திகர மான முறையில் விடை கண்ட பிறகு, அதில் உள்ள கணக்கைத் தெரிந்துகொண்ட பிறகு, உங்களுடைய மாணவர் ஒரு நல்ல என்ஜினீயர் ஆகிவிடுகிறார்; தக்ளி அவருடைய காமதேனு ஆகிவிடுகிறது. இந்தச் சாதனத்தின் மூலமாகக் கற்பிக்கக்கூடிய அளவுக்கு எல்லையே இல்லாமற் போய் விடுகிறது. உங்களுடைய முயற்சியையும், மனவுறுதியையும்

பொறுத்துத்தான் எல்லையே அமைகிறது. நீங்கள் இங்கு மூன்று வாரம் இருந்திருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தை முழு மனத்துடன் நீங்கள் ஏற்பீர்களானால் இதில் செலவிட்ட நேரத்தை உபயோகமான முறையில் கழித்தவர்களாவீர்கள். 'நான் இதைச் செய்வேன் அல்லது செத்து மடிவேன்' என்று உங்களுக்கு நீங்கள் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நீங்கள் அதில் தீவிரங் காட்ட வேண்டும்.

தச்சனாக இருந்தால்?

நூற்பைப் பற்றி எனக்குத் தெரியும். அதனால் தான் அதைப் பற்றி விரிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு தச்சனாக இருந்தால், இந்த விஷயங்களை யெல்லாம் தச்சுத் தொழிலின் மூலமாகக் கற்றுக் கொடுப்பேன். நான் அட்டை வேலை செய்பவனாக இருந்தால், அதன் மூலமாகக் கற்றுக்கொடுப்பேன்.

புரட்சிகர மாறுதல்

சொந்தமான மூளையுள்ள கல்வி நிபுணர்கள் நமக்கு வேண்டும். உண்மையான ஆர்வத்தினால் தூண்டப்பட்டவர் கள் வேண்டும். தங்களுடைய மாணவர்களுக்கு என்ன கற்றுக் கொடுக்கலாம் என்பதை அன்றாடம் சிந்தித்துப் பார்ப்பவர்கள் வேண்டும். பெரிய பெரிய புஸ்தகக் கட்டுகளில் ஆசிரியர் இந்த அறிவைப் பெற முடியாது. தன்னுடைய குறிப்பறியுந் திறமையையும் சிந்தனா சக்தியையும் அவர் பயன்படுத்த வேண்டும். ஒரு கைத்தொழிலை அடிப்படையாக வைத்துத் தன்னுடைய மாணவர்களுக்குத் தான் பெற்றுள்ள அறிவைப் (பேச்சின் மூலம்) போதிக்க வேண்டும். இதன் மூலம் போதனா முறையில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படும். ஆசிரியரின் கண்ணோட்டத்திலும் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படும். இதுவரை மேற்பார்வை அதிகாரிகளின் அறிக்கை களை வைத்துக் கொண்டுதான் எதையும் மதிப்பிட்டார்கள். மேற்பார்வை அதிகாரி எதை விரும்புவார் என்பதை யூகித்து அதைத்தான் நீங்கள் செய்ய விரும்பினீர்கள். ஏனென்றால், அப்போது தான் உங்களுடைய ஸ்தாபனங்களுக்கு அதிகப் பணம் கிடைக்கும். உங்களுக்கு உயர்ந்த சம்பளம் கிடைக்கும். ஆனால் புது ஆசிரியர் இவைகளிலெல்லாம்

நாட்டங்கொள்ளமாட்டார். ''நான் என்னுடைய மாணவனைச் சிறந்த மனிதனாக்க வேண்டும். அவ்வாறு செய்து விட்டால், அவ்வாறு செய்யும்போது என்னுடைய திறமையையெல்லாம் பயன்படுத்தியிருந்தால், நான் என்னுடைய கடமையைச் செய்தவனாவேன். அதுவே எனக்குப் போதும்'', என்று அவர் கூறுவார்.[15]

III

கிராம மக்களுக்காகவே இக்கல்வி

கிராமத்தில் உள்ள குழந்தைகளை முன் மாதிரியான கிராமவாசிகளாக்குவதற்காகவே இந்தக் கல்வி வகுக்கப் பட்டது. இது பிரதானமாக அவர்களுக்காகவே தயாரிக்கப் பட்டது. இதற்கு வேண்டிய உள்ளுணர்ச்சியெல்லாம் கிராமங்களிலிருந்தே வந்தது. சுயராஜ்யத்தை அதன் அடித்தளத்திலிருந்தே நிர்மாணிக்க விரும்பும் காங்கிரஸ் காரர்களுக்குக் குழந்தைகளை அலட்சியம் செய்யத் தைரியம் வராது. வெளிநாட்டு ஆட்சி நம்மை அறியாமல் - ஆனால் அதே சமயம் நிச்சயமாக - குழந்தைகளின் கல்வியுடன் தொடங்கியது. தற்போதுள்ள ஆரம்பக் கல்வியென்பது ஒரு கேலிக் கூத்தாகும். இந்தியாவில் உள்ள கிராமங்களின் தேவையை, ஏன் நகரங்களின் தேவையைக்கூட கவனியாது அது வகுக்கப்பட்டிருக்கிறது. நகரத்தைச் சேர்ந்த குழந்தைகளோ அல்லது கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளோ, அவர்களையெல்லாம் இந்தியாவில் எது சிறந்ததோ, எது நிலைத்து நிற்கக்கூடியதோ அதனுடன் இணைக்கக் கூடியது ஆதாரக்கல்வி. அது உடலையும் மனதையும் வளர்க்கிறது. குழந்தையானது இந்தியப் பண்பாட்டில் படிமானம் கொள்ளுமாறு செய்கிறது; அப்படிப் பட்ட எதிர்காலத்தை அடைவதில், ஒரு மாணவன் அல்லது மாணவி தனது பள்ளிப்படிப்பைத் தொடங்கும் போதிருந்தே தனக்குரிய பங்கை ஏற்குமாறு செய்கிறது.[16]

அத்தியாயம் 14

விவசாயமும் கால்நடை வளர்ப்பும்—I

விவசாயம், கால்நடை முக்கியம்

நமது கிராமவாசிகள் விவசாயத்தையும், உழுவதற்குக் கால்நடையையும் நம்பியிருக்கிறார்கள். இதைப் பற்றி எனக்கு அவ்வளவு தெரியாது; ஏனென்றால் எனக்கு இதில் நேரடி அனுபவம் இல்லை. ஆனால் விவசாயமோ அல்லது கால்நடையோ இல்லாத ஒரு கிராமம் கூட இல்லை. எருமை இருக்கிறது; ஆனால், கொங்கணம் முதலிய ஒருசில இடங்கள் தவிர, அது விவசாயத்திற்கு அதிகம் உபயோகப் படுத்தப்படுவதில்லை. நம்முடைய ஊழியரானவர் தமது கிராமத்தில் உள்ள கால்நடை வளத்தில் கவனமாக இருக்க வேண்டும். இந்த ஆஸ்தியை நாம் சரிவரப் பயன்படுத்தா விட்டால், இந்தியாவுக்குப் பெருங்கேடு சூழும்; நாமும் அழிந்துவிடுவோம். ஏனென்றால் அப்போது இந்த மிருகங்கள் - மேற்கு நாடுகளைப் போலவே - நமக்கு ஒரு பொருளாதாரச் சுமையாகி விடும். அவைகளைக் கொல்வதைத் தவிர வேறு வழி இருக்காது!

"விவசாய" ஊழியர் தேவை

இந்த நாட்டு மக்களுக்கு எப்போதும் தவறாத, நிரந்தர ஆதரவாக இருப்பது விவசாயம் ஒன்றே என்ற நம்பிக்கை ஆரம்ப முதலே எனக்கு இருந்து வருகிறது. நாம் அதை மேற்கொள்வதுடன் எந்த அளவு அதை அடிப்படையாகக் கொண்டு முன்னேற முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். அதருக்குப் பதிலாக, விவசாயத்தில் நிபுணர்களாகி நாட்டிற்குச் சேவை செய்ய நம்முடைய இளைஞர்களில் சிலர் முன்வந்தால், நான் அதற்காகக் கவலைப்படமாட்டேன். நாம் விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. ஆட்சி நம்முடைய கையில் இருந்தாலொழிய விவசாயத்தில் முன்னேற்றங் காண முடியாதென்று இதுவரை நான் நம்பிவந்தேன். இவ்விஷயத்தில் என்னுடைய கருத்து இப்போது சிறிது மாறுதலடைந்து கொண்டு வருகிறது.

தற்போதைய சூழ்நிலைகளிலும் நாம் சிறிது முன்னேற்றங் காணலாம்; வரி செலுத்திய பின்பு கூட விவசாயிக்குச் சிறிது வருமானம் கிடைக்குமாறு செய்யலாம் என்று இப்போது நான் உணருகிறேன். விவசாய அபிவிருத்தியின் மூலம் விவசாயிக்குக் கிடைக்கும் அதிகப்படியான வருமானம் என்னவாக இருந்தாலும், அதை ஏதாவது ஒரு காரணங்காட்டி அந்நிய அரசாங்கம் விழுங்கி விடும் என்று ஜவகர்லால் கூறுகிறார். ஆனால் இவ்வித நிலைமை இருந்தாலும்கூட விவசாயத்தைப் பற்றி நாம் கூடியவரை அறிவு விளக்கம் பெற்று அதை விவசாயிகளிடையே பரப்புவதற்கு அந்நிலை தடையாக இருக்கக் கூடாது என நான் உணருகிறேன். விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டால் நாம் அதை ஆட்சேபிக்கலாம்; அதை எதிர்க்குமாறு மக்களுக்கும் கற்றுக் கொடுக்கலாம். இவ்வாறு கொள்ளையடிக்க முடியாது என்பதை அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்திவிடலாம். ஆகையால் விவசாயத்தில் அக்கறை கொள்ளக்கூடிய ஊழியர்களை நாம் இனிமேல் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.[1]

ஒரு பானை சோற்றுக்கு...

ஆகவே, விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்ற எல்லா வகையான கிராமக் கைத்தொழில்கள் ஆகியவற்றின் புனருத்தாரணத்தின் மூலம் மக்களுடைய வாழ்க்கை நிலைமையில் அபிவிருத்தி காண்பதற்கான வழி வகைகளைப் பற்றி நான் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறேன். ஐந்து அல்லது ஆறு கிராமங்களில் நான் வெற்றியடைந்தால்கூட, என் பிரச்னை தீர்ந்ததாகும். ஏனென்றால் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.[2]

எல்லா நேரமும் விவசாயமா?

அஹிம்சையை மேற்கொண்டு, சத்தியத்தை ஆராதித்து, இயற்கையான முறையில் பிரம்மச்சர்யத்தையுங் கடைப்பிடிக்கும் ஒருவனுக்கு, உடல் உழைப்புத் தான் உண்மையான வரப்பிரசாதமாகும். இந்த உழைப்பு

விவசாயம் ஒன்றைத்தான் சார்ந்ததாக இருக்க முடியும். ஆனாலும் தற்போதைக்காவது, எல்லோரும் அதை மேற்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. ஆகையால் ஒருவர் எப்போதும் நிலத்தை உழுது கொண்டிருப்பதைக் காட்டிலும் - அதை லட்சியமாக வைத்துக் கொண்டு நூற்கலாம். நெசவு செய்யலாம் அல்லது தச்சு, கொல் வேலை செய்யலாம்.[3]

கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு கவிதை படித்தேன். அதில் உலகத்தின் தந்தை விவசாயியே என வருணிக்கப்பட்டிருந்தது. ஆண்டவன் தான் நம்மைப் பராமரிப்பவர் என்றால், விவசாயி அவருடைய கையாக விளங்குகிறான். நாம் அவனுக்குச் செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிக் கொடுக்க, என்ன செய்யப் போகிறோம்? இதுவரை நாம் அவனுடைய கடின உழைப்பைக் கொண்டு தான் வாழ்ந்து வந்திருக்கிறோம். நாம் மண்ணிலிருந்து நமது பணியைத் தொடங்கியிருக்க வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்ய முடியவில்லை. இதில் குற்றம் ஓரளவு என்னுடையது தான்.

நெற்றி வேர்வை நிலத்தில் விழ...

ஆனால் அரசியல் அதிகாரம் இல்லாமல், விவசாயத்தில் அடிப்படையான சீர்திருத்தம் செய்வது சாத்தியமில்லையென்று கூறக் கூடியவர்கள் இருக்கிறார்கள். பெரும் அளவில் நீராவியையும், மின்சாரத்தையும் பயன்படுத்துவதன் மூலம் விவசாயத்தைத் தொழில் மயமாக்கலாம் என்று அவர்கள் கனவு காண்கிறார்கள். விரைவான பலன்கள் கிடைக்கவேண்டுமென்பதற்காக, நிலவளத்துடன் பேரம் பேசுவது, பயங்கரமான விளைவை ஏற்படுத்தக்கூடிய குறுகிய கண்ணோட்டம் கொண்ட கொள்கையாகிவிடும். இது நிலத்தின் சத்து முழுவதையும் அகற்றி விடுவதில் தான் போய் முடியும். வாழ்க்கைக்கு வேண்டிய உணவைப் பெறுவதற்குத் தனி ஒருவன் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட வேண்டுமென்றே பூமித்தாய் கேட்கிறாள்.

விவசாயப் பொருளாதாரம்

இந்த முறை மெதுவாகப் பலன்தரத்தக்கது, முற்போக்கற்றது என்று மக்கள் குறை கூறலாம். திடீரென்று பெரும் பலன்கள் கிடைத்து விடுமென்று நான் வாக்குறுதி கூறவில்லை. எனினும், நிலமும் அதில் வாழும் மக்களும் வளமடைவதற்கான திறவுகோல் இதில் இருக்கிறது. கிராமப் பொருளாதாரத்தில் அடிப்படைத் தத்துவமே சுகாதாரமான, சத்துள்ள உணவு கிடைக்கவேண்டுமென்பதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. ஒரு விவசாயியின் வருமானத்தில் பெரும் பகுதி அவனுக்கும் அவனுடைய குடும்பச் சாப்பாட்டிற்கும் போய் விடுகிறது. மற்ற விஷயங்களெல்லாம் இதற்குப் பின்னால் தான் வருகின்றன. நிலத்தில் உழுது பாடுபடுபவனுக்கு நல்ல உணவு கிடைக்கட்டும். நல்ல, சுத்தமான பால், நெய், எண்ணெய் ஆகியவையும் அசைவமாக இருந்தால் மீன், முட்டை, மாமிசம் ஆகியவை யும் போதுமான அளவு கிடைக்கட்டும். உதாரணமாக, அவன் அரை வயிற்றுச் சாப்பாடு சாப்பிடுபவராக இருந்தால், போதுமான சத்துள்ள உணவு சாப்பிடாதவராக இருந்தால், அழகான ஆடைகளால் அவனுக்கு என்ன பயன்? குடிதண்ணீர் விநியோகம் போன்ற மற்ற விஷயங்களெல்லாம் இதற்குப் பிறகு வருபவைதான். இவைகளைப் பற்றி யெல்லாம் யோசிக்கும்போது, இயற்கையாகவே மேலும் பல பிரச்னைகள் எழும். விவசாயப் பொருளாதாரத்தில் இயந்திரக் கலப்பைகள் இருக்கும் இடத்திலும், மின்சாரத்தால் தண்ணீர் இறைப்பதிலும் மற்றும் இதுபோன்ற விஷயங்களிலும், கால் நடைகளுக்கு உரிய இடம் என்னவென்ற பிரச்னையும் அது போன்ற மற்றப் பிரச்னைகளும் தோன்றும். இவ்வாறு படிப்படியாக, கிராமப் பொருளாதாரத்தின் முழுத்தோற்றமும் தெரியும். இவ்வாறு அமையும் ஒரு சித்திரத்தில், நகரங்கள் இயற்கையற்றவையாகத் தோன்றாமல், இன்று இருப்பதைப்போல நாட்டின் கொப்புளங்களாக, மக்கள் நெரிசலாக வாழும் இடங்களாகத் தோன்றாமல், தங்களுக்கு இயற்கையாக உள்ள இடத்தை வகிக்கும். நம் கைகளின் உபயோகம் என்னவென்பது நமக்கு மறந்து போய்விடுமோ என்ற அபாயம் தற்போது இருந்து கொண்டிருக்கிறது. மண்ணைத் தோண்டுவது எவ்வாறு, பண்படுத்துவது எவ்வாறு.

என்பதை மறந்து விடுவது நம்மையே மறந்து விடுவது போலாகும். நகரங்களுக்குச் சேவை செய்துவிட்டாலே நீங்கள் மந்திரிப் பதவி வகிக்கும் பொறுப்பை நிறைவேற்றி விட்டதாக எண்ணினால், அது, ஏழு இலட்சம் கிராமங்களில் தான் இந்தியா அடங்கியிருக்கிறது என்ற உண்மையை மறந்ததாகும். ஒரு வியாபாரத்தில் மனிதன் தனது ஆன்மாவை இழந்து உலகம் முழுவதையுமே பெற்றாலும் அதனால் அவனுக்கு என்ன லாபம்![4]

விவசாயியின் ஆன்மிகம்

நீங்கள் இந்திய விவசாயிகளிடமும் அவர்கள் உங்களிடமும் பேச ஆரம்பித்தவுடன், அவர்கள் வாக்கில் விவேகம் நிறைந்திருப்பதைக் காண்பீர்கள். வெளிக்கு அவர்கள் கரடு முரடாகத் தோன்றினாலும் உள்ளே ஆன்மிகக் களஞ்சியமாக விளங்குவதைக் காண்பீர்கள். இதைத் தான் நான் கலாசாரம் என்று கூறுகிறேன் - இப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் மேல் நாடுகளில் காண முடியாது. நீங்கள் ஒரு ஐரோப்பிய விவசாயியிடம் உரையாடிப் பாருங்கள். அவர் ஆன்மிக விஷயத்தில் அக்கறையில்லாமலிருப்பதைக் காணலாம்.[5]

முன்னுதாரணமான குடிமகன்

இந்திய விவசாயியைப் பொறுத்தவரை, அவன் உடம்பு கரடுமுரடானதாக இருக்கலாம். ஆனால் அதற்குள் சந்ததி சந்ததியாக வந்த ஒரு கலாசாரம் மறைந்திருக்கிறது. மேலே தெரியும் இந்தக் காட்டை அகற்றி விடுங்கள்; அவனுடைய ஏழ்மையையும், அறியாமையையும் போக்கி விடுங்கள். அப்போது, கலாசாரம் பொருந்திய பண்பட்ட சுதந்திரமான குடிமகன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த முன் உதாரணமாக அவன் திகழ்வதைக் காண்பீர்கள்.[5]

கற்பிக்க வேண்டிய விஷயங்கள்

நேரத்தையும் பணத்தையும் எவ்வாறு சிக்கனமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும், சுகாதாரத்தை எவ்வாறு போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதையும், நாம் அவனுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். நம்முடைய

கிராமங்கள் குப்பை மேடுகள் என்று லயனல் கர்ட்டிஸ் விவரித்துள்ளார். அவைகளை நாம் மாதிரி கிராமங்களாக்க வேண்டும். நமது கிராமங்களைச் சுற்றி நல்ல சுத்தமான காற்று இருந்தாலுங்கூட, கிராம மக்களுக்கு அது கிடைப்பதில்லை. புத்தம் புதிய உணவு வகைகள் அவர்களைச் சுற்றி விளைந்து கொண்டிருந்தாலுங்கூட அவர்கள் அந்த உணவு வகைகளை உண்பதில்லை. இந்த உணவு விஷயத்தில் நான் ஒரு இலட்சிய மனிதனைப் போலப் பேசுகிறேன்; ஏனென்றால் ஒவ்வொரு கிராமமும் அழகு நிறைந்த ஒரு இடமாக வேண்டும் என்பதுதான் எனது வாழ்க்கையின் இலட்சியம்.[7]

பொறுமை வேண்டும்

நமது கிராமங்களை இறுக்கிப் பிடித்திருக்கும் மூன்று நோய்களை நாம் குணப்படுத்த வேண்டும். அவைகளாவன : (1) கிராம சுகாதாரக் குறைவு (2) பற்றாக்குறை உணவு (3) முயற்சியின்மை.......... அவர்கள் தங்களுடைய சொந்த நலனில் அக்கறைப்பட்டுக் கொள்வது கிடையாது; நவீன சுகாதார முறைகளைப் போற்றுவதில்லை. பூமியைக் கிளறுவது, அல்லது வழக்கமாக அவர்கள் செய்து கொண்டு வரும் வேலைகளைச் செய்வது ஆகியவற்றுக்கு அப்பால் உடம்பை அலட்டிக் கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. இந்தக் கஷ்டங்களெல்லாம் உண்மையானவை. கடுமையான வையுங் கூட. ஆனால் இதற்காக நாம் மனக்குழப்பம் அடைந்து விடக் கூடாது. நம்முடைய இலட்சியத்தில் நமக்குத் தணியாத நம்பிக்கை இருக்க வேண்டும். நாம் மக்களிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். கிராம சேவையைப் பொறுத்த வரை நாமும் கற்றுக்குட்டிகள் தானே? நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு நோயை நாம் போக்க வேண்டியதிருக்கிறது. பொறுமையும் இடைவிடாத முயற்சியும் மட்டும் நமக்கு இருக்குமானால் மலையைப் போன்ற கஷ்டங்களையும் சமாளிக்க முடியும். குணப்படுத்த முடியாத நோய் இருப்பதாகக் கூறப்பட்டாலும் பிணியாளர் களை விட்டுத் தாதி(நர்சு)கள் விலகிச் செல்ல முடியுமா? அதைப்போன்ற ஒரு நிலையில்தான் நாம் இருக்கிறோம்.[8]

தொழில் கல்வி

முறையாகவும் இலாபகரமாகவும் வருடம் பூராவும் கிராமவாசிகள் வேலை செய்யுமாறு அவர்களைத் தூண்ட வேண்டும். அல்லது அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்; அது நிலத்திலாயினும் சரி, கிராமத் தொழில் களிலாயினும் சரி. கிராமங்களில் நாம் கற்றுக் கொடுக்க வேண்டிய மிகப் பெரிய கல்வி இதுவே.[9]

இயற்கையான பண்பாடு

கிராமங்களிடம் காணக்கூடிய பண்படாத கரடுமுரடான தோற்றம் ஒருபுறம் இருந்தாலும் - ஒவ்வொரு தரமாக எடுத்துக் கொண்டு பார்த்தால் - மனித இயல்பில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு பார்த்தால் உலகில் உள்ள எந்தக் கிராமவாசியையும் விட அவர்கள் சிறந்தவர்களாகவே இருப்பார்கள். யுவான் சுவாங் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை இங்கு வந்துள்ள யாத்திரீகர்களில் பெரும்பாலானவர்கள் கூறியுள்ளவையே இதற்குச் சான்றாகும். இந்தியாவில் உள்ள கிராமங்களில் இயற்கையாகக் காணப்படும் கலாசாரம், ஏழைகளின் வீடுகளில் ஒருவன் காணும் கலை, கிராம மக்கள் நடந்து கொள்ளும் முறையில் உள்ள கட்டுப்பாடு ஆகியவை களெல்லாம் நிச்சயமாக, நீண்ட காலமாக அவர்களை ஒன்றாக இணைத்து வைத்திருந்த மதத்தினால் ஏற்பட்டவைதான்.[10]

சுரண்டலை ஒழிக்க வேண்டும்

நிலமற்ற தொழிலாளியாகவோ அல்லது தனது நிலத்தில் தானே பாடுபடும் நிலச் சொந்தக்காரராகவோ உள்ள விவசாயிக்குத்தான் முதலிடம். இந்தப் பூமியைக் காப்பாற்றுபவன் அவனே. நிலம் அவனுக்குத்தான் உரிமை யானது, அவனுக்குத்தான் உரிமையாக வேண்டும். பாடுபடாத நிலச்சுவான்தாருக்கோ அல்லது ஜமீன்தாருக்கோ அல்ல. ஆனால் அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் தொழிலாளி, உழைக்காத நிலச்சொந்தக்காரரைக் கட்டாயப்

படுத்தி வெளியேற்ற முடியாது. நிலச்சுவான்தார் தன்னைச் சுரண்டுவதைச் சாத்தியமற்றதாகச் செய்யும் முறையில் அவன் பணியாற்ற வேண்டும். விவசாயிகளிடையே மிக நெருங்கிய ஒத்துழைப்பு முற்றிலும் தேவை. இதை இலட்சியமாகக் கொண்ட, விசேஷமான அமைப்புகள் அல்லது குழுக்கள் ஏற்கனவே உள்ள இடங்களில் அவைகளில் அவசியமான சீர்திருத்தம் செய்ய வேண்டும். விவசாயிகள் பெரும்பாலும் எழுத்தறிவில்லாதவர்களாய் இருக்கிறார்கள். வயது வந்தவர்கள், பள்ளிக்குச் செல்லும் வயதுள்ள இளைஞர்கள் ஆகிய இருதரப்பினருக்குமே - ஆண்கள், பெண்கள் ஆகிய இருதரப்பினருக்குமே கல்வி கற்பிக்க வேண்டும். நிலமற்ற தொழிலாளர்களுக்கு, கண்ணியமான வாழ்க்கை அளிக்கக்கூடியவாறு அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் - அதாவது, அவர்களுடைய உடல்நலத்துக்குத் தேவையான சத்துள்ள உணவும், இருப்பிட வசதியும், ஆடைகளும் கிடைக்கும் அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும்.[11]

தலைமை அமைச்சர் பதவி விவசாயிக்கு

எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால், நம்முடைய கவர்னர் - ஜெனரலும் தலைமை அமைச்சரும் விவசாயிகள் மத்தியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்தப் பூலோக சாம்ராஜ்யத்தின் வாரிசுகள் விவசாயிகளே என்று சிறு பையனாக இருந்தபோது நான் பள்ளிப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். நிலத்தில் பாடுபட்டு, தாங்கள் உற்பத்தி செய்ததை உண்டு வாழ்பவர்களையே இது குறிப்பிடுகிறது. இப்படிப்பட்ட விவசாயிகள் மேற்கண்ட உயர்ந்த பதவிகளை வகிப்பதற்கு, நல்ல நடைமுறை அறிவும், மகத்தான துணிச்சலும், பிறர் எள்ளளவும் குற்றஞ்சாட்ட முடியாத நாணயமும், ஐயத்திற்கு இடமில்லாத தேச பக்தியும் உடையவர்களாய் இருந்தால் போதுமானது - அவர்கள் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. இப்போது அவர்களை நாம் அடிமைப்படுத்தியிருக்கலாம். ஆனாலும் செல்வத்தை

உண்மையாக உற்பத்தி செய்பவர்கள் என்ற முறையில் அவர்கள் தான் உண்மையான எஜமானர்கள். அரசு அலுவலகத்தில் உள்ள உயர்ந்த பதவிகளையும் விவசாயிகளே வகிக்க வேண்டும் என்று என்னிடம் ஆலோசனை கூறப்பட்டது. அவர்கள் தகுதியானவர்களாக வும், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வேலை சம்பந்தமான அறிவு உடையவர்களாகவும் இருந்தால் இந்த யோசனையை நான் ஏற்றுக் கொள்வேன். இப்படிப்பட்ட விவசாயிகள் கிடைக்கும்போது, அமைச்சர்களும், மற்றவர்களும் விலகிக் கொண்டு அவர்களுக்கு இடமளிக்க வேண்டுமென்று, பகிரங்கமாகவே நான் வேண்டுகோள் விடுவேன்.[12]

அத்தியாயம் 15

விவசாயமும் கால்நடை நலனும் – II

நிலப்பிரச்னை

நில உடைமை

இந்தப் பூமியைக் காப்பாற்றுபவன் விவசாயியே. ஆகையால் நியாயமாக நிலம் அவனுக்கே சொந்தமாக வேண்டும். ஊரிலில்லாத நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது ஜமீந்தாருக்கோ சொந்தமாக இருக்கக்கூடாது.[1]

நிலமும் மற்ற எல்லாச் சொத்துக்களும், யார் அதில் பாடுபடுகிறார்களோ அவர்களுக்குத்தான் சொந்தம். ஆனால் துரதிருஷ்டவசமாக, இந்தச் சாதாரண உண்மை, பாட்டாளி மக்களிடமிருந்து மறைந்து இருந்து வந்திருக்கிறது; அல்லது மறைத்து வைக்கப்படுகிறது.[2]

அஹிம்சை தான் ஒரே வழி

நீங்கள் பயிரிடும் நிலம் உங்களுக்கே சொந்தமாக வேண்டும் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் அது உடனடியாக உங்களுக்குச் சொந்தமாகி விட முடியாது. நீங்கள் அதைப் பலாத்காரமாக ஜமீன்தார்களிடமிருந்து பெற முடியாது. அஹிம்சைதான் ஒரே வழி. உங்களுடைய பலத்தை நீங்களே உணர்ந்திருப்பது தான் ஒரே வழி.[3]

வறுமைக்கு காரணம்

கண்ணியமாக உயிர் வாழ்வதற்கு எவ்வளவு நிலம் தேவையோ அதற்கு மேல் எந்த மனிதனும் நிலம் வைத்திருக்கக் கூடாது. இந்தியாவில் உள்ள பாமர மக்களை வருத்தும் வறுமைக்குக் காரணம், அவர்களுக்குத் தங்களுடையது என்று சொல்லக்கூடிய நிலம் இல்லாமலிருப்பது தான் என்ற உண்மையை யார் தான் மறுக்க முடியும்?

மனதை மாற்றச் சிறிது காலமாகும்

ஆனால், இதற்கான சீர்திருத்தத்தை நொடிப் பொழுதில் கொண்டு வந்துவிட முடியாது என்பதை உணர

வேண்டும். இதை அஹிம்சா வழியில் சாதிக்க வேண்டு மானால், நிலம் வைத்திருப்போர் நிலம் இல்லாதவர்கள் ஆகிய இரு சார்பினரின் மனதையும் மாற்றித்தான் ஆக வேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட மாட்டாது என்ற உறுதியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். நிலம் இல்லாத ஏழைகளுக்கு, அவர்கள் விருப்பத்திற்கு முரணாக எதுவும் செய்யுமாறு யாரும் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது என்பதையும், அஹிம்சையை அதாவது தன்னைத் தானே வருத்திக் கொள்ளும் கலையைக் கற்பதன் மூலந்தான் அவர்கள் தங்களுடைய உரிமையைப் பெறமுடியும் என்பதையும் போதிக்க வேண்டும்.[4]

நிலம் உங்களுக்கு எவ்வாறு சொந்தமோ அதைப் போன்று அதில் விவசாயம் செய்பவர்களுக்கும் சொந்தம் என்பதை நான் நிலச்சொந்தக்காரர்களுக்குக் கூறுகிறேன்.[5]

அடிப்படை விரோதமில்லை

இயற்கையாய் அமைந்த எந்த அவசியத்தினாலும் எல்லா முதலாளிகளும் நிலச்சொந்தக்காரர்களும் சுரண்டல் காரர்களாய் இருக்கிறார்கள் என்று நான் நம்பவில்லை. அல்லது, அவர்களுடைய நலனுக்கும், பொது மக்களுடைய நலனுக்கும் அடிப்படையான, தீர்த்து வைக்க முடியாத முரண்பாடு எதுவும் இருப்பதாகவும் நான் கருதவில்லை... நமக்குத் தேவையானது, நிலச் சொந்தக்காரர்களையும் முதலாளிகளையும் ஒழித்துக் கட்டுவதல்ல. அதற்குப் பதிலாக அவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள உறவை, இன்னும் தூய்மையானதாகவும், மகிழ்ச்சிகரமான தாகவும் ஆக்குவதேயாம்.[6]

நிலச்சுவான்தார் - குத்தகைக்காரர் ஒத்துழைப்பு

என்னுடைய நோக்கம், உங்கள் உள்ளத்தைத் தொட்டு மனதை மாற்றுவதுதான். அப்போது நீங்கள் உங்களுடைய சொந்த சொத்துக்கள் எல்லாவற்றையும், உங்களுடைய குத்தகைதாரர்களின் தர்மகர்த்தா ஆக நினைத்துக் கொண்டு, அவர்களுடைய நலனுக்கே அதிகமாக அதை உபயோகிப்பீர்கள். காங்கிரசுக்குள்ளேயே சோஷலிஸ்ட் கட்சி

என்ற ஒரு புதுக்கட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நான் அறிவேன். காங்கிரசைத் தனது கொள்கைக்கு திருப்ப முடிந்தால் என்ன நடைபெறுமென்பது எனக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய கோடிக்கணக்கான மக்களிடையே முற்றிலும் நாணயமான, குற்றச்சாட்டுக்கு இடமில்லாத பொது வாக்கெடுப்பு நடத்துவதானால், அவர்கள் முழுவதுமாகப் பணக்காரர்களிடமுள்ள சொத்தைப் பறிமுதல் செய்வதற்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். முதலாளிகள் - தொழிலாளர், நிலச்சுவான்தார் - குத்தகைதாரர் ஆகியோருடைய ஒத்துழைப்புக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் நான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.[7]

வர்க்கப் போராட்டம் வராமல் தடுக்க...

ஆனால் நான் ஒரு எச்சரிக்கை செய்ய வேண்டும். ஆலைச் சொந்தக்காரர்கள், ஆலைகளின் ஏகபோக உரிமையாளர்களல்ல. ஆலைத் தொழிலாளர்களும் அவர்களைப் போன்றே ஆலைகளில் சம பங்குதாரர்களாவர். எப்போதுமே இதை ஆலைச் சொந்தக்காரர்களுக்கு நான் கூறி வருந்தியிருக்கிறேன். அதே போன்று, உங்களுடைய நிலத்தின் உரிமை உங்களைப் போன்றே விவசாயிகளுக்கும் உள்ளதாகும். ஆகையால் உங்களுக்குக் சிடைக்கும் லாபத்தை ஆடம்பரமான, மிதமிஞ்சிய வாழ்க்கைக்குப் பயன்படுத்தாமல், அவைகளை விவசாயிகளின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். உங்களுடைய குத்தகைதாரர்கள் உங்களிடம் நல்லுறவு கொள்ளுமாறு ஒருமுறை செய்து விட்டீர்களானால், உங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போன்று அவர்களுடைய நலனும் பாதுகாப்பாக இருக்கும் என்று அவர்கள் உணருமாறு செய்துவிட்டீர்களானால், உங்களுக்கும் அவர்களுக்கு மிடையே மோதல் ஏற்படாது. வர்க்கப் போராட்டம் உண்டாகாது என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.[8]

விவசாயி தன் பலத்தை உணர்ந்தால்?

ஜமீன்தாரை ஒழித்துக்கட்ட நான் விரும்பவில்லை. அதே போன்று ஜமீன்தார் அவசியமானவர் என்றும் நான்

கருதவில்லை. அஹிம்சா முறையின் மூலம் ஜமீன்தார்கள், மற்ற முதலாளிகள் ஆகியோருடைய மனதை மாற்ற விரும்புகிறேன். ஆகையால் என்னைப் பொறுத்தவரை, வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதில்லை. எதிர்ப்பு மிகவும் குறைச்சலாக இருக்கும் ஒருவழியில் செல்வதுதான் அஹிம்சையின் முக்கிய அம்சம். விவசாயம் செய்பவர்கள் தங்களுடைய சக்தியை உணரும் போது ஜமீன்தாரி என்னும் கொடுமை, சக்தி இழந்துவிடும். தங்களுடைய உணவுக்கும், உடைக்கும், படிப்புக்கும் குழந்தைகளின் கண்ணியமான படிப்புக்கும் போதுமானது அளிக்கப்படாவிடில், தாங்கள் நிலத்தில் பாடுபடப் போவதில்லையென்று விவசாயிகள் மட்டும் கூறிவிடுவார்களானால், பாவம், ஏழை ஜமீன்தார் என்ன செய்ய முடியும்? உண்மையில், உழைப்பவன் தான், எதை உற்பத்தி செய்கிறானோ அதற்குச் சொந்தக்காரனா வான். கெட்டிக்காரத்தனமான முறையில் உழைப்பாளிகள் ஒன்று சேர்வார்களானால், அவர்கள் எதிர்க்க முடியாத ஒரு சக்தியாவார்கள். வர்க்கப் போராட்டம் அவசியமில்லை யென்று நான் கருதுவதற்கு இதுவே காரணம். ஆனால் அதேசமயம், அது தவிர்க்க முடியாதது என்று நான் கருதுவதாக இருந்தால், அதைப் பிரசாரம் செய்யவோ போதிக்கவோ தயங்கமாட்டேன்.

முன் மாதிரியான ஜமீன்தார்

ஒரு முன் மாதிரியான ஜமீன்தார், தற்போது விவசாயி தாங்கிக் கொண்டிருக்கும் சுமையில் பெரும் பகுதியை உடனடியாகக் குறைத்து விடுவார். அவர் விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களுடைய குறைகள் ன்னவென்பதை அறிந்து கொள்வார். விரக்தியால் இன்று விவசாயிகளின் வாழ்க்கை நசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக அவர்களுடைய வாழ்க்கைக்கு ஜமீன்தார் ம்பிக்கையூட்டுவார். சுகாதாரத்தையும் உடல் நலத்தையும் ற்றி அவர்களுக்குள்ள அறியாமையைக் காணும்போது வருக்கு நிம்மதி ஏற்படாது. கிராமவாசிக்கு வாழ்க்கையின் த்தியாவசியத் தேவைகள் கிடைக்க வேண்டுமென்பதற்

காக, அவர் தானே வறுமை வாழ்க்கைக்கு இறங்கி வருவார்; தமது பொறுப்பில் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஆராய்வார்; பள்ளிகளை ஏற்படுத்துவார்; இந்தப் பள்ளிகளில் விவசாயிகள் குழந்தைகளுடன் தனது பிள்ளைகளையும் சேர்த்துப் படிக்க வைப்பார். கிராமக் கிணறையும், குளத்தையும் சுத்தம் செய்வார். தாங்கள் வசிக்கும் சாலைகளைத் தாங்களே கூட்டவும், தங்களுடைய கக்கூசுகளைத் தாங்களே சுத்தம் செய்யவும் - தாமே இவைகளைச் செய்வதன் மூலம் - விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பார்; விவசாயிகள் தங்கு தடையின்றி உபயோகப் படுத்திக் கொள்வதற்காக தன்னுடைய சொந்தத் தோட்டங்களை முற்றிலுமாகத் திறந்து விட்டு விடுவார்; தமது சொந்த இன்ப வாழ்க்கைக்காக வைத்துக் கொண்டிருக்கும் அவசியமற்ற கட்டிடங்களில் பெரும்பாலானவற்றை ஆஸ்பத்திரிக்காகவும் பள்ளிக்கூடத்திற்காகவும் மற்றும் இது போன்றவற்றிற்காகவும் பயன்படுத்துவார். காலப்போக்கை மட்டும் முதலாளித்துவ வர்க்கத்தினர் அறிந்து கொள்வார் களானால், தங்களுடைய உடமைகள் மீதெல்லாம் ஆண்டவன் உரிமை அளித்திருப்பதாகக் கொண்டுள்ள கருத்துக்களை மாற்றிக் கொள்வார்களானால், இன்று கிராமங்கள் என்ற பெயரில் இருக்கும் ஏழு இலட்சம் கிராமங் களையும் வெகு விரைவில் சாந்தி, சுகாதார, மகிழ்ச்சி ஸ்தலங்களாக மாற்ற முடியும். முதலாளியானவர், ஜப்பானில் உள்ள (நிலப்பிரபுக்களான) சாமுராய்களைப் பின்பற்று வதானால், அவர் நஷ்டமடைவதற்கு எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக அவருக்கு எவ்வளவோ இலாபமுண்டு. ஆகவே இரண்டு வழிகள்தான் நம்முன் இருக்கின்றன; அவை தவிர்க்க முடியாதவையுங்கூட. அதாவது, முதலாளியானவர் தாமாக முன்வந்து தம்மிடமுள்ள சொத்துக்களை ஒப்புவித்துவிட்டு உண்மையான மகிழ்ச்சி பெற வேண்டும். முதலாளி காலாகாலத்தில் விழிப்பு அடையாவிட்டால், எழுச்சி பெற்ற, ஆனால் அறியாமையாலும், பஞ்சத்தாலும் பீடிக்கப்பட்ட, கோடிக்கணக்கான மக்கள் நாட்டில் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தி விடுவார்கள். எந்தச் சக்திவாய்ந்த அரசாங்கமும் பிரயோகிக்கக் கூடிய ஆயுதந்தாங்கிய படையும் இதைத் தவிர்க்க முடியாமற் போய்விடும்.[10]

ஜமீன்தார் பொறுப்புக்கள்

காலப்போக்கை ஜமீன்தார்கள் உணர்ந்து கொள்வது நலம். வெறும் வரி வசூலிப்பவர்களாக மட்டும் இருப்பதை அவர்கள் விட்டுவிட்டு தர்மகர்த்தாக்களாக வேண்டும்; அவர்களுடைய குத்தகைதாரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பர்களாக வேண்டும். ஜமீன் வருமானத்திலிருந்து தங்கள் சொந்தச் செலவுக்காக எடுத்துக் கொள்ளும் பணத்தை, ஒரு வரையறைக்குள் குறைத்துக் கொள்ள வேண்டும். திருமண விழாக்கள் மற்றும் அதைப் போன்ற சந்தர்ப்பங்களில் கட்டாயமாக வாங்கும் வெகுமதிகள், ஒரு விவசாயிடமிருந்து மற்றொரு விவசாயிக்கு நிலத்தை மாற்றும்போதோ அல்லது வரி செலுத்தவில்லையென்பதற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு விவசாயிக்கு மீண்டும் அதே நிலத்தை ஒப்படைக்கும் போதோ பெறப்படும் தொகைகள் போன்று ஆட்சேபணைக்குரிய மேல் வருமானங்களை அவர்கள் கைவிட்டு விட வேண்டும். வாரத்தை நிர்ணயம் செய்துவிடுவதுடன் விவசாயிகளுடைய நலனில் முழுமனதுடன் அக்கறை காட்ட வேண்டும். குழந்தைகளுக்காக நல்லமுறையில் நிர்வகிக்கப்படும் பள்ளிகளும், முதியோர்களுக்கான இரவுப் பள்ளிகளும், நோயாளிகளுக்கான ஆஸ்பத்திரிகளும் நடத்த வேண்டும். கிராமத்தின் துப்புரவைக் கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு தாங்கள் செய்யும் பலவகைப்பட்ட சேவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட கமிஷன் எடுத்துக் கொள்ளும் நண்பர்களே தாங்கள் என்பதைப் பல்வேறு வகைகளில் கிராமவாசிகளுக்கு நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் தாங்கள் அப்பதவியில் இருப்பதன் நியாயத்தை அவர்கள் மெய்ப்பிக்க வேண்டும். அவர்கள் காங்கிரஸ்காரர்களை நம்பவேண்டும். அவர்களே காங்கிரஸ்காரர்களாகி மக்களுக்கும், அரசாங்கத்துக்குமிடையே உள்ள ஒரு பாலந்தான் காங்கிரஸ் என்பதை அறிந்து கொள்ளலாம். மக்களுடைய உண்மையான நலனை மனதில் கொண்டுள்ள எல்லோருமே காங்கிரசின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதேசமயம், விவசாயிகள், ஜமீன்தார்களிடம்

தங்களுக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றுகிறார்களா என்பதைப் பார்த்துக் கொள்வார்கள். சட்டபூர்வமான பொறுப்புகளை நான் கூற வரவில்லை. அவர்களே நியாயம் என்று ஒப்புக்கொண்ட பொறுப்புக்களையே கூறுகிறேன். அவர்களிடமுள்ள நிலங்கள் எல்லாம் தங்களுக்கே பூரணமாகச் சொந்தமானவை, ஜமீன்தார்களுக்குக் கொஞ்சமும் சொந்தமானவையல்ல என்ற தத்துவத்தை அவர்கள் நிராகரித்து விடவேண்டும். அவர்கள் எல்லோரும் ஒரு கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. அவ்வாறு அவர்கள் இருக்க வேண்டும். இந்தக் குடும்பத்தின் தலைவராக ஜமீன்தார் இருந்து, பிறர் அவர்களுடைய உரிமைகளை ஆக்கிரமிக்காமல் காப்பாற்ற வேண்டும். சட்டம் எதுவாக இருந்தாலும் சரி, ஜமீன்தாரி முறை ஏற்கக் கூடிய ஒரு கருத்தாக இருக்க வேண்டுமானால், ஒரு கூட்டுக் குடும்பத்தைப் போன்று அது இருக்க வேண்டும்.

உமர்காலிப்

இராமர், ஜனகர் ஆகியோருடைய உதாரணங்களை நான் போற்றுகிறேன். மக்களுக்குப் பாதகமான, எதையும் தங்களுக்குச் சொந்தமென அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை. தாங்கள் உள்பட எல்லாவற்றையுமே மக்களுக்குத்தான் சொந்தமாக்கினர். மக்களால் அடைய முடியாத வாழ்க்கையை அவர்கள் நடத்தவில்லை. மக்களுடன் இணைந்த வாழ்க்கையே நடத்தினார்கள். ஆனால் அவர்கள் வரலாற்றுப் புருஷர்கள் அல்லவே என்று கருதப்படலாம். அப்படியானால் நாம் அந்த மாபெரும் உமர்காலிப் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். அவர் தம்முடைய பேரறிவாலும் அற்புதமான உழைப்பாலும் ஒரு பரந்த இராஜ்யத்தின் சக்கரவர்த்தியானாலும், ஒரு பாப்பரைப் போன்றுதான் வாழ்ந்தார். நமது காலடியில் இருந்த பெரும் கருவூலங்களின் அதிபராகத் தம்மைக் கருதிக் கொள்ளவில்லை. மக்களுடைய பணத்தை ஆடம்பரச் செலவுகளுக்குப் பயன்படுத்திய அதிகாரிகளுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கினார்.[11]

நிலப்பிரபுக்களுக்கு எச்சரிக்கை

நிலப்பிரபுக்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களைப் பற்றிச் சொல்லப்படுவதெல்லாம் உண்மையானால், அவர்களுடைய இறுதிக்காலம் தொலைவில் இல்லையென்று எச்சரிக்க விரும்புகிறேன். அவர்கள் இனிமேலும் பிரபுக்களாகவும் பண்ணையார்களாகவும் இருக்க முடியாது. அவர்கள் ஏழை விவசாயிகளுடைய தர்மகர்த்தாக்களானால், அவர்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது. பெயரளவில் தர்மகர்த்தாக்களாக இருப்பவர்களையே மனதிற் கொண்டு இதைச் சொல்கிறேன். இப்படிப்பட்ட தர்மகர்த்தாக்கள் தங்களுடைய உழைப்பிற்கும் தாங்கள் செலுத்தும் கவனத்திற்கும் எது நியாயமோ அதை மட்டும் தான் தங்களுக்கென எடுத்துக் கொள்வார்கள். அப்போது அவர்கள், எந்தச் சட்டமும் தங்களைப் பாதிக்க முடியாது என்பதை அறிவார்கள். விவசாயிகள் அவர்களுடைய நண்பர்களாக இருப்பார்கள்.[12]

மக்கள் அபிப்பிராயம்

தற்போதுள்ள ராஜாக்களும், மற்றவர்களும் ஏழை மக்களின் தர்மகர்த்தாக்களாவர் என எதிர்பார்க்க முடியுமா என்று கேட்கலாம். அவர்கள் தாங்களாகவே முன்வந்து தர்மகர்த்தாக்களாகா விட்டால், சூழ்நிலைகள் இந்தச் சீர்திருத்தத்தை வலியுறுத்தத்தான் செய்யும். இல்லையேல், அவர்கள் முற்றிலும் அழிந்து போவார்கள். பஞ்சாயத்து ராஜ்யம் அமைக்கப்படும் போது இம்சையால் எதைச் செய்ய முடியாதோ அதை மக்கள் அபிப்பிராயம் செய்யும். பொது மக்கள் தங்களுடைய பலத்தை உணராதவரை தான், ஜமீன்தார்களுக்கும், முதலாளிகளுக்கும், ராஜாக்களுக்கும் தற்போதுள்ள அதிகாரம் எல்லாம் செல்லுபடியாகும். ஜமீன்தாரி அல்லது முதலாளித்துவத்துடன் மக்கள் ஒத்துழையா விட்டால், அது சோகை பிடித்து மடிந்து விடும். பஞ்சாயத்து ராஜ்யத்தில் பஞ்சாயத்துத்தான் அதிகாரம் செலுத்த முடியும். அந்தப் பஞ்சாயத்தோ தானே இயற்றிய சட்டங்களின் மூலந்தான் செயலாற்றும்.[13]

பரம்பரையாக வந்த சோஷலிசம்

உண்மையான சோஷலிசத்தைப் பரம்பரையாக, நமது முன்னோர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்தார்கள். அவர்கள் சொன்னார்கள் : 'எல்லா நிலங்களும் கோபாலுக்குச் சொந்தம். ஆகவே எல்லைக்கோட்டிற்கு இடம் ஏது? மனிதன் தான் இந்த எல்லைக் கோட்டை உண்டாக்கினான்; அவனே அதை அழித்து விடலாம்! கோபால் என்ற சொல்லிற்கு இடையன் என்பது பொருள். அதற்கு ஆண்டவன் என்றும் பொருள். இக்கால மொழியின்படி அதற்கு அரசாங்கம் அல்லது மக்கள் என்றும் பொருள். தற்போது நிலமானது மக்களுக்குச் சொந்தமாக இல்லையென்பது மிகவும் உண்மை. ஆனால் இந்தத் தவறு போதனையில் இல்லை. அந்த போதனையின்படி வாழாத நம்மிடமே இருக்கிறது.

இம்சையில்லாத நல்ல வழி

ருசியா உள்பட எல்லா நாடுகளுமே கடைப்பிடிக்கக் கூடிய ஒரு நல்லவழியை - இம்சையில்லாத வழியை - நாம் கடைப்பிடிக்கலாம். பலாத்காரமாகச் சொத்துக்களைப் பறிப்பதற்குப் பதிலாக நாம் கடைப்பிடிக்கக் கூடிய பயனுள்ள மாற்று வழி, கைராட்டினமும் மற்றும் அதையொட்டிய சித்தாந்தங்களும் தான்.[14]

இறுதியில் நிலம் அரசுக்குத்தான்

அஹிம்சா பூர்வமான எதிர்கால அரசியலமைப்பில் நிலமானது அரசாங்கத்திற்குத் தான் சொந்தமாக இருக்கும். ஏனென்றால், 'எல்லா நிலமும் கோபாலுக்குத்தான்' என்று கூறப்பட்டிருக்கிறதல்லவா? இப்படிப்பட்ட தெய்வீக அமைப்பில், யாருடைய திறமையும் உழைப்பும் வீணாகாது. இம்சா முறையின் மூலம் இது சாத்தியமாகாது. இம்சையின் மூலமாக, நிலச் சொந்தக்காரருக்கு முழு அழிவை ஏற்படுத்தினால், அது இறுதியில் தொழிலாளர்கள் அழிவில் போய் முடியும் என்று கூறப்படுவது சரியே. ஆகவே நிலச் சொந்தக்காரர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால், எந்தத் தரப்பினரும் நஷ்டமடையமாட்டார்கள்.

அத்தியாயம் 16

விவசாயமும் கால்நடை நலனும்–III

கூட்டுறவு

கூட்டுப் பசுப் பண்ணை

பசுப் பண்ணை தனிப்பட்டவர்கள் பொறுப்பில் இருக்க வேண்டுமா அல்லது கூட்டாக நடத்தப்பட வேண்டுமா என்பது நாம் ஆலோசிக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு பிரச்னையாகும். தனிப்பட்டவர் பண்ணையின் மூலம் பசுவை ஒருபோதும் காப்பாற்ற முடியாது என்று நானே தயங்காது கூறியிருக்கிறேன். பசுவின் விமோசனத்தையும் அதனுடன் எருமையின் விமோசனத்தையும் கூட்டு முயற்சியின் மூலமாகத்தான் சாதிக்க முடியும். தன்னுடைய வீட்டில் உள்ள கால்நடைகளின் நலனை நல்ல விஞ்ஞானபூர்வமான முறையில் ஒரு தனிப்பட்ட விவசாயி கவனிக்க முடியாது. பசுவின் நிலையும் அதனால் பொதுவாகவே கால்நடைகளின் நிலையும் சீர்கெட்டதற்கு, மற்ற பல காரணங்களுடன், கூட்டு முயற்சியின்மையும் ஒரு முக்கிய காரணமாய் இருந்து வந்திருக்கிறது.

கால்நடை வதை ஆதரவாளர்கள்

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உலகம் இன்று கூட்டு அல்லது கூட்டுறவு முயற்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இவ்விஷயத்தில் எவ்வளவோ சாதிக்கப் பட்டும் இருக்கிறது; சாதிக்கப்பட்டும் வருகிறது. அது நம்முடைய நாட்டுக்கும் வந்திருக்கிறது. ஆனால் மிகவும் மாறுபட்ட நிலையில் வந்திருப்பதால், நம்முடைய ஏழை மக்களால் அதன் பயன்களை அடைய முடிவதில்லை. நம்முடைய ஜனத்தொகை வேகமாகப் பெருகிக் கொண்டு வருவதால், சாதாரண விவசாயியின் நில உடைமை குறைந்து கொண்டே போகிறது. மேலும், தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருப்பது பெரும்பாலும் மிகவும் சொற்ப நிலமே. இப்படிப்பட்ட விவசாயிகள் தங்களுடைய வீடுகளில்

கால்நடைகளை வைத்து வளர்ப்பதென்பது, தற்கொலைக்கு ஒப்பானதாகும். ஆனாலும் இன்று அவர்களுடைய நிலைமை இதுதான். பொருளாதாரத்துக்கு மட்டும் முதல் முக்கியத்துவம் அளிப்பவர்கள், மத, அறநெறி, மனித தத்துவ அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காதவர்கள். ''கால் நடைகளுக்கான செலவு அதிகமாய் இருக்கிறது. அவைகளால் கிடைக்கும் பலனுக்கும் அவைகளுக்கான செலவுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆகையால் கால்நடைகளால் விவசாயி எல்லையற்ற துன்பத்திற்கு ஆளாகிறான் என்று கூறுகிறார்கள். உபயோகமற்ற கால்நடைகளையெல்லாம் கொல்லாமலிருப்பது அறிவீனம்'' என்று கூறுகிறார்கள்.

ஜீவகாருண்ய வழி

ஆகவே ஜீவகாருண்யம் உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தான் கேள்வி. இதற்கான பதில் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்ததே. அதாவது, நாம் கால்நடைகளின் உயிர்களைப் பாதுகாப்பதுடன் அவைகள் நமக்கு ஒரு சுமையாக இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவு முயற்சியானது நமக்கு இதில் பெருமளவு உதவமுடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஒன்பது அனுகூலங்கள்

கீழ்க்கண்ட அனுகூலங்களைக் கவனிப்பது உதவியாக இருக்கும் :

1. கூட்டுப்பண்ணை முறையில், எந்த விவசாயியும் தற்போது வைத்துக் கொண்டிருப்பதைப் போல் தனது வீட்டில் கால்நடைகளை வைத்துக் கொண்டிருக்க முடியாது. அவை காற்றை அசுத்தப்படுத்துவதுடன் சுற்றுப்புறங்களையும் அசுத்தப்படுத்தி விடுகின்றன. மிருகங்களுடன் வாழ்வதில் புத்திக்கூர்மையோ அல்லது ஜீவகாருண்ய உணர்ச்சியோ இல்லை. மனிதன் அதற்காகப் படைக்கப்படவில்லை. கூட்டுப் பண்ணை முறை வந்தால் தற்போது கால்நடைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இடம் விவசாயிக்கும் அவனது குடும்பத்தினருக்கும் கிடைக்கும்.

2. கால்நடைகளின் எண்ணிக்கை பெருகப் பெருக, விவசாயி தன்னுடைய வீட்டில் வாழ்வது சாத்தியமற்றதாகிறது. இதனால் அவன் கன்றுகளை விற்க வேண்டியதாகிறது; எருமைக் கடாக்களைக் கொல்ல வேண்டியதாகிறது; அல்லது அவைகளைப் பட்டினியாகப் போட்டுக் கொல்ல வேண்டியதாகிறது. கூட்டுறவு அடிப்படையில் கால்நடைகளைக் கவனித்துக் கொள்ள முடியுமானால், இந்த மனிதத் தன்மையற்ற காரியத்தைத் தவிர்க்கலாம்.

3. கூட்டுக் கால்நடைப் பண்ணை வைத்தால், மிருகங்கள் நோயுறும்போது அவைகளுக்கு வைத்திய வசதி அளிக்க முடியும். எந்தச் சாதாரண விவசாயியும் தனது சொந்தச் செலவில் வைத்திய வசதி செய்ய முடியாது.

4. இதே போன்று, கூட்டுப்பண்ணை முறையில், பல பசுக்களைக் கருத்தரிக்க வைப்பதற்கு எளிதாக ஒரு நல்ல காளை மாட்டைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட மாட்டை வைத்திருப்பவர் தர்மத்திற்காகக் கொடுத்தாலொழிய, தற்போது இந்த வசதி தனிப்பட்டவர்களுடைய மாடுகளுக்குக் கிடைக்காது.

5. பொதுவான மேய்ச்சல் நிலமோ அல்லது மிருகங்கள் காலாறுவதற்கு வேண்டிய இடமோ, கூட்டுறவு முறையின் கீழ் எளிதாகக் கிடைக்கும். இப்போதோ இப்படிப்பட்ட எதுவும் தனிப்பட்ட விவசாயிகளிடம் இல்லை.

6. கூட்டுப் பண்ணையில் கால்நடைத் தீனிக்கான செலவு, மிகமிகக் குறைச்சலாகும்.

7. நல்ல விலையில் பால் விற்பனை செய்வது மிகவும் எளிதாகி விடும். தனிப்பட்ட முறையில் பாலில் தண்ணீர் கலப்பது போன்று, கூட்டுப் பண்ணையில் பாலில் தண்ணீர் கலக்க வேண்டிய அவசியமோ ஆசையோ ஒரு விவசாயிக்கு ஏற்படாது.

8. தனிப்பட்டவர்களிடம் உள்ள ஒவ்வொரு கால் நடையையும் மருத்துவ சோதனை செய்ய ஏற்பாடு செய்வது முடியாத காரியமாகும். ஆனால் ஒரு கிராமம் முழுவதற்குமான கால்நடைகளின் விஷயத்தில் இதை

எளிதாகச் செய்யலாம். அதன் மூலம் கால்நடைகளின் இனத்தை அபிவிருத்தி செய்வது எளிதாக இருக்கும்.

9. மேலே கூறிய அனுகூலங்களே, கூட்டுறவுப் பண்ணையை ஆதரிப்பதற்குப் போதுமானவையாக இருக்கும். இவை எல்லாவற்றையும் விட ஆணித்தரமான வாதம் என்னவென்றால், இதுவரை தனிப்பட்டவர்கள் கால்நடைகளை வளர்த்ததானது, நம்மையும் சரி, கால்நடைகளையும் சரி பரிதாபமான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது என்பதாகும். இந்த அவசியமான மாறுதலைச் செய்வதன் மூலந்தான் நாம் நம்மையும் அவர்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

கூட்டுறவு விவசாயப் பண்ணை

நாம் கூட்டுறவுப் பண்ணையை மேற்கொண்டா லொழிய விவசாயத்தின் முழு அனுகூலங்களையும் பெற முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். நிலத்தை நூறு துண்டுகளாகப் போடுவதைக் காட்டிலும், ஒரு கிராமத்திலுள்ள நூறு குடும்பங்கள் தங்களுடைய நிலங்களைக் கூட்டாக விவசாயம் செய்வது மிகமிக நல்லதென்பது பகுத்தறிவுக்கு ஒத்ததாகப்படவில்லையா? நிலத்திற்கு எது உண்மையோ அதுவே கால்நடைகளுக்கும் உண்மையாகிறது.

சுயநலம், மிருகத்தனம்

உடனடியாக இந்த வாழ்க்கை முறைக்கு மக்களை மாற்றுவது கஷ்டம் என்பது வேறு விஷயம். நேரான குறுகிய பாதையில் செல்வது எப்போதுமே கஷ்டமான காரியந்தான். கோசேவை என்னும் பாதையில் ஒவ்வொரு அடி வைப்பதிலும் முட்கள் போன்ற பிரச்னைகள் நிறைந்து இருக்கின்றன. ஆனால் கஷ்டங்களைச் சமாளித்துத் தான் நாம் நமது பாதையை எளிதாக்க முடியும். தனிப்பட்டவர் முயற்சியை விடக் கூட்டுக் கால்நடைப்பண்ணை வைப்பது எவ்வளவு உயர்ந்தது என்பதை எடுத்துக் காண்பிப்பதே இப்போது என்னுடைய நோக்கம். மேலும் இதில் தனிப்பட்டவர் முயற்சி தவறு, கூட்டுப்பண்ணை வைப்பதுதான்

சரியானது என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். உண்மையில், தனிப்பட்ட மனிதன்கூட, கூட்டுறவின் மூலம் தனது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். கால்நடைப் பண்ணை விஷயத்தில், தனிப்பட்டவர் முயற்சியானது சுயநலத்திற்கும் மிருகத்தனமான போக்கிற்கும் இடமளித்திருக்கிறது. ஆனால், கூட்டு முயற்சியோ இந்த இரண்டையும் பூரணமாக ஒழிக்காவிட்டாலும், குறைக்கவாவது செய்யலாம்.[1]

கூட்டுறவு என்பது என்ன?

'விவசாயிகள் தங்களுடைய நிலத்தை ஒன்றாகச் சேர்த்து விவசாயம் செய்து, தங்கள் தங்கள் நிலத்தின் பரப்பிற்கு ஏற்ப விளைச்சலைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமா?'

கூட்டுறவைப் பற்றிய என்னுடைய கருத்து இது தான். நிலச் சொந்தக்காரர்கள் தங்களுடைய நிலம் எல்லாவற்றையும் ஒன்றாக உழுது விவசாயம் செய்வார்கள். இதனால் உழைப்பு, கால்நடை, விதை முதலியவை மீதமாகும். நிலச் சொந்தக்காரர்கள் கூட்டாக உழைப்பார்கள். மூலதனம், கருவிகள், கால்நடைகள், விதைகள் முதலியவையெல்லாம் ஒன்றாகவே இருக்கும். எனது கற்பனையில் உள்ள கூட்டுறவானது நிலத்தின் தோற்றத்தையே மாற்றி விவசாயிகள் மத்தியிலிருந்து வறுமையையும், சோம்பேறித் தனத்தையும் போக்கிவிடும். மக்கள் ஒருவருக்கொருவர் நண்பர்களானால், ஒரே குடும்பத்தவர் போல இருந்தால், இவைகளெல்லாம் சாத்தியமாகும். மகிழ்ச்சிகரமான இந்தக் காரியம் நடைபெறும் போது, வகுப்புவாதப் பிரச்னை என்ற ஆபாசமான புண் உண்டாகாது.[2]

அதிகப் பலன்

கூட்டுறவு முறையென்பது மற்ற யாரையும் காட்டிலும் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமானதாகும். நிலம் நாட்டிற்குச் சொந்தமானது. ஆகையால் கூட்டுறவாக அதில் விவசாயம் செய்யும்போது, மிக அதிகமான பலன் கிடைக்கிறது.

அஹிம்சை முக்கியம்

கூட்டுறவானது நூற்றுக்கு நூறு அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்க வேண்டும் என்பதை எல்லோரும் நினைவிற் கொள்ள வேண்டும். இம்சையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவு வெற்றி பெற்ற தென்பதில்லை. ஹிட்லர் இதற்கு ஒரு முக்கியமான உதாரணமாவார். அவரும் கூட்டுறவைப் பற்றித்தான் பேசினார். ஆனால் அது வீணான பேச்சு. கூட்டுறவை மக்கள் மீது திணித்தார். இதன் காரணமாக, ஜெர்மனி என்ன விளைவுக்குள்ளானது என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள்.

பலாத்காரம் இருந்தால்?

பலாத்காரத்தின் மூலம், கூட்டுறவை அடிப்படையாகக் கொண்ட ஒரு புது சமுதாயத்தை அமைக்க இந்தியாவும் முயற்சி செய்தால், அது வருந்தத்தக்க காரியமாகி விடும். பலாத்காரத்தால் கிடைக்கும் நன்மை தனித்தன்மையையே அழித்துவிடுகிறது. அஹிம்சாபூர்வமான ஒத்துழையாமையின் மூலம், அதாவது அன்பின் மூலம் மாறுதல் செய்யப்படும் போதுதான், தனித்தன்மை என்னும் அஸ்திவாரத்தை நாம் பாதுகாக்க முடியும்; உலகத்திற்கு உண்மையான, நிலைத்த முன்னேற்றம் உறுதியாகும்.[3]

அத்தியாயம் 17

விவசாயமும் கால்நடை நலனும்–IV

உரம்

கம்போஸ்ட் உரம்

கம்போஸ்ட் உரங்களை நாடெங்கும் பரப்புவது பற்றி ஆலோசிக்க, 1947 டிசம்பரில் புதுடில்லியில் அனைத்து இந்திய கம்போஸ்ட் மாநாடு நடத்தப்பட்டது. திருமதி மீராபென் இந்த யோசனையைக் கூறினார். டாக்டர் இராசேந்திரப் பிரசாத் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். சர்தார் தத்தார் சிங், டாக்டர் ஆச்சார்யா மற்றும் இத்துறையில் பெயர் பெற்ற சிலர் மாநாட்டில் பங்கு கொண்டார்கள். நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் ஆன திட்டங்கள் பற்றி, பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திருமதி மீராபென், திரு சிவகுமார் சர்மா, டாக்டர் பி.என்.லால், டாக்டர் கே.ஜி. ஜோஷி ஆகியோர், மாகாணங்களுக்கு வேண்டிய மேற்போக்கான திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டனர். இவர்களில் டாக்டர் பி.என்.லால் கன்வீனராக நியமிக்கப்பட்டார். ''நகரங்களிலிருந்து வரும் சாக்கடை, குப்பை முதலியவற்றை விவசாயத்திற்காக உபயோகிக்க வேண்டும். மிருக வதை செய்யும் இடங்களிலிருந்து கிடைக்கும் உப பொருட்களையும் வியாபாரத்தில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை (உதாரணமாக, கம்பளி, மில், தோல் கழிவுப் பொருட்களை)யும் உபயோகிக்க வேண்டும். தண்ணீர்க் கோரை, மூங்கில் கழிவுப் பொருட்கள், காட்டு இலைகள் முதலியவைகளை மக்க வைத்து உரமாக்க வேண்டும்.'' என்று இந்தத் தீர்மானங்கள் வலியுறுத்தின.

"கம்போஸ்ட்"டின் நன்மைகள்

இந்தத் தீர்மானங்கள் வெறும் ஏட்டளவில் இல்லாவிட்டால் நல்லதுதான். உபயோகமானவையுங் கூட. அவை இந்தியா முழுவதிலும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமா

என்பது தான் முக்கியமான விஷயம். அவ்வாறு செய்வதற்குப் பல மீராபென்களுடைய உழைப்புத் தேவையாக இருக்கும். இந்தியாவில் உள்ள பொதுமக்கள் மனமுவந்து ஒத்துழைத்தால், உணவுப் பற்றாக்குறையைப் போக்கிவிட முடியும் என்பதுடன் தேவைக்கு அதிகமான உணவையும் உற்பத்தி செய்ய முடியும். இந்த இயற்கை உரமானது எப்போதுமே மண்ணை வளப்படுத்துகிறதேயல்லாது, ஒருபோதும் அதன் சத்தைக் குறைப்பதில்லை. அன்றாடம் கழிவாகும் பொருட்கள் புத்திசாலித்தனமான முறையில் ''கம்போஸ்ட்'' ஆக்கப்பட்டால், தங்கமான உரமாக நிலத்துக்குத் திரும்பிவருகின்றன. இதனால் நமக்குக் கோடிக்கணக்கான ரூபாய் மீதமாகும். தான்யங்கள், பருப்பு வகைகள் ஆகியவைகளின் மொத்த உற்பத்தி பல மடங்கு பெருகும். இதைத் தவிர, கழிவுப் பொருட்களை விவேகமான முறையில் உபயோகிப்பதானது, சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைக்க உதவுகிறது. தெய்வபக்திக்கு அடுத்தாற்போல் சுத்தம் முக்கியம் என்பது மட்டுமல்லாமல் அது உடல்நலத்தையும் வளர்க்கிறது.[1]

செயற்கை உரத்தின் தீமை

உற்பத்தியை உயர்த்துவதற்கு ஒரு பயனுள்ள வழி, நல்ல முறையில் உரமிடுவதாகும். செயற்கை உரங்கள் பூமிக்குத் தீங்கு விளைவிக்கும் என நான் கேள்விப்படுகிறேன். கம்போஸ்ட் உரத்தில் துர்நாற்றம் எதுவும் இல்லை. அது இலட்சக்கணக்கான ரூபாய்களை மீதப்படுத்துவது மட்டுமல்லாது, மண் வளத்தைப் பெருக்கும். மண்ணுடைய சத்துக் குறையுமாறு செய்யாது.[2]

பிரெய்னுடன் ஒரு கருத்து வேற்றுமை

கிராமங்களில் உள்ள உரக்குழிகளை நன்றாகப் பொடி செய்ய வேண்டுமென்பதில் பொதுவாக பிரெய்னுடன்* காந்திஜி உடன்பட்டார். ஆனால் அதே சமயம், இந்த உரக்குழிகள் ஆறு அடி நீளமும், ஆறு அடி ஆழமும் உள்ளவையாக இருக்க வேண்டுமென்று பிரெய்ன் கூறிய கருத்தை அவர் ஏற்கவில்லை. அவர் கூறினார் :-

* *பிரெய்ன் என்பவர் ஐ.சி.எஸ். பட்டம் பெற்ற ஒரு ஐரோப்பிய உயர் அதிகாரி. இவர் பஞ்சாபில் கிராம மறுமலர்ச்சிக்காக அருஞ்சேவை செய்திருக்கிறார்.*

பிரெய்ன் கூறுவதைப் போன்ற குழிகளைப் பொதுவாகச் சிபாரிசு செய்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனது கருத்தைப் பொறுத்தவரை, ஆழமில்லாது மேலே மூடி வைக்கப்பட வேண்டுமென்று பூரே கூறியிருப்பது அதிக விஞ்ஞான பூர்வமானதும் பலன் தரக்கூடியதுமாகும். இதனால் குழி தோண்டும் செலவு குறைகிறது. அள்ளிப் போடும் செலவு பூரணமாகத் தவிர்க்கப்படுகிறது அல்லது குறைகிறது. மேலும், சுமார் ஒரு வாரத்திலேயே மலம், சாணி ஆகியவை உரமாகி விடுகின்றன. ஏனென்றால், பூமி மட்டத்துக்குச் சுமார் ஆறு அல்லது ஒன்பது அங்குல ஆழத்தில் இருக்கும் ஜீவ அணுக்களும், காற்றும், சூரிய ஒளியும் இவைகள் மீது பட்டு இவைகளை மிக விரைவாக, அதாவது இவைகள் ஆழமாகப் புதைக்கப்பட்டிருந்தால் எவ்வளவு காலமாகுமோ அதைக் காட்டிலும் மிக விரைவாக, மணமிக்க உரமாக்கி விடுகின்றன. இந்த உண்மையையுங் கவனிக்க வேண்டும்.

எது முக்கியம்?

ஆனால், கழிவுப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவதென்பது பற்றிய பல்வேறு முறைகளைக் காட்டிலும் நாம் ஞாபகத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விஷயம், எல்லாக் குப்பை கூளங்களையும் புதைத்து வைத்துவிட வேண்டும் என்பதுதான். இதனால் கிராமவாசியின் உடல் நலம் அபிவிருத்தி அடையும். உரத்தால், விளைச்சல் அதிகமாகுமாதலால் கிராமவாசிகளின் பொருளாதார நிலையும் அபிவிருத்தியடையும். இவ்வாறு இரண்டு காரியங்களை இது பூர்த்தி செய்கிறது. மலத்தையும், சாணியையும் தவிர மற்ற குப்பை கூளங்களைத் தனியாகப் புதைத்து வைக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.[3]

மலம் ஒரு உரம்

மனிதனுடைய மலத்தைச் சரியான முறையில் பயன்படுத்தினால், ஆண்டிற்கு ஆள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று திரு. ஜி. ஐ. பௌலர், 'செல்வமும் குப்பையும்' என்ற தமது நூலில் கூறுகிறார். மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த வளமான உரம்

வீணாக்கப்பட்டு, நோய்க்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது. பேராசிரியர் புருல்டினி, 'கழிவுப்பொருட்களின் உபயோகம்' என்ற நூலில் கூறியிருப்பதைத் திரு. பௌலர் மேற்கோளாக எடுத்துக் காண்பித்திருக்கிறார். 'டில்லியில் வாழும் 2,82,000 மக்களிடமிருந்து கிடைக்கும் நைட்ரஜன் ஆனது, குறைந்தது 10,000 ஏக்கருக்கும் அதிகமாகப் போனால் 95,000 ஏக்கருக்கும் உரமிடப் போதுமானதாகும்' என்று புருல்டினி கூறியிருக்கிறார். நம்முடைய தோட்டிகளை எவ்வாறு நடத்துவதென்பது நமக்குத் தெரியாததால், பழங்காலப் பெருமை வாய்ந்த டில்லி மாநகரில், இன்று நாம் வெட்கப்பட வேண்டியவாறு பல தொற்றுநோய்ப் பகுதிகள் இருக்கின்றன. நாம் எல்லோரும் தோட்டிகளாக மாறினோமானால், நாம் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை அறிந்து கொண்டவர் களாவோம். அது மட்டுமல்லாது, இன்று எது விஷமாக இருக்கிறதோ அதைத் தாவரங்களுக்கான சத்துள்ள உணவாக மாற்றுவது எப்படியென்பதையும் அறிந்தவர் களுமாவோம். டாக்டர் பௌலரின் கருத்துப்படி, நாம் மனித மலத்தை விவேகமான முறையில் பயன்படுத்துவதானால், இந்தியாவிலுள்ள 30 கோடி மக்கள் தொகையானது ஆண்டுதோறும் நாட்டிற்கு 60 கோடி ரூபாய் லாபம் அளிக்க வேண்டும்.[4]

கம்போஸ்ட் உரத் தயாரிப்பு

[இந்தூரில் தாவரத் தொழில் நிலையம் ஒன்று இருக்கிறது. அது யாருக்குச் சேவை செய்வதற்காக ஏற்பட்டதோ அவர்களுக்கு அவ்வப்போது துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வருகிறது. இதில் முதல் துண்டுப் பிரசுரமானது, பண்ணைக் கழிவுகளிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் முறைகளைப் பற்றியும் அவைகளின் உபயோகத்தைப் பற்றியும் கூறுகிறது. சாணியையும், மலத்தையும் எடுக்கும் கிராம ஊழியர்கள், அரிஜனங்கள் ஆகியோருக்கு இது மிகவும் உபயோகமானதாதலால், கிட்டத்தட்ட அந்தப் பிரசுரம் முழுவதையுமே - செயல்முறை விளக்கத்தைப் பற்றிய அடிக்குறிப்பு களுடன் - கீழே தருகிறேன்.

- மோ. க. காந்தி]

இந்திய மண்ணில் உள்ள வளத்தைப் போதுமான அளவுக்கு முறையாக அபிவிருத்தி செய்யவேண்டும். இந்தியாவில் தீவிர விவசாயத் திட்டம் வெற்றியடைய வேண்டுமானால் அதற்கு ஒரு சில அம்சங்கள் அவசியம்.

அவைகளில் இதுவும் ஒன்று. இது நீண்ட காலமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள ஒரு உண்மை. தற்போது கிடைக்கும் பண்ணை உரமானது, நமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்பதும் இதே மாதிரி ஒப்புக் கொள்ளப்பட்டிருக் கிறது. மேலும், பண்ணை உரத்தைத் தயார் செய்யும்போது, நைட்ரஜன் சத்தில் பெரும் பகுதியை நாம் இழந்து வருகிறோம். இறுதியாகக் கிடைக்கும் பொருள் நல்ல பலன் தரக்கூடிய நிலையை அடைவதற்கு நீண்ட காலமாகிறது. இதற்குப் பதிலாகப் பசுந்தழை உரமிடலாம் என்பது ஓரளவு சாத்தியமே. ஆனால் இந்தியாவில் உள்ள பருவ நிலைகளில் இந்நாட்டின் பெரும்பகுதிகளில் பசுந்தழை உரம் நிச்சயமற்ற தாக இருக்கிறது. மண்ணிலேயே தாவர உணவு இருக்கிறது. ஆகவே மண்ணில் பசுந்தழை உரத்தைப் போட்டால் அது மக்குவதானது, ஏற்கனவே மண்ணில் உள்ள தாவர உணவு இயற்கையான முறையில் புத்துயிர் பெறுவதில் தற்காலிகமாய்க் குறுக்கிடுகிறது. வெப்ப மண்டலப் பகுதிகளில் மண் வளத்தைப் பாதுகாப்பதற்கு இந்தத் தாவர உணவுதான் மிகவும் கணிசமாக உதவுகிறது. பூஞ்சக் காளானை உற்பத்தி செய்ய வேண்டிய பாரத்தை மண்ணுக்கு அளிக்காமல் தவிர்ப்பதற்கு இதுவே சிறந்த வழி. மீண்டும் பழைய சக்தியைப் பெறுவதிலும் பயிர் வளர்ச்சியிலும் அது ''ஒருமனதான கவனம் செலுத்துவதற்கும்'' இதுவே சிறந்த மார்க்கம். பண்ணையில் உள்ள நடைமுறை வேலைகளின் போது ஒரு உபபொருளாகப் பூஞ்சக்காளானை தயார் செய்வதே எளிய வழியாகும். உரமாகவோ அல்லது கால் நடைகளின் தீனியாகவோ தேவைப்படாத எல்லாவகையான விவசாயக் கழிவுப் பொருளையும் பயன்படுத்தி இதைத் தயார் செய்யலாம்.

இந்தூர் முறை

பண்ணை உரத்துக்குப் பதிலாக அதன் இடத்தில் நாம் பயன்படுத்தும் எந்தப் பொருளும் அதன் அமைப்பில் பூஞ்சக் காளானைப் போன்றதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது. இந்தூர் முறையின் நோக்கம் இதுதான். இதை அம்முறை சாதிக்கவும் செய்கிறது. சில முறைகளில் உற்பத்தியாகும் உரத்தின் நோக்கம், நைட்ரஜன்

சத்து அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான். செயற்கை உரங்களைப் போன்ற ஒரு தனி உபயோகம் உள்ளவை இவை. ஆகவே இவைகளுக்கும் இந்தூர் முறையின் நோக்கத்துக்கும் அடிப்படையிலேயே மாறுதல் உண்டு.

நடைமுறைக்கு ஏற்றது

இது சம்பந்தமாக இந்தூரில் உள்ள தாவரத் தொழில் நிலையத்தில் பல வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்துறையில் ஆல்பர்ட் ஹோவர்டு என்பவர் 20 ஆண்டு களாக மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக இது நடைபெற்றது. இந்தக் கோட்பாடுகளையெல்லாம் வெகு எளிதாக நடைமுறை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரலாம் என்பதை இப்பணிகள் திட்டவட்டமாக மெய்ப்பித்திருக் கின்றன. கம்போஸ்ட் உரத் தயாரிப்பில் இந்தூர் முறையானது, ஒரு நடைமுறைக்கு ஏற்ற வழியை அளிக்கிறது; அபிவிருத்திக்கான புதுத்துறைகளுக்கு வழி வகுக்கிறது. இதன் மூலம் பண்ணைகளிலிருந்தும், நகரங்களிலிருந்தும் கிடைக்கும் அளவற்ற இயற்கைக் குப்பைகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். இவ்வாறு சாணத்தை எருவாட்டியாகப் பயன்படுத்துவதில் போய்க் குறுக்கிடுவது, பிண்ணாக்கை ஏற்றுமதி செய்வதில் குறுக்கிடுவது போன்ற இயற்கைக்கு விரோதமான வழிமுறைகளை நாடாமல் நிறைய உரம் கிடைப்பதற்கு வழி ஏற்படுகிறது. அதே சமயம் செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதைச் சிக்கனப்படுத்தலாம். இந்தச் செயற்கை உரங்களை, இயற்கை உரங்களுடன் கலந்து பயன்படுத்தும் போது சிறந்த பலன் கிடைக்கிறது.

பொடி உரம்

(1931ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி அச்சகத்தார் வெளியிட்டு, ஹோவர்டு அண்டு வார்டு எழுதிய) ‘‘விவசாயக் குப்பையின் உபயோகம்’’ என்ற புத்தகத்தில் இந்தூர் முறை விவரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இதில் உள்ள பிரச்னைகளும் அடிப்படைக் கோட்பாடுகளும் நூலில் விவாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரையானது இந்த முறையின் மேற்போக்கான நடைமுறைகளை மட்டும்

அளிக்கிறது. அதிலும் இந்திய விவசாயிகளின் சூழ்நிலைகளுக்கு ஏற்றவைகளை மட்டும் அளிக்கிறது.

இந்தியாவில் நீர்ப்பாசன வசதி பெற்ற நிலங்களைப் பொறுத்தவரை பண்ணை உரத்தின் முக்கியத்துவம் நன்கு அங்கீகரிக்கப்படுகிறது. ஆனால், புன்செய் விவசாயத்துக்கும் அவ்வப்போது ஒரு நிதானமான அளவு இந்த உரமிடுவது அதே அளவுக்கு அவசியந்தான். இந்தூர் கம்போஸ்ட் முறையில் வளமுள்ள உரம் நிறைய உற்பத்தியாகிறது. அந்த உரம் பயிர்களுக்குப் போட்ட உடனேயே பலன் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் பண்ணை உரம் எப்போதுமே இவ்வாறு உடனடியாகப் பலன் அளிக்கின்றது என்று கூற முடியாது. முறை சரியாக இருந்தால், மூன்று மாதங்களில் இந்தூர் கம்போஸ்ட் தயாராகிவிடுகிறது. இவ்வாறு அது தயாராகும் போது நல்ல பழுப்பு காபி நிறமுள்ள பொடியாக ஆகிவிடுகிறது. இதில் 20 சதவிகிதப் பொருள், ஓரளவு மக்கிய கட்டிப் பொருளாகவும் இருக்கிறது. ஆனால் இந்தக் கட்டிப் பொருளையும் விரல்களால் நசுக்கி விட முடியும். மீதமுள்ள பொருள்களோ ஈரமாக இருக்கும் போது, பொதுவாக அதிகப் பருமன் உள்ளவைகளாக இருக்கும். அப்படியிருந்தும் ஒரு அங்குல நீளத்தில் 6 துவாரங்கள் உள்ள சல்லடையில் சலிக்கும் அளவுக்குச் சின்னவைகளாக இருக்கின்றன. நாம் எந்தக் கழிவுப் பொருட்களை உபயோகப்படுத்துகிறோமோ அதைப் பொறுத்து நைட்ரஜன் சத்தானது, 0.8லிருந்து 1.0 சதவீதம் வரையோ அல்லது அதற்கு அதிகமாகவோ இருக்கும். ஒவ்வொரு ஜதை காளைமாடுகளுக்கும் சுமார் ஐம்பது வண்டி கம்போஸ்ட் உரம் தயார் செய்யலாம். புதுச்சாணத்தில் நான்கில் ஒரு பங்கும், எல்லாவிதமான பண்ணைக் குப்பைகளிலிருந்து நூற்று இருபத்தைந்து வண்டிகளும், கொட்டத்து மாட்டுக் கோமியத்தால் நனைந்துள்ள மண்ணில் பாதியும் சேர்த்து இந்தக் கம்போஸ்ட் உரத்தைத் தயார் செய்யலாம். மீதமுள்ள பாதிமண்ணும் நல்ல உரந்தான். ஆனால் அதை நேரடியாக வயலில் கொண்டு போய்ப் போட்டுவிடலாம். எஞ்சியவை அதிகமாக இருந்தால், எல்லாச் சாணத்தையும் கோமியம் பாய்ந்த மண்ணையும் சுமார் 150 வண்டி கம்போஸ்ட் தயாரிக்கப் பயன்படுத்தலாம். இந்தூரில்

உள்ள கூலி நிலவரப்படி (ஆண்களுக்கு 7 அணா, பெண் களுக்கு 5 அணா - எட்டு மணி நேர வேலைக்கு) நல்ல கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு வண்டிக்கு 8½ அணா செலவாகிறது.

இந்தூர் முறையின் விபரங்கள்

மற்ற வகைகளில் உபயோகம் இல்லாத பண்ணைக் கழிவுப் பொருட்கள், புதுச்சாணி, மரச்சாம்பல், மாட்டுக் கொட்டத்தில் உள்ள மூத்திர மண் ஆகியவைகளைக் குழிகளில் போட்டு மக்க வைக்க வேண்டும். கம்போஸ்ட் உரத் தயாரிப்பில் இதுவே பிரதான அம்சம். இந்தக் குழிகள் 2 அடிக்கு மேல் ஆழம் இல்லாதவைகளாக இருக்க வேண்டும். அகலம் 14 அடி இருக்க வேண்டும். வசதியான நீளம் 30 அடி. பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு இது பொருந்துகிறது. உதாரணமாக, இரண்டு ஜோடி காளைகளிலிருந்து கிடைக்கும் பொருட் களைக் கொண்டு 6 நாட்களில் 3 அடி நீளமுள்ள குழியை மெத்தலாம். இதற்கு அடுத்த பகுதி பின்னால் மெத்தப் படுகிறது. இவ்வாறு மெத்தப்படும் ஒவ்வொரு பகுதியும் தனித்தனி அங்கமாகக் கருதப்படுகிறது. ஒரு சிறு அளவு சாணம், அடுப்புச் சாம்பல், மூத்திரக் குழி மண், ஏற்கனவே கம்போஸ்ட் தயாரிக்கப்பட்டதிலிருந்து காளான் உற்பத்தி செய்வதற்காக ஒரு சிறிது பூஞ்சக் காளான் முளைத்த குப்பை ஆகியவற்றை எடுத்துக் கலக்கி இந்தக் குழிகளில் ஒரே அளவாகத் தெளிக்க வேண்டும். காளான் பெருகுவதனால் கம்போஸ்ட் மக்கி விரைவில் வெள்ளையாகிறது. மேலும் மேற்கண்டவாறு தெளிப்பதனால் உரம் வேகமாக மக்குமாறு செய்யப்படுகிறது. முதல் தடவையாக கம்போஸ்ட் உற்பத்தி செய்யப்படும் போது, ஏற்கனவே தயாரான கம்போஸ்ட் குப்பை கிடைக்காவிட்டால், உரக்குப்பையை மேடாகப் போட்ட பின் ஒரு சிறிது பசுந்தழைகளை மேலே போட வேண்டும். இதிலிருந்து குப்பை எடுத்து, புதிதாகக் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்குச் சேர்க்கலாம். ஆனால் 3ஆவது அல்லது 4வது தயாரிப்பில் தான் இவ்வாறு சேர்க்கப்படும் குப்பையிலிருந்து முழுப்பலன் கிடைக்கிறது. மேலே தண்ணீர் ஊற்றிக் கொண்டும் குப்பையைப் புரட்டிப்

போட்டுக் கொண்டும் வரவேண்டும். அத்துடன் இரண்டாவது முறையாக, பழைய கம்போஸ்ட் குழியிலிருந்து (இந்தத் தடவை இது முப்பது நாட்களுக்கு மேற்பட்ட குழியாக இருக்க வேண்டும்). எடுக்கப்பட்ட குப்பையைக் கொண்டு வந்து கலக்க வேண்டும். இவ்வாறாகக் குப்பையின் ஈரம் பாதுகாக்கப்படுமாறும், அதில் காற்றுப்படுமாறும் செய்ய வேண்டும். இந்தக் குப்பை மேடானது அதிகச் சூடுள்ளதாகிறது; நீண்ட காலத்துக்கு அவ்வாறே இருக்கிறது. இவ்வாறு ஒழுங்காக எல்லா வேலைகளையும் செய்தால் நல்ல கம்போஸ்ட் உரம் கிடைக்கும். (எல்லாக் குப்பையும் ஒரே மாதிரியாகத் தோற்றம் அளிப்பதன் மூலம் இது தெரியும்) குப்பை தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் அதற்கு நிறையக் காற்றும் கிடைக்குமாறு செய்ய முடியும். நிதானமாகத் தண்ணீர் தெளிப்பதானது உடனடியாக உரம் மக்குமாறு செய்கிறது. இவ்வாறு மக்குவதானது, நடுவில் நின்று போகாமல் இறுதிவரை நடைபெறுகிறது. இதனால் இறுதியில் ஒரே மாதிரியான உரம் தயாராகிறது.

குழிகள் தயாரித்தல்

மாட்டுக் கொட்டத்துக்கு அருகே நன்றாகத் தண்ணீர் வடியக் கூடிய ஒரு இடத்தைத் தேர்ந்தெடுங்கள். முடிந்தால், தண்ணீர் கிடைக்கக் கூடிய இடமாகவும் அது இருக்கட்டும். ஒரு அடி ஆழத்துக்கு மண்ணைத் தோண்டி அதை ஒரு குழி அமைப்பதற்காக நாலா பக்கங்களிலும் போடுங்கள். இந்தக் குழியின் நீளம் 30 அடி, அகலம் 14 அடி, ஆழம் 2 அடி. இப்படிப்பட்ட குழிகளை ஜோடி ஜோடியாக நீங்கள் அமைக்க வேண்டும். இதில் நீளப்பகுதி கிழக்கு மேற்காக இருக்க வேண்டும். இவ்வாறு ஜோடியாக அமைக்கும் குழிகள் ஒன்றுக்கொன்று ஆறு அடி தூரத்தில் இருக்க வேண்டும். ஒரு ஜோடிக்கும் மற்றொரு ஜோடிக்கும் இடையே 12அடி தூரம் இருக்க வேண்டும். இவ்வாறு இடைவெளி விடும் போது கடைசியாகத் தயாரிக்கும் கம்போஸ்டையோ அல்லது அந்தந்தப் பருவகாலத்தில் கிடைக்கும் குப்பையையோ குவியலாகப் போட்டுக் கொள்ளலாம். மேலும் வண்டிகளை நிறுத்திக் குப்பைகளை அள்ளவும் இந்த இடைவெளிகள் உதவும்.

மண்ணும் சிறுநீரும்

கால்நடைகளின் சிறுநீரானது உரச்சத்து நிறைந்ததாகும். சாதாரணமாகத் தயாரிக்கப்படும் பண்ணை உரத்தில் இது பெரும்பாலும் வீணாக்கப்படுகிறது. மாட்டுக் கொட்டத்தில் சிமெண்ட் தளம் போடுவதற்கு நிறையச் செலவாகும். கால்நடைகளுக்கும் இது பொருந்தாது. கால்நடைகள் அமர்ந்திருக்கவும் தூங்குவதற்குமான மென்மையான, வெப்பமுள்ள, ஈரமில்லாத ஒரு தளத்தைச் சாதாரண மண்ணைக் கொண்டே போட முடியும். களத்து மேட்டுக் கருக்காய், வடிகால் வடிந்த பின் அதிலிருந்து எடுக்கப்பட்ட வண்டல்மண், பசுந்தழை உரம் போட்டு வைக்கும் குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட மண் ஆகியவைகளைக் கொண்டு வசதியாக இவைகளைத் தயார் செய்யலாம். 6 அங்குல உயரமுள்ள ஒரு மேட்டுத் தளம் போட்டால் அது எந்தவிதமான சிரமமும் இல்லாமல் எல்லாச் சிறுநீரையும் உறிஞ்சிக் கொள்ளும். நனைந்த மண்தரையைத் தினந்தோறும் சுரண்டி எடுத்துவிட்டு, சிறிது புதுமண்ணையும் காடியில் மாடு உண்ணாது வைத்துள்ள வைக்கோலையும் போட்டு விட்டால் இது எளிதாக இருக்கும். இந்த மூத்திர மண்ணை ஒவ்வொரு நான்கு மாதத்துக்கு ஒரு முறை அகற்றிப் புதுமண் போட்டுவிட வேண்டும். இதில் கட்டி கட்டியாக இருப்பதை நேரடியாக வயலில் போட்டுவிடலாம். மணலாக, மண்ணாக இருப்பவைகளைக் கம்போஸ்ட் செய்வதற்காக வைத்துக் கொள்ள வேண்டும். இது வேகமாகப் பலன் தரக்கூடிய மருந்து. நீர்ப்பாசன வசதியுள்ள எந்தப் பயிருக்கும் மேலே போடக்கூடிய தனித் தகுதி வாய்ந்த உரம்.[5]

பசுச் சாணமும் சாம்பலும்

புதிதாக நாள்தோறும் கிடைக்கும் சாணத்தில் நான்கில் ஒரு பகுதி தான் தேவைப்படுகிறது. இது தண்ணீருடன் கலந்து கம்போஸ்ட் உரக் குப்பைக்கு மேல் சேறாகத் தெளிப்பதற்குப் பயன்படுகிறது. மீதமுள்ள சாணத்தைத் தேவையானால் எருவாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். சமையல் கட்டிலிருந்தும் பிற இடங்களி

லிருந்தும் கிடைக்கும் மரச் சாம்பலைக் கவனமாகச் சேகரித்து அதை ஒரு இடத்தில் குவித்து மூடி வைக்க வேண்டும்.

பண்ணைக் கழிவுகள்

தாவரங்களிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருள் ஒவ்வொன்றையும் - அது வேறு காரியத்துக்குத் தேவை யில்லையானால் - கம்போஸ்ட் உரமாக மாற்றலாம். உதாரணமாக, களைகள், பருத்திக் காம்புகள், பட்டாணி, எள் செடி, குங்குமப்பூ, ஆளிவிதை, கொடி முந்திரிச்செடி, உளுந்துச் செடி, பாசிப் பயற்றுச் செடி ஆகியவற்றின் காம்புகள், கரும்புச் சக்கை, கரும்புச் சோளத்தட்டைகள், உதிர்ந்த இலைகள், புல், வைக்கோல், சோளம் முதலிய தீவனங்களில் மீதப்பட்டவை ஆகியன. கடினமான பொருட் களை நன்றாக நசுக்கவோ, பிளக்கவோ வேண்டியதிருக்கும். இந்தப் பொருள்களை வண்டிப் பாதையில் போட்டு வைத்து விடவேண்டும். அவ்வப்போது நசுக்கப்பட்ட பொருட்களை அகற்றி விட்டு, நசுக்கப்பட வேண்டியவைகளை மறுபடியும் அங்கே பரப்பி வைத்து விட வேண்டும். சிந்து மாநிலத்தில் சாதாரண வண்டிப்பாதைகளில் கூட இது வெற்றிகரமாக நடை பெறுகிறது. அடித்தண்டுகள், வேர்கள் போன்று மிகவும் கடினமாக உள்ள பொருட்களை உடைப்பதுடன் குறைந்தது இரண்டு நாட்கள் தண்ணீரில் ஊறவைக்க வேண்டிய திருக்கும். அல்லது இரண்டிலிருந்து மூன்று மாதங்களுக்கு ஈர மண்ணில் புதைத்து வைக்க வேண்டும். அதற்குப் பின்பு இவைகளை நல்ல முறையில் உபயோகிக்கலாம். இதில் இரண்டாவது கூறப்பட்டதைப் பருவகாலங்களில் எளிதாகச் செய்யலாம். பச்சையாக இருக்கும் பொருட்களை ஓரளவு காயவைத்து அப்புறம் குவித்து வைக்கலாம். சிறு சிறு அளவுகளில் இருக்கும் பல்வேறு விதமான கழிவுப் பொருட் களை ஒரே போராகக் குவித்து வைக்க வேண்டும். அதே போன்று ஒவ்வொரு பொருளும் நிறையக் கிடைப்பதாக இருந்தால் அவைகளைத் தனிக் குவியலாக வைக்க வேண்டும். கம்போஸ்ட் குழிக்குக் கொண்டு போகும்போது

எல்லாக் கழிவுப் பொருட்களையும் ஒன்றாகக் கலக்க மறந்து விடக் கூடாது. இவ்வாறு கலக்கப்படும் பொருட்களில் எந்த ஒரு தனிப்பட்ட பொருளும் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக் கூடாது. மிகவும் கடினமாக இருந்து ஊற வைக்கப்பட்ட, அல்லது மெதுவாக்கப்பட்ட பொருட்களை ஒரே சமயத்தில் சிறு அளவில்தான் உபயோகிக்க வேண்டும். பல்வேறு விதமான கழிவுப் பொருட்களையும் ஒன்றாகச் சேகரித்து, அவைகள் வருடம் முழுவதற்கும் வரக்கூடிய அளவில் உபயோகித்து வரவேண்டும். அவ்வாறு செய்தால் மேற்கண்ட விகிதாச்சாரத்தில் இயற்கையாகவே இக்கழிவுப் பொருட்கள் கிடைக்கும். கோடை காலத்தில் விதைக்கப்பட்டு நன்றாக விளைந்த சடம்பு உரச் செடிகளையோ அல்லது மற்ற காய்கறி வகைச் செடிகளில் முற்றி அப்புறப்படுத்தப் பட்ட இலைகளைக் காயவைத்தோ போராக ஒன்று சேர்த்து உபயோகப்படுத்துவதன் மூலம் இந்த கம்போஸ்டின் தரத்தை மேலும் உயர்த்தலாம். இவ்வாறு சடம்பு விளைவிக்கப்பட்ட நிலம், காலப்பயிருக்குத் தயாராக இருக்கிறது என்பது மட்டுமல்ல - இது விளைவிக்கப்பட்டதால் அந்தப் பயிரும் அனுகூலம் அடைகிறது.

தண்ணீர்

வீட்டில் கழிவாகப் போகும் தண்ணீர், கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சிறு குழி அல்லது (பூமிக்கு அடியில் புதைக்கப்பட்ட) தொட்டியில் விழும்படி ஏற்பாடு செய்யப்பட்டு ஒவ்வொரு நாளும் உபயோகிக்கப்பட்டால், உழைப்பு மீதமாகும். உபயோகமாக வும் இருக்கும். ஒரே இடத்தில் நீண்ட காலம் தேங்கியிருக்கும் எந்தத் தண்ணீரும் தீங்கு பயக்கக்கூடியதே. அதிகப்படியான தண்ணீர் வேண்டுமென்றால் வேறு வழியில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஒரு வண்டி கம்போஸ்ட் உரத்தைத் தயார் செய்ய, பருவகாலத்தைப் பொறுத்து 4 காலன் கொண்ட மண்ணெண்ணெய் டின்களில் 50-லிருந்து60 மண்ணெண்ணெய் டின் தண்ணீர் தேவையாக இருக்கும்.

கம்போஸ்ட் உரம் தயாரிக்கும் விவரம்

பதம் போடுதல்

குழிகளில் குப்பையைத் தட்டுத் தட்டாகப் போடுதல் : நான்கு அடி நீளமும் 3 அடி அகலமும் உள்ள சாக்கை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் உள்ள நீளப் பகுதியில் 7அடி 6 அங்குல நீளம் உள்ள மூங்கில்களைக் கோர்த்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு காளை மாட்டுக்கும் ஒரு சாக்கு அளவு பண்ணைக் கழிவு, ஒவ்வொரு எருமை மாட்டுக்கும் ஒன்றரைச் சாக்குப் பண்ணைக் கழிவுப் பொருள்களைத் தினந்தோறும் மாட்டுக் கொட்டத்தில் பரப்பி வைக்க வேண்டும்; இந்தப் பொருட்கள் மாட்டுச் சிறுநீருடன் கலந்து விடுகின்றன. இந்தப் பொருட்களையும் மாடுகள் நன்றாக மிதித்து விடுகின்றன. காய்ந்து உலர்ந்து போன குப்பையின் இரண்டு தட்டுகளுக்கிடையே ஒரு தட்டு பச்சையான, ஆனால் வாடிப்போயுள்ள குப்பையை இதற்கென்றே வைத்திருக்க வேண்டும். மழைக் காலத்தில் இவ்வாறு தான் குப்பை உரம் தயாரிக்கப்படுகிறது. தெளிப்பதற்காக எடுக்கப்பட்டது போக மீதமுள்ள சாணத்தை எருவாட்டிகளாகச் செய்யலாம். அல்லது, சிறு ஆரஞ்சுப் பழத்துக்கும் மேற்போகாத சிறுசிறு உருண்டைகளாக உருட்டி இந்தக் குப்பைக் கட்டுகளில் பரப்பி வைக்கலாம். கம்போஸ்ட் உரக் குப்பையின் மேல் குழப்பிப் பூசுவதற்காக எடுக்கப்பட்ட கோமிய மண், பூஞ்சக் காளான் உற்பத்திக்காகப் போடப்பட்ட குப்பை ஆகியவை களில் மீதமுள்ளவை, அடுத்த நாள் காலை குப்பைகளில் பரப்பி விடப்படுகிறது. அப்போதுதான் இக்குப்பைகள் மண் வெட்டியால் தரையின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரை எடுக்கப்பட்டு, குப்பைக் குழிகளில் போடப்பட்டு, பரம்புச் சட்டத்தால் பரப்பிவிடப்படுகின்றன. இப்படிப்பட்ட ஒவ்வொரு அடுக்கும் அப்புறம் சாம்பல், சாணம், மண், காளான் உற்பத்தி உரம் ஆகியவைகளைச் சிறு அளவில் போட்டுக் கரைக்கப்பட்ட சேற்றால், ஒரே அளவு பதம் போடப்படுகிறது. குப்பைகளையெல்லாம் எடுத்த பிறகு, தரையைக் கூட்டி, மீதமுள்ள தூசி துப்பட்டைகளெல்லாம்

மேலடுக்காகப் போடப்படுகிறது. இந்த மேலடுக்கின் மீது தண்ணீரைத் தெளித்துப் பதம் போடப்படுகிறது. மாலையிலும் மறுநாள் காலையிலும் தண்ணீரைத் தெளிப்பதுடன், தண்ணீரால் நனைப்பது முடிவடைந்து விடுகிறது. நமக்குக் கிடைக்கும் குப்பையின் அளவுக்கு ஏற்றபடி ஒரு குழியையோ அல்லது குழியின் ஒரு பகுதியையோ ஆறு நாட்களில் நிரப்பிவிட வேண்டும். இதன் பின்னர் அடுத்த குழியில் அல்லது அடுத்த பகுதியில் குப்பையை நிரப்புவது புதிதாகத் தொடங்கப்பட வேண்டும். இவ்வாறு குப்பையைப் போட்டு கொண்டு வரும்போது மிதித்து விடுவது தீங்கு பயக்கக்கூடியதாகும். ஏனெனில் அப்போது குப்பைக்குள் காற்று நுழையாது.

மழை வரும்போது

பருவ மழை பெய்யும் போது குழிகளில் தண்ணீர் நிரம்பி விடுகிறது. மழை பெய்ய ஆரம்பிக்கும் போது குழியில் உள்ளவைகளைத் தரையில் புரட்டிப் போட வேண்டும். இவ்வாறு புரட்டிப் போடுவதே ஒரு அனுகூலமாக அமையும். மழைக்காலத்தின் போது தரையில் புதுக் கம்போஸ்ட் தயாரிக்கப்பட வேண்டும். 8 அடி நீளம் 8 அடி அகலம், 2 அடி உயரத்துக்குச் செங்குத்தாகக் கும்மிகள் தயாரிக்கப்பட வேண்டும். பரந்த வெளிகளில் நெருக்கிக் குப்பையைப் போட வேண்டும். அப்போது தான் குளிர்ந்த காற்றால் குப்பை பாதிக்கப்படமாட்டாது.

கம்போஸ்டைப் புரட்டி விட்டுத் தண்ணீர் ஊற்றுதல்

மக்கிக் கொண்டு வரும் கம்போஸ்ட் உரத்தின் மேலே வாரந்தோறும் தண்ணீர் தெளித்துக் கொண்டு வரவேண்டும். இவ்வாறு குப்பையின் மேல் தளத்தைப் பதமாக வைத்துக் கொண்டுவர வேண்டும். உள் பகுதிகளிலும் அவ்வப்போது காற்றும் ஈரமும் படுமாறு செய்ய வேண்டும். ஆகையால் மூன்று முறை புரட்டிப்போட வேண்டும். அத்துடன் தண்ணீரையும் தெளிக்கவேண்டும். அப்போதுதான் ஈரம் காய்ந்து போனதற்கு ஈடு செய்ய முடியும். ஈரமான காலநிலை

இருக்கும்போது, இவ்வாறு தண்ணீர் விடுவதைக் குறைத்துக் கொள்ளலாம். அல்லது, தண்ணீரே விடாமல் நிறுத்திக் கொள்ளலாம். இவ்வாறு முதன் முதலாகக் குழியை நிரப்பும் போது அல்லது போராகக் குவிக்கும் போது விடப்பட்ட தண்ணீரின் அளவுக்கு எல்லாப் பருவ காலங்களிலும் தண்ணீர் விட வேண்டும்.

15 நாட்களுக்குப் பின் முதல் தடவையாகப் புரட்டிப்போடுதல்

முழுக் குழியில் மேலே மக்காமல் இருக்கும் உரத்தை அகற்றி விடுங்கள். அதைப் புதுக் குழியில் போடுங்கள். மேலே 30 நாளான கம்போஸ்ட் உரத்தைப் பரப்பி விடுங்கள். தண்ணீர் விட்டுக் குப்பையை 6 அங்குல உயரத்துக்கு ஈரப்படுத்துங்கள். இவ்வாறு முதல் தடவையாகப் புரட்டிப் போடும்போது, குழி நீள வாட்டத்தில் இரண்டாகப் பிரிக்கப் படுகிறது. காற்று வரும் பக்கத்தில் உள்ள பாதி அப்படியே வைக்கப்படுகிறது. மீதமுள்ள பாதி இதன் மீது வீசப்படுகிறது. (இதற்கு மரப்பரம்பு ஒன்று வசதியாக இருக்கும்). குப்பையைத் தட்டுத்தட்டாக எடுக்கக் கூடாது. மேலேயிருந்து கீழே வரை சாய்வாகவோ அல்லது செங்குத்தாகவோ எடுக்க வேண்டும். இவ்வாறு புரட்டிப்போடப்பட்ட ஒவ்வொரு 6 அங்குல உயரத் தட்டையும் தண்ணீர் தெளித்து நனைக்க வேண்டும். பருவ காலத்தில் குப்பை முழுவதையும், அதிக உயரம் இல்லாமல் இருப்பதற்காகப் புரட்டிப் போடலாம்.

ஒரு மாதத்துக்குப் பின் இரண்டாவது தடவை

குழியின் ஒரு பாதியில் உள்ள குப்பை அப்படியே அடுத்த (காலியாக உள்ள) பகுதிக்குத் தள்ளிச் சமப்படுத்தப் படுகிறது. போதுமான அளவு தண்ணீர் விடப்படுகிறது. மேலேயிருந்து கீழே வரை அதைக் கலப்பதில் இதே அக்கறை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இரண்டு மாதங்களுக்குப் பின் மூன்றாவது முறை

இதே போன்று கம்போஸ்ட் உரமானது மண்வெட்டி யால் தரைக்கு வீசியெறியப்பட்டுத் தண்ணீர் விடப்படுகிறது.

இரண்டு குழிகளில் உள்ள குப்பையை அவைகளுக்கு இடையே உள்ள மேட்டில் வசதியாக அள்ளிப்போட்டு, 10 அடி அகலமும் 3½ அடி உயரமும் உள்ள ஒரே குவியலாக்கலாம். நீளத்தைப் பற்றி அக்கறையில்லை. இவ்வாறு பல பகுதிகள் அல்லது குவியல்களை ஒன்றாகச் சேர்க்கலாம். வசதியாக இருந்தால், நன்றாகப் பதப்படுத்தப்பட்டபின் உரத்தை வண்டிகளில் ஏற்றி நேரே வயல்களுக்குக் கொண்டு செல்லலாம். எந்த இடத்தில் உரத்தைப் பயன்படுத்த வேண்டுமோ அந்த இடத்தில் இந்தக் குவியலைப் போட்டு வைக்க வேண்டும். அதன் மூலம் விதைப்புக் காலத்தில் நேரமும் காலமும் மிச்சமாகும்! எல்லாக் குவியல்களையுமே செங்குத்தாகப் போட வேண்டும். மேல்மட்டம் சமதளமாக இருக்க வேண்டும். அப்போது தான் அளவுக்கு மீறிக் குப்பை காய்ந்து போகாமல் தடுக்க முடியும். அளவுக்கு மீறிக்காய்ந்து விட்டால் மக்குவது நின்றுவிடும்.

நாற்றம் இருந்தால்?

நல்ல கம்போஸ்ட் உரமானது எந்தக் கட்டத்திலுமே நாற்றமடிக்காது. ஆரம்பத்திலிருந்து முடிவு வரை ஒரே மாதிரித் தோற்றத்துடனேயே இருக்கும். ஏதாவது நாற்றம் இருந்தால், அல்லது ஈக்கள் காணப்பட்டால், காற்று அதிகம் தேவை என்பதற்கு அது அறிகுறியாகும். அப்போது குழியைப் புரட்டிப் போட வேண்டும். சிறிது சாம்பலும் சாணமும் சேர்க்க வேண்டும்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எந்த அளவு குப்பை தேவை என்பதைக் கீழ்க்கண்ட விவரங்களை வைத்துக் கொண்டு எளிதாகக் கணக்கிடலாம்.

40 கால்நடைகளுக்குத் தேவையான அளவு

ஆறு நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் குழியை நிரப்புதல் : குவித்து வைத்த குப்பை, கூட்டி வந்த குப்பை ஆகியவற்றை ஒருநாள் குழிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அளவு 40 அல்லது 50 நீண்ட சாக்குகள், அதன் மீது 18

அங்குல விட்டமும் 6 அங்குல ஆழமும் உள்ள தகரத் தட்டுகள் நிறையக் காளான் உற்பத்திக் குப்பை, 15 தட்டு மூத்திர மண், விறகாக உபயோகமாகாமல் இருந்தால் அதிகப்படியாக உள்ள சாணம்.

சேறாக்குதல் : கொட்டத்தில் ஒரு நாள் கிடைத்த குப்பைக்கு, 20 மண்ணெண்ணெய் டின் (அதாவது 4 காலன்) தண்ணீர், 5 தட்டுச் சாணம், 1 தட்டுச் சாம்பல், 1 தட்டு மூத்திர மண், 2 தட்டு காளான் உற்பத்திக் குப்பை.

தண்ணீர் : கொட்டத்திலிருந்து வந்த ஒரு நாள் குப்பைக்கு (குழியில் அது நிரப்பப்பட்ட) உடனடியாக 6 டின், மாலையில் 10 டின், மறுநாள் காலையில் 6 டின்.

மேலே தண்ணீர் தெளித்தல் : ஒவ்வொரு முறையும் 25 டின்.

புரட்டிப் போடும் போது தண்ணீர் : முதல் தடவை 60 இலிருந்து 100 டின், இரண்டாவது தடவை 40 இலிருந்து 60 டின், மூன்றாவது முறை 40 இலிருந்து 80 டின் - பருவ காலத்துக்கு ஏற்றவாறு.

முதல் தடவை, பூஞ்சக் காளான் உற்பத்திக் குப்பை : 12 தட்டு.

பட்டியல்

ஒரு தட்டு அல்லது கூடையில் எடுக்கப்படும் பொருள் எத்தனை கையளவு அல்லது என்ன எடை இருக்கும் என்ற விவரம்.

பொருள்	*அளவு இரண்டு கை நிறைய*	*நிறை இராத்தல் கணக்கில்*
புதுச்சாணம்	6 முதல் 7	40
மூத்திரமண்	20 முதல் 21	22
மரச் சாம்பல்	15	20
பூஞ்சக் காளான் உற்பத்திக் குப்பை	5	20
முதல் தடவை பூஞ்சக் காளான் உற்பத்திக் குப்பை	6	20

செயல் முறைப் பட்டியல்

நாட்கள்	*வேலைகள்*
1	குழியை நிரப்பும் வேலை ஆரம்பம்
6	குழியை நிரப்பும் வேலை முடிகிறது
10	பூஞ்சக்காளான் உற்பத்தி
12	முதல் தடவையாகத் தண்ணீர் ஊற்றுதல்
15,16	முதல் தடவையாகப் புரட்டி விட்டு ஒரு மாதத்திய கம்போஸ்டைச் சேர்த்தல்
24	இரண்டாவது முறையாகத் தண்ணீர் விடுதல்
30, 32	இரண்டாவது முறையாகப் புரட்டி விடுதல்
38	மூன்றாவது முறையாகத் தண்ணீர் விடுதல்
45	நான்காவது முறையாகத் தண்ணீர் விடுதல்
60	மூன்றாவது முறையாகப் புரட்டி விடுதல்
67	ஐந்தாவது முறையாகத் தண்ணீர் விடுதல்
75	ஆறாவது முறையாகத் தண்ணீர் விடுதல்
90	கம்போஸ்ட் இப்போது உபயோகத்துக்குத் தயார்.

இந்தூர் முறையை அப்படியே பின்பற்றுவதற்குச் சூழ்நிலை அனுமதியாவிட்டால், கீழ்க்கண்ட முறையில் அதன் அனுகூலங்களை ஓரளவு நாம் பெறலாம்.

கொட்டத்துக் குப்பை

கலப்படம் செய்யப்பட்ட குப்பையானது கொட்டத்தில் கால்நடைகள் அமரும் இடத்தில் விரிக்கப்படுகிறது. அதை அகற்றுவதற்கு முன்னால், ஏற்கனவே விவரித்துள்ளவாறு போதுமான அளவு சாணம், கோமிய மண், சாம்பல் ஆகியவை அதன்மீது பரப்பப்படுகிறது. இதன் பின் இப்பொருள், எந்த வயலில் நாய் அதை உபயோகப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த வயல் ஓரத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அல்லது, நன்றாகத் தண்ணீர் வடியக்கூடிய ஒரு தகுதியான இடத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அங்கு 3 அங்குல உயரத்துக்கும் 8 அங்குல அகலத்துக்கும் மேலே போகாமல் சிறு சிறு குவியல்களாகக் குவித்து வைக்கப்படுகிறது. வசதியைப் போன்று நீளத்தை எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். மழை பெய்தபின், சுமார் ஒரு மாதத்தில்

பூஞ்சக் காளான் வந்துவிடும். மழை மேகம் உள்ள அல்லது நிதானமாக மழை பெய்த ஒரு நாளன்று ஒரு தடவை முழுதாகப் புரட்டிப் போட வேண்டும். இதற்கு ஒரு மாதங் கழித்து ஒரு முறை அல்லது இரண்டு முறை திருப்பிப் போட வேண்டும். அப்போது, அப்பருவ கால முடிவிற்குள் - மழையும் அவ்வப்போது உரிய காலத்தில் பெய்தால் - உரம் நன்றாக மக்கி விடும்.

மழை பொய்த்து விட்டால் உரம் கிடைப்பதற்கு ஒரு ஆண்டும் அதற்கு மேலும் கூட ஆகலாம்.

திருத்தப்பட்ட முறையும் நல்லதே

இவ்வாறு கிடைக்கும் உரமானது தரமான முறையில் தயாரிக்கப்பட்ட கம்போஸ்ட் உரத்திற்கும் மட்டமானதாகவே இருக்கும் என்றாலும் சாதாரணப் பண்ணை உரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கும். ஏனென்றால் இவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட முறையில் கூட, கடினமான மரத்தாலான பொருட்களையும் எளிதாக மக்க வைக்கலாம். ஏற்கனவே கிராமத்தில் நடைமுறைப் பழக்கத்தில் உற்பத்தியாகும் உரத்தைக் காட்டிலும் அதிக உரம் உற்பத்தி செய்யலாம்.

கிராமப் பயிர்கள்

ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய உணவுப் பயிர்களையும், துணிமணிகளுக்கு வேண்டிய பருத்தியையும் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமத்தின் முதல் கவனமும் இதில்தான் இருக்கிறது. கால்நடைகள் மேய்ச்சலுக்கான ஒரு இடமும், வயது வந்தவர்கள் பொழுது போக்குக்கும் சிறுவர்கள் விளையாட்டுக்கும் ஆன இடமும் அங்கு இருக்கவேண்டும். இதற்கு மேல் அங்கு அதிகப்படியான நிலம் இருந்தால், பயனுள்ள பணப் பயிர்களைப் பயிரிடலாம். இப்பணப் பயிர்களில் கஞ்சா, புகையிலை, அபினி போன்றவைகளை விலக்கி விடவேண்டும்.

அத்தியாயம் 18

விவசாயமும் கால்நடை நலனும் – V

உணவுப் பற்றாக் குறைப் பிரச்னை

உணவுப் பற்றாக் குறை

இயற்கையாகவோ செயற்கையாகவோ ஏற்படும் பஞ்சங்களினால் கோடிக்கணக்கில் இல்லாவிட்டாலும் பதினாயிரக்கணக்கில் மக்கள் பட்டினியால் வாடி மடிவது இந்தியாவில் பழகிப்போன ஒரு விஷயமே. நன்றாக ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தில், தண்ணீர், உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் பற்றாக்குறையைச் சமாளிக்க எப்போதுமே முன்னேற்பாடான முறைகள் இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயம் என்றால் என்ன? இப்பிரச்னையால் அது எவ்வாறு சமாளிக்கும்? - என்பதையெல்லாம் எடுத்து விளக்குவதற்கு இது சந்தர்ப்பமல்ல. இன்று நம்முடைய அக்கறையெல்லாம், தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை நம்பிக்கை யுடனும் வெற்றிகரமாகவும், நாம் சமாளிக்க முடியுமா என்பதை ஆலோசிப்பது தான்.

இறக்குமதி கூடாது

நம்மால் சமாளிக்க முடியும் என்றே நான் எண்ணுகிறேன். சுயஉதவியும் தன்னம்பிக்கையும் தான் நாம் படித்துக் கொள்ள வேண்டிய முதற் பாடங்கள். நாம் வெளி நாடுகளைச் சார்ந்திருப்பது அபாயகரமானது; அவ்வாறு சார்ந்திருப்பது இறுதியில் நாம் திவாலாவதில் கொண்டு போய்விட்டுவிடும். நாம் மேற்கண்ட சுய உதவிப் பாடத்தைக் கற்றுக் கொள்வதானால், உடனடியாக இந்த அபாயத்தி லிருந்து தப்பி விடலாம். இறுமாப்பில் நான் இதைக் கூறவில்லை; உண்மையாகவே கூறுகிறேன். இந்தியா, தனது உணவிற்காக வெளிநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய ஒரு சிறு பகுதியல்ல. நம் நாடு ஒரு உப கண்டம்; சுமார் 40 கோடி மக்களைக் கொண்ட தேசம். மாபெரும் நதிகளும், நல்ல வளம் பொருந்திய விவசாய நிலங்களும், வளங்குன்றாத

கால்நடைச் செல்வமும் உள்ள நாடு. நம்முடைய பசுக்களிடமிருந்து நமக்குக் கிடைக்கும் பால் நமது தேவைக்கும் குறைச்சலாக இருக்கிறதென்பது முற்றிலும் நம் தவறே. நம்முடைய கால்நடைச் செல்வம் நமக்குத் தேவையான பாலை என்றென்றும் கொடுக்கக் கூடிய சக்தி வாய்ந்தது. கடந்த ஒரு சில நூற்றாண்டுகளாக நம்முடைய நாடு புறக்கணிக்கப்படாதிருந்தால், இன்று அது இந்தியா வுக்குப் போதுமான உணவை உற்பத்தி செய்து கொள்வது மட்டுமல்லாமல், வெளி உலகத்திற்கும் உணவுப் பொருள்கள் வழங்கக்கூடிய உபயோகமான பங்காற்றும். கடந்த யுத்தமானது, நடைமுறையில், உலகம் முழுவதையுமே உணவுப் பற்றாக்குறையுள்ளதாகச் செய்திருக்கிறது. இதில் இந்தியாவும் உள்பட்டதுதான். இந்தத் துயரம் நாளுக்கு நாள் அதிகமாகிறதேயொழியக் குறையும் வழியைக் காணோம். ஏதாவதொரு வெளிநாடு இலவசமாக நமக்கு உணவு அளிக்க முன்வந்தால், அதை நன்றியில்லாது நிராகரிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. நாம் பிச்சை எடுக்கக்கூடாது என்றே சொல்ல வருகிறேன். அது நாம் சீர்குலையுமாறு செய்து விடும். இத்துடன், உள்நாட்டிலேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு உணவுப் பொருட்கள் போக்குவரத்திற்கு ஆகும் கஷ்டத்தையும் எண்ணிப் பாருங்கள். தான்யங்களையோ மற்ற உணவுப் பொருட்களையோ ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாகக் கொண்டு செல்வதற்குத் தேவையான வசதி நம்மிடம் இல்லை, மேலும் உண்பதற்கு லாயக்கில்லாத பொருட்கள் நமக்கு அனுப்பப்படலாம் என்ற சாத்தியமும் இல்லாமற் போய்விடவில்லை. மனிதர்களுடன் தானே நாம் பேரம் செய்ய வேண்டியிருக்கிறது என்ற உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது. மனித இயற்கை யானது உலகின் எந்தப் பகுதியிலுமே நூற்றுக்கு நூறு பரிசுத்தமானதாகவோ அல்லது அதை அனுசரித்ததாகவோ இல்லை.

வெளிநாட்டு உதவி

இதற்கு அடுத்தாற்போன்று, நாம் என்ன வெளிநாட்டு உதவி பெறுவது சாத்தியம் என்பதைப் பார்ப்போம்.

நம்முடைய தேவைகளில் மூன்று சதவீதத்திற்கு மேல் வெளிநாடுகளிலிருந்து பெற முடியாது என்று நான் அறிகிறேன். இந்தத் தகவல் சரியாக இருந்தால் - நான் இதைப் பல நிபுணர்களிடம் தெரிவித்ததில் இப்புள்ளி விவரம் சரிதான் என்று அவர்கள் உறுதி செய்கின்றனர் - வெளிநாட்டு உதவியை நம்பியிருக்கலாம் என்பது பொருளற்றதாகப் போய்விடுகிறது. அவ் உதவியை நாம் ஒரு சிறிதளவு நம்பியிருப்பது கூட, நம்முடைய உள்நாட்டுச் சாத்தியக் கூறுகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளாமல் வேறு பக்கம் திருப்பிவிடுகிறது. பணப்பயிர்கள் பயிர் செய்வதற்குப் பதிலாக, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதானால், ஒவ்வொரு அங்குல பூமியும் வீணாகப் போகாமல் தவிர்த்தோமானால், நம்முடைய உள்நாட்டுச் சாத்தியக் கூறுகள் அளவு கடந்ததாக இருக்கும். உடனடியாக விவசாயத்திற்குக் கொண்டுவரக் கூடிய தரிசு நிலங்களையும் நாம் பண்படுத்த வேண்டும்.

பரவல் மயத்தில் உள்ள இலாபம்

உணவுப் பொருட்களைக் குவியல் மயமாக்குவது அழிவுக்குக் கொண்டு போய்விடக் கூடியது என்று நான் அஞ்சுகிறேன். பரவல் மயமானது கள்ளச் சந்தையை எளிதாக ஒழித்துக் கட்டுவதுடன், போக்குவரத்தில் செலவாகும் நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்துகிறது. மேலும் இந்தியாவின் தான்யங்களையும், பருப்பு வகைகளையும் உற்பத்தி செய்யும் கிராமவாசியானவன் எலி, அணில் போன்றவைகளிடமிருந்து தன்னுடைய பயிர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பதை அறிந்திருக்கிறான். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தான்யங்களைக் கொண்டு செல்வதானது, அவைகளை இப்பிராணிகள் சாப்பிட்டுவிடுவதற்கு இடமளிக்கிறது. இதனால் கோடிக்கணக்கான ரூபாய் சேதம் ஏற்படுகிறது. நமக்கு ஒவ்வொரு அவுன்சும் முக்கியமானதாய் இருக்கும்போது, டன் கணக்கான தான்யங்களை நஷ்டப்படுத்தி விடுகிறது. எங்கெங்கு பயிரிட முடியுமோ அங்கெல்லாம் உணவு உற்பத்தி செய்வதன் அவசியத்தை ஒவ்வொரு இந்தியரும் உணர்ந்து விட்டால், இந்தியாவில் உணவுப் பற்றாக்குறை

ஒரு காலத்தில் இருந்ததென்பதையே மக்கள் மறந்துபோய் விடுவார்கள். அதிக உணவு உற்பத்தி செய்வது குறித்த, உள்ளத்தை ஈர்க்கக்கூடிய விஷயத்தைப் பற்றிப் பூரணமாக நான் விளக்கி விடவில்லை. ஆயினும் இந்தப் பாராட்டத்தக்க முயற்சியில் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதரும் எவ்வாறு உதவ முடியும் என்ற சிந்தனையில் விவேகம் உள்ளவர்களைத் திருப்புவதற்கும் அவர்கள் அக்கறையைத் தூண்டுவதற்கும் நான் போதுமானதைக் கூறியிருக்கிறேன் என்று நம்புகிறேன்.

விரதம் ஒரு வழி

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய மூன்று சதவீத உணவுத் தான்யங்கள் இருக்கின்றனவே அவைகளின் விஷயத்தில் நாம் என்ன செய்ய முடியும் என்பதை இப்போது நான் விளக்குகிறேன். ஒவ்வொரு பட்சத்திலும் (இரண்டு வாரங்கள்) பதினோறாவது நாளன்று இந்துக்கள் முழு உண்ணாநோன்போ அல்லது அரைகுறையான உண்ணா நோன்போ மேற்கொள்கின்றனர். முஸ்லிம்களும் மற்ற மதத்தவர்களும், இதே போன்று தங்கள் உணவை மறுப்பது தடை செய்யப்படவில்லை. அதிலும் குறிப்பாக, பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்காக விரதம் மேற்கொள்வதற்குத் தடையே இருக்காது. இவ்வாறு ஒரு சிறிதளவு சுய தியாகம் செய்யும் இன்பத்தை இந்திய தேசம் முழுவதுமே உணர்ந்து விட்டால், வெளிநாட்டு உதவியை நாமாக மறுப்பதானால் ஏற்படக்கூடிய பற்றாக் குறை சரிக்கட்டப்பட்டுவிடும்.

உணவுக் கட்டுப்பாடு வேண்டாம்

தனிப்பட்ட முறையில் என்னுடைய கருத்து என்ன வென்றால் உணவுப் பங்கீட்டால் பயனே இல்லை. அப்படியே பயன் இருந்தாலும் அது மிகமிகச் சொற்பமே. உற்பத்தி யாளர்களை எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் அனுமதிப் பதாக இருந்தால், அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த உணவுப் பொருட்களை மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்து விடுவார்கள். ஒவ்வொருவருக்கும் நல்ல சாப்பிடக் கூடிய தான்யம் கிடைக்கும். ஆனால் இன்றோ இப்படிப்பட்ட தான்யம் எளிதில் கிடைப்பதில்லை.

சுயஉதவி முக்கியம்

அமெரிக்க மக்களுக்கு, குடியரசுத் தலைவர் ட்ருமன் கூறியதாக வெளிவந்துள்ள அறிவுரையைச் சுட்டிக்காட்டு வதுடன், உணவு நெருக்கடி குறித்து வேகமாக நான் எழுதியுள்ள இந்தப் பரிசீலனையை முடித்துக் கொள்கிறேன். அமெரிக்கர்கள் தங்களுடைய உணவைக் குறைத்துக் கொண்டு பட்டினி கிடக்கும் ஐரோப்பாவுக்கு இன்றியமையாது தேவைப்படும் தான்யங்களை மீதப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அவர் கூறினார். இவ்வாறு சுய தியாகம் செய்வதால் அமெரிக்கர்களுடைய உடல்நலம் பாதிக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறியிருக்கிறார். அந்தத் தாராள மனோபாவத்துக்காக, குடியரசுத் தலைவர் ட்ருமனை நான் பாராட்டுகிறேன். இந்தத் தாராளத்துக்கு அடியில், அமெரிக்காவுக்குப் பணந்தேடும் இழிந்த நோக்கம் மறைந்திருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். இந்த யோசனையை நான் ஏற்கத் தயாராயில்லை. ஒரு மனிதனை அவனுடைய செயலைக் கொண்டுதான் மதிப்பிட வேண்டுமேயொழிய அவன் என்ன நோக்கத்துடன் செய்திருப்பான் என்பதை வைத்து மதிப்பிடக் கூடாது. ஆண்டவன் ஒருவனுக்குத் தான் மனிதன் உள்ளத்தில் இருப்பது தெரியும். பட்டினி கிடக்கும் ஐரோப்பாவுக்காக அமெரிக்கா இவ்வாறு தியாகம் செய்ய முடியுமானால், நமக்கு நாமே இந்தச் சிறிய தியாகத்தைச் செய்யத்தவறலாமா? சுயஉதவியே ஒரு தேசத்தின் மதிப்பை உயர்த்துகிறது. ஆகவே பட்டினியால் பலர் இறக்க நேரிட்டாலும், சுயஉதவிக்கு நம்மால் இயன்றதைச் செய்திருக்கிறோம் என்ற பெருமையையாவது தேடிக்கொள்வோமாக![2]

பற்றாக்குறைக் காலத்தில்

மீதப்படுத்துவதே உற்பத்திதான்

யார் மீதப்படுத்துகிறானோ அவன் அந்த அளவு லாபம் பெற்றவனாகிறான். அதாவது எந்த அளவு உணவுப் பொருட்களை மீதப்படுத்துகிறானோ அந்த அளவு அதிகமாக உற்பத்தி செய்தவனாகிறான். ஆகவே ஏழைகளின் கஷ்டத்தை உணருபவர்கள், அவர்களுடன் ஒன்றுபடு பவர்கள், தங்களுடைய தேவைகளைக் குறைத்துக் கொள்ள

வேண்டும். இதற்குப் பல வழிகள் இருக்கின்றன. ஒரு சில வழிகளை மட்டும் நான் இங்குக் கூறுகிறேன். பணக்காரர்கள், உணவுப் பொருட்களைச் சாப்பிடுவதிலும், வீணாக்குவதிலும் மிகமிக அதிகமாகச் செலவழிக்கின்றனர்.

நல்ல உணவு வகை

ஒரு சமயத்தில் ஒரு தான்யத்தை மட்டும் உபயோகியுங்கள். சாதாரணமாக வீடுகளில் சப்பாத்தி, அரிசி, பருப்பு வகைகள், பால், நெய், வெல்லம், எண்ணெய் ஆகியவை உபயோகப்படுத்தப்படுகின்றன. இது தவிரக் காய்கறிகளையும், பழங்களையும் உபயோகப்படுத்துகிறார்கள். இவைகள் சரியான சேர்க்கையல்லவென்று நான் கருதுகிறேன். பால், வெண்ணெய், முட்டை, மாமிசம் ஆகியவைகளின் மூலம் (மிருகப்) புரதச் சத்து அடைபவர்கள் பருப்புக்களை உபயோகிக்க வேண்டியதேயில்லை. ஏழை மக்களுக்குக் காய்கறிகளின் மூலமே புரதச் சத்துக் கிடைக்கிறது. பருப்பு, எண்ணெய் ஆகிய இரண்டையும் உபயோகிப்பதைப் பணக்காரர்கள் விட்டுவிடுவார்களானால், இந்த இரண்டு அத்தியாவசியமான பொருட்களும் ஏழை மக்களுக்குக் கிடைக்குமாறு செய்தவராவார்கள். ஏனென்றால் ஏழைகளுக்குக் காய்கறிப் புரதச்சத்தோ அல்லது மிருகப் புரதச்சத்தோ கிடைப்பதில்லை. இது தவிர, நிறையக் குழம்பு ஊற்றியும் நாம் சாப்பிடக்கூடாது. குழம்பில்லாமல் நாம் சாப்பிடும் போது பாதி தான்யமே போதுமானதாக இருக்கும். வெங்காயம், முள்ளங்கி, காரெட், கொத்தமல்லி, தக்காளி ஆகியவைகளைப் பச்சையாக நறுக்கி வைத்துக்கொண்டு அல்லது பச்சடி செய்து கொண்டு உணவுடன் சாப்பிடுவது நல்லது. இவ்வாறு நாம் பச்சையாகச் சாப்பிடும் ஒன்று அல்லது இரண்டு அவுன்சுக் காய்கறியானது, சமையல் செய்யப்பட்ட எட்டு அவுன்சுக் காய்கறிக்குச் சமமாகும். சப்பாத்தி அல்லது ரொட்டியைப் பாலுடன் சேர்த்துச் சாப்பிடக் கூடாது. ஆரம்பத்தில் நாம் ஒருவேளைச் சாப்பாட்டைச் சப்பாத்தி அல்லது ரொட்டியுடன் பச்சைக் காய்கறி சேர்த்து உட்கொள்ளலாம். மற்றொரு சாப்பாட்டை, சமைக்கப்பட்ட கறியை பால் அல்லது தயிருடன் சேர்த்தும் வைத்துக் கொள்ளலாம்.

இனிப்புப் பதார்த்தங்கள்

இனிப்புப் பலகாரங்களைப் பூரணமாக அகற்றி விட வேண்டும். அதற்குப் பதிலாக, சிறு அளவில் சர்க்கரை அல்லது வெல்லத்தைப் பாலில் போட்டோ அல்லது ரொட்டி யுடன் வைத்தோ சாப்பிடலாம். அல்லது அவைகளைத் (அதாவது சர்க்கரை அல்லது வெல்லத்தைத்) தனியாகவும் சாப்பிடலாம்.

பழங்கள்

புதுப் பழங்கள் சாப்பிடுவதற்கு நல்லனவே. ஆனால் உடலுக்கு ஒரு சிறிது பழம் சாப்பிட்டால் போதும். அது ஒரு விலை உயர்ந்த பொருள். பணக்காரர்களைவிட ஏழை களுக்கும் நோயாளிகளுக்கும் தான் பழங்கள் மிகவுந் தேவை. ஆனால் பணக்காரர்கள் அதிகப்படியாகப் பழங்களைச் சாப்பிட்டு விடுவதால் ஏழைகளுக்கும் நோயாளி களுக்கும் அவை கிடைப்பதில்லை.

தீங்கு செய்யா

நான் இதுவரை கூறியுள்ள யோசனைகள் உடலுக்கு எந்தவிதமான தீங்கும் செய்யமாட்டா என்பதற்கு உணவுச் சாஸ்திரத்தைப் படித்துள்ள எந்த மருத்துவரும் சான்று கூறுவார். அதற்கு மாறாக அவை உடல்நலத்தை அபிவிருத்தி செய்யும்.

ஒரே ஒரு வழிதான்

உணவுப் பொருட்களை மீதப்படுத்துவதற்கு இது ஒரே ஒரு வழிதான். இது வெளிப்படையானதுங்கூட. ஆனால் இதைச் செய்வதால் மட்டும், கண்களுக்குப் புலனாகும் அளவு - கணிசமான அளவு பலன் கிடைத்துவிடாது.

உணவுத் தான்ய வணிகர்

உணவுத் தான்ய வணிகர்கள் தங்களுடைய பேராசையை விட்டுவிட வேண்டும். முடிந்த அளவு லாபம் சம்பாதிக்கப் பார்க்கும் வழக்கத்தையும் விட்டுவிட வேண்டும். முடிந்த அளவு குறைச்சலாகச் சாப்பிடுவதுடன்

திருப்தியடைய வேண்டும். ஏழைகளின் நன்மைக்காக உணவுத் தான்யம் வைத்திருக்கிறார்கள் என்ற நற்பெயரை அவர்கள் சம்பாதிக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் கடைகளே கொள்ளை யடிக்கப்படக் கூடிய அபாயம் இருக்கிறது. அவர்கள் தங்கள் அண்டையில் உள்ள மக்களுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

அதிக விளைச்சல்

தங்களிடம் உள்ளதைப் பத்திரமாக வைத்திருக்குமாறு கிராமவாசிகளுக்குப் போதிக்க வேண்டும். எங்கெங்கு தண்ணீர் கிடைக்கிறதோ அங்கெல்லாம் புது விளைச்சல் எடுக்குமாறும் தூண்ட வேண்டும். இதுவரை சொல்லப் பட்டவைகளிலெல்லாம் மிக முக்கியமான வேலை இதுவே. இதற்குப் பரந்த அடிப்படையில் புத்திசாலித்தனமாகப் பிரசாரம் செய்வது அவசியம். வாழை, உருளைக்கிழங்கு, பீட்ரூட், சேனைக்கிழங்கு, கருணைக்கிழங்கு ஆகியவை களும் ஓரளவு பூசணிக்காயும் உணவுப் பயிர்களே. இவை களை எளிதாக விளைய வைக்க முடியும் என்பது பொதுவாக மக்களுக்குத் தெரிவதில்லை. அவசியமான காலங்களில் இவைகளை ரொட்டிக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

வேலை வேண்டும்

தற்போது பணக்கஷ்டம் அதிகமாய் இருக்கிறது. உணவுத் தான்யம் கிடைக்கலாம். ஆனால் அதை வாங்குவதற்குப் பணம் இல்லை. ஏன் பணமில்லை? ஏனென்றால் வேலை இல்லை. ஆகவே வேலையைக் கண்டுபிடித்தாக வேண்டும். உடனடியாகக் கிடைக்கக் கூடியதும் எளிதில் செய்யக்கூடியதுமான தொழில் நூல் நூற்புத்தான். ஆனால் ஸ்தல தேவைகளின் காரணமாக மற்ற வேலைகளுங் கிடைக்கலாம். ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, வேலையில்லையென்பது இல்லாமற் செய்வோம். சோம்பேறிகள் தான் பட்டினி கிடக்கவேண்டிய அவசியம் இருக்கும். அவர்கள் பட்டினி கிடக்கவும் வேண்டியதுதான். பொறுமையுடன் முயன்றோமானால், இந்த வகுப்பினரும் சோம்பேறித்தனத்தை உதறித்தள்ளுமாறு செய்யலாம்.[3]

தற்போதுள்ள (உணவு நெருக்கடி) நிலைமையில், கீழ்க்கண்ட காரியங்களை உடனடியாகக் கவனிக்க வேண்டும்:

ஒதுக்க வேண்டிய பொருட்கள்

1. உணவைப் பொறுத்தவரை, ஒவ்வொருவரும், தங்களுடைய உடல் நலத்துக்கு எவ்வளவு தேவைப்படுகிற தோ அந்தக் குறைந்த அளவுடன் தங்களுடைய அன்றாடத் தேவைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். நகரங்களைப் போன்று, எங்கெல்லாம் பால், காய்கறி, எண்ணெய், பழம் ஆகியவை கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் தான்யங்கள், பருப்பு வகைகள் ஆகியவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இதை எளிதாகவும் செய்யலாம். காரெட், உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, வாழை ஆகியவை களில் மாவுச்சத்து இருக்கிறது. ஆகவே இவைகளிலிருந்து மாச்சத்தை அடையலாம். இதன் நோக்கம் என்னவென்றால் தற்போதுள்ள உணவுத் தான்யங்கள், பருப்பு வகைகளில் முடிந்தவைகளை விலக்கி, இருப்பு வைக்க வேண்டும் என்பது தான். கோடிக்கணக்கான பேர்களுக்குக் கொஞ்சமும் காய்கறிகள் இனிப்பதில்லை. புன்செய்த் தான்யங்களும், பருப்பு வகைகளும் பற்றாக்குறையாக இருப்பதால் இவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நாக்கின் ருசிக்காக அல்லது இன்பத்துக்காக மட்டும் காய்கறிகளை நாம் சாப்பிடக்கூடாது.

வீட்டில் காய்கறி

2. ஏதாவது தண்ணீர் வசதி கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வரும் தங்களுடைய சொந்த உபயோகத்துக்காகவோ அல்லது பொது உபயோகத்துக்காகவோ, உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முயலவேண்டும். அதற்கு எளிதான வழியாவது :- நல்ல மண்ணை எடுத்துக் கொள்ளுங்கள். முடிந்த இடத்தில் அதனுடன் இயற்கை உரத்தைச் சேருங்கள். காய்ந்த சாணி ஒரு சிறிது கிடைத்தாலும் அது நல்ல உரந்தான். இந்த இரண்டையுங் கலந்து அதை மண்பானை அல்லது தகர டின்னில் போட்டு வையுங்கள். அதில் கடுகு, மற்ற காய்கறி விதைகளை

விதைத்துத் தினந்தோறும் தண்ணீர் ஊற்றி வரவேண்டும். வெகு விரைவாக இவை வேர்விட்டு, உண்ணத்தக்க பச்சிலைகள் அளிப்பதைக் காணும்போது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். இவைகளைச் சமைக்கக்கூட வேண்டியதில்லை. பச்சையாகவே சாப்பிடலாம்.

துண்டுப் பிரசுரங்கள்

3. பூந்தோட்டங்கள் எல்லாவற்றையும் காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக உபயோகப்படுத்த வேண்டும். இவ்விஷயத்தில் வைசிராயும் கவர்னர்களும் மற்ற உயர்தர அதிகாரிகளும் வழிகாட்ட வேண்டுமென்பது எனது யோசனை. அதை எவ்வாறு எளிதாகப் பயிரிடலாம் என்பதைப் பாமர மக்களுக்கு எடுத்துக் கூற மத்திய அரசிலும் மாகாண அரசுகளிலும் உள்ள தலைமை அதிகாரிகள் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரங்களை ஏராளமாக அச்சடித்து நாடெங்கும் விநியோகிக்க வேண்டும். இவைகளை அந்தந்த மாகாண மக்களின் தாய்மொழியில் அச்சடிக்க வேண்டும்.

இராணுவத்தினர் சிக்கனம்

4. பொதுமக்கள் மட்டும் தங்களுடைய உணவைக் குறைத்துக் கொண்டால் போதாது. இராணுவத்தினரும் அவர்களுக்குச் சமமாக - சொல்லப்போனால் அதிகமாகவுங் கூட - உணவைக் குறைத்துக் கொள்ளவேண்டும். இராணுவத் தினர் பிரதானமாகக் குறைக்க வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணம் உண்டு. அதாவது, இராணுவத்தினர் கண்டிப்பான (இராணுவக்) கட்டுப்பாட்டில் வாழ்கின்றனர்; ஆகையால், அவர்கள் எளிதாகச் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

வித்துக்கள் ஏற்றுமதி

5. எண்ணெய் வித்துக்களைப் போன்ற வித்துக்கள், எண்ணெய்கள், பிண்ணாக்குகள், கொட்டைகள் முதலிய வற்றின் ஏற்றுமதியை - ஏற்கெனவே நிறுத்தியிராவிட்டால் இனிமேலாவது - நிறுத்திவிட வேண்டும். விதைகளிலுள்ள

மண்ணையும் மற்ற அழுக்குப் பொருட்களையும் நீக்கி விட்டால் எண்ணெய்ப் பிண்ணாக்கானது, மனிதர்களுக்கு நல்ல உணவுப் பொருளாகும். அதில் நிறையப் புரதச்சத்து இருக்கிறது.

ஆழமான கிணறுகள்

6. எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம், எங்கெங்கு நீர்ப்பாசனத்துக்காகவும், குடிதண்ணீர்க்காகவும் தேவைப்படு கிறதோ அங்கெல்லாம் அரசாங்கம் நல்ல ஆழமான கிணறுகளைத் தோண்ட வேண்டும்.

அரசாங்கம் - மக்கள் ஒத்துழைப்பு

7. அரசாங்க ஊழியர்களும் பொதுமக்களும் இதய பூர்வமான ஒத்துழைப்பு மட்டும் அளிப்பதாய் இருந்தால், இந்தக் கஷ்டத்தை நாடு சமாளித்து விடலாம். இதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. பீதியானது நிச்சயமாகத் தோல்விக்கு வழிகோலும். பரவலாகக் கஷ்டம் இருந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்காத போதும் அதைப் போன்ற நிலைதான் ஏற்படும். துன்பத்தின் காரணம் என்னவென்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். காரணம் என்னவாக இருந்தாலும் சரி, பொறுமையாகவும் தைரியமாகவும் அரசாங்கமும் பொது மக்களும் இந்த நெருக்கடியை அணுக வேண்டும். இல்லையேல் பெரு நாசம் ஏற்படுவது நிச்சயம்.

கள்ள மார்க்கெட்

8. இவைகளுக்கெல்லாம் மேலாக, இந்த நெருக்கடி யைப் பொறுத்தவரை, கள்ள மார்க்கெட்டும் மோசடியும் பூரணமாக ஒழிய வேண்டும். எல்லாத் தரப்பினரும் தவறாது மனமுவந்து ஒத்துழைக்க வேண்டும்.[3]

உணவுப் பற்றாக்குறையும் அதிக ஜனத்தொகையும்

''ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. ஆகையால் கர்ப்பத் தடை அவசியம்'' என்று கூறப்படுவதாக இருந்தால், நான் அந்தச் சித்தாந்தத்தை ஆட்சேபிக்கிறேன். அது ஒரு காலத்திலும் மெய்ப்பிக்கப்படவில்லை. நிலமுறை சரியாக

இருந்து, விவசாயம் அபிவிருத்தி செய்யப்பட்டு, ஒரு உபதொழிலுக்கும் வகை செய்வதாக இருந்தால் தற்போதுள்ளதைப் போன்று இருமடங்கு மக்களை நமது நாடு தாங்கும்; அதற்கு அந்தச் சக்தி இருக்கிறது என்பது எனது கருத்து.

நீண்ட வரலாறு

நம்முடைய இந்தச் சிறிய பூமி நேற்று உண்டான ஒரு விளையாட்டுப் பொருள் அல்ல. கோடிக்கணக்கான ஆண்டு களாக அது இருந்து வந்திருக்கிறது. இந்த நீண்ட காலத்தில், அளவுக்கு மீறிய ஜனத்தொகையின் சுமையால் அது கஷ்டப்பட்டதேயில்லை. ஆகவே, கர்ப்பத்தடைச் சாதனங் களின் மூலமாகப் பிறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்தினா லொழிய, உணவுப் பற்றாக்குறையால் அழிந்து விடக்கூடிய அபாயம் அதற்கு எவ்வாறு ஏற்படக்கூடும்?[4]

அத்தியாயம் 19

கதரும் நூல் நூற்பும்

ஏதன் சின்னம்?

நாட்டில் எல்லோருக்கும் பொருளாதார சமத்துவமும், சுதந்திரமும் கிடைக்க ஆரம்பித்துவிட்டதன் சின்னம்தான் கதராகும். அதனுடன் சம்பந்தப்பட்ட அம்சங்களையெல்லாம் சேர்த்து நாம் அதை ஏற்கவேண்டும். கதர் என்றால் முழுச் சுதேசி மனோபாவம்; இந்தியாவில் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்ய - அதிலும் கிராமவாசிகளின் உழைப்பின் மூலமும் புத்திக் கூர்மையின் மூலமும் பூர்த்தி செய்யவேண்டுமென்ற உறுதியின் சின்னமாகும். கிராமவாசிகள், பெரும்பாலும் சுய தேவைப் பூர்த்தியுள்ளவர்களாய் இருப்பார்கள். தாமாகவே முன்வந்து நகரங்களுக்கும், ஏன் வெளி உலகத்துக்குங்கூட, - இருதரப்புக்கும் அது அனுகூலமாக இருக்கும் வரை சேவை செய்வார்கள்.

புரட்சிகர மாறுதல் தேவை

பலருடைய மனோபாவத்திலும் ரசனைகளிலும் புரட்சி கரமான மாறுதல் ஏற்பட வேண்டியது இதற்கு அவசியமாகும். பல அம்சங்களில் அஹிம்சை வழிதான் எளிதானதாய் இருக்கிறது. ஆனாலும் மற்றும் பல வழிகளில் அதுவே மிகவும் கஷ்டமானது. ஒவ்வொரு இந்தியனின் வாழ்க்கையை யும் அது தொடுகிறது; அவனிடம் மறைந்து கிடக்கும் சக்தியைப் பற்றிய உணர்ச்சி அவனிடம் கொழுந்து விட்டெரியுமாறு செய்கிறது; இந்திய சமுதாயம் என்னும் மாபெருங்கடலின் ஒவ்வொரு துளியுடனும் அவனை ஐக்கியப் படுத்தி அவனைப் பெருமையடையுமாறு செய்கிறது.

சீருடை

இந்திய சமுதாயத்தின் ஐக்கியத்திற்குக் கதர் ஒரு சின்னம். அதன் பொருளாதார சுதந்திரம், சமத்துவம் ஆகியவைகளுக்கும் அது சின்னமாகும். ஆகையால், ஜவஹர்லால் நேரு கவிதாநயத்துடன் கூறியது போல, முடிவாக அது இந்திய சுதந்திரத்தின் சீருடையாகும்.

சுய தேவைப் பூர்த்தி

மேலும் கதர் மனோபாவம் என்றால், வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளின் உற்பத்தியையும் விநியோகத்தையும் பரவல் மயமாக்குவது என்பது பொருளாகும். ஆகையால் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள திட்டம் இதுதான். அதாவது, ஒவ்வொரு கிராமமும் தனது தேவைக்கு வேண்டிய துணியை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். அத்துடன் நகரங்களின் தேவைகளுக்காக ஒரு சிறிது அதிகமாகவும் உற்பத்தி செய்ய வேண்டும்.

கதரில் அடங்குவன

கதர் சம்பந்தப்பட்ட அம்சங்களை நான் விளக்கி விட்டேன். ஆகையால், கதரின் வளர்ச்சிக்காகக் காங்கிரஸ் காரர்கள் என்ன செய்யவேண்டும் அல்லது என்ன செய்யக் கூடும் என்பதை இப்போது நான் சொல்ல வேண்டும். கதர் உற்பத்தியில் பருத்தி விளைவிப்பது, பருத்தி எடுப்பது, அரைப்பது, சுத்தப்படுத்துவது, பட்டை போடுவது, நூல் நூற்பது, தரவாரியாகப் பிரிப்பது, சாயம் போடுவது, நெசவில் பாவு நூலும், குறுக்கு நூலும் போடுவது, நெய்வது, வெளுப்பது ஆகிய எல்லாம் அடங்கும். இவைகளில் சாயம் போடுவதைத் தவிர மற்ற எல்லாமே அத்தியாவசியப் பணிகள் தான். இவைகளில் ஒவ்வொரு பணியையும் கிராமங்களில் வெற்றிகரமாகச் செய்ய முடியும். அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் இந்தியாவில் செயலாற்றும் பல கிராமங்களில் இது அவ்வாறு நடந்து கொண்டிருக்கிறது.

காங்கிரஸ்காரர்களுக்குச் சில விதிமுறைகள்

கதர்த் திட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்ய முடியும் என்பது குறித்து அகில இந்திய நூற்போர் சங்கம் அவ்வப்போது சில அறிவுரைகளைத் தெரிவித்து வருகிறது. கதர் விஷயத்தில் காங்கிரஸ் என்ன கூறுகிறதோ அதை காங்கிரஸ்காரர்கள் உண்மையாக அனுஷ்டிக்க விரும்பினால் அவைகளை நிறைவேற்றி வரலாம்.

சில பரந்த விதிகளை மட்டும் நான் இங்கு கூறுகிறேன்:

1. ஒரு சிறிதளவாவது நிலம் உள்ள ஒவ்வொரு

குடும்பமும், குடும்ப உபயோகத்திற்காவது அங்கு பருத்தி பயிரிட முடியும். பருத்தி பயிரிடுவதென்பது எளிதான வேலை. பீகாரில், பயிரிடக்கூடிய நிலங்களிலெல்லாம் 3/20 பகுதி நிலத்தில் அவுரி பயிரிடுமாறு விவசாயிகள் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த அவுரி பயிரிடுவோரின் நலனுக்காக இந்த ஏற்பாடு. ஆகவே நாட்டினுடைய நலனைக் கருதி, நம்முடைய நிலத்தில் ஒரு பகுதியில் ஏன் நாமாகவே பருத்தி விளைவிக்கக் கூடாது? கதர் வேலையுடனேயே பரவல் மயம் தொடங்குகிறது என்பதை வாசகர் கவனிக்க வேண்டும். இப்போது பருத்திப் பயிர்களெல்லாம் ஒரு மத்தியமான இடத்தில் விளைவிக்கப்படுகிறது. ஆகையால் அதை இந்தியாவின் தூரப் பகுதிகளுக்கு அனுப்ப வேண்டி யிருக்கிறது. யுத்தத்துக்கு முன்னால் அது பிரதானமாக ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும் தான் அனுப்பப்பட்டு வந்தது. அது பணப் பயிராகவே இருந்தது. இன்றும் இருக்கிறது; ஆகையால் மார்க்கெட் ஏற்றத்தாழ்வுகளுக்குப் பலியாகிறது. கதர்த் திட்டத்தின் கீழ்ப் பகுதி விளைச்சலானது, இந்தச் சூதாட்டத்திலிருந்தும் நிச்சயமற்ற தன்மையிலிருந்தும் விடுபடுகிறது. பயிரிடுபவர் தனக்கு எது தேவையோ அதைப் பயிரிட்டுக் கொள்கிறார். விவசாயி தன்னுடைய சொந்தத் தேவைக்காகப் பயிரிட வேண்டும் என்பதையும் அவருடைய முதல் கடமை இதுதான் என்பதையும் விவசாயி தெரிந்து கொள்ள வேண்டும். அவர் அதைச் செய்யும் போது மார்க்கெட் வீழ்ச்சியால் அவர் பாதிக்கப்படும் நிலை குறையும்.

2. நூல் நூற்பவருக்கு வேண்டிய பஞ்சு அவரிடமே இல்லாவிட்டால், தனக்கு வேண்டிய பருத்தியை அவர் அரைப்பதற்காக வாங்க வேண்டும். கையால் இயக்கப்படும் ‘ரோலர் பிரேம்’ இல்லாமலேயே இதை எளிதாக அவர் செய்யலாம். ஒரு பலகையையும், இரும்பு உருளையையும் வைத்துக் கொண்டு அவர் தனக்கு வேண்டிய பஞ்சை அரைக்கலாம். இது நடைமுறைச் சாத்தியமில்லாத போது, கையால் அரைக்கப்பட்ட பஞ்சை வாங்கி அதைப் பட்டை போட்டுக்கொள்ள வேண்டும். ஒரு சிறிய அம்பில் அதிகக் கஷ்டமில்லாமல் நமக்கு வேண்டிய பட்டைகளைப் போட்டுக் கொள்ளலாம். உழைப்பு எவ்வளவு அதிகமாகப் பரவல்

மயமாகிறதோ அந்த அளவு கருவிகளும் லேசானவையாக வும் மலிவானவையாகவும் ஆகின்றன. பட்டைகள் போட்ட பின் நூற்பு ஆரம்பமாகிறது.

சகோதரத்துவம்

நூல் நூற்பது வரையான இந்த வேலைகளிலெல்லாம் தேசம் முழுவதுமே ஒரே சமயத்தில் ஈடுபடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இந்த தேசம் முழுவதும் எவ்வளவு ஐக்கியமடையும்! ஏழை, பணக்காரர் ஆகிய இரண்டு சாராரும் பொதுவாக இவ்வேலையைச் செய்தால், அதனால் ஏற்படக் கூடிய இணைப்பு, எவ்வளவு தூரம் சமத்துவத்தை ஏற்படுத்தும்!

உழைப்பும் அறிவும்

காங்கிரஸ்காரர்கள் உள்ளப்பூர்வமாக இந்த வேலை யில் ஈடுபடும்போது இதற்கான சாதனங்களை அபிவிருத்தி செய்வார்கள். புதிதாகப் பலவற்றையும் கண்டுபிடிப்பார்கள். நம் நாட்டில் உழைப்புக்கும் அறிவுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி இருக்கிறது. இதனால் தேக்க நிலைதான் ஏற்படுகின்றது. இந்த இரண்டிற்குமிடையே பிரிக்க முடியாத ஒரு பிணைப்பு இருந்தால் - அதிலும் நான் இங்கே கூறிய முறையில் இருந்தால் - அதனால் ஏற்படக்கூடிய நன்மை அளவிடற்கரியதாக இருக்கும்.

ஒரு மணி போதும்

இவ்வாறு ஒரு யக்ஞமாகத் தேசம் முழுவதுமே நூற்கும் திட்டத்தில், சாதாரண ஆணோ, பெண்ணோ இதற்காக ஒரு மணி நேரத்திற்கு மேல் செலவிட வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை.

இராட்டையின் செய்தி

இராட்டை அளிக்கும் செய்தியானது, அச்சிறிய கருவியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எவ்வளவோ விசால மானதாகும். எளிய வாழ்க்கை வாழ்வது, மனித வர்க்கத்திற்குத் தொண்டு செய்வது, மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமல் வாழ்வது, ஏழை - பணக்காரர், முதலாளி -

தொழிலாளி, மன்னர் - பிரஜை ஆகியோரிடையே பிரிக்க முடியாத ஒரு சகோதரத்துவத்தை ஏற்படுத்துவது ஆகியவையே இராட்டினத்தின் செய்தியாகும்.[2]

'கடையனுக்கும்'

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற சொற்றொடரில் உள்ள கருத்தை நான் அப்படியே ஆதரிக்கிறேன். உலகம் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோமோ அதை இந்தக் 'கடையர்களுக்கும்' நாம் செய்ய வேண்டும். எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும். வாய்ப்பு மட்டும் அளிக்கப்படுமானால், ஒவ்வொரு மனிதனும் சமமான ஆன்மிக வளர்ச்சி அடைவான். இதன் சின்னமாகத்தான் இராட்டை இருக்கிறது.[3]

நூற்பு ஒரு யக்ஞம்

''ஒரு யக்ஞமாக இருக்கக் கூடிய உடல் உழைப்பு என்று நாம் ஏற்றுக்கொள்ளக் கூடியது நூற்புத்தான்; அதற்கு மிகமிகத் தகுதியானதும் நூற்பே'' என்று தான் நான் எண்ணுகிறேன். இதைக் காட்டிலும் கண்ணியமானது அல்லது தேசிய மயமானது எதையும் நான் கற்பனை செய்ய முடியாது. ஏனென்றால், சுமார் ஒரு மணி நேரத்திற்காவது ஏழைகள் செய்ய வேண்டிய உழைப்பை நாமும் செய்து, அவர்களுடன் நாம் இரண்டற ஒன்றுபட வேண்டும். அதன் மூலம் மனித வர்க்கத்துடனும் ஒன்றுபட வேண்டும். ஏழைகள் எவ்வாறு தங்களுடைய வாழ்வுக்காக உழைக்கிறார்களோ அதைப் போன்று நான் அவர்களுடைய வாழ்வுக்காக உழைக்க வேண்டும். இதை ஆண்டவன் பெயரால் செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் ஆண்டவனை ஆராதிப்பதற்கான சிறந்த முறையை என்னால் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை. இராட்டினத்தால் உலகத்திலுள்ள செல்வங்கள் இன்னும் அதிக சமத்துவமான முறையில் விநியோகமாகும்.[4]

பொருளாதார மறுமலர்ச்சி

இந்தியாவின் பொருளாதார, தார்மிக மறுமலர்ச்சிக்குக் கையால் நூற்பதும் நெய்வதும் மிகப்பெரிய சாதனங்களாக

இருக்கும் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கையுண்டு. இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு விவசாயத்திற்குத் துணையாக இருக்கக்கூடிய ஒரு எளிய தொழில் வேண்டும். நீண்ட காலத்திற்கு முன்பு நூற்புத்தான் குடிசைத் தொழிலாக இருந்தது. இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால், அவர்களுடைய வீட்டில் மீண்டும் இராட்டினம் சுழல்வதற்கு நாம் உதவ வேண்டும். ஒவ்வொரு கிராமமும் மீண்டும் தனக்கென்று ஒரு நெசவாளரை வைத்துக் கொள்ள வேண்டும்.[5]

"துணை" வேலை

வாசகர் தனது மனதில் இந்தியா என்னும் எலும்புக் கூட்டைப் பற்றிக் கற்பனை செய்து பார்ப்பாரானால், இங்குள்ள மக்களில் எண்பது சதவீதத்தினரைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியதிருக்கும். இவர்கள் தங்களுடைய வயல்களில் வேலை செய்பவர்கள் - ஆண்டில் குறைந்தது நான்கு மாதங்களில் இவர்களுக்கு வேலை இருப்பதில்லையாதலால், கிட்டத்தட்டப் பட்டினியின் எல்லையிலேயே வாழ்கிறார்கள். இதுதான் சாதாரணமான நிலை. கட்டாயமான சூழ்நிலையில் இவ்வாறு வேலையில்லா நிலை ஏற்படுகிறது. இதனுடன் திரும்பத் திரும்ப ஏற்படும் பஞ்சங்களும் சேர்ந்து கொள்கின்றன. தங்களுக்குக் கிடைக்கும் சொற்ப வருவாய்க்குத் துணையாக, தங்களுடைய சொந்தக் குடிசைகளிலேயே இந்த ஆண்களும், பெண்களும் செய்யக்கூடிய வேலை என்ன இருக்கிறது? கையால் நூல் நூற்பதைத் தவிர வேறு எதுவுமே இல்லையென்பதில் இன்னும் யாருக்கும் சந்தேகம் உண்டா?[6]

வீட்டுச் சாப்பாடு

நம் வீட்டில் சமைக்கப்படும் உணவுக்கு அதிகச் செல வாகாது. ஹோட்டல் சமையலின் மூலம் வீட்டுச் சமையலை ஈடுகட்ட முடியாது. அதைப் போலவே வீட்டில் நூல் நூற்றுத் துணி உற்பத்தி செய்வதும் அதிகம் செலவாவதாக இருக்க முடியாது. இருபத்தைந்து கோடிக்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய கையாலேயே நூற்பார்கள். இவ்வாறு நூற்ற

நூலைத் தாங்கள் வாழும் இடங்களுக்கு அருகிலேயே நெய்து கொள்வார்கள். இந்த மக்கள் நிலத்தை நம்பி வாழ்பவர்கள்; வருஷத்தில் குறைந்தது நான்கு மாதங்கள் சோம்பியிருப்பவர்கள்.

மலிவான துணி

வேலையில்லாது இருக்கும் நேரத்தில் இவர்கள் நூற்று, அவ்வாறு நூற்ற நூலை நெய்யச் சொல்லி அணிந்து கொண்டார்களானால், இவர்களுடைய கதருடன் எந்த ஆலைத் துணியும் போட்டியிட முடியாது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட துணி, அவர்களுக்கு மிகமிக மலிவானதாக இருக்கும்.[7]

நன்மைகள்

நூற்பதால் கிடைக்கக்கூடிய நன்மைகளாவன :

1. ஓய்விலிருந்து, சொற்பப்பணமும் தேவைப்படுவோருக்கு இது உடனடியாக வேலை அளிக்கிறது.
2. இது ஆயிரக்கணக்கான பேருக்குத் தெரிந்தது.
3. இது எளிதாகக் கற்றுக் கொள்ளக்கூடியது.
4. இதற்குக் கிட்டத்தட்ட மூலதனமே தேவையில்லை.
5. இராட்டையை எளிதாகவும், அதிக செலவு இல்லாமலும் செய்து கொள்ளலாம். ஒரு ஓடு, ஒரு குச்சி ஆகியவற்றின் உதவியுடனேயே நூல் நூற்பை மேற்கொள்ள முடியும் என்பதை நம்மில் பெரும்பாலோர் இன்னும் அறியவில்லை.
6. மக்களுக்கு இதன்மீது வெறுப்பில்லை.
7. பஞ்சம், பற்றாக்குறை ஆகிய காலங்களில் இது உடனடியாக நிவாரணம் அளிக்கிறது.
8. வெளிநாட்டுத் துணியைக் கொள்முதல் செய்வதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் செல்வத்தைத் தடுத்து நிறுத்தக்கூடியது இது ஒன்றே.
9. இவ்வாறு மீதப்படும் கோடிக்கணக்கான ரூபாய்களை இது உடனடியாக உண்மையான ஏழை மக்கள் மத்தியில் விநியோகம் செய்துவிடுகிறது.

10. இதில் மிகச் சிறிய வெற்றி பெற்றாலும் அது மக்களுக்குப் பெரும் லாபந்தரக்கூடியதாக இருக்கும்.
11. மக்கள் மத்தியில் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான மிகச் சிறந்த சாதனம் இதுவே.[8]

வேலை தருகிறது

பொதுமக்களுக்கு உள்ள நோய், வேலையில்லை என்பது தானேயொழியப் பணமில்லை என்பதல்ல. உழைப்புத்தான் பணம். கோடிக்கணக்கான மக்களுக்கு அவர்களுடைய இல்லங்களில் கண்ணியமான வேலை அளிக்கக் கூடியவர் உணவும் துணியும் அளித்தவராகிறார். இவைகளை அளிப்பதும் பணம் அளிப்பதும் ஒன்றே. சர்க்காவானது இப்படிப்பட்ட உழைப்பை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆகையால் இதைக் காட்டிலும் சிறந்த ஒரு சாதனத்தைக் கண்டுபிடிக்கும் வரை, இதுவே நடைமுறையில் இருக்க வேண்டும்...[9]

மூலவேர்

எல்லாத் தீமைகளுக்குமே மூலகாரணம் வேலையில்லாது சோம்பியிருப்பதுதான். ஆகவே இந்த மூலவேரைக் கிள்ளி எறிந்து விட்டால், பெரும்பாலான தீமைகளை மேலும் எவ்வித முயற்சியும் செய்யாமலே குணப்படுத்திவிட முடியும். பட்டினிகிடக்கும் நாட்டிற்கு சுய முயற்சியோ தன்னம்பிக்கையோ இருக்காது. சுகாதார இன்மை, நோய் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் அது எண்ணாது, எந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு போனாலும் 'இதனால் பயன் என்ன?' என்று தான் அது கேட்கும். இவ்வாறு பீடித்துள்ள விரக்தி என்னும் குளிரைப் போக்கித் தன்னம்பிக்கை என்னும் சூரியன் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் உதயமாகுமாறு செய்ய வேண்டுமானால், சர்க்கா என்னும் உயிரூட்டுங் கருவியின் மூலமே அது முடியும்.[10]

தரும் பலன்கள்

ஒன்றுமேயில்லாத ஒரு நிலையிலிருந்து ஏதாவது கொஞ்சம் உற்பத்தி செய்யவேண்டும் என்ற முயற்சியே

இராட்டையாகும். இராட்டையின் மூலம் நாம் தேசத்துக்கு அறுபது கோடி ரூபாய் மீதப்படுத்திக் கொடுக்க முடியுமானால், - இது நிச்சயமாக நம்மால் முடியும் - அந்தப் பெருந்தொகை நம் தேசிய வருமானத்துடன் சேரும். இந்த வேலையில் தானாகவே கிராமப் புனரமைப்பு வேலையும் நடைபெற்று வருகிறது. கிட்டத்தட்ட இந்தத் தொகை முழுவதுமே இந்தியாவில் உள்ள பாமர ஏழைகளிடையே விநியோகிக்கப்படுமாதலால், இவ்வளவு செல்வத்தையும் நியாயமாகவும் கிட்டத்தட்டச் சமமாகவும் நாம் விநியோம் செய்தவர்களாகிறோம். இதனுடன் இவ்வாறு விநியோகம் செய்வதனால் ஏற்படக்கூடிய அளவுகடந்த தார்மிகப் பலனையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சர்க்காவின் நிலை அசைக்க முடியாததாகி விடும்.[11]

ஏழைகளுக்கு ஆதாரம்

சில இடங்களில் உள்ள நெசவாளர்கள், அவ்வேலை யின் காரணமாகத் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்படுவது உண்மையே. இவர்களில் பெரும்பாலோர், எந்தவிதமான அழகும் இல்லாத முரட்டுக்கதரை உற்பத்தி செய்பவர்கள். இந்தத் தொழிலே மடியும் கட்டத்தில் இருந்த போது கதர் அவர்களுடைய உதவிக்கு வந்தது. அவர்கள் உற்பத்தி செய்த முரட்டுத் துணிக்கு ஒரு தேவையை ஏற்படுத்தியது. அப்போதுதான் நூற்பைக் கொண்டு வாழ்ந்த ஏராளமான அரிஜனக் குடும்பங்கள் இருந்தனவென்பது கண்டுபிடிக்கப் பட்டது. இவ்வாறு, ஏழை மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கதர் இருக்கிறதென்பதில் ஐயமில்லை. இது மிக மிக ஏழைகளாக இருப்பவர்களுக்கு - அரிஜனங்கள் உள்பட, (ஏழைகளிலேயே மிகவும் நிராதரவாக இருப்பவர்கள் இவர்கள் தான்) - இது உதவுகிறது. அரிஜனங்கள் இவ்வாறு நிராதரவாய் இருப்பதற்குக் காரணம், மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பல வேலைகள் அரிஜனங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான்.[12]

பிரம்மச்சாரிகளுக்கு இராட்டை

பிரம்மச்சர்யத்தை அனுஷ்டிக்க விரும்புவோருக்கும் நான் இராட்டையையே அளிப்பேன். இது இகழத்தக்க ஒரு

பொருளல்ல. ஏனென்றால் அனுபவம் இதற்குச் சான்று பகர்கிறது. ஆசைகளை அடக்க விரும்பும் ஒருவன் அமைதியாக இருக்க வேண்டியிருக்கிறது. அவனுக்குள்ளே மன எழுச்சிகள் அடங்க வேண்டும். இராட்டையைச் சுற்றுவதானது மிகவும் மென்மையும் இனிமையும் வாய்ந்ததாக இருக்கிறது. ஆகையால் அதை நம்பிக்கையுடன் சுற்றுபவர்களுடைய, மன உணர்ச்சிகளை அடக்குகிறது ... மனித உணர்ச்சிகள் காற்றைவிட வேகமானவை. அவ்வகளைப் பூரணமாக அடக்குவதற்கு எல்லையற்ற பொறுமை வேண்டும். இதில் நான் கொண்டாடும் உரிமையெல்லாம், இராட்டையானது மனதை நிலைப்படுத்துவதற்கு உதவக் கூடிய சக்தி வாய்ந்த ஆயுதமாக இருக்கும் என்பதுதான்.[13]

மாபெரும் பணி.

நூல் நூற்பானது கோடிக்கணக்கான மக்களை ஒரு கூட்டு முயற்சியில் இணைக்கும்; கோடிக்கணக்கான மக்களுடைய சக்தியைப் பாதுகாப்பதுடன் அதைப் பயன்படுத்தவும் உதவும். கோடிக்கணக்கான மக்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தாய் நாட்டுக்கு அர்ப்பணிக்குமாறு செய்யும். மேலும், இப்படிப்பட்ட ஒரு மாபெரும் பணியை நிறைவேற்றுவதானது, நம்முடைய பலத்தை நாமே உணருவதற்கு உதவக்கூடியதாயும் இருக்கும். நூற்பினால் ஏற்படக்கூடிய நுணுக்கமான, ஏராளமான சிக்கல்களில் நாம் பூரணமான தேர்ச்சி பெற்றவர்களாக வேண்டியதுமிருக்கும். உதாரணமாக, ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்துக் கொள்வது கிராமங்களில் துப்புரவான, சுகாதாரமான சூழ்நிலைகளில் வாழக் கற்றுக் கொள்ளுதல், முட்டுக் கட்டைகளாக இருக்கும் கஷ்டங்களை அகற்றுதல், மற்றும் இவை போன்றவை. ஏனென்றால், இவைகளையெல்லாம் நாம் கற்றுக் கொண்டாலொழிய, நாம் இந்தக் கடமையை நிறைவேற்றி வைக்க முடியாது. அப்போதோ, இராட்டையானது நம்மிடம் இந்தச் சக்தியை வளர்ப்பதற்கான ஒரு சாதனமாக அமைகிறது.[14]

மற்றத் தொழில்கள்

கோடிக்கணக்கான மக்கள் மேற்கொள்ளக் கூடிய ஒரே தொழில் நூற்புத்தான். வேறெதுவும் இல்லை. இதற்காக, மற்றத் தொழில்களையெல்லாம் பொருட்படுத்த வேண்டிய தில்லை; அல்லது மற்றத் தொழில்களெல்லாம் பலனற்றவை என்பது பொருளல்ல. உண்மையில், தனிப்பட்ட கண்ணோட்டத்துடன் கவனித்தால், மற்ற எந்தத் தொழிலும் நூற்பைக் காட்டிலும் அதிக வருவாய் அளிக்கக் கூடியதாய் இருக்கும். உதாரணமாக, கடிகாரங்கள் செய்வதானது அதிக வருமானம் அளிக்கக் கூடியதாகவும் மனதைக் கவரக் கூடிய தாயும் இருக்கும். ஆனால் எத்தனை பேர் அத்தொழிலில் ஈடுபடமுடியும்? கிராமங்களில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு அதனால் ஏதாவது உபயோகமுண்டா? ஆனால் கிராம மக்கள் தங்களுடைய வீடுகளைப் புனரமைப்புச் செய்து மூதாதையர்களைப் போல வாழ ஆரம்பித்தால், தங்களுடைய வேலையற்ற நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த ஆரம்பித்தால், மற்றத் தொழில்களெல்லாம் தாமாகவே உயிர்பெறும்.[15]

எப்போது முடியும்?

அறிவுக்கூர்மையும், தேச பக்தியும் நிறைந்த சுயநல மற்ற இந்தியர்களைக் கொண்ட ஒரு படையே வேண்டும். சர்க்காவின் செய்தியைக் கிராமங்களில் பரப்பவும் ஒளி இழந்த கிராமவாசிகளின் கண்களில் நம்பிக்கை ஒளி வீசுமாறு செய்யவும் இவர்கள் மன ஒருமையோடு பாடுபட வேண்டும். இப்படிப்பட்டவர்களுடைய அணி இல்லாவிட்டால், சர்க்காவைப் புனருத்தாரணம் செய்ய முடியாது. இது ஒரு மகத்தான கூட்டுறவு முயற்சி; சரியான முதியோர் கல்வி. எப்படி ஓசையின்றி, உறுதியோடு, உயிரூட்டத்துடன் சர்க்கா சுற்றுகிறதோ, அதைப் போன்று ஓசையில்லாத ஆனால் நிச்சயமான ஒரு புரட்சியை அது உண்டாக்குகிறது.

சர்க்காவின் சேவை

இங்கே நான் கூறும் வாதம் சரிதான் என்பதை, இருபது ஆண்டுகளாக நான் சர்க்காவில் செய்துவரும் பணி

உறுதிப்படுத்துகிறது. ஏழை இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சர்க்கா கிட்டத்தட்டச் சமத்துவமான முறையில் சேவை செய்து வந்திருக்கிறது. பகட்டான பேச்சும் பறைசாற்றுதலும் இன்றி, இலட்சக்கணக்கான கிராமக் கைத்தொழிலாளர்களின் கைகளுக்கும் சுமார் ஒரு கோடி ரூபாய் போய்ச் சேர்ந்திருக்கிறது.

சுதந்திரம் தரும்

அதனால்தான் நான் தயக்கமின்றிச் சொல்லுகிறேன். பல்வேறு விதமான மதப்பிரிவுகளையும் சேர்ந்த நம் எல்லோரையும் சர்க்கா சுதந்திரத்தை நோக்கி அழைத்துச் செல்லுமென்று, கிராமங்களுக்கு உரிய இடத்தைச் சர்க்கா மீண்டும் அளிக்கிறது. உயர்ந்தவர்களுக்கும், தாழ்ந்தவர்களுக்குமிடையே உள்ள ஏற்றத்தாழ்வைப் போக்குகிறது.[16]

எதிர்காலம் வாழ்த்தும்

இராட்டையானது, வணிக அடிப்படையிலான போரின் சின்னமல்ல; வணிக அடிப்படையிலான சமாதானத்தின் சின்னம். உலக நாடுகளுக்கிடையே அது குரோத உணர்ச்சியைப் பரப்பாது நல்லெண்ணம், சுய முயற்சி ஆகியவற்றை வாரி வழங்குகிறது. உலக அமைதிக்குப் பங்கமாக இருந்து அதன் வளங்களைச் சுரண்டிக் கொண்டிருக்கும் ஒரு கடற்படையின் பாதுகாப்பு அதற்குத் தேவையாய் இராது. அதற்குப் பதிலாகக் கோடிக்கணக்கான பேர் இன்று எவ்வாறு தங்களுடைய இல்லங்களில் தங்கள் உணவைத் தயாரித்துக் கொள்கிறார்களோ அதைப் போன்று தங்களுக்கு வேண்டிய நூலைத் தாங்களே நூற்றுக் கொள்ள வேண்டும் என்ற பக்தி பூர்வமான உறுதிப்பாடு மட்டும் வேண்டும். நான் செய்யத் தவறியவைகள், செய்த தவறுகள் பலவற்றுக்காக எதிர்கால சந்ததியினரின் நிந்தனைக்கு நான் ஆளாகலாம். ஆனால் சர்க்காவைப் புனருத்தாரணம் செய்ததற்காக மட்டும் நிச்சயமாய் அதன் வாழ்த்தைப் பெறுவேன் என உறுதியாக நம்புகிறேன். எல்லாவற்றையும் நான் அதற்காகப் பணயம் வைக்கிறேன். ஏனெனில் சர்க்காவின் ஒவ்வொரு சுற்றும் நூலை நூற்பது

மட்டுமல்லாமல், அமைதி, நல்லெண்ணம், அன்பு ஆகியவைகளையும் 'நூற்கிறது'.[17]

ஏகாதிபத்திய எண்ணங்கூடாது

கதரையும் மற்றக் கிராமக் கைத்தொழில்களையும் புனருத்தாரணம் செய்வதன் மூலமே மக்களுடைய உள்ளத்தில் பதிந்துள்ள எளிமை, வீட்டுப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய வாழ்க்கையையே புதுப்பித்து அமைக்கும் அளவுக்கு நாம் வளர்ச்சியடைய முடியும் என்பது எனது கருத்து. உலகிலுள்ள பலவீனமான இனங்களைச் சுரண்டி அதை அஸ்திவாரமாகக் கொண்டு எழுப்பப்படும் ஒரு ஏகாதிபத்தியத்திற்கு நாம் ஆளாக மாட்டோம். கடல், விமானப்படைகள் சமாதானமான வாழ்க்கையென்பதைக் கிட்டத்தட்டச் சாத்தியமற்றதாகச் செய்து விட்டன. அவைகளால் பாதுகாக்கப்படும் ஒருமயக்கந்தரும் லோகாயத நாகரிகத்தை ஏற்க வேண்டியதும் அப்போது இருக்காது. அதற்கு மாறாக, அப்போது, இவ்வித ஏகாதிபத்தியத்தைப் பல்வேறு நாடுகளின் பொதுநல உறவாக நாம் மாற்றியமைக்க முடியும். இவ்வாறு நாடுகள் ஒன்று சேருவதாக இருந்தால், தங்களிடம் உள்ள சிறந்த அம்சங்களை உலகத்திற்கு அளிக்கவும், மிருகத்தனமான பலாத்காரத்தினால் அல்லாமல் தாங்களே கஷ்டத்தை அனுபவித்து, உலகிலுள்ள பலவீனமான இனங்களையும் நாடுகளையும் பாதுகாக்கவும் அவ்வாறு ஒன்று சேரும். இராட்டை பூரண வெற்றியடைந்த பின்புதான், இப்படிப்பட்ட சிறந்த மாறுதல் ஏற்பட முடியும். இந்தியா புறக் கவர்ச்சிகளுக்கு ஆளாகாமல், தன்னுடைய பிரதான தேவைகளான உணவு, உடை ஆகிய இரண்டிலும் தன்னிறைவு பெற்ற நாடாக வேண்டும். அவ்வாறு ஆகி வெளியிலிருந்து தாக்குதல்கள் ஏற்பட முடியாத அளவு அது பலம் பெறும் போதுதான் இந்தியா இப்படிப்பட்ட செய்தியை உலகிற்கு அளிக்கத் தகுதியான நாடாகும்.[18]

அஸ்திவாரம் இராட்டை

இந்த ஒரே தொழிலை (அதாவது, கதரை) நாம் புனருத்தாரணம் செய்யும்போது, மற்றத் தொழில்களெல்லாம்

தாமே வளர்ச்சியடையும். ஒரு பழுதில்லாத கிராம வாழ்க்கையை அமைக்கக்கூடிய அஸ்திவாரமாக இராட்டையையே நான் ஆக்குவேன். மற்ற நடவடிக்கைகளெல்லாம் இந்த இராட்டையைச் சுற்றி அமையுமாறு செய்வேன்.[19]

சிறந்த சாதனம்

கிராமங்களின் புனர் வாழ்வுக்கு எப்போதுமே கதர் என்னும் இலட்சியம் மிகச் சிறந்த சாதனமாக இருந்து வந்திருக்கிறது. இவ்வித கிராமப் புனர்வாழ்வின் மூலம், பொது மக்களிடையே உண்மையான பலத்தை - இந்த பலம் தான் உண்மையில் சுயராஜ்யத்தைக் கொண்டு வரும் - அளிக்கக் கூடியதாகவும் இருக்கும்.[20]

நூல் - கதர் பரிமாற்றம்

நகரங்களிலும் கிராமங்களிலும் ஒருங்கே கதர் கிடைக்க வேண்டுமானால், நூலைக் கொடுத்தே அதைப் பெற்றுக் கொள்வதாய் இருக்க வேண்டும். இது எனது அனுபவத்தில் கண்ட உண்மை. காலம் போகப் போக, நூல் என்னும் செலாவணியை அளித்துக் கதரை வாங்க வேண்டுமென்று தான் மக்களே வலியுறுத்துவார்கள். எனினும் இது நடைபெறாவிட்டால் – வேண்டா வெறுப்புடனேயே மக்கள் நூலை அளிப்பதாய் இருந்தால் – அஹிம்சை மூலமாக சுயராஜ்யம் பெறுவதென்பது சாத்தியமற்றதாகப் போய்விடும்.

நகரங்கள், ஆலைகள் பெருக்கத்தின் தீமைகள்

நகரங்களும் ஆலைகளும் பெருகிக் கொண்டு போவதானது இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுடைய செல்வ வளத்துக்கு நிச்சயமாக உதவாது. அதற்கு மாறாக, வேலையற்றிருப்போரின் வறுமையை அது அதிகப் படுத்தும்; பட்டினியால் வரக்கூடிய அத்தனை நோய்களும் வரும். இப்படிப்பட்ட காட்சியை ஒன்றும் நேராதது போல நகர மக்கள் பார்த்துக் கொண்டிருப்பதானால் நாம் அப்புறம் என்ன சொல்வதற்கு இருக்கிறது? இப்படிப்பட்ட காலம் வரும்போது, இந்தியாவில் இம்சையின் ஆட்சி நடைபெறும். சத்தியம், அஹிம்சை ஆகியவற்றின் ஆட்சி இருக்காது. இயல்பாகவே கதருக்கு அங்கு எவ்வித

இடமும் இருக்காது என்பதை நாம் ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். அப்போது இராணுவப் பயிற்சி எல்லோருக்கும் கட்டாயமாகும். ஆனால் பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களை அடிப்படையாக வைத்தே எதையும் நாம் சிந்திக்க வேண்டும். அவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதானால் அவர்கள் மீண்டும் வாழவேண்டுமானால், நூல் நூற்பதே மையமான தொழிலாக இருக்க வேண்டும். மக்கள் பிறர் கட்டுப்பாடின்றித் தாங்களாகவே நூல் நூற்க வேண்டும்.[21]

கதரின் முன்னேற்றம்

எங்களுடைய வேலை மிகமிகச் சிறிய அளவிலேயே ஆரம்பமாயிற்று. நான் கதர் வேலையை ஆரம்பித்த போது என்னுடனேயே வாழ்ந்து மடிவதென்று விரதம் பூண்டிருந்த மகன் லால் பாயும் மற்றவர்களும் அதில் இருந்தார்கள். அவர்களைத் தவிர வித்தல் தாஸ் பாயும் மற்றும் சில சகோதரிகளும் இருந்தார்கள். அன்றைய நிலையைக் காட்டிலும் இப்போது நாம் எவ்வளவோ முன்னேறியிருக் கிறோம். இன்று சுமார் இரண்டு கோடிப் பேர் சர்க்காவைச் சுற்றுகிறார்கள். அதனுடைய உதவியுடன், கிராம மக்களுக்கு நிறையப் பணம் கிடைக்குமாறு நாம் செய்ய முடிந்திருக் கிறது. ஆனால், நாம் எப்போதும் கூறி வந்துள்ளது போல் இப்போதும் சர்க்கா இல்லாமல் சுயராஜ்யம் சாத்தியமில்லை யென்று கூற முடியுமா? இவ்வாறு உரிமை பாராட்டுவது நியாயம் என நாம் ஒப்புக்கொள்ளாத வரை சர்க்கா என்பது ஏதோ ஒரு கஷ்ட நிவாரண சாதனந்தான். வேறு ஒன்றுமே செய்ய முடியாத நிலைமையில் இதை நாடுகிறோம் என்றாகிவிடும். அப்போது அது நம்முடைய விமோசனத்திற் கான சாதனமாகாது.

செய்தியைப் பரப்பத் தவறினோம்

இரண்டாவதாக, நம்முடைய செய்தியைக் கோடிக் கணக்கான மக்களிடம் கொண்டு செல்ல நாம் தவறி விட்டோம். சர்க்காவால் அவர்களுக்கு என்ன உதவி செய்ய முடியும் என்பது அவர்களுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையும் அவர்களுக்கு இல்லை.

காங்கிரஸ் மனமார ஏற்றதா?

சர்க்காவைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளத்தான் செய்தது. ஆனால் மனமுவந்து ஏற்றுக் கொண்டதா? இல்லை, எனக்காகவே அதைச் சகித்துக் கொள்கிறது. அதை நூற்றுக்கு நூறு சோஷலிஸ்டுகள் ஏளனம் செய்கிறார்கள். அதற்கு எதிராக அவர்கள் எவ்வளவோ எழுதியும் பேசியும் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெளிவாகவும், அவர்கள் மனதைத் திருப்பக் கூடிய முறையிலும் நாம் அளிக்கக் கூடிய மறுமொழி நமக்குத் தெரியவில்லை. சர்க்கா தான் சுயராஜ்யத்தின் திறவுகோல் என்பதை என்னால் அவர்களுக்கு உணர்த்த முடியுமானால் நான் எவ்வளவோ மகிழ்ச்சியடைவேன்! இத்தனை வருஷங்களாக இந்தக் கோரிக்கையின் நியாயத்தை என்னால் உணர்த்த முடியவில்லை.

அஹிம்சை இங்கேயே பலன் தரும்

இப்போது, நான்கூறவந்த மூன்றாவது அம்சத்துக்கு வருவோம்: அஹிம்சையென்பது ஏதோ மறு உலகத்தைச் சேர்ந்த ஒரு விஷயமல்ல. அப்படியிருப்பதானால், நான் அதைப் பற்றி அக்கறைப்படவில்லை. நான் இந்த உலகில் வாழ்பவனே. அஹிம்சையானது உண்மையிலேயே பயனுள்ளதாய் இருந்தால், நான் உயிருடனிருக்கும் போதே, இந்த உலகத்திலேயே, அதன் பயனை அனுபவிக்க விரும்புகிறேன். இரக்கமும் மற்றும் அதைப் போன்ற பண்புகளும் கொண்ட ஒரு சமுதாயத்திலல்லாமல் வேறு எங்கு எவ்வாறு அதை உணர முடியும்?

இம்சையில் நம்பிக்கை உள்ளோர் வீடுகள்

இம்சையில் நம்பிக்கை கொண்ட ஒருவருடைய இல்லத்துக்குச் சென்றீர்களானால், அவருடைய வரவேற்பு அறையானது புலித்தோல்கள், மான் கொம்புகள், பட்டாக் கத்திகள், துப்பாக்கிகள் மற்றும் இது போன்ற பொருட்கள் ஆகியவற்றினால் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். நான் வைசிராயின் மாளிகைக்குச் சென்றிருக்கிறேன்; முசோலினியையும் பார்த்தேன். இவர்கள் இருவருடைய மாளிகைகளிலுமே சுவர்களில் ஆயுதங்கள் தொங்கவிடப்

பட்டிருப்பதைக் கண்டேன். படையின் அணிவகுப்பு மரியாதையொன்றும் எனக்கு அளிக்கப்பட்டது. அதுவும் இம்சையின் சின்னமே.

அஹிம்சைச் சித்திரம்

எப்படி ஆயுதங்கள் இம்சையின் சின்னமாக இருக்கின்றனவோ அதைப் போன்று சர்க்காவும் அஹிம்சையின் சின்னமாய் இருக்கிறது. ஏனென்றால், அதன் மூலம் மிக மிக நேரடியாக நாம் அஹிம்சையை அடைய முடியும். ஆனால் அதன் உட்கருத்தின்படி நாம் செயலாற்றாதவரை அது அஹிம்சையின் சின்னமாய் இருக்க முடியாது. முசோலினியின் அறையில் உள்ள பட்டாக் கத்தியானது, ''என்னை மட்டுந் தொடுங்கள். நான் உங்களை இரண்டாக வெட்டி விடுகிறேன்'' என்று கூறுவது போல் இருந்தது. அது இம்சையின் ஒரு தெளிவான தோற்றத்தை அளித்தது. அதை மட்டும் தொட்டுப் பார்த்து அதன் சக்தியை உணருமாறு உங்களை அது கேட்பது போல இருந்தது. இதே மாதிரி சர்க்காவின் சக்தியையும் நாம் சித்தரிக்க வேண்டும். அதைப் பார்த்த மாத்திரத்திலே அது அஹிம்சையைப் பற்றி நம்மிடம் பேச வேண்டும். ஆனால் இன்று நாம் ஒட்டாண்டிகளாய் இருக்கிறோம், சோஷலிஸ்டுகளுக்கு நாம் என்ன பதில் கூறுவது? 'வருஷக் கணக்காக நாம் சர்க்காவைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசிக் கொண்டிருக்கிறோமாயினும் நாம் சாதித்தது ஒன்றும் இல்லை'யென்று அவர்கள் புகார் செய்கிறார்கள்.

இம்சையின் சின்னமான சர்க்கா

முஸ்லிம்கள் ஆட்சிக் காலத்தின் போதும் சர்க்கா இருந்தது. டாக்கா, மஸ்லின் துணிகளுக்காகப் பெயர் பெற்றிருந்தது. ஆயினும், அப்போது சர்க்கா, ஏழ்மையின் சின்னமாக இருந்ததே தவிர, அஹிம்சையின் சின்னமாய் இருக்கவில்லை. மாதர்களிடமும் தாழ்த்தப்பட்டவர்களிடமும் மன்னர்கள் கட்டாயமாக வேலை வாங்கினர். இதையே பின்னால் கிழக்கு இந்தியக் கம்பெனியும் திருப்பிச் செய்தது. இப்படிக் கட்டாயமாக வேலை வாங்குவது இருந்த தென்பதைக் கௌடில்யர் தமது அர்த்த சாஸ்திரத்தில்

கூறுகிறார். இவ்வாறு, பல சகாப்தங்களாக, சர்க்கா இம்சையின் சின்னமாகவும், பலாத்காரத்தையும் கட்டாயத்தையும் உபயோகப்படுத்துவதற்கான சின்னமாகவும் விளங்கி வந்தது. நூல் நூற்பவருக்கு ஒரு கையளவு தான்யம் கிடைக்கும்; அல்லது இரண்டு காசுகள் கிடைக்கும். அவ்வளவுதான். ஆனால், அரண்மனையில் இருந்த பெண்களே மிக நேர்த்தியான மஸ்லின் துணிகளை - இவை உழைப்பைச் சுரண்டிப் பெற்ற பொருட்கள் - ஆடம்பரமாக அணிந்து கொண்டிருந்தார்கள்.

"என் தவறே"

இதற்கு மாறாக, சர்க்காவை அஹிம்சையின் சின்னமாக நான் உங்களுக்கு அளித்திருக்கிறேன். இதை இது வரை உங்களுக்கு நான் தெளிவுபடுத்தவில்லையென்றால் அது என்னுடைய தவறே. முடமாகிவிட்டவர்களில் நானும் ஒருவன் என்பதையும், என்னால் மெதுவாகவே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல முடியுமென்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆயினும் இதுவரை செய்த வேலை வீணாகப் போகவில்லையென்று நான் நம்புகிறேன்.

சர்க்கா, காங்கிரஸ்

நான்காவது அம்சத்துக்கு வருகிறேன். சர்க்கா இல்லாமல் சுயராஜ்யம் இல்லையென்பதை இதுவரை நாம் நிரூபிக்கவில்லை. இதைக் காங்கிரஸ்காரருக்கு நீங்கள் விளக்கிக் கூறாதவரை, இதை மெய்ப்பிக்க முடியாது. சர்க்காவும் காங்கிரசும் ஒரே பொருளைக் கொண்டவைகளாக இருக்க வேண்டும்.

வரலாற்றை மாற்றி அமைக்க வேண்டும்

அஹிம்சையின் உயர்வை நிரூபிக்கும் பணி கடினமானதாகும். அஹிம்சையின் உண்மையை உணர வேண்டுமானால், நாம் அதன் அடி ஆழத்திற்குச் செல்ல வேண்டும். இந்த உலகம் என்னை அந்தச் சோதனைக்கு உள்ளாக்கப் போகிறது. சர்க்காவைப் பற்றி நான் வானளாவப் பேசுவதற்காக, என்னை ஒரு முட்டாளென அது அறிவிக்கலாம். பல நூற்றாண்டுகளாக, வறுமை, நிராதரவு,

அநீதி, கட்டாய உழைப்பு ஆகியவற்றின் சின்னமாக இருந்த சர்க்காவை இப்போது மகத்தான பலம் பொருந்திய அஹிம்சையின் சின்னமாகவும், புது சமுதாய அமைப்பு, புது பொருளாதார அமைப்பு ஆகியவற்றின் சின்னமாகவும் ஆக்கும் பொறுப்பு நமது தலைமீது விழுந்திருக்கிறது. வரலாற்றை நாம் மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. உங்கள் மூலமாக நான் அதைச் செய்ய விரும்புகிறேன்.

நம்பிக்கை இல்லையேல்?

நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர் களென நம்புகிறேன். இதன் பிறகும் சர்க்காவுக்கு சுயராஜ்யத் தைப் பெறக்கூடிய சக்தியில்லையென்று நீங்கள் நம்பினால், என்னை விட்டு விலகிச் சென்றுவிடுங்கள் என்று தான் உங்களைக் கேட்டுக் கொள்வேன். இப்போது நீங்கள் முன்னுக்குப் பின் முரணான ஒரு நிலைமையில் இருக்கிறீர்கள். நம்பிக்கை இல்லாமல் என்னுடன் தொடர்ந்து இருந்தீர்களானால், என்னை ஏமாற்றியவர்களாவீர்கள். நாட்டிற்கும் தீங்கு செய்தவர்களாவீர்கள். என்னுடைய வாழ்க்கையின் இந்தக் கடைசிக் கட்டத்தில் என்னை ஏமாற்ற வேண்டாம் என்று உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

குறைகளுக்கெல்லாம் பொறுப்பு

இதுவரை நம்முடைய வேலைத் திட்டத்தில் உள்ள குறைகளுக்கெல்லாம் நான்தான் பொறுப்பாவேன். தவறு என்னுடையது. ஏனென்றால், அதனுடைய குறைபாடுகள் என்னவென்பது எனக்குத் தெரிந்திருந்த போதுகூட, நானே தலைவனாக இருந்திருக்கிறேன். ஆனால் போனவை போகட்டும். சர்க்கா அஹிம்சையின் சின்னம் என்று உண்மையிலேயே இப்போது நாம் நம்புகிறோமா? நம்முடைய இதயத்தின் ஆழத்திலிருந்து இவ்வாறு நம்புபவர்கள் நம்மில் எத்தனை பேர்?

மூவர்ணக் கொடி

இப்போது மூவர்ணக் கொடியை எடுத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிட்ட நீள, அகலமுள்ள கதர்த் துணியென்பதைத்

தவிர அது வேறு என்ன? அதற்குப் பதிலாக வேறொரு துணியை நீங்கள் பயன்படுத்தலாம். ஆனால் இந்தக் கதர்த் துணிக்கும் பின்னால், உங்களுடைய உணர்ச்சிகளெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. அது சுயராஜ்யத்தின் சின்னம். தேசிய விமோசனத்தின் சின்னம். நாம் அதை மறக்க முடியாது. நாம் அதை அகற்றவும் போவதில்லை. அதற்காக இறக்கவும் தயாராய் இருக்கிறோம். அதைப் போன்றே சர்க்காவும் அஹிம்சையின் சின்னமாக விளங்க வேண்டும்.

பொருளாதார சின்னம்

அஹிம்சையின் சின்னம் என்ற முறையில், பொருளாதாரத் துறையில் சர்க்கா எதைக் குறிக்கிறது? அதை நீங்கள் சுயதேவைப் பூர்த்தி என்று அழையுங்கள். அல்லது வேறு ஏதாவது பெயரிட்டு அழையுங்கள். சுயதேவைப் பூர்த்தி என்ற பெயரிலும் தேசியப் புனரமைப்பு என்ற பெயரிலும் மேற்கு நாடுகளிலும் கோடிக்கணக்கான பேர் இரத்தத்தைக் கொட்டுகிறார்கள். அவர்களுடைய நலனுக்காக வெளிநாடுகளில் உள்ளவர்களும் இரத்தம் சிந்துகிறார்கள். நம்முடைய சுயதேவைப் பூர்த்தியானது அப்படிப்பட்ட சுயதேவைப் பூர்த்தியல்ல. சுரண்டலையும் பிறருடைய ஆதிக்கத்தையும் அகற்றுவதற்குச் சர்க்கா ஒரு வழியாகும். பொருள் தான் எனக்கு முக்கியமே தவிர வார்த்தை அல்ல.

பின்பற்றுங்கள் அல்லது ஒதுங்குங்கள்

கடவுளுக்கு ஒரு உருவம் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி நம்முடைய மதத்தில் வாக்குவாதம் நடைபெறுகிறது. இது நம்மெல்லோருக்கும் நன்றாகத் தெரியும். உருவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் ஒரு சின்னத்தை வைத்துக் கடவுளை வழிபடுவதையே அதிகம் விரும்புகிறார்கள். அதைப் போலவே, அஹிம்சையை ஒரு இலட்சியமாகக் கடைப்பிடிக்க வேண்டுமானால், சர்க்காவையே அதன் உண்மையான உருவமாகவும், சின்னமாகவும் ஏற்று எப்போதும் நமது மனக்கண்ணில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். அஹிம்சையைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் என் கண்முன் சர்க்கா வந்து

நிற்கிறது. அஹிம்சையை, எந்தவிதமான உருவமும் இன்றி நாம் நினைத்துப் பார்க்க முடியாது. ஆகையால் உருவமற்ற ஒன்றைச் சித்தரிப்பதற்காக நாம் உருவம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறோம். என் விஷயத்தில் சர்க்கா அந்த நிலையில் தான் இருக்கிறது. அதனால்தான் சர்க்காவை நான் ஆராதிக்கிறேன். இவ்வாறு சர்க்காவை நான் ஆராதிப்பதன் பின்னணியிலுள்ள இந்த உணர்ச்சியை நீங்கள் புரிந்து கிரகித்துக் கொள்ளாவிட்டால், இன்னும் நூறு வருஷங்களில் கூட நீங்கள் அஹிம்சையைப் புரிந்து கொள்ளமாட்டீர்கள். என்னுடைய உள்ளப் பாங்குடன் நீங்கள் அணுகினால்தான் சர்க்காவில் நான் காணும் அஹிம்சா சக்தியை நீங்களும் காணமுடியும். அதனால் தான் நான் சொல்கிறேன்: என்னைப் பின்பற்றுங்கள், அல்லது விலகிச் செல்லுங்கள். நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்பினீர்களானால் நான் உங்களுக்கு ஒரு திட்டம் அளிக்கிறேன்; என்னால் இயன்றதையெல்லாம் செய்கிறேன். நான் கூறுவதன் பொருளென்னவென்பதை நீங்கள் புரிந்து கொள்ளாவிட்டால், நாள் முழுவதும் உட்கார்ந்து உங்களுடன் அதைப் பற்றி விவாதிக்கவும் தயாராய் இருக்கிறேன். ஆனால் நான் கூறுவதன் பொருளை நீங்கள் விளங்கிக் கொள்ளாத போது விளங்கிக் கொண்டதாகக் கூறுவீர்களானால், நீங்கள் என்னை ஏமாற்றியவர்களாவீர்கள், உங்களையும் ஏமாற்றிக் கொண்ட வர்களாவீர்கள். நம்முடைய சங்கம் லாப நோக்கத்திற்காக ஏற்பட்டதல்ல. சுயநலத்திற்காக நாம் தொண்டாற்றவில்லை. ஆயிரக்கணக்கான துறைகளில் நாம் இந்த நாட்டிற்குத் தொண்டாற்ற முடியும். பின் ஏன் நாம் சர்க்கா வேலையில் இருந்து கொண்டு கபட நாடகமாட வேண்டும்? ஆகவே தவறான மனோபாவத்துடன் தயவு செய்து என்னுடன் இருக்க வேண்டாம். நான் எனது வழியில் செல்கிறேன். நானே ஒரு மாயையில் தான் கட்டுண்டு கிடந்தேன் என்றும், சர்க்கா மீது நான் கொண்டிருந்தது வெறும் மூட நம்பிக்கை தான் என்றும் மெய்ப்பிக்கப்பட்டால், சர்க்காவில் உள்ள மரத்தைக் கொண்டே நீங்கள் என்னைச் சாம்பலாக எரித்து விடலாம்; அல்லது, நானே, என் கையாலேயே, சர்க்காவுக்குத் தீ வைத்து விடுவேன்.

முட்டாள்கள் சங்கமா?

சர்க்கா சங்கம் போய்விட வேண்டுமென்றால், நம்முடைய கைகளாலேயே நாம் அதை மூடிவிடுவோம். அது நம்முடைய போராட்டத்திற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து விடும். நம்மைப் பல சிக்கலான கஷ்டங்களுக்குள்ளாக்கும் சர்க்காவானது அதில் நம்பிக்கை கொண்ட ஒரு சிலர் கைகளுக்குப் போய்ச்சேரும். அவர்கள் கைகளில் அது பலம் பொருந்திய ஆயுதமாக விளங்கும். சர்க்காவைச் சுழற்றுவது அறிவீனம் என்று நீங்கள் நினைத்தீர்களானால், முட்டாள்கள் சங்கத்தை நடத்தி அதன் மூலம் நாட்டை இழிவுபடுத்த வேண்டுமென்ற ஆசை எதுவும் எனக்குக் கிடையாது. அதற்கு மாறாக, சர்க்காவின் மூலமாக நீங்கள் அஹிம்சையை வெளிப்படுத்த முடியுமானால் அது முன்னே செல்வது மட்டுமல்லாது ஒரு பெரிய வெள்ளம்போல் நம் கஷ்டங்களையெல்லாம் அடித்துச் சென்றுவிடும். அப்போது அதை உயிரோடு பாதுகாக்க வேண்டுமென்று நீங்கள் கவலைப்பட வேண்டியதிருக்காது.

எழுத்து மூலம் உறுதி

மீண்டும் நான் கூறிக் கொள்கிறேன். ஒன்று என்னைத் தனியாக விட்டு விடுங்கள், அல்லது நான் கூறுவதைப் புரிந்து கொண்டு என்னைப் பின்பற்றுங்கள். இரண்டு ஆண்டுகளாகத் தவம் செய்ததுபோல் சிந்தித்துப் பார்த்து, இந்தப் புதிய சிந்தனையை உங்கள் முன் வைத்தேன். என்னுடைய கருத்தை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் வெற்றி பெற்று விட்டேனா என்பதை நான் அறிய மாட்டேன். அவ்வாறு உங்களிடம் நான் மனமாற்றத்தை ஏற்படுத்திவிட்டேனென்றால் தயவு செய்து ஒரு காரியம் செய்யுங்கள். என்னுடன் இருக்க விரும்புவோர், சர்க்காவை அஹிம்சையின் சின்னமாகக் கருதவில்லையென்றால் அல்லது கருத முடியவில்லையென்றால், அப்புறமும் நீங்கள் என்னுடன் இருப்பதன் மூலம் உங்களை மோசமான நிலைக்கு உள்ளாக்கிக் கொள்கிறீர்கள்; என்னையும் உங்களுடன் கீழே இழுக்கிறீர்கள்.[22]

சுயதேவைப் பூர்த்தி

கதரின் ஒரு சகாப்தம் முடிவடைந்துவிட்டது. ஏழைகளின் நலனுக்காகக் கதர் சில காரியங்களைச் சாதித்திருக்கிறது. ஏழைகள் எவ்வாறு தங்களுடைய வரவையும் செலவையும் தாங்களே சரிக்கட்டிக் கொள்ளலாம் என்பதை இப்போது நாம் நிரூபித்துக் காண்பிக்க வேண்டியிருக்கிறது.[23]

ஒவ்வொரு இல்லத்துக்கும் சர்க்காவின் செய்தியை நாம் கொண்டு செல்ல வேண்டும். அதுவரை, நம்முடைய வேலை முடிவடைந்ததாகாது.[24]

அஹிம்சைப் பொருளாதாரம்

அஹிம்சாபூர்வமான பொருளாதார சுயதேவைப் பூர்த்திக்குச் சர்க்கா ஒரு சின்னமாகும். சர்க்காவின் இந்த முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொண்டோமானால், சர்க்காவின் பிரசாரத்துக்காக ஒரு தம்பிடிகூடச் செலவழிக்க வேண்டியதில்லை. பிச்சைக் காசுக்காகப் பணக்காரர்களை எதிர்பார்க்க வேண்டியதுமிராது. எவ்வித முயற்சியும் இல்லாமல் நாம் நம்பிக்கையின் கேந்திரங்களாக விளங்குவோம். மக்கள் தாங்களாகவே நம்மிடம் வருவார்கள். வேலை தேடி அவர்கள் வேறு எங்கும் செல்லமாட்டார்கள். ஒவ்வொரு கிராமமும் இந்தியாவின் இதயமாக விளங்கும். அப்போது பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களால் இந்தியாவின் பெயர் விளங்காது. அதற்குப் பதிலாக, இந்நாட்டிலுள்ள 7 இலட்சம் கிராமங்களிலுள்ள நாற்பது கோடி மக்களால் விளங்கும். அப்போது இந்து - முஸ்லிம் வேறுபாடுகள், தீண்டாமை, சண்டை சச்சரவுகள், தவறான கருத்துக்கள், போட்டி பொறாமைகள் ஆகியவையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும். இதுதான் சங்கத்தின் உண்மையான வேலை, நாம் அதற்காக வாழ்ந்து சாக வேண்டியதிருக்கிறது.[25]

மூலநதி

கிராமக் கைத்தொழில்கள், ஆதாரக் கல்வி முதலிய பல வேறுவிதமான மற்ற நடவடிக்கைகளுக்கெல்லாம் சர்க்கா

வே மூலநதியாக இருக்கவேண்டும். சர்க்காவை நாம் புத்திக் கூர்மையான முறையில் உபயோகிப்பதாக இருந்தால், நம்முடைய கிராமங்களின் பொருளாதார வாழ்வு மீண்டும் புத்துயிர் பெறுமாறு செய்ய முடியும்.[26]

விமோசன சாதனம்

சர்க்காவின் உதவியால் கிராம மக்களுக்கு நிறையப் பணம் கிடைக்குமாறு நாம் செய்திருக்கிறோம். ஆனால், ஏற்கனவே நாம் பலமுறை கூறி வந்திருப்பது போல, சர்க்கா இல்லாமல் சுயராஜ்யம் சாத்தியமில்லையென்று இப்போதும் நாம் கூறமுடியுமா? இந்த சித்தாந்தத்தை நாம் ஒப்புக் கொள்வதாக இருந்தாலொழிய, ஒரு கஷ்டமான காலத்தில், நாம் வேறொன்றும் செய்ய முடியாத நிலையில், நாம் நாடிச் செல்லும் வெறும் நிவாரணமாகவே சர்க்கா இருக்கும். அப்போது அது நம்முடைய விமோசனத்திற்கான சாதனமாக இராது.[27]

கைத்தொழில்கள்

கதர் மட்டும் நம்முடைய கிராமங்களைப் புனருத்தாரணம் செய்ய முடியாது என்று இப்போது நான் உணருகிறேன். கிராம வாழ்க்கை முழுவதற்குமே நாம் புத்துயிரூட்ட வேண்டும். எல்லாக் கிராமக் கைத்தொழில் களையுமே மறுமலர்ச்சியடையச் செய்ய வேண்டும். கிராமம் முழுவதுமே சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபடுமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும்போது தான் கிராம முன்னேற்றமென்பது சாத்தியமாகும்.[28]

ஒரே வழி

கதர் என்பது வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்கும் தொழில் அல்லது வேலை மட்டுமல்ல. நம்மில் யாருக்கும் இந்த எண்ணம் இருக்க வேண்டாம்.[29]

கதரை நாம் மக்கள் முன்னால் வைப்பதற்குக் காரணம் உண்டு. சோம்பேறித்தனம், அலட்சிய மனோபாவம் ஆகிய நோய்களிலிருந்து மக்களை விடுவித்துக் காப்பாற்றுவதற்குரிய ஒரே வழி அதுதான். சுதந்திரத்துக்கு

வேண்டிய பலத்தை அவர்களிடம் உண்டாக்குவதற்கான ஒரே வழியும் அதுவே. மற்ற கைத்தொழில்களும் இவ்வாறு புத்துயிர் பெறச் செய்துவிட்டால், நம்முடைய கிராம மக்கள் புத்துயிர் பெற்று சுய நம்பிக்கை உடையவர்களாகுமாறு செய்ய முடியும்.[30]

ஆனால், ஒரு பலம் பொருந்திய அஹிம்சா பூர்வமான கிராமப் பொருளாதாரத்தை அமைப்பதற்குக் கதர் அவசியம் என்பதை நாம் நிலைநிறுத்த வேண்டும். மற்ற எல்லாவற்றையுங் காட்டிலும் இதையே நாம் மெய்ப்பிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.[31]

சர்க்கா ஜெயந்தி

அஹிம்சை, சுதந்திரம் ஆகியவற்றின் சின்னம் இராட்டை தான். இந்த இராட்டையின் இன்னிசை ஒவ்வொரு வீட்டிலும் கேட்குமாறு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது தான் உண்மையில் சர்க்கா ஜெயந்தி கொண்டாடப் பெற்றதாகும். ஒரு சொற்பத் தொகையைச் சம்பாதிப்பதற் காக ஒரு சிலர் நூற்கிறார்கள். ஏன், ஒரு கோடிப் பெண்களே நூற்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது, சர்க்கா ஜெயந்தியைக் கொண்டாடுவதனால் அவர்களுக்கு என்ன பலன் ஏற்படும்? அது என்ன சாதனையாக இருக்க முடியும்? எதேச்சாதிகார ஆட்சியிலே கூட இது நடைபெற முடியுமே? மூலதனத்தின் ஆதிக்கம் எங்கெங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் இன்று இது காணப்படுகிறது. கோடீஸ்வரர்கள் தாங்கள் ஏழைகளுக்குத் தர்மமாகவும் கூலியாகவும் கொடுக்கும் பணத்தினால் அழியாது காப்பாற்றப்படுகிறார்கள்.

எப்போது பயனுண்டு?

ஆண்டவன் முன் அனைவரும் சமம். ஒவ்வொருவரும் தன்னுடைய இடத்தில் உடல் உழைப்பின் மூலம் தனக்கு வேண்டிய உணவைச் சம்பாதிக்க வேண்டும். எல்லோருடைய சுதந்திரமும் பாதுகாக்கப்படும். துப்பாக்கிகள், வெடி மருந்துகள் ஆகியவற்றினாலல்ல. கையால் நூற்கப்பட்ட நூல் பந்துகள் என்னும் குண்டுகளால் -

அதாவது, இம்சையினாலல்லாமல் அஹிம்சையினால் ஏழை, பணக்காரர் எல்லாருமே இவைகளைப் புரிந்து கொள்ளும் போது தான், சர்க்கா ஜெயந்தியைக் கொண்டாடுவது உண்மையிலேயே பயனுள்ளதாயிருக்கும்.[32]

தங்கச் சுரங்கம்

300 கோடி ரூபாய் பெறுமான துணியை இந்திய மக்கள் தங்களுடைய கைகளாலேயே கிராமங்களில் உற்பத்தி செய்து கொள்வதானால், அது இந்தியாவுக்கு எவ்வளவு பெரிய செல்வமாய் இருக்கும் என்பதை எண்ணி, உணர்ந்து பாருங்கள். இது அவர்களுக்கு ஒரு உண்மையான தங்கச் சுரங்கமாய் இருக்கும். கதரை எல்லோரும் பயன்படுத்துவதாய் இருந்தால், கிராமங்கள் எவ்வளவோ உயர்ந்து விடும். இன்று நம் நாட்டு மக்களெல்லாம் வறுமையில் அடிபட்டவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய கண்களில் நம்பிக்கை ஒளியோ அல்லது அறிவின் ஒளியோ வீசுவதில்லை. நூல் நூற்பவர்களுடைய உழைப்பு, அவர்களுக்காக இந்த அதிசயத்தைச் செய்ய முடியும். இதில் ஒவ்வொருவரும் உதவலாம். கதர் முரடாய் இருந்தாலுங்கூட, அதில் உள்ள அழகைக் காணும் கண்களும், புரிந்து கொள்ளும் இதயங்களும் அவர்களுக்கு வேண்டும். மெல்லிய ஆலைத் துணியில் கவர்ச்சிக்கு அவர்கள் ஆளாகக் கூடாது. இது உண்மையில் ஒருபோதும் அவர்களுடைய நிர்வாண நிலையிலிருந்து அவர்களை காப்பாற்ற முடியாது. அவர்கள் தங்களுடைய உணவைத் தாங்களே விளைவித்துக் கொள்வதும்; தங்களுடைய உடையைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்வதும் தான் நிர்வாணத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றி, பட்டினியைப் போக்குவதற்கான ஒரே வழியாகும். இந்த மகிழ்ச்சிகரமான பூரணத்துவ நிலையை அடைய முடியுமானால், உலகின் கவனம் முழுவதும் இந்தியாவின் பக்கந் திரும்பி விடும்.[33]

சாத்தியமே

சர்க்கா வகுப்பு முழு வேகத்துடன் நடைபெறுவதுடன் மற்றவைகளை ஒப்பிட்டு நோக்கும்போது, மற்றவையெல்லாம்

எனக்குச் சப்பென்று உயிரற்றவையாகத் தென்படுகிறது. ஏனென்றால், ஒவ்வொரு நூல் நூற்பிலும் என்னுடைய இராமன் நர்த்தனமாடுவதை நான் காண்கிறேன்; சுயராஜ்யத்தைக் காண்கிறேன். நாற்பது கோடிக் கைகளினால் நூற்கப்படும் நூலின் பலத்தை நான் எண்ணிப் பார்க்கும்போது, எனது உள்ளம் இன்பத்தில் திளைக்கிறது. ''ஓ, இருபது கோடி மக்கள் எப்போது நூற்கப் போகிறார்கள்?'' என்று நீங்கள் கேட்பீர்கள். இது சாத்தியம் என்று நம்ப மறுப்பது, நம்முடைய அறியாமையும் நம்பிக்கையின்மையையும் காண்பிக்கவில்லையா? மக்கள் தொகையில் பாதிப்பேர் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் நூற்பார்கள் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியமா? நம்முடைய தாய்நாட்டுக்காக இதைக் கூடத் தியாகம் செய்யக் கூடிய சக்தி நமக்கு இல்லாவிட்டால், நம்முடைய நாட்டின் மீது நாம் கொண்டிருக்கும் பக்திக்குத் தான் என்ன பொருள்?[3]

அத்தியாயம் 20

மற்ற கிராமக் கைத்தொழில்கள்

ஏன் கிராமக் கைத்தொழில்கள்?

கதர் இல்லையேல்?

1920 இல், சுதேசி இயக்கத்தைத் தொடங்கவிருந்த தருவாயில் பசல்பாயுடன் நான் நடத்திய உரையாடலை இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன். ''காங்கிரஸ் காரர்களாகிய நீங்கள் எங்களுடைய சரக்குகளின் விளம்பர ஏஜெண்டுகளாய்விட்டால், எங்களுடைய உற்பத்திப் பொருட்களின் விலையை உயர்த்தி அவைகளின் லாபத்தை அதிகப்படுத்துவதைத் தவிர நாட்டிற்கு நீங்கள் வேறு எவ்வித நன்மையும் செய்யப்போவதில்லை'' என்று அவர் கூறினார். அவருடைய வாதம் சரியாகவே இருந்தது. ஆனால் கதரை - இதுவரை பரிதாபகரமான முறையில் அலட்சியம் செய்யப்பட்ட கதரை - வேலையின்றிப் பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றால் எதைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமோ அந்தக் கதரை - கையால் நூற்று, நெய்யப்பட்ட கதரை - நான் ஊக்குவிக்கப் போகிறேன் என்று அவரிடம் கூறியபோது அவரால் பதில் பேச முடியவில்லை.

கதர் மட்டுமல்ல

ஆனால் இவ்வாறு உயிருக்காக மன்றாடும் தொழில் கதர் மட்டுமல்ல. ஆகையால், மக்கள் ஆதரவு இன்று தேவைப்படக்கூடிய கட்டுக்கோப்பில்லாத சிறிய தொழில் களின் விஷயத்திலெல்லாம் உங்களுடைய கவனத்தையும் முயற்சியையும் திருப்புமாறு நான் கூறுகிறேன். அவைகளின் சார்பாக ஒரு முயற்சியும் செய்யா விட்டால், அவை அப்படியே அழிந்து போய்விடும். இன்று இத்தொழில்களில் சில, பெரிய தொழில்களால் நசுக்கப்படுகின்றன. இந்தப் பெரிய் தொழில்களின் உற்பத்திப் பொருட்கள் மார்க்கெட்டு களில் வந்து குவிகின்றன. இவ்வாறு நசுக்கப்படும் சிறு தொழில்கள் தான் உங்களுடைய உதவிக்காக அலறித் துடிக்கின்றன.[2]

யாருக்குச் சிறு தொழில்

சிறு தொழில்களுக்கு நாம் உதவினால், தேசிய செல்வத்துக்கு உதவியவர்களாவோம் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. உண்மையான சுதேசியம் இந்தக் குடிசைத் தொழில்களைப் புனருத்தாரணம் செய்து ஊக்குவிப்பதிலேயே இருக்கிறது என்பதிலும் எனக்கு எவ்வித ஐயப்பாடும் கிடையாது. இதுதான் வாயில்லாத கோடிக்கணக்கான மக்களுக்கு உதவக் கூடியதாய் இருக்கும். மக்களுடைய ஆக்க சக்தியையும் அறிவுத் திறனையும் வெளிப்படுத்தக்கூடிய ஒரு சாதனமாகவும் இருக்கும். நாட்டில் வேலையற்றிருக்கும் நூற்றுக்கணக்கான இளைஞர்களையும் அதில் உபயோககரமான முறையில் பயன்படுத்தலாம். தற்போது வீணாகிக் கொண்டிருக்கும் சக்தியையெல்லாம் அதன்மூலம் ஒருங்கு திரட்ட முடியும். அதிகப் பண வருவாயில் ஈடுபட்டிருப்பவர்கள் அவைகளை விட்டு விட்டுச் சிறு தொழில்களை மேற்கொள்ள வேண்டுமென்று நான் விரும்பவில்லை. சர்க்கா விஷயத்தில் நான் செய்ததைப் போன்று வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், வறுமையினாலும் கஷ்டப்படுபவர்களைத் தான், இந்தத் தொழில்களில் ஈடுபட்டு, தங்களுடைய குறைந்த வருமானத்தை ஒரு சிறிதளவு உயர்த்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழிலுடன் நில்லுங்கள்

இவ்வாறு நமது செயல் துறையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நான் கூறியுள்ளது எந்த வகையிலும் பெரிய தொழில்களுக்கு முரணானதாகாது என்பதைக் காணலாம். ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது தேசிய சேவகர்களாகிய நீங்கள் உங்களுடைய சேவையைச் சிறு தொழில்களுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தற்போது இருப்பதைப் போன்று பெரிய தொழில்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்ளட்டும். எனது கருத்தில் உள்ள சிறிய தொழில்கள் பெரிய தொழில்களை அகற்றிவிடமாட்டா. அதற்குப் பதிலாக அவைகளுக்கு ஆதரவாகத்தான் இருக்கும்.[2]

கைத்தொழில் பொருட்களைக் காப்பாற்ற வேண்டும்

நாம் மிகுந்த தாராள மனோபாவத்துடன் பஞ்சாலை, சர்க்கரை ஆலை, அரிசி ஆலை ஆகியவற்றுக்கு உதவுவதாகக் கூறிக் கொள்ளலாம். ஆனால் அதன் மூலம் சர்க்கா, கைத்தறி, அதன் உற்பத்திப் பொருட்கள், கதர், கரும்பு ஆட்டும் தொழில், அதிலிருந்து உற்பத்தியாகும் பொருட்கள், உணவுச் சத்தும் ஊட்டமும் உள்ள வெல்லப்பாகு, கைக்குத்தல் தொழில், அதன் பொருட்கள், தீட்டப்படாத அரிசி கைக்குத்தலின் மூலம் வைட்டமின் சத்துள்ள தவிடு அகற்றப்படாத அரிசி ஆகியவை நசித்துப் போய்விடும். ஆகையால் நம்முடைய கடமை தெளிவானது. அதாவது, சர்க்காவும், கரும்பாலையும், கைக்குத்தல் தொழிலும் மடியாது வாழும் சாத்தியக்கூறுகள் பற்றி நாம் ஆராய வேண்டும். அவைகளுடைய பொருட்களை விளம்பரப்படுத்து வதன் மூலமும், அவைகளின் தரத்தை வரையறுப்பதன் மூலமும், தொழிலாளர்கள் நிலை, இயந்திரத்தினால் வேலை இழந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கிடுவதன் மூலமும், ஆலைகளின் போட்டியைச் சமாளிக்கக் கூடியவாறு கிராமக் கைத்தொழில்களுடைய கிராமிய அம்சத்தைப் பாதுகாத்துக் கொண்டே அவைகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளைக் கண்டுபிடிப்பதன் மூலமும் மேற்கண்ட தொழில்கள் மடியாதிருக்கச் செய்யவேண்டும். எவ்வளவு கொடுமையாகவும் பயங்கரமான முறையிலும் நாம் இவைகளை அலட்சியம் செய்திருக்கிறோம்! இதில், ஜவுளி ஆலைகள் மீதோ அல்லது சர்க்கரை அல்லது அரிசி ஆலைகள் மீதோ எதிர்ப்பு அல்லது வெறுப்பு என்பது இல்லை. ஆலைகள் என்று மட்டும் எடுத்துக்கொண்டால் வெளிநாட்டு ஆலைப் பொருட்களை விட சுதேசி ஆலைப் பொருட்களையே நாம் விரும்பவேண்டும். வெளிநாட்டுப் போட்டியால் சுதேசி ஆலைகள் அழிந்து விடும் என்ற அபாயம் இருந்தால், பின்னவைக்குத் தேவையான ஆதரவை நாம் அளிக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட அவசியம் எதுவும் அவைகளுக்கு இல்லை. வெளிநாட்டுப் போட்டிக் கிடையில் அவை செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இப்போது தேவையானதெல்லாம் இயந்திரத்தால்

இயக்கப்படும் தொழில்களின் - இவை இந்தியாவில் இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருந்தாலும் சரி - கடும் போட்டியிலிருந்து கிராமக் கைத்தொழில்களையும் அவைகளை நம்பியிருக்கும் தொழிலாளர்களையும் பாதுகாப்பதுதான். கதருக்கும், வெல்லத்துக்கும், தீட்டப்படாத அரிசிக்கும் சொந்தச் சிறப்பு எதுவும் இல்லாமல் அவை மடிய வேண்டியதிருக்கலாம். தற்போது, கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களைத் தவிர, கரும்பை ஆட்டியும் நெல்குத்தியும் பிழைக்கும் இலட்சக்கணக்கான மக்களின் கதியைப் பற்றி எதையும் அறிய எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை.[3]

பெரிய தொழில்கள்

கட்டுக்கோப்பாக அமைக்கப்பட்டுள்ள பெரிய தொழில்களை நான் இவைகளில் சேர்க்கவில்லை. அவை சுதேசி அல்ல என்பதற்காக அல்லாமல் அவைகளுக்கு விசேஷ ஆதரவு தேவையில்லை என்பதற்காகவே நான் அவைகளைச் சேர்க்கவில்லை. அவை தங்களுடைய சொந்த பலத்தை நம்பியே இருக்க முடியும். தற்போது நம்மிடையே ஏற்பட்டுள்ள எழுச்சியை வைத்துப் பார்த்தால், அவைகளுக்கு நிச்சயமாக மார்க்கெட் உண்டு.[4]

கிராமப் பொருட்களையே வாங்குங்கள்

சுருக்கமாகச் சொல்லப்போனால், நாம் உபயோகப் படுத்துவதற்குக் கிராமங்களில் உற்பத்தியாகும் பொருட் களையே வாங்க வேண்டும். அவை, நாகரிகமாக உற்பத்தி செய்யப்படாதிருக்கலாம். அப்போது அவர்களுடைய வேலைப்பாட்டை அபிவிருத்தி செய்யுமாறு நாம் தூண்ட வேண்டும். நகரங்களில் உள்ள பெரிய தொழில்களிலோ அல்லது வெளி நாடுகளிலோ உற்பத்தியாகி வரும் பொருட்கள் இவைகளைக் காட்டிலும் உயர்ந்தவையாக இருக்கின்றனவென்பதற்காக, இவைகளை ஒதுக்கிவிடக் கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால், கிராமவாசியின் கைவேலைப்பாட்டுத் திறன் வெளிவருமாறு செய்ய வேண்டும். இவ்வாறாக, நாம் அவர்களுக்குப் பட்டுள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவோம். இப்படிப்பட்ட

முயற்சியில் நாம் என்றைக்காவது வெற்றி பெற முடியுமா என்று எண்ணி அச்சமடைய வேண்டாம். நம்முடைய நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒரு கடமையைச் செய்வது அவசியமாக இருக்கிறதென்று அறிந்தால், அதில் உள்ள கஷ்டத்தை எண்ணி அஞ்சாது நாம் செய்துள்ள காரியங்கள் பல. நம்முடைய வாழ்நாளிலேயே இதற்கு உதாரணங்களைக் கூறமுடியும். ஆகவே, நம்மில் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதரும், நம்முடைய நல்வாழ்வுக்கு இந்திய கிராமங்களைப் புனருத்தாரணம் செய்வது அவசியம் என்று நம்பினால், அதன் மூலந்தான் தீண்டாமையைப் போக்க முடியுமென்று நம்பினால், ஒருவர் எந்த மதம் அல்லது வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரும் நாமும் ஒன்று என்ற உணர்வைப் பெறமுடியும் என்று நம்பினால், நம்முடைய மனம் மீண்டும் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். நகர வாழ்க்கையை அவர்கள் பின்பற்றுமாறு செய்யாமல் அவர்கள் வாழ்க்கை தான் நாம் பின்பற்றக் கூடிய முன் மாதிரி எனக் கருதவேண்டும். இதுவே சரியான கண்ணோட்டம் என்று நாம் ஏற்றுக் கொண்டு விட்டால், இயற்கையாகவே, மற்றவர்களை எதிர்பார்க்காமல் நாமே முதலில் இதைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். ஆலைகளில் உற்பத்தியான காகிதத்தைக் காட்டிலும் கையால் செய்யப்பட்ட காகிதத்தை, பவுண்டன் பேனா அல்லது பேனாக்கட்டைகளுக்குப் பதிலாகக் கிராமங்களில் விளையும் நாணல் குச்சிகளை பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் மைக்குப் பதிலாகக் கிராமங்களில் உற்பத்தியாகும் மையை மற்றும் இது போன்றவற்றை உபயோகிக்க வேண்டும். இதைப் போன்ற உதாரணங்களை நான் அடுக்கிக் கொண்டே போகலாம். நாம் வீட்டில் அன்றாடம் உபயோகப்படுத்தும் பொருட்களில், கிராமவாசி கள் முன்பு செய்திராத எதுவும் இல்லை. இப்போது செய்ய முடியாததும் இல்லை. நமக்கு மனமாற்றம் மட்டும் வேண்டும். அவர்கள் மீது நம் கடாட்சத்தைச் செலுத்த ஆரம்பித்து விட்டோமென்றால் உடனடியாகக் கிராமவாசிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை அளித்து உதவியவர்களாகிறோம். தற்போதோ, கிராமவாசிகளுக்குப் பிரதியுபகாரமாக உருப்படியான

எதையும் செய்யாமல், அவர்களைச் சுரண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தப் படுகொலை போன்ற செயல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு போகாமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது.[5]

நிலம் கட்டுபடியாகாது

படிப்படியாக, கிராம மக்கள், பூமியைக் கிளறி, வாய்க்குங் கைக்குமாக வாழவேண்டிய கட்டத்துக்கு வந்து விட்டார்கள். இந்தியாவில் உள்ளவாறு (அங்கொன்றும் இங்கொன்றுமாக) ஒழுங்கற்ற முறையில் சிறு சிறு நிலத் துண்டுகளை வைத்துக் கொண்டிருப்பது கட்டுபடியாகாது என்பதை இன்று அறிந்துள்ளவர்கள் ஒரு சிலரே. கிராமவாசிகள் உற்சாகமின்றி வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்கள் வாழ்வதென்பதே ஓரளவு பட்டினி கிடப்பதுதான். மேலும், அவர்கள் கடன் சுமையாலும் நசுக்கப்படுகிறார்கள்.[6]

ஆட்கள் அதிகமாகும் போது

கிராமக் கைத்தொழில்களை ஒழித்து விடுவது இந்தியா வில் உள்ள ஏழு இலட்சம் கிராமங்களுக்கும் பூரண அழிவை ஏற்படுத்திவிடும்.[7]

நாம் செய்ய விரும்பும் வேலைக்கு, ஆட்கள் மிகமிகக் குறைச்சலாக இருந்தால், இயந்திரமயமாக்குவது நல்லது தான். ஆனால் இந்தியாவில் உள்ளது போன்று, வேலையின் தேவைக்கு மேற்பட்ட ஆட்கள் இருக்கும்போது அது தீமை பயக்கும்.[8]

அரிசி, மாவு மில்கள்

ஆலைகளில் உற்பத்தியாகும் துணி கிராம மக்களுடைய வேலையைத்தான் பறித்திருக்கிறது. ஆனால், அரிசி மில்களும், மாவு மில்களும் ஆயிரக்கணக்கான ஏழைப் பெண் தொழிலாளிகளுக்கு வேலையில்லாமல் செய்துவிட்ட தோடு, எல்லா மக்களுடைய உடல் நலத்தையும் பாதித் திருக்கின்றன. மாமிச உணவு உண்ணக்கூடியவர்களுக்கு, அதற்கான பணவசதியும் இருக்குமானால், வெள்ளை மாவோ தீட்டப்பட்ட அரிசியோ எவ்விதக் கெடுதலும் செய்யாமல்

இருக்கலாம். ஆனால் இந்தியாவிலோ, மாமிசம் அருந்துவது பற்றி எவ்வித ஆட்சேபணையும் இல்லாத மக்களுக்குக் கூட அது கிடைப்பதில்லை. ஆகையால் முழுக் கோதுமைக் கஞ்சியிலும் தீட்டப்படாத அரிசியிலும் உள்ள உணவுச் சத்தையும் ஜீவ சத்துக்களையும் போக்குவது பாவமாகும். வெள்ளைக் கோதுமை மாவாலும் தீட்டப்பட்ட அரிசியாலும் ஏற்படக் கூடிய அபாயத்தை டாக்டர்களும் மற்றவர்களும் சேர்ந்து மக்களுக்கு எடுத்துணர்த்துவதில் இனியும் காலதாமதம் செய்யக்கூடாது.[9]

கிராமவாசிகளுக்கு வேலை கிடைக்குமாறு செய்வதற்குரிய வழி இயந்திரமயமாக்குவதல்ல; அதற்குப் பதிலாக இதுவரை நாம் செய்துவந்த கைத்தொழில்களை மீண்டும் புனருத்தாரணம் செய்வதுதான்.[10]

கிராமக் கைத்தொழில் சங்கம்

ஆகையால் அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம், தற்போதுள்ள கைத்தொழில்களை ஊக்குவிக்கப் பாடுபட வேண்டும். எங்கெங்கு முடியுமோ, எங்கெங்கு விரும்பத்தக்கதோ அங்கெல்லாம் செத்த, அல்லது செத்துக் கொண்டிருக்கும் கிராமக் கைத்தொழில்களை மீண்டும் புனருத்தாரணம் செய்யவேண்டும். அதுவும் கிராமிய முறைப்படி புனருத்தாரணம் செய்ய வேண்டும். அதாவது வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து செய்து வந்ததுபோல், தங்கள் குடிசைகளில் இக்கைத்தொழில்களைக் கிராமவாசிகள் செய்து வருவதாக இருக்க வேண்டும்; கைக்குத்தல், கையால் பட்டை போடுதல், நூல் நூற்றல், நெசவு, நெய்தல் ஆகியவைகளில் ஏற்பட்டுள்ளதைப் போல் இந்த எளிய முறைகளையும் இன்னும் நன்கு அபிவிருத்தி செய்ய முடியும்.[11]

வான மண்டலத்தின் சூரியன்

கதர்தான், கிராமக் கைத்தொழில் என்னும் வான மண்டலத்தில் பிரகாசிக்கும் சூரியனாகும். மற்ற கிரகங்கள் சூரியனிடமிருந்து எவ்வாறு வெப்பம் பெறுகின்றனவோ அதுபோல, மற்றக் கைத்தொழில்களெல்லாம் கதரிடமிருந்து வாழ்வு பெற்று அதற்குப் பிரதியுபகாரமாக அத்தொழிலுக்குத்

துணைபுரிகின்றன. கதர் இல்லாமல், மற்றக் கைத்தொழில்கள் வளர்ச்சி பெற முடியாது. ஆனால் நான் அண்மையில் மேற்கொண்ட சுற்றுப் பிரயாணத்தில், மற்றத் தொழில்கள் புனருத்தாரணம் செய்யப்படாமல் கதர் வளர்ச்சியடைய முடியாது என்பதையும் கண்டேன். கிராம வாழ்வில் உள்ள பல்வேறு பிரிவுகளையும் நாம் செம்மை செய்தால்தான், கிராமவாசிகள் தங்களுடைய ஓய்வு நேரத்தை உபயோகமான முறையில் பயன்படுத்த முடியும்.[12]

வேறு தொழில்

கட்டாயமான சூழ்நிலைகளாலும், வேலை செய்யத் தங்களுக்கே விருப்பமில்லாமலும் கிராமவாசிகள் சோம்பேறிகளாய் இருக்கின்றனர். இதனால் அவர்கள் வெளிநாட்டு, உள்நாட்டுச் சுரண்டல்களுக்குத் தொடர்ந்து இரையாகிக் கொண்டு வருகின்றனர். இந்தச் சுரண்டல்காரர் வெளியிலிருந்து வந்தாலும் சரி, அல்லது இந்திய நகரங்களிலிருந்து வந்தாலும் சரி, கிராம மக்களுடைய நிலை ஒன்றே தான். அவர்களுக்குச் சுயராஜ்யம் வரப்போவதில்லை. ஆகையால் எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன்: வேறு ஏதாவது ஒன்றைச் செய்யுமாறு இந்த மக்களுக்கு நாம் கூறுவோம். இவர்கள் கதரில் ஈடுபாடு கொள்ளாவிட்டால், தங்களுடைய மூதாதையர்கள் செய்து இப்போது மறைந்து போயிருக்கும் ஏதாவதொரு தொழிலை இவர்கள் செய்யட்டும். அப்படி ஒன்றும் நீண்ட காலமாகி விடவில்லை, அண்மையிலேயே இவர்கள் உற்பத்தி செய்த பல பொருட்கள் உண்டு. இந்தப் பொருட்கள் அன்றாட உபயோகத்துக்குப் பயன்பட்டு வந்தன. இப்போது நாம் இவைகளுக்காக வெளி உலகத்தை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. நகரங்களில் வாழ்பவர்கள் கிராமங்களிலிருந்து எதிர்பார்க்க வேண்டிய பல பொருட்கள் உண்டு. ஆனால் இந்தப் பொருட்களுக்காகவெல்லாம் இப்போது அவர்கள் வெளி உலகத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தங்களுடைய ஓய்வு நேரத்தை உபயோகமான முறையில் பயன்படுத்துவதென்று கிராமவாசி களும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைப் பயன்படுத்துவதென்று நகரவாசிகளும் முடிவு செய்துவிட்ட

அந்தக் கணமே கிராமவாசிகளுக்கும் நகரவாசிகளுக்குமிடை யே துண்டுபட்டுப் போயிருந்த தொடர்பு மீண்டும் ஏற்பட்டு விடும்.[13]

கற்பிக்க வேண்டும்

நகர மக்கள் கிராமங்களுக்குப் போய் அங்கே வாழ வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆனால் கிராமவாசி களுடைய உரிமை எதுவோ அதை அவர்கள் அளித்துவிட வேண்டும். கிராமவாசிகளிடமிருந்தல்லாது, நகரவாசிகள் பெறக்கூடிய மூலப்பொருள் ஏதாவது இருக்கிறதா? இல்லையேல், அதை அவர் செய்யும் முறையை, முன்பு செய்து வந்தது போல் நம்முடைய சுரண்டல் மட்டும் இல்லாவிட்டால் இப்போதும் அவர் செய்து வந்திருக்கக்கூடியது போல் - நாம் ஏன் அவருக்குக் கற்றுக் கொடுக்கக்கூடாது?[14]

முதல் வேலை

முதன் முதலாக, கிராமவாசிகள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டவர்களாக வேண்டும். அதன் பின், நகர மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.[15]

கதரின் பணிப்பெண்கள்

மற்ற கிராமக் கைத்தொழில்களெல்லாம் கதரின் பணிப்பெண்கள் என்ற இடத்தையே பெறுகின்றன. கதர் இல்லாமல் அவை நிலைக்க முடியாது. அவை இல்லாமல் கதருக்கும் கம்பீரம் இல்லை. கையால் மாவு அரைத்தல், நெல் குத்துதல், சோப் செய்தல், காகிதம் செய்தல், தீப்பெட்டி செய்தல், தோல் பதனிடுதல், எண்ணெய் ஆட்டுதல் முதலிய அத்தியாவசியமான கிராமக் கைத்தொழில்கள் இல்லாமல் கிராமப் பொருளாதாரம் பூரணத்துவமடைய முடியாது. காங்கிரஸ்காரர்கள் இத்தொழில்களில் அக்கறை செலுத்தலாம். அவர்கள் கிராமவாசிகளாக இருந்தால், அல்லது கிராமங்களில் அவர்கள் குடியேறினால், இந்தத் தொழில்களுக்கு அவர்கள் புத்துயிர் அளிப்பதுடன் ஒரு வகைப் புதுக்கவர்ச்சியையுங்

கொடுப்பார்கள். எங்கெங்கு கிராமியப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் அவைகளையே உபயோகிப்பதென்று ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டும். கிராக்கி மட்டும் இருந்தால், நம்முடைய தேவைகளில் பெரும்பாலானவற்றை கிராமங்கள் உற்பத்தி செய்து அளித்துவிடும் என்பதில் ஐயமில்லை. நாம் கிராமிய மனோபாவம் உள்ளவர்களான பின் மேற்கு நாட்டு, 'இமிட்டேஷன்'களையோ அல்லது இயந்திரத்தால் செய்யப்பட்ட பொருட்களையோ விரும்பமாட்டோம். வறுமை, பட்டினி சோம்பேறித்தனம் என்பதையே அறியாத ஒரு நவ இந்தியாவின் தோற்றத்தை மனதிற் கொண்டு நமது தேசம் முழுவதிலும் ஒரு புது எண்ணத்தை வளர்ப்போம்.[16]

மேற்கு நாட்டிலும் உண்டு

கதரைப் பரப்புவதற்கான முயற்சியின் ஒரு அம்சமே, கிராமக் கைத்தொழில்களைப் புனருத்தாரணம் செய்வதாகும். கையால் நூற்ற நூலினால் ஆன துணி, கையால் செய்யப்பட்ட காகிதம், கைக்குத்தல் அரிசி, வீட்டில் உற்பத்தியான ரொட்டி, ஜாம் ஆகியவைகளை மேற்கு நாடுகளில் கூட சாதாரணமாகக் காணலாம். ஆனால் இந்தியாவில் இவைகளுக்குள்ள முக்கியத்துவத்தில் நூறில் ஒரு பங்கு கூட அங்கு இல்லை. ஏனென்றால், இங்கு நம்மைப் பொறுத்தவரை அவைகளைப் புனருத்தாரணம் செய்வதென்பது நமது கிராம மக்களுக்குப் புத்துயிர் அளிப்பதாகும். அவைகளின் அழிவு மரணத்துக்குச் சமம். இதை ஒரு குருடன் கூட அறிவான். இயந்திர சகாப்தம் என்ன தான் செய்தாலும், அது மொத்தமாகப் புகுத்தும் இயந்திரங்களினால் வேலை இழந்துவிடும் இலட்சக்கணக் கான மக்களுக்கு அதனால் ஒரு போதும் வேலை கொடுக்க முடியாது.[17]

அஹிம்சைச் சின்னம்

சர்க்காதான் அஹிம்சாபூர்வமான பொருளாதார சுயதேவைப் பூர்த்தியின் சின்னம். இது நம் எல்லோருடைய மனதிலும் ஆழப்பதிய வேண்டும்.[18]

கிராமக் கைத்தொழில்கள், ஆதாரக் கல்வி போன்ற மற்ற பல்வேறு நடவடிக்கைகளுக்குச் சர்க்காவைச் சுழற்றுவது தான் ஜீவ ஊற்றாகும். சர்க்காவை விவேகமான முறையில் நாம் பயன்படுத்த முடிந்தால், நமது கிராமங்களின் பொருளாதார வாழ்வுக்கு நாம் மீண்டும் புத்துயிரூட்ட முடியும்.[19]

ஐக்கியப்படுத்திக் கொள்க

கிராமங்களில் நாம் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளுடனெல்லாம், நம்முடைய ஊழியர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது கிராம வாழ்க்கை முழுவதுடனுமே அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ளும் போது அதனால் தங்களுக்கு சிறு கஷ்டம் ஏற்பட்டதாகக் கூட அவர்கள் எண்ணுவதாய் இருக்கக் கூடாது.[20]

எண்ணெய்ச் செக்கு

சர்க்காவைக் கிராம அபிவிருத்தியின் மத்தியப் பொருளாக நான் கருதுகிறேன். இத்துடன் ஒரு கிராமத்தில் வேறு என்ன கைத்தொழில்கள் செழித்து வளரமுடியுமென்பதை ஒரு ஊழியன் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட தொழில்களில் நாட்டு எண்ணெய்ச் செக்கு முதலாவதாக இருக்கும். ஊழியருக்கு இதன் தொழில் நுணுக்க முறை தெரிந்திருக்க வேண்டும். மகன் வாடியில் இது விஞ்ஞான பூர்வமாக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. கிராமத்தில் புகுத்தக் கூடிய மற்றொரு தொழில், கையால் செய்யப்படும் காகித உற்பத்தியாகும். நாடு முழுவதற்கும் இந்தக் காகிதத்தையே விநியோகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அல்லாது, கிராமங்களைச் சுயதேவைப் பூர்த்தி உள்ளவைகளாக ஆக்குவதற்காகவும், அவைகள் சிறிதளவு வருமானத்தை உயர்த்திக் கொள்ளும் சக்தி உடையவைகளாக்கவும் இதைக் கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது.

...க்கி

நாட்டுச் செக்கு, கைக்காகிதம் ஆகியவற்றுக்கு

அடுத்தபடியாக, கையால் இயக்கப்படும் சக்கி (ஆட்டுஉரல் திரிகை)யை நாம் புனருத்தாரணம் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் இது மிக முக்கியம். இல்லையேல் மாவு மில்கள் தான் - பல ஆண்டுகளாக இவைகளைப் பற்றி நான் கவலை அடைந்து வருகிறேன் - நம்முடைய தலைவிதியாக இருக்கும். இதைப் போன்றுதான் அரிசியும். கைக்குத்தல் அரிசியையோ அல்லது சக்கியால் திரிக்கப்படும் அரிசியையோ கிராம மக்கள் உபயோகிக்குமாறு செய்ய வேண்டும். ஏனெனில், மில்களிலிருந்து வெள்ளையாக அரைத்து வரும் அரிசி உடல் நலத்தைக் கெடுக்கிறது என்பது ஒரு நிலைத்த உண்மையாகும்.[21]

எல்லா அறிவும்

எல்லா வகைகளிலும் கிராமத்தை நிர்மாணிப்பதற்கான சகல அறிவையும் கிராம ஊழியன் பெறவேண்டும். கிராமத்தில் ஓரளவு நூற்பு வேலை இருக்கும். அதே போன்று கொல், தச்சு, தோல் வேலைகள், விவசாயம் முதலியவையும் இருக்கும். இவ்வாறு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் மத்தியில் கூட்டுறவை ஏற்படுத்தி, அவர்கள் எல்லோரும் ஒரே கிராமத்தின் ஒன்றுபட்ட அங்கங்களாகப் பணியாற்றுமாறு செய்யவேண்டும்.[22]

தவறு இருந்தால்?

எல்லா வகைகளிலும் கிராமம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்த வேலையைப் புதிதாக நாம் செய்ய வேண்டியிருக்கிறது. அதே சமயம் இதில் எந்த அளவு நாம் முன்னேற முடியும் என்பதைப் பார்ப்போம். இதற்கான மாறுதல்களின் காரணமாகத் தற்போது நாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நாம் குறைத்துக் கொள்ள வேண்டியதிருந்தாலும், அல்லது அவைகளைப் பூரணமாக நிறுத்தி வைக்க வேண்டியிருந்தாலும் அதைப் பற்றிப் பரவாயில்லை. நாம் கதரைப்பற்றி மக்களிடையே ஓரளவு ஆதரவான கருத்தை உருவாக்கியிருக்கிறோம். ஆனால் கதரின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களுக்கு நாம் சொன்னவற்றில் ஏதாவது தவறு இருக்குமானால் நாம் ஆர அமர யோசிக்க வேண்டும்.

நம்முடைய கோரிக்கை தவறானதாக இருந்தால், நம்முடைய தவறை நாம் பகிரங்கமாக அறிவிப்பதுடன், கோரிக்கையையும் வாபஸ் பெற வேண்டும்.

அஸ்திவாரத்தில் கவனம்

நகரங்களில் வாழ்பவர்கள் தங்களுக்கு வேண்டிய கதரைத் தாங்களே உற்பத்தி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன். அவர்களுக்குக் கதர் அளிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு விடுவேன். நாம் கிராமங்களுக்குப் போய்க் குடியேறுவோம். இந்த மாறுதலின் காரணமாக, ஊழியர்கள் நம்மை விட்டு விலகிச் செல்ல விரும்பினால், நாம் அவர்களை விட்டுவிடுவோம். நம்முடைய உள்ளத்திலும் அறிவிலும் இந்த அளவுக்கு மாற்றம் ஏற்றபட்டாலொழிய, நாம் விரும்பும் பலனை அடைய முடியாது. அகில இந்திய நூற்போர் சங்கத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம், கொள்கையை மட்டும் எடுத்துக் கூறுவோம். நம்முடைய வேலையை எவ்வளவு பரவல் மயமாக்க முடியுமோ அவ்வளவு பரவல் மயமாக்குவோம். அன்றாடக் கதர் வேலையிலிருந்து நாம் பூரணமாக விடுபடுவோம். அதன் பின்பு, நாம் எந்தக் கிராமத்தில் குடியேறுகிறோமோ அந்தக் கிராமப் பகுதியில் நடைபெறும் மற்ற நடவடிக்கைகள் அல்லது கைத்தொழில்களில் கவனம் செலுத்துவோம். அப்போதுதான் நம்முடைய வேலையின் உண்மையான சாரத்தை நாம் அடைய முடியும். நம்முடைய வேலைக்கு எவ்வளவு ஆழமான அஸ்திவாரம் போட முடியுமோ அவ்வளவு ஆழமான அஸ்திவாரம் போடுவதிலேயே தற்போது நமது கவனமெல்லாம் இருக்கும்.[23]

கிராமங்களில் வெற்றி பெற்றால் போதும்

விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் கிராமக் கைத்தொழில்கள் எல்லாவற்றையும் புனருத்தாரணம் செய்வதன் மூலம், மக்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கான வழி வகைகளைப் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு அரை டஜன் கிராமங்களில் நான் வெற்றி பெற்றால் கூட என்னுடைய பிரச்னை தீர்ந்துவிடும். ஏனென்றால் பிண்டம் போலத்தான் அண்டமும்.[24]

உங்களிடமிருந்தே தொடங்குங்கள்

கிராமக் கைத்தொழில் வேலைகளை எவ்வாறு ஆரம்பிப்பது, எதை முதலில் செய்யவேண்டும் என்றெல்லாம் கேட்டுப் பலர் கடிதம் எழுதுகிறார்கள். நண்பர்கள் என்னை வந்து பார்த்துக் கேட்கிறார்கள்.

இதற்கு ஒரு பதில் தெளிவு. அதாவது, ''உங்களிடமிருந்து தொடங்குங்கள். எது மிகவும் எளிதாக இருக்கிறதோ அதைச் செய்யுங்கள்''.

எனினும் மேற்கண்ட கேள்விகளைக் கேட்டவர்களுக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. ஆகையால் நான் இதை மேலும் சற்று விளக்குகிறேன்.

சில உதாரணங்கள்

ஒவ்வொருவரும் தான் அன்றாடம் பயன்படுத்தும் உணவு, உடை, மற்ற பொருட்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கட்டும். இவைகளில் வெளிநாடுகளில் செய்யப்பட்ட பொருட்கள் அல்லது நகரங்களில் உற்பத்தியான பொருட்கள் இருந்தால், அவைகளை நீக்கி, அவைகளுக்குப் பதிலாக கிராமவாசிகளால் செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தட்டும். அதாவது, கிராமவாசிகள் தங்களுடைய வீடுகளில், தாங்கள் எளிதாகப் பயன்படுத்தவோ செம்மை செய்து கொள்ளவோ கூடிய எளிய, செலவில்லாத கருவிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தட்டும். இவ்வாறு மாற்றம் செய்வது ஒன்றே, ஒரு சிறந்த பயிற்சியாக இருக்கும். ஒரு உருப்படியான தொடக்கமாகவும் இருக்கும். இதற்கு அடுத்த நடவடிக்கை தானாகவே அவருக்குத் தெரியும். உதாரணமாக, ஒருவர் இதுவரை பம்பாய்த் தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தியான 'பல் பிரஷ்'ஷை உபயோகிக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவர் அதை நிறுத்திவிட்டு கிராமத்தில் செய்த ஒரு 'பிரஷ்'ஷை உபயோகிக்க விரும்புகிறார். அவர் ஒரு ஆலங்குச்சியை உபயோகிக்கலாம் என்று ஆலோசனை கூறுவேன். அவருடைய பல் பலவீனமாய் இருந்தால், அல்லது அவருக்குப் பல்லே இல்லாமல் இருந்தால், அவர்

இந்த ஆலங்குச்சியின் ஒரு நுனியை ஒரு கல்லினாலோ சுத்தியினாலோ நன்கு தட்டிப் பயன்படுத்திக் கொள்வார். மற்றொரு நுனியைக் கத்தியினால் பிளந்து, அதை நாக்கு வழிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்வார். சுகாதாரமற்ற முறையில் தொழிற்சாலைகளில் செய்யப்படும் பல் 'பிரஷ்'களைக் காட்டிலும் இவை சுத்தமானவையாகவும் விலை மலிவானவையாகவும் இருப்பதை அவர் காண்பார். நகரங்களில் உற்பத்தியாகும் பல் பொடிக்குப் பதிலாக, சுத்தமான, நன்கு பொடி செய்யப்பட்ட, அடுப்புக்கரியையும், உப்பையும் சம அளவில் கலந்து அதைப் பற்பொடியாகப் பயன்படுத்தலாம். ஆலைத் துணிக்குப் பதிலாக கிராமத்தில் நெய்யப்பட்ட கதர், அரிசி ஆலையில் அரைக்கப்பட்ட அரிசிக்குப் பதிலாக கையால் குத்தப்பட்ட, தீட்டப்படாத அரிசி, வெள்ளைச் சர்க்கரைக்குப் பதிலாகக் கிராமத்தில் உற்பத்தியாகும் வெல்லம் ஆகியவற்றை அவர் பயன்படுத்தலாம். இவைகளை ஒரு உதாரணமாகவே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்... அதாவது, இந்தப் பிரச்னையைப் பற்றி என்னுடன் வாதித்தவர்கள் குறிப்பிட்ட கஷ்டங்களுக்கு விளக்கம் அளிக்கும் முறையிலேயே கூறியிருக்கிறேன்.[25]

கால்நடை விருத்திகள்

நம்முடைய கால்நடைகள் படுமோசமான முறையில் அலட்சியம் செய்யப்பட்டதே அவைகளின் தற்போதைய பரிதாபகரமான நிலைக்குக் காரணமாகும். நம்முடைய கால்நடை விடுதிகள் நம் இரக்க உணர்ச்சியின் சின்னமாக இருக்கின்றனவென்பது உண்மையே. ஆனாலும் அருவருக்கத்தக்க முறையில் அவை நடத்தப்படுகின்றன. முன் மாதிரியான பால் பண்ணைகளாகவும் பெரிய, லாபகரமான உதவி ஸ்தாபனங்களாகவும் இருப்பதற்குப் பதிலாக, வயதான கால்நடைகளைக் கொண்டு வந்து நிறுத்தும் கொட்டமாகவே அவை பயன்படுகின்றன. பசுப் பாதுகாப்பு என்பதை வானளாவ நாம் பேசிக் கொண்டிருக் கிறோமென்றாலும் நாம் பசுவையும் அதன் சந்ததிகளையும் அடிமைப்படுத்தி அதனால் நாமும் அடிமைகளானோம்.[26]

இலட்சிய 'கோ'சாலை

ஒரு இலட்சிய 'கோ'சாலையானது அதில் உள்ள பசுக்களிலிருந்து தான் எந்த நகர் அருகேயிருக்கிறதோ அதற்கு நல்ல சத்துள்ள பாலைக் குறைந்த விலையில் விநியோகிக்கும். வதை செய்யப்பட்ட மாடுகளிலிருந்து அல்லாமல், இறந்த மாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட எளிய, நன்கு உழைக்கக் கூடிய மிதியடிகளைச் செய்து கொடுக்கும். அப்படிப்பட்ட கோசாலையானது நகரின் மத்தியில் ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் பரப்பில் இருக்காது; அல்லது அதற்கு வெகு அருகாமையில் கூட இருக்காது; ஆனால் அது கொஞ்ச தூரத்தில், ஆனால் அதே சமயம் அதிக தூரமும் இல்லாத ஒரு இடத்தில் நிறுவப்படும். இது ஐம்பதிலிருந்து நூறு ஏக்கர் பரப்புக் கொண்டதாய் இருக்கும். அங்கு ஒரு நவீன பால் பண்ணையும் நவீன தோல் பதனிடும் சாலையும், நூற்றுக்கு நூறு வியாபார அடிப்படையில், அதே சமயம் தேசிய அடிப்படையில் நிறுவப்பெறும். இவ்வாறாக அதில் பங்குதாரர்களுக்கு இலாபத் தொகை அளிக்க வேண்டிய பிரச்னை இருக்காது. அதே சமயம் நஷ்டமும் இருக்காது. நீண்ட கால அடிப்படையில் இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் இந்தியா முழுவதிலும் நிறுவப்படும். அவை இந்து மதத்துக்கு ஒரு வெற்றியாகவிருக்கும்; பசு வளர்ச்சியில், கால் நடைப் பாதுகாப்பில் இந்துக்கள் எவ்வளவு அக்கறையுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சான்றாகவிருக்கும். மேலும் படித்தவர்கள் உள்பட ஆயிரக்கணக்கான பேர்களுக்கு இது கண்ணியமான வேலை அளிக்கும். ஏனென்றால், பால் பண்ணை, தோல் பதனிடுந்தொழில் ஆகிய இரண்டுக்குமே சிறந்த விஞ்ஞான அறிவு தேவைப்படுகிறது. பால் பண்ணை சம்பந்தமான மிகச் சிறந்த ஆராய்ச்சிகளுக்கு டென்மார்க் அல்லாமல் இந்தியாவே முன் மாதிரியான நாடாக விளங்க வேண்டும். தற்போது, இறந்த கால்நடைகளின் ஒன்பது கோடி ரூபாய் பெறுமான தோலை ஏற்றுமதி செய்துவிட்டு நமது உபயோகத்திற்காக, வதை செய்யப்பட்ட கால்நடைகளின் தோலை உபயோகப்படுத்த வேண்டிய நிலை இருக்காது. இது வெட்கக் கேடானது. இந்தியாவுக்குப் பொதுவாக இது வெட்ககரமானது என்றால், குறிப்பாக, இந்துக்களுக்கு இது அதிக வெட்ககரமானதாகும். கிரிதியில் நிகழ்த்திய

சொற்பொழிவில் நான் கருத்துக்களை எல்லாக் கோசாலைக் குழுக்களும் மனதில் பதித்துக் கொண்டு, தங்களுடைய கோ சாலைகளை இலட்சிய பால் பண்ணைக்காகவும் தோல் பதனிடும் நிலையங்களாகவும் ஆக்கும் என்றும் வயதான, வலுவிழந்த கால்நடைகளுக்கெல்லாம் ஒரு புகலிடமாக ஆக்கும் என்று நம்புகிறேன்.[27]

தோல் பதனிடுதல்

ஒவ்வொரு கோசாலை அல்லது முதிய கால்நடைகள் தொழுவத்திலும் அதன் தேவைக்கேற்ற ஒரு தோல் பதனிடும் நிலையம் இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களின் நிருவாகிக்குச் சிறந்த கால்நடைகளின் உடற்பகுதிகளைப் பயன்படுத்துவதற்கு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறு செய்யப்படுவதாய் இருந்தால், ஒரு குறிப்பிட்ட கோசாலையில் எத்தனை கால்நடைகள் இருக்க வேண்டும் என்ற பிரச்னைக்கே இடமில்லை.

ஒரு மாடு உள்ளவரை

கோசாலையில் கால்நடைகளின் இறப்பு விகிதம் என்னவென்பது எனக்குத் தெரியாது. அது நான் எடுத்துக் கொண்டுள்ள விஷயத்துக்கு வேண்டியதும் அல்ல. ஒரு கோசாலையில் ஒரு கால்நடை இருக்கும் வரை, அது இறந்த பின், அதன் உடலை எவ்வாறு பயன்படுத்துவதென்பதை அந்த கோசாலையின் நிருவாகி தெரிந்திருக்க வேண்டும். அது உயிருடன் இருக்கும் போது அதை எப்படிப் பராமரிக்க வேண்டுமென்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று எவ்வாறு எதிர்பார்க்கிறோமோ, அதே போன்று இதுவும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

தர்ம ஸ்தாபனங்களின் பொறுப்பு

நான் ஏற்கனவே விவரித்துள்ளதைப் போன்று, பொது வாக கால்நடைகள் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள இப்படிப்பட்ட தர்ம எண்ணமுள்ள ஸ்தாபனங்கள்,

கிராமத்தில் இறக்கும் கால்நடைகளின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் ஒரே மாதிரியாக கால்நடை, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பொது மக்கள் ஆகியோருடைய நலன்களெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. கோ சாலைகளோ அல்லது அதைச் சார்ந்த தோல் பதனிடும் நிலையங்களோ இல்லாத ஊர்களில், பசுப் பாதுகாப்பில் நம்பிக்கை கொண்ட யாராவது ஒரு ஊர்வாசி, இறந்த கால்நடைகளின் உடல்களைப் பக்கத்திலுள்ள தோல் பதனிடும் நிலையத்துக்கு அப்புறப்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும். அல்லது, அந்த உடலை வெட்டி அதிலுள்ள உபயோகமான பகுதிகளை எடுத்து அதைத் தோல்பதனிடும் நிலையத்திற்கு அனுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மூலதனம்

நான் ஏற்கனவே கூறியுள்ளதைப் போன்ற தோல் பதனிடும் நிலையங்கள் அமைப்பதற்கு அதிக மூலதனம் தேவையில்லை. இந்த வேலையில் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு சிறிதளவு ஆரம்ப மூலதனந்தான் தேவைப்படும்.[28]

கையால் நெல் குத்துதல், மாவு அரைத்தல்

"நூற்றுக்கு நூறு சுதேசி"

''நூற்றுக்கு நூறு சுதேசி'' என்னவென்பதைப் பற்றி நான் எழுதியபோது, அதனால் ஏற்படும் சில பிரச்னைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறேன். பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுடைய உடல் நலத்துக்கும் சுகாதாரத்துக்கும் உதவக்கூடிய முறையில் இப்பிரச்னைகளை உடனடியாக எவ்வாறு தீர்க்கலாம் என்று கூறியிருக்கிறேன். இந்த நாட்டில் உள்ள மிகப் பெரிய பணக்காரருக்கும், இதனால் வரக்கூடிய லாபத்தில் பங்கு உண்டு. பழைய கால முறைப்படி கிராமங்களிலேயே நெல் குத்திக் கொள்ள முடியுமானால், நெல் குத்தும் சகோதரி களுடைய வீட்டுக்குப் பணம் போய்ச் சேரும். தீட்டப்பட்ட அரிசியிலுள்ள 'ஸ்டார்ச்' என்னும் பொருளை மட்டும்

சாப்பிடுவதற்குப் பதிலாக தீட்டப்படாத அரிசியில் கொஞ்சம் சத்துள்ள உணவை மக்கள் பெறுவார்கள். மனிதனுடைய பேராசையானது தனது காலடியில் உள்ள மக்களின் உடல் நலத்தையோ, செல்வ வளத்தையோ பற்றி அக்கறை கொள்வதில்லை. நெல் விளையும் பகுதிகளிலெல்லாம் நாம் காண்கிறோமே விகாரமான அரிசி ஆலைகள், அவைகளுக்கு இந்தப் பேராசை தான் காரணம். பொது ஜன அபிப்பிராயம் மட்டும் பலமாக இருந்தால், தீட்டப்படாத அரிசி மட்டுமே தங்களுக்கு வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலமும், ஒரு தேசத்தின் சுகாதாரத்தையே பாழ்படுத்துவதும், நேர்மையாகப் பிழைக்கக்கூடிய ஏழை மக்களுக்குத் தொழில் இல்லாமல் செய்யக்கூடியதுமான ஒரு தொழிலை நிறுத்த வேண்டுமென்று கோருவதன் மூலமும் அரிசி ஆலைகள் இருப்பதையே மக்கள் சாத்தியமில்லாமற் செய்து விடுவார்கள்.[29]

மாவு அரைக்கும் ஆலைகள்

ஆயிரக்கணக்கான கிராமங்களில் மாவு அரைப்பதற்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. இது நம்முடைய நிராதரவான நிலையின் கடைசி எல்லை என்றே நான் கருதுகிறேன். அல்லது மாவு அரைக்கும் இயந்திரங்கள், மற்ற இயந்திரங்கள் எல்லாம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டவையல்லவென்று நான் எண்ணுகிறேன்... இப்படிப்பட்ட இயந்திரங்களைக் கிராமங்களில் பெரும் அளவில் நிறுவுவது பேராசையின் சின்னமேயாகும். ஏழை மக்களுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்தி இவ்வாறு ஒருவர் பையை நிரப்புவது சரியாகுமா? இப்படிப்பட்ட இயந்திரம் ஒவ்வொன்றுமே கையால் இயக்கப்படும் ஆயிரக்கணக்கான சக்கிகளுக்கு வேலையில்லாமற் செய்துவருகிறது. இந்தச் சக்கிகளைச் செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளி களுக்கும், இவைகளிலிருந்து மாவு திரித்துக் கொடுக்கும் ஆயிரக்கணக்கான வீட்டுப் பெண்களுக்கும் வேலை யில்லாமற் செய்து விடுகிறது. மேலும், இவ்வாறு கையால் செய்யப்படும் வேலைக்கெல்லாம் மின்சாரத்தைப் பயன்படுத்துவதானது, ஒரு தொற்று நோயைப் போலிருந்து, ஒவ்வொரு கிராமக் கைத்தொழிலுக்கும் பரவிவிடும். கிராமக்

கைத்தொழில் அழிவது கலையின் அழிவுக்கும் வழிகோலும் பழைய கைத்தொழில்களை அகற்றிவிட்டுப் புதிய தொழில்களை அவற்றின் இடத்தில் கொண்டுவருவதில் யாருக்கும் அவ்வளவு ஆட்சேபணை இராது. ஆனால், தற்போது நடைபெறுவது இதுவல்ல. மின்சாரத்தினால் இயக்கப்படும் இயந்திரங்கள் உள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களில், மாவு அரைக்கும் திரிகைகளின் இன்னிசையை அதிகாலையில் ஒருவர் கேட்க முடிவதில்லை.[30]

'மிஷின்' எண்ணெயும், செக்கு எண்ணெயும்

நாட்டுச் செக்கின் பிரச்னை

கிராமச் செக்கின் வீழ்ச்சிக்கு என்ன காரணம் என்பதைத் திரு ஜாவர்பாய் ஆராய்ந்திருக்கிறார். மிகவும் முக்கியமான காரணம், ஒழுங்காக வித்துக் கிடைப்பதற்குச் செக்கான் ஏற்பாடு செய்து கொள்ள முடியாதது தான். பருவ காலத்துக்குப் பின் கிராமங்களில் எண்ணெய் வித்து என்பதே இருப்பதில்லை. செக்கானுக்கு, விதையை இருப்புக் கட்டுவதற்குப் பணம் இருப்பதில்லை. நகரங்களிலிருந்து வித்து வாங்குவதற்கும் பணம் கிடையாது. ஆகையால் அவனுடைய தொழில் ஏற்கனவே மறைந்து விட்டது. அல்லது, மறைந்து கொண்டிருக்கிறது. இலட்சக்கணக்கான செக்குகள் தற்போது வேலையில்லாது இருக்கின்றன. இதனால் நாட்டின் பொருளாதாரம் எவ்வளவோ வீணாகிறது. விதைகள் உற்பத்தியாகும் இடங்களிலேயே அவைகளை இருப்பு வைத்து, நியாயமான விலையில் அது செக்கானுக்குக் கிடைக்குமாறு செய்து அதன் மூலம் ஏற்கனவே உள்ள செக்குகள் புத்துயிர் பெறுமாறு செய்வது நிச்சயமாக அரசாங்கத்தின் கடமையாகும். இந்த உதவி செய்வதால் அரசாங்கத்துக்கு நஷ்டம் எதுவுமில்லை. இதைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமோ அல்லது பஞ்சாயத்துக்கள் மூலமோ அளிக்க முடியும் என்று திரு. ஜாவர்பாய் கூறுகிறார். இதைச் செய்வதனால் 'மிஷின்' எண்ணெயுடன் செக்கு எண்ணெய் போட்டியிட முடியும். கிராமவாசிக்கு தற்போதுள்ளதைப் போன்று கலப்படமான எண்ணெய் வாங்கும் துயர அனுபவம் இருக்காது என்றும் திரு. ஜாவர்பாய் கூறுகிறார். விஞ்ஞான

பூர்வமான ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டே அவர் இதைக் கூறுகிறார். கிராமவாசிக்கு கொழுப்புச் சத்து, உணவில் கிடைப்பதாக இருந்தால், அது எண்ணெயின் மூலம் கிடைப்பதுதான். நெய்யை அவன் பொதுவாகப் பார்த்திருக்க மாட்டான்.

அனுகூலங்கள்

செக்கு எண்ணெயைக் காட்டிலும் மிஷின் எண்ணெய் எப்படித்தான் மலிவாக இருக்கிறது என்பதை அவர் (திரு. ஜாவர்பாய்) கண்டுபிடித்திருக்கிறார். இதற்கு அ ர் மூன்று காரணங்கள் கூறுகிறார். இவைகளில் இரண்டு தவிர்க்க முடியாதவை. அவையாவன : ஒன்று மூலதனம்; மற்றொன்று, வித்தில் உள்ள கடைசிச் சொட்டு எண்ணெயையும் - அதுவும் எண்ணெய்ச் செக்கைக் காட்டிலும் குறுகிய காலத்தில் - மிஷின் செக்கால் பிழிய முடிகிறது என்பது. ஆனால் இவைகளால் கிடைக்கும் அனுகூலம் எல்லாம் இடைத்தரகர் களுக்கு எண்ணெய் ஆலையின் சொந்தக்காரர் கமிஷன் செலுத்த வேண்டியிருப்பதால் சரிக்கட்டிப்போய் விடுகிறது. ஆனால் மூன்றாவது காரணம் இருக்கிறதே அதாவது கலப்படம், அதனுடன் ஜாவர்பாய் போட்டியிட முடியாது, அவரும் கலப்படம் செய்தாலொழிய. இயற்கையாகவே அவர் இதைச் செய்யமாட்டார். ஆகையால் கலப்படத்தைச் சட்டத்தின் மூலந்தான் தீர்க்க முடியும் என்று அவர் யோசனை கூறுகிறார். ஏற்கனவே கலப்படத் தடைச் சட்டம் இருந்தால், அதை அமுல் நடத்துவதன் மூலமும், இல்லாவிட்டால் எண்ணெய் ஆலைகளுக்கு லைசென்சு வழங்குவதன் மூலம் இச்சட்டத்தைக் கொண்டு வந்தும் அரசாங்கம் இதைச் செய்யலாம்.[31]

வெல்லமும் பனங்கற்கண்டும்

சர்க்கரைத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள், பஞ்சாலைத் தொழிலுக்கு அடுத்தபடியான மிகப் பெரிய தொழில் சர்க்கரை உற்பத்தித் தொழில்தான். அதற்கு நம் உதவி தேவையில்லை. சர்க்கரை ஆலைகள் வேகமாகப் பெருகிக் கொண்டு போகின்றன. இந்தத் தொழில் பெருகுவதற்கு, பொது ஸ்தாபனங்கள் எவ்வித உதவியும்

செய்யவில்லை. அனுகூலமான சட்டமே இதன் வளர்ச்சிக்குக் காரணம். இச்சட்டங்களுக்கு அது கடமைப்பட்டிருக்கிறது. இன்றோ வெல்லம் என்பது கடந்தகாலப் பொருள் என்று கூறும் அளவுக்குச் சர்க்கரை ஆலைத்தொழில் வளம் பெற்றிருக்கிறது, விரிவடைந்திருக்கிறது. வெள்ளைச் சர்க்கரையைக் காட்டிலும் வெல்லமானது உயர்ந்த உணவுச் சத்துள்ளது. இந்த அரிய தொழில்தான் இப்போது உங்களுடைய உதவிக்காகக் கதறுகிறது. இது குறித்துப் பெரும் அளவில் ஆராய்ச்சி செய்வதற்கும் கணிசமான உதவி அளிப்பதற்கும் இடம் இருக்கிறது. இது நீடிப்பதற்கான வழி வகைகளை நாம் ஆராய வேண்டும். நான் என்ன சொல்ல விரும்புகிறோனோ அதற்கு ஒரு சான்றாகத் தான் இதைக் கூறுகிறேன்.[32]

பனை வெல்லம்

கள்ளினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் என்று கூறு கிறார்களே அவை மற்ற உணவுப் பொருட்களிலிருந்தும் கிடைக்கின்றன. கள் என்பது பதனீரிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. புத்தம் புதிதாக எடுக்கப்பட்ட பதனீர் மயக்கந்தரும் பொருள் அல்ல. இதை ஹிந்துஸ்தானியில் ‘நீரா’ என்று சொல்லுகிறார்கள். பதனீர் அருந்துவதனால் அநேகருக்கு மலச்சிக்கல் குணமாகியிருக்கிறது. நானே அதைக் குடித்திருக்கிறேன். ஆனால் அது என் விஷயத்தில் மலமிளக்கியாக இல்லை. கரும்புச் சாறுக்கு எந்த உணவுச் சத்து இருக்கிறதோ அது பதனீரில் இருப்பதை நான் கண்டேன். தேயிலை முதலியவற்றை அருந்துவதற்குப் பதிலாக ஒருவர் காலையில் பதனீர் குடிப்பாரானால், காலை ஆகாரத்திற்கு வேறு எதுவும் தேவைப்படமாட்டாது. கரும்புச் சாறைப் போன்றே, பனையிலிருந்து எடுக்கப்படும் பதனீரைக் கொதிக்க வைத்து பனை வெல்லம் செய்யலாம். ‘கஜூரி’ என்பது ஒருவகைப் பனை மரம். அநேக வகைப் பனை மரங்கள் நம் நாட்டில் தானாகவே உற்பத்தியா கின்றன. அவைகள் எல்லாவற்றிலிருந்தும் நாம் அருந்தக் கூடிய பதனீர் கிடைக்கிறது. பதனீரானது விரைவில் புளிப்புக் கட்டுவதால் அதை உடனடியாக நாம் உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆகையால், அந்தந்த இடத்திலேயே

அதை நாம் உபயோகப்படுத்தியாக வேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தவிர, மற்றபடி, இவ்வாறு செய்வது கடினம். ஆகையால் பதனீரைப் பனை வெல்லமாக நாம் மாற்றிவிட வேண்டும். கரும்பு வெல்லத்தின் இடத்தைப் பனை வெல்லம் நல்ல முறையில் நிரப்ப முடியும். உண்மையில், சிலர் கரும்பு வெல்லத்தைக் காட்டிலும் பனை வெல்லத்தை யே அதிகம் விரும்புகின்றனர். கரும்பு வெல்லத்தை விடப் பனை வெல்லத்தில் உள்ள ஒரு அனுகூலம், பின்னது இனிப்பு குறைந்ததாதலால் ஒருவர் அதை அதிகம் சாப்பிடலாம். பனைவெல்லம் அதிகமாகப் பரவுவதற்கு அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் எவ்வளவோ செய்திருக்கிறது. இன்னும் நிறையச் செய்ய வேண்டியது மிருக்கிறது. கள்ளிறக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் பனைமரங்கள், வெல்லம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டால், இந்தியாவில் ஒரு போதும் சர்க்கரைப் பஞ்சம் இருக்காது. மிகக் குறைந்த செலவில் நல்ல வெல்லம் ஏழை மக்களுக்குக் கிடைக்கும். பனை வெல்லத்தை வெல்லப் பாகாகவும் சுத்தமான சர்க்கரையாகவும் மாற்றலாம். ஆனால் வெல்ல மானது சுத்தம் செய்யப்பட்ட சர்க்கரையைக் காட்டிலும் அதிக உபயோகமானது. வெல்லத்தில் உள்ள உப்புச் சத்துக்கள், சுத்தம் செய்யப்படும்போது இழக்கப்படுகின்றன. தீட்டப்பட்ட அரிசியிலும் தீட்டி அரைக்கப்பட்ட கோதுமை மாவிலும் தவிட்டுச் சத்து போவதனால் சில உணவுச் சத்துக்களை அவை இழந்து விடுகின்றன. அதே போன்று, வெல்லத்தில் உள்ள உணவுச் சத்தில் ஒரு சிலவற்றைச் சுத்தம் செய்யப்பட்ட சர்க்கரை இழந்து விடுகிறது. எல்லாப் பொருட் களையுமே முடிந்தவரை அதனதன் இயற்கையான நிலையில் உண்டால் தான் அதிக உணவுச் சத்து இருக்கிறது என்று பொதுவாக நாம் கூறலாம்.[33]

தேனீ வளர்ப்பு

தேனீ வளர்ப்புக்கு அளவு கடந்த வாய்ப்பு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அதற்கு கிராமத்தில் உள்ள முக்கியத்துவம் ஒருபுறம் இருக்க, பணம் படைத்த இளைஞர்

களும், பெண்களும் தேனீ வளர்ப்பை ஒரு ஓய்வு நேரப் பணியாக மேற்கொள்ளலாம். அது நாட்டின் செல்வத்தை உயர்த்த உதவும்; அது மட்டுமல்லாமல், நமக்குச் சிறந்த உடல் நலத்திற்குகந்த சர்க்கரையையும் கொடுக்கும். நமக்குத் தாராளமான மனோபாவம் இருக்குமானால் நாம் அதை நோயால் அவதிப்படும் அரிஜனக் குழந்தைகளுக்கு அவர்களுடைய உடல் நலத்தை அபிவிருத்தி செய்வதற்கான உணவாகக் கொடுத்து உதவலாம். அது பணக்காரர்களின் ஆடம்பரப் பொருளாக இருக்க வேண்டும், அல்லது ஹக்கீம்கள், வைத்தியர்களுடைய கையில் விலை உயர்ந்த மருந்துப் பொருளாக இருக்க வேண்டும் என்பதற்குக் காரணமே இல்லை. ஆனால் ஒன்று, வெறும் புள்ளிவிவரங் களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த நம்பிக்கை யைக் கூறுகின்றேன். கிராமங்களிலும், நகரங்களிலும் இளைஞர்களும் பெண்களும் சோதனை செய்து, தேனானது சாதாரண உணவுப் பொருளாக முடியுமா அல்லது தற்போதிருப்பதைப் போல் ஒரு விசேஷப் பொருளாகத்தான் இருக்க முடியுமா என்பதைப் பார்க்கலாம்.[34]

தோல் பதனிடுதல்

நஷ்டம்

ஒன்பது கோடி ரூபாய் பெறுமான கச்சாத் தோல் ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறதென்றும், இதில் பெரும் பகுதி உற்பத்தி யான பொருட்களாகத் திரும்பி வருகிறது என்றும் மதிப்பிடுகின்றனர். இதனால் பொருள் நஷ்டம் மட்டும் அல்ல, அறிவு நஷ்டமும் இருக்கிறது. தோல் பதனிடுவதிலும், நமக்கு அன்றாடம் தேவையான தோலாலான எண்ணற்ற பொருட்களைத் தயார் செய்வதிலும் நாம் பயிற்சி பெற இயலாமல் போய்விடுகிறது.

இரசாயன அபிவிருத்தி

தோல் பதனிடுவதற்குச் சிறந்த தொழில் நுணுக்கத் திறமை வேண்டும். இந்தப் பெரிய தொழிலில் ஏராளமான இரசாயனவாதிகள் தங்களுடைய திறமையைக் காட்டுவதற்கு

இடம் உண்டு. இதன் அபிவிருத்திக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று அரிஜனங்கள் அபிவிருத்தி. கிராமங்களில் குடியிருக்கும் சிறுவர்களுக்கு உயிர்வாழ்வதற்கும் போதாத வருமானம் கிடைக்கிறது. இவர்கள் குப்பை கூளங்களில் வாழ்ந்து வருகின்றனர். கிராமங்களுக்கு அப்பால் தனியாக ஒதுக்கப்பட்ட சேரிகளில் வாழ்ந்து வருகின்றனர். இந்த வழியின் மூலம் கிராமங்கள் ஓரளவு சீரமைக்கப்படும். கலை, கல்வி, துப்புரவு, நல்வாழ்வு, கண்ணியம் ஆகியவையெல்லாம் அவர்கள் அருகில் வந்துசேரும். இதன் மூலம் இரசாயனக் கண்டுபிடிப்புகளையும் நாம் கிராம அபிவிருத்திக்காகப் பயன்படுத்திக் கொள்கிறோம். தோல் பதனிடும் இரசாயன விஞ்ஞானிகள், தோல் பதனிடுவதற்கு அபிவிருத்தியடைந்த வழி துறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதிருக்கிறது. கிராம இரசாயனவாதியோ அடக்கத்துடன்தான் வெற்றி பெற வேண்டியதிருக்கிறது. கிராமத்தில், பண்படாத, பக்குவமற்ற தோல் பதனிடும் முறை இருக்கிறதே அதை அவன் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் இந்த முறை இருக்கிறது. ஆனால் போதுமான ஆதரவு இல்லாததனால் அல்ல, நம்முடைய அலட்சியத்தினால் இது வேகமாக மறைந்துகொண்டு வருகிறது. ஆனால் இந்தப் பண்படாத முறையை நாம் பூரணமாக ஒதுக்கித் தள்ளிவிட வேண்டியதில்லை; குறைந்தது அதைப்பற்றி அனுதாபமாக ஆராய்ச்சி செய்து பார்க்கும் வரையாவது ஒதுக்கித் தள்ளிவிட வேண்டியதில்லை. பல நூற்றாண்டுகள் அது செயல்பட்டு வந்திருக்கிறது. அதற்குக் கொஞ்சங்கூடத் தகுதியில்லாதிருந்தால், அது அவ்வாறு செய்திருக்க முடியாது. இது சம்பந்தமான ஒரே ஆராய்ச்சி நான் அறிந்தவரை சாந்தி நிகேதனத்தில் தான் நடந்து வருகிறது. அதன்பின் பழைய சபர்மதி ஆசிரமத்தில் தொடங்கப்பட்டது. சாந்தி நிகேதனத்தில் நடைபெற்ற சோதனையின் அபிவிருத்திகளை நான் தொடர்பேற்படுத்தித் தெரிந்து கொள்ளவில்லை. தற்போது சபர்மதி ஆசிரமம் அரிஜன் ஆசிரமம் ஆகியிருக்கிறது. இந்த அரிஜன் ஆசிரமத்தில் தோல் பதனிடுந் தொழில் புத்துயிர் பெற ஒவ்வொரு வாய்ப்பும்

உண்டு. அதே சமயம் இந்தச் சோதனைகளெல்லாம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆராய்ச்சியென்னும் சமுத்திரத்தில் ஒரு சில துளிகளே.

இறந்த மாட்டிறைச்சி

பசுப்பாதுகாப்பு என்பது ஒரு இந்துமதக் கோட்பாடாகும். அரிஜனன் என்று சொல்லத்தக்க எவனும் கால்நடையை உணவுக்காகக் கொல்லமாட்டான். ஆனால், இவன் தீண்டத்தகாதவனாக இருப்பதால், இறந்த மாட்டு இறைச்சியை உண்ணும் தீய பழக்கத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறான். அவன் ஒரு பசுவைக் கொல்ல மாட்டான்; ஆனால் ஒரு சிறந்த பசுவின் இறைச்சியைச் சுவைத்து உண்பான். உடல்கூறு சாஸ்திரப்படி இது அவனுக்குத் தீங்கு செய்யாமல் இருக்கலாம். ஆனால் மனோதத்துவ சாஸ்திரப்படி பார்த்தால், இறந்த மாட்டு இறைச்சியைச் சாப்பிடுவதை விட அருவருக்கத்தக்கது எதுவுமே இல்லை. ஆயினும் தோல் பதனிடும் ஒரு அரிஜனுடைய வீட்டுக்கு ஒரு இறந்த பசுவின் உடல் கொண்டு வரப்பட்டால், அது அந்த வீடு முழுவதற்குமே ஒரு பெரிய கொண்டாட்டமாகும். அந்த இறந்த உடலைச் சுற்றி குழந்தைகள் ஆனந்த நர்த்தனம் ஆடுகிறார்கள். அந்த மிருகத்தின் தோல் உரிக்கப்படும் போது, அதில் உள்ள எலும்புகளை அல்லது மாமிசத் துண்டுகளைக் குழந்தைகள் எடுத்து ஒருவர் மீதொருவர் வீசியெறிகின்றனர். தற்போது அரிஜன ஆசிரமத்தில் இருக்கும் தோல் பதனிடுபவர் ஒருவர் தாம் விட்டுவந்த தனது பழைய வீட்டில் நடந்த காட்சிகளை வருணித்துக் கூறுகையில், இறந்த மிருகத்தைக் கண்டவுடன் குடும்பம் முழுவதுமே ஆனந்தத்தால் புளகாங்கிதமடைந்து விடுகிறது என்று கூறுகிறார். இறந்த மாட்டு மாமிசத்தைச் சாப்பிடுவது ஆன்மாவை அழிக்கும் ஒரு பழக்கம். இந்தப் பழக்கத்திலிருந்து அரிஜனங்களைத் திருப்ப நான் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறேனாதலால், அது எவ்வளவு கஷ்டம் என்பதை அறிவேன். சீர்திருத்தமான தோல் பதனிடும் முறையால், இறந்த மாட்டு மாமிசத்தைச் சாப்பிடுவதானது இயற்கையாகவே மறைந்து விடும்.

பசுவின் உபயோகங்கள்

நல்ல, உயர்ந்த அறிவுக்கும் இறந்த உடலைக் கூறுபோடும் கலைக்கும் இங்கே உபயோகம் இருக்கிறது. இது பசுப் பாதுகாப்புக்கு முன்னோக்கிச் செல்லும் ஒரு நடவடிக்கையும் ஆகும். பசுவுக்குள்ள பால் கொடுக்கும் சக்தியை எவ்வாறு பெருக்குவது என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அதனுடைய வர்க்கத்தை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். அது போடும் ஆண் கன்றை, நிலத்தில் உழுவதற்கும், பாரவண்டி இழுப்பதற்கும் அதிக உபயோகமுள்ள மாடாக நாம் ஆக்கவேண்டும். அது போடும் சாணத்தையும், அதன் கோமியத்தையும் விஞ்ஞானபூர்வமான முறையில் உரமாக உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். பசுவும் அதன் சந்ததிகளும் இறக்கும்போது அவைகளின் தோலையும், எலும்பையும், மாமிசத்தையும், குடலையும் மற்றும் இது போன்றவைகளையும் உபயோகமான முறையில் பயன்படுத்தத் தயாராய் இருக்கவேண்டும். இவைகளை யெல்லாம் நாம் செய்யாவிட்டால், பசுவானது கசாப்புக் கடைக்காரன் கையில் இறக்கத்தான் நேரும்.

தோல் பதனிடுவோர் கஷ்டங்கள்

நான் இங்கு இறந்த பிராணியின் உடலைப் பற்றியே குறிப்பிடுகிறேன். நல்ல வேளையாக, கிராமத்தில் தோல் பதனிடுபவனுக்குக் கிடைப்பது இறந்த பிராணியின் உடலே தவிர, வெட்டப்பட்ட மிருகத்தின் உடலல்ல. இறந்த மிருகத்தைக் கண்ணியமான முறையில் தோல் பதனிடும் இடத்திற்குக் கொண்டு சேர்க்க அவனிடம் சாதனம் இல்லை. அவனே அதைத் தூக்குகிறான்; இழுக்கிறான். இது அம் மிருகத்தின் தோலுக்குக் காயம் ஏற்படுத்தி விடுகிறது; அந்தத் தோலின் மதிப்பையே குறைத்து விடுகிறது. கிராமத்தில் தோல் பதனிடுபவன் செய்யக்கூடிய விலை மதிப்பற்ற, கண்ணியமான சேவையைக் கிராமவாசிகளும், பொது மக்களும் அறிவார்களானால், தோலுக்குக்கேடு இல்லாமல் அதைச் சுமந்து செல்வதற்கு இலகுவான, எளிதான வழிகளைச் செய்து கொடுப்பார்கள்.

தோலை உரித்தல்

அடுத்த வேலை தோலை உரிப்பதாகும். இதற்கு அதிகத் திறமை வேண்டும். ஒரு கிராமத்தில் தோல் பதனிடுபவன் நாட்டுக் கத்தியால் தோலை உரிப்பதைவிட வேகமாகவோ, சிறந்த முறையிலோ வேறு யாரும் - அறுவை சிகிச்சையில் ஈடுபட்டுள்ள டாக்டர்கள் கூட - செய்ய முடியாது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கிராமத் தோல் பதனிடுபவன் செய்வதில் அபிவிருத்தியான ஒரு சிறு மாறுதலைக்கூட அவர்களால் கூற முடியவில்லை. இதனால் இதைக் காட்டிலும் சிறந்த முறையே இல்லை என்பதல்ல. என்னுடைய மிகக் குறுகிய அனுபவத்தினால் கிடைத்த நன்மையையே நான் வாசகருக்குத் தெரிவிக்கிறேன். கிராமத்தில் தோல் பதனிடுபவனுக்கு எலும்பால் எந்தவிதமான உபயோகமும் இல்லை. அவன் அதை எறிந்து விடுகிறான். இறந்த பிராணியின் உடலிலிருந்து தோல் உரிக்கப்படும் போது நாய்கள் கூடி விடுகின்றன. எலும்புகள் எல்லாவற்றையும் அல்லா விட்டாலும் ஒரு சிலவற்றைக் கவ்விச் சென்று விடுகின்றன. இது நாட்டுக்கே ஒரு பெரிய நஷ்டமாகும். இந்த எலும்புகளைப் பொடி செய்தால் - மற்ற உபயோகங்கள் ஒரு புறம் இருக்க - சிறந்த உரமாகும். நாய்கள் எடுத்துச் சென்றது போக, மீதமுள்ளவை வெளிநாடு களுக்கு ஏற்றுமதியாகி, கைப்பிடிகளாகவும், பித்தான்கள் முதலிய பொருட்களாகவும் நமக்கே திரும்பி வருகின்றன.

நகர மயமாக்குதல்

இதற்கு அடுத்த வழி இந்தப் பெரிய தொழிலை நகர மயமாக்குவதாகும். இந்தியாவில் இந்த வேலையைச் செய்யக்கூடிய அநேக தோல் பதனிடும் நிலையங்கள் இருக்கின்றன. இந்தக் கட்டுரையின் நோக்கம் அவைகளைப் பற்றி ஆராய்வதல்ல. இத்தொழிலை நகர மயமாக்குவதானது அரிஜனங்களுக்கோ அல்லது கிராமங்களுக்கோ நன்மை செய்யாது, கிராமங்களின் செல்வத்தை இரட்டை மடங்கு வேகத்தில் விரயம் செய்வதற்கே வழிகோலும். இந்தியாவில் நகர மயமாக்குவது மெதுவாகத்தான் நடைபெறுகிறது. ஆனாலும் அது கிராமங்களுக்கும், கிராமவாசிகளுக்கும்

நிச்சயமாக அழிவைத்தான் விளைவிக்கும். இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் தொண்ணூறு சதவீதம் இங்குள்ள ஏழு இலட்சம் கிராமங்களில் தான் இருக்கிறது. நகரமயமாக்குவது, ஒருகாலும் இந்த தொண்ணூறு சதவிகித மக்களுக்கு வாழ்வளிக்க முடியாது. இந்தக் கிராமங்களிலிருந்து தோல் பதனிடுவது போன்ற தொழில் களை அகற்றி விடுவதானது, மூளையையும், கையையும் திறமையான முறையில் உபயோகப்படுத்துவதற்கு அங்கு தற்போதுள்ள சிறிய வாய்ப்பையும் அகற்றி விடுவதாகும். கிராமக் கைத்தொழில்கள் மறையும்போது, வயலில் கிராமவாசிகள் தங்களுடைய கால்நடைகளுடன் உழைப்பது தான் மிஞ்சும். அதிலும் அவர்களுக்கு ஆண்டில் நான்கிலிருந்து ஆறு மாதங்கள் வேலை இருக்காது. ஆகையால் மதுசூதன் தாஸ் கூறுகிறார் : ''இவர்கள் மிருகங்களின் நிலைக்குத் தாழ்ந்து விடுவார்கள். உடலுக்கோ மனதுக்கோ போதிய உணவூட்டம் இல்லாது போய்விடும். ஆகையால் அவர்களுக்குச் சந்தோஷமோ, நம்பிக்கையோ இருக்காது.[34]

3. நன்மைகள்

நூற்றுக்கு நூறு சுதேசியை விரும்புபவருக்கு இங்கே வேலை இருக்கிறது. ஒரு மாபெரும் பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தொழில் நுணுக்க அறிவையெல்லாம் ஒன்று திரட்டுவதற்கான வாய்ப்பும் உண்டு. இதில் ஒரே அம்பில் மூன்று பழங்களை வீழ்த்துவது போன்றது இப்பணி. இது அரிஜனங்களுக்குத் தொண்டு செய்வதாகும்; கிராமவாசி களுக்குத் தொண்டு செய்வதாகும்; வேலை தேடித்திரியும் மத்திய தர படித்த வகுப்பினருக்குக் கௌரவமான வேலை தேடித் தருவதுமாகும். இத்துடன், படித்தவர்கள் கிராமவாசி களுடன் சரியான நேரடித் தொடர்பு கொள்ள உதவுகிறது என்ற உண்மையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.[35]

சோப்

'சஜ்ஜி' களிமண்ணிலிருந்து கிராமவாசிகள் தங்களுக்கு வேண்டிய சோப்பை உற்பத்தி செய்து கொள்வார்கள். டாடா அல்லது காத்ரெஜ் தொழிற்சாலை

களில் உற்பத்தி செய்யப்படும் சோப்புகளுக்கு உள்ள வாசனை, இந்த சோப்புக்கு இருக்காது. அதன் மேலுள்ள காகித உறையும் அவ்வளவு கவர்ச்சிகரமாய் இராது. ஆனாலும், கதரைப் போன்று சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்ளும் அம்சம் அதில் இருக்கும்.[36]

கையால் செய்யப்படும் காகிதம்

குறைந்த விலை

போதுமான ஆர்டர்கள் மட்டும் இருந்தால், ஆலை களில் உற்பத்தியாகும் காகிதத்தின் விலைக்கே கையால் செய்யப்படும் காகிதத்தையும் விற்கலாம் என்று கேள்வி படுகிறேன். நாள்தோறும் காகிதத்தின் தேவை கூடி கொண்டே வருகிறது. இந்தத் தேவையைக் கையால் செய்யப்பட்ட காகிதம் பூர்த்தி செய்ய முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால், ஏழு இலட்சம் கிராமங்கள், அதில் உற்பத்தியாகும் கைத்தொழில் பொருட்கள் ஆகியவற்றின் அபிமானிகள், கையால் செய்யப்படும் காகிதம் எளிதாக கிடைப்பதானால் அதை வாங்குவார்கள். கையால் செய்யப்படும் காகிதத்தை வாங்குபவர்கள், அதற்கு என்று ஒரு தனிக்கவர்ச்சி இருக்கிறதென்பதை அறிவார்கள். புகழ் பெற்ற ஆமதாபாத் காகிதத்தை யார் தான் அறியமாட்டார்கள்? பளபளவென்று இருப்பதிலோ அல்லது நீடித்து உழைப்பதிலோ எந்த மில் காகிதம் தான் அதை தோற்கடிக்க முடியும்?

ஊக்கம் தரவேண்டும்

பழங்கால முறையில் வரவு செலவுக் கணக்கு புத்தகங்கள் இன்னும் அக்காகிதத்திலேயே செய்ய படுகின்றன. ஆயினும் இப்படிப்பட்ட மற்ற பல தொழி களைப் போலவே இந்தத் தொழிலும் அழிந்து கொண்டுதா இருக்கிறது. ஒரு சிறிது ஊக்கமளித்தால், அது அழியா காப்பாற்றலாம். இத்தொழிலை மேற்பார்வை செய் வந்தால், இதில் கையாளப்படும் முறைகளை அபிவிருத் செய்யலாம். கையால் செய்யப்படும் சில வகை

காகிதங்களில் காணப்படும் குறைபாடுகளை வெகு எளிதில் அகற்றி விடலாம். இவ்வாறு, சரியாக வெளியே தெரியாத தொழில் களில் ஈடுபட்டிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி ஆராய்வது பயனுள்ளதாகவிருக்கும். அவர்களுக்கு யாரும் வழிகாட்டி, ஆலோசனை கூற உதவுவதானால் அவர்கள் நிச்சயமாக அதற்கு உடன்பட்டே நடப்பார்கள்; அவர்கள் விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்வோருக்கு நன்றி செலுத்துவார்கள்.[37]

மை

நான் இப்போது எழுதிக் கொண்டிருக்கும் மை தெனாலியிலிருந்து வந்தது. அங்கு மை உற்பத்தி செய்யும் தொழிலால் பன்னிரண்டு தொழிலாளர்கள் பிழைக்கிறார்கள். எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் அது முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதே போன்று வேறு மூன்று இடங்களிலிருந்தும் எனக்கு வெவ்வேறு மைகளை மாதிரியாக அனுப்பியிருந்தார்கள். இவர்களும் தெனாலியில் உள்ளவர்களைப் போலவே தங்கள் தொழிலுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் என் மனதைக் கவர்ந்தன. நான் அவர்களுடன் கடிதப்போக்கு வரத்து நடத்தினேன். ஆயினும் என்னால் அவர்களுக்குப் போதிதாக எவ்வித அனுகூலமும் செய்ய முடியவில்லை. ஒரு சுதேசி ஸ்தாபனம் இந்த மைகளை விஞ்ஞான பூர்வமாக ஆராயும்; அவைகளுக்கு வழிகாட்டும். நல்ல எதிர்காலம் இருப்பவைகளை ஊக்குவிக்கும். இரசாயனத்தில் நல்ல தொழில் நுணுக்க அறிவுள்ளவர்கள் தேவைப்படக்கூடிய ஒரு நல்ல, வளருந்தொழிலாகும் இது.[38]

கிராமப் பொருட்காட்சிகள்

கிராமங்கள் உயிருடன் வாழ்வது மட்டும் போதாது; அவை பலத்துடன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடையவும் வேண்டுமென்று விரும்பி னீர்களானால், அதில் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால், கிராம கண்ணோட்டந்தான் அதற்குரிய ஒரே வழி. இது சரியாகவிருந்தால் அப்புறம், நம்முடைய பொருட்காட்சிகளில் நகரங்களின் பகட்டுக்கும் படாடோபத்துக்கும் இடமே இருக்க

முடியாது; நகரங்களுக்குரிய விளையாட்டுக்கள், கேளிக்கைகள் ஆகியவைகளுக்கும் அவசியம் இருக்காது. ஒரு பொருட்காட்சி ஒரு கேளிக்கை ஆகிவிடக் கூடாது. வருமானம் தேடக்கூடிய தொழிலாகவும் ஆகிவிடக்கூடாது; வணிகர்கள் விளம்பரம் செய்வதற்கான சாதனமாகவும் ஒரு போதும் ஆகிவிடக்கூடாது. அங்கு எந்த விற்பனையையும் அனுமதிக்கக்கூடாது. கதர், கிராமக் கைத்தொழில் பொருட்களைக் கூட அங்கு விற்கக்கூடாது; ஒரு பொருட் காட்சியென்பது சில விஷயங்களில் அறிவைப் புகட்டக்கூடிய இடமாக இருக்க வேண்டும்; அது கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும்; ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடுமாறு கிராமவாசியைத் தூண்டக்கூடியதாகவும் இருக்க வேண்டும். தற்போதுள்ள கிராம வாழ்க்கையில் இருக்கும் தவறுகளையும் குறைபாடுகளையும் அது எடுத்துணர்த்த வேண்டும்; அவைகளைச் செம்மைப்படுத்துவதற்காக வழிதுறைகளையும் காண்பிக்க வேண்டும்; கிராம அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒரு துறையில் எந்த அளவு சாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அது விளக்கிச் சுட்டிக்காட்ட இயலவேண்டும்; கிராம வாழ்க்கையை எவ்வாறு கலை அழகுள்ளதாக்க முடியும் என்பதையும் அது கற்பிக்க வேண்டும்.

மாதிரி கிராமங்கள்

மேற்கண்ட நிபந்தனைகளின்படி ஒரு பொருட்காட்சி எப்படியிருக்கும் என்பதை இப்போது பார்ப்போம்.

1. மாதிரி கிராமங்கள் இரண்டு அமைக்கப்பட வேண்டும் - ஒன்று தற்போது இருப்பது மாதிரி, மற்றொன்று அபிவிருத்தி அடைந்த மாதிரி, அபிவிருத்தி அடைந்த கிராமம் முற்றிலும் சுத்தமாக இருக்கும். அதனுடைய வீடுகளும், சாலைகளும், சுற்றுப்புறங்களும், வயல்களும் - எல்லாம் சுத்தமாக இருக்கும். கால்நடைகளின் நிலையும் அபிவிருத்தி அடையவேண்டும். ''எப்படிப்பட்ட தொழில்கள் அதிகப்படி யான வருமானத்தைக் கொடுக்கும், அவை எப்படி அதிகப்படியான வருமானத்தைக் கொடுக்கும்'' என்பதை எடுத்துக் காட்டுவதற்குப் புத்தகங்கள், விளக்க அட்டைகள், படங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட வேண்டும்.

காட்சியில் காண்பிக்க வேண்டியவை

2. பல்வேறு கிராமக் கைத்தொழில்களை எவ்வாறு நடத்த வேண்டும். அவைகளுக்குத் தேவையான கருவிகளை எங்கே வாங்கலாம், அவைகளை எப்படிச் செய்யலாம் என்பனவற்றையெல்லாம் எடுத்துக்காட்ட வேண்டும். ஒவ்வொரு தொழிலும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நேரடியாகக் காண்பிக்க வேண்டும். இவைகளுடன் கீழ்க்கண்டவைகளும் இடம் பெற வேண்டும்.

(அ) இலட்சிய கிராம உணவு.

(ஆ) கிராமக் கைத்தொழிலுக்கும் இயந்திரத் தொழிலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.

(இ) கால்நடை வளர்ப்புக்குச் சில முதல் பாடங்கள்.

(ஈ) கலைப்பிரிவு.

(உ) கிராமக் கக்கூசின் மாதிரி.

(ஊ) தொழு உரத்துக்கும் இரசாயன உரத்துக்கும் உள்ள தராதரம்.

(எ) கால்நடைகளின் தோல், எலும்பு முதலியவை களைப் பயன்படுத்துதல்.

(ஏ) கிராம இசை, கிராம இசைக் கருவிகள், கிராம நாடகங்கள்.

(ஐ) கிராம விளையாட்டுக்கள், கிராம தேகப் பயிற்சி முறைகள்.

(ஒ) ஆதாரக் கல்வி.

(ஓ) கிராம மருந்து.

(ஔ) கிராம மருத்துவ நிலையம்.

மேலும் விரிவுபடுத்தலாம்

ஆரம்பத்தில் கூறப்பட்ட கொள்கையின் அடிப்படை யில், இந்தப் பட்டியலை மேலும் விஸ்தரித்துக் கொண்டு போகலாம். ஒரு முன்மாதிரியாகச் சிலவற்றை நான் கூறியிருக்கிறேன். அதற்குமேல் ஒன்றும் இல்லை என்று எண்ணிவிட வேண்டாம். சர்க்காவையும், கிராமக் கைத்தொழில்களையும் பற்றி நான் எதுவும் கூறவில்லை. ஏனெனில் அவை நிச்சயம் இடம்பெறும் என்ற அடிப்படையிலேயே மற்றவைகளைக் கூறியிருக்கிறேன். அவைகளில்லாமல் பொருட்காட்சி உபயோகமற்றதாய்ப் போய்விடும்.[39]

அத்தியாயம் 21

கிராமப் போக்குவரத்து

மாட்டு வண்டிக்கு ஆதரவு

எந்த சக்தி முக்கியம்?

பரோடாவைச் சேர்ந்த திரு. ஈஷ்வர்பாய் எஸ். அமீன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், மிருக சக்தி முக்கியமா, இயந்திர சக்தி முக்கியமா என்பது பற்றி ஆராய்ந்திருக்கிறார். இப்போது எடுத்துக்கொண்டுள்ள விஷயத்துக்குப் பொருத்தமான ஒரு பகுதியை அதிலிருந்து எடுத்து அளிக்கிறேன்.

கால்நடை போட்டியிடலாம்

''வயல் வேலையிலோ அல்லது குறுகிய தூரப் பிரயாணத்துக்கோ இயந்திர சக்தியைக் காட்டிலும் கால்நடைகளுக்கு அதிகச்செலவு ஏற்படுவதில்லை. ஆகையால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இயந்திரங்களுடன் கால்நடைகள் போட்டியிட முடியும். ஆனால் கால்நடைகளுக்குப் பதிலாக இயந்திரங்களை விரும்புவதே இன்று மக்களின் மனப்பாங்காக இருக்கிறது.

மாட்டு வண்டியும், லாரியும்

''உதாரணத்துக்காக மாட்டு வண்டி ஒன்றை எடுத்துக் கொள்வோம். வண்டியின் விலை ரூ.100; மாடுகளின் விலை ரூ.200; 16 மணங்கு பாரத்துடன் கரடுமுரடான மணற் பாங்கான கிராமப் பாதைகளில் நாள்தோறும் 15 மைல் தூரம் வண்டியை மாடுகள் இழுத்துச் செல்லமுடியும். இதற்கு காளைகளுக்கு ரூ. 0-12-0ம், கட்டை வண்டிக்கு ரூ.0-6-0ம், வண்டியின் தேய்மானச் செலவுக்கு ரூ. 0-4-0ம் ஆக மொத்தம் தினந்தோறும் ரூ. 1-6-0 செலவாகும். ஒரு டன் பாரத்தை ஏற்றிச் செல்லக்கூடிய மோட்டார் லாரிக்கு 15 மைல் தூரம் செல்லக் குறைந்தது ஒரு காலன் பெட்ரோல் பிடிக்கும். அத்துடன் லூப்ரிகேடிங் (மசகாகப் பயன்படும்) எண்ணெய் வேண்டும். இவை தவிர, நிறைய மராமத்து, நடைமுறைச்

செலவுகள் இருக்கின்றன. உயர்ந்த சம்பளத்தில் ஒரு கார் டிரைவரை நியமிக்க வேண்டியதும் இருக்கிறது. இந்த லாரி 15 மைல் தூரம் பாரம் ஏற்றிச் செல்ல, லூப்ரிகேடிங் எண்ணெய் உள்படப் பெட்ரோல் செலவு ரூ.1-12-0 ஆகும். 8 மணி நேரம் கொண்ட ஒரு நாளைக்கு ரூ.6-0-0 நடைமுறைச் செலவாகும் என்ற கணக்கில், அதற்கு ரூ.0-12-0ம் காரோட்டி, கிளீனர், மூட்டையை ஏற்றி இறக்குபவர் ஆகியோருக்கு ரூ.0-8-0ம் ஆகும். ஆகையால் மொத்தச் செலவு ரூ.2-12-0 ஆகிறது. அதாவது 16 வங்காள மணங்கு கொண்ட ஒரு வண்டி பாரத்துக்கு ரூ.1-6-0 ஆகிறது. கிராமத்திலிருந்து அரை மைல் தூரத்தில் உள்ள வயலுக்கு, ஒரு மாட்டு வண்டி, ஒரு நாளில் 7 இலிருந்து 8 வண்டி பார உரம் ஏற்றிச் செல்லமுடியும். இதற்கு வண்டிச் செலவு ரூ. 1-6-0 ஆகும். வண்டியில் குப்பையை அள்ளிப் போட்டு, அதைக் கீழே தட்டி விடுபவருக்கு கூலி ரூ. 0-6-0 ஆகும். இதே வேலையை ஒரு மோட்டார் லாரி செய்வதாக இருந்தால், அதற்கு இதைக் காட்டிலும் குறைந்த செலவு ஆகாது. நல்ல தார் அல்லது சிமெண்ட் ரஸ்தாக்களில் ஒரே பயணமாக நீண்ட தூரம் செல்வதற்கு மாட்டு வண்டியைக் காட்டிலும் லாரி அனுகூல மானதாய் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட பயணங்களில் மாட்டு வண்டி மிக மிக மெதுவாகவே செல்லக்கூடியதாகவும், சிக்கனமில்லாததாகவும் தோன்றுகிறது. மேலும், கால்நடை களை, ஒரே சமயத்தில் நீண்ட தூரப் பிரயாணம் செய்வதற்கு உபயோகப்படுத்தக் கூடாது. இதனால் அவைகளுடைய பலமும் சக்தியும் மிகவும் பாதிக்கப்படும். எனினும், ரயில்வே நிலையங்களிலிருந்து உள்பகுதிகளுக்கு நீண்டதூரம் செல்வதில், லாரிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு நாட்டு வண்டிகள் இரவும் பகலுமாகச் செல்வதை நாம் கண்டிருக் கிறோம். இவ்விதப் பிரயாணங்களில் உபயோகப்படுத்தப் படும் மாடுகளின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாய் இருக்கிறது. ஏனெனில், மாட்டு வண்டிக்காரருக்குக் கிடைக்கும் குறைந்த வருமானத்திற்கு ஏற்றபடி அவர் மாடுகளுக்காகச் செலவிடும் தொகை சொற்பமே. ஆகவே ஆட்களோ, சரக்கோ ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வேகமாகச் செல்வது முக்கியம் என்று கருதப்படும்போது, மாட்டு வண்டிகளுக்கு உள்ள ஒரே

பிரதிகூலம் அவை மெதுவாகச் செல்கின்றன என்பதுதான். ஆயினும் கிராமவாசிகளைப் பொறுத்தவரை, ஓய்வான நேரம் எதுவும் அவர்களுக்கு வருமானம் அளிக்கக் கூடியதாய் இல்லை. ஆகையால், மோட்டார்களில் செல்வதனால் நேரம் மீதப்படுகிறதென்பது அவர்களுக்கு முக்கியமானதல்ல. ஆகையால், குறுகிய தூரப்பிரயாணங்களுக்குக் கிராமவாசிகள் கால்நடையாகவே போகவேண்டும். நீண்டதூரப் பிரயாணங்களுக்கு மாட்டு வண்டிகளை உபயோகிக்க வேண்டும். ஒரு விவசாயிக்குச் சொந்த வண்டியிருந்து அவர் அதில் பிரயாணம் செய்வாரானால், ரொக்கமாக அவர் செலவழிக்க வேண்டியது எதுவும் இல்லை. தனது சொந்த வயலில் விளைந்த வைக்கோலையே வண்டியின் இயந்திர சக்திக்காக, அதாவது மாடுகளின் தீனிக்காக உபயோகப் படுத்திக் கொள்ளலாம். உண்மையில் புல்லையும், மாட்டுக்கு வைக்கும் தான்யங்களையும் பெட்ரோலாக விவசாயி கருத வேண்டும். மாட்டு வண்டியைத் தனது மோட்டார் லாரியாகவும், புல்லை வண்டி ஓட்டும் சக்தியாக மாற்றக் கூடிய இயந்திரமாக மாடுகளையும் விவசாயி கருத வேண்டும். இயந்திரத்திற்குப் புல் பயன்படாதென்றால், மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த உரத்தையும் அதனால் நமக்கு அளிக்கமுடியாது. கிராமவாசிகளுக்கு எப்படியும் மாடு தேவையாக இருக்கிறது. எவ்வகையிலும் அவனுக்குப் புல் கிடைக்கிறது. ஆகவே அவனுக்கு ஒரு வண்டியிருந்தால், கிராமத் தச்சனுக்கும், கொல்லனுக்கும் வேலை அளித்தவனாகிறான். அவனிடம் ஒரு பசு இருந்தாலோ, தாவர எண்ணெயைச் சுத்தமான கட்டி வெண்ணெயாகவோ, நெய்யாகவோ மாற்றக்கூடிய இயந்திரம் அவனிடம் இருப்பதாகவே பொருள். அது மட்டுமல்ல, காளைகளை உற்பத்தி செய்து கொடுக்கும் இயந்திரமும் ஆகும் இந்தப் பசு. இவ்வாறு இரண்டு வகைக் காரியங்களை அது ஒரே சமயத்தில் நிறைவேற்றி வைக்கிறது.[3]

கிராமங்களில் இப்போது மோட்டார் லாரி படையெடுத்திருக்கிறது. அது வெற்றி அடையலாம் அல்லது அடையாமற் போகலாம். கெட்டிக்கார ஊழியர்கள் லாரியினால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பகுத்துப் பார்க்க வேண்டும். கிராமவாசிகளுக்குத் திட்டவட்டமான வழிகாட்ட

வேண்டும். இது விவேகமான செயலாகவிருக்கும். ஸ்ரீ. ஈஷ்வர்பாயின் குறிப்பு - அவர் காட்டிய வழியில் - கிராம ஊழியர்கள் எல்லோரும் சிந்திக்குமாறு தூண்டும் என்று நம்புகிறேன்.

வெற்றி யாருக்கு? மோட்டாருக்கா, வண்டிக்கா?

கிராமப் பிரசாரத்துக்கு மோட்டார் வான் சிறந்ததா? அல்லது மாட்டு வண்டி சிறந்ததா? இதன் தார தாம்மியங்களை ''கிராம உத்யோக் பத்திரிகை'' - அதன் ஆகஸ்ட் (1939) இதழில் - பரிசீலனை செய்திருக்கிறது. இதில் முக்கியமான பகுதியை மட்டும் நான் கீழே தருகிறேன்.

மோட்டார் வான் நல்லதா?

''கிராம சேவைக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கச் சில ஜில்லா போர்டுகளும், அவைகளைப் போன்ற ஸ்தாபனங்களும் விரும்புகின்றன. 'கிராமங்களில் பிரசாரம் நடத்துவதற்கு மோட்டார் 'வான்'கள் வாங்குவது நல்லதா?'' என்று இவர்கள் எங்களைக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஸ்தாபனங்கள், தாங்கள் கிராமங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்துள்ளன. கிராமங்களுக்கும், நகரங்களுக்கும், படித்தவர்களுக்கும், படியாதவர்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வைச் சமபடுத்த ஆரம்பித்துள்ளன. இது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒரு அறிகுறியாகும். மோட்டார் வான்கள் மூலம் ஒரே இரவில் பல கிராமங்களுக்குச் செல்லலாம். ஆகையால் மோட்டார் வான்கள் வாங்கி விரைவாகப் பிரசாரம் செய்வது நல்லதா என்பதே இப்போதைய கேள்வி.

பணம் எங்கே செலவாகிறது?

''நாம் பணத்தைச் செலவிடும்போதெல்லாம், அதுவும் குறிப்பாகக் கிராமவாசிகள் நன்மைக்காகப் பணத்தைச் செலவிடும் போதெல்லாம், அந்தப் பணம் கிராமத்துக்கே செல்கிறதா என்பதைக் கவனிப்பது அவசியம். ஜில்லா போர்டுகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பொது மக்களிடமிருந்தே பணம் கிடைக்கிறது. ஆகவே அவைகளின்

கொள்முதல் மக்களிடையே பணப்புழக்கத்தை ஏற்படுத்தும் முறையிலேயே இருக்க வேண்டும். அதற்குப் பதிலாகக் கிராமவாசிகளிட மிருந்து வரியாகப் பெறும் பணம் அந்தப் பகுதிக்கு வெளியே போய்விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். மக்கள் மேலும் வறுமை அடைவதில் தான் அது முடியும். இதனால் ஜில்லா போர்டுகள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவைகளின் பண வருமானம் மேலும் குறையும்.

அபத்தமான செயல்

''ஒரு ஸ்தல ஸ்தாபனமானது கிராம வேலைகளுக்காக ஒரு சில ஆயிரம் ரூபாய்களுக்கு மேல் ஒதுக்குவதில்லை. ஆகவே அது ஒரே ஒரு மோட்டார் 'வான்' வாங்க வேண்டுமென்று முடிவு செய்தால் கூட அதன் கிரயமாகச் சுமார் 5,000 ரூபாய் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறிவிடுகிறது. அதுமட்டுமல்ல, டயர்கள் வாங்கவும், மற்ற சிறு சிறு சாமான்கள் வாங்கவும் அவ்வப்போது பணச்செலவு ஏற்படும். அன்றாடம் பெட்ரோல் செலவு வேறு இருக்கிறது. இவைகள் எல்லாம் இறக்குமதியாகும் பொருட்களே. ஆகையால் பணம் வெளியே போக வேண்டியதிருக்கும். ஆனால் இப்பணத்தை ஸ்தல ஸ்தாபனங்கள் செலவிடும் முக்கிய நோக்கமோ கிராம நலன் ஆகும். விவசாயம், சுகாதாரம், மதுவிலக்கு, குழந்தைகள் நலன் போன்ற விஷயங்களில் அவ்வப்போது பிரசங்கங்கள் கேட்கவும் கிராமபோன் அல்லது வானொலியைக் கேட்கவும் இந்தப் பெரிய செலவைக் கிராமவாசிகள் ஏற்க வேண்டியிருக்கிறது - அதுவும், அவனும் அவனுடைய குடும்பத்தினரும் மாதம் 2 ரூபாயில் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கையில், அதிக ஊதியம் தரக்கூடிய வேலையே கிராமவாசிக்கு முக்கியம் தேவை. இறக்குமதியாகும் சாமான்களை வாங்குவதன் மூலம் நாம் கிராமவாசிக்கு ஏற்கனவே உள்ள வேலையையும் குறைக்கிறோம். அதற்கு ஈடாகப் பிரசங்கங்கள், திரைப்படக் காட்சிகள், டப்பா சங்கீதம் ஆகியவைகளை அளிக்கிறோம். அதுவும் அவன் பணத்தை வாங்கியே அவனுக்கு செய்கிறோம். இதைச் செய்வதில், ஏதோ அவனுடைய நன்மைக்காக நாம் பாடுபட்டு விட்டதாகப்

பெருமைப்பட்டுக் கொள்கிறோம். இதைக் காட்டிலும் அபத்தமான காரியம் இருக்க முடியுமா?

வேகமான வேலையல்ல

"மோட்டார் வானுக்குப் பதிலாக எல்லோரும் வெறுக்கும் அந்த மாட்டு வண்டியை உபயோகப்படுத்துகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்ன நிலைமை ஏற்படும் என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள். அது மோட்டார் வானைப்போல் அவ்வளவு அதிர்ச்சியை ஏற்படுத்தாது; கிராமங்களுக்காக ஏதோ அதிசயமான காரியம் செய்யப்படுவதாக, உலகத்தின் முன்னர் பறைசாற்றாது. ஆனால் வெறும் நடிப்பும் கொட்டுமேளம் அடிப்பதும் மட்டும் நம்முடைய நோக்கமாக இல்லாமல் உண்மையான அமைதியான நிருமாண வேலையை நாம் விரும்புவதானால், மாட்டுவண்டியே அதிக நன்மை அளிக்கும் என்பது எங்கள் கருத்து. மூலை முடுக்கில் உள்ள கிராமங்களுக்கெல்லாம் மோட்டார் லாரி செல்லமுடியாது. ஆனால் மாட்டு வண்டி செல்ல முடியும். ஒரு 'வானு'டைய கிரயத்தில் ஒரு சிறு பகுதியே ஒரு மாட்டு வண்டி வாங்குவதற்கு ஆகிறது. ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கு பல கிராமங்களுக்கு ஒன்று சேர்த்து வேலை செய்வதற்காகப் பல மாட்டு வண்டிகள் வாங்க முடியும். அந்த மாட்டு வண்டிகளில் நாம் போடும் பணம் கிராமச் தச்சன், கொல்லன் வண்டி ஓட்டுபவன் ஆகியவர்களுக்கே போகிறது. அதில் ஒரு தம்பிடி கூட அந்த ஜில்லாவை விட்டு வெளியே செல்ல அவசியம் இல்லை. விஞ்ஞான முறையிலான விட்டங்கள், அச்சுக்கள், நல்ல முறையில் அமைக்கப்பட்ட எஃகு பேரிங்குகள், குடம், ஆரக்கால் முதலியவைகளுடன் வண்டி செய்தால், அது மற்றவர்களெல்லாம் பார்த்துப் பின்பற்றக்கூடிய பொருளாக அமையும். இதற்கு வேண்டிய சாமான்கள் போடுவதற்காகும் செலவு, கிராமச் செல்வத்தை வெளியே கொண்டு போவதற்குப் பதிலாக அங்கே கொண்டு வந்து சேர்க்கும். வேகமாகச் செய்ய வேண்டிய வேலையாக இருந்தால் மோட்டார் அவசியந்தான். ஆனால் கிராம நலத்தைப் பற்றிக் கிராமங்களில் செய்யப்படும் பிரசாரத்துக்கு, இது அவசியம் என்று கூறமுடியாது. அதற்கு மாறாக மெதுவான, நிலையான

முறைகளே அதிகப் பயன் அளிக்கும். ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் பறந்து சென்று கொண்டிருக்காமல், ஒவ்வொரு கிராமத்திலும் சிறிது நேரம் இருந்து செல்வது அனுகூலமாகவும் இருக்கும். இவ்வாறு செல்வதன் மூலந்தான் ஜனங்களுடைய வாழ்க்கையையும் அவர்களுடைய பிரச்னைகளையும் அறிந்து கொள்ள முடியும்; அந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வேலையும் பலனுள்ளதாய் இருக்கும்.

பொருத்தமில்லை

''ஆகையால் கிராம சேவைக்கும் மோட்டார் 'வான்' களுக்கும் பொருத்தம் இல்லையென்றே தோன்றுகிறது. வேண்டியதெல்லாம் நிலையான ஆக்க முயற்சிதான். மின்னல் வேகமோ அல்லது வெத்து வேட்டோ அல்ல. ஆகையால் எங்களுடைய ஆலோசனை இதுதான். கிராமங்களில் உண்மையிலேயே அக்கறையுள்ள ஸ்தல ஸ்தாபனங்களும் பொது ஸ்தாபனங்களும் கிராமத்தில் செய்யப்படும் பொருட்களைக் கொண்டே தங்கள் கிராம சேவையைத் தொடங்க வேண்டும். கிராமங்களில் நிலையான வறுமையை உண்டாக்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளை அறிந்து, அவைகளை ஒவ்வொன்றாக நீக்குவதில் ஒரு மனிதன் கவனம் செலுத்த வேண்டும். கிராம வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலுமே நன்கு சிந்தித்து முடிவு செய்யப்பட்ட தீவிர முயற்சி அவசியம். ஆகையால் திடீரென்று ஒரே நாளில் கிராம முன்னேற்றத்தை ஏற்படுத்த முயலும் வழிகளில் பணத்தை இறைப்பது வீண் விரயமே.''

வேலியே பயிரை...?

மாட்டு வண்டிக்கு ஆதரவாக உள்ள இந்த அம்சங்கள் வெளிப்படையானவை. ஆகையால் கிராம நலனில் அக்கறையுள்ளவர்கள் இவைகளை நன்றாக மனதிற் கொள்வார்கள் என்று நம்புகிறேன். கிராம நலனுக்காக அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் மூலமே கிராமப் பொருளாதாரத்தை அழிப்பது ஒரு கொடுமையான செயலாகும்.

மாடுகள் - போக்குவரத்து சாதனங்கள்

போக்குவரத்துக்கு மாடுகள்

நம்முடைய கிராமங்களிலெல்லாம் மாடுகளே போக்குவரத்துச் சாதனங்களாக இருக்கின்றன. சிம்லாவைப் போன்ற ஒரு நகரில் கூட அவை இந்த ஸ்தானத்தை இழக்கவில்லை. அங்கு ரயிலும் காரும் செல்கின்றன. ஆனால் மலைப்பாங்கான அந்தச் சாலையில் பெரிய பாரத்தை இழுத்துக் கொண்டு மாடுகள் ஏறி இறங்குவதை நான் கண்டேன். நமது வாழ்க்கையின் ஒரு அங்கமாகவும் நாகரிகத்தின் ஒரு பகுதியாகவும் இப்போக்குவரத்துச் சாதனம் விளங்குகிறது என்று கூறலாம். நமது கைத்தொழில் நாகரிகம் நிலைக்க வேண்டுமானால், மாடுகள் இருந்தாக வேண்டும்.

வளர்ப்பில் கவனம்

யாருடைய மாடுகள் நன்றாக இருக்கின்றனவென்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அவர் எவ்வாறு அவைகளை அவ்வளவு நல்ல முறையில் வைத்திருக்கிறார் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும். யாருடைய பசு அதிகமாகப் பால் தருகிறது என்பதை நீங்கள் காணவேண்டும். அவர் எவ்வாறு அவைகளை வளர்க்கிறார், அவைகளுக்குத் தீனி அளிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் கிராமத்தில் உள்ள சிறந்த காளை மாட்டுக்கும், பசுவுக்கும் நீங்கள் ஏதாவது பரிசு வழங்கலாம். முன் மாதிரியான கால் நடைகள் இல்லாமல் முன் மாதிரியான கிராமத்தை நாம் அமைக்க முடியாது.[3]

அத்தியாயம் 22

நாணயம், பரிமாற்றம், வரி

உழைப்புத்தான் பணம்

எனது முறையில் உழைப்புத்தான் செலாவணியாகும் நாணயமே தவிர, உலோகம் அல்ல. யார் தன்னுடைய உழைப்பைப் பயன்படுத்த முடியுமோ அவனிடம் அந்த நாணயம் இருக்கும்; சொத்து இருக்கும்; அவன் தன்னுடைய உழைப்பைத் துணியாக்கிக் கொள்வான்; உழைப்பைத் தான்யமாக்கிக் கொள்வான். அவனுக்கு மெழுகு எண்ணெய் வேண்டியிருக்கிறது; அதை அவன் உற்பத்தி செய்யமுடியாது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்த எண்ணெயை வாங்குவதற்காக, தன்னிடம் உபரியாக உள்ள தான்யத்தைப் பயன்படுத்திக் கொள்வான். சுதந்திரமான, நியாயமான, சமத்துவமான அடிப்படையில் உழைப்பைப் பரிமாறிக் கொள்வதே இது. ஆகையால் இது கொள்ளை அல்ல, இது பண்டமாற்று இருந்த நாகரிகமற்ற காலத்திற்குத் திரும்பிச் செல்வதாகும் என்று கூறி நீங்கள் இதை ஆட்சேபிக்கலாம். ஆனால், சர்வதேச வியாபாரம் எல்லாமே பண்டமாற்றை அடிப்படையாகக் கொண்டது தானே?[1]

அப்போது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும் கிட்டத்தட்ட சுயதேவைப்பூர்த்தி உள்ளதாகவும் இருக்கும். சில அவசியமான பொருட்கள் மற்றக் கிராமங்களில் உற்பத்தியாகாமல் இருக்கலாம். இப்படிப்பட்ட பொருட்களை மட்டும் அந்தக் கிராமங்களுடன் பரிமாற்றம் செய்து கொள்ளலாம்.[2]

நூல் செலாவணி மூலம் கதர்

நகரங்கள், கிராமங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் கதர் பரவவேண்டுமென்றால், நூலுக்காகக் கதரைப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம் என்ற ஏற்பாடு இருக்க வேண்டும். இதுதான் எனது அனுபவம், காலம் செல்லச் செல்ல நூல் செலாவணி மூலம் கதர் கிடைக்க வேண்டும் என்பதை மக்களே வற்புறுத்த ஆரம்பித்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.[3]

உழைப்பும் பணமும்

உண்மையில் உழைப்பு என்பது உலோகத்தால் ஆன நாணயத்தைப் போலவே பணம்தான். ஏதாவது ஒரு ஸ்தாபனத்தில் யாராவது ஒருவர் பணத்தைப் போடுகிறார்கள், என்றால், நீங்கள் உழைப்பைப் போடுகிறீர்கள். பணம் இல்லாமல் எப்படி உங்களுடைய உழைப்பு பயனற்றதாக இருக்குமோ, அதைப் போன்றே உழைப்பு இல்லாவிட்டால் உலகத்தில் உள்ள பணம் உபயோகமற்றதாகவே இருக்கும்.[4]

சுயதேவைப் பூர்த்தி : பொருள்

சுயதேவைப் பூர்த்தி என்பது குறுகிய நோக்கம் அல்ல சுயதேவைப் பூர்த்தி என்றால், ஒரு கிராமம், தனக்கு வேண்டிய எல்லாவற்றையும் பூரணமாகத் தன்னிடமே கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல. நமக்குத் தேவையான பொருட்களையெல்லாம் நாமே உற்பத்தி செய்து கொள்வதென்பது எந்தச் சூழ்நிலையிலுமே முடியாத காரியமாகும். ஆகவே நம்முடைய இலட்சியம் பூரண சுய தேவைப்பூர்த்தி என்றாலுங் கூட, நம்முடைய கிராமத்தில் உற்பத்தி செய்ய முடியாததை வெளியே இருந்து வாங்கிக் கொள்ளவேண்டும். நம்மால் எவ்வளவு உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும். அப்போது தான், நம்மால் உற்பத்தி செய்ய முடியாததை நாம் பெற முடியும்.[5]

நூல் பாங்க்

நாணய சாலையிலிருந்து தங்கமும் வெள்ளியும் நாணயமாக வெளி வருகின்றன. அதைப் போலவே, நூல் பாங்கிலிருந்து கதர் மட்டுமே உருவாகி வர வேண்டும்.[6]

நூற்பு : ஒரு செலாவணிப் பொருள்

நான் பிறந்த பகுதியில் சிப்பிகளும் விதையில்லாத, காய்ந்த வாதுமைக் கொட்டைகளும் நாணயங்களாக பயன்படுத்தப்பட்டன. இதை மக்களும் ஏற்றுக் கொண்டார்கள்; அரசாங்கக் கருவூலங்களும் ஒப்புக் கொண்டன. அவைகளுக்குத் தன் சொந்த மதிப்பு என்பது

இல்லை. மக்களுடைய கொடிய வறுமையின் சின்னங்கள் அவை. மிகக் குறைந்த மதிப்பு உள்ள உலோக நாணயத்தைக் கூட அவர்களால் பயன்படுத்த முடியாத நிலை. ஐந்து சிப்பிகளைக் கொண்டு போனால் ஒரு சிறிது காய்கறியோ அல்லது ஒரு ஊசியோ வாங்கலாம். நான் இப்போது செலாவணிக்கு ஒரு பொருளை யோசனை கூறியிருக்கிறேன். இந்தப் பொருளானது வெறும் அடையாளச் சின்னமாக மட்டும் இராது. அத்துடன் அதற்குத் தன் சொந்த மதிப்பு இருக்கும். அது தான் அதனுடைய கடை மதிப்பாகவும் இருக்கும். இந்த முறையிலே அது ஒரு இலட்சிய அளவையாகவும் இருக்கும். ஒரு பாவு நீளமுள்ள ஒற்றை நூலைக் குறைந்த பட்ச அளவையாக வைத்துக் கொள்ளலாம் என்று தற்போதைக்குச் சோதனை முறையாக ஒரு யோசனை கூறியிருக்கிறேன். குறிப்பாக நூல் நூற்பவர்கள் விஷயத்திலும், பொதுவாகக் கதர் அபிமானிகள் விஷயத்திலும் இதைப் பயன்படுத்தலாம். ஒரு குறிப்பிட்ட அளவு நூலைப் பெற்றுக் கொண்டு, நூற்போர்களுக்கு அவர்களுடைய அன்றாடத் தேவைகளையெல்லாம் விநியோகம் செய்யலாம். அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கத்தின் கூட்டுறவுடனும், முடிவாக, இதற்கு வேண்டிய ஒத்துழைப்பு அளிப்பவர்களுடைய கூட்டுறவுடனும் நடத்தலாம். அகில இந்திய நூல் நூற்போர் சங்கம் இதற்கான கடையை நடத்தி வரலாம். என்னுடைய கருத்தின்படி, இதைப் பரவல் மயமாக்கினால் இம்முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். இது அதனுடைய குறையல்ல. நிறையேயாகும்.[7]

உழைப்பால் வரி

உழைப்பாலேயே வரியைச் செலுத்துவதென்பது ஒரு தேசத்துக்குப் புத்துயிர் அளிக்கிறது. எந்த ஒரு தேசத்தில் மக்கள் தாமாக முன்வந்து சமுதாயத்தின் சேவைக்காகத் தங்களுடைய உழைப்பை அளிக்கிறார்களோ அங்கெல்லாம் பணச் செலாவணியென்பது அவசியமற்றதாகிறது. வரியை வசூலித்து, கணக்கு வைத்துக் கொள்வதற்கான உழைப்பு வேண்டியதில்லை. ஆனால் அதே சமயம் அதற்குச் சமமான நல்ல பலன் கிடைக்கிறது.[8]

அத்தியாயம் 23

கிராமத் துப்புரவு

கிராமங்களில் துப்புரவின்மை

அறிவு வேறு, உழைப்பு வேறாக இப்போது பிரிக்கப் படுகிறது. கிராமங்களைக் கொடுமையாக அலட்சியம் செய்வதில் இது முடிந்திருக்கிறது; நாடு முழுவதிலும் அழகான குக்கிராமங்கள் இருப்பதற்குப் பதிலாக இப்போது குப்பை மேடுகள்தான் காட்சி தருகின்றன. பல கிராமங் களுக்குள் நுழையும் பாதையானது மகிழ்ச்சி தருவதாய் இருப்பதில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒருவர் கண்ணை மூடிக்கொள்ளவோ, மூக்கைப் பிடித்துக் கொள்ளவோ வேண்டியதிருக்கும். சுற்றியிருக்கும். குப்பை கூளமும் நாற்றமும் அப்படியிருக்கின்றன. பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் கிராமங்களிலிருந்து வந்தவர்களாகத் தான் இருக்கவேண்டும். அவ்வாறு அவர்கள் கிராமங்களிலிருந்து வந்தவர்களாய் இருந்தால், அவர்கள் தம்முடைய கிராமங்களை ஒவ்வொரு வகையிலும் சுத்தத்துக்கு முன் மாதிரியாகச் செய்ய வேண்டும். ஆனால், கிராமவாசிகளுடைய அன்றாட வாழ்வில் ஒன்றுபட்டு உழைப்பதை அவர்கள் ஒருபோதும் தங்கள் கடமையாகக் கொண்டதில்லை. தேசிய அல்லது சமூகத் துப்புரவு உணர்ச்சி நம்மிடையே ஒரு சிறப்பாக இல்லை. நாம் குளிப்பதாகக் கூறிக் கொள்ளலாம். ஆனால் குளம் அல்லது கிணறு அல்லது ஆற்றின் பக்கத்தில் மலஜலம் கழித்து அதை அசுத்தப்படுத்த நாம் தயங்குவதில்லை. அது ஒரு பெரிய பாவம் என்று நான் கருதுகிறேன். நம்முடைய கிராமங்களும், புனிதமான நதிகளின் புனிதமான துறைகளும் இப்போது இவ்வளவு அலங்கோலமான நிலையில் இருப்பதற்கு இதுவே காரணம் என்று நான் நம்புகிறேன். துப்புரவின்மையால் ஏற்படக் கூடிய வியாதிகளுக்கும் இதுவே காரணம் என்று எண்ணுகிறேன்.[1]

துப்புரவில் தொண்டர்கள்

கிராமங்களில் குளங்களையும் கிணறுகளையும் சுத்தப்

படுத்த வேண்டும். அவைகளுக்கு அருகில் உள்ள குப்பை கூளங்களை அப்புறப்படுத்திவிட்டு, அவைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுகாதாரம் சம்பந்தமாகக் கிராமங்களில் செய்ய வேண்டிய வேலைகள் இவை. தொண்டர்களே இந்த வேலையைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். சம்பளம் கொடுத்து நியமிக்கப்பட்டுள்ள தோட்டிகளைப் போலத் தினந்தோறும் செய்துவர வேண்டும். இதில் கிராமவாசிகளும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும், முடிவில் அவர்களே இந்த வேலைகளைச் செய்து வரவேண்டும் என்பதையும் எடுத்துக் கூறவேண்டும். இவ்வாறு செய்வதானால், விரைவிலோ அல்லது சிறிது காலங்கழித்தோ கிராமவாசிகள் தங்களுடன் ஒத்துழைப்பதைக் காண்பார்கள்.

குப்பைகளைப் பிரித்தல்

தெருக்களிலும் சந்து பொந்துகளிலும் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டிச் சுத்தப்படுத்த வேண்டும்; இந்தக் குப்பைகளை வகை வகையாகப் பிரிக்க வேண்டும். இவைகளில் உரமாகக் கூடியவை இருக்கின்றன. அப்படியே புதைத்துவிடக் கூடியவை இருக்கின்றன. உடனடியாகச் செல்வமாகக் கூடியவை இருக்கின்றன. குப்பைகளிலிருந்து பொறுக்கப்படும் ஒவ்வொரு எலும்பிலிருந்தும் உபயோகமான பொருட்களை உற்பத்தி செய்யலாம். அல்லது, நல்ல சத்துள்ள உரத்தைத் தயார் செய்யலாம். கந்தைகளையும் கழிவுக் காகிதங்களையும் கொண்டு நல்ல காகிதம் உற்பத்தி செய்யலாம். மலஜலமோ கிராமங்களுக்குத் தங்கமான உரமாகும்.

எல்லாவற்றுக்கும் ஒரே குளம்

குளிப்பது, வேஷ்டி துவைப்பது, குடிக்கவும், சமையல் செய்யவும் வேண்டிய நீர் எடுப்பது போன்ற எல்லாக் காரியங்களுக்குமே கிராமங்களில் ஒரே குளம் உபயோகப் படுத்தப்படுகிறது. அநேக கிராமங்களில் கால்நடைகளும் குளங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன. எருமைகள் அவைகளில் சுகமாகப் புரண்டு கொண்டிருப்பதை நீங்கள் காணலாம். இவ்வளவு பாவமான முறையில் கிராமங்

குளங்களைத் துஷ்பிரயோகம் செய்துங்கூடத் தொற்று நோய்களால் கிராமங்கள் அழியவில்லையே என்பதுதான் ஆச்சரியம். இவ்வாறு, கிராமங்களில் சுத்தமான தண்ணீர் வசதி செய்து கொள்ளாமல் இருப்பது பல நோய்களுக்குக் காரணமாகிறது. ஒருவர் தவறாது எல்லா வைத்திய நிபுணர்களுமே இதைக் கூறியிருக்கிறார்கள்.

செலவில்லாத சேவை

ஆகையால் இது ஒரு மகத்தான, ஆர்வம் ஊட்டக் கூடிய, அறிவூட்டக்கூடிய சேவை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இந்தச் சேவையால், இந்தியாவில் இன்று அவதியுறும் மக்கள் அளவில்லாத அனுகூலம் அடைவார்கள். இந்தப் பிரச்னையை எவ்வாறு தீர்ப்பது என்பதற்கான வழிகளை நான் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். பென்சிலையும், பேனாவையும் போலத் துடைப்பக்கட்டையை யும், மண்வெட்டியையும் கௌரவமானவையாகக் கருதுபவர் களும் அவ்வேலையைப் பழக்கமாகச் செய்யக் கூடியவர்களும் வேண்டும். இப்படிப்பட்ட ஊழியர்கள் மட்டும் கிடைத்தால், செலவே இல்லாமல் இச்சேவையைச் செய்து விடலாம். நமக்குள்ள செலவெல்லாம் துடைப்பக்கட்டை, ஒரு வாளி, மண்வெட்டி, கோடாலி ஆகியவை வாங்குவதற்கான செலவுதான். கிருமிநாசினி மருந்துகளும் தேவையாக இருக்கும். உலர்ந்த சாம்பல்கள் நல்ல கிருமி நாசினிகளே. மருந்துக்கடைக்காரர் விற்கும் கிருமி நாசினிகளைப் போன்ற சத்து உள்ளவைகளே அவைகளும் எனக் கருதுகிறேன். எனினும் மேலே கூறியுள்ள சந்தர்ப்பங்களில் குறைந்த விலையில் உபயோகிக்கக் கூடிய சிறந்த கிருமி நாசினி எதுவென்பதை ரசாயன நிபுணர்களே முடிவு செய்யட்டும்.[2]

அத்தியாயம் 24

கிராமத்தில் உடல்நலம், சுகாதாரம்

நோய்க்குக் காரணம்

நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தில், குடிமக்கள் உடல்நலம், சுகாதாரம் பற்றிய விதிமுறைகளை அறிந்திருப்பார்கள், அனுஷ்டிப்பார்கள். மனிதவர்க்கம் பல நோய்களுக்குச் சந்ததி சந்ததியாக உள்ளாகி வருகிறது. உடல் நலம், சுகாதாரம் சம்பந்தமான விதிமுறைகளை மக்கள் அறியாமல் இருப்பது அல்லது அறிந்திருந்து அலட்சியம் செய்வதுதான் இந்த நோய்களில் பெரும்பாலான வை வருவதற்குக் காரணம். இது எந்தவிதமான ஐயத்திற்கும் இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நம் மக்கள் மத்தியில் மரண விகிதம் மிக அதிகமாக இருக்கிறது. நம் மத்தியில் உள்ள கொடிய வறுமையே இதற்குப் பெரும்பாலும் காரணம். ஆயினும் உடல்நலம், சுகாதாரம் ஆகியவை களைப்பற்றி மக்களுக்குச் சரியான முறையில் போதித்தால், இந்த மரண விகிதத்தை நாம் தணிக்கலாம்.

மனமும் உடலும்

நல்ல உடல் உள்ளவர்களுக்கு மனமும் நல்லதாகவே இருக்கும் என்பது ஒரு பழமொழி. இது மனித வர்க்கத்தின் முதல் நியதியாகும். இது பிறர் விளக்கத்திற்கு அவசியமில்லாது, தானே புலனாகும் சத்தியம். மனதிற்கும் உடலுக்கும் இடையே ஒரு பிரிக்கமுடியாத தொடர்பு இருக்கிறது. நம்முடைய மனம் மட்டும் நன்றாக இருந்தால், நாம் பலாத்காரத்தையெல்லாம் கைவிட்டு விடுவோம். மேலும் இயற்கையாகவே, சுகாதார விதிகளுக்குப் பணிந்து நடந்து கொண்டோமானால், எவ்வித முயற்சியும் இல்லாமலேயே நம்முடைய உடல்கள் நலத்துடன் இருக்கும்.[1]

சுகாதாரம் என்றால் என்ன?

'சுகாதாரம்' என்ற சொல்லின் பொருளை நாம் அறிந்து கொள்வது அவசியம் என்றால், உடல் எளிதாகச் செயல்படுவதே சுகாதாரம் ஆகும். ஒருவனுடைய உடல்

எந்தவிதமான நோயும் அற்று இருந்தால், அவன் சுகாதார மாக இருக்கிறான் என்று பொருள். அவனுடைய அன்றாட வேலைகளை எந்தவிதமான களைப்பும் இன்றி அவன் செய்து கொண்டு போவான். இப்படிப்பட்ட ஒரு மனிதனால் ஒரு நாளைக்குப் பத்து அல்லது பன்னிரெண்டு மைல்கள் எளிதாக நடக்கமுடியும்; சாதாரண உடல் உழைப்பு வேலையை எவ்விதக் களைப்பும் இல்லாமல் செய்யமுடியும்; சாதாரண எளிய உணவை ஜீரணிக்க முடியும்; அவருடைய ஐம்புலன்களும் மனமும் நல்ல நிலையில் இருக்கும்.[2]

அடிப்படை விதிகள்

சுகாதாரம், உடல்நலம் சம்பந்தமான அடிப்படை விதிகள் எளியவை. இலகுவாகக் கற்றுக்கொள்ளக் கூடியவை. அவைகளை அனுஷ்டிப்பதில் தான் கஷ்டம் இருக்கிறது.

சில அடிப்படை விதிகளாவன :

பரிசுத்தமான சிந்தனைகளையே சிந்தியுங்கள். பரிசுத்த மற்ற, காலத்தை வீணாக்கக்கூடிய சிந்தனைகளில் ஈடுபடாதீர்கள்.

பகலிலும், இரவிலும் மிகவும் சுத்தமான காற்றையே சுவாசியுங்கள்.

உடல் உழைப்புக்கும், மன உழைப்புக்கும் ஒரு சம நிலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

நேராக நில்லுங்கள். நேராக உட்காருங்கள். உங்களுடைய ஒவ்வொரு செயலிலும் சுத்தத்தைக் கடைப்பிடியுங்கள். உங்களுடைய ஒவ்வொரு செயலும் உள் ஆன்மாவை வெளிப்படுத்துவதாய் இருக்க வேண்டும்.

சகோதர மனிதர்களுக்குச் சேவை செய்வதற்காக வாழ வேண்டும்; அதற்காகச் சாப்பிட வேண்டும். நீங்கள் இன்பம் துய்ப்பதற்காக வாழாதீர்கள். உங்களுடைய மனதையும் உடலையும் நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு எவ்வளவு போதுமோ அவ்வளவு உணவை மட்டும் உட்கொள்ளுங்கள். மனிதன் என்ன சாப்பிடுகிறானோ அதுவே ஆகிறான்.

நோய்க்கு இயற்கை வைத்தியம்

நீங்கள் சாப்பிடும் தண்ணீரும், உணவும், காற்றும் சுத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் மட்டும் சுத்தமாய் இருப்பதுடன் திருப்தி அடையக் கூடாது. எவ்வாறு இந்த மூன்று அம்சங்களிலும், சுத்தமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்களோ அதே சுத்தம் உங்கள் சுற்றுப்புறங்களிலும் இருக்குமாறு செய்யவேண்டும்.[3]

எளிமையே சாரம்

இயற்கை வைத்தியப் பயிற்சி பெறுவதற்கு உயர்ந்த பட்டப் படிப்பு எதுவும் தேவையில்லை. ஆழ்ந்த புலமையும் தேவையில்லை. எளிமைதான் உலக இயற்கையின் சாரம். கோடிக்கணக்கான மக்களின் நன்மைக்கான எதற்கும் அதிகப் புலமை தேவையில்லை. புலமையை ஒரு சிலர் தான் பெற முடியும். ஆகையால் பணக்காரர்கள் மட்டும் தான் அதன் அனுகூலத்தைப் பெறமுடியும். ஆனால் இந்திய தேசம் என்பது இங்குள்ள ஏழு இலட்சம் கிராமங்களில் தான் இருக்கிறது; இருளடைந்த சிறிய, சரியான போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களில் தான் இருக்கிறது. இந்தக் கிராமங்கள் சிலவற்றில் சில நூற்றுக்கணக்கான மக்கள் தான் வாழ்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் நூறுக்கும் குறைவு. இப்படிப்பட்ட கிராமங்களில் தான் இந்தியாவே இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கிராமத்தில் போய்க் குடியேற நான் விரும்புகிறேன். அதுதான் உண்மை இந்தியா, எனது இந்தியா, நான் எந்த இந்தியாவிற்காக வாழ்கிறேனோ அந்த இந்தியா. இந்த அடக்கமான மனிதர்கள் மத்தியில் மிக உயர்ந்த பட்டம் பெற்ற டாக்டர்கள், அவர்களுக்கு வேண்டிய மருத்துவ சாதனங்கள் ஆகியவைகளைக் கொண்டு செல்லமுடியாது. அவர்களுடைய ஒரே நம்பிக்கை எளிய, இயற்கையான மருந்துகளிலும் இராம நாமத்திலும் தான் இருக்கிறது.[4]

நூற்றுக்கு நூறு சுத்தம்

தனிப்பட்டவர்களும் குடும்பங்களும் பொது இடங்களும் துப்புரவு விதிகளைக் கண்டிப்பாக அனுஷ்டித்

தால் உணவு உடற்பயிற்சி ஆகியவற்றில் போதிய கவனம் எடுத்துக் கொண்டால் நோய்க்கு இடமே இருக்காது. உள்ளேயும் வெளியேயும் பூரண பரிசுத்தம் இருக்கும்போது, நோயே வரமுடியாது. கிராம மக்கள் மட்டும் இதைப் புரிந்து கொள்வார்களானால், அவர்களுக்கு டாக்டர்களோ, ஹக்கீம்களோ, வைத்தியர்களோ தேவைப்படமாட்டார்கள்.

ஆண்டவன் திருநாமம்

இயற்கை வைத்தியம் என்பது ஒரு இலட்சிய வாழ்க்கை வழியாகும். அதாவது, நகரங்களிலும் இலட்சிய வாழ்க்கைக் கான சூழ்நிலைகள் இருக்க வேண்டும். ஆண்டவன் திருநாமம் தான் இதற்கு அச்சு என்பதில் ஐயமில்லை. இயற்கை வைத்தியம் என்னும் சக்கரம் இந்த அச்சைச் சுற்றித்தான் ஓடுகிறது.[5]

இயற்கை வைத்தியம் : பொருள்

இயற்கை வைத்தியம் என்றால் அதில் அளிக்கும் சிகிச்சை மிக மலிவானதாகவும் எளியதாகவும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சிகிச்சை கிராமங்களுக்குக் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்பதே இலட்சியம். இதற்கு வேண்டிய பணத்தையும் சாதனங்களையும் கிராம மக்களால் அளிக்க முடிய வேண்டும். கிராமங்களில் எது கிடைக்கவில்லையோ அதை வெளியிலிருந்து வாங்கிக் கொண்டு வரவேண்டும். இயற்கை வைத்தியம் என்பதன் பொருள் தான் என்ன? ஒருவன் தனது வாழ்க்கைக் கண்ணோட்டத்திலேயே சிறப்பான மாற்றங்காண வேண்டும் என்பதே. அதாவது,. சுகாதார விதிகளுக்கு ஏற்ப ஒருவன் தனது வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது அதன் பொருளாகும். ஆஸ்பத்திரியி லிருந்து இலவசமாக மருந்து வாங்குவதா அல்லது பணங் கொடுத்து மருந்து வாங்குவதா என்பதல்ல பிரச்னை. ஆஸ்பத்திரியிலிருந்து இலவச சிகிச்சை பெறுபவன் பிச்சை வாங்குகிறான். இயற்கை வைத்தியத்தை ஏற்கும் ஒருவன், ஒருபோதும் பிச்சையெடுக்க மாட்டான். தனக்குத்தானே உதவி செய்து கொள்வதானது சுய மரியாதையை உயர்த்துகிறது. உடலிலுள்ள விஷச்சத்துக்களை அகற்றி

நோயைக் குணப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவன் மேற்கொள்வான். மீண்டும் நோய்க்கு ஆளாகாதிருக்கத் தகுந்த முன்னெச்சரிக்கைகளை எடுத்துக் கொள்வான்.

உணவு முக்கிய அம்சம்

நல்ல உணவும், எல்லா உணவுச் சத்துக்களும் சம நிலையில் கலந்த உணவு அவசியமாகும். இன்று, நாம் எப்படியிருக்கிறோமோ அதைப்போலவே நம்முடைய கிராமங்களும் திவாலாக இருக்கின்றன. கிராமங்களில் போதுமான அளவு காய்கறிகளையும், பழங்களையும், பாலையும் உற்பத்தி செய்ய வேண்டும். இயற்கை வைத்தியத் திட்டத்தில் இது ஒரு முக்கியமான அம்சமாகும். இதற்காகச் செலவழிக்கப்படும் காலத்தை வீணாக்கப்பட்டதாகக் கருதக்கூடாது. இது கிராமவாசிகள் எல்லோருக்கும் இலாபகர மானதாக இருக்கும்; இறுதியில் இந்தியா முழுவதற்குமே இலாபகரமானதாய் இருக்கும்.[6]

கிடைப்பதைக் கொண்டு

கிராமத்தில் எது கிடைக்குமோ அதைக்கொண்டு கிராமவாசிகளுக்கு உதவி அளிக்கவேண்டும். நான் நினைக்கும் இயற்கை வைத்தியம் - கிராமவாசிகளுக்கான இயற்கை வைத்தியம் - இது தான். உதாரணமாக, அவர்களுக்கு மின்சாரமோ அல்லது பனிக்கட்டியோ வேண்டுமென்று நான் நினைக்கமாட்டேன். என்னைப் போன்று கிராமீய மனோபாவம் படைத்தவர்கள்தான் இந்த வேலையை மேற்கொள்ள முடியும்.[7]

"ராஜ வைத்தியம்"

என்னுடைய இயற்கை வைத்தியம், பிரதானமாகக் கிராமவாசிகளையும் கிராமங்களையும் தான் நோக்கமாகக் கொண்டது. ஆகையால் அதில் பூதக்கண்ணாடி, எக்ஸ்ரே மற்றும் அதைப் போன்ற பொருட்கள் ஆகியவைகளுக்கு இடமே இல்லை. மேலும் கொய்னா, எமெடின், பெனிசிலின் போன்ற மருந்துகளுக்கும் அங்கு இடமில்லை. தனிப்பட்டவர் கள் சுகாதாரமும், அவர்கள் உடல்நலத்துடன் வாழ்வதும் தான் முக்கிய அம்சங்கள். இதுவே போதுமானது. இக்கலை

யில் எல்லோரும் பூரணத்துவம் அடைய முடியுமானால், வியாதியே வராது. நோயைப் போக்குவதற்கு இயற்கையின் விதிமுறைகளை அனுஷ்டித்த பின்பும் நோய் வருமானால், ராஜவைத்தியம் ஒன்று எப்போதும் இருக்கவே இருக்கிறது. அதுதான் இராம நாமம். ஆனால் இராம நாமம் என்னும் இந்தச் சிகிச்சை ஒரே நிமிஷத்தில் உலக முழுவதும் ஏற்றுக் கொள்ளும் மருந்தாகி விட முடியாது. இராம நாமத்தின் சக்தியை நிரூபணம் செய்யக்கூடிய பிரத்தியட்ச உதாரணமாக வைத்தியர் இருக்கவேண்டும். அப்போது தான் நோயாளிக்கு இதில் நம்பிக்கை ஏற்படும். இதற்கிடையே பஞ்ச பூதங்களில் கிடைக்கும் பொருட்களையெல்லாம் இயன்ற அளவு பயன்படுத்த வேண்டும். மண், நீர், வெளி, நெருப்பு, காற்று என்பவை தான் பஞ்சபூதங்கள் என்பவை. இயற்கை வைத்தியத்தின் வரம்பே இதுதான் என்பது எனது கருத்து. உருளி காஞ்சன் என்னும் கிராமத்தில் நான் நடத்திய சோதனை இதுதான். அதாவது சுகாதாரத்துடனும், உடல் நலத்துடனும் வாழ்வதெப்படி என்பதைக் கிராமவாசிகளுக்குக் கற்றுக் கொடுப்பது; பஞ்சபூதங்களைப் பயன்படுத்தி, வியாதிகளைக் குணப்படுத்துவது. அவசியமானால் ஆங்காங்கு விளைந்து கிடைக்கக் கூடிய மூலிகைகளை உபயோகிக்க வேண்டும். எல்லா உணவுச் சத்துக்களும் சமநிலையாக அமைந்த உணவானது இயற்கை வைத்தியத்தில் இன்றியமையாத அம்சம் என்பதில் ஐயமில்லை.[8]

பஞ்ச பூதங்கள்

உடல் எந்தப் பஞ்ச பூதங்களால் ஆகியிருக்கிறதோ அதே பஞ்ச பூதங்களால், நோயைக் குணப்படுத்த வேண்டும். இயற்கை வைத்திய விஞ்ஞானம் இந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.[9]

மண்

ஜஸ்ட் என்னும் வைத்திய நிபுணர், மண்ணின் உபயோகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். இதைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்று நான் எண்ணினேன்.

மலச்சிக்கல் ஏற்பட்டால் அடிவயிற்றில் பச்சை மண்ணைப் பொடி செய்து பற்றுப் போடலாம் என்று அவர் கூறுகிறார். சுத்தமான காய்ந்த, மண்ணைத் தண்ணீர் ஊற்றிப் பிசைந்து அதை ஒரு மெல்லிய துணியில் வைத்து இரவு முழுவதும் அடி வயிற்றில் கட்டி வைத்திருந்தேன். நல்ல திருப்திகரமான பலன் கிடைத்தது.[10]

இந்த மண் பற்று - 3 அங்குல அகலத்திலும் 6 அங்குல நீளத்திலும் ½ அங்குல கனத்திலும் இருக்க வேண்டும்.[11]

தலைவலிக்கு

தலையில் மண்பற்று வைத்துக் கட்டினால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அது தலைவலியைப் போக்குகிறது. இதை நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் நான் சோதித்துப் பார்த்திருக்கிறேன். பல்வேறுவித காரணங்களால் தலைவலி வந்திருக்கலாம். ஆனால் காரணம் என்னவாக இருந்தாலும் சரி, மண்பற்றுப் போடுவதானது, தற்காலிகமாகத் தலைவலியைப் போக்குகிறது.

கொப்புளங்கள்

மண்பற்று சாதாரண கொப்புளங்களைக் குணப்படுத்தவும் உதவும். பெரிய கட்டிகளைக் குணப்படுத்தவும் மண்ணை நான் பயன்படுத்தியிருக்கிறேன். இதற்கு நான், பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்தில் முதலில் அமுக்கி வைக்கப்பட்ட ஒரு சுத்தமான துணியில் மண்ணைக் கட்டி வைக்கிறேன். கட்டியைப் பெர்மாங்கனேட் மருந்தை வைத்துக் கழுவுகிறேன். அதன்பின் மேற்கண்ட மண்பற்றைக் கட்டியில் வைத்துக் கட்டுகிறேன். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இந்தச் சிகிச்சை பூரண குணமளிக்கிறது. என்னைப் பொறுத்தவரை, இந்தச் சிகிச்சை ஒரு போதும் தோல்வியுற்றதில்லை. குளவி கொட்டிய வலியை மண்பற்று உடனே குணப்படுத்துகிறது. பல சந்தர்ப்பங்களில் தேள் கொட்டியதற்கும் நான் இதைப் பயன்படுத்தியிருக்கிறேன். ஆனால் அதில் மண்பற்று அவ்வளவு நல்ல பலனைக் கொடுக்கவில்லை.[12]

கடுமையான காய்ச்சல்

காய்ச்சல் கடுமையாக இருக்கும்போது, தலையிலும் அடிவயிற்றிலும் மண்பற்றுப் போடுவது மிகவும் உபயோகமாய் இருக்கும். எல்லாச் சமயங்களிலுமே இது காய்ச்சலைக் குறைத்து விடுவதில்லையென்றாலும், அது நோயாளிக்கு ஒரு இதமான உணர்ச்சியைக் கொடுக்கத்தான் செய்கிறது. குணமாகியிருப்பது போல் நோயாளி உணருகிறான். ஆகையால் நோயாளிகளே மண்பற்றுப் போட வேண்டுமென்று கேட்கிறார்கள்.

டைபாய்டு

டைபாய்டு காய்ச்சல் விஷயத்தில் பலமுறை நான் இதைப் பயன்படுத்தியிருக்கிறேன். காய்ச்சல் எப்படியும் அதன் போக்குப்படிதான் இறங்குகிறது. ஆயினும் நோயாளிக்கு இருக்கும் அமைதியற்ற நிலையை மண்பற்று போக்குகிறது, கஷ்டத்தைக் குறைக்கிறது.[13]

ஆண்டிபிளாஜிஸ்டன்

சேவா கிராமத்தில், ஆண்டிபிளாஜிஸ்டின் (ஒரு வகைப் பிளாஸ்திரி பற்று) போடுவதற்குப் பதிலாக, சூடாக்கப்பட்ட மண் பற்றுக்களை நாங்கள் தாராளமாகப் பயன்படுத்து கிறோம். மண்ணுடன் சிறிது எண்ணெயும் உப்பும் சேர்த்தபின் கிருமிகளைப் பூரணமாக அகற்றுவதற்காக அது போதுமான அளவு சூடாக்கப்படுகிறது.[14]

எப்படி பயன்படுத்துவது?

மென்மையான வண்டல் களிமண்ணை - மணல் இல்லாத, பிசுபிசுவென்று இல்லாத களிமண்ணை - பத்திரமாக உபயோகப்படுத்தலாம். உரம் போட்ட வயலிலிருந்து யாரும் மண்ணை எடுத்துப் பயன்படுத்தக் கூடாது. மண்ணைக் காயவைத்து, தூள் செய்து, நல்ல சல்லடையால் சலிக்க வேண்டும். அதனுடைய சுத்தத்தைப் பற்றி ஏதாவது ஐயப்பாடு இருந்தால், அதை நன்கு சூடாக்கி அதில் கிருமியோ புழுவோ இல்லாமற் செய்துவிட வேண்டும்.[15]

உட்கொள்ளலாமா?

மலச்சிக்கலைப் போக்குவதற்குச் சுத்தமான மண்ணை உட்கொள்ளலாம் என்று ஜஸ்ட் எழுதுகிறார். மிகவும் அதிகப்படியாகப் போனால் ஐந்திலிருந்து பத்து கிராம் மண்ணைச் சாப்பிடலாம். இது பற்றிய விளக்கமாவது : மண்ணானது ஜீரணிக்கப்படுவதில்லை. இது ஒரு மலமிளக்கி யாகப் பயன்படுகிறது. இது வெளியே வந்தாக வேண்டும். ஆகவே இது மலத்தையும் சேர்த்து வெளியே தள்ளுகிறது. இதை நான் என் விஷயத்தில் பயன்படுத்திப் பார்த்ததில்லை. ஆகையால், இதைச் சோதனை செய்து பார்க்க விரும்புபவர்கள், தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே அவ்வாறு செய்து பார்க்க வேண்டும். ஓரிருமுறை சோதனை செய்து பார்ப்பதானது யாருக்கும் தீங்கு விளைவித்து விடாது என்று கருதுகிறேன்.[16]

தண்ணீர்

எவ்வாறு இடுப்பு ஸ்நானம் செய்வது?

நீர்ச்சிகிச்சை முறைக்குக் கூனே செய்துள்ள தொண்டில் மிகவும் முக்கியமானது நின்றும் உட்கார்ந்தும் குளிக்க அவர் வகுத்துக் கொடுத்த இடுப்பு ஸ்நான முறையாகும். இவ்வாறு குளிப்பதற்கு விசேஷத் தொட்டி ஒன்றை அவர் அமைத்திருக்கிறார். ஆயினும் அந்தத் தொட்டியில்லாமலே இதைச் செய்யலாம். நோயாளியின் உயரத்திற்கு ஏற்றபடி முப்பதிலிருந்து முப்பத்தாறு அங்குல நீளமுள்ள எந்தத் தொட்டியும் பொதுவாக அக்காரியத்துக்கு உபயோகமாகும். அனுபவத்தில் ஒருவருக்குச் சரியான அளவு தொட்டி எதுவென்பது தெரிந்துவிடும். தொட்டியில் புதிதாக எடுக்கப்பட்ட தண்ணரை நிரப்ப வேண்டும். பிணியாளர் உட்காரும் போது தண்ணீர் கீழே வழிந்தோடாத அளவு நிரப்பப்பட வேண்டும். கோடைக் காலத்தில், தண்ணீர் போதுமான அளவு குளிர்ச்சியாக இல்லாவிட்டால், நோயாளிக்கு ஒரு இதமான உணர்ச்சியை அளிப்பதற்காக, தண்ணீரில் ஐஸ் போட்டுக் கொள்ளலாம். பொதுவாக, முந்தின இரவு எடுத்து மண்பானையில் ஊற்றி வைக்கப்பட்ட தண்ணீர் இதற்குப் போதுமானதாய் இருக்கும். தண்ணீரின்

மேல் தளத்தில் ஒரு துணியைப் போட்டு அதை விசிறியால் வேகமாக வீசுவதனாலும் அதைக் குளிர வைக்க முடியும். குளிக்கும் அறைச்சுவர் ஓரத்தில் தொட்டியை வைக்க வேண்டும். முதுகுப்புறம் சாய்ந்து கொள்வதற்காகத் தொட்டியில் ஒரு பலகை வைக்க வேண்டும். நோயாளி, தொட்டிக்குள் உட்கார்ந்து, தனது கால்களை வெளியே நீட்டிக் கொள்ள வேண்டும். தண்ணீருக்கு வெளியே உள்ள அங்கங்களை நன்றாகப் போர்த்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் குளிரால் நடுங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. தொட்டிக்குள் வசதியாக நோயாளி உட்கார்ந்து கொண்ட பின், ஒரு மென்மையான துண்டைக் கொண்டு அவருடைய அடிவயிற்றைத் தேய்த்து விட வேண்டும். இவ்வாறு ஐந்து முதல் முப்பது நிமிஷம் வரை குளிக்கலாம். இது முடிந்த பின்பு, உடம்பை நன்றாகத் துடைத்துவிட்டு நோயாளியைப் படுக்க வைத்துவிட வேண்டும்.

கெடுதலும் இல்லை

இடுப்பு ஸ்நானமானது, நல்ல காய்ச்சலைக் கூடக் குறைத்து விடுகிறது. மேலேயுள்ளவாறு ஸ்நானம் செய்தால், எந்தவிதமான கெடுதலும் இல்லை. அதற்குப் பதிலாக அதனால் பெரும் நன்மையும் ஏற்படலாம். அது மலச்சிக்கலைப் போக்கி, ஜீரணிக்கும் சக்தியை வளர்க்கிறது. இவ்வாறு ஸ்நானம் செய்தபின், நோயாளிக்கு நல்ல புத்துணர்ச்சியும் சுறுசுறுப்பும் ஏற்படுகின்றன. மலச்சிக்கல் உள்ளவர்கள், இந்த ஸ்நானம் செய்த உடனே ஒரு அரை மணி நேரம் சுறுசுறுப்பாக நடந்து உலாவிவிட்டு வரவேண்டும் என்று கூனே ஆலோசனை கூறுகிறார். நன்றாக முழு வயிற்றுக்குச் சாப்பிட்ட பின்பு, ஒரு போதும் இந்த ஸ்நானம் செய்விக்கக் கூடாது.

நல்ல வெற்றி தரும்

இடுப்பு ஸ்நானம் செய்வதை நான் எத்தனையோ பேருக்குச் சோதித்துப் பார்த்திருக்கிறேன். நூற்றுக்கு எழுபத்தி ஐந்து சந்தர்ப்பங்களுக்கு மேல் அது வெற்றியளித்திருக்கிறது. நோயாளிக்குப் பிரக்ஞையில்லாத அளவு அளவுக்கு மீறிக் கடுமையாகக் காய்ச்சல் இருக்கும்

போதுகூட, அவரைத் தொட்டியில் அமரவைக்கக் கூடிய அளவு மட்டும் அவருடைய நிலைமை இருந்தால், உடனடியாக வெப்பம் இரண்டு அல்லது மூன்று டிகிரி குறைகிறது. ஜன்னி கண்டு புலம்புவதும் நிற்கிறது.[17]

அமர்ந்த ஸ்நானம்

இப்போது அமர்ந்த ஸ்நானம் அல்லது தேய்ப்பு ஸ்நானத்தை எடுத்துக் கொள்வோம். உடலில் மிக அதிகமான உணர்ச்சி உள்ள பகுதிகளில் ஜனனேந்திரிய உறுப்பும் ஒன்றாகும். ஆண்குறியின் நுனிப்பகுதி அல்லது அதைச் சுற்றியுள்ள தோலில் உள்ள உணர்ச்சியில் ஏதோ ஒருவகையான மாயம் இருக்கிறது. அதை எப்படி விவரிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. இந்த ஞானத்தை மருத்துவக் கலைக்குக் கூனே பயன்படுத்தியிருக்கிறார். ஜனனேந்திரிய உறுப்பின் மேல்புற நுனியில் ஒரு மென்மையான ஈரத்துணியால் தேய்த்துக் கொடுக்க வேண்டும். அப்போது மேலே குளிர்ந்த தண்ணீரை ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஆண்கள் உறுப்பைப் பொருத்தவரை, ஆண் குறியின் நுனிப்பகுதியைத் தோலால் மூடிவைத்து அதைத் தேய்த்துக் கொடுக்க வேண்டும். கூனே கூறியுள்ள முறை இதுதான். குளிர்ந்த தண்ணீர் இருக்கும் ஒரு தொட்டியில், ஒரு ஸ்டூலை வைக்க வேண்டும். தொட்டியில் எந்த மட்டத்தில் தண்ணீர் இருக்கிறதோ அந்த உயரத்தில் ஸ்டூலின் மேற்பாகம் (அமரும் இடம்) இருக்க வேண்டும். நோயாளி ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டு கால்களை வெளியே நீட்டிக் கொள்ள வேண்டும். அப்போது, நோயாளியின் ஆண் (அல்லது பெண்) குறி தண்ணீரைத் தொட்டும் தொடாமலும் இருக்கும். ஆண் (அல்லது பெண்) குறியை மெதுவாகத் தேய்த்துக் கொடுக்க வேண்டும். ஒருபோதும், வலியெடுக்கும் அளவுக்குத் தேய்த்துவிடக் கூடாது. அதற்கு மாறாக, இது நோயாளிக்கு இன்பகரமானதாய் இருக்க வேண்டும். இவ்வாறு ஸ்நானம் செய்தபின் நோயாளிக்கு ஓய்வும், மன அமைதியும் பெற்றது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட வேண்டும். என்ன நோயாக இருந்தாலும் சரி, அமர்ந்த

ஸ்நானத்தின் மூலம் தற்காலிகமாகவாவது அபிவிருத்தி ஏற்பட்டது போன்ற ஒரு உணர்ச்சியை நோயாளி அடைகிறார். அமர்ந்த ஸ்நானங்கள், இடுப்பு ஸ்நானங்களை விட உயர்ந்தவையென்று கூனே கருதுகிறார். எனக்கு அமர்ந்த ஸ்நானங்களைக் காட்டிலும் இடுப்பு ஸ்நானங்களைப் பற்றிய அனுபவம்தான் மிக அதிகம். அது பெரும்பாலும் என் குற்றந்தான் என்று எண்ணுகிறேன். நான் சிரத்தையில்லாமல் இருந்து விட்டேன். அமர்ந்த ஸ்நானங்கள் எடுக்குமாறு நான் சிலருக்கு ஆலோசனை கூறினேன். ஆனால் அவர்கள் பொறுமையுடன் இந்தச் சோதனையைச் செய்து பார்க்கவில்லை. ஆகையால் இந்த ஸ்நானங்களைப் பற்றி எனது சொந்த அனுபவத்தைக் கொண்டு - நான் எந்தவிதமான கருத்தும் கூற முடியாது. இது ஒவ்வொருவரும் சோதித்துப் பார்க்கத் தகுந்ததே. ஒரு தொட்டி கிடைப்பது கஷ்டமாக இருந்தால், ஒரு கூஜா அல்லது டம்ளரிலிருந்து தண்ணீரை ஊற்றித் தேய்ப்பு ஸ்நானம் செய்து கொள்ளலாம். இதனால் நோயாளிக்கு ஓய்வு பெற்றது போன்ற உணர்ச்சியும் மன அமைதியும் ஏற்படுகிறது. பொதுவாக, ஜனனேந்திரியத்தைச் சுத்தப்படுத்துவதில் மக்கள் அக்கறை செலுத்துவதில்லை. தேய்ப்பு ஸ்நானமானது இதை எளிதாகச் செய்ய உதவுகிறது. ஒருவர் மிகவும் எச்சரிக்கையாக இருந்தாலொழிய, ஆண் குறிக்கும் மேல் தோலுக்கும் இடையே அழுக்குச் சேர்ந்துவிடுகிறது. இதை அகற்ற வேண்டும். ஆண் (அல்லது பெண்) குறியைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும் மேற்கண்ட சிகிச்சையைப் பொறுமையாக மேற்கொள்வதும் பிரம்மச்சர்யத்தை அனுஷ்டிப்பதை எளிதாக்கும். இதனால் நுனியிலுள்ள நரம்புகளில் ஏற்படும் கூச்ச உணர்ச்சி குறையும். விரும்பத்தகாத இந்திரிய ஸ்கலிதங்களும் அநேகமாக ஏற்படமாட்டா. இந்திரிய ஸ்கலிதங்கள் ஏற்பட அனுமதிப்பது விரும்பத்தக்கதேயல்ல என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சுத்தமாயிருப்பதைப் பற்றி நாம் அதிகம் வலியுறுத்துவதற்கு ஏற்ப, இந்திரிய ஸ்கலிதத்தின் மீதும் வெறுப்பு ஏற்படும். அப்படி ஏற்படத்தான் வேண்டும். அவைகளைத் தவிர்ப்பதற்கு ஒருவர் அதிகமாக முன்னெச்சரிக்கை எடுத்துக் கொள்ளுமாறும் செய்யும்.[18]

அம்மை நோய்

உடம்பு எரிச்சல், நமைச்சல், வெடிப்புப் புண்கள், சின்னம்மை, வைசூரி முதலியவைகளைக் குணப்படுத்து வதற்கும் ஈரத்துணியால் சுற்றிவைப்பது நல்ல பலன் அளிக்கும். இந்த நோய்களின் விஷயத்தில் இம்முறையை நான் விரிவான அளவில் சோதித்துப் பார்த்திருக்கிறேன். வைசூரி, சின்னம்மை ஆகியவைகளைப் பொறுத்தவரை, தண்ணீர் இளஞ்சிவப்பு நிறம் அடையக்கூடியவாறு அதில் போதுமான பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்திருக்கி றேன். நோயாளியைச் சுற்றி வைத்த துணியைப் பின்னால் கொதிக்கிற நீரில் போட்டு அதில் உள்ள கிருமிகளைச் கொல்லவேண்டும். நீர் போதுமான அளவு குளிராகும் வரை துணியை அதிலேயே போட்டு வைத்திருக்க வேண்டும். அதன்பின் துணியை எடுத்துச் சோப்புப் போட்டுத் துவைத்து விட வேண்டும்.

கால் உளைச்சல்

இரத்த ஓட்டம் குறைந்து கால்தசை வேதனை தருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். காலில் ஒருவிதமான வலி உண்டாகும்; உளைச்சல் இருக்கும். அப்போது ஐஸ் வைத்துப் பிடித்துவிடுவது எவ்வளவோ நன்மை தரும். கோடைகாலத்தில் இந்தச் சிகிச்சை அதிகப் பலன் தரும். குளிர்காலத்திலோ ஒரு நோயாளியை ஐஸ் வைத்துப் பிடித்து விடுவது அபாயத்தில் முடிந்தாலும் முடியலாம்.

வெந்நீரின் பலன்கள்

இப்போது வெந்நீர்ச் சிகிச்சையால் கிடைக்கக்கூடிய பலன்களைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறுவோம். வெந்நீரைப் புத்திசாலித்தனமான முறையில் பயன்படுத்து வதானது, பலவழிகளில் குணம் தருகிறது. எல்லாவிதமான காயங்களுக்கும் மற்றும் அது போன்றவைகளுக்கும் ஐயோடின் என்ற மருந்து போடப்படுவது எல்லோரும் அறிந்ததே. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பெரும்பாலான வற்றில் வெந்நீரைப் பயன்படுத்துவதும் அதே அளவு பலன்

தரும். ஊமைக் காயங்களுக்கும், வீக்கங்களுக்கும் டிங்சர் (ஐயோடின்) போடலாம். இவைகளுக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுப்பது இதே அளவு பலன்தரும். சொல்லப் போனால் இதைக் காட்டிலும் அதிகப் பலன்தரும். மேலும் காதுவலிக்கு ஐயோடின் துளிகளைப் பயன்படுத்துகிறார்கள். இவ்வித காதுவலிகளுக்குப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இளஞ்சூடான வெந்நீர் ஊற்றிக் கழுவி விடுவது வலியைப் போக்கிவிடலாம். ஐயோடின் உபயோகத்தில் சில அபாயங்கள் இருக்கின்றன. நோயாளிக்கு இந்த மருந்து ஒத்துக் கொள்ளாமல் போகலாம். வேறு ஏதாவது மருந்து என்று எண்ணி ஐயோடினை எடுத்துச் சாப்பிட்டு விட்டால், பெரும் அபாயமாக முடிந்துவிடும். ஆனால் வெந்நீரைப் பயன்படுத்துவதில் எந்தவிதமான அபாயமும் இல்லை. டிங்சர் ஐயோடினைப் போலவே கொதிக்கும் நீரும் ஒரு நல்ல கிருமி நாசினியாகும். இதனால் ஐயோடின் உபயோகத்தை நான் குறைத்துப் பேசுகிறேன் என்பதல்ல. அல்லது எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே ஐயோடினுக்குப் பதிலாக வெந்நீரைப் பயன்படுத்தி விடலாம் என்றும் நான் கூறவரவில்லை. மிகவும் உபயோகமானதும் அவசியமானதும் ஆன ஒரு சில மருந்துகள் என்று கருதுவனவற்றில் ஐயோடினும் ஒன்றாகும். ஆனால் அது பணச் செலவுள்ள ஒரு பொருள். ஏழைகளுக்கு அது கட்டுபடியாகாது. எல்லோரும் அதைப் பத்திரமான முறையில் உபயோகப்படுத்தி விடவும் முடியாது. ஆனால் தண்ணீர் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அது மிக எளிதாகக் கிடைப்பதால், அதற்குள்ள மருந்துச் சக்தியை நாம் அலட்சியம் செய்யக்கூடாது. சாதாரண வீட்டு மருந்துகளைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதானது பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வரப்பிரசாதமாகப் பயன்படுகிறது.[19]

நீராவி ஒரு மருந்து

நீராவி ஒரு சக்தி வாய்ந்த மருந்துச் சாதனமாகும். நோயாளிக்கு வியர்க்குமாறு செய்ய இதைப் பயன்படுத்தலாம். முடக்குவாதத்துக்கும் மற்ற முடக்கு வலிகளுக்கும் நீராவி ஸ்நானம் மிகவும் உபயோகமானதாய் இருக்கும். நீராவி ஸ்நானம் செய்வதற்கு மிகவும் எளிதானதும் அதே சமயம்

மிகப் பழமையானதுமான முறையாவது : நெருக்கமில்லாது, அதே சமயம் இறுக்கமாகப் பின்னப்பட்ட ஒரு கட்டிலின் மீது ஒன்று அல்லது இரண்டு போர்வைகளை விரியுங்கள். அதற்கு அடியில் கொதிக்கும் நீர் உள்ள ஒன்று அல்லது இரண்டு பாத்திரங்களை மூடி வையுங்கள். நோயாளியைக் கட்டிலில் நீட்டிப் படுக்க வையுங்கள். அவர் மீது போர்வையை வைத்துப் போர்த்துங்கள். இந்தப் போர்வையானது கட்டிலைச் சுற்றி விழுந்து நீராவி வெளியே போகாமலும் வெளியே உள்ள காற்று உள்ளே வர இயலாமலும் தடுக்க வேண்டும். இவ்வாறு எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தபின், கொதிநீர் உள்ள பாத்திரங்களின் மேல் மூடி அகற்றப் படுகிறது. நீராவியானது, போர்வைகளுக்கு அடியில் உள்ள நோயாளியிடம் வேகமாகச் சென்றுவிடுகிறது. அடியில் உள்ள கொதி நீரை ஒன்று அல்லது இரண்டு முறை மாற்ற வேண்டிய அவசியம் இருக்கலாம். வழக்கமாக இந்தியாவில் தண்ணீர் கொதித்துக் கொண்டேயிருக்குமாறு செய்வதற்காக, ஒரு கரி அடுப்பு வைப்பது வழக்கம். இதனால் இடைவிடாது நீராவி வந்து கொண்டிருக்கும். என்றாலும், இதில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. ஒரே ஒரு நெருப்புப் பொறி பறந்து வந்தாலும் அது போர்வையிலோ அல்லது கட்டிலிலோ நெருப்புப் பற்றும்படி செய்து விடலாம். அதன் மூலம் நோயாளியின் உயிருக்கு அபாயம் ஏற்படலாம். ஆகையால் நான் கூறிய முறையே அது மெதுவானதும் சலிப்பு ஏற்படக் கூடியதுமான முறையாக இருந்தாலும் - உகந்தது ஆகும்.

இலைகள் சேர்த்தல்

இவ்வாறு நீராவி உற்பத்தி செய்யப்படும் நீரில் சிலர் வேப்ப இலைகளையோ அல்லது மற்ற மூலிகைகளையோ சேர்க்கிறார்கள். இவ்வாறு சேர்ப்பதால், நீராவிக்கு அதிகச் சக்தி ஏற்படுகிறதா என்பது எனக்குத் தெரியாது. நீராவி பிடிப்பதன் நோக்கம் வியர்வை சொட்டுமாறு செய்வதுதான். அதை நீராவி ஒன்றினால் மட்டுமே நாம் சாதித்து விடலாம்.

"பாத ஸ்நானம்"

கால்கள் ஜில்லிட்டுப் போனால், அல்லது கால்

உளைச்சல் இருந்தால், நோயாளியானவர் முழங்கால் வரை கால்களையும் பாதங்களையும் வெந்நீரில் முக்கி வைத்து உட்கார்ந்திருக்க வேண்டும். இந்த வெந்நீர், அவரால் தாங்க முடிந்த அளவு வெப்பம் உள்ளதாய் இருக்க வேண்டும். இந்த வெந்நீரில் சிறிது கடுகுப் பொடியையும் கலந்து கொள்ளலாம். இவ்வாறு ''பாத ஸ்நானம்'' செய்வது பதினைந்து நிமிஷங் களுக்கு மேல் நீடிக்கக் கூடாது. இந்தச் சிகிச்சையானது அந்த இடத்தில் ரத்த ஓட்டத்தை வேகப்படுத்தி உடனடியான நிவாரணம் அளிக்கிறது.

ஆவி பிடித்தல்

சாதாரண ஜலதோஷத்துக்கும் தொண்டைக் கட்டுக்கும் சாதாரண தேநீர்க் கெட்டிலைப் போன்றதும் மூக்கு நீளமாக உள்ளதுமான ஒரு நீராவிக் கெட்டிலைப் பயன்படுத்தி மூக்குக்கும் தொண்டைக்கும் ஆவி பிடிக்கலாம். அல்லது சாதாரணமான எந்தக் கெட்டிலிலும் நமக்குத் தேவையான அளவு நீளமான ரப்பர்க் குழாயை மாட்டிக் கொண்டு இக்காரியத்துக்குப் பயன்படுத்தலாம்.[20]

ஆகாயம்

ஆகாயம் என்பது என்ன?

பூமியையும் அதைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தை யும் சுற்றிச் சூழ்ந்துள்ள வெற்றிடத்தை ஆகாயம் என்று கூறலாம்.[21]

வானம் அல்லது ஈதர் என்பது வாயுமண்டலத்தின் உறைவிடமாகும். ஒரு காலி புட்டியிலிருந்து காற்றை வெளியே இழுத்துவிட்டு அங்கு வெற்றிடத்தை ஒருவர் ஏற்படுத்தி விடலாம். ஆனால் அந்த வெற்றிடத்தை யார் வெளியேற்ற முடியும்? அதுதான் ஆகாசம்.

நமது உடல் நலத்தைப் பாதுகாக்கவும் இழந்த உடல் நலத்தை மீண்டும் பெறவும் அந்த ஆகாசத்தை நாம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது.[22]

ஆகாயத்தை "அண்டிய" வாழ்க்கை

இந்த மாபெரும் பொருளான ஆகாயத்தை நாம் எவ்வளவு அதிகமாகப் பெறுகிறோமோ அவ்வளவு அதிக உடல் நலம் உள்ளவர்களாவோம். நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதற்பாடம், நமக்கும் ஆகாயத்திற்கும் - அதாவது எல்லையற்ற பொருளுக்கும் - இடையே எந்தவிதமான பிரிவினையையும் ஏற்படுத்தக் கூடாது என்பது தான். இந்த ஆகாய்மானது மிக அருகாமையில் இருக்கிறது; அதே சமயம் மிக மிக அப்பாலும் இருக்கிறது. வீடுகள், கூரைகள், ஏன் ஆடைகள் ஆகியவைகளின் குறுக்கீடுகூட இல்லாமல் நம்முடைய உடல்கள் ஆகாயத்துடன் தொடர்பு கொள்ள முடியுமானால், நமக்கு நல்ல உன்னதமான உடல் நலம் கிட்டும். ஒவ்வொருவருக்கும் இது சாத்தியமில்லை. ஆனால் இந்த வாசகத்தில் உள்ள உண்மையை ஏற்று அதற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். நாம் நடைமுறையில் எந்த அளவு இந்த நிலையை அடைய முடிகிறதோ அந்த அளவு திருப்தியும் மன நிம்மதியும் பெறுவோம்.[23]

வீண் அலங்காரம்

இப்படிப்பட்ட சிந்தனைப் போக்கு ஏற்பட்டு விட்டாலோ ஒருவன் தன்னுடைய சுற்றுப்புறங்களைத் திறவையாக வைத்துக் கொள்வான். அவன் தன்னுடைய வீட்டில் அனாவசியமான மேசை, நாற்காலிகளைப் போட்டு வைக்க மாட்டான். எவ்வளவு குறைச்சலான ஆடைகளை உபயோகிக்க முடியுமோ அவ்வளவு குறைச்சலாகவே உபயோகிப்பான். அநேக வீடுகளில் எல்லாவிதமான அவசியமற்ற அலங்காரங்களும், மேசை நாற்காலிகளும் - இவைகள் இல்லாமலேயே ஒருவன் தனது வாழ்க்கையை நடத்த முடியும் - நிரம்பிக் கிடக்கின்றன. எளிய வாழ்க்கை நடத்தும் மனிதன் ஒருவன் சென்றால் மயக்கம் போட்டுவிடும் அளவுக்கு இந்த அலங்காரங்களும், மேசை, நாற்காலிகளும் நிறைந்து கிடக்கின்றன. இவை தூசி துப்பட்டையும் கிருமிகளும் பூச்சிகளும் அடைந்து பெருக உதவும் சாதனங்களே தவிர வேறொன்றும் இல்லை.[24]

திறந்த இடத்தில் தூங்குவதை ஒருவன் முக்கியமாகக் கொள்ள வேண்டும். குளிர், பனி போன்று சீதோஷ்ண நிலைமையால் ஏற்படக்கூடிய மாறுதல்களில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் போதுமான அளவு ஒருவன் துணியைப் போர்த்திக் கொள்ள வேண்டும். மழை காலத்தில் கொடையைப் போன்று அமைந்த கூரை - சுற்றுச் சுவர்கள் இல்லாத கூரை இருக்க வேண்டும். மழையில் நனையாமல் இருக்க இதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மற்ற காலங்களைப் பொறுத்த வரை, நட்சத்திரங்கள் மிளிரக்கூடிய நில விதானம் நமக்குக் கூரையாக அமைய வேண்டும். அப்போது, ஒருவன் தனது கண்களைத் திறந்தால் விதவிதமாக மாறுதலடைந்து கொண்டிருக்கும் அழகான சுவர்க்க பூமிகளைக் காண முடிவதாய் இருக்க வேண்டும். இந்தக் காட்சி ஒருபோதும் அலுப்புத் தட்டாது. அது கண்களைக் கூச வைக்காது, கண்களுக்குக் கெடுதலும் செய்யாது. அதற்கு மாறாக, அவைகளுக்கு இதமான உணர்ச்சியைக் கொடுக்கும். பல்வேறு நட்சத்திரக் கூட்டங்களும் கம்பீரமாக மிதந்து கொண்டிருப்பதைக் கவனித்துப் பார்ப்பது கண்களுக்கு ஒரு விருந்தாக அமையும். தன்னுடைய சிந்தனைகளுக்கெல்லாம் நட்சத்திரங்களைச் சாட்சியாகக் கொண்ட ஒருவன், ஒருபோதும் தனது மனதில் தீய சிந்தனைகள் புக விடமாட்டான். புத்துணர்ச்சியூட்டும் நிம்மதியான துயிலை அனுபவிப்பான்.

வயிற்றை அடைக்கக் கூடாது

மேலே உள்ள ஆகாயத்திலிருந்து நாம் இறங்கி வருவோம். இங்கு நமக்குள்ளும் நம்மைச் சுற்றியும் உள்ள ஆகாயத்துக்கு வருவோம். தோலில் இலட்சக்கணக்கான துவாரங்கள் இருப்பதைக் காணலாம். இத்துவாரங்களில் உள்ள காலி இடங்களை நாம் அடைத்து விட்டோமானால், நாம் இறந்து விட்டோம். இத்துவாரங்களில் ஏதாவது அழுக்கு அடைத்துக் கொண்டால், அது நம்முடைய உடல் நலத்தைப் பாதிக்கும். இதேபோன்று, நம்முடைய ஜீரணேந்திரியங்களில் அனாவசியமான உணவுப் பொருட்களைப் போட்டு நிரப்பக் கூடாது. நமக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு தான் சாப்பிட வேண்டும். அதிகமாகச் சாப்பிடக் கூடாது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மனிதர்கள் தங்களை அறியாமலேயே அளவுக்கு மீறி உண்கிறார்கள். அல்லது, ஜீரணிக்காத பொருட்களை உண்கிறார்கள். ஒரு வாரம் அல்லது இருவாரங்களுக்கு ஒருமுறை உண்ணாவிரதம் இருப்பதானது அதில் சமநிலையைப் பாதுகாக்க மிகவும் உதவும். ஒருவரால் முழுநாளும் உண்ணாது இருக்க முடியவில்லையென்றால், பகலில் ஒன்று அல்லது இரண்டு வேளைகள் சாப்பிடாமல் இருக்கவேண்டும். (காற்றில்லாத) வெற்றிடம் இருப்பதை இயற்கை வெறுக்கிறது என்று கூறுவது ஓரளவுதான் உண்மை; காலி இடம் வேண்டுமென இயற்கை ஓயாது விரும்புகிறது. நம்மைச் சுற்றியுள்ள பரந்த காலி இடமே, இந்த உண்மைக்கு நிலையான சான்றாகும்.[25]

சூரியன்

வெயில் ஸ்நானம்

தண்ணீரில் குளிப்பது எவ்வளவு உபயோகமோ அவ்வளவு வெயில் ஸ்நானமும் உபயோகமானதாகும். ஆனால் இந்த இரண்டில் ஒன்றுக்காக மற்றொன்றை நிறுத்த முடியாது. உடல் பலவீனமாகவும் ரத்த ஓட்டம் குறைவாகவும் உள்ளபோது திறந்த உடலில் காலை வெயில்படுமாறு செய்ய வேண்டும். அப்போது அது எல்லாவிதமாகவும் உடல் நலத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு பொதுவான டானிக் ஆக இருந்து ஜீவ சக்தியை வளர்க்கும். அல்ட்ரா - வயலெட் கதிர்கள் சூரிய வெயிலில் மிகவும் அதிகமாக உள்ள நேரம் காலைதான். இவை சூரியனுடைய கதிர்களிலேயே மிகவும் சக்தி பொருந்தியவையாகும். நோயாளிக்கு குளிராக இருந்தால், அவர் நன்றாகப் போர்த்திக் கொண்டு வெயிலில் படுத்து, முடிந்த அளவு படிப்படியாக போர்த்தியிருக்கும் துணியை அகற்றி, தனது உடலில் அதிகப்படியான பகுதியில் வெயில்படுமாறு செய்ய வேண்டும். ஒரு அந்தரங்கமான இடத்தில், அல்லது, மக்கள் கண்ணுக்குப்படாத அளவு தூரம் தொலைவான ஒரு இடத்தில் ஒருவர் துணி எதுவும் இல்லாது வெயிலில் இங்கும் அங்குமாக நடந்து வெயில் ஸ்நானம் செய்யலாம். இப்படிப்பட்ட இடம் எளிதாகக் கிடைக்கா விட்டால், ஒரு கோவணம் அல்லது லங்கோட்டை மட்டும்

கட்டித் தனது மர்மப் பகுதியை மறைத்துவிட்டு தனது உடலில் உள்ள மற்ற பகுதிகளிலெல்லாம் வெயில்படுமாறு செய்யலாம்.[26]

வெயில் ஸ்நானங்களால் அனுகூலமடைந்த பலரை நான் அறிவேன். க்ஷயரோகத்துக்கு அது ஒரு நல்ல சிகிச்சையாகும்.[27]

ஆறாத புண்கள் கூடப் பல சந்தர்ப்பங்களில் வெயில் ஸ்நானத்தால் ஆறியிருக்கின்றன.[28]

காற்று

காற்றின் அவசியம்

பஞ்சபூதங்களில் ஐந்தாவது பொருளான காற்று, முந்திய பக்கங்களில் விவரிக்கப்பட்ட மற்ற நான்கு பூதங்களையும் போன்றே முக்கியமான ஒன்றாகும். மனித உடலே பஞ்ச பூதங்களால் ஆகியிருக்கிறது. ஆகையால் இவைகளில் ஒன்று இல்லாமல் கூட மனித உடல் செயல்பட முடியாது. ஆகையால் யாரும் காற்றைப் பற்றி அஞ்ச வேண்டியதில்லை. பொதுவாக நம்முடைய மக்கள் எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் வெயிலும் காற்றும் தங்கள் மீது படாமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்கிறார்கள். நல்ல, சுத்தமான காற்று உள்ள திறந்த வெளியில் வாழும் பழக்கத்தை ஒருவர் கைக்கொள்வாரானால், உடல் கெட்டிப்படும். இப்படிப் பட்டவருக்கு ஜலதோஷமோ மற்றும் அதைப்போன்ற நோய்களோ வரா.[29]

வைத்திய உதவியின் வரம்பு

மருந்து தருவது உண்மை உதவியா?

அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கம் செயல்படத் தொடங்கியபின், பல ஊழியர்களின் வேலைத் திட்டத்தில் வைத்திய உதவி ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது.

சிலர் விஷயத்தில் அதுதான் கிட்டத்தட்ட ஒரே அங்கமாக இருக்கிறது. அலோபதி அல்லது ஆயுர்வேதம் அல்லது யூனானி அல்லது ஹோமியோபதி மருந்துகளைத் தனித் தனியாகவோ அல்லது சேர்த்தோ இலவசமாக வழங்கி இந்த உதவியைச் செய்கின்றனர். மருந்து வியாபாரிகளை ஊழியர்கள் அணுகி ஒரு சில மருந்துகளைக் கேட்டால், அவர்கள் அதைத் தரத் தயாராய் இருக்கிறார்கள். ஏனெனில் இந்த மருந்தின் கிரயம் மிகவும் குறைச்சலே. மேலும் சுயநல அடிப்படையில் கவனித்தாலும் இந்த மருந்தை இலவசமாக மேற்கண்ட வியாபாரிகள் கொடுப்பதால் அவர்களுக்கு அதிக வாடிக்கைக்காரர்கள் வந்து சேருவார்கள். இவ்வாறு, நல்ல எண்ணம் படைத்த ஆனால் போதிய அளவு விஷயம் அறியாத, அல்லது அளவுக்கு மீறி உற்சாகம் கொண்ட ஊழியர்களுக்கு ஏழை நோயாளிகள் பலியாகின்றனர். இந்த மருந்தில் முக்கால் பங்குக்கு மேல் உபயோகமற்றவை. அதுமட்டுமல்ல, யார் உட்கொள்கிறார்களோ அவர்களுடைய உடலுக்கும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் தீங்கு பயக்கக் கூடியவை. நோயாளிகளுக்கு இது ஏதாவது தற்காலிக நிவாரணம் அளிப்பதாயிருந்தாலும் இவைகளைப் போன்ற (நிவாரணம் அளிக்கக்கூடிய) பொருட்களை நாம் கிராமக் கடைகளிலேயே வாங்கலாமே?

நோயற்ற வாழ்வே முக்கியம்

ஆகையால் நான் விவரித்த மாதிரியான வைத்திய உதவியை அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் தனியாக விட்டுவிடுகிறது. அதனுடைய பிரதான நோக்கம், சுகாதார சம்பந்தமான விஷயங்களையும் சிக்கனத்தையும் கற்பிப்பதாகும். இரண்டும் ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டவையல்லவா? கோடிக்கணக்கான மக்களுடைய விஷயத்தில் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமல்லவா? இவர்களுடைய உடல் தான், இவர்களுக்கான சொத்தை உற்பத்தி செய்து கொடுக்கும் சாதனம்; இவர்களுடைய அறிவல்ல. ஆகையால், இந்தச் சங்கம், நோய்த் தடுப்பு முறைகளைக் கற்றுக் கொடுக்கிறது. கோடிக்கணக்கான மக்களுடைய உணவில் போதிய உணவுச்சத்து இல்லையென்பது எல்லோரும் அறிந்தது தான். அதே சமயம்

தாம் சாப்பிடும் பொருட்களையும் அவர்கள் துஷ்பிரயோகம் தான் செய்கிறார்கள். அவர்களுக்கு சுகாதாரத்தை பற்றிய அறிவு கொஞ்சமும் இல்லை. கிராம சுகாதாரம் எவ்வளவு மோசமாக இருக்கமுடியுமோ அவ்வளவு மோசமாய் இருக்கிறது. ஆகவே, இந்தக் குறைபாடுகளைச் சரியாக்க வேண்டுமானால், மக்கள் சாதாரணமான சுகாதார விதிகளை அறிந்து கொள்ள வேண்டுமானால், அதிக முயற்சியோ பணச்செலவோ இல்லாமல் இப்போது அவர்களை வருத்திக் கொண்டிருக்கிற பல நோய்கள் அகல வேண்டும். அதனால் தான் கிராமக் கைத்தொழில் சங்கம், ஆஸ்பத்திரிகள் திறப்பதைப் பற்றி எண்ணவில்லை. கிராமங்களில் என்னென்ன மருந்துகள் கிடைக்கும் என்பதைக் கண்டுபிடிக்க இப்போது ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. *சதிஷ்பாபு, மலிவான மருந்துகளைப் பற்றி எழுதியுள்ள நூல் இப்படிப்பட்ட ஒரு முயற்சியாகும். இந்த மருந்துகள் எல்லாம் மிகமிக எளிய முறையில் தயாரிக்கக் கூடியவைதான். ஆயினும் இவைகளின் வேகம் குறையாமலே, (மருந்துகளின்) எண்ணிக்கையைக் குறைப்பது பற்றி அவர் இப்போது ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அவர் கடை மருந்துகளைச் சோதனை செய்து பார்க்கிறார். பிரிட்டிஷ் மருந்து நூலில் (British Pharmacopoeia) கூறப்பட்டுள்ள மருந்துகளின் தரப்படி அவை இருக்கின்றனவா என்பதையும் ஒப்பிட்டு வருகிறார். எண்ணற்ற விந்தையான மாத்திரைகள், ஊசிகள் ஆகியவற்றின் பயங்கரத்திலிருந்து எளிய கிராமவாசிகளைக் காப்பாற்றுவதே அவர் நோக்கம்.''[30]

வைத்திருக்க வேண்டிய மருந்துகள்

காய்ச்சல், மலச்சிக்கல் அல்லது இவைகளைப் போன்ற சாதாரண வியாதிகளுக்குக் கிராமவாசிகள் ஊழியர்களின் உதவியை நாடி வந்தால், அவர்கள் தங்களால் இயன்ற உதவி அளிக்க வேண்டியதுதான். நோய் இன்னது என்று நிச்சயமாகத் தெரிந்தால், கிராமக் கடைமருந்து தான் விலை குறைந்ததும், சிறந்ததும் ஆகும். மருந்துகளை யாரும் சொந்தமாக இருப்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்று

* *''வீட்டு, கிராம வைத்தியர்'' சதிஷ் சந்திர தாஸ் குப்தா இயற்றியது; வெளியிட்டோர் : காதி பிரதிஸ்தான், 15, காலேஜ் ஸ்கொயர், கல்கத்தா.*

விரும்பினால், விளக்கெண்ணெய், கொயினா, வெந்நீர் ஆகிய மூன்றுந்தான் சிறந்த மருந்துகள். விளக்கெண்ணெயை உள்ளூரிலேயே வாங்கலாம். நிலவாகை இலையும் இதே பலன் அளிக்கும். கொயினா மருந்தை அடிக்கடி உபயோகிக்கக் கூடாது. எல்லாக் காய்ச்சலுக்கும் கொய்னா மருந்து அவசியம் இல்லை. எல்லாக் காய்ச்சலுமே கொயினா மருந்தினால் இறங்கி விடுவதுமில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அரைகுறை உண்ணாவிரதம் இருப்பதாலோ (உணவைக் குறைத்துக் கொள்வதாலோ) அல்லது முழு உண்ணாவிரதம் இருப்பதாலோ காய்ச்சல் இறங்கி விடுகிறது. தானியங்கள், பருப்பு, பால் ஆகியவற்றை உண்ணாது, பழச்சாறு அல்லது கொதிக்க வைத்த திராட்சை ரசம் சாப்பிடுவது அல்லது வெல்லம் கலந்த வெந்நீருடன் புது எலுமிச்சை அல்லது புளி ரசம் சேர்த்துச் சாப்பிடுவது ஆகியவைகளை ''அரைகுறை உண்ணாவிரதம்'' என்று சொல்லலாம். கொதித்த நீரானது ஒரு சக்திவாய்ந்த மருந்தாகும். அதனால் நன்கு மலம் கழியும், வியர்வை வரும், காய்ச்சல் குறைந்து விடும். அதுதான் மிகவும் பாதுகாப்பான, விலை மலிவான கிருமிநாசினி. வெந்நீர் குடிக்க விரும்பும்போது, எவ்வளவு சூடு தாங்குமோ அவ்வளவு சூடுவரை வெந்நீரைக் குளிர வைக்க வேண்டும். தண்ணீரை முதலில் கொதிக்க வைக்க வேண்டும்; சூடாக்குவது மட்டும் போதாது. தண்ணீர் நன்றாகக் கொதித்து, நுரை கிளம்பி ஆவியாக மாறுந்தருணத்தில் தான் அது கொதித்ததாகும்.

வைத்தியர் உதவி எப்போது?

என்ன செய்வதென்று ஊழியர்களுக்குத் தெளிவாகத் தெரியாவிட்டால், அந்தந்தக் கிராமத்தில் இருக்கும் நாட்டு வைத்தியர் தனது விருப்பப்படி சிகிச்சை அளிக்க விட்டுவிட வேண்டும். ஆனால் சில கிராமங்களில் இப்படிப்பட்ட வைத்தியர்கள் கிடைக்காமல் போகலாம், அல்லது இருக்கும் வைத்தியர்களும் நம்பிக்கைக்கு ஏற்றவர்களாக இல்லாமல் இருக்கலாம். அவ்வித சந்தர்ப்பங்களில், பக்கத்தில் தாராள மனோபாவங்கொண்ட டாக்டர் இருந்து, அவரும் கிராம ஊழியருக்குத் தெரிந்தவராக இருந்தால், அவருடைய உதவியை நாடலாம்.

இயற்கைதான் சிறந்த வைத்தியர்

ஆனால் நோயைக் - குணப்படுத்துவதற்குக் கூடத் துப்புரவில் கவனம் செலுத்துவதுதான் சிறந்த வழி. இதைக் கிராம ஊழியர்களும் அனுபவத்தில் காணுவார்கள். இயற்கை தான் சிறந்த வைத்தியர் என்பதை ஊழியர்கள் ஞாபகத்தில் கொள்வார்களாக! மனிதன் எதைச் சேதப்படுத்துகிறானோ அதை இயற்கை செம்மை செய்கிறது. இதை அவர்கள் நிச்சயமாக நம்பலாம். ஆனால் தொடர்ந்து மனிதன் முட்டுக்கட்டை போடும்போது, இயற்கையும் சக்தியற்றதாகி விடுகிறது. அப்போதுதான், மராமத்துச் செய்ய முடியாத நிலையில், கடைசியாகவும் மறுக்க முடியாதவாறும் மரணமென்னும் தனது கடைசி மருத்துவனை இயற்கை அனுப்பி வைக்கிறது. அப்போது இந்த உடல் என்னும் ஆடை கிழிக்கப்பட்டு, இந்த ஆத்மாவுக்கு வேறொரு ஆடை அளிக்கப்படுகிறது. ஆகையால் கிராமத் துப்புரவு, சுகாதாரம் ஆகியவற்றுக்காகச் சேவை செய்யும் தொண்டர்களே சிறந்த உதவியாளர்கள். ஒருவருக்கு இது தெரிந்தாலும், தெரியா விட்டாலும் அவருக்குச் சிறந்த வைத்தியர்களும் இவர்கள்தான்.[31]

நன்கொடையின் பலாபலன்

பல ஸ்தாபனங்களின் கிராமப் பணியிலும் சமூக சேவையிலும் வைத்திய தர்மம் முக்கிய பங்கு வகிக்கிறது. எனக்குக் கிடைக்கும் இந்த ஸ்தாபனங்களின் அறிக்கை களிலிருந்து இதை அறிகிறேன். நோயாளிகளுக்கு மருந்து களை விநியோகிப்பதன் மூலம் இந்தச் சேவை செய்கிறார் கள். இவ்வாறு மருந்துகளை விநியோகிப்பதாக அறிவிப்பவரிடம் மக்களும் ஏராளமாக வந்து கூடுகின்றனர். மருந்து கொடுப்பவருக்கு இது ஒன்றும் அதிகக் கஷ்டமில்லை. நோய்களைப் பற்றியோ அவைகளின் அடையாளங்களைப் பற்றியோ அவர் தெரிந்திருக்க வேண்டியதில்லை. இவைகளை அளிக்கும் சில மருந்துக் கடைக்காரர்களிடமிருந்து இந்த மருந்துகளை இலவசமாக அவர் வாங்குகிறார். சில நன்கொடையாளர்கள் தாங்கள் எதற்காக நன்கொடை அளிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து

பார்த்துக் கொண்டிருப்பதில்லை. துன்புறும் சமுதாயத்துக்கு உதவும் ஏதாவதொரு தர்ம காரியத்துக்கு நன்கொடை அளிக்க முடிந்தால் அவர்கள் மனச்சாட்சி திருப்தி அடைகிறது. அவர்களிடமிருந்து எப்போதுமே நன்கொடை வாங்கலாம்.

"குறும்பான" சமூக சேவை

இப்படிப்பட்ட சமூக சேவை மிக மிகச் சோம்பேறித்தன மானது என்பது எனது கருத்து. பல சந்தர்ப்பங்களில் குறும்புத் தனமானதுங்கூட. ''கொடுத்த மாத்திரையை விழுங்கினால் போதும்; நோயாளி வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை'' என்ற நிலைமையில் அது குறும்புத்தன மாகி விடுகிறது. இந்த மருந்து சாப்பிடுவது அறியாமையே. சொல்லப்போனால் முன் இருந்ததற்கும் மோசமான நிலையிலேயே அவன் இருக்கிறான். ''இலவசமாகவோ அல்லது மிகக் குறைந்த செலவிலோ மாத்திரை அல்லது மருந்து வாங்கலாம்; அது நமது நோயையும் குணப்படுத்தி விடும்'' என்ற எண்ணமானது, மறுபடியும் அவ்வாறு செய்யுமாறு தான் அவனைத் தூண்டும். இப்படிப்பட்ட உதவியை இலவசமாக அடைவதால், அவனுடைய சுயமரியாதையும் பாதிக்கப்படுகிறது. சுயமரியாதை உள்ள ஒரு மனிதன் இலவசமாக எதையும் பெற மறுத்துவிட வேண்டும்.

வைத்திய உதவி கடைசி அம்சம்

ஆனால் வைத்திய உதவியிலேயே வரப்பிரசாதமான ஒரு முறை இருக்கிறது. வியாதிகளின் தன்மையை அறிந்த வர்கள் அளிக்கும் உதவிதான் அது. குறிப்பிட்ட நோய்களின் காரணம் என்ன, அதைத் தடுப்பது எப்படி என்பதை இவர்கள் விளக்குவார்கள். இப்படிப்பட்ட தொண்டர்கள் இரவு, பகல் என்று பாராது எல்லா நேரத்திலும் உதவி அளிக்கத் தயாராய் இருப்பார்கள். இப்படிப்பட்ட உதவி சுகாதாரத்தில் பாடங் கற்பிப்பதாகும்; எவ்வாறு சுத்தமாக இருக்க வேண்டும், எவ்வாறு உடல்நலத்துடன் இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொடுப்பதாகும். ஆனால் இத்தகைய தொண்டு அபூர்வமானதாகவே இருக்கிறது. வைத்திய உதவி பற்றிப்

பல ஸ்தாபனங்கள் தங்களுடைய அறிக்கைகளில் குறிப்பிடுவனவற்றில் பெரும்பாலானவை வெறும் விளம்பரமே. இதைப் போன்று இலகுவான முயற்சியுடனும் குறைந்த அறிவைக் கொண்டும் செய்யக்கூடிய மற்ற நடவடிக்கைகளுக்கு நன்கொடை வாங்குவதற்காக இந்த விளம்பரம் செய்யப்படுகிறது. ஆகையால் நகரங்களிலும் கிராமங்களிலும் சேவை செய்யும் சமூக ஊழியர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். வைத்திய உதவி அளிப்பதைத் தங்களுடைய சேவையில் கடைசி அம்சமாகவே அவர்கள் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட உதவியைப் பற்றிக் குறிப்பிடாமலே விட்டு விடுவதும் நலமாகும். தங்கள் தங்கள் பகுதிகளில் நோய் வராமல் தடுக்க முயல்வதே ஊழியர்கள் செய்யக்கூடிய சிறந்த சேவை. மிக மிகக் குறைந்த அளவிலேயே அவர்கள் தங்களிடம் மருந்துகளை வைத்துக் கொள்ள வேண்டும். கிராமக் கடைகளில் கிடைக்கும் மருந்துகளின் குணங்களை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். முடிந்தவரை அவை களையே உபயோகப்படுத்த வேண்டும். அப்போது அவர்கள் வெந்நீரும் வெயிலும் சுத்தமான உப்பும் சோடாவும் - அவ்வப்போது சில சந்தர்ப்பங்களில் விளக்கெண்ணெய் அல்லது கொயினா சேர்த்துக் கொண்டால் - பல நோய்களைத் தீர்க்கும் என்பதை அறிவார்கள். சிந்தியில் (வார்தா அருகேயுள்ள ஒரு கிராமம்) நாங்கள் கண்ட அனுபவத்தை அவர்களும் காண்பார்கள். கடுமையான நோய் உள்ளவர்களையெல்லாம் நாங்கள் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுகிறோம். சுகாதாரம் பற்றியும், நோய் வராமல் தடுப்பது எப்படியென்பதையும் அறிந்து கொள்வதற்காக மீரா பென்னிடம் நோயாளிகள் வந்து கூடி விடுகின்றனர். ஏதாவது ஒரு பொடி அல்லது 'மிக்ஸ்சர்' மருந்தைக் கொடுக்காமல், இவ்வித வைத்திய உதவி அளிப்பது நோயாளிகளிடம் மன வருத்தத்தை ஏற்படுத்துவதில்லை.[32]

அத்தியாயம் 25

உணவு

உணவின் அவசியம்

மனிதன் காற்றும் தண்ணீரும் இல்லாமல் வாழ முடியாது என்பது உண்மையே. ஆனால் அதே சமயம் உடலுக்கு வலுக்கொடுப்பது உணவுதான். அதனால்தான் உணவே வாழ்வு என்று கூறுகிறார்கள்.

பால், முட்டை

உணவை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்; சைவ உணவு, புலால் உணவு, கலப்பட உணவு என்பவை அவை. இதில் புலால் உணவு என்பதில் கோழி, மீன் ஆகியவை களும் அடங்கும். பால் என்பது மிருகங்களிலிருந்து கிடைக்கும் ஒரு உணவு. ஆகையால் அதை நூற்றுக்கு நூறு சைவ உணவில் சேர்க்க முடியாது. அது பெரும் அளவு மாமிசத்தின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. வைத்தியர் களுடைய பரிபாஷையில் அது 'பிராணி உணவு' என்றே அழைக்கப்படுகிறது. ஆனால் ஒரு சாதாரண மனிதன் அதை மிருக உணவாகக் கருதுவதில்லை. அதற்கு மாறாக, முட்டைகளைச் சாதாரண மனிதர்கள் கூட மாமிச உணவாகக் கருதுகிறார்கள். உண்மையிலோ அவை மாமிச உணவல்ல.

மனிதன் "இயற்கையில் சைவன்"

உடற்கூறு அமைப்பின்படி பார்த்தால், மனிதன் சைவ உணவினனாகவே இருக்க வேண்டும் என்று வைத்தியத் துறையில் உள்ளவர்களில் ஒரு சார்பினர் ஆணித்தரமாகக் கருதுகின்றனர். இவர்களுடைய எண்ணிக்கை வளர்ந்து கொண்டும் வருகிறது. ஆனாலும், மருத்துவத் துறையில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் கலப்பட உணவையே ஆதரிக்கிறார்கள். மனிதனுடைய பல், அவன் வயிறு, குடல் முதலியவைகளை கவனித்தால் .அவன் சைவ உணவினனாக இருக்கப் பிறந்தவன் என்பதை இயற்கை மெய்ப்பிப்பதாகவே தோன்றுகிறது.

சைவ உணவுப் பொருட்கள்

சைவ உணவில் தான்யங்கள், பருப்பு வகைகள், உண்ணக்கூடிய வேர்கள், கிழங்குகள், இலைகள் ஆகிய வற்றைத் தவிர காய்ந்தோ, அப்போதுதான் பழுத்தோ உள்ள பழங்களும் அடங்கும். இவைகளில் வாதுமை, அக்குரோட்டு, பிஸ்தா முதலிய கொட்டைகளும் அடங்கும்.

பால் பற்றிய பிரதிக்ஞை

சுத்தமான சைவ உணவையே நான் எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறேன். ஆனால் நல்ல ஆரோக்கியத்துடன் உடல் இருக்க வேண்டுமானால், சைவ உணவில் பாலும், பாலில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட தயிர், வெண்ணெய், நெய் போன்ற பொருட்களும் அவசியம் என்பதை அனுபவம் எனக்குக் கற்பித்திருக்கிறது. நான் முதலில் கொண்டிருந்த கருத்தில் ஏற்பட்ட முக்கியமான மாறுதல் இது. என்னுடைய உணவில் ஆறு ஆண்டுகள் நான் பாலை விலக்கி வைத்திருந்தேன். இவ்வாறு விலக்கி வைத்ததால் எவ்விதக் கெடுதலும் ஏற்பட்டதாக அப்போது எனக்குத் தெரியவில்லை. ஆனால் 1917ஆம் ஆண்டில் என்னுடைய சொந்த அறியாமையின் காரணமாகக் கடுமை யான சீதபேதிக்கு நான் உள்ளானேன். அதனால் எலும்புந் தோலுமாக நான் ஆகிவிட்டேன். அப்படிப்பட்ட நிலையிலும் எந்த மருந்தையும் உட்கொள்ள நான் கண்டிப்பாக மறுத்து விட்டேன். அதே கண்டிப்போடு பாலையோ அல்லது மோரையோ உட்கொள்ளவும் மறுத்து விட்டேன். ஆனால் என்னால் எனது உடலைக் குணப்படுத்தவோ அல்லது படுக்கையை விட்டு எழுந்திருக்கும் அளவு பலம் பெறவோ முடியவில்லை. பாலை உட்கொள்வதில்லையென்று நான் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருந்தேன். ‘‘இப்படிப்பட்ட பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட போது நீங்கள் பசு அல்லது எருமை மாட்டுப் பாலை மட்டும்தான் நினைத்துக் கொண் டிருந்திருப்பீர்கள். ஆகையால் ஆட்டுப்பாலை உட்கொள்வ தற்கு உங்கள் பிரதிக்ஞை தடையாக இருக்க முடியாது’’ என்று வைத்திய நண்பர் ஒருவர் எனக்கு ஆலோசனை கூறினார். என்னுடைய மனைவி இந்தக் கருத்தை

ஆதரித்தாள். நானும் இணங்கினேன். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், பாலை விட்டு விடுவதென்று முடிவு செய்த ஒருவன் அவன் பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட போது அவனுடைய மனதில் பசு அல்லது எருமைப் பாலைத் தான் நினைத்துக் கொண்டு இருந்திருக்கலாமென்றாலும் - எல்லாப் பாலையுமே விலக்கி விடத்தான் வேண்டும். எல்லா மிருகங்களிடமிருந்து கிடைக்கும் பாலிலும் ஒரே வகையான உணவுச் சத்துக்களே சேர்ந்திருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு மிருகத்தின் பாலுக்கும் இந்த உணவுச் சத்துக்கள் கலந்திருக்கும் விகிதம் வேண்டுமானால் வேறுபடலாம். ஆகையால் இந்தப் பிரதிக்ஞையின் 'வாசகத்தை' நான் காப்பாற்றினேனே தவிர, அதன் உண்மையான சாரத்தைக் காப்பாற்றவில்லையென்று கூறலாம். இது ஒரு புறம் இருக்க, உடனடியாக ஆட்டுப்பால் கொண்டு வரப்பட்டது. நானும் அதைக் குடித்துவிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது போல் தோன்றியது. வேகமாக எனது உடல்நலம் அபிவிருத்தி அடைந்தது. விரைவில் நான் படுக்கையை விட்டு எழுந்தேன். இதனாலும் மற்றும் இது போன்ற பல அனுபவங்களாலும், கண்டிப்பான சைவ உணவில் பாலைச்சேர்க்க வேண்டியது அவசியம் என்பதை நாள் ஒப்புக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் ஒன்று மட்டும் எனக்கு உறுதியாகத் தோன்றுகிறது. பாலிலிருந்தும் மாமிசத்திலிருந்தும் நாம் பெறும் அத்தியாவசியப் பொருட்களை அளிக்கக்கூடிய ஒரு பொருள் உலகில் இருக்கும். இவ்வளவு பரந்த தாவர உலகில் இப்படிப்பட்ட ஏதாவது ஒரு பொருள் இருக்கத்தான் செய்யும். மாமிசத்திற்கும், பாலுக்கும் உள்ள குறைகள் - அவை தார்மிகக் குறைபாடுகளாக இருந்தாலும் சரி - இல்லாததாகவும் இப்பொருள் இருக்கும்.

மாமிசம், பாலில் குறைபாடு

பால் அல்லது மாமிசம் சாப்பிடுவது நிச்சயமாகக் குறைபாடு உள்ளதுதான் என்பது எனது கருத்து. மாமிசம் கிடைப்பதற்காக நாம் மிருகங்களைக் கொல்ல வேண்டியிருக்கிறது. மேலும், நம்முடைய குழந்தைப் பருவத்தில் நாம் அருந்தும் தாய்ப்பாலைத் தவிர வேறு எந்தப் பாலுக்கும் நமக்கு உரிமை கிடையாது. இந்த உணவுகளை

உண்பதனால் தார்மிக அடிப்படையில் குறைபாடுகள் உள்ளன. அது மட்டுமல்லாது, சுகாதாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டாலும் குறைபாடுகள் இருக்கின்றன. மிருகத்தினிடம் உள்ள நோய் அதன் மாமிசம் அல்லது பாலிலும் இருக்கத்தான் செய்யும். வீட்டில் நாம் வளர்க்கும் கால்நடைகள் எப்போதுமே பூரண உடல் நலம் உள்ளவை களாய் இருக்கும் என்பதில்லை. மனிதனைப் போலவே கால்நடைகளுக்கும் எண்ணற்ற வியாதிகள் வருகின்றன. இந்தக் கால்நடைகளை நாம் அவ்வப்போது வைத்திய பரிசோதனை செய்தாலுங்கூட அவைகளுக்குள்ள சில வியாதிகளைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுகிறோம். மேலும், இந்தியாவில் உள்ள கால்நடைகளையெல்லாம் வைத்திய பரிசோதனை செய்வதென்பதும் சாத்தியமற்ற ஒரு பகீரப்பிரயத்தனம். குறைந்தது தற்போதைக்காவது அப்படித் தான் நிலைமை இருக்கிறது. சேவாகிராம ஆசிரமத்தில் நான் ஒரு பண்ணை நடத்துகிறேன். மருத்துவ நண்பர்களிட மிருந்தும் நான் எளிதாக உதவி பெறமுடியும். ஆயினும் சேவா கிராமத்துப் பண்ணையில் உள்ள எல்லாக் கால்நடைகளுமே உடல் நலத்துடன் இருக்கின்றனவென்று நான் கூற முடியாது. அதற்கு மாறாக, எல்லோரும் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாகக் கருதிய ஒரு பசுவுக்கு க்ஷயரோகம் இருப்பது பின்னால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நோயைக் கண்டுபிடிப்பதற்கு முன், இந்தப் பசுவின்பால் ஆசிரமத்தில் நாள்தோறும் பயன்படுத்தப்பட்டு வந்தது. சுற்றுப்புறங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்தும் ஆசிர மத்திற்குப் பால் வாங்குகிறார்கள். அவர்களுடைய கால்நடைகள் வைத்திய பரிசோதனை செய்யப்பட்டவை யல்ல. ஒரு குறிப்பிட்ட பால் அருந்துவதற்குத் தகுதியானதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது கடினமானதாகும். பாலைக் கொதிக்க வைப்பதால் என்ன பாதுகாப்புக் கிடைக்கிறதோ, அந்தப் பாதுகாப்புடன் நாம் திருப்தியடைய வேண்டியிருக்கிறது. ஆசிரமத்திலேயே கால்நடைகளை நூற்றுக்கு நூறு வைத்திய பரிசோதனை செய்ய முடியாதென்றால், தனது பால் பண்ணையில் உற்பத்தியாகும் பொருட்கள் பாதுகாப்பானவை தான் என்பதை உறுதிப்படுத்த முடியாதென்றால், மற்ற இடங்களில் இதைக்

காட்டிலும் எப்படி நிலைமை இருக்கும் என்று சொல்ல முடியும்? பால் தரும் கால்நடைகளின் விஷயத்தில் எந்த அளவு இது உண்மையோ அதைக் காட்டிலும் பன்மடங்கு மாமிசத்துக்காக வதை செய்யப்படும் கால்நடைகளின் விஷயத்தில் உண்மையாகும். பொதுவாக இப்படிப்பட்ட அபாயங்களிலிருந்து தப்புவதற்கு மனிதன் தனது அதிர்ஷ்டத்தையே நம்பியிருக்கிறான். அவன் தன்னுடைய உடல்நலத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. டாக்டர்கள், வைத்தியர்கள், ஹகீம்கள் ஆகியவர்களைக் கொண்ட வைத்தியக் கோட்டைக்குள் தான் பத்திரமாய் இருப்பதாகக் கருதுகிறான். எப்படிச் சொத்துத் தேடுவது, சமூகத்தில் எவ்வாறு அந்தஸ்துப் பெறுவது என்பதிலேயே பிரதானமாய் அவனுடைய அக்கறையும் மனக்கவலையும் இருக்கிறது. இந்தக் கவலை ஒன்றே மற்றவைகளையெல்லாம் மறைத்து விடுகிறது. ஆகையால் சுயநலமற்ற விஞ்ஞானி ஒருவன் பொறுமையாக ஆராய்ச்சி நடத்திப் பாலுக்கும் மாமிசத்திற்கும் பதிலாக, தாவரப் பொருள் ஒன்றைக் கண்டுபிடித்தாலொழிய, மனிதன் மாமிசத்தையும் பாலையும் சாப்பிட்டுக் கொண்டுதான் இருப்பான். சைவம், அசைவம் ஆகிய இரண்டும் கலந்த உணவைப் பற்றி இப்போது நாம் கவனிப்போம். தசை வளர்ச்சிக்கான சில பொருட்கள் உடம்புக்குத் தேவைப்படுகின்றன. உடம்பின் வளர்ச்சிக்கு உதவவும், அன்றாடம் செலவாகும் சக்தியை ஈடுகட்டவும் இப்பொருட்கள் அவசியம். ஆகையால் இப்பொருட்களை அளிக்கக்கூடிய உணவு மனிதனுக்குத் தேவைப்படுகிறது. உடலுக்கு வேண்டிய சக்தி, கொழுப்பு, சிலவகை உப்புக்கள் ஆகியனவும் கழிவுப் பொருட்களை வெளியே தள்ளக்கூடிய பொருட்களும் அதில் இருக்க வேண்டும். தசையை வளர்க்கக் கூடிய பொருட்கள் ''புரதம்'' என அழைக்கப்படுகின்றன. பால், மாமிசம், முட்டை, பருப்பு, கொட்டை ஆகியவற்றில் புரதம் கிடைக்கிறது. இவைகளில் பாலிலும், மாமிசத்திலும் உள்ள புரதமானது எளிதாக ஜீரணிக்கக் கூடியதும் உடலில் சாரக்கூடியதுமாகும். ஆகையால் தாவர புரதங்களைக் காட்டிலும் பால் உயர்ந்தது. மாமிசம் ஜீரணமாக முடியாதவர்களுக்குக் கூடப் பால் எளிதாக ஜீரணமாகிறது என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். சைவ உண

உண்பவர்களுக்கு மிருக புரதத்தை அளிக்கக் கூடிய ஒரே பொருள் பால்தான். ஆகையால் அது ஒரு முக்கியமான உணவுப் பொருளாகும். எல்லாப் புரதங்களிலுமே மிக எளிதாக ஜீரணமாகக் கூடியது பச்சை முட்டைகளிலிருந்து கிடைக்கக் கூடிய புரதம்தான் என்று கருதப்படுகிறது.

ஆடையெடுத்த பால்

ஆனால் எல்லோருமே பால் சாப்பிட முடியாது. எல்லா இடங்களிலுமே பால் கிடைப்பதும் இல்லை. மேலும் பாலைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒரு விஷயத்தை இங்கு கூற விரும்புகிறேன். சாதாரணமாக மக்கள் நினைப்பதற்கு மாறாக, ஆடையெடுத்த பால் நல்ல உணவுப் பொருளாகும். ஆடையெடுக்காத பாலைவிட இது அதிக உபயோகமாக விருக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. தசை வளர்ச்சிக்கும் சத்திழந்த தசைக்குச் சத்து அளிப்பதற்கும் வேண்டிய மிருக புரதச் சத்து அளிப்பதுதான் பாலின் முக்கிய உபயோகம். பாலிலிருந்து ஆடையை எடுப்பதால், ஓரளவு கொழுப்புச் சத்துப் போய்விடுகிறது என்றாலும், அது புரதங்களையே பாதிப்பதில்லை. மேலும் தற்போது ஆடையெடுக்கப் பயன்படுத்தப்படும் சாதனங்களில் எதுவுமே, பாலில் உள்ள கொழுப்பைப் பூரணமாக அகற்றிவிட முடியாது. அப்படி எடுக்கக்கூடிய கருவியைச் செய்வதும் சாத்தியமாகத் தோன்றவில்லை.

உணவுத் தான்யங்கள்

ஆடையெடுத்த அல்லது எடுக்காத பாலைத் தவிர மற்றப் பொருட்களும் உடம்புக்குத் தேவையாய் இருக்கின்றன. கோதுமை, அரிசி, சோளம், கம்பு முதலிய உணவுத் தான்யங்களுக்கு நான் இரண்டாவது இடமே அளிக்கிறேன். இவைகள் தான் பிரதான உணவுப் பொருட்களாக உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் வெவ்வேறு மாகாணங்களில், வெவ்வேறு உணவுத் தான்யங்கள் பிரதான உணவுப் பொருளாக உபயோகப்படுத்தப்படுகின்றன; பல இடங்களில் ஒரே சமயத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட தான்யங்கள் உண்ணப்படுகின்றன. உதாரணமாக, கோதுமை, கம்பு,

அரிசி ஆகியவை அடிக்கடி சேர்த்துப் பரிமாறப்படுகின்றன உடல் ஊட்டத்திற்கு இவ்வாறு சேர்க்க வேண்டியதில்லை உட்கொள்ளப்படும் உணவின் அளவை ஒழுங்குபடுத்துவதை இது கஷ்டமாக்கி விடுகிறது; ஜீரணிப்பதிலும் கஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது. இத்தனை வகைப்பட்ட தான்யங்களும் ''ஸ்டார்ச்'' என்ற மாவுப் பொருளையே பிரதானமாக அளிப்பதால், இவைகளில் ஒன்றே ஒன்றை மட்டும் ஒரு சமயம் சாப்பிட்டால் போதுமானது. உணவுத் தான்யங் களுக்கே மன்னன் கோதுமை தான் என்று கூறலாம். உலகப் படத்தை நாம் பார்த்தோமானால், கோதுமை தான் முதல் இடம் வகிக்கிறது. சுகாதாரக் கண்ணோட்டத்துடன் பார்த்தாலும் கோதுமை மட்டும் நமக்குக் கிடைப்பதானால் அரிசியும் மற்ற உணவுத் தான்யங்களும் அவசியமற்றவை யாய் விடுகின்றன. கோதுமை கிடைக்காதிருந்தாலும் மனதிற்குப் பிடிக்காததாலோ அல்லது ஜீரணிப்பதற்குக் கஷ்டமாக இருப்பதாலோ சோளம் முதலிய உணவுத் தான்யங்களை உட்கொள்ளாவிட்டாலும், அரிசியைத் தான் நாட வேண்டும்.

அரிசியும் தவிடும்

உணவுத் தான்யங்களை நன்றாகக் கழுவி வி வேண்டும்; திரிகையில் போட்டு அரைக்க வேண்டும் இவ்வாறு அரைத்த மாவை அப்படியே உபயோகிக் வேண்டும். மாவைச் சல்லடை போட்டுச் சலிப்பது கூடாது இது அதன் மேல் தோலை அகற்றி விடலாம். இது தா உப்புச் சத்து, உணவுச் சத்து ஆகிய இரண்டிற்குமே பிரதா மான மூலஸ்தானம். உணவு ஊட்டத்தைப் பொறுத்த வ உப்புச் சத்தும் உணவுச் சத்தும் மிகமிக முக்கியமானவை யாகும். இந்த மேல் தோல் மலத்தை இளக்க உதவக் கூடி கனமான பொருட்களையும் அளிக்கிறது. அரிசி தான்யமானது ஒரு நுண்மையான பொருளாக இருப்பதா அதற்கு வெளியே ஒரு மூடியை அதாவது உமியை இயற்கை அமைத்திருக்கிறது. இது ஜீரணிக்கக் கூடியதல்ல. ஜீரணிக் முடியாத இப்பகுதியை அகற்றுவதற்காக, அரிசியை நா குத்த வேண்டியதிருக்கிறது. ஆனால் இவ்வாறு நா நெல்லைக் குத்தும் போது, வெளியில் உள்ள உமி

மட்டும் அகற்றுவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் இயந்திரத்தில் நெல்லை அரைப்பதானது இந்த உமியை அகற்றுவது மட்டுமல்லாது, அரிசியில் உள்ள தவிட்டையும் அகற்றி அரிசியை வெள்ளை வெளேரென்று தீட்டி விடுகிறது. இவ்வாறு நன்கு தீட்டப்பட்ட அரிசி பிரபல்யமடைந்திருப்பதற்குக் காரணம் நீண்ட காலம் வைத்திருப்பதற்கு இது உதவியாக இருக்கிறது என்பதுதான். தவிடு இனிப்பாக இருக்கிறது. ஆகவே அதை அகற்றினாலொழிய அரிசியில் சில வகைப்பூச்சிகள் எளிதாக விழுந்துவிடும். தீட்டப்பட்ட அரிசியும், தவிடு இல்லாத கோதுமையும் நமக்கு மாவுப் பொருளை மட்டுமே தரும். தவிட்டுடன் உணவுத் தான்யத்தில் உள்ள முக்கியமான பொருட்கள் போய் விடுகின்றன. அரிசித் தவிடு தனியாக விற்கப்படுகிறது. இதையும் கோதுமைத் தவிட்டையும் சமைத்துச் சாப்பிடலாம். இவைகளைச் சப்பாத்தியாகவோ அல்லது பலகாரமாகவோ செய்து சாப்பிடலாம். அரிசிச் சோற்றைக் காட்டிலும் அரிசிச் சப்பாத்தியானது எளிதாக ஜீரணிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆகையால் அவைகளைக் குறைத்துச் சாப்பிட்டால் கூடப் பூரண திருப்தியளிக்கின்றன.

மென்று சாப்பிடுதல்

சப்பாத்தியின் ஒவ்வொரு துண்டையும் காய்கறிக் கூட்டிலோ அல்லது பருப்பிலோ தொட்டுக் கொண்டு சாப்பிடுவதுதான் நமக்குப் பழக்கம். இதன் பலனாக, அநேகர் நன்றாக மெல்லாமலேயே தங்களுடைய உணவை விழுங்கி விடுகிறார்கள். ஜீரணிப்பதில் உள்ள பல கட்டங்களில் - அதுவும் மாவுப் பொருளைப் பொறுத்த வரையில் - மென்று சாப்பிடுவது ஒரு முக்கியமான காரியமாகும். வாயில் உள்ள உமிழ்நீருடன் கலக்கும் போதுதான் ஸ்டார்ச்சின் ஜீரணம் தொடங்குகிறது. ஆகையால் ஸ்டார்ச்சினால் ஆக்கப்பட்ட பொருட்களை அதிகமாக ‘ஊற வைக்காது’ சாப்பிட வேண்டும். இவ்வாறு செய்வதனால் அதிகமான உமிழ்நீர் ஊறுகிறது; நன்றாகச் சுவைத்துத் தின்பதையும் அவசியமாக்குகிறது.

பருப்பு அவசியமில்லை

மாவுப் பொருட்களைக் கொடுக்கும் உணவுத்தான்யங்களுக்கு அடுத்தபடியாக புரதச் சத்தை அளிக்கக்கூடிய பீன்ஸ், துவரை, காராமணி போன்ற பருப்பு வகைகள் இருக்கின்றன. உணவில் பருப்பு அத்தியாவசிய அம்சம் என்று எல்லோருமே நினைப்பதாகத் தோன்றுகிறது. மாமிசம் சாப்பிடுகிறவர்கள் கூடப் பருப்பு வேண்டுமென்கிறார்கள். கடினமான உடல் உழைப்புச் செய்யவேண்டியிருப்பவர்கள், பால் சாப்பிடுவதற்கு வசதியில்லாதவர்களாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் பருப்பில்லாமல் இருக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் நான் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் இதை உறுதியாகச் சொல்ல முடியும். உட்கார்ந்து வேலை செய்யும் குமாஸ்தாக்கள், வியாபாரிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் பால் வாங்கக்கூடிய அளவு வசதியுள்ளவர்களுக்கும் பருப்பு அவசியமில்லை. சாதாரணமாக, பருப்பு வகைகளை ஜீரணிப்பது மிகவும் கஷ்டமாகும். பொதுவாக, உணவுத் தான்யங்களைக் காட்டிலும் இவை குறைந்த அளவிலேயே உட்கொள்ளப்படுகின்றன. பருப்பு வகைகளில் பட்டாணி, கடலை, பீன்ஸ் ஆகியவை மிகக் கடினமாக ஜீரணிக்கக் கூடியவையென்றும், பாசிப்பருப்பு, மசூர் பருப்பு ஆகிய வகைகள் மிக எளிதாக ஜீரணிக்கக் கூடியவையென்றும் கருதப்படுகின்றன.

காய்கறி, பழம்

காய்கறிகளும், பழங்களும் நம்முடைய பட்டியலில் மூன்றாவது இடத்தைத்தான் பெற வேண்டும். இந்தியாவில் இவை மலிவாகவும், எளிதாகவும் கிடைக்கும் என்று தான் யாரும் எதிர்பார்ப்பார்கள். ஆனால் உண்மையில் அப்படியில்லை. அவைகள் நகர மக்களுக்கான உயர்ந்த உணவுப் பொருள் வகைகளாகவே பொதுவாகக் கருதப்படுகிறது. கிராமங்களில் புத்தம் புதிய காய்கறிகள் என்பவை கிடைப்பது அரிதாக இருக்கிறது. பெரும்பாலான இடங்களில் பழமே கிடைப்பதில்லை. இவ்வாறு காய்கறிகளும், பழங்களும் பற்றாக்குறையாக இருப்பது

இந்தியாவில் ஆட்சி நடத்துபவர்களுடைய குறையைத்தான் காண்பிக்கிறது. கிராம மக்கள் விரும்பினால், நிறையக் காய்கறிகளைப் பயிரிட முடியும். பழத்தைப் பற்றிய பிரச்னையை அவ்வளவு எளிதாகத் தீர்க்க முடியாது. கிராமத்தார் கண்ணோட்டத்தில் பார்த்தால் நிலச்சட்டம் தவறானதாகும். ஆனால் நான் இப்போது எடுத்துக் கொண்ட விஷயத்தை விட்டு விலகிச் செல்கிறேன்.

காய்கறிகள்

புத்தம் புதிய காய்கறி வகைகளில், இலைகள் உள்ள காய்களை ஒவ்வொரு நாளும் சாப்பிட வேண்டும். மாவுச் சத்தைப் பிரதானமாக அளிக்கக் கூடிய உருளைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சேப்பங்கிழங்கு முதலிய வகைகளை நான் இதில் சேர்க்கவில்லை. மாவுப் பொருட்களைத் தரக்கூடிய உணவுத் தான்யங்களில் ஒன்றாகவே இவைகளைக் கருத வேண்டும். சாதாரண புதுக்காய்கறிகளை ஒரு குறிப்பிட்ட அளவு சேர்த்துக் கொள்வது நலமாய் இருக்கும். வெள்ளரிக்காய், தக்காளி, உணவுக்கு உதவும் காரச்சத்துள்ள இலை வகைகள், மற்ற கீரை வகைகள் ஆகியவற்றைச் சமைக்க வேண்டியதில்லை. அவைகளை நன்றாகக் கழுவிவிட்டு, ஒரு அளவில் அப்படியே பச்சையாகச் சாப்பிட்டுவிட வேண்டும்.

பழங்கள்

பழங்களைப் பொறுத்தவரை, அந்தந்தப் பருவ காலங்களில் கிடைக்கும் பழங்களை நமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, மாம்பழம், நாவல்பழம், கொய்யாப்பழம், திராட்சை, பப்பாளி, எலுமிச்சை - புளிக்கும் எலுமிச்சை அல்லது இனிக்கும் எலுமிச்சை - ஆரஞ்சு, சாத்துக்குடி முதலியவை. பழங்கள் சாப்பிடுவதற்குச் சிறந்த நேரம் அதிகாலையே ஆகும். பழத்தையும் பாலையும் காலை ஆகாரமாக உட்கொண்டால் அது முழு மனத்திருப்தி அளிக்கும். அதிகாலையில் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்கள், காலை ஆகாரமாகப் பழத்தை மட்டும் சாப்பிடலாம்.

வாழைப் பழம்

வாழைப் பழம் ஒரு நல்ல பழம். ஆனால் மாவுச்சத்து அதில் நிறைய இருப்பதால், ரொட்டிக்குப் பதிலாக அது பயன்படுகிறது. பாலும் வாழைப்பழமும் நல்ல உணவு ஆகும்.

நெய், எண்ணெய்

ஒரு குறிப்பிட்ட அளவு கொழுப்புச் சத்தும் அவசியமே. நெய் அல்லது எண்ணெயாக இதை உட்கொள்ளலாம். நெய் கிடைப்பதாக இருந்தால், எண்ணெய்க்கு அவசியமே இல்லை. எண்ணெயை ஜீரணிப்பது கஷ்டம். மேலும் அது சுத்தமான நெய்யைப் போன்று உணவு ஊட்டம் உள்ளதாகவும் இல்லை. ஒவ்வொரு நாளைக்கும் தலைக்கு ஒன்றரை அவுன்சு நெய் கிடைத்தால் அது நம்முடைய உடலின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாகும். ஆடையெடுக்கப்படாத பாலும் நெய்ச் சத்தை அளிக்கக் கூடியதுதான். நெய் சாப்பிட முடியாதவர்கள், கொழுப்பின் தேவையை ஈடுகட்டுவதற்குப் போதுமான எண்ணெயை உட்கொள்ள வேண்டும். எண்ணெய்களில் நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகியவைகளுக்கு முதலிடம் தர வேண்டும். எண்ணெய் புதிதாக எடுக்கப் பட்டதாய் இருக்கவேண்டும். செக்கு எண்ணெய் கிடைப்பதாக இருந்தால் அது சிறந்தது. பொதுவாக, கடையில் விற்கப்படும் எண்ணெயும் நெய்யும் மோசமானவை. இது மிகவும் வருந்தத் தக்கதும் வெட்கப்படத் தக்கதுமாகும். ஆனால், சட்டத்தின் மூலமோ கல்வி மூலமோ வாணிக நெறியில் சத்தியம் இன்றியமையாத அம்சமாக வேண்டும். அவ்வாறு ஆகாதவரை, பொறுமையுடனும், எச்சரிக்கையாகவும் இருந்து சுத்தமான சாமானை நாம் வாங்க வேண்டும். தரத்தைப் பார்க்காது, கிடைத்தது போதும் என்று ஒருவர் திருப்தி யடைந்து விடக் கூடாது. நாற்றமடித்த எண்ணெயையும், கலப்படமான எண்ணெயையும் உட்கொள்வதற்குப் பதிலாக நெய்யும், எண்ணெயும் உபயோகிக்காமலே விட்டு விடுவது எவ்வளவோ நல்லதாகும். கொழுப்பைப் போலவே ஒரு குறிப்பிட்ட அளவு சர்க்கரையும் அவசியமானதாகும்.

இனிப்புப் பழங்களில் நிறையச் சர்க்கரை இருக்கிற தென்றாலும், ஒரு நாளைக்கு ஒன்றிலிருந்து ஒன்றரை அவுன்சு சர்க்கரை - பழுப்புச் சர்க்கரையோ, வெள்ளைச் சர்க்கரையோ - சாப்பிடுவதில் தீங்கு எதுவும் இல்லை. ஒருவருக்கு இனிப்புப் பழங்கள் கிடைக்காவிட்டால் சர்க்கரை அவசியமாக இருக்கும். ஆனால் தற்போது இனிப்புப் பண்டங்களுக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. அது தவறாகும். நகர மக்கள் அளவுக்கு மீறி இனிப்புப் பண்டங்கள் சாப்பிடுகிறார்கள். பால்கோவா மற்றும் பாலால் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், மற்றவகை இனிப்புப் பண்டங்கள் ஆகியவைகளை நிறையச் சாப்பிடுகிறார்கள். அவைகள் எல்லாம் அவசியமற்றவை. மிகச் சிறிய அளவில் உட்கொண்டாலொழியத் தீங்கு பயக்கக் கூடியவை. கோடிக்கணக்கான மக்களுக்கு இந்தியாவில் வயிறார உணவுகூடக் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட ஒரு நாட்டில் இனிப்புப் பண்டங்களையோ மற்ற நல்ல உணவு வகைகளையோ சாப்பிடுவது கொள்ளையடிப்பதற்குச் சமமாகும். இவ்வாறு நான் கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது.

நெய்யில் வறுப்பது அவசியமா?

இனிப்பு விஷயத்தில் எது உண்மையோ அது அதே அளவு நெய், எண்ணெய் விஷயத்திலும் உண்மையேயாகும். எண்ணெய் அல்லது நெய்யில் வறுக்கப்பட்ட பொருட்களைச் சாப்பிட வேண்டிய அவசியமே இல்லை. பூரிகளும், லட்டுகளும் செய்வதற்காக நெய்யை உபயோகப்படுத்துவது யோசனையற்ற வீண் விரயமாகும். இப்படிப்பட்ட உணவு வகைகளைச் சாப்பிட்டுப் பழக்கமில்லாதவர்கள், இவை களைச் சாப்பிடவே முடியாது. உதாரணமாக, நம்முடைய நாட்டுக்கு முதன் முதலாக ஆங்கிலேயர்கள் வந்தபோது அவர்களால் நம்முடைய இனிப்புப் பண்டங்களையும், வறுவல்களையும் சாப்பிடவே முடியவில்லை. இவைகளை உண்பவர்களும் அடிக்கடி நோய் வாய்ப்படுவதை நான் பார்க்கிறேன். ருசி என்பது நம்முடன் கூடப்பிறந்தது அல்ல; பழக்க வழக்கத்தினால் வருவது. பசியால் உணவுக்கு ஒரு ருசி ஏற்படுகிறதே அந்த ருசியை உலகிலுள்ள

தின்பண்டங்களெல்லாம் சேர்ந்தாலும் தர முடியாது. பசியால் வாடும் ஒரு மனிதன் ஒரு காய்ந்த ரொட்டித் துண்டை மிகுந்த ருசியுடன் சாப்பிடுவான். ஆனால் பசியில்லாதவனோ மிகவும் ருசியாக உள்ள ஒரு இனிப்புப் பண்டத்தையும் மறுத்து விடுவான்.

பசியிலிருந்து ருசி

எந்த அளவு, எத்தனை தடவை ஒருவன் சாப்பிட வேண்டும் என்பதை இப்போது பார்ப்போம். உடம்பைக் காப்பாற்றுவதற்கான ஒரு கடமையாக நாம் உணவைச் சாப்பிட வேண்டும். மருந்தைப் போல் சாப்பிட வேண்டும். ஒருபோதும் ருசிக்காகச் சாப்பிடக் கூடாது. ஆகவே, உண்மையான பசியைத் தீர்ப்பதன் மூலம் ஒரு இன்ப உணர்ச்சியைப் பெறுகிறோம். ஆகையால் பசியிலிருந்து ருசி வருகிறதே தவிர அதற்கு வெளியேயிருந்தல்ல என்று நாம் கூற முடியும். தவறான பழக்க வழக்கங்களின் காரணமாகவும் செயற்கையான வாழ்க்கை முறையின் காரணமாகவும் தங்களுடைய உடலுக்குத் தேவையான உணவு என்ன என்பதையே மக்கள் அறியாதவர்களாய் இருக்கின்றனர். நம்மை உலகிற்கு அளிக்கிறார்களே அந்தப் பெற்றோர்களும் பொதுவாக மனக் கட்டுப்பாடு உள்ளவர்களாய் இருப்பதில்லை. அவர்களுடைய பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறையும் குழந்தைகளுடைய வாழ்க்கையில் ஓரளவு எதிரொலிக்கின்றன. கர்ப்பமாக இருக்கும் காலத்தில் ஒரு பெண் உட்கொள்ளும் உணவானது நிச்சயம் குழந்தையைப் பாதிக்கத்தான் செய்யும். இதற்குப் பின்னாலும் குழந்தை வயிற்றுக்குள் நிறைய ருசியான உணவுப் பண்டங்களைத் தாய் திணிக்கிறாள். தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் உணவுப் பொருளில் குழந்தைக்கு ஒரு சிறிது கொடுத்துக் கொண்டேயிருக்கிறாள். இதனால் குழந்தையின் ஜீரணக்கருவிகள் அப்பருவத்திலிருந்தே தவறான இயல்புடையவையாகி விடுகின்றன. ஒரு தடவை ஒரு பழக்க வழக்கம் உண்டாகிவிட்டால் அதைப் போக்குவதென்பது கடினம். ஒரு சிலர்தான் கெட்ட பழக்க வழக்கங்களை அகற்றுவதில் வெற்றி பெறுகிறார்கள். ‘‘நானே எனக்கு மெய்க் காவலன்.

என்னுடைய உடல் சேவைக்காகப் படைக்கப்பட்டது'' என்ற உணர்வு ஒரு மனிதனுக்கு ஏற்பட்டு விடும்போது உடம்பை நல்ல நலத்துடன் வைத்திருப்பதற்கான விதிமுறைகளைக் கற்றுக் கொள்ள விரும்புகிறான்; அவைகளைக் கடைப்பிடிக்கவும் கஷ்டப்பட்டு முயற்சி செய்கிறான்.

உணவின் அளவு

பல்வேறு வகை உணவுகளும் ஒரு மனிதனுக்கு எந்த அளவுக்குத் தேவை என்பதைக் கவனிக்க வேண்டிய கட்டத்துக்கு நாம் வந்துவிட்டோம். இந்த நூலைப் படிப்பவர்களில் பெரும்பாலான ஆண்களும் பெண்களும் அதிகச் சரீர உழைப்பு இல்லாதவர்களாய் இருப்பார்கள். ஆகையால், இவர்களுடைய உணவுப் பொருட்கள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம் :-

பசும்பால்	2 இராத்தல்
உணவுத் தானியங்கள் (கோதுமை, அரிசி, கம்பு எல்லாம்)	6 அவுன்சு
கீரை	3 அவுன்சு
காய்கறி	5 அவுன்சு
பச்சைக் காய்கறி	1 அவுன்சு
நெய்	1½ அவுன்சு
(அல்லது) வெண்ணெய்	2 அவுன்சு
வெல்லம் அல்லது வெள்ளைச் சர்க்கரை	1½ அவுன்சு

ஒருவருடைய விருப்பத்துக்கும் அவரால் செலவிட முடிந்த அளவுக்கும் ஏற்றவாறு பழம் சாப்பிடலாம். ஒரு நாளைக்கு இரண்டு எலுமிச்சம் பழம் சாப்பிடுவது நல்லதாகும். எலுமிச்சம் பழச்சாறைப் பிழிந்து காய்கறிகளுடன் சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது தண்ணீரிலேயோ, வெந்நீரிலேயோ கலந்து சாப்பிடலாம்.

நான் மேலே குறிப்பிட்டுள்ள நிறுவைகளெல்லாம் சமைக்கும் முன்பு உள்ள நிறுவைகள். எவ்வளவு உப்புச் சேர்க்க வேண்டும் என்பதை நான் கூறவில்லை. ஒருவர் ருசிக்கு ஏற்றபடி கடைசியில் உப்பைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

3 வேளைச் சாப்பாடு

ஒரு நாளைக்கு ஒருவன் எத்தனை தடவை சாப்பிடுவது என்ற பிரச்னைக்கு இப்போது வருவோம். அநேகர் ஒரு நாளைக்கு இரண்டு முறை சாப்பிடுகிறார்கள். மூன்று முறை சாப்பிட வேண்டும் என்பது பொது விதி; காலையில் வேலைக்குப் போகும் முன்பு சாப்பிடும் ஆகாரம், மதிய உணவு, மாலை அல்லது இரவில் இரவுச் சாப்பாடு. மூன்று வேளைக்கு மேல் சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை. நகரங்களில் சிலர் ஓயாது மென்று கொண்டேயிருக்கிறார்கள். இந்தப் பழக்கம் தீங்கு பயக்கக் கூடியது. ஜீரணக் கருவிகளுக்கு ஓய்வு வேண்டும்.[1]

அத்தியாயம் 26

கிராமப் பாதுகாப்பு

சாந்தி சேனை

கலவரங்களை - குறிப்பாக, வகுப்புக் கலவரங்களைச் சமாளிப்பதில் தங்களுடைய உயிரையும் பலிகொடுக்கக் கூடியவர்களைக் கொண்ட ஒரு சாந்தி சேனையை அமைக்க வேண்டும். சில காலத்திற்கு முன்பு நான் இந்த யோசனை யைக் கூறினேன். அவ்வாறு நான் கூறியதன் நோக்கம், இந்தப் படை, போலீசாருக்குப் பதிலாக, ஏன் இராணுவத் திற்குப் பதிலாகக் கூடப் பணியாற்ற வேண்டும் என்பதே. இது அளவுக்கு மீறிய ஆசை எனக் கருதப்படலாம். இது சாதிக்க முடியாததாகவும் இருக்கலாம். ஆயினும் காங்கிரஸ் தனது அஹிம்சைப் போராட்டத்தில் வெற்றியடைய வேண்டுமானால், இப்படிப்பட்ட நிலைமைகளைச் சமாதானமாகச் சமாளிக்கத் தகுந்த சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தகுதிகள்

ஆகவே, இவ்வித சாந்தி சேனையில் உறுப்பினனாக விரும்பும் ஒருவனுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

(1) அவனுக்கு அஹிம்சையில் அழியாத நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால் இதுவோ ஆண்டவன்மீது ஆழ்ந்த நம்பிக்கை இல்லாமல் சாத்தியமில்லை. கடவுளின் சக்தியும் கிருபையும் இல்லாது, அஹிம்சாவாதி எதுவும் செய்ய முடியாது. அவை இல்லாவிட்டால், கோபமோ அச்சமோ இன்றி பதிலுக்குப் பதில் எதுவும் செய்யாமல் சாகும் தைரியம் அவனுக்கு வராது. கடவுள் எல்லோருடைய இதயத்திலும் இருக்கிறார். கடவுள் முன்னிலையில் பயம் என்பதே இல்லை என்ற நம்பிக்கையிலிருந்து தான் இவ்விதத் தைரியம் ஏற்படுகிறது. கடவுள் எங்கும் இருக்கிறாராதலால், எதிரிகள் என்றும் குண்டர்கள் என்றும் கூறப்படுபவர்கள் உயிருக்கும் நாம் மதிப்பு வைக்க வேண்டும் என்றாகிறது. மனிதனுடைய மிருக சக்தி அதிகமாகி அவனுடைய கோபம்

மிகும்போது அதை அமைதிப்படுத்த இவ்வித எண்ணம் உதவுகிறது.

(2) உலகிலுள்ள முக்கியமான மதங்களையெல்லாம் இந்தச் சமாதானத் தூதுவன் சமமாக மதிக்கவேண்டும். உதாரணமாக, அவன் ஒரு இந்துவாயிருந்தால் இந்தியாவில் உள்ள மற்ற மதங்களுக்கு அவன் மரியாதை செலுத்த வேண்டும். ஆகையால் நாட்டில் உள்ள மற்ற மதங்களின் முக்கிய கோட்பாடுகளை அவன் அறிந்திருக்க வேண்டும்.

(3) பொதுவாகக் கூறினால், ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்கள் அந்தந்தப் பகுதிகளில் தான் இந்தச் சமாதான சேவையைச் செய்ய முடியும்.

(4) தனிப்பட்ட ஒருவராக இருந்து இந்தச் சேவையைச் செய்யலாம். கூட்டமாகச் சேர்ந்தும் செய்யலாம். ஆகையால் யாரும் சகாக்களுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. எனினும் ஒருவர் தன் பகுதியில் உள்ள சகாக்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு படையை அமைப்பார்.

(5) இந்த சமாதானத் தூதுவர், தான் வாழும் பகுதியிலோ அல்லது தான் சேவை செய்யும் பகுதியிலோ உள்ள மக்களுடன் பழகித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் கலகம் ஏற்படும் சமயத்தில் அவர் அந்த இடத்துக்குச் சென்றால், கூட்டத்தில் இருப்பவர்கள் அவரை ஒரு அந்நியர் என்றோ, சந்தேகிக்கப் படத்தக்கவர் என்றோ, விரும்பத் தகாதவர் என்றோ கருத மாட்டார்கள்.

(6) சமாதானத் தூதுவர், யாருங் குறைகூற முடியாதவாறு பரிசுத்தமான ஒழுக்கமுடையவராய் இருக்க வேண்டும்; பாரபட்சமற்ற முறையில் கண்டிப்பாக நடந்து கொள்வார் என்ற பெயர் பெற்றவராய் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை.

(7) பொதுவாகப் புயல் வருமுன், அதன் அறிகுறி தோன்றும். ஆகவே, ஏதாவது கலவரம் நடக்கப் போவதற்கான அறிகுறிகள் தோன்றினால், கலவரம் வரட்டும் என்று சாந்தி சேனை காத்திருக்காது. முன்கூட்டியே நிலைமையைச் சமாளிக்கும் பணியில் முனைந்துவிடும்.

(8) இந்த இயக்கம் வளர்ச்சியடைந்தால் முழுநேர ஊழியர்கள் சிலர் இருப்பது நல்லதுதான். ஆனாலும் கட்டாயம் முழுநேர ஊழியர்கள் இருந்தாக வேண்டும் என்பதில்லை. அதாவது, எவ்வளவு அதிகப்படியான நல்ல, உண்மையான ஆண்களையும் பெண்களையும் சேர்க்க வேண்டுமோ, அவ்வளவு அதிகமானவர்களைச் சேர்க்க வேண்டும் என்பது நோக்கம். இது சாத்தியமாக வேண்டுமானால், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் இருப்பவர்கள் தொண்டர்களாகச் சேர வேண்டும். தங்கள் தங்கள் பகுதிகளில் வாழும் மக்களுடன் நல்லுறவுத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்போதுமான ஓய்வு உள்ளவர்கள் தொண்டர்களாகச் சேர வேண்டும். மற்ற வகைகளிலும் சாந்தி சேனை உறுப்பினர்களாகச் சேருவதற்கு வேண்டிய தகுதி உள்ளவர்களாக இவர்கள் இருக்க வேண்டும்.

(9) சாந்தி சேனையைச் சேர்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். அப்போது தான், காலப்போக்கில் எவ்விதச் சிறு கஷ்டமும் இல்லாமல் இவர்களை அடையாளம் தெரிந்து கொள்ள முடியும்.

இவைகளெல்லாம் பொதுவான ஆலோசனைகள் தான். இவைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு சாந்தி சேனை நிலையமும் தனது சொந்த விதியமைப்பை வகுத்துக் கொள்ளலாம்.

போலீஸ் படை பற்றி என் கருத்து

ஒரு அஹிம்சை அரசாங்கத்தில் கூட, போலீஸ் படை அவசியமாகவே இருக்கும். இவ்வாறு நான் கூறுவது, பூரணத்துவம் அடையாத என்னுடைய அரைகுறை அஹிம்சையின் ஒரு சின்னமாக இருக்கலாம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இராணுவம் இல்லாமல் நாம் வாழ முடியும் என்று கூற எனக்குத் தைரியம் இருக்கிறது. ஆனால் அதைப் போன்று போலீஸ் படையில்லாமல் நாம் வாழ முடியும் என்று கூற எனக்குத் தைரியம் வரவில்லை. போலீஸ் அவசியமில்லாத ஒரு காலத்தை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது; கற்பனை செய்தும் பார்க்கிறேன். ஆனால்

அதை அடைவதில் நாம் வெற்றி பெறுவோமா என்பதை எதிர்காலம் தான் நமக்கு உணர்த்தவேண்டும்.

அஹிம்ஸைப் போலீஸ்

நான் கற்பனை செய்யும் போலீஸ் படையானது நாம் இப்போது பார்க்கும் போலீஸ் படையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவர்களே அதில் இருப்பார்கள். அவர்கள் மக்களுடைய ஊழியர்களாக இருப்பார்களே தவிர எஜமானர்களாக இருக்க மாட்டார்கள். மக்கள் இயற்கையாகவே அவர்களுக்கு எல்லா வகையான உதவிகளும் செய்வார்கள். பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம், கலவரங்களை எளிதாகப் போலீசார் சமாளிப்பார்கள். கலவரங்கள் நடைபெறுவதும் குறைந்து கொண்டு போகும். போலீஸ் படையிடம் ஏதாவது ஒரு வகை ஆயுதம் இருக்கும். ஆனால் அது உபயோகப்படுத்தப்பட மாட்டாது. அப்படியே உபயோகப்படுத்தப்பட்டாலும் மிக அபூர்வமாகவே உபயோகப்படுத்தப்படும். உண்மையில் போலீஸ்காரர்கள் சீர்திருத்தவாதிகளாய் இருப்பார்கள். திருடர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியோருடைய விஷயத்தில் மட்டுந்தான் போலீஸ் வேலை நடைபெறும். அஹிம்சை அரசாங்கத்தில் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே நடைபெறும் சச்சரவுகள் குறைவாக இருக்கும். வேலை நிறுத்தங்களும் மிகமிகக் குறைவாக இருக்கும். ஏனென்றால், அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவர்கள் மிகப் பெரும்பாலானவர்களாய் இருப்பார்கள். சமுதாயத்தில் உள்ள முக்கிய சக்திகளின் நன்மதிப்பைப் பெற்றவர்களாய் அவர்கள் இருப்பார்கள். அதே போன்று, வகுப்புவாதக் கலவரங்களுக்கும் இடம் இருக்காது.[2]

அஹிம்ஸைத் தொண்டர் படை

நான் தூண்டியதன் பேரில், சிறிது காலத்திற்கு முன்பு சாந்தி தளங்கள் அமைக்க முயற்சி நடந்தது. ஆனால் ஒருவிதப் பலனும் ஏற்படவில்லை. ஆயினும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டோம். இப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்க முடியாது என்பதுதான் அப்படிப்பினை. சாதாரணமாக,

இம்சையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பெரிய தொண்டர் படை திறமையுடன் செயலாற்ற வேண்டுமானால், அதன் கட்டுப்பாடு மீறப்படும்போது அது இம்சையைப் பிரயோகிக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட அமைப்புகளில் மனிதனுடைய ஒழுக்கத்துக்கு முக்கியத்துவமே கொடுப்பதில்லை. உடல் பலம்தான் முக்கிய அம்சம். அஹிம்சை ஸ்தாபனங்களில் இதற்கு மாறான நிலைமை இருக்க வேண்டும். அவைகளில், ஒழுக்கம் அல்லது ஆன்மீக சக்திக்குத்தான் எல்லாவிதமான உயர்வும் அளிக்கப்பட வேண்டும். உடல் பலத்துக்கு இரண்டாவது இடம்தான் அளிக்க வேண்டும். இவ்வாறு ஒழுக்கம் அல்லது ஆன்மீக சக்தி உள்ள பலரை நாம் பார்க்க முடியாது. ஆகவேதான் அஹிம்சைப் படை ஒன்று திறமையுடன் செயலாற்ற வேண்டுமானால், அது சிறிதாக இருக்க வேண்டியிருக்கிறது. இவைகள் நாடெங்கும் பரவலாக அமைக்கப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு கிராமம் அல்லது மொகல்லாவிற்கும் ஒன்றுவீதம் அமைக்கப்பட்டிருக்கலாம். இதில் உள்ள உறுப்பினர்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு படையும் அதன் தலைவரைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும். எல்லா அங்கத்தினர்களுக்கும் சம அந்தஸ்து இருக்கும். ஆனால் பலர் ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும் ஒரு இடத்தில், எல்லோரும் கட்டுப்பாட்டுடன் பணியக்கூடிய ஒரு தலைவர் இருக்கவேண்டும். இல்லையேல் வேலை சரிவர நடைபெறாது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படைகள் இருக்கும்போது, அவற்றின் தலைவர்கள் தங்களுக்குள் கலந்து ஆலோசித்துக் கொள்ளவேண்டும்; பொதுவாக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தான் வெற்றி கிட்டும்.

உடற்பயிற்சி

மேற்கண்ட வழி துறைகளில் அஹிம்சைத் தொண்டர் படை அமைக்கப்பட்டால், எந்தக் கலவரம் அல்லது தொந்தரவையும் அவை எளிதாக நிறுத்திவிடும். குஸ்திச் சண்டையில் அளிக்கப்படும் எல்லாவித உடற்பயிற்சிகளும்

இப்படிப்பட்ட படைக்குத் தேவைப்படாது. ஆனால் அதில் ஒரு பகுதி அவசியமாய் இருக்கும்.

கடவுள் நம்பிக்கை

இப்படிப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக் கெல்லாம் பொதுவாக இருக்கவேண்டிய ஒரு குணாம்சம் இருக்கிறது. அதுதான் ஆண்டவனிடம் அழியாத நம்பிக்கை. அவர்தான் நம்முடைய ஒரே சகா. அவர்தான் எல்லாவற்றையும் இயக்குபவர். அவரிடம் நம்பிக்கை இல்லாமல் இந்த சாந்தி சேனைகளெல்லாம் உயிரற்றவை யாகிவிடும். ஒருவர் ஆண்டவனை என்ன பெயரிட்டு அழைத்தாலும் சரி, அவனுடைய பலத்தின் மூலந்தான் பணியாற்ற முடியும் என்பதை உணரவேண்டும். அப்படிப்பட்ட மனிதர் ஒரு போதும் மற்றொருவருடைய உயிரைப் பலிவாங்க மாட்டார். தான் பிறரால் கொல்லப் படுவதாயிருந்தாலும் அதை ஏற்கத் தயாராயிருப்பார். அதன் மூலம் மரணத்தையும் வெற்றி கண்டு உயிர் வாழ்வார்.

குழப்பம் இருக்காது

இவ்வித உணர்வு வரப்பெற்ற ஒரு மனிதருடைய மனமானது நெருக்கடியான சூழ்நிலையிலும் குழப்பம் அடையாது. எது சரியான வழி என்பதை அவர் இயல்பாகவே உணர்ந்து செயல்படுவார்.

சில விதிகள்

எனினும் நான் மேலே கூறியவைகளெல்லாம் ஒருபுறம் இருக்க என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சில விதிமுறைகளைக் கூற விரும்புகிறேன் :

1. ஒரு தொண்டர் எந்தவிதமான ஆயுதமும் கொண்டு செல்லக்கூடாது.

2. சாந்தி சேனையைச் சேர்ந்தவர்களை அடையாளங் கண்டு கொள்வது எளிதாயிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தொண்டரும் முதல் உதவி அளிப்பதற் காக, காயக்கட்டுத் துணிகள், கத்திரி, நூல், ஊசி, இரண சிகிச்சைக் கத்தி முதலியவைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

4. காயமடைந்தவர்களை எவ்வாறு தூக்கிச் சென்று அப்புறப்படுத்துவது என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும்.

5. எவ்வாறு நெருப்பை அணைப்பது, எவ்வாறு தன்னைக் காயப்படுத்திக் கொள்ளாமல் தீப்பிடித்த பகுதிக்குள் நுழைவது, நிவாரண வேலைகளுக்காக உயரமான இடங்களுக்கு ஏறிப் பத்திரமாக இறங்குவது எப்படி என்பதெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

6. தனது பிராந்தியத்தில் வாழ்பவர்களையெல்லாம் அவர் நன்றாக அறிந்திருக்க வேண்டும். (இதுவே ஒரு சேவைதான்).

7. அவர் ஓயாது இராமநாமத்தை மனதிலேயே சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். நம்பிக்கையுள்ள மற்றவர்களும் அவ்வாறு சொல்லுமாறு செய்ய வேண்டும்.

மனிதன் பெரும்பாலும் கிளிப்பிள்ளையைப் போன்று ஆண்டவன் பெயரை உச்சரிக்கிறான். அவ்வாறு செய்வதற்குப் பலன் கிடைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறான். ஆனால் உண்மையான பக்தனுக்கு அசையாத நம்பிக்கை வேண்டும். இவ்வித நம்பிக்கையானது, கிளிப்பிள்ளை போன்று மனனம் செய்யும் அசத்தியம் அவனுக்குள்ளேயிருந்தால் அதைப் போக்கி விடும். அது மட்டுமல்ல, பிறருடைய உள்ளங்களிலிருந்தும் போக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கும்.[3]

அத்தியாயம் 27

கிராம ஊழியர்

இலட்சிய கிராம ஊழியர்

வேலையையும் வாழ்க்கையையும் குறித்து, நீங்கள் கருத்தில் கொண்டு உழைக்க வேண்டிய இலட்சியத்தைப் பற்றி உங்களிடம் நான் பேச விரும்புகிறேன்.

ஊழியம் உத்தியோகமல்ல

தற்போதுள்ள கருத்துப்படியான உத்தியோகத்திற்காக நீங்கள் இங்கு வரவில்லை. இன்று மனிதனின் மதிப்பு ரூபாய், அணா பைசாக்களில் மதிப்பிடப்படுகிறது. ஒருவனுடைய கல்விப் பயிற்சியானது வர்த்தகப் பொருளாக இருக்கிறது. உங்கள் மனதிலும் அந்த அளவுகோலுடன் நீங்கள் வந்திருந்தீர்களானால், நீங்கள் நிச்சயம் ஏமாற்றமடையத் தான் செய்வீர்கள். உங்களுடைய படிப்புக்குப் பின், உங்களுக்குக் கௌரவ ஊதியமாகப் பத்து ரூபாய் கிடைக்கும். அந்தச் சம்பளம் அப்படியே உயராமல் நின்றுவிடும். ஒரு பெரிய தொழிற்சாலையின் நிருவாகியோ அல்லது ஒரு உயர்தர அதிகாரியோ வாங்கும் சம்பளத்துடன் நீங்கள் அதை ஒப்பிட முடியாது.

சில புதுத் தராதரங்கள்

தற்போது நிலவும் சில தராதரங்களை நாம் மாற்ற வேண்டியிருக்கிறது. நாங்கள் உங்களுக்குப் பட்டம், பதவி எதையும் தருவதாக உறுதி கூறவில்லை. உண்மையில், இப்படிப்பட்ட ஆசையிலிருந்து உங்களைத் திருப்பவே விரும்புகிறோம். உங்களுடைய உணவுக்காகும் செலவை மாதம் 6 ரூபாய்க்குள் கட்டுப்படுத்தி விட வேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஒரு ஐ.சி.எஸ். அதிகாரியின் உணவுக்கு மாதம் 60 ரூபாய் ஆகலாம். ஆனால் அதற்காக அவர் உடல் நலனிலோ, அறிவிலோ, தார்மிக ரீதியிலோ உங்களைக் காட்டிலும் உயர்ந்தவராயிருப்பார் என அர்த்த மாகாது. இவ்வளவு அதிகமான செலவுள்ள வாழ்க்கை

நடத்தினாலும், அவர் இந்த விஷயங்களில் உங்களுக்கு மட்டமாக இருக்கக் கூடும். நீங்கள் உங்களுடைய தகுதிகளைப் பணங்காசுகளில் அளந்து பார்க்கவில்லை யென்பது இந்த ஸ்தாபனத்துக்கு வந்ததிலிருந்தே தெரிகிறது என்று நான் நம்புகிறேன். சொற்பத் தொகை பெற்றுக் கொண்டு நாட்டிற்கு உங்களுடைய சேவையை அளிப்பதில் நீங்கள் பேரானந்தம் அடைகிறீர்கள். பங்கு மார்க்கெட்டில் ஒருவர் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பாதிக்கலாம்; அதே சமயம் நம்முடைய காரியங்களுக்கு அவர் உபயோகமற்ற வராய் இருக்கலாம். நம்முடைய அடக்கமான சூழ்நிலைகளில் அவர் சந்தோஷமாய் இருக்க முடியாது; அவருடைய சூழ்நிலைகளில் நாமும் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது. நாட்டின் இலட்சியத்திற்காகப் பாடுபடக்கூடிய முன்னுதாரண மான தொழிலாளர்கள் நமக்குத் தேவை. என்ன உணவு கிடைக்கிறது, தாங்கள் தொண்டு செய்யும் கிராமவாசிகள் தங்களுக்கு என்னென்ன வசதிகள் அளிப்பதாக உறுதி கூறுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். தங்களுக்குத் தேவையான வற்றிற்கு ஆண்டவனையே நம்பித் தங்களுக்கு வரும் சோதனைகள், இக்கட்டுகள் ஆகியவற்றிலெல்லாம் அவர்கள் வெற்றி பெறுவார்கள். நாம் அக்கறைப்பட வேண்டிய ஏழு இலட்சம் கிராமங்கள் நம் நாட்டில் இருக்கும்போது இது தவிர்க்க முடியாதது. ஒழுங்கான சம்பள உயர்வு, சேமிப்பு நிதி, ஓய்வுகால ஊதியம் ஆகியவற்றிலெல்லாம் ஒரு கண் வைத்திருக்கும் ஊழியர்களை - சம்பளம் வாங்கும் ஊழியர்களை - வைத்து வேலை வாங்க நம்மால் முடியாது. கிராமவாசிகளுக்கு விசுவாசமாகச் சேவை செய்வதுதான், அவர்களுக்கு கிடைக்கும் திருப்தி.

கிராமவாசிகளுக்கு இந்நிலையில்லை

''இதுதான் கிராமவாசிகளின் நிலையுமா?'' என்று உங்களில் சிலர் கேட்க விரும்பலாம். இல்லவே இல்லை. இந்தக் கஷ்ட நஷ்டங்களெல்லாம் ஊழியர்களாகிய நமக்கே யொழிய எஜமானர்களாகிய கிராமவாசிகளுக்கல்ல. இத்தனை வருஷங்களாக நாம் அவர்கள் முதுகின் மேல் குதிரை ஏறி உட்கார்ந்து கொண்டிருந்திருக்கிறோம்.

நம்முடைய எஜமானர்களுடைய நிலை இன்றிருப்பதைக் காட்டிலும் நன்கு அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதற்காக நாமாகவே முன்வந்து அதிக வறுமையை ஏற்க விரும்புகிறோம். இன்று சம்பாதிப்பதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாக அவர்கள் சம்பாதிக்க, நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். கிராமக் கைத்தொழில் சங்கத்தின் நோக்கமே இதுதான். நான் முன்னால் விவரித்துள்ளது போன்ற ஊழியர்கள் நிறையக் கிடைத்தாலொழிய அது வளம் பெற முடியாது. நீங்கள் அப்படிப்பட்ட ஊழியர்களாய் இருப்பீர்களாக!

இருக்க வேண்டிய தகுதிகள்

[ஒவ்வொரு சத்தியாக்கிரகிக்கும் கீழேயுள்ள தகுதிகள் இருக்க வேண்டுமென காந்திஜி கூறியிருக்கிறார். மகாத்மா கருத்தின்படி கிராம ஊழியரும் ஒரு உண்மையான சத்தியாக்கிரகி யாகையால், இந்தத் தகுதிகள் ஊழியருக்கும் பொருந்தும்.]

- ஆசிரியர்

1. கடவுளிடம் அவருக்கு அழியாத நம்பிக்கை இருக்க வேண்டும்; ஏனென்றால் ஆண்டவன்தான் அவருடைய ஒரே புகலிடம்.

2. சத்தியத்தையும் அஹிம்சையையும் தன்னுடைய மதக்கோட்பாடாக அவர் கொள்ள வேண்டும். ஆகவே, மனித இயற்கையில் இயல்பாகவுள்ள நல்ல குணத்தில் நம்பிக்கை வைத்து, எந்தக் கஷ்டத்தையும் தான் ஏற்க முன்வர வேண்டும். அதன் மூலம் தனது சத்தியத்தையும் அன்பையும் வெளிப்படுத்திப் பிறருடைய நல்ல குணத்தைத் தூண்ட முயல வேண்டும்.

3. தூய்மையான வாழ்க்கை வாழ வேண்டும். தன்னுடைய இலட்சியத்துக்காகத் தனது உயிரையும் பொருளையும் மனப்பூர்வமாகத் தத்தம் செய்யத் தயாராய் இருக்க வேண்டும்.

4. வழக்கமாகக் கதர் அணிபவராகவும், நூல் நூற்பவராகவும் இருக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை இது முக்கியம்.

5. அவர் மது அருந்துபவராக இருக்கக் கூடாது. போதை தரும் மற்ற பொருட்களையும் விலக்கிவிட வேண்டும். அப்போது தான் அவருடைய பகுத்தறிவு தெளிவாகவும் மனம் கலங்காமலும் இருக்கும்.

6. அவ்வப்போது பிறப்பிக்கப்படும் கட்டுப்பாடுகளை மனமுவந்து நிறைவேற்றி வைக்க வேண்டும்.

இவை தவிர வேறு தகுதிகளும் இருக்கின்றன; மாதிரிக்காகவே இவைகள் கூறப்பட்டுள்ளன.

ஊழியர் கடமைகள்

1. ஒவ்வொரு ஊழியரும், தானே நூற்ற நூலிலிருந்து நெய்யப்பட்ட கதரையோ அல்லது அகில இந்திய நூல் நூற்போர் சங்கத்தின் அத்தாட்சி பெற்ற கதரையோ வழக்கமாக அணிபவராய் இருக்க வேண்டும். மதுவை விலக்க வேண்டும். ஒரு இந்துவாக இருந்தால் எந்த முறையிலும் அவரோ அல்லது அவருடைய குடும்பமோ தீண்டாமையை அனுஷ்டிக்கக் கூடாது. வகுப்பு ஒற்றுமையிலும், மத சமத்துவத்திலும், இன, மத, பால் வேறுபாடு இல்லாது எல்லோருக்கும் சம வாய்ப்பும் அந்தஸ்தும் இருக்க வேண்டுமென்பதிலும் நம்பிக்கை உள்ளவராய் இருக்க வேண்டும்.

2. தமது பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராமவாசியுடனும் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும்.

3. கிராமவாசிகளிலிருந்து ஊழியர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும்; அவர்களுடைய பட்டியலைத் தயாரித்து வைத்திருக்க வேண்டும்.

4. அன்றாடம் செய்யும் வேலைகளைப் பதிவு செய்து வைக்க வேண்டும்.

5. விவசாயத்தின் மூலமும் கைவேலைப்பாட்டுத் தொழில்கள் மூலமும் கிராமங்களை சுய ஆதரவும் சுய தேவைப் பூர்த்தியும் உள்ளவைகளாக்க வேண்டும். இதற்காகக் கிராமங்களை அவர் ஒருங்கு திரட்ட வேண்டும்.

6. கிராம மக்களுக்குச் சுகாதாரத்தையும் உடல் நலத்தையும் போதிக்க வேண்டும். அவர்கள் மத்தியில் உடல்

நலக் குறைவோ நோயோ ஏற்படாது தவிர்க்க எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும்.

7. இந்துஸ்தானி தாலிமி சங்கம் வகுத்துள்ள கொள்கையின்படி, கிராமவாசிகளுக்குப் பிறப்பிலிருந்து இறப்பு வரை ஆதாரக் கல்வி முறையில் கல்வி கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

8. சட்டபூர்வமான வாக்காளர் பட்டியலிலிருந்து விட்டுப் போன பெயர்கள் உரிய முறையில் காலாகாலத்தில் அதில் இடம் பெறுமாறு செய்ய வேண்டும்.

9. வாக்குரிமைக்கு வேண்டிய சட்டபூர்வமான தகுதிகளை ஏற்கனவே பெறாதவர்கள் அவைகளைப் பெறுமாறு ஊக்குவிக்க வேண்டும்.[3]

கிராம சேவை

மையம் இராட்டைதான்

கிராம ஊழியர்களின் வாழ்க்கையில் மையமாக இருப்பது கைராட்டினந்தான். கதரின் பின்னணியில் இருக்கும் தத்துவம், அது விவசாயத்திற்கு ஒரு உப தொழிலாக இருக்கிறதென்பதும் அதனுடன் சேர்ந்து மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்பதுந்தான். நம் கிராமங்களில் உள்ள சோம்பேறித்தனத்தைப் போக்கி, ஒவ்வொரு கிராமத்தையும் ஒரு தேன்கூடு போன்று சுறுசுறுப்புள்ள இடமாக மாற்றும்வரை, நம் வாழ்க்கையில் இராட்டைக்குரிய இடத்தை நிலையாக அளித்துவிட்டோம் என்று கூற முடியாது.

2 ஆழாக்கு உற்பத்தி

கிராம ஊழியரானவர், ஒழுங்காக நூல் நூற்பது மட்டும் அல்லாது, தன் உணவுக்காக தன் வசதிப்படி வாய்ச்சி அல்லது மண்வெட்டி அல்லது செருப்புத் தைக்கும் கருவி கொண்டு வேலை செய்வார். ஓய்வு பெறும் நேரம், தூங்கும் நேரம் ஆகிய எட்டுமணி நேரம் தவிர மீதி நேரமெல்லாம், ஏதாவதொரு வேலையில் பூரணமாக ஈடுபட்டிருப்பார். வீண்பொழுது போக்க அவருக்கு நேரமிருக்காது. அவர் தானும் சோம்பேறியாக இருக்கமாட்டார்; பிறர் சோம்பேறியாய் இருப்பதையும் அனுமதிக்க மாட்டார்.

உற்சாகமாகப் பாடுபடக் கூடிய ஓயாத உழைப்பில் அவருடைய அண்டை அயலாருக்கு அவருடைய வாழ்க்கை ஒரு நிதரிசன முன்னுதாரணமாயிருக்கும். கட்டாயத்தின் பேரிலோ அல்லது நாமாகவோ சோம்பேறித்தனத்துக்கு இடமளித்து விடக்கூடாது. சோம்பேறித்தனம் நீங்காவிட்டால், எந்தப் பரிகாரமும் பயன்படாது. தற்போதுள்ளதைப் போன்றே என்றென்றும் அரைப்பட்டினி ஒரு பிரச்னையாக இருந்து கொண்டிருக்கும். ஒரு ஆழாக்கு உண்பவர் இரண்டு ஆழாக்கு உற்பத்தி செய்ய வேண்டும். இந்த விதியை நாம் ஏற்றுக் கொண்டாலொழிய, எந்த அளவுக்குத்தான் நாம் நமது ஜனத்தொகையைக் குறைத்தாலும் அது பிரச்னையைத் தீர்க்காது. அதே சமயம், இந்த விதியை ஏற்று அனுஷ்டித்தாலோ, இதற்கு மேலும் கோடிக்கணக்கான மக்களுக்கு நாம் சாப்பாடு போட முடியும்.

ஊழியர் வேலைகள்

இவ்வாறாக, கிராம ஊழியரானவர் உழைப்பின் உயிருள்ள சின்னமாய் இருப்பார். பருத்தி விதை விதைப்பது, பருத்தி எடுப்பது ஆகியவற்றிலிருந்து நெசவு வரையான எல்லா வேலைகளிலும் அவர் நிபுணத்துவம் பெறுவார். அவைகளை நூற்றுக்கு நூறு சரிவரச் செய்வதிலேயே அவருடைய சிந்தனையையெல்லாம் செலுத்துவார். அவர் அதை ஒரு விஞ்ஞானமாகக் கொண்டாரானால் அது அவருக்கு வெறுப்பைத் தராது. அதனுடைய மகத்தான சாத்தியக் கூறுகளையெல்லாம் அவர் மேலும் மேலும் உணருவதற்கேற்ப அவருக்கு அதிலிருந்து நாள்தோறும் புது இன்பம் கிடைக்கும். அவர் கிராமத்துக்கு ஒரு ஆசிரியராகச் சென்றாலும் அதே அளவுக்கு மாணவராகவும் போவார். எளிய கிராமவாசிகளிடமிருந்து எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை விரைவில் கண்டு கொள்வார். கிராம வாழ்க்கையின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் அலசி ஆராய்வார். கிராமக் கை வேலைப்பாட்டுத் தொழில்களைப் புதிதாகக் கண்டுபிடிப்பதுடன் அவைகளின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான சாத்தியக் கூறுகளைப் பற்றியும் ஆராய்வார். அவர் கதரைப் பற்றிய விஷயங்களில் கிராமவாசிகள் கொஞ்சங்கூட அக்கறையில்லாமல்

இருப்பதைக் காணக்கூடும். ஆனாலும் அவர் தன்னுடைய சேவை நிறைந்த வாழ்க்கையினால் அதில் கட்டாயம் அக்கறையும் கவனமும் இருக்குமாறு செய்வார். நிச்சயமாக அவர் தனது வரம்பை மறக்கமாட்டார். அவரைப் பொறுத்தவரை, விவசாயிகள் கடன்பட்டிருப்பதைத் தீர்க்கும் வீண் வேலையிலும் ஈடுபடமாட்டார்.

துப்புரவும் உடல் நலமும்

துப்புரவும் சுகாதாரமும் அவர் கவனத்தில் பெரும் பகுதியைக் கவரும். அவருடைய வீடும் சுற்றுப்புறங்களும் சுத்தத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருக்கும். அது மட்டுமல்லாது, அவரே துடைப்பத்தையும் கூடையையும் எடுத்துச் சென்று கிராமம் முழுவதிலும் துப்புரவு வளர்ச்சியடைய உதவுவார்.

வைத்தியசாலை வேண்டாம்

கிராம ஆஸ்பத்திரி எதையும் நிறுவவோ அல்லது கிராம டாக்டர் ஆகவோ அவர் முயற்சி செய்யமாட்டார். இந்தப் படுகுழிகளில் விழாமல் தப்பவேண்டும். என்னுடைய ஹரிஜன சுற்றுப் பிராயணத்தின் போது தற்செயலாக நான் சென்ற ஒரு கிராமத்தில் ஒருவர் - இவருக்கு இன்னும் நல்ல யோசனை இருந்திருக்க வேண்டும் - ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி அதில் ஆஸ்பத்திரி வைத்து, சுற்றுப்புற கிராமங்களுக்கு இலவசமாக மருந்துகளை விநியோகித்துக் கொண்டிருந்தார். உண்மையில் இந்த மருந்துகளை ஊழியர்கள் வீடு வீடாகக் கொண்டுபோய்க் கொடுத்துப் வந்தார்கள். அந்த ஆஸ்பத்திரியில் மாதந்தோறும் 12,00 நோயாளிகள் மருந்து வாங்குவதாய்ப் பதிவாகியிருப்பதாக பெருமை பாராட்டிக் கொள்ளப்பட்டது. எனத இயல்பின்படியே நான் இதை வன்மையாகக் கண்டித்தேன் இது கிராம சேவை செய்யும் வழியல்லவென்று அவரிட கூறினேன். கிராமவாசிகளின் மத்தியில் உடல் நலத்தையும் சுகாதாரத்தையும் பற்றிய பாடங்களைப் போதிக்க வேண்டும் அதன்மூலம், வந்த நோயைக் குணப்படுத்துவதற்கா முயற்சிக்குப் பதிலாக நோயைத் தடுப்பதற்கான வ வகைகளை எடுத்துரைக்க வேண்டும். இதுதான் அவர

கடமை. பெரிய அரண்மனை போன்ற அந்தக் கட்டிடத்தை விட்டுக் காலிசெய்யுமாறும், அதை ஸ்தல ஸ்தாபனத்துக்கு வாடகைக்கு விட்டுவிடுமாறும், கூரை வேய்ந்த குடிசையில் போய் வாழுமாறும் நான் அவரைக் கேட்டுக் கொண்டேன். மருந்துகள் என்ற முறையில் ஒருவர் இருப்பு வைக்க வேண்டியவைகளெல்லாம் கொய்னா, விளக்கெண்ணெய், ஐயோடின் ஆகியவையும் மற்றும் இவைகளைப் போன்ற ஒரு சிலவும் தான். தனிப்பட்டவர்களின் சுத்தத்தையும் கிராம சுகாதாரத்தையும் பாதுகாத்து, அதை எந்த வகையிலும் நிலை நிறுத்தும் அவசியத்தை மக்கள் உணருமாறு உதவுவதில் ஊழியர் மேலும் மேலும் ஒருமித்த கவனம் செலுத்த வேண்டும்.

அரிஜனங்கள் நலன்

இத்துடன் அவர் கிராம அரிஜனங்கள் நலனிலும் அக்கறை செலுத்துவார். அவரது இல்லம் அவர்களுக்காகத் திறந்திருக்கும். உண்மையில், தங்களுடைய கஷ்ட நஷ்டங்களில் இயற்கையாகவே அவருடைய உதவியை அவர்கள் எதிர்பார்ப்பார்கள். கிராமவாசிகள் மத்தியில் வாழ்ந்து கொண்டே அவர், தமது இல்லத்துக்குள் அரிஜனங்களை அனுமதிப்பதைக் கிராமவாசிகள் அனுமதிக்க மாட்டார்களென்றால், அவர் தம்முடைய இல்லத்தை அரிஜனங்கள் வாழும் இடத்திற்கு மாற்றிக் கொள்ள வேண்டும்.

எழுத்தறிவு முதல் முக்கியமல்ல

எழுத்தறிவு பற்றி ஒரு வார்த்தை. அதற்குரிய இடம் இருக்கத்தான் செய்கிறதென்றாலும் அளவுக்கு மீறி அதை வலியுறுத்தக்கூடாது. இதை நான் எச்சரிக்கத்தான் வேண்டும். குழந்தைகள் அல்லது பெரியவர்களுக்கு முதலில் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்காமல் கிராமப் புறத்துக்கான விஷயங்களைக் கற்றுக் கொடுக்க முடியாது என்ற அடிப்படையில் நீங்கள் உங்கள் பணியை ஆரம்பிக்க வேண்டாம். தற்போதைய உலக விவகாரங்கள், வரலாறு, பூகோளம், கணிதம் ஆகியவற்றில் எவ்வளவோ விஷயங்களை, எழுத்தைப்பற்றிய அறிவு இல்லாமலே, வாய்

மூலமாகக் கற்றுக் கொடுக்க முடியும். கை வேலை செய்வதற்குமுன், கண்கள், காதுகள், நாக்கு ஆகியவை வேலை செய்கின்றன. எழுதுவதற்கு முன்பு படிப்பு, எழுத்துக்களை வரைவதற்கு முன்பு சித்திரம் வரைதல், இதுவே இயற்கையான முறை. இம்முறையை நாம் பின்பற்றினால், எழுத்தறிவுடன் குழந்தைகள் பயிற்சியைத் தொடங்கும் போது அது தடைபடுவதைப் போல் அல்லாமல், குழந்தைகளின் விஷய ஞானம் வேகமாக வளர்ச்சியடையும் வாய்ப்பு ஏற்படும்.

ஊழியர் உணவு

ஊழியரின் வாழ்க்கை, கிராம வாழ்க்கையை ஒட்டியதாக இருக்கும். புத்தகங்களில் மூழ்கிக் கிடக்கும் ஒரு இலக்கிய மேதையாக, சந்தடிமிக்க சாதாரண வாழ்க்கையின் விவரங்களைக் கேட்க விரும்பாதவராக அவர் தம்மைக் காட்டிக் கொள்ளமாட்டார். அதற்கு மாறாக, அவரை மக்கள் காணும்போதெல்லாம் இராட்டை, கைத்தறி, வாய்ச்சி, மண்வெட்டி போன்ற ஏதாவதொரு கருவியைக் கொண்டு உழைத்துக் கொண்டிருப்பதைப் பார்ப்பார்கள். தங்களுடைய மிகத் தாழ்ந்த வினாக்களுக்கும் அவர் எப்போதும் பதிலளிக்கத் தயாராய் இருப்பதைக் காண்பார்கள். தனது உணவுக்காகத் தானே உடல் உழைப்பைச் செய்ய வேண்டுமென்பதை அவர் வலியுறுத்துவார். தமது அன்றாடத் தேவைகளுக்கும் அதிகமாக ஒவ்வொருவரும் உற்பத்தி செய்வதற்கான சக்தியை ஆண்டவன் அவர்களுக்கு அளித்திருக்கிறார். ஒருவர் மட்டும் தன்னுடைய அறிவைப் பயன்படுத்துவதானால், அவரது சக்திக்கு ஏற்ற ஒரு வேலை - அவர் திறமை எவ்வளவு தான் மட்டமாக இருந்தாலும் - கிடைக்காமற் போகாது. மக்கள் சந்தோஷமாக அவரைப் போஷிப்பார்கள் என்பது பெரும்பாலும் உண்மை. ஆனால் சில இடங்களில் அவருக்குச் சரியான வரவேற்பு இருக்காமற் போகலாம் என்பதும் உண்மைதான். அவ்வாறிருந்தாலும் அவர் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டேயிருப்பார். அரிஜனங்களுக்கு ஆதரவான மனநோக்கு அவருக்கு இருப்பதால், சில கிராமங்களில் அவர் பகிஷ்கரிக்கப்படலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் அரிஜனங்களை அணுகி,

தமது உணவுக்கு அவர்களை எதிர்பார்ப்பாராக! எப்போதுமே உழைப்புக்குத் தக்க பலன் உண்டு. அவர் உண்மையாகவே அரிஜனங்களுக்குச் சேவை செய்வதானால், அவர்களிட மிருந்து தனக்கு வேண்டிய உணவைப் பெறத் தயங்கக் கூடாது. ஆனால் ஒன்று, எப்போதுமே அவர் வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பது அதிகமாய் இருக்கவேண்டும். நிச்சயமாக, ஆரம்பக் கட்டத்தில் சாத்தியமான இடங்களிலெல்லாம் ஒரு மத்திய நிதியிலிருந்து சொற்பத் தொகையை அவர் தனது படியாகப் பெறலாம்.

அடிப்படை ஆன்மீகம்

நம்முடைய ஆயுதங்கள் ஆன்மிக மயமானவை. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அதன் சக்தி வெளிக்குத் தெரியாததாக இருக்கலாம். ஆயினும் அதை வேறு எந்தச் சக்தியும் எதிர்த்து வெல்ல முடியாதபடி அது செயலாற்றும். அதன் முன்னேற்றம் படிப்படியாகச் செல்வதற்குப் பதிலாகப் பறந்து செல்லும். பின்னால் ஒரு தூண்டுகோல் இருக்கும்வரை, அது ஓய்ந்து நிற்பதென்பதே இல்லை. ஆகையால் உங்களுடைய நடவடிக்கைகளின் பின்னணியெல்லாம் ஆன்மிகமாகத்தான் இருக்க வேண்டும். ஒழுக்கத்திலும் நடத்தையிலும் நூற்றுக்கு நூறு பரிசுத்தமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்களுக்குத் தகுதி இல்லையா?

இத்திட்டம் சாத்தியமற்றது என்றோ இதற்கு வேண்டிய தகுதிகள் உங்களிடம் இல்லையென்றோ என்னிடம் சொல்லமாட்டீர்கள். நீங்கள் இதை இதுவரை நிறைவேற்ற வில்லையென்பதும் உங்களுக்குத் தடங்கலாக இருக்கக் கூடாது. உங்களுடைய பகுத்தறிவுக்கும், உணர்ச்சிக்கும் ஏற்றதாக இருந்தால், நீங்கள் அதை நிறைவேற்றத் தயங்கக் கூடாது. இந்தச் சோதனையில் ஈடுபடாது ஒதுங்காதீர்கள். இச்சோதனையே மேலும் மேலும் அதிக முயற்சியில் இறங்குவதற்கு வேண்டிய தூண்டுகோலை அளிக்கும்.[4]

கிராம ஊழியத்தின் அம்சங்கள்

கிராம ஊழியர் முதன் முதலில் செய்ய வேண்டிய

வேலை அதன் துப்புரவு பற்றியது தான். கிராமத்தில் பல பிரச்னைகள் ஊழியர்கள் மனதைக் குழப்புகின்றன; உடல் நலத்தைப் பாதித்து நோயை உண்டாக்குகின்றன. இந்தப் பிரச்னைகளிலெல்லாம் மிகவும் அலட்சியம் செய்யப்பட்டிருப்பது கிராமத் துப்புரவைப் பற்றியது தான். ஊழியரானவர் தானாகவே முன்வந்து ஒரு தோட்டியாக வேண்டும். அவர் முதலில் மலத்தை எடுத்து உரமாக்க வேண்டும். கிராமத் தெருக்களைக் கூட்ட வேண்டும். எங்கு எவ்வாறு மலஜலம் கழிக்க வேண்டுமென்பதை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். கிராமத் துப்புரவின் மகிமையைப் பற்றியும் அதை அலட்சியம் செய்ததால் ஏற்பட்ட பெருந்தீங்கைக் குறித்தும் மக்களுக்கு விளக்க வேண்டும். தான் சொல்வதைக் கிராமவாசிகள் கேட்டாலும், கேட்காவிட்டாலும், ஊழியரானவர் தனது பணியைத் தொடர்ந்து செய்துவர வேண்டும்.[5]

தோட்டியாக வேண்டும்

கிராமப் புனருத்தாரணத்தில், கிராம துப்புரவு இடம் பெறாவிட்டால், நமது கிராமங்கள் இன்று இருப்பதைப் போன்றே தொடர்ந்தும் குப்பை மேடுகளாகத்தான் இருக்கும். கிராமத்துப்புரவு என்பது கிராம வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம். அது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு கஷ்டமானதுங்கூட. சந்ததி சந்ததியாக இருந்து வரும் துப்புரவின்மையை அகற்ற வீராவேசத்துடன் முயற்சி செய்ய வேண்டும். கிராமத் துப்புரவு விஞ்ஞானத்தைப் பற்றி அறியாதவரும் ஒரு நல்ல தோட்டியல்லாதவருமான கிராம ஊழியர் கிராமத் தொண்டுக்குத் தன்னைப் பூரணத் தகுதி யுள்ளவராக்கிக் கொள்ள முடியாது.

ஆதாரக் கல்வி

புது ஆதாரக் கல்வியில்லாமல் இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்ப தென்பது கிட்டத்தட்டச் சாத்தியமல்ல. இது பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆகையால் கிராம ஊழியரானவர் இதில் நன்றாகத் தேர்ச்சி பெற வேண்டும். தானே ஒரு ஆதாரக் கல்வி ஆசிரியராக வேண்டும்.

முதியோர் கல்வி

ஆதாரக் கல்வியைத் தொடர்ந்து முதியோர் கல்வியும் வந்துவிடும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கல்வி எங்கெங்கு வேர் விட்டிருக்கிறதோ அங்கெல்லாம், குழந்தைகளே தங்களுடைய பெற்றோர்களின் ஆசிரியர்களாகி யிருக்கிறார்கள். இது எவ்வாறிருந்தாலும் கிராம ஊழியரானவர், முதியோர் கல்விப் பயிற்சியும் அளிக்க வேண்டியிருக்கிறது.

மாதர்களுக்கு மரியாதை

ஆணும் பெண்ணும் சரி பாதியாக இருக்கும் மனித சமுதாயத்தில், ஆணைக்காட்டிலும் சிறந்த பகுதி பெண்ணே என்று கூறப்பட்டிருக்கிறது. ஆணைப்போன்றே பெண்ணுக்கும் சம உரிமை கிடைக்காதவரை, ஒரு பெண் பிறப்பதானது ஆண் பிறப்பதைப் போன்றே உற்சாகத்துடன் வரவேற்கப்படும் வரை, இந்திய சமுதாயத்தை ஒருவித பக்கவாத நோய் பீடித்திருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். மாதர்களை அடக்கி வைப்பது அஹிம்சையை மீறுவதாகும். ஆகையால் ஒவ்வொரு கிராம ஊழியரும் ஒவ்வொரு பெண்ணையும் அவரவர் வயதிற்கு ஏற்பத் தனது தாயாகவும், சகோதரியாகவும், மகளாகவும் கருத வேண்டும். உரிய மரியாதை செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட ஊழியர் தான் கிராம மக்களின் நன்னம்பிக்கை யைப் பெறுவார்.

உடல் நலம்

உடல் நலமற்ற மக்கள் சுயராஜ்யம் பெறமுடியாது. ஆகையால், நம்முடைய மக்களின் உடல் நலத்தைப் புறக்கணித்த குற்றத்திற்கு நாம் ஆளாகக் கூடாது. ஒவ்வொரு கிராம ஊழியருக்கும் சுகாதாரத்தின் பொது விதிகளைப் பற்றிய ஞானம் இருக்க வேண்டும்.

பொது மொழி

ஒரு பொதுமொழி இல்லாது, எந்தத் தேசமும் உருவாக முடியாது. ஆகவே கிராம ஊழியரானவர் ஹிந்தியா

- ஹிந்துஸ்தானியா - உருதுவா என்ற தகராறுகளிலெல்லாம் தன்னை அலட்டிக் கொள்ளாமல் ராஷ்டிர பாஷையைப் படிக்க வேண்டும். இந்த ராஷ்டிர பாஷையானது இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சாராரும் புரிந்து கொள்ளக்கூடிய தாக இருக்க வேண்டும்.

மாநில மொழிகள்

ஆங்கிலத்தின் மீது நமக்குள்ள மயக்கம், நம்மை மாநில மொழிகளிடம் விசுவாசமற்றவர்களாக்கி விட்டது. இதற்கு ஒரு பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்பதற்காக வாகிலும், கிராம ஊழியர் கிராமவாசிகள் மத்தியில் தாய்மொழிப் பற்றை ஏற்படுத்த வேண்டும். அதே சமயம் இந்தியாவிலுள்ள மற்ற எல்லா மொழிகள் மீதும் அவர் சமமான மதிப்பும் வைத்திருக்க வேண்டும். அவர் எந்தப் பகுதியில் தொண்டு செய்கிறாரோ; அப்பகுதி மொழியும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதன்மூலம் அப்பகுதியில் உள்ள கிராமவாசிகளுக்குத் தங்கள் மொழியின் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்படுமாறு ஊக்குவிக்க அவரால் முடியும்.

பொருளாதார சமத்துவம்

ஆனால், பொருளாதார சமத்துவம் என்னும் உறுதி யான அஸ்திவாரத்தின் மீது இந்தத் திட்டம் முழுவதும் எழுப்பப்படா விட்டால், இது மணல்மேல் கட்டிய மாளிகை யாகிவிடும். பொருளாதார சமத்துவம் என்பதற்கு லோகாயத பொருட்களை எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுப்பது என்பது பொருளாகாது. அதற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் வாழ்வதற்கு நல்ல வீடும் போதுமான சத்துள்ள உணவும் உடுத்திக் கொள்ளப் போதிய கதர் ஆடையும் கிடைக்குமாறு செய்யவேண்டும் என்பது அதன் பொருளாகும். தற்போது நிலவும் கொடுமையான சமத்துவமின்மை, முற்றிலும் அஹிம்சாமார்க்கத்தில் அகற்றப்பட வேண்டும் என்பதும் அதன் பொருளாகும்.[6]

கதரே பிரதானம்

கிராமக் கைத்தொழில்களில் கதரே மையமான

இடத்தை வகிக்கும் என்பது நிச்சயம். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கிராமங்கள் கதரில் சுயதேவைப் பூர்த்தி உள்ளவைகளாகுமாறு செய்வதில் நாம் ஒருமித்த கவனம் செலுத்த வேண்டும். சுய தேவைப் பூர்த்தியான கதரிலிருந்து நிச்சயமாக வியாபாரத்திற்கான கதரும் கிடைக்கும்.

கைத்தொழில்

நீங்கள் கிராமங்களில் நடைபெறும் ஏதாவதொரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை. இந்தத் தொழிலில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு உங்களால் மார்க்கெட் பிடிக்க முடிய வேண்டும். ஒரு எச்சரிக்கை. எந்தக் கடையையும் நஷ்டத்தில் நடத்தக்கூடாது. மார்க்கெட் கிடைக்காத எந்தப் பொருளையும் உற்பத்தி செய்யக் கூடாது. தினந்தோறும் எட்டு மணிநேரம் நீங்கள் விரும்பும் ஏதாவதொரு கைத்தொழிலைச் செய்யுங்கள். நீங்கள் எவ்வாறு உங்கள் ஊழியத்தைப் பெறுகிறீர்களோ அதே போன்று அவர்களும் எட்டு மணி நேரம் வேலை செய்து ஊதியம் பெறலாம் என்பதைக் கிராமவாசிகளுக்கு எடுத்துக் காண்பியுங்கள்.

சகா கூடாது

உங்களுடன் வேலை செய்ய ஒரு சகாவை நீங்கள் கூட்டிக்கொண்டு செல்லக்கூடாது. ஒவ்வொரு கிராமம் அல்லது கிராமத் தொகுதிக்கு ஒரே ஊழியரைத்தான் அனுப்ப வேண்டும் என்பது நமது கொள்கை. அவருடைய முழுத் திறமையையும் வெளிப்படுத்துவதற்கு இது உதவும். கிராமத்திலிருந்து அவர் எத்தனை சகாக்களை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம். அவருடைய மேற்பார்வையின் கீழ் அவர்கள் வேலை செய்யலாம். ஆயினும் தாம் சேவை செய்யும் கிராமத்திற்கு அவரே பிரதான பொறுப்பாளியாவார்.

இது உங்கள் கடமை

இயந்திர காலத்தின் கவர்ச்சிகளில் நாம் மயங்காது இருப்போமாக! நம்முடைய உடல்கள் என்னும் இயந்திரங்

களைப் பரிசுத்தமானவையாகவும் திறமையான சேவா சாதனங்களாகவும் ஆக்குவதில் ஒருமித்த கவனம் செலுத்த வேண்டும். அவைகளிலிருந்து நாம் மிகச் சிறந்த பலனைப் பெறுவோம். இவ்வாறு செய்வது உங்கள் கடமை. பின் வாங்காமல் இதில் முன்னேறிச் செல்லுங்கள்.

கிராமங்களில் வாழ முடியும்

அநேக ஊழியர்கள் கிராம வாழ்க்கையைக் கண்டு மிகவும் அஞ்சுகிறார்கள். ஏதாவதொரு ஸ்தாபனம் தங்களுக்கு ஊதியம் அளித்தாலொழிய, கிராமங்களில் பாடுபட்டுத் தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தைப் பெற முடியாது - அதிலும் குறிப்பாகத் தங்களுக்குத் திருமணமாகித் தாங்கள் காப்பாற்ற வேண்டிய ஒரு குடும்பம் இருந்தால் இது முடியவே முடியாது - என்று எண்ணுகிறார்கள். இந்த எண்ணம் மனதை அதைரியமடையச் செய்யும். நகர மனோபாவத்துடன் ஒருவர் கிராமத்துக்குச் செல்வாரானால், கிராமங்களில் நகர வாழ்க்கையே வாழ வேண்டுமென்று எண்ணினாரானால், அவர் நகர மக்களைப்போல், கிராமவாசிகளைச் சுரண்டினாலொழியப் போதுமான அளவு சம்பாதிக்க மாட்டார். ஆனால் ஒரு மனிதர் கிராமத்திலேயே குடியேறி, கிராம மக்களைப் போன்று வாழ முயற்சி செய்தாரானால், அவர் நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டு வாழ்வதில் எவ்விதக் கஷ்டமும் இராது. பரம்பரையாகவே புத்திக்கூர்மை தேவைப்படாத, முறைகளின் மூலம் வருஷம் முழுதும் பாடுபடத் தயாராயிருக்கும் கிராமவாசிகள் தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியதைச் சம்பாதிக்க முடியுமானால், இந்த ஊழியரும் ஒரு சாதாரண கிராமவாசியின் அளவு சம்பாதிக்க முடிய வேண்டும். ஒரு கிராமவாசியின் பிழைப்பைக் கூட கெடுக்காமல் அவர் இதைச் செய்ய முடியும். ஏனென்றால் அவர் ஒரு உற்பத்தியாளராகக் கிராமத்துக்குச் செல்கிறாரே தவிர, அட்டை போன்று கிராமவாசிகளை உறிஞ்சுவதற்குச் செல்லவில்லை.

உழைத்து வாழ வழி

ஊழியருடைய குடும்பமானது சாதாரண அளவு குடும்பமாக இருந்தால், அவருடைய மனைவியும் (அவர்

குடும்பத்தில்) மற்றும் ஒருவரும் முழுநேர ஊழியர்களாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஊழியர் உடனடியாக ஒரு கிராமவாசியைப் போன்று உடல் உழைப்புச் செய்யமுடியாது. ஆனால் இவர் தன்னுடைய தயக்கத்தையும் அச்ச மனப்பான்மையையும் விட்டு விட்டாரானால், உடல் வலுவில்லாத குறையைத் தனது அறிவுத்திறமையின் மூலம் சரிக்கட்ட முடியும். முழுநேரமும் கிராமவாசிகளுக்கே சேவை செய்யும் அளவு கிராமவாசிகளின் ஆதரவு இருந்தாலொழிய பிறர் உழைத்துத் தாம் வாழ்பவராக அவர் இருக்கமாட்டார். தாமே உற்பத்தியில் ஈடுபடுவார். அவர் முழுநேரமும் கிராம சேவையில் ஈடுபடும்போது, அவருடைய சேவையால் கூடியிருக்கும் அதிக உற்பத்தியில் ஒரு பகுதியைக் கமிஷனாகப் பெற அவருக்கு உரிமை உண்டு. அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கத்தின் ஆதரவில் கடந்த சில மாதங்களாக நடைபெற்றுள்ள கிராமப் பணியிலிருந்து ஒரு அனுபவம் தெரிகிறது. கிராமவாசிகள் மத்தியில் பலன் கிடைப்பது மிகவும் மெதுவாக இருக்கும். ஊழியரானவர் கிராமவாசிகளின் முன் நற்குணத்திற்கும் சேவைக்கும் ஒரு சான்றாகத் திகழ வேண்டும். இவ்வாறு அவர் இருப்பது, கிராமவாசிகளுக்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாக இருக்கும். அவர் மட்டும், உயர்ந்த ஆசனத்திலமர்ந்து தூரத்திலிருந்து வணங்க வேண்டியவராக இராமல் அவர்களுடன் சேர்ந்து பழகினாரென்றால், இன்றோ அல்லது நாளையோ அவர்கள் மனதைக் கவர்ந்து விடுவார்.

வேலையைத் தேர்ந்தெடுத்தல்

ஆகவே இப்போதுள்ள கேள்வி, தாம் தேர்ந்தெடுத்துள்ள கிராமத்தில் இலாபகரமான முறையில் அவர் எந்தப் பணியை ஆற்றலாம் என்பதுதான். அவரும் அவருடைய குடும்பத்தினரும் கிராமவாசிகள் அவருக்கு உதவினாலும், உதவாவிட்டாலும் கிராமத்தைச் சுத்தப்படுத்துவதில் சிறிது நேரம் செலவிடுவார்கள். தம்முடைய சக்திக்கு இயன்ற எளிய வைத்திய உதவியையும் அவர் அளிப்பார். ஒவ்வொரு நோயாளியும் ஆரம்பத்தில் என்ன மருந்து சாப்பிடலாம் என்பதை அவர் கூறலாம்; ஒரு புண் அல்லது கொப்புளத்தைக் கழுவலாம்; அழுக்கடைந்த கண்களையும்

காதுகளையும் கழுவிவிடலாம்; ஒரு புண்ணுக்குச் சுத்தமான களிம்பு போடலாம். கிராமங்களில் நாள்தோறும் வரும் பல சாதாரணமான நோய்களைக் குணப்படுத்துவதற்கு எளிய மார்க்கங்களைக் கூறக்கூடிய ஒரு புத்தகத்தைக் கண்டுபிடிக்க நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். எப்படியும் இந்த இரண்டு விஷயங்களும் கிராம சேவையில் ஒரு முக்கிய அங்கமாய் இருக்க வேண்டும். அதே சமயம், வேலைகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகக் கூடாது. ஒரு கிராம ஊழியர் ஒரு நாளைக்குச் சரியாக எட்டு மணி நேரந்தான் வேலை செய்ய வேண்டுமென்பதில்லை. கிராமவாசிகளுக்காக உழைப்பதென்பது அவருக்கு ஒரு அன்புச் சேவையாகும். ஆகவே, மேற்கண்ட இரண்டு மணி நேரத்துடன் தம் பிழைப்புக்கு அவர் குறைந்தது எட்டு மணி நேரம் உழைத்தாக வேண்டும். அகில இந்திய நூற்போர் சங்கம், அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் ஆகியவை வெளியிட்டுள்ள புதுத்திட்டத்தின்படி எல்லா உழைப்புக்கும் சமத்துவமான குறைந்தபட்ச மதிப்பு உண்டு. இதை அவர் ஞாபகத்திற் கொள்ள வேண்டும். ஆகவே, ஒரு மணி நேரம் பஞ்சுப் பட்டை போடும் ஒருவர், சாதாரணமாக ஒரு மணி நேரத்தில் எத்தனை பட்டைகள் போட முடியுமோ அத்தனை பட்டைகள் போடுபவர், ஒரு நெசவாளியோ நூற்பவரோ அல்லது காகிதம் செய்பவரோ ஒரு மணி நேரத்தில் செய்யும் வேலைக்கு எவ்வளவு ஊதியம் பெறுகின்றாரோ அந்த ஊதியம் பெறத் தகுதி வாய்ந்தவராவார். ஆகையால், எந்த வேலையை எளிதாகச் செய்ய முடியும் என்பதைத் தேர்ந்தெடுத்துக் கற்றுக்கொள்ள ஊழியருக்கு உரிமை உண்டு. ஆனால் எப்போதுமே இப்படிப்பட்ட வேலையைத் தேர்ந்தெடுக்குமுன் ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, இதில் உற்பத்தியாகும் பொருட்கள் அந்தப் பகுதியிலோ அல்லது சுற்றுப்புறக் கிராமங்களிலோ விற்பனையாகக் கூடியவையாக இருக்க வேண்டும். அல்லது, மேற்கண்ட சங்கங்களில் கிராக்கியுள்ளதாய் இருக்கவேண்டும்.

நியாயக் கடை

ஒவ்வொரு கிராமத்திலும் நியாயக் கடை ஒன்று இருக்க

வேண்டும். இங்கே கலப்படமற்ற உணவுப் பொருட்களும் மற்றப் பொருட்களும் வாங்கிய விலையுடன் ஒரு நிதானமான இலாபம் சேர்த்து விற்பனையாக வேண்டும். இது மிகவும் அவசியமான காரியம், இப்படிப்பட்ட கடைக்கு - அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் - ஒரு மூலதனம் வேண்டும். ஆனால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தனது சேவையின் மூலம் மக்களுக்கு அறிமுகமான ஊழியர், மொத்த விலையில் சிறு அளவில் சரக்குகளைக் கடனுக்கு வாங்கக் கூடிய அளவு நாணயம் பெற்றவராக இருப்பார்.

நூதனமான புது வேலைகள்

இந்த நடைமுறை யோசனைகளை நான் விரிவுபடுத்திக் கொண்டு போகக்கூடாது. உன்னிப்பாகக் கவனிக்கும் திறன் உடைய ஒரு ஊழியர், எப்போதுமே புதிது புதிதாகக் கண்டுபிடித்துக் கொண்டுதானிருப்பார். தன்னுடைய பிழைப்புக்கு வேண்டிய ஊதியத்தைப் பெறவும், அதே சமயம் தான் யாருக்குச் சேவை செய்யச் செல்கிறோமோ அந்தக் கிராமவாசிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கவும், தான் எவ்வித உழைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதை அவர் விரைவில் அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே கிராமவாசிகளைச் சுரண்டாததும் அவர்களுடைய உடல்நலத்தையோ ஒழுக்கத்தையோ பாதிக்காததுமான உழைப்பை அவர் தேர்ந்தெடுக்க வேண்டும். தங்களுடைய ஓய்வு நேரத்தில் எந்தெந்தத் தொழில்களைச் செய்து தங்களுடைய குறைந்த வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதைக் கிராமவாசிகளுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய உழைப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதைப் பற்றி அவர் யோசிக்கும்போது களைகள் உட்பட கிராமக் கழிவுப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் கிராமங்களிலுள்ள உபரியான இயற்கை வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலும் அவருடைய கவனம் திரும்பும். இவைகளில் பலவற்றை உபயோகமான காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதை அவர் விரைவில் காண்பார். களைகளிலேயே உண்ணக்கூடியவை இருந்து அவைகளை அவர் கண்டுபிடித்து விட்டால்,

அவருடைய உணவில் ஒரு பகுதியைச் சம்பாதித்து விட்டதாகவே அர்த்தமாகும். அழகான பளிங்கு போன்ற கற்களை ஏராளமாக எனக்குத் திருமதி மீராபென் பரிசாக வழங்கியிருக்கிறார். எனக்கு மட்டும் ஓய்வு இருந்தால், அவைகளைக் கடைச்சரக்காக மாற்றி விடுவேன். அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அவைகளையே நாம் விரும்பும் உருவத்தில் செதுக்குவதற்கு உதவக்கூடிய சிறு கருவிகளை வாங்குவேன். அடுப்பில் போட வேண்டிய கழிவு மூங்கில்களை காகா சாகிபிடம் அளித்தபோது அதை அவர் பிளந்து ஒரு பதமில்லாத கத்தியினால் காகிதக் கத்திகளாகவும் மரக்கரண்டிகளாகவும் செய்து விட்டார். இந்த இரண்டையுமே ஒரு குறிப்பிட்ட அளவில் நாம் விற்க முடியும். மகன்வாடியில் உள்ள சில ஊழியர்கள் ஒரு பக்கம் எழுதாத கழிவுக் காகிதங்களிலிருந்து கவர்க்கூடுகள் செய்வதில் தங்களுடைய ஓய்வு நேரத்தை பயன்படுத்துகின்றனர்.

நம்பிக்கையுடன் செல்லுங்கள்

உண்மையென்னவெனில் கிராமவாசிகள் நம்பிக்கை இழந்து விட்டனர். ஒவ்வொரு அந்நிய மனிதனுமே தனது கழுத்தில் கையை வைக்கவும் தங்களைச் சுரண்டவுமே வருகிறான் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அறிவுக்கும் உழைப்புக்குமிடையே ஏற்பட்ட வேறுபாடானது அவர்களுடைய சிந்தனா சக்தியையே சீர்குலைத்துவிட்டது. உழைக்கும் நேரத்தை மிகச் சிறந்த பலன் அடையும் முறையில் பயன்படுத்துவதில்லை. இப்படிப்பட்ட கிராமங்களுக்குள் முழு நம்பிக்கையுடனும் அன்புடனும் ஊழியர் நுழைய வேண்டும். ஆண்களும் பெண்களும் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தாது உழைக்கும் ஒரு இடம் அது. பாதி வருஷம் அவர்கள் வேலையில்லாமல் இருக்கும் இடம் அது. அப்படிப்பட்ட இடத்தில், தான் உழைப்பையும் அறிவையும் இணைத்து, ஆண்டு முழுவதும் உழைத்து, கிராமவாசிகளின் நன்னம்பிக்கையை நிச்சயம் பெறமுடியும் என்றும் அவர்கள் மத்தியில் உழைத்தே நாணயமாக , நல்ல ஊதியம் பெற முடியும் என்றும் அவர் மன உறுதி கொள்ள வேண்டும்.

கிராம ஊழியரின் குழந்தைகள்

'ஆனால் என்னுடைய குழந்தைகள் கதி என்ன? அவர்களுடைய படிப்பு என்ன ஆவது?' என்று ஊழியராக வர விரும்புபவர் கேட்பார். நவீனமுறைக் கல்வியை அவர்கள் பெற வேண்டுமானால், நான் உபயோகமான எந்த வழியையும் காண்பிக்க முடியாது. ஆனால், அவர்களை நல்ல உடல் நலம் உள்ளவர்களாகவும் - நரம்பு முறுக்கேறியவர்களாகவும் - சத்தியமுள்ள, புத்திக்கூர்மையுள்ள கிராமவாசிகளாகவும் - எந்த நாளிலும் தங்கள் வீட்டில் தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடியவர்களாகவும் செய்வது போதுமானால் அவர்கள் தங்களுடைய தகப்பனார் இல்லத்திலேயே தங்களுக்கு வேண்டிய கல்வியெல்லாம் பெற முடியும். விவரம் தெரிந்த பிராயத்திலிருந்தே தங்களுடைய கைகளையும் கால்களையும் பயன்படுத்தத் தெரியும் பிராயத்திலிருந்தே ஓரளவு ஊதியம் தேடக் கூடியவர்களாய் அவர்கள் ஆவார்கள். ஒரு கண்ணியமான வீட்டைக் காட்டிலும் பெரிய பள்ளிக்கூடம் எதுவும் இல்லை. நேர்மையான, நல்ல குணம் படைத்த பெற்றோர்களுக்குச் சமமான ஆசிரியர்களும் இல்லை. நவீன உயர்நிலைப் பள்ளிப் படிப்பென்பது, கிராமவாசிகளுக்கு ஒரு பயனும் இல்லாதது. அவர்களுடைய குழந்தைகள் ஒரு போதும் அக்கல்வி வசதியைப் பெற முடியாது. ஆனால் நல்ல வேளையாக, கண்ணியமான வீட்டின் கண்ணியமான பயிற்சி மட்டும் இருந்தால், அவர்களுக்கு ஒரு நஷ்டமுமில்லை. கிராம ஊழியரானவர் ஒரு கண்ணியமான குடும்பத்தை நடத்தக்கூடிய அளவு கண்ணியமான ஆண் அல்லது பெண்ணாக இருக்க வேண்டும். அவ்வாறு இருக்காவிட்டால், கிராம ஊழியராகும் உயர்ந்த சிறப்பையும் கௌரவத்தையும் பெற அவர் ஆசைப்படக்கூடாது.

கிராம ஊழியர்களின் கேள்விகள்

[ஒரு கிராம ஊழியர்கள் கூட்டத்தில், சொற்பொழிவாற்றுமாறு காந்திஜியைக் கேட்டுக் கொள்ளாமல், சில கேள்விகளை எழுதி அவரிடம் கொடுத்தார்கள். அவ்விஷயங்களில் தங்களுக்கு விளக்கம் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். கிராம ஊழியர்களின் கடமைகள், அவருடைய பிழைப்பு, உடல் உழைப்பு,

நாட்குறிப்பு வைத்துக் கொள்ளுதல் முதலியவைகளைப் பற்றி இந்தக் கேள்விகள் இருந்தன].

பதினோரு விரதங்கள்

கிராமவாசிகளுக்குச் சேவை செய்வதுதான் கிராம ஊழியரின் கடமை. ஒரு கலங்கரை விளக்கம் போலப் பதினோரு விரதங்களையும் தன் கண்முன் கிராம ஊழியர் வைத்துக் கொண்டால், அவர் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்ற முடியும். வினோபா இயற்றிய நான்கு வரிப்பாடல் ஒன்றில் இந்த விரதங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன. இப்போது இந்தப் பாடலானது இந்தியாவில் உள்ள பெரும்பாலான ஆசிரமங்களில் உள்ள ஆசிரமவாசிகளால் ஒவ்வொரு பிரார்த்தனைக் கூட்டத்திலும் பாடப் பெற்று வருகிறது.

அஹிம்சா ஸத்ய அஸ்தேய ப்ரஹ்மசர்ய அஸங்க்ரஹ|
சரீரச்ரம அஸ்வாத ஸர்வத்ர பயவர்ஜன ||
ஸர்வதர்மோ ஸமானத்வ ஸ்வதேசீ ஸ்பர்சபாவனா|
ஹீ ஏகாதச ஸேவாவீ நம்ரத்வே வ்ரதநிச்சயே ||

[அஹிம்சை, சத்தியம், திருடாமை, பிரம்மச்சரியம், வெளவாமை, உடல் உழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சர்வமத சமரசம், (சுதேசி அதாவது தூரத்தில் உள்ளவர் களையும் தூரத்தில் உற்பத்தியாகும் பொருட்களையும் விட அண்டையில் உள்ளவர்கள் சேவையையும் அண்டையில் உற்பத்தியாகும் பொருட்களையும் பயன்படுத்திக் கொள்வது) தீண்டாமை ஒழிப்பு ஆகிய பதினோரு விரதங்களையும் அடக்கத்துடன் அனுஷ்டிக்க வேண்டும்.]

இலட்சிய வழி

அவர் எவ்வாறு தன் பிழைப்புக்கு வேண்டிய ஊழியத்தைத் தேடுவது? ஒரு ஸ்தாபனத்திடமிருந்து படி பெற லாமா? அல்லது வெறும் ஊழியத்திற்காக உழைக்க வேண்டுமா? அதற்காகக் கிராமத்தை எதிர்பார்க்கலாமா? மிகச் சிறந்த இலட்சிய வழி கிராம மக்களை எதிர்பார்ப்பது தான். அதில் வெட்கப்படத் தக்கது எதுவுமில்லை. அதற்குப் பதிலாக அதுதான் தன்னடக்கம். புலன் நுகர்ச்சிக்கும் அதில்

இடமில்லை. புலன் நுகர்ச்சியை அனுமதிக்கவோ ஆதரிக்கவோ கூடிய ஒரு கிராமத்தை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. கிராம ஊழியர் செய்ய வேண்டியதெல்லாம் முழு நேரமும் கிராமத்திற்காக உழைத்துவிட்டுத் தனக்கு வேண்டிய தான்யங்களையும் காய்கறியையும் அக்கிராமத்தில் வசூலித்துக் கொள்ள வேண்டுமென்பதே. தபால் முதலிய செலவுகளுக்குத் தேவையானால் - இது இன்றியமையாதது என்று நான் கருதவில்லை - ஒரு சிறிது பணமும் வசூல் செய்யலாம். கிராமத்தினருடைய அழைப்பின் பேரில் இந்த ஊழியர் அங்கு சென்றிருந்தாரானால், கிராமம் அவரை மகிழ்ச்சியுடன் ஆதரிக்கும். ஆனால் அதே சமயம் அவருடைய கருத்துக்களைக் கிராமவாசிகள் சகிக்க முடியாவிட்டால் அந்த சந்தர்ப்பத்தில் தங்களுடைய ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்வார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்படக்கூடிய ஒரு நிலைமையையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. உதாரணமாக, 1915இல் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் நான் தீண்டத்தகாதவர்களை அனுமதித்த போது, அவர்கள் இவ்வாறு தான் செய்தார்கள். இதற்கு மேல் அவர் தன்னுடைய பிழைப்புக்காக உழைக்க வேண்டும். ஒரு ஸ்தாபனத்தை எதிர்பார்த்துப் பயனில்லை.

உடல் உழைப்பு

கிராமத்தில் உள்ள கிராம ஊழியரானவர் தன்னால் முடிந்த அளவு உடல் உழைப்புச் செய்ய வேண்டும். சோம்பேறித்தனத்தை உதறித் தள்ளுமாறு கிராமவாசிகளுக்குக் கற்பிக்க வேண்டும். அவர் எந்த வகையான உடல் உழைப்பும் செய்யலாம். ஆனால், தோட்டி வேலைக்கு முதன்மை அளிக்க வேண்டும். தோட்டி வேலையென்பது நிச்சயமாக உற்பத்தி வேலைதான். குறைந்தது அரைமணி நேரமாவது முற்றிலும் சேவைக்கும் உற்பத்திக்கும் பயன்படக் கூடிய வேலை செய்ய வேண்டும் என்று சில ஊழியர்கள் வலியுறுத்துகின்றனர். இதை நான் ஆதரிக்கிறேன். இவ்வகை ஊழியத்தில் நிச்சயமாகத் தோட்டி வேலையும் வருகிறது. இதைப் போன்றுதான் மாவு அரைப்பதும். ஏனென்றால், மீதப்படுத்தப்பட்ட பணம் சம்பாதித்த பணமேதான்.

நாட் குறிப்பு

விழித்திருக்கும் நேரத்தில் ஒவ்வொரு நிமிஷத்தையும் உபயோகமான முறையில் ஊழியர் செலவிட வேண்டும். அந்நேரத்தில் வேலை செய்து கொண்டேயிருக்க வேண்டும். அதைத் தனது நாட்குறிப்பிலும் பதிவு செய்ய வேண்டும். இவைகளை எந்தவிதமான ஐயப்பாடும் இன்றி கூறுகிறேன். ஒரு உண்மையான நாட்குறிப்பு என்பது நாட் குறிப்பு எழுதிய வருடைய மனதைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். ஆனால் தங்கள் மனதில் உள்ளவைகளை அப்படியே உண்மையாகப் பதிவு செய்து வைப்பது பலருக்குக் கஷ்டமாக இருக்கும். அவ்வாறு இருந்தால், தங்களுடைய உடல் உழைப்பைப் பற்றிய வேலைகளைப் பதிவு செய்வதுடன் அவர்கள் நிறுத்திக் கொள்ளலாம். ஆனால் இதை ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும். உதாரணமாக, ''சமையலறையில் வேலை செய்தேன்'' என்று மட்டும் எழுதுவது போதாது. ஒருவர் சமையலறையில் நேரத்தை வீணாகக் கழித்திருக்கவும் கூடும். ஆகவே, அங்கு என்னென்ன வேலைகள் செய்தார் என்பதைத் திட்டவட்ட மாகக் குறிக்க வேண்டும்.

ஒதுக்கப்பட்ட இனத்தவர் சேவை

குஜராத்தில் உள்ள டப்ளாக்கள் என்னும் பிற்பட்ட இனத்தவருக்குச் சேவை செய்வது என்றால் அதன் பொருள் என்ன? அவர்களுடைய உழைப்பிலும் இன்ப துன்பங்களிலும் பங்கு கொள்ளத் தயாராய் இருப்பதென்பதேயாகும். அவர்களை 'அடிமையாக வைத்திருப்பவர்களுடன்' தொடர்பு கொண்டு அவர்கள் (டப்ளாக்கள் விஷயத்தில்) நியாயமாகவும் அன்பாகவும் நடந்து கொள்ளுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

அரசியலுக்கு அப்பால்

கிராம ஊழியரானவர் அரசியலைவிட்டு ஒதுங்கிக் கொள்வார். அவர் ஒரு காங்கிரஸ் அங்கத்தினராகலாம். ஆனால் தேர்தல் பிரசாரத்தில் பங்கு கொள்ளக் கூடாது. அவருக்கு என்று திட்டமிடப்பட்ட வேலை இருக்கிறது. கிராமக்

கைத்தொழில் சங்கமும் நூற்போர் சங்கமும் காங்கிரசினால் அமைக்கப்பட்டவைதான். ஆயினும் அவை காங்கிரசுக்கு அப்பாலிருந்து சேவை செய்கின்றன. இதனால் தான் அவைகளும் அவைகளின் உறுப்பினர்களும் காங்கிரஸ் அரசியல் எல்லாவற்றிலுமிருந்தும் ஒதுங்கியிருக்க வேண்டுமென்பது. அதுதான் அஹிம்சா வழி.

கிராமத்தில் குடியேறும் போது?

கிராம கோஷ்டிச் சச்சரவுகளிலிருந்தும் அவர் ஒதுங்கி யிருக்க வேண்டும். நகரில் கிடைக்கும் பல வசதிகள் இன்றியே வாழ்வதென்ற உறுதியுடன் அவர் கிராமத்துக்குச் சென்று குடியேற வேண்டும். நான் ஒரு கிராமத்தில் குடியேறுவதாய் இருந்தால், கிராமத்துக்கு நான் என்னென்ன சாமான்களை எடுத்துச் செல்லக்கூடாது - எவ்வளவுதான் இந்தப் பொருட்கள் இயல்பிலேயே தீங்கற்றவையாய் இருந்தாலும் - என்பதை நான் முடிவு செய்ய வேண்டும். அந்தப் பொருட்கள் ஒரு சாதாரண கிராமவாசியின் வாழ்க்கைக்குப் பொருந்துமா அல்லது பொருந்தாதா என்பதே பிரச்னை. கிராம ஊழியர் ஊழல்களுக்கு இடமளிக்காதவராக இருப்பார். மயக்கும் கவர்ச்சிப் பொருட்களை எதிர்ப்பதில் மலை போல இருந்து, கிராமத்தை அவர் காப்பாற்றுவார். ஒரு விபீஷணன் எவ்வாறு இலங்கையைக் காப்பாற்றினானோ அதைப் போன்று ஒரே ஒரு பரிசுத்த ஆன்மாகூட, ஒரு முழு கிராமத்தைக் காப்பாற்ற முடியும். சோதோம், கோமரா ஆகியவற்றில் ஒரே ஒரு பரிசுத்தமான ஆன்மா இருந்தவரை அவைகளை அழிக்க முடியவில்லை.[9]

II

* "கிராமவாசிகளுக்குக் கட்டுபடியாகாத பால், காய்கறிகள் போன்றவைகளை ஒரு கிராம ஊழியர் அனுபவிக்கலாமா?" என்ற கேள்விக்குப் பதில் அளித்து காந்திஜி எழுதியதாவது :-

சற்று உயர்ந்த வாழ்க்கைத் தரம்

கிராம ஊழியர் கிராமத்தில் இருப்பது கிராமவாசி

களுக்குச் சேவை செய்வதற்காகத்தான். இந்த வேலையைச் செய்வதற்கு வேண்டிய உடல் நலமும் சக்தியும் அவருக்கு இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய உணவுப் பொருட்களையும் மற்ற அத்தியாவசியப் பொருட்களையும் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டியது அவரது கடமையும் உரிமையுமாகும். இதற்குக் கிராம ஊழியரானவர் சற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை ஏற்க வேண்டியது அவசியம் என்பது பெறப்படுகிறது. அதே சமயம் இந்த அவசியமான பொருள்களையெல்லாம் அளிக்கக் கிராமவாசிகள் முணுமுணுக்க மாட்டார்கள் என்பதே என் கருத்து. ஊழியரின் மனச்சாட்சி தான் இதற்கெல்லாம் அளவு கருவி. அவர் சுய கட்டுப்பாடு உடையவராக இருக்கவேண்டும். தன்னுடைய நாவின் ருசிக்காக அவர் எந்தப் பொருளையும் உண்ணக் கூடாது; ஆடம்பரப் பொருட்களை நாடிச் செல்லக் கூடாது: விழித்திருக்கும் நேரம் முழுவதிலும் ஏதாவது சேவை செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு இருந்தாலும் (கைவிரல் விட்டு எண்ணக்கூடிய) ஒரு சிலர் அவருடைய வாழ்க்கை முறையை அனாவசியமாகக் குறைகூறிக் கொண்டுதான் இருப்பார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் தூய்மையாக வாழ்ந்து அந்தக் குற்றச்சாட்டைப் பொய்யாக்க வேண்டும். நான் கூறியுள்ள உணவு வகைகளெல்லாம், ஓரளவு முயற்சியுடன் கிராமத்தில் கிடைக்கக்கூடியனவே. பால், பொதுவாக வாங்கலாம். இலந்தைப்பழம், நாவற்பழம் போன்று எளிதாகக் கிடைக்கக்கூடிய ஏராளமான பழங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் மிகவும் எளிதாகக் கிடைப்பதனால்தான் நாம் அவைகளைக் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை. நம்முடைய கிராமங்களில் எத்தனையோ வகையான கீரைகள் கிடைக்கின்றன. ஆனால் நம்முடைய முழு அறியாமை அல்லது சோம்பேறித் தனத்தினால், அல்லது வெளிப்பகட்டைக் கண்டு மயங்கும் செருக்கினால், நாம் அவைகளை உபயோகிப்பதில்லை. இதுவரை உபயோகிக்காத பல்வேறு வகையான கீரைகளை நானே இப்போதுதான் உபயோகித்துக் கொண்டிருக்கிறேன். இவைகளை ஏற்கனவே உபயோகித்திருக்கலாமே என்று எனக்கு இப்போது புலப்படுகிறது. ஒரு பசுவைப் பராமரித்து வளர்ப்பதற்காகும் செலவை அந்தப் பசுவின் மூலமே

ஈடுகட்டுவது சாத்தியந்தான். நான் இந்தச் சோதனையை நடத்திப் பார்த்ததில்லை; ஆனாலும் இது சாத்தியம் என்றே எண்ணுகிறேன். மேலும் கிராம ஊழியர்கள் உபயோகிக்கும் அதே உணவுப் பொருள் வகைகளைக் கிராமவாசிகளும் பெற்று உண்பதும், அதன் மூலம் அதே வாழ்க்கைத் தரத்தை அடைவதும், சாத்தியமற்றதல்லவென்ற கருத்தும் எனக்கு உண்டு.[10]

III

உள் உதவி முக்கியம்

கேள்வி : எல்லாக் கிராமங்களிலுமே கட்சிகளும் கோஷ்டிகளும் இருக்கின்றன. நாம் ஸ்தல உதவியை நாடும் போது - நாம் விரும்புகிறோமோ இல்லையோ - ஸ்தல கட்சி அரசியலில் சிக்கி விடுகிறோம். இந்தக் கஷ்டத்திலிருந்து நாம் ஒதுங்க முடியுமா? இரண்டு கட்சிகளிலும் சிக்கிக் கொள்ளாது விலகி, வெளி ஊழியர்களுடைய உதவியுடன் வேலை செய்ய முடியுமா? இப்படிப்பட்ட வேலை முற்றிலும் வெளி உதவியையே சார்ந்திருக்கிறது என்பதுதான் எங்களுடைய அனுபவம். இந்த வெளி உதவி வாபசானவுடன் அது சுக்கு நூறாகிவிடுகிறது. ஆகவே, ஸ்தல முயற்சியைத் தூண்டவும் ஒத்துழைப்பை வளர்க்கவும் நாம் என்ன செய்ய வேண்டும்?

பதில் : அந்தோ, நகரங்களில் உள்ளதைப் போன்றே கிராமங்களிலும் கட்சிகளும் கோஷ்டிகளும் இருக்கின்றன. கிராம நலனைப் பற்றிய அக்கறையில்லாது, கட்சியின் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனேயே கிராமங்களில் கட்சி அரசியல் நுழையும்போது, அது கிராமவாசிகளுக்கு உதவியாய் இருப்பதற்குப் பதிலாக அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடங்கலாக இருக்கிறது. விளைவு என்னவாக இருந்தாலும் நாம் முடிந்த அளவு ஸ்தல உதவியையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமக்கு மட்டும் கட்சி அரசியல்

என்னும் மாசு இல்லாவிட்டால் தவறான பாதையில் செல்லமாட்டோம். கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பு. இந்தக் கிராமங்களை, நகரங்களைச் சேர்ந்த ஆங்கிலம் படித்த ஆண், பெண்கள் படுபாதகமான முறையில் அலட்சியம் செய்து விட்டார்கள். இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வோமாக! நாம் அலட்சியம் செய்ததை நினைவு படுத்திக் கொள்வதே, நமது பொறுமையைத் தூண்டி வளர்க்கும். நான் சென்ற கிராமங்களில் எல்லாம் எதிலுமே ஒரு உண்மையான ஊழியர்கூட இல்லாமல் இல்லை. நம்முடைய கிராமங்களில் உள்ள சிறப்பை ஒப்புக் கொள்ளும் அளவு நாம் பணிவுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத போது தான் நாம் உண்மையான ஊழியர்களைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. நிச்சயமாக, நாம் ஸ்தல அரசியலிலிருந்து ஒதுங்கித்தான் இருக்க வேண்டும். எல்லாக் கட்சிகளிலிருந்தும் கட்சியைச் சேராதவர் களிடமிருந்தும் நாம் உதவியை ஏற்க வேண்டும் - இந்த உதவி உண்மையிலேயே நல்லதாக இருக்கும்போது, அப்போதுதான் கட்சி அரசியலிலிருந்து எவ்வாறு ஒதுங்கியிருப்பது என்பதைக் கற்றுக்கொண்டவர்களா வோம். கிராமவாசிகளை ஒதுக்குவது வெற்றியைக் குழிதோண்டிப் புதைத்துவிடும் என்று கருதுகிறேன். இந்தக் கஷ்டம் எனக்குத் தெரியுமாதலால் ஒரு கிராமத்துக்கு ஒரு ஊழியர் (ஊழியருக்கு, மொழி தெரியாது ஒரு மொழி பெயர்ப்பாளருடைய உதவி தேவைப்படும் போது தவிர) என்ற விதியைக் கண்டிப்பாய் அனுஷ்டிக்க முயற்சி செய்திருக்கிறேன். இந்த முறை இதுவரை நமது காரியத்துக்கு உதவியிருக்கிறது என்பதை மட்டும் நான் கூறிக் கொள்ள முடியும். ஆகையால் உங்களுடைய அனுபவத்தை நான் தள்ளுபடி செய்யவே வேண் யிருக்கிறது. மேலும் அவசர அவசரமாக எந் முடிவுக்கும் வரும் பழக்கம் நமக்கு ஏற்பட்டு விட்ட என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். 'வேலையான முற்றிலும் வெளி உதவியைச் சார்ந்திருக்கிறது. இந்

வெளி உதவி வாபஸ் பெறப்பட்டவுடன் அது அப்படியே நொறுங்கிப் போய் விடுகிறது' என்ற வாக்கியத்தில் பலத்த கண்டனம் தொனிக்கிறது. இப்படிப்பட்ட பலத்த கண்டனம் எதையும் தெரிவிக்குமுன், நான் கீழ்க்கண்டவாறு கூடக் கூறுவேன். அதாவது, ஒரே கிராமத்தில் சில வருடங்கள் வாழ்ந்து ஸ்தல ஊழியர்கள் மூலமாகச் சேவை செய்ய முயன்றிருந்தாலுங்கூட, ஸ்தல ஊழியர்களாலேயோ அல்லது அவர்கள் மூலமாகவோ வேலை செய்ய முடியாது என்பதற்கு அது முடிவான நிரூபணமாகாது. இதற்கு நேர்மாறானது தான் உண்மை என்பது வெளிப்படை. கடைசி வாக்கியத்தை நான் விவரமாக ஆராய்ச்சி செய்வது அனாவசியம். பிரதான ஊழியருக்கு நான் தெள்ளத் தெளிவாகக் கூற முடியும் : ''உங்களுக்கு ஏதாவது வெளி உதவி இருந்தால் அதை அகற்றி விடுங்கள். தனியாகவும் தைரியமாகவும், புத்திசாலித்தனமாகவும் - எவ்வளவு ஸ்தல உதவி பெற முடியுமோ அவ்வளவு உதவியைப் பெற்றுக்கொண்டு - வேலை செய்யுங்கள், நீங்கள் வெற்றி பெறாவிட்டால், உங்களை நீங்கள் குறைகூறிக் கொள்ளவேண்டுமே தவிர வேறு யாரையுமோ எதையுமோ அல்ல.''[11]

பயிற்சி பெறுவோருடன் சம்பாஷணை

கேள்வி : கிராமவாசிகள் உங்களைப் பார்க்க வருகிறார்களா?

பதில் : நிச்சயம் வருகிறார்கள். ஆனால் அச்சமின்றி வருவதில்லை. ஒருவேளை சந்தேகத்துடன் கூட வருகிறார்கள். கிராமவாசிகளிடமுள்ள மற்ற குறைகளைப் போன்று இவைகளும் அவர்களுடைய குறைபாடுகள்; நாம் நீக்கவேண்டியவை.

கேள்வி : எப்படி?

பொறுமையுடன் உழைக்க வேண்டும்

பதில் : நாம் மெதுவாக அவர்களுடைய அபிமானத்தைப் பெற வேண்டும். நாம் அவர்களை நிர்ப்பந்தத்துக்குள்

ளாக்குவதற்காக அங்கு சென்றிருக்கிறோம் என்ற அச்சத்தை அவர்களிடமிருந்து அகற்றவேண்டும். அவர்களை வலுக்கட்டாயப்படுத்தும் எண்ணம் இல்லையென்பதையும் நமக்குச் சுயநலம் எதுவும் இல்லையென்பதையும் நம்முடைய செயல்களின் மூலம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இவைகளுக் கெல்லாம் பொறுமையாக வேலை செய்ய வேண்டியது அவசியம். அவ்வளவு சீக்கிரமாக நம் நல்லெண்ணத் தை அவர்கள் மனதில் பதியுமாறு செய்துவிட முடியாது.

கேள்வி : சம்பளமோ அல்லது படியோ பெறாதவர்கள் தான் - அதாவது ஏதாவதொரு சங்கத்திலிருந்தோ அல்லது கிராமத்திலிருந்தோ எதையும் பெறாதவர்கள் தான் - கிராமவாசிகள் நம்பிக்கைக்குப் பாத்திரர்களாக முடியும் என்று நீங்கள் எண்ணவில்லையா?

சம்பளம் பெற்றால் மட்டமல்ல

பதில் : யார் சம்பளத்திற்காக வேலை செய்கிறார்கள் அல்லது சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறார்கள் என்பது கூட அவர்களுக்குப் புரிவதில்லை. நாம் வாழும் முறை, நம்முடைய பழக்க வழக்கங்கள், பேச்சு (சமிக்ஞை உள்பட) ஆகியவை தான் அவர்கள் மனதில் பதிகின்றன. பணம் சம்பாதிக்கும் ஆசையுடன் வந்திருக்கிறோம் என்று ஒரு சிலர் நம்மைச் சந்தேகிக்கலாம். அவர்களுடைய ஐயப்பாட்டை நாம் போக்க வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் அதே சமயம், ஒரு சங்கத்திலிருந்தோ அல்லது கிராமத்திலிருந்தோ எந்தவிதமான உதவியையும் ஏற்காதவன் தான் இலட்சிய ஊழியன் என்று கருதி விடாதீர்கள். இவன், 'தான் தான் நேர்மையானவன்' என்ற தற்பெருமைக்குப் பெரும்பாலும் பலியாகிறான். அது அவனுடைய மதிப்பைக் குறைத்து விடுகிறது.

கேள்வி : நீங்கள் எங்களுக்குக் கிராமக் கைத்தொழில் களைக் கற்றுக் கொடுக்கிறீர்கள். எங்களுடைய பிழைப்புக்கான ஊதியத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இதைக் கற்றுக் கொடுக்கிறீர்களா? அல்லது கிராமவாசிகளுக்கு

நாங்கள் இதை கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவா? பின்னால் கூறப்பட்டது நோக்கமானால் நாங்கள் ஒரு ஆண்டில் எவ்வாறு இதில் தேர்ச்சி பெற முடியும்?

கிராமவாசிகளுக்கு உதவும் முறையில்

பதில் : உங்களுக்குச் சாதாரண கைத்தொழில்களே கற்றுக் கொடுக்கப்படுகின்றன. ஏனென்றால், சில ஆதாரமான விவரங்கள் தெரிந்தாலொழிய மக்களுக்கு நீங்கள் யோசனை கூறி உதவ முடியாது. உங்களில் நல்ல முயற்சி உள்ளவர்கள் ஒரு தொழிலைச் செய்து வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தைத் தேடிக் கொள்ளலாம். கிராமவாசிகள் செய்யும் தொழிலில் நீங்கள் மேலும் அறிவூட்டும் விதத்திலேயே இங்கு உங்களுக்கு எதையும் கற்பிக்கிறோம். மாவு அரைக்கும் திருகைகள், உமியை நீக்கும் திருகைகள், எண்ணெய்ச் செக்குகள் ஆகியவற்றில் நாங்கள் அபிவிருத்தி செய்திருக்கிறோம். மற்றக் கருவிகளில் அபிவிருத்தி செய்வது பற்றிச் சோதனைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த முன்னேற்றங்களை யெல்லாம் கிராம மக்கள் மத்தியில் நாம் பரப்ப வேண்டும். இவைகளுக்கெல்லாம் மேலாக, செய்யும் தொழிலில் சத்தியமும் நேர்மையும் இருக்க வேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அவர்கள் பாலில் கலப்படம் செய்கிறார்கள்; எண்ணெயில் கலப்படம் செய்கிறார்கள். ஏதாவது சிறிய இலாபம் கிடைத்தால் சத்தியத்திலும் கலப்படம் செய்து விடுவார்கள். இது அவர்களுடைய குற்றம் அல்ல நம்முடைய குற்றம். நாம் அவர்களை இதுவரை அலட்சியம் செய்துவிட்டோம். அவர்களைச் சுரண்டினோமேயொழிய, உயர்ந்தது எதையும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கவில்லை. அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலம் அவர்களுடைய வழிமுறைகளை நாம் எளிதாகத்திருத்த முடியும். நீண்ட காலமாக அவர்களை அலட்சியம் செய்ததும் தனித்து ஒதுக்கியதும், அவர்களுடைய

அறிவு, ஏன், தார்மிக உணர்ச்சி கூட மழுங்குமாறு செய்துவிட்டன. அவைகளை நாம் கூர்மைப்படுத்தி அவை புத்துணர்ச்சி பெறுமாறு செய்யவேண்டும்.[12]

உள்ளேயிருந்தே அபாயம்

உயிருள்ள எந்த இயக்கமோ அல்லது ஸ்தாபனமோ வெளித்தாக்குதலினால் மடிவதில்லை, உள்ளே அழுகிப் போய்த்தான் மடிகிறது. கிஞ்சிற்றும், சந்தேகத்திற்கு இடமில்லாத ஒழுக்கம், செய்யும் வேலையில் தொழில் நுணுக்கத்தை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டு ஓயாத முயற்சி செய்வது, கட்டுப்பாடாக எளிய வாழ்க்கை நடத்துவது ஆகியவை தான் அவசியமானவை. ஒழுக்கம் இல்லாத ஊழியர்கள், கிராமவாசிகளின் சாதாரண வாழ்க்கையிலிருந்து நெடுந்தூரம் விலகியிருப்பவர்கள், அவர்களுடைய ஊழியத்துக்குத் தேவையான அறிவு பெறாதவர்கள் ஆகியோர் கிராமவாசிகள் மனதைக் கவர முடியாது.

ஒழுக்கம் முக்கியம்

இவைகளைப் பற்றி நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே ஒழுக்கம் இல்லாத காரணத்தாலோ அல்லது எளிய வாழ்க்கையை மேற்கொள்ளாத காரணத்தாலோ காரியத்தையும் தங்களையும் கெடுத்துக்கொண்ட ஊழியர்களுடைய உதாரணங்கள் என் ஞாபகத்துக்கு வருகின்றன. நல்ல வேளையாக, ஒழுக்கக் கேடான காரியங்கள் செய்தவர்கள் அபூர்வமே.

நகரத்தின் தரம் எட்ட முடியாதது

ஆனால் வேலை முன்னேறுவதற்கு மிகப் பெரிய தடையாக இருந்தது, நல்ல ஊழியர்கள் கிராம வாழ்க்கைத் தரத்தில் வாழ முடியாமல் இருந்தது தான். இப்படிப்பட்ட ஊழியர்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய சேவைக்காக, கிராம சேவா ஸ்தாபனங்கள் தாங்க முடியாத விலை கூறுவார்களானால், இறுதியில் இந்த ஸ்தாபனங்களையெல்லாம் மூட வேண்டியதாகத்தான் இருக்கும். ஏனென்றால் ஒரு சில அபூர்வமான, தற்காலிக ஊழியர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் நகரங்களின் வீதத்திலேயே ஊதியம்

கேட்கிறார்கள். இதை அவர்கள் வலியுறுத்துவதானது, நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வைச் சரிக்கட்ட முடியாது என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது. கிராம இயக்கம் என்பது கிராமவாசிகளைப் போலவே நகர மக்களையும் படிக்க வைப்பதாகும். நகரங்களிலிருந்து வரும் ஊழியர்கள் கிராம மனோபாவத்தை வளர்த்துக் கொண்டு, கிராமவாசிகளைப் போன்று வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு, கிராமவாசிகளைப் போன்று அவர்களும் பட்டினி கிடக்க வேண்டுமென்பது பொருளல்ல. ஆனால் பழைய வாழ்க்கை முறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படுத்த வேண்டுமென்பது மட்டும் அவசியம். கிராமங்களின் தரத்தை ஒருபுறம் உயர்த்த வேண்டியதிருக்க, நகரத்தின் தரத்தைக் கணிசமான அளவு குறைக்க வேண்டியிருக்கிறது. அதே சமயம், ஊழியரானவர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தனது உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடிய வாழ்க்கையை ஏற்குமாறு செய்யக்கூடாது.[13]

நம்முடைய கிராமங்கள்

ஒரு கிராமத்தில் வாழ முயற்சி செய்யும் ஒரு இளைஞர், தன்னுடைய பிழைப்புக்கு வேண்டிய ஊதியத்தை அங்கேயே சம்பாதித்துக் கொள்ள விரும்புபவர், எனக்கு ஒரு பரிதாபகரமான கடிதம் எழுதியிருக்கிறார். அவருக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாது. ஆகையால் அவருடைய கடிதத்தை இங்குச் சுருக்கித் தருகிறேன் :

''மூன்று ஆண்டுகளுக்கு முன்பு - அதாவது எனக்கு இருபது வயதாக இருந்தபோது தான் இந்தக் கிராம வாழ்க்கைக்கு வந்தேன். அதற்கு முன்பு நான் பதினைந்து ஆண்டுகள் நகர வாழ்க்கை வாழ்ந்திருந்தேன். என்னுடைய வீட்டுச் சூழ்நிலையினால் நான் கல்லூரிப் படிப்பு படிக்க முடியவில்லை. கிராமப் புனருத்தாரணத்துக்காக நீங்கள் மேற்கொண்ட பணியானது, என்னைக் கிராம வாழ்க்கை வாழுமாறு தூண்டியது. எனக்குக் கொஞ்ச நிலம் இருக்கிறது. என்னுடைய கிராமத்தின் ஜனத்தொகை 2500. கிராமத்தில் நான் தொடர்பு கொண்டபின், அங்குள்ள மக்களில் முக்கால்வாசிப் பேருக்கு மேற்பட்டோரிடம் கீழ்க்கண்ட குறைகள் இருப்பதைப் பார்த்தேன் :

(1) கட்சி வேற்றுமைகளும் சண்டைகளும்
(2) பொறாமை
(3) எழுத்தறிவின்மை

(4) வஞ்சகம்
(5) ஒற்றுமையின்மை
(6) கவனக் குறைவு
(7) ஒழுக்கமின்மை
(8) அர்த்தமில்லாத, பழங்காலப் பழக்கவழக்கங்களில் ஒட்டிக் கொண்டிருத்தல்,
(9) இரக்கமற்ற தன்மை.

இது ஒரு ஒதுக்குப்புறமான இடம். இந்தத் தொலைவான இடத்துக்கு எந்தப் பெரிய மனிதரும் ஒருபோதும் வந்ததில்லை. முன்னேறுவதற்குப் பெரிய மனிதர்களின் தொடர்பு அத்தியாவசியமானது. ஆகையால் இந்தக் கிராமத்தில் வாழ நான் அஞ்சுகிறேன். நான் இந்தக் கிராமத்திலிருந்து புறப்பட்டுவிடலாமா? அவ்வாறு புறப்பட வேண்டாமென்றால், நீங்கள் எனக்கு என்ன வழிகாட்டுகிறீர்கள்?''

இந்த இளைஞருடைய கடிதம் நிலைமையைச் சற்று மிகைப்படுத்திக் கூறுகிறது என்பதில் ஐயமில்லை. எனினும், அவருடைய கருத்தைப் பொதுவாக நாம் ஏற்றுக் கொள்ளலாம். இந்தப் பரிதாபகரமான நிலைமை இருப்பதற்கான காரணம் எளிதில் ஊகிக்கக் கூடியதே. கல்வி வசதி பெறும் வாய்ப்பு இருந்தவர்கள் கிராமங்களைப் புறக்கணித்து விட்டார்கள். இதனால் கிராமங்கள் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. படித்தவர்கள் நகர வாழ்க்கைக்குச் சென்றுவிட்டார்கள். கிராம இயக்கம் என்பது என்ன? சேவா உணர்ச்சி உள்ளவர்களைத் தூண்டி கிராமங்களில் குடியேற்றி அங்குள்ள மக்களுடன் சுமுகமான தொடர்பு கொள்ளுமாறு செய்தலும், அவர்கள் கிராம சேவையில் இன்பங் காணுமாறு செய்தலுமே, மேற்கண்ட கடிதத்தை எழுதியவர் கூறியுள்ள குறைகள் கிராம வாழ்க்கையுடன் கூடப்பிறந்தவையல்ல. தொண்டு மனப்பான்மையுடன் கிராமங்களில் குடியேறியவர்கள், அங்கு தங்களை எதிர்நோக்கும் கஷ்டங்களைக் கண்டு பயந்து விடுவதில்லை. கிராமவாசிகளின் சிடுசிடுப்புக்கு ஆளாவது உள்படப் பல்வேறு கஷ்டங்களுக்குத் தாங்கள் ஆளாக வேண்டியிருக்கும் என்பதை அவர்கள் அங்கே செல்லுமுன்பே அறிவார்கள். ஆகையால் தங்களிடமும் தங்களுடைய இலட்சியத்திலும் நம்பிக்கை உள்ளவர்கள்தான் கிராமங்களுக்குத் தொண்டு செய்ய முடியும்; அவர்களுடைய வாழ்க்கையைத் திருத்தி அமைக்க முடியும். மக்கள் மத்தியில் சத்தியமான வாழ்க்கை வாழ்ந்தால் அதுவே ஒரு

முன்னுதாரணமாகும். அது அவரைச் சுற்றி உள்ளவர்கள் மத்தியில் உரிய பிரதிபலனை ஏற்படுத்தக்கூடிய முன்னுதாரணமாக விளங்கும். ஒரு வேளை இந்த இளைஞர் தொண்டு மனப்பான்மை இல்லாது பிழைப்புக்காக மட்டும் கிராமத்துக்குப் போயிருக்கலாம். அதுவே இந்த இளைஞரின் கஷ்டத்துக்குக் காரணமாய் இருக்கக்கூடும். பணத்தை நாடிப் போகிறவர்களுக்குக் கிராம வாழ்க்கை கவர்ச்சியாக இராது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். தொண்டு உணர்ச்சி வேண்டும். இல்லையேல், கிராம வாழ்க்கையானது அதனுடைய புதுமை போனபின் அலுப்புத்தட்டும். கிராமத்துக்குச் சென்ற பின்பு, ஏதாவது சிறு கஷ்டம் ஏற்பட்டது என்பதற்காக, எந்த இளைஞனும் தனது முயற்சியைக் கைவிடக்கூடாது. பொறுமையுடன் முயற்சி செய்தால் நகரவாசிகளிலிருந்து கிராமவாசிகள் அவ்வளவு வேறுபட்டவர்கள் அல்லவென்பதைக் காணலாம். நம்முடைய கவனத்துக்கும் அன்புக்கும் கிராமவாசிகள் செவி சாய்ப்பதையுங் காணலாம். நாட்டில் உள்ள மிகப்பெரிய மனிதர்களைத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு கிராமங்களில் உள்ள ஒருவருக்குக் கிடைக்காது என்பது உண்மையே. கிராம மனப்பான்மை வளருவதற்கு ஏற்ப கிராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டிய அவசியத்தையும், கிராமவாசிகளுடன் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் தலைவர்கள் உணருவார்கள். மேலும், சைதன்யர், இராமகிருஷ்ணர், துளசிதாஸ், கபீர், நானக், டாடு, துகாராம், திருவள்ளுவர் ஆகிய மகான்களும் மற்றும் இவர்களைப் போன்ற சமத்துவமான புகழும் பக்தியும் கொண்ட எண்ணற்ற மகான்களும் இயற்றிய பெரு நூல்கள் மூலம் நல்ல, பெரிய மனிதர்களின் தொடர்பு ஒருவருக்குக் கிடைக்கும். நிலையான உயர்ந்த கருத்துக்களை அறிய நமது மனதைப் பக்குவப்படுத்துவதே கடினமானது. அரசியல், சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் பற்றிய நவீன கருத்துக்களைத் தெரிந்து கொள்வதே நம்முடைய நோக்கமானால், நமது ஆவலைப்பூர்த்தி செய்யக்கூடிய புத்தகங்களை வாங்கிக் கொள்ள முடியும் என்பது உண்மையே. ஆயினும், மத இலக்கியங்கள் கிடைப்பதைப் போன்று அவ்வளவு எளிதாக இவை கிடைப்பதில்லை

யென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். பொது மக்களுக்காக வென்றே மகான்கள் பேசவும் எழுதவும் செய்தார்கள். ஆனால் மக்கள் புரிந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் நவீன கருத்துக்களை எழுத்து அல்லது பேச்சில் இன்னும் கொண்டு வரமுடியவில்லை. ஆகையால் மேற்கண்ட கடிதத்தை எழுதியவரைப் போன்ற இளைஞர்களுக்கு, ''மனந்தளர்ந்துவிட வேண்டாம்'' என்று அறிவுரை கூற விரும்புகிறேன். தொடர்ந்து உங்களுடைய முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். நீங்கள் கிராமங்களில் இருப்பதன் மூலம், கிராமங்களை, நாம் வாழவும் அன்பு செலுத்தவும் அதிகத் தகுதியுள்ள இடமாக்குங்கள். கிராமவாசிகள் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் நீங்கள் தொண்டு செய்து தான் இதைச் சாதிக்க முடியும். தங்களுடைய சொந்த உழைப்பால் கிராமங்களைத் துப்புரவு செய்வதன் மூலமும், தங்களால் முடிந்த அளவு எழுத்தறிவைப் புகட்டுவதன் மூலமும் ஒவ்வொருவரும் இதைச் செய்யத் தொடங்கலாம். அவர்களுடைய வாழ்க்கையானது பரிசுத்தமானதாகவும் ஒழுங்கானதாகவும் சுறுசுறுப்பானதாகவும் இருந்தால், அக்குணங்கள் அவர்கள் சேவை செய்யும் கிராமங்களிலும் பரவும்.[14]

கிராமங்களுக்கு யாத்திரை

கிராம சேவையைப் பற்றித் தங்கள் சுற்றுப்புறங்களில் பிரசாரம் செய்துவரும் ஊழியர்களின் ''யாத்திரை''க்கு ஸ்ரீ சீதா ராம சாஸ்திரி ஏற்பாடு செய்து வருகிறார். இந்த யாத்திரிகர்கள் ரயிலிலோ மோட்டாரிலோ, ஏன் மாட்டு வண்டிகளில் கூடப் பிரயாணம் செய்யக்கூடாது என்றே நான் கூறுவேன். என்னுடைய ஆலோசனையை அவர்கள் ஏற்றுக்கொள்வதானால் அவர்களுடைய வேலையும் அதிகப் பலன் அளிக்கும். செலவும் கிட்டத்தட்ட ஒன்றுமே இருக்காது. இவர்கள் 2 அல்லது 3 பேருக்கு மேற்போகாமல் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து கொள்ள வேண்டும். கிராமவாசிகள், இந்த கோஷ்டிகளுக்கு இருப்பிடமும் உணவும் அளிப்பார்கள் என எதிர்பார்க்கலாம். பெரிய கோஷ்டிகளைப் போன்று சிறிய கோஷ்டிகள் கிராமங்களுக்குத் தாங்கமுடியாத சுமையாக இருக்கமாட்டா.

பணிகள்

சுகாதார சேவை, கிராம நிலவரங்களைப் பற்றிய புள்ளி விவரக் கணக்குகள் சேகரிப்பு, கிட்டத்தட்டச் செலவேயில்லாமல் கிராமவாசிகள் தங்களுடைய பொருளாதார, சுகாதார நலன்களைப் பெருக்கிக் கொள்ளுதல் ஆகியவற்றை அவர்களுக்குப் போதிக்கும் பணிகளில் இந்தக் கோஷ்டிகள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.[15]

புது வழிகளா அல்லது பழையனவா?

போதுமான அனுபவம் இல்லாமல் பழைய கருவிகளை யோ, வழிகளையோ அல்லது பழைய அமைப்புக்களையோ மாற்றுவதற்கு ஊழியர்கள் முயற்சி செய்யக்கூடாது. ஏற்கனவே உள்ள அடிப்படை பாதிக்கப்படாத முறையில் மாறுதல்களைச் செய்ய எண்ணினால்தான் அவை பாதுகாப்பானவையாக இருக்கும். அதுதான் உண்மையான சிக்கனம் என்பதையும் அவர்கள் அனுபவத்தில் காண்பார்கள்.[16]

முழு கிராம சேவை

கிராம வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சேவை செய்யும் ஒரு (சமக்ர) கிராம சேவக், கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களுக்குத் தன்னால் இயன்ற சேவையையும் செய்துவர வேண்டும். இதனால் ஒவ்வொன்றையும் தானே தன்னந் தனியாக இருந்து கிராம ஊழியர் செய்ய முடியும் என்பதல்ல. கிராமவாசிகள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்வதற்கான வழியை அவர் காண்பிப்பார். அவர்களுக்கு வேண்டிய பொருட்களையும் மற்ற உதவியையும் பெற்றுக் கொடுப்பார். தனக்கு வேண்டிய உதவியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பார். கிராமவாசிகள் தனது ஆலோசனையை நாடி அதைப் பின்பற்றும் அளவுக்கு அவர் கிராமவாசிகளின் மனதைக் கவர்ந்திருப்பார். உதாரணமாக நான் ஒரு செக்குடன் ஒரு கிராமத்தில் குடியேறுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். மாதந்தோறும் 15 இலிருந்து 20 ரூபாய்

சம்பாதிக்கக்கூடிய ஒரு சாதாரணச் செக்கானாக நான் இருக்க மாட்டேன். நான் ஒரு ''மகாத்மா செக்கானாக'' இருப்பேன். இந்த இடத்தில் மகாத்மா என்ற வார்த்தையை வேடிக்கையாகவே நான் உபயோகித்திருக்கிறேன். ஆனால் நான் சொல்ல வந்தது என்னவென்றால், ஒரு செக்கான் என்ற முறையில் கிராமவாசிகள் முன்மாதிரியாகப் பின்பற்றக் கூடியவனாக நான் இருப்பேன் என்பது தான். கீதையும் குரானும் அறிந்த செக்கானாக நான் இருப்பேன். கிராமவாசிகளுடைய குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கக் கூடிய அளவு நான் படித்திருப்பேன். ஒருவேளை, நேரமில்லாததால் நான் இதைச் செய்யமுடியாது போகலாம். கிராமவாசிகள் என்னிடம் வந்து, ''தயவு செய்து எங்களுடைய குழந்தைகளின் கல்விக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கேட்பார்கள். அப்போது நான் அவர்களிடம், ''நான் உங்களுக்காக ஒரு ஆசிரியரைக் கொண்டுவர முடியும். ஆனால் அதற்காக ஆகும் செலவுகளை நீங்கள் தான் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்'' என்று கூறுவேன். அவர்கள் முழுமனதுடன் இதைச் செய்யத் தயாராய் இருப்பார்கள். அவர்களுக்கு நான் நூல் நூற்கக் கற்றுக் கொடுப்பேன். ஒரு நெசவாளர் வேண்டுமென அவர்கள் என்னிடம் வந்து கேட்டால், எந்த நிபந்தனைப்படி ஆசிரியரைத் தேடிக் கொடுத்தேனோ அதே நிபந்தனையில் நெசவுக்காரரைத் தேடிக் கொடுப்பேன். அவர்களுடைய துணியை எவ்வாறு நெய்வதென்பதை இந்த நெசவுக்காரர் கற்றுக் கொடுப்பார். சுகாதாரம், துப்புரவு ஆகியவைகளின் முக்கியத்துவத்தை நான் அவர்களுக்கு உணர்த்துவேன். தங்களுக்கு ஒரு தோட்டி வேண்டுமென்று என்னிடம் அவர்கள் கேட்டால், ''நானே உங்களுடைய தோட்டியாக இருக்கிறேன்; இந்த வேலையை உங்கள் எல்லோருக்கும் கற்றுக் கொடுக்கிறேன்'' என்று சொல்வேன். எல்லாத் துறைகளிலும் தொண்டாற்ற சமக்ர கிராம சேவையைப் பற்றிய எனது கருத்து இது தான்.[17]

அத்தியாயம் 28

அரசாங்கமும் கிராமங்களும்

அரசாங்கம் என்ன செய்ய முடியும்?

கிராமத்தின் கதர் தேவைப் பூர்த்தி

இப்போது காங்கிரஸ் அமைச்சர்களே பதவி வகிப்பதால், கதருக்கும் மற்றக் கிராமக் கைத்தொழில்களுக்கும் அவர்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கப்படுவதில் நியாயம் இருக்கிறது. அதற்கெனத் தனியாக ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டாலும் நியமிக்கப்படா விட்டாலும் இந்த வேலைக்கெனத் தனி அரசாங்க இலாகா அமைக்க வேண்டியது முற்றிலும் அவசியமாகும். உணவும் உடையும் பற்றாக்குறையாக இருக்கும் இந்தக் காலத்தில், இந்த இலாகா மிகப் பெரிய உதவியாக இருக்க முடியும். அகில இந்திய நூற்போர் சங்கத்தின் மூலமும், கிராமக் கைத்தொழில் சங்கத்தின் மூலமும் நிபுணர் உதவியை அமைச்சர்கள் பெறலாம். மிகக் குறைந்த செலவில், மிகக் குறுகிய காலத்தில் இந்தியாவில் உள்ளவர் களுக்கெல்லாம் இப்போது கதர் அளிக்க முடியும். கிராமவாசிகள் தங்களுக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு மாகாண அரசாங்கமும் கூறிவிட வேண்டும். இவ்வாறு செய்வதானால், ஆங்காங்கு கதர் உற்பத்தியும் விநியோகமும் தானாகவே நடைபெற்று விடும். அதனால் நகரங்களின் உபயோகத்துக்கும் ஒரு சிறு அளவாவது உபரி கிடைக்கும். அதனால் ஆங்காங்குள்ள ஆலைகளின் பாரம் ஓரளவாவது குறையும். அப்போது இந்த ஆலைகள், உலகின் மற்றப் பகுதிகளுக்குத் தேவையான துணியை உற்பத்தி செய்து கொடுக்க முடியும்.

எவ்வாறு இதைச் சாதிக்க முடியும்?

அரசாங்க உதவிகள்

ஒரு குறிப்பிட்ட தேதிக்குள், தங்கள் தங்கள் கிராமத்துக்கு வேண்டிய கதரைத் தாங்களே உற்பத்தி செய்து

கொள்ள வேண்டும் என்று கிராமவாசிகளுக்கு அரசாங்கம் அறிவித்து விட வேண்டும். அந்தத் தேதிக்குப் பின் எந்தத் துணியும் அவர்களுக்கு அளிக்கப்பட மாட்டாது என்பதையும் அறிவித்து விடவேண்டும். அதே சமயம் அரசாங்கங்களும் கிராமங்களுக்குத் தேவையான பருத்தி விதை அல்லது பஞ்சு, உற்பத்தி செய்வதற்குத் தேவையான கருவிகள் ஆகியவைகளைக் கொள்முதல் விலைக்கு அளித்து உதவ வேண்டும். இவைகளின் விலையை ஐந்து வருஷங்களிலோ அல்லது அதற்கு மேலான காலத்திலோ சிறுசிறு தொகை களாகப் பல தவணைகளில் வசூல் செய்ய வேண்டும். அவசியமான இடங்களுக்குப் பயிற்சியளிப்போர்களை அனுப்பி உதவ வேண்டும். ஒரு கிராமத்தில் உள்ளவர்கள் அங்கு உற்பத்தியாகும் துணியிலிருந்தே தங்களுடைய் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு, அதற்கு மேலும் உபரியாகக் கதர் இருந்தால் அதை வாங்கிக் கொள்வதாக அரசு உறுதிமொழி அளிக்க வேண்டும். பெருங்கஷ்டம் எதுவும் இல்லாமல் இது துணிப் பற்றாக்குறையைப் போக்கி விடும். இதற்காக ஒவ்வொருவருக்கும் ஆகும் செலவும் மிக மிகக் குறைவானதாக இருக்கும்.

கிராம "சர்வே"

கிராமங்களில் சர்வே நடத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், சிறு உதவியுடனோ அல்லது எவ்விதமான உதவியும் இல்லாமலோ உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் - இவைகள் அந்த கிராமத்தின் தேவைக்கு உபயோகமாக இருந்தாலும் சரி, அல்லது வெளி விற்பனைக்குத் தேவையானவைகளாக இருந்தாலும் சரி - பட்டியலைத் தயாரிக்க வேண்டும். உதாரணமாக, செக்கு எண்ணெய், செக்குப் பிண்ணாக்கு, செக்கில் ஆட்டி விளக்கிற்கு உபயோகப்படுத்தப்படும் எண்ணெய், கைக்குத்தல் அரிசி, பனைச்சர்க்கரை, தேன், விளையாட்டுச் சாமான்கள், பாய்கள், கையால் செய்த காகிதம், கிராமத்தில் உற்பத்தியான சோப் முதலியவைகளைக் கூறலாம். தற்போது கிராமங்களில் பெரும்பாலானவை, ஒன்று செத்துவிட்டன அல்லது செத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் மேற்கண்டவாறு கவனம் எடுத்துக் கொண்டால், அவை உயிர்

பெற்றவைகளாகும். தங்களுடைய தேவைகளில் பெரும் பாலானவைகளைப் பூர்த்தி செய்வதுடன் இந்தியாவில் உள்ள பெரிய, சிறிய நகரங்களின் பெரும்பாலான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தங்களுக்குப் போதிய சக்தி உண்டு என்பதையும் வெளிக்காட்டுபவையாக இருக்கும்.

கால்நடைச் செல்வம்

இதற்கப்பால், இந்தியாவில் உள்ள எண்ணற்ற கால் நடைச் செல்வம் இருக்கிறது. ஆனால் இவை மிகக் கொடுமையான முறையில் அலட்சியம் செய்யப்பட்டதால் பல இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கின்றன; கோசேவா சங்கம் போதுமான அளவு அனுபவம் அடையவில்லையென்றாலும் இந்த விஷயத்தில் அது பெரும் உதவி செய்ய முடியும்.

ஆதாரக் கல்வி

ஆதாரக் கல்வி இல்லாததால் தற்போது கிராமவாசிகள் கல்விப் பசியால் வாடுகின்றனர். இந்தத் தேவையை இந்துஸ்தானி தாலிமி சங்கம் பூர்த்தி செய்ய முடியும்.[1]

நான் ஒரு அமைச்சனாக இருந்தால்?

இது கட்டாயமாகுமா?

மேலே நான் கூறியுள்ள கருத்துக்களை நான் மாற்றிக் கொள்ளவேயில்லை. ஒரே ஒரு விஷயந்தான் தவறான கருத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதில் கட்டாயம் இருப்பதாகச் சில நண்பர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார் கள். அதில் உள்ள தெளிவற்ற நிலைக்காக நான் வருந்து கிறேன். மக்கள் பிரதிநிதித்துவம் படைத்த அரசாங்கங்கள், தாங்கள் விரும்பினால் என்ன செய்யலாம் என்பதைத்தான் (கேள்விக்கு மறுமொழியாக) நான் கூறியிருந்தேன். அப்படிப்பட்ட அரசாங்கங்களின் அறிக்கைகளைக் கட்டாயமாகக் கொள்ள முடியாது என்பதை நான் ஊகித்துக் கொண்டேன். இவ்வாறு நான் ஊகித்துக் கொண்டதும் ஏற்கத் தக்கதே என்று நம்புகிறேன். ஏனென்றால், உண்மையான பிரதிநிதித்துவம் உள்ள ஒரு அரசாங்கத்தின் ஒவ்வொரு செயலும், எந்த வாக்காளர்களின் பிரதிநிதியாக அரசாங்கம்

வீற்றிருக்கிறதோ அந்த அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெற்றதாகவே ஆகும். வாக்காளர்கள் என்பது மொத்தமாக உள்ள எல்லா மக்களுந்தான் - அதாவது அவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்திருந்தாலும் பதிவு செய்யா விட்டாலும் சரி. இந்த அடிப்படையில்தான், ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பின், தாங்களே உற்பத்தி செய்த கதரைக் கிராமவாசிகள் அணிவதைச் சாத்தியமாக்குவதற்காக, அத்தேதிக்குப்பின் கிராமவாசிகளுக்கு ஆலைத் துணி அளிக்கப்படமாட்டாதென்று கிராமங்களுக்கு அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று நான் எழுதினேன்.

கதர் சுதந்திர சின்னம்

சுயராஜ்யத்திற்குக் கதர் ஒரு சாதனம். ஆனால், சம்பந்தப்பட்ட மக்களின் மனமுவந்த ஒத்துழைப்பு இல்லாமல் கதர் சம்பந்தமாக நிறைவேற்றப்படும் எந்தத் திட்டமும் இதில் மண்ணை அள்ளிப் போட்டுவிடும். கடந்த ஏப்ரல் 25-ஆம் தேதியன்று நான் எழுதிய கட்டுரைக்கு என்ன பொருள் இருந்தாலும், இதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேற்கண்டவாறு செய்தால், கதர் என்பது மத்திய கால அஞ்ஞானத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் திரும்பிச் செல்வதாகும் என்ற வசைமொழி உண்மையாகப் போய் விடும். ஆனால் நானோ இதற்கு முரணான கருத்துக் கொண்டிருந்திருக்கிறேன். கட்டாயத்தின் பேரில் கதர் அணிவதானது எவ்வாறு அடிமைத்தனத்தின் சின்னமாகுமோ அதைப்போன்று அறிவுப்பூர்வமாகக் கதரை ஏற்று அதைத் தானே பிரதானமாகத் தனது உபயோகத்துக்காகத் தயாரிப்பது நமது சுதந்திரத்தின் சின்னமாகும். சுதந்திரம் என்பது எல்லா வகையாலும் சுய உதவியை நம்பியிருப்பது தான். அவ்வாறு இல்லாவிட்டால் அது என்ன சுதந்திரம்? கதர் என்பது ஒரு சுதந்திர மனிதனின் உரிமையும் கடமையுமாகும் என்று நான் நம்புகிறேன். இல்லையேல், கதருடன் நான் எந்தவிதமான தொடர்பும் கொள்ளமாட்டேன்.

விற்பனைக்கா கதர்?

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கதரானது ஒரு சமயம் சொந்த உபயோகத்துக்காகவும் விற்பனைக்காகவும்

இருக்க முடியுமா என்று நண்பரான ஒரு விமர்சகர் கேட்கிறார். விற்பனை என்பது இரண்டாம் தரமானதாக இருந்தால், ‘‘ஆம்’’ என்று இதற்குப் பதில் கூறலாம்; ஆனால் விற்பனைக்காகவே உற்பத்தி அல்லது பிரதானமாக விற்பனைக்காக உற்பத்தி என்ற நிலைமை இருந்தால் ‘‘கூடாது’’ என்பதே பதிலாகும். கதர் விற்பனையுடன் நாம் தொடங்கியதானது, தற்கால அவசியத்தை உணர்த்துவதுடன் நம்முடைய குறுகிய இலட்சிய நோக்கையும் எடுத்துக் காண்பிக்கிறது. அனுபவம் என்பது ஒரு பெரிய ஆசான். அது நமக்குப் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. அதனுடைய பிரதான உபயோகம் இதில் முக்கியத்துவம் இல்லாததல்ல. ஆனால் எந்த வகையிலும் கடைசி முக்கியத்துவம் வாய்ந்ததுமல்ல. ஆனால் மனதைக் கவரும் இந்த ஹேஷ்யங்களில் ஈடுபடுவதை நான் விட்டுவிட்டு, தலைப்பில் கேட்கப்பட்ட கேள்விக்குத் திட்டவட்டமான பதில் அளிக்க ஆரம்பிக்க வேண்டும்.

விரிவான அம்சங்கள்

எல்லா அரசாங்க நடவடிக்கைகளுக்கும் கேந்திரமான கிராமப் புனருத்தாரண அமைச்சர் என்ற முறையில் எனது முதல் வேலை, இவ்வேலைக்குத் தகுதி வாய்ந்த நேர்மையான, லஞ்சம் வாங்காத நிரந்தர அரசாங்க அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதாகவே இருக்கும். நான் அவர்களை அகில இந்திய நூற்போர் சங்கத்துடனும், அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு செய்வேன். இந்த இரண்டுமே காங்கிரஸ் நிறுவிய ஸ்தாபனங்கள் தான். கிராமக் கைத்தொழில் சங்கத்துக்கு மிக அதிகமான ஊக்கம் அளிப்பதற்கான திட்டத்தைக் கொண்டு வருவேன். நான் இந்த அதிகாரி களுக்குச் சில நிபந்தனைகளை விதிப்பேன். கிராமவாசிகளை எந்த முறையிலும் கட்டாயப்படுத்தக்கூடாது; மற்றவர்களுக் காக அவர்கள் அடிமைபோல் உழைக்கக் கூடாது; சுயமுயற்சியை நம்பி வாழ அவர்களுக்குப் போதிக்க வேண்டும்; உணவு, உடை, மற்ற அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவைகளின் உற்பத்திக்குத் தங்களுடைய சொந்த உழைப்பையும் திறமையையும் நம்பியிருக்குமாறு

செய்ய வேண்டும். ஆகவே இவ்வாறு இந்தத் திட்டம் விரிவானதாய் இருக்க வேண்டும். ஆகையால் என்னுடைய முதல் அதிகாரியை இந்துஸ்தானி தாலிமி சங்கத்தை (ஆதாரக் கல்விச் சங்கத்தை) பார்க்குமாறும் அது கூறுவதைக் கேட்குமாறும்தான் நான் அறிவுரை கூற விரும்புகிறேன்.

அடிப்படை விதி

இவ்வாறு தயாரிக்கப்படும் திட்டத்தில் ஒருவிதி இருக்கிறது என்பதை நான் ஊகித்துக் கொள்கிறேன். அதாவது, ''ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து ஒரு ஆண்டுக்குப் பின் ஆலைத்துணி எங்களுக்குத் தேவையில்லை; எங்களுக்குப் பஞ்சு, கம்பளி, மற்றும் அத்தியாவசியமான சாதனங்கள் ஆகியவைகளைக் கொடுங்கள்; அவற்றை வெகுமதியாகக் கொடுக்க வேண்டாம். சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்துமாறு கொடுங்கள்'' என்று கிராமவாசிகளே அறிவிப்பார்கள். மேலும் இந்தத் திட்டமானது எடுத்த எடுப்பிலேயே ஒரு மாகாணம் முழுவதும் அமுலுக்கு வராது. ஆரம்பத்தில் ஒரு பகுதியிலேயே அமுலுக்கு வரும். மேலும் அகில இந்திய நூற்போர் சங்கமானது, இத்திட்டம் அமுலுக்கு வர வழிகாட்டி உதவும். இதுவும் இத்திட்டத்தில் கூறப்பட்டிருக்கும்.

செலவு முறை

இத்திட்டம் சிறந்தது என்பதை உணர்ந்தவுடன் சட்டத் துறையைக் கலந்தாலோசித்து அதற்கு ஒரு சட்ட பூர்வமான உரு அளிப்பேன். அதன்பின், இந்தத் திட்டம் எவ்வாறு தோன்றியது என்பதைப் பூரணமாக விளக்கி ஒரு அறிக்கை வெளியிடுவேன். கிராமவாசிகள், ஆலைச் சொந்தக்காரர்கள், மற்றவர்கள் ஆகியோர் உடன்பாட்டுடனேயே இது நடைபெறும். இந்த அறிக்கைக்கு அரசாங்க முத்திரை இருந்தாலும், அது மக்களுடைய நடவடிக்கையே என்பதை அந்த அறிக்கை தெளிவாக உணர்த்தும். வறண்ட ஏழைகளான கிராமவாசிகளின் நலனுக்காக அரசாங்கத்தின் பணம் செலவிடப்படும். சம்பந்தப்பட்ட மக்களுக்கு அது மிக அதிகமான பலன் தருமாறும் பார்த்துக் கொள்ளப்படும்.

ஆகையால் ஒரு வகையில் இது மிகவும் இலாபகரமான முதலீடாக இருக்கும். இதில் நிபுணர்கள் தாங்களாகவே முன்வந்து உதவி அளிப்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஆகும் செலவு மிகமிகக் குறைந்ததாக இருக்கும். மொத்தத்தில் நாட்டிற்கான செலவையும், அதனால் மக்களுக்கு ஏற்பட்ட பலனையும் மேற்கண்ட அறிக்கை விவரமாக விளக்கும்.

நூற்போர் சங்கப் பொறுப்பு

ஒரு கதர்த் திட்டத்தை உருவாக்கி, அதை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும் சுமையை ஏற்கும் அளவு மனத் தெளிவும் சக்தியும் அகில இந்திய நூற்போர் சங்கத்துக்கு உண்டா என்பதைத்தான் அமைச்சர் என்ற முறையில் நான் சிந்தித்துப் பார்ப்பேன். அவ்வித சக்தி அதற்கு இருந்தால் முழு நம்பிக்கையுடன் எனது திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முற்படுவேன்.

அத்தியாயம் 29

இந்தியாவும் உலகமும்

உள்நாட்டுப் பொருளாதாரம்

இந்தியா தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாகவும், தன்னம்பிக்கை உடையதாகவும், ஆசையோ சுரண்டலோ அண்ட முடியாததாகவும் இருந்தால், எந்த வல்லரசும் - அது மேற்கு வல்லரசோ அல்லது கிழக்கு வல்லரசோ - பேராசைப்படக்கூடிய நாடாக இருக்காது. ஆயுதங்களால் ஏற்படும் பணச் சுமையை ஏற்காமலேயே பாதுகாப்பாக இருக்கும். ஆக்கிரமிப்பிலிருந்து இந்தியாவைக் காக்கக்கூடிய மிகப் பெரிய பாதுகாப்பு இந்தியாவின் உள்நாட்டுப் பொருளாதாரந்தான்.[1]

ஒதுங்கிய சுதந்திரம் அல்ல

பூரண சுயராஜ்யம் என்று நான் சொல்லும்போது, தனித்து ஒதுங்கியுள்ள சுதந்திரத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால், நலம் தரும் கண்ணியமான சுதந்திரத்தைத்தான் குறிப்பிடுகிறேன். என்னுடைய தேசியம் தீவிரமானதாய் இருந்தாலும் அது வெறும் தேசியம் மட்டுமல்ல. மற்ற தேசத்திற்கோ அல்லது தனிப்பட்டவருக்கோ தீங்கு விளைவிப்பது என்னுடைய நோக்கமல்ல. சட்ட முதுமொழிகள் சட்ட பூர்வமானவை என்பதைக் காட்டிலும் அறநெறியானவை என்பது தான் அதிக முக்கியமானது. ‘‘மற்றவர்களுடைய சொத்துக்குத் தீங்கு செய்யும் முறையில் உன்னுடைய சொத்தைப் பயன்படுத்தாதே’’ என்ற நிரந்தர சத்தியமொழியில் எனக்கு நம்பிக்கையுண்டு.[2]

உலக அமைப்பு

ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காகப் பரஸ்பரம் பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொள்வதற்கும் பொருளாதார ஒத்துழைப்புக்கும், சுதந்திர ஜனநாயக இந்தியா மற்ற சுதந்திர நாடுகளுடன் மகிழ்ச்சியுடன் ஒன்று சேரும். சுதந்திரத் தையும், ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு உண்மையான உலக அமைப்பை உண்டாக்குவதற்காக அது தொண்டாற்றும். இவ்வித அமைப்பில் மனித வர்க்கத்தின்

முன்னேற்றத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் உலகின் அறிவும் வளமும் பயன்படுத்தப்படும்.[3]

பிற நாடுகள் செய்யக்கூடிய உதவி

மேற்கு நாடுகள் தங்களுடைய திறமையைப் பயன் படுத்த வேண்டும் என்பதுதான் இதன் பொருள். அவர்கள் வெளிநாடுகளில் தாராள மனோபாவத்துடன் தங்களுடைய திறமையைப் பயன்படுத்த விரும்பினால், அமெரிக்கா, ''நல்லது, பாலங்கள் கட்டுவது எப்படியென்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் அதை இரகசியமாக வைத்துக் கொள்ளப் போவதில்லை. எப்படிப் பாலங்கள் கட்டுவதென்பதை உலகம் முழுவதற்குமே கற்றுக் கொடுக்க நாங்கள் தயார். அதே சமயம் உங்களிடமிருந்து நாங்கள் எவ்விதக் கட்டணமும் வசூல் செய்யப் போவதில்லை'' என்று சொல்லும். தற்போது அமெரிக்கா, ''பிறநாடுகள் ஒரு கோதுமைக் கதிர் விளைவிக்கக்கூடிய இடத்தில் எங்களால் இரண்டாயிரம் விளைவிக்க முடியும்'' என்று கூறுகிறது. அப்படியானால், அந்தக் கலையைக் கற்க விரும்பும் மற்றவர்களுக்கு அமெரிக்கா அதை இலவசமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, உலகம் முழுவதற்குமே தேவையான கோதுமையை அமெரிக்காவே உற்பத்தி செய்ய முற்பட்டுவிடக் கூடாது. அவ்வாறு அமெரிக்கா விளைவிக்கக்கூடிய ஒருநாள் வருமானால், அது உலகிற்கே ஒரு துக்க நாளாகத் தான் முடியும்.[4]

[இந்தியா தங்களுக்கு என்ன உதவியளிக்கும் என்பதை அறிய ஆப்பிரிக்கர்கள் விரும்பினார்கள். ''பயங்கரச் சுரண்டலுக்கு அவர்கள் ஆளாகியிருப்பதால், அவர்களை இந்தச் சுரண்டலிலிருந்து காப்பாற்றக் கூட்டுறவு தொழில்மயத் திட்டத்தை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றி வைக்க முடியும்'' என்பதையும் அவர்கள் அறிய விரும்பினார்கள்.]

இராட்டையை அளிக்கும்

இந்தியாவுக்கும், ஆப்பிரிக்காவுக்குமிடையே தத்துவங் கள், சேவைகள் ஆகியவற்றில் பரிமாற்றம் நடைபெறும். மேற்கு நாட்டுச் சுரண்டல்காரர்களைப் போன்று மூலப் பொருள்களுக்காக, உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதென்பதிருக்காது. அப்போது உங்களுக்கு இந்தியா இராட்டையை அளிக்கும். நான் தென்னாப்பிரிக்காவிலிருந்த போது இதைக் கண்டுபிடித்திருந்தால், போனிக்ஸில்

என்னுடைய அண்டை வீட்டுக்காரர்களாக இருந்த ஆப்பிரிக்கர்கள் மத்தியில் அதைப் புகுத்தியிருப்பேன். நீங்கள் பருத்தி சாகுபடி செய்ய முடியும். உங்களுக்கு நிறைய ஓய்வும், (உடல்) உழைப்புத் திறனும் இருக்கிறது. நாம் புனருத்தாரணம் செய்ய விரும்பும் கிராமக் கைத்தொழில்களைப் பற்றி ஆராய்ந்து, அவைகள் என்ன கற்பிக்கின்றனவென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்களுடைய விமோசனத்தின் திறவுகோலே அதில் தான் இருக்கிறது.[5]

அமெரிக்காவுக்கு அளிக்கக்கூடிய செய்தி இராட்டை யிடம் ஏதாயினும் உண்டா? அணுக்குண்டுக்கு மாற்று ஆயுதமாக அது பயன்பட முடியுமா?

உலகிற்குச் செய்தி

அமெரிக்காவுக்கு, ஏன், இந்த உலகம் முழுவதற்குமே அளிக்கக் கூடிய செய்தி இராட்டையிடம் இருப்பதாகவே நான் கருதுகிறேன்........ இந்தியாவும் உலகமும் இராட்டையின் மூலமே காப்பாற்றப்படும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. இந்தியா இயந்திரத்தின் அடிமையானால், ஆண்டவன் உலகத்தைக் காப்பாற்றட்டும் என்றுதான் நான் கூறுவேன்.[6]

இந்தியாவே வழிகாட்டும்

இரத்தம் சிந்தி மரணம் விளைவிப்பதில் உலகமே அலுத்துப் போய்விட்டது என்று நான் மனப்பூர்வமாக உணருகிறேன். இதிலிருந்து தப்புவதற்கான வழியைக் கண்டுபிடிப்பதற்கு உலகம் முயன்று கொண்டிருக்கிறது. அநேகமாக, மேற்கண்ட பசியால் வாடும் உலகத்திற்கு இந்தியா என்ற இந்தப் புராதன நாடே வழிகாட்டும். இப்பெருமையை அது அடையும் என்ற நம்பிக்கை எனக்குப் பெருமை தருகிறது.[7]

கலங்கரை விளக்கம்

இந்தியா தோல்வியடைந்தால், ஆசியாவே அழிந்து விடும். பல கலப்படமான கலாச்சாரங்களும் நாகரிகங்களும் வளரும் இடம் என்று இது வர்ணிக்கப்பட்டிருப்பது முற்றிலும் சரியே. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அல்லது உலகின்

எந்தப் பகுதியிலும் வாழக்கூடிய சுரண்டப்பட்ட இனங்களுக்கெல்லாம் இந்தியாவே கலங்கரை விளக்கமாக நின்று நிலவட்டும்.[8]

பிறரைச் சார்ந்த வாழ்வு

உலகம் முழுவதிலுமிருந்து நாம் துண்டித்துக் கொண்டு வாழ விரும்பவில்லை. எல்லா நாடுகளுடனுமே நாம் சுதந்திரமான தொடர்பு கொண்டிருப்போம். ஆனால், நிர்ப்பந்தமான முறையில் தற்போது நாம் கொண்டுள்ள தொடர்புகளெல்லாம் அகல வேண்டும். நாம் பிறரால் சுரண்டப்பட விரும்பவில்லை. அதே சமயம் மற்ற எந்த நாட்டையும் சுரண்டவும் விரும்பவில்லை. இந்தத் திட்டத்தின் கீழ் எல்லாக் குழந்தைகளையுமே உற்பத்தியாளர்களாக்கும் நாளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். தேசத்தின் தோற்றத்தையே நாம் மாற்ற விரும்புகிறோம். ஏனென்றால் இது தான் நமது சமூக வாழ்வு முழுவதிலும் ஊடுருவிக் கலக்கும். ஆனால் இதற்காக நாம் உலகத்திலிருந்தே துண்டு பட்டுப் போய்விடுகிறோம் என்பதல்ல. சில பொருட்களை உற்பத்தி செய்ய முடியவில்லையென்பதற்காகப் பிற நாடுகளுடன் பண்டங்களைப் பரிமாற்றம் செய்து கொள்ள விரும்பும் நாடுகள் இருக்கத்தான் செய்யும். நிச்சயமாக அவை இப்பொருட்களுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்த்துத்தான் இருக்கும். ஆனால் இதற்காக, இந்தப் பொருட்களை அளிக்கும் நாடுகள் அவைகளைச் சுரண்டக் கூடாது.

எப்போது தனித்து வாழமுடியும்?

ஆனால் பிற நாடுகளிடமிருந்து எதையுமே எதிர்பார்க்காத அளவு நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை எளிமையாக்கிக் கொண்டால், அவர்களிடமிருந்து நீங்கள் உங்களைத் துண்டுபடுத்திக் கொள்ள முடியும். ஆனால், நீங்கள் அமெரிக்காவுக்கும் பொறுப்புள்ளவர்களாய் இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

அமெரிக்கா நம்மைப் பின்பற்றும்

பிறரை நாம் சுரண்டாமலும், பிறரால் நாம் சுரண்டப்படாமலும் இருக்கும் போதுதான், நாம்

அமெரிக்காவுக்குப் பொறுப்புள்ளவர்களாய் இருக்க முடியும். ஏனென்றால் அப்போது தான் அமெரிக்கா நம்மைப் பின்பற்றும். நமக்கிடையே சுதந்திரமான பரிமாற்றம் ஏற்படுவதில் எவ்விதக் கஷ்டமும் இருக்காது.[9]

மிகவும் கடினமானது

இந்தியாவை இலட்சிய நாடாக்குவது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு ஒரு கிராமத்தை இலட்சிய கிராமமாக்குவதும் கஷ்டமாகும். இதை நான் அறிவேன்... ஆனால் ஒருவர் ஒரு இலட்சிய கிராமத்தை மட்டும் உருவாக்கி விட்டாரென்றால், அவர் இந்த நாடு முழுவதற்கும் மட்டுமல்லாது, உலகம் முழுவதற்குமே முன் மாதிரியான அமைப்பை உருவாக்கியவராவார். ஒரு இலட்சியத்தை நாடிச் செல்பவர், இதைக் காட்டிலும் பெரிய ஒரு இலட்சியத்தை நாடிச் செல்ல முடியாது.[10]

யாருடைய நலன் பிரதானம்?

'சுதந்திர இந்தியாவில் யாருடைய நலன் தலையான தாய் இருக்கும்? நம்முடைய அண்டை நாடு ஒன்று பற்றாக்குறையில் இருக்கும்போது, இந்தியா மட்டும், தன்னுடைய நலன்களே பிரதானமானவையென்று கூறிக் கொண்டு, தனித்து ஒதுங்குங் கொள்கையைக் கடைப் பிடிக்குமா?

உண்மையிலேயே உரிமை பெற்ற சுதந்திரமான இந்தியா, துயரத்தில் சிக்கும் தன்னுடைய அண்டை நாடுகளின் உதவிக்கு ஓடோடி உதவும். தன்னுடைய வகுப்புக்கு அப்பால் பிற வகுப்பிற்கும் உதவ முடியும் அளவுக்குத் தியாக உணர்வு இல்லாத மனிதன், தானும் சுயநலக்காரன் ஆவதுடன், தன்னுடைய வகுப்பையும் சுயநலம் உள்ள வகுப்பு ஆக்குகிறான். தனிப்பட்டவர் ஊர்ச் சமுதாயத்திற்காகவும், ஊர் மாவட்டத்திற்காகவும், மாவட்டம் மாநிலத்திற்காகவும், மாநிலம் தேசத்துக்காகவும், தேசம் உலகத்திற்காகவும் தியாகம் செய்ய வேண்டும் என்பதே தன்னல மறுப்பின் இயற்கையான வளர்ச்சியாகும். சமுத்திரத்திலிருந்து ஒரு துளி தண்ணீரை எடுத்துவிட்டால், அது உலர்ந்து வீணாகப் போய்விடுகிறது. ஆனால் ஒரு

சமுத்திரத்தின் அங்கமாக இருக்கும்போதோ, தனது இதயத்தில் எத்தனையோ பலம் பொருந்திய கப்பல்களைத் தாங்கும் பெருமை படைத்ததாக விளங்குகிறது.[11]

இராம ராஜ்யம் என்ன?

இராம ராஜ்யம் என்பது இந்துக்களின் ஆட்சியாக இருக்கும் என்ற தவறான கருத்து யாருக்கும் வேண்டாம். ‘இராமன்’ என்பது, குதா அல்லது கடவுள் என்பதற்கு மற்றொரு பெயராகும். குதாப் ராஜ்யத்தை நான் விரும்புகிறேன். பூமியில் பரலோக சாம்ராஜ்யம் ஏற்படுவதென்பதும் இதுவும் ஒன்றே. இப்படிப்பட்ட ராஜ்யம் அமைவது, இந்திய மக்கள் எல்லோருடைய நலன்களுக்கு மட்டும் அல்லாது உலகம் முழுவதற்குமே உதவக் கூடியதாய் இருக்கும்.[12]

உலகிற்காக இந்தியாவின் தியாகம்

உலக அபிவிருத்திக்காக இந்தியா மனமுவந்து பரிசுத்தமான தியாகம் செய்ய வேண்டும். அதற்காகவே இந்தியா பலம் பொருந்திய சுதந்திர நாடாக இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பரிசுத்தமான ஒரு மனிதன், தனது குடும்பத்தின் நலனுக்காகத் தன்னைத் தியாகம் செய்து கொள்கிறான். குடும்பம் கிராமத்துக்காகவும், கிராமம் மாவட்டத்துக்காகவும் மாவட்டம் மாநிலத்துக்காக வும், மாநிலம் தேசத்துக்காகவும், தேசம் உலகத்துக்காகவும் தியாகம் செய்கிறது.[13]

சுயராஜ்யத்தின் மூலம் உலகம் முழுவதற்குமே நாம் தொண்டாற்ற முடியும்.[14]

எல்லையே இல்லை

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லை களுக்கு அப்பாலுள்ள அண்டை நாடுகளுக்கு நாம் சேவை செய்ய வேண்டும். இவ்வாறு நம்முடைய சேவையை விரிவுபடுத்திக் கொண்டு செல்வதற்கு எல்லையே கிடையாது. ஆண்டவன் ஒருபோதும் இந்த எல்லைகளை வரையறுத்த தில்லை.[15]

அத்தியாயம் 30

இராம ராஜ்யம்

இராம ராஜ்யம் என்பது எல்லாவற்றிலும் தன்னல மறுப்பாகும். மக்கள் தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடு.*

நிர்மாணத் திட்டத்தை முழுதாக நிறைவேற்றுவதானது, சுயராஜ்யத்திற்கு மேலான ஒன்றை அளிக்கும். அதுதான் இராமராஜ்யம் அல்லது தெய்வீக ஆட்சி. இந்த இராம ராஜ்யத்தின் மீது எனக்குத் தணியா வேட்கை இருக்கிறது. என்னுடைய ஆண்டவன், மேலே சுவர்க்கத்தில் இல்லை. இந்தப் பூமியிலேயே அவரைக் கண்டாக வேண்டும். அவர் இங்கே உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் தான் இருக்கிறார். அவர் எங்கும் நிறைந்தவர், சர்வ சக்தி படைத்தவர். அப்பாலுள்ள உலகைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இங்கே நம்முடைய கடமையை நாம் செய்ய முடியுமானால், மறு உலகம் தானாகவே தன்னைக் கவனித்துக் கொள்ளும். அரசியல் சுதந்திரம் உள்பட எல்லாவற்றிலும் இது உண்மை தான்.

இராணுவ மனப்பாங்கு வேறு, ஜனநாயகம் வேறு. இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை என்று நான் கருதுகிறேன். உலகத்தின் முன்னால் தான் வீசக்கூடிய வாளின் பலத்தை ஒரு ஜனநாயகவாதி நம்பியிருக்கமாட்டான். உலகின்முன் எவ்வளவு பெரிய சக்தியை அளிக்க முடியும் என்பதையே நம்பியிருப்பான். இந்தியாவின் முயற்சியால் உலகில் சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டால், ஆண்டவனுடைய சாம்ராஜ்யம் அதாவது இராம ராஜ்யம் இயல்பாகவே உருவாகும்.

பூலோகத்தில் ஆண்டவன் ஆட்சி

சுதந்திரம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று விளக்கம் கூறுமாறு நண்பர்கள் திருப்பித் திருப்பி என்னைக்

---

* *'எங் இந்தியா', 'ஹரிஜன்' பத்திரிகைகளில் காந்திஜி எழுதியுள்ள கட்டுரைகள் தலையங்கங்களிலிருந்தும், மற்றும் பல்வேறு இடங்களில் காந்திஜி நிகழ்த்திய பிரசங்கங்களிலிருந்தும் இராம ராஜ்யத்தைப் பற்றிய அவரது விளக்கங்கள் தொகுக்கப்பட்டு இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.*

கேட்கிறார்கள். கூறியது கூறல் என்ற பிழையை நான் செய்வதாக இருந்தாலும், நான் கனவு காணும் சுதந்திரம் இராம ராஜ்யமே. அதாவது பூலோகத்தில் ஆண்டவன் ஆட்சியே என்பதைக் கூறித்தானாக வேண்டும். சுவர்க்கம் எப்படியிருக்கும் என்பது எனக்குத் தெரியாது. எட்டாத தொலைவில் இருக்கும் ஒன்றை அறிந்துகொள்ள எனக்கு அக்கறை இல்லை. நிகழ்காலம் நல்லதாக இருந்தால், எதிர்காலம் முற்றிலும் அதிலிருந்து மாறுபட்டதாக இருக்க முடியாது.

திட்டவட்டமாகக் கூறுவதாய் இருந்தால் அரசியல், பொருளாதாரம், தார்மிகம் ஆகிய துறைகளில் நாம் விடுதலை பெற வேண்டும்.

அரசியல் விடுதலை என்பது, பிரிட்டிஷ் இராணுவத்தின் ஆதிக்கம் எந்த உருவில் இருந்தாலும் அதை அகற்றுவது என்பதுதான்.

பொருளாதார விடுதலை என்பது பிரிட்டிஷ் முதலாளி கள், பிரிட்டிஷ் முதலீடுகள் ஆகியவற்றிலிருந்து மட்டுமல்லாது அவர்களுடைய இந்திய ''சகாக்களி''டமிருந்தும் விடுதலை பெறுவதாகும். இதையே வேறு சொற்களில் கூறுவதானால், மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் கூட மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்குத் தாங்கள் சமமாய் இருப்பதாக உணர வேண்டும். முதலாளிகள் தங்களுடைய மூலதனத்தை யும் மிகத் தாழ்ந்த நிலையில், கடைப்பட்ட நிலையில் இருப்பவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம்தான் இது சாத்தியமாகும்.

தார்மிக சுதந்திரம் என்பது ஆயுதந் தாங்கிய படைகளிலிருந்து விடுதலை பெறுவதாகும். எனது மனக்கண்ணில் தோன்றும் இராமராஜ்யத்தில் பிரிட்டிஷ் படைகளுக்குப் பதிலாக தேசியப் படைகள் இடம்பெற முடியாது. தனது தேசிய ராணுவத்தினால் நிர்வகிக்கப்படுவதானால் கூட ஒரு நாடு தார்மிக சுதந்திரம் படைத்ததாக இருக்க முடியாது. அதில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள ஒரு குடிமகன் தனது முழு தார்மிக உயர்வையும் எட்டிப்பிடிக்க முடியாது.*

---

* *1946 ஏப்ரல் 29 'ஹரிஜனி'ல் காந்திஜி எழுதிய தலையங்கம்.*

சதுர வடிவம்

சுயராஜ்யத்தைப்பற்றி நான் கொண்டுள்ள கருத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம். நான் விரும்பும் சுய ராஜ்யம் வேற்று நாட்டார் ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலை அடைவதாகும்; அது முழுப் பொருளாதார சுதந்திரம். ஆகவே ஒரு புறம் அரசியல் விடுதலையும் மற்றொரு புறம் பொருளாதார விடுதலையும் இருக்கும். இந்த இரண்டைத் தவிர மற்றும் இரு புறங்களும் இருக்கும். அந்த இரண்டில் ஒன்று தார்மிக, சமுதாய சம்பந்தப்பட்டது. அதற்கு நேர் எதிர்ப்புறத்தில் இருப்பது தர்மம், அதாவது மிக உயர்ந்த பொருளில், சமயம். இதில் இந்து மதம், இஸ்லாம், கிறிஸ்துவ மதம் முதலிய எல்லா மதங்களும் அடங்கும். ஆயினும் இது இந்த மதங்களுக்கெல்லாம் மேம்பட்டது. சத்தியம் என்னும் பெயரில் இதை நீங்கள் அடையாளங் கண்டு கொள்ளலாம். இது சந்தர்ப்பத்திற்கு உதவக்கூடிய தற்காலிக உபசாந்தியான சத்தியம் அல்ல. ஜீவனுள்ள சத்தியம் - ஒவ்வொன்றிலும் நிறைந்து நிற்பதும் எல்லா அழிவையும் மாறுதலையும் கடந்ததுமான சத்தியம். தார்மிக, சமுதாய முன்னேற்றம் என்பதை நமக்குப் பழக்கமான அஹிம்சை என்ற சொல்லின் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம். இந்த சுயராஜ்யம் சதுர வடிவமானது என வைத்துக் கொள்வோம். இதில் ஒரு கோணங்கூடச் சரியாக இல்லாவிட்டால், இது சதுரமாக இராது. காங்கிரசின் சொற்களில் கூறுவதானால், சத்தியமும் அஹிம்சையும் இல்லாமல் நாம் அரசியல், பொருளாதார விடுதலை பெறமுடியாது. இன்னும் திட்டமாகக் கூறுவதானால், ஆண்டவன் மீது உயிருள்ள நம்பிக்கை கொள்ளாமல் நாம் அரசியல் பொருளாதார விடுதலை பெற முடியாது; தார்மிக சமுதாய உயர்வு அடைய முடியாது.

இராம ராஜ்யம் மக்கள் ஆட்சியே

அரசியல் விடுதலை என்பதன் மூலம் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையையோ, ருசியாவில் உள்ள சோவியத் ஆட்சியையோ, இத்தாலியின் பாசிச ஆட்சியையோ, ஜெர்மனியின் நாசிச ஆட்சியையோ நாம் அப்படியே 'காபி' அடிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. அவர்கள்

தங்களுக்கு ஏற்றமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது இயல்புக்கு ஏற்ற முறையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். அது என்ன என்பதை நான் முழுதாகக் கூறிவிட முடியாது. இதை நான் இராமராஜ்யம், அதாவது முற்றிலும் தார்மிக அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் ஆட்சி என்று வர்ணித்திருக்கிறேன். நாகபுரியிலும் பம்பாயிலும் வகுக்கப்பட்ட காங்கிரஸ் விதி அமைப்புகள் - இதில் நானே முக்கிய பொறுப்பு வகித்தேன் - இத்தகைய சுயராஜ்யத்தை அடைவதற்கான ஒரு முயற்சியே.

துணியும் உணவும்

அப்புறம் பொருளாதார விடுதலையை எடுத்துக் கொள்ளுங்கள். நவீன முறையில், அல்லது மேற்கு நாட்டு முறையில் தொழில் மயமாக்குவதால் பொருளாதார விடுதலை கிடைத்து விடாது. இந்தியாவின் பொருளாதார விடுதலை என்பது ஆண், பெண் உள்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட மனிதரும் தங்களுடைய மனப்பூர்வமான முயற்சியால் அடையும் பொருளாதார வளர்ச்சி என்றே எனக்குப் புலப்படுகிறது. இந்த முறையின் கீழ் ஆண்கள், பெண்கள் ஆகிய எல்லோருக்கும் போதுமான துணி கிடைக்கும். துணி என்றால் இடுப்பில் கட்டிக் கொள்ளும் துண்டு மட்டுமல்ல; அவசியமான ஆடைகள் என்று கூறுகிறோமே அவைகளெல்லாம் கிடைக்கும். இந்த முறையின் கீழ், தற்போது கோடிக் கணக்கான பேருக்குக் கிடைக்காதிருக்கும் பால், வெண்ணெய் உள்படப் போதுமான உணவு கிடைக்கும்.

சோசலிசம்

இங்குதான் இது என்னை சோசலிசத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறது. நம்முடைய மூதாதையர்கள் பரம்பரை பரம்பரையாக உண்மையான சோசலிசத்தை வழங்கிச் சென்றிருக்கிறார்கள். ‘நிலம் எல்லாம் கோபாலனுக்குத் தான் சொந்தம். ஆகவே எங்கே வரப்புப் போட்டு எங்கே எல்லைக் கல் ஊன்றுவது? இந்த எல்லையையெல்லாம் கொண்டு வந்தவன் மனிதனே. ஆகையால் அவைகளை அவனே அழிக்கவும் முடியும்’’ என்று கூறியவர்கள் நமது முன்னோர்கள். ‘கோபால்’ என்ற சொல்லுக்கு ‘இடையன்’ என்பது பொருள். அதற்கு ஆண்டவன் என்றும் மற்றொரு

பொருள் உண்டு. இக்கால மொழியில் கூறுவதானால் அது 'அரசாங்கம்' அதாவது 'மக்கள்' என்று பொருள்படும். இன்று நிலம் மக்களுக்குச் சொந்தமாக இல்லை என்பது மிக மிக உண்மைதான். ஆனால் குற்றம் மேற்கண்ட போதனையில் இல்லை: அதன்படி வாழாத நம்மிடம் தான் இருக்கிறது.

இம்சையே இல்லாமல்

சோசலிசத்தை அடைய விரும்பும் ஒரு நாடு - இதில் ருசியா கூட விதிவிலக்கானதல்ல - எவ்வளவு சிறந்த முயற்சியெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவு சிறந்த முயற்சியை நாமும் செய்ய முடியும். அதுவும் இம்சை இல்லாமலே செய்ய முடியும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. இம்சையின் மூலம் சொத்தைப் பறிமுதல் செய்வதற்குப் பதிலாகக் கையாளக்கூடிய மிகச் சிறந்த மாற்று வழி ஒன்று இருக்கிறது. கை ராட்டையைப் பரப்புவதும் அது எவ்வெவற்றின் சின்னமாக இருக்கிறதோ அவற்றைப் பரப்புவதுமே இம்மாற்று வழி. நிலமும் மற்ற சொத்துக்கள் எல்லாமே அவற்றிலிருந்து எவன் பாடுபடத் தயாராய் இருக்கிறானோ அவனுக்கு உடைமையாக இருக்கும். தீவினைப் பயனாக, இந்த எளிய உண்மை உழைப்பாளி களிடமிருந்து மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஏன் ஏழையானோம்?

இந்தியா ஏன் இவ்வளவு வறட்சியான ஏழை நாடாகி விட்டது என்பதை ஆராய்வோம். இங்கு பஞ்சு உற்பத்தியாவதைக் கிழக்கு இந்தியக் கம்பெனி பாழ்படுத்தி விட்டது. உணவிற்கு அடுத்தாற் போன்று மனிதனுக்குள்ள பெரும் தேவை உடைதான். ஆனால் கிழக்கு இந்தியக் கம்பெனியோ தன்னால் இயன்ற மார்க்கங்களையெல்லாம் கையாண்டு, இந்தியா தனது துணித் தேவைக்கு லங்காஷயரைச் சார்ந்திருக்குமாறு செய்து விட்டது... இவ்வாறு கோடிக்கணக்கான மக்களுக்குப் போதுமான வேலை இல்லாமல் செய்துவிட்டது. அவர்களுக்கு மாற்று வேலையும் அளிக்கவில்லை. இதனால், கையால் பஞ்சு அரைப்பது, பட்டை போடுவது, நூற்பது, நெய்வது ஆகியவை களெல்லாம் அழிந்து போயின. இவைகளைத் தொடர்ந்து, இந்திய கிராமங்களிலிருந்த மற்றத் தொழில்களும் அழிந்தன.

இவ்வாறு தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டத்தில் உழன்றதால், மக்களுக்கு ஒரு வகையான சோம்பேறித்தனம் ஏற்பட்டு விட்டது. இந்த நிலை மிகுந்த மனச்சோர்வு அளிப்ப தாய் இருக்கிறது. இவ்வாறாக மக்கள் நாளுக்குநாள் அதிகமாக திவாலாவதற்கு வேற்று நாட்டு ஆட்சி காரணமாய் இருந்திருக்கிறது. அதே சமயம் அதற்கு நாம்தான் அதிகப் பொறுப்பானவர்களாய் இருந்திருக்கிறோம். மத்திய தர வர்க்கத்தினர்தான், நாலு காசுக்காக, நம்பிக்கைத் துரோகம் செய்து இந்தியாவின் பொருளாதார விடுதலையைப் பணயம் வைத்துவிட்டனர். அவர்கள் மட்டும், இப்போது தங்களுடைய தவறை உணர்ந்து, இராட்டையின் செய்தியை கிராமங்களில் பரப்பி, கிராம மக்கள் தங்களுடைய சோம்பேறித்தனத்தைக் கைவிட்டு இராட்டையைச் சுழற்றுமாறு செய்தார்களானால், நாம் மக்களுடைய நிலையைப் பெருமளவு உயர்த்தி விடலாம். ஆனால் சுறுசுறுப்பான உழைப்பிற்குப் பதிலாகச் சோம்பேறித்தனமும் நம்பிக்கையின் இடத்தில் விரக்தியும் ஆட்சிக்கு வந்து விட்டால், உண்மையிலேயே அது பயங்கரமான நிலைதான்.

நீதியும் நியாயமும்

காங்கிரஸ் அடைய விரும்பும் சுயராஜ்யம் ஏழைகளின் சுய ராஜ்யம், அதாவது இராம ராஜ்யம். நீதிக்கும் நியாயத்திற் கும் சின்னமாக இராமன் விளங்கினான், சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் சின்னமாகவும் இருந்தான்....

நீதியும் நியாயமும் என்றால் என்ன? முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலும் நிலச் சொந்தக்காரருக்கும் குத்தகைதாரருக்கும் இடையிலும் நீதியும் நியாயமும் வாய்ந்த உறவை நிலை நிறுத்துவதாகும். இவ்வித உறவில், நிலச் சொந்தக்காரரும் முதலாளியும், குத்தகைதாரரையும் தொழிலாளியையும் சுரண்டுவதை நிறுத்தி விடுவார்கள்; அதற்குப் பதிலாக, அவர்களுடைய நலன்களை அக்கறையுடன் பாதுகாப்பார்கள்.

சத்தியமும் அஹிம்சையும்

நம்மிடம் அதிகாரம் வந்தவுடன், இந்த மாறுதல் களெல்லாம் தாமாகவே வந்துவிடும் என்பதல்ல. சத்தியம், அஹிம்சை ஆகியவற்றின் மூலம் நாம் சுயராஜ்யத்தை

அடைந்தால், அவைகளின் இயற்கையான விளைவாக இந்த மாறுதல்கள் வரும் என்றுதான் கூற வருகிறேன். ஆனால் அதே சமயம், நாம் சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடிக்கிறோமா என்பதுதான் கேள்வி. ஒரு தற்காலிக உபசாந்தியாகவோ அல்லது ஒரு அரசியல் கொள்கை போன்றோ சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப் பிடித்தால் அதன் விளைவாக இராம ராஜ்யம் ஏற்பட்டுவிட முடியாது. சத்தியத்தையும் அஹிம்சையையும் தர்மமாகக் கடைப்பிடிக்கும் போதுதான் இராம ராஜ்யம் ஏற்பட முடியும். எப்போதாவது ஒரு மகன் தனது தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை, ஒரு கொள்கையாகக் கருதிச் செய்ய முடியுமா? கொள்கை என்பது அடிப்படையில் ஒரு தற்காலிகமான அம்சமே; சூழ்நிலைகள் மாறுவதற்கேற்ப ஒருவன் தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ள முடியும். தியாகம் செய்யவோ கஷ்டப்படவோ அவசியமில்லாத வரை, சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடிப்பது எளிதானதுதான். ஆனால் எவனொருவன் தனது உயிரைக் கூடப் பணயம் வைத்து எல்லாவிதச் சூழ்நிலைகளிலும் அவற்றைக் கடைப்பிடிக்கிறானோ அவனே அவைகளை ஒரு தர்மமாகக் கடைப்பிடிப்பவனாவான். சத்தியத்தையும் அஹிம்சையையும் ஒரு கொள்கையாக அல்லாமல் தர்மமாகக் காங்கிரஸ்காரர்கள் கடைப்பிடிக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

இந்த ஆண்டில் தீபாவளி ஒரு முக்கிய நாளாகும். ஒளி விளக்குகள் வைத்துத் தீபாவளி கொண்டாடப்படுகிறதே அது ஏன் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இராமருக்கும் இராவணனுக்குமிடையே நடைபெற்ற பயங்கரப் போரில் நல்ல சக்திகளின் பிரதிநிதியாகிய இராமர், தீய சக்திகளின் பிரதிநிதியாகிய இராவணனை வெற்றி கொண்டார். இந்த வெற்றியானது இராம ராஜ்யத்தை ஏற்படுத்தியது.

இன்றோ, அந்தோ! இந்தியாவில் இராம ராஜ்யம் இல்லை. ஆகையால், அவர்கள் எவ்வாறு தீபாவளியைக் கொண்டாட முடியும்? இராமரைத் தனது உள்ளத்தில் பதிய வைத்திருப்பவன் தான் இந்த வெற்றியைக் கொண்டாட முடியும். ஏனென்றால் மக்களுடைய உள்ளத்தில் ஒளி ஏற்றி

வைக்கக்கூடியவன் ஆண்டவன் ஒருவனே. அத்தகைய ஒளி தான் உண்மையிலேயே பயனுள்ளதுமாகும். மனிதன் வைக்கும் ஒளி விளக்குகளைப் பார்க்க கூட்டங் கூட்டமாக மக்கள் செல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்று தேவையான ஒளி விளக்கெல்லாம் அவர்கள் உள்ளத்தில் ஏற்றி வைக்க வேண்டிய அன்பு என்னும் ஒளி விளக்குதான். அப்போது தான் அவர்கள், பாராட்டுதல்களைப் பெற உரிமையுள்ளவர்களாவார்கள். இன்று ஆயிரக்கணக்கான பேர் சொல்லொணாத இன்னல்களுக்குள்ளாகியிருக்கின் றனர். இங்கு கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்களில் யாராவது தனது நெஞ்சில் கை வைத்து, 'இவ்வாறு இன்னல் அடைபவர் கள் யாராயிருந்தாலும், இந்து மதத்தையோ முஸ்லிம் மதத்தையோ சீக்கிய மதத்தையோ சேர்ந்தவராய் இருந்தாலும் என்னுடைய சகோதரர் அல்லது சகோதரியைப் போன்றவரே' என்று கூற முடியுமா? இதுதான் உரைகல். நல்ல சக்திகளுக்கும், தீய சக்திகளுக்கும் இடையே நிரந்தரமாக நடைபெறும் போராட்டமாகிற உண்மையின் பிரதிநிதிகளே இராமரும் இராவணனும். உண்மையான ஒளி உள்ளத் திலிருந்து தான் வருகிறது.

தம்மைத் தலைமை அமைச்சரென அழைப்பதைவிட நாட்டின் முதல் ஊழியன் என அழைக்கலாமென ஜவஹர்லால்ஜி கூறியிருக்கிறார். எல்லா அதிகாரிகளுமே உண்மையில் மக்களின் சேவகர்களா? அப்படியாயின், ஆடம் பரங்களுக்கு இடமே இல்லை. எல்லோரும் மக்களையும் அவர்களுடைய தேவைகளையும் பற்றியே சிந்திப்பார்கள். அது இராம ராஜ்யமாகி விடும். பூலோகத்தில் ஆண்டவனுடைய சாம்ராஜ்யமாகி விடும். அது உண்மையான முழு விடுதலையாகி விடும். இன்றுள்ள விடுதலையின் நாற்றமோ என்னை மூச்சுத் திணற வைக்கிறது. அது பொய்யானதும் நிலையற்றதுமாகும்.

புராதன இலட்சியம்

கேள்வி : ஒரு சோசலிசப் புரட்சி நடந்தால், பொருளா தாரப் பிரச்னை மேலே வந்து நிற்கும். ஆகையால் வகுப்புச் சச்சரவுகளெல்லாம் பின்னணிக்குப் போய் விடும் என்று பெரும்பாலான சோசலிஸ்டுகள்

கூறுகிறார்கள். இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? இப்படிப்பட்ட புரட்சி நடந்தால், அது நீங்கள் இராம ராஜ்யம் என்று அழைக்கும் ஆண்டவனுடைய சாம்ராஜ்யத்தை நிறுவ உதவுமா?

பதில் : தற்போதுள்ள இந்து - முஸ்லிம் சண்டையை, நீங்கள் கற்பனை செய்யும் அந்தப் பொருளாதாரச் சண்டையுடன் ஒப்பிட முடியாது. ஒப்பிட்டால் முன்னது சிறியதாகிவிடும். இந்து - முஸ்லிம் சச்சரவு மூள்வ தானால் கூட, நமது தொல்லைகளெல்லாம் முடிந்து விடாது. தற்போது நடைபெறக்கூடியது இதுதான். நாம் அடிமையாக இருப்பது போய் விடுதலை வந்தவுடன், சமுதாயத்தின் பலவீனங்களெல்லாம் மேல் தளத்திற்கு வரும். ஆனால் அதைப்பற்றி அனாவசியமாகப் பரபரப்படையக் காரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் சம நிலையுடன் நடந்து கொண்டோமானால், அப்புறம் ஒவ்வொரு சிக்கலையும் தீர்த்து வைக்க முடியும். பொருளாதாரப் பிரச்னையைப் பொறுத்த வரை அதை நாம் எப்படியும் தீர்த்து வைத்தாக வேண்டும். இன்று பெரிய பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்கிறது. சோசலிசத்தின் அடிப்படையே பொருளாதார சமத்துவந் தான். தற்போது அநீதியான ஏற்றத்தாழ்வுகளெல்லாம் இருக்கின்றன. மக்களில் பெரும்பாலோருக்கு உண்ணப் போதுமான உணவு கிடைக்காமலிருக்க, ஒரு சிலர் செல்வத்தில் புரளுகிறார்கள். இத்தகைய தற்போதைய நிலையில் இராம ராஜ்யம் ஏற்படவே முடியாது. நான் தென்னாப்பிரிக்காவிலிருந்த போதே சோசலிசக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டேன். ஒரு நிலையான சீர்திருத்தத்தைச் செய்வதற்கு இம்சை ஒரு சாதனமாகாது என்று இம்சையை எதிர்க்கிறேன். சோசலிசவாதிகளையும் மற்றவர்களையும் நான் எதிர்ப்பதற்கும் இதுவே காரணம்.

கேள்வி : ஒரு மன்னரோ, ஜமீந்தாரோ, முதலாளியோ ஏழைகளின் தர்மகர்த்தாவாக விளங்க வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அப்படிப்பட்ட ஒரு தர்மகர்த்தா

வாவது இன்று இருக்கிறார் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அல்லது அவர்கள் மாறிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்களா?

பதில் : நான் சொல்லும் முழுப் பொருளில் அல்லா விட்டாலும் இத்தகைய ஒரு சிலர் - வெகு சொற்பமான பேர் - இருக்கத்தான் செய்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் நிச்சயமாக அந்த (தர்மகர்த்தா ஆகும்) திசையை நோக்கிச் சென்று கொண்டுதானிருக் கிறார்கள். எனினும், தற்போதுள்ள மன்னர்களும் மற்றவர்களும் ஏழைகளின் தர்மகர்த்தாக்களாவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா என்று கேட்கலாம். அவர்கள் தாங்களாகவே தர்மகர்த்தாக்களாகா விட்டால், அவர்கள் இச்சீர்திருத்தத்தை ஏற்குமாறு சூழ்நிலைகள் அவர்களைக் கட்டாயப்படுத்தும். முற்றிலும் அழிந்து போகாமல் தவிர்க்க வேண்டு மானால் அவர்கள் இவ்வாறு தான் ஆக வேண்டும். பஞ்சாயத்து ராஜ்யம் அமைக்கப்பட்ட பின்னர், இம்சையால் எதைச் செய்ய முடியாதோ அதைப் பொது மக்களின் கருத்து செய்துவிடும். பொதுமக்கள் தங்களுடைய பலத்தை உணராதவரைதான் ஜமீன்தார் களுக்கும், முதலாளிகளுக்கும், மன்னர்களுக்கும் தற்போதுள்ள அதிகாரங்களெல்லாம் இருந்து கொண்டிருக்கும். ஜமீன்தாரி அல்லது முதலாளித்துவம் என்ற தீமையுடன் மக்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டால், அதற்கு இரையில்லாது அது மடிந்துவிடும். பஞ்சாயத்து ராஜ்யத்தில் பஞ்சாயத்திற்குத்தான் மக்கள் பணிவார்கள். பஞ்சாயத்தோ தான் இயற்றும் சட்டத்தின் மூலந்தான் செயலாற்றும்.''

முஸ்லிம்களின் கவனத்திற்கு

நான் இராம ராஜ்யம் என்ற சொல்லைப் பயன்படுத்துவதை என்னுடைய முஸ்லிம் நண்பர்கள் தவறு தலாகப் புரிந்து கொள்ள வேண்டாம் என எச்சரிக்கிறேன். இராம ராஜ்யம் என்பதன் மூலம், இந்து ராஜ்யத்தை நான் குறிப்பிடவில்லை. இராம ராஜ்யம் என்பதன் மூலம் தெய்வ ராஜ்யத்தை, ஆண்டவனின் ராஜ்யத்தையே நான்

குறிப்பிடுகிறேன். என்னைப் பொறுத்தவரை இராமரும் இரஹீமும் இரு வேறு தனித்தனிக் கடவுள்களல்ல; ஒரே கடவுள்தான். சத்தியம், தர்மம் ஆகியவற்றின் உருவமான ஒரே கடவுள்தான் எனக்கு உண்டே தவிர வேறு கடவுள் இல்லை. நான் கற்பனை செய்யும் இராமன் இந்த உலகத்தில் வாழ்ந்தானோ இல்லையோ இராம ராஜ்யம் என்ற இந்தப் புராதன இலட்சியம் உண்மையான ஜன நாயகத்தைக் குறிக்கோளாகக் கொண்டதுதான். இதில் தாழ்ந்த குடிமகன் கூட சிக்கல் இல்லாமலும் பெரும் பணச் செலவு இல்லாமலும் விரைவில் நீதிபெற முடியும். இராம ராஜ்யத்தின் கீழ் நாய்க்கும் நீதி கிடைப்பதாகப் புலவர் வர்ணித்துள்ளார்.

இராம ராஜ்யத்தின் சாராம்சம்

இராம ராஜ்யத்தை சமய ரீதியாக விவரிப்பதாயின், அதைக் கடவுளின் சாம்ராஜ்யம் என்று கூறலாம். அரசியல் ரீதியாக விவரிப்பதாயின், அது தான் அப்பழுக்கற்ற, பரிபூரணமான ஜனநாயகமாகும். அத்தகைய ஜனநாயகத்தில், உடைமை, உடைமையின்மை, நிறம், இனம், மதம், ஆண், பெண் என்ற வேற்றுமை அடியோடு மறைந்து விடும். அதில் நிலமும் அரசாங்கமும் மக்களுக்குச் சொந்தமாக இருக்கும்; உடனடியாகவும், அதிகச் செலவின்றி மலிவாகவும், குற்றம் குறையற்ற நீதி கிடைக்கும். எனவே, அந்த ஜனநாயகத்தில் அவரவர் கடவுளைத் தொழ சுதந்திரம் இருப்பதுடன், பேச்சு சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் இருக்கும். இவையெல்லாம் இருப்பதற்கு மக்கள் தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொண்டுள்ள தார்மிகக் கட்டுப்பாடு என்ற சட்டத்தின் ஆதிக்கமே காரணமாக இருக்கும். அத்தகைய ஒரு நாடு சத்தியத்தையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; சுபிட்சமான, ஆனந்தமான, சுயதேவைப் பூர்த்தியுள்ள கிராமங்களும், கிராம சமுதாயங்களும் அடங்கியதாக இருக்க வேண்டும்.

ஆதார நூல்கள்

[இந்த நூலில் வெளியாகியுள்ள பகுதிகள் எவற்றிலிருந்து தொகுக்கப்பட்டவை என்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

ஹ-ஹரிஜன், ய.இ. - யங் இந்தியா, ப-பக்கம், நடேசன்-சென்னை கம்பெனியார் வெளியிட்ட 'மகாத்மா காந்தியின் பேச்சுக்களும் எழுத்துக்களும்' என்ற நூலின் நான்காம் பதிப்பு.]

அத்தியாயம் 1

1 ய.இ. 19-3-'31 ப. 38
2 ய.இ. 15-10-'31 ப. 305
3 ய.இ. 29-1-'25 ப. 40-41
4 ஹ. 2-1-'37 ப. 374
5 ய.இ. 1-12-'27 ப. 402-03
6 ய.இ. 6-8-'25 ப. 276
7 ய.இ. 26-6-'24 ப. 210
8 ய.இ. 28-7-'21 ப. 238
9 ய.இ. 1-5-'30 ப. 149
10 ய.இ. 16-4-'31 ப. 78
11 ய.இ. 23-1-'30 ப. 26
12 ய.இ. 5-3-'31 ப. 1
13 ய.இ. 5-3-'31 ப. 1
14 ய.இ. 26-3-'31 ப. 46-47
15 ய.இ. 26-3-'31 ப. 51
16 நிர்மாணத்திட்டம், 1961,ப. 7
17 ய.இ. 18-6-'31 ப. 147
18 ஹ. 2-1-'37 ப. 374
19 ஹ. 27-5-'39 ப. 143
20 ஹ. 25-3-'39 ப. 64
21 ஹ. 25-3-'39 ப. 65

அத்தியாயம் 2

1 மகாத்மா காந்தி-இறுதிக் கட்டம் 1956, தொகுப்பு 1 ப. 190-91
2 மகாத்மா காந்தி - இறுதிக் கட்டம், 1956, தொகுப்பு 1 ப.539-40
3 ஹ. 18-1-'48 ப. 526

அத்தியாயம் 3

1 ய.இ. 12-11-'31 ப. 355
2 ய.இ. 22-10-'31 ப. 318
3 ய.இ. 7-10-'26 ப. 348
4 ய.இ. 25-7-'29 ப. 244
5 ய.இ. 7-10-'26 ப. 348
6 ய.இ. 17-3-'27 ப. 85
7 ஹ. 29-8-'36 ப. 226
8 ஹ. 1-9-'46 ப. 285
9 ய.இ. 30-4-'31 ப. 88
10 நடேசன் ப. 353-54
11 ஹ. 29-9-'40 ப. 299
12 ஹ. 28-1-'39 ப. 438
13 ஹ. 20-12-'28 ப. 422
14 ய.இ. 7-10-'26 ப. 348
15 ய.இ. 20-11-'24 ப. 386
16 ய.இ. 5-11-'25 ப. 377
17 ய.இ. 15-4-'26 ப. 142
18 ய.இ. 3-11-'21 ப. 350
19 ய.இ. 17-6-'26 ப. 218
20 ய.இ. 13-11-'24 ப. 378
21 ஹ. 27-2-'37 ப. 18
22 ஹ. 2-11-'34 ப. 301-02
23 "புது அடிவானத்தை நோக்கி" 1959 ப.45-46

அத்தியாயம் 4

1 ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு, 6-12-'44
2 அமிர்தபஜார் பத்திரிக்கை, 30-6-'44
3 ஹிந்த் சுயராஜ், 1962 ப. 94

4 ஹ. 31-3-'46 ப. 63
5 ய.இ. 17-3-'27 ப. 86
6 சில பொறுக்கு மணிகள், 1949 ப. 17
7 ஹ. 23-6-'46 ப. 198
8 ஹ. 25-8-'46 ப. 282
9 ஹ. 4-4-'36 ப. 63
10 ஹ. 4-4-'36 ப. 63-64
11 நடேசன், ப. 323
12 ய.இ. 30-4-'31 ப. 94
13 ஹ. 1-3-'35 ப. 21
14 ய.இ. 11-9-'24 ப. 300
15 ஹ. 1-3-'35 ப. 21
16 ஹ. 1-3-35 ப. 21
17 ஹ. 7-3-36 ப. 30
18 ஹ. 11-4-36 ப. 68
19 ஹ. 16-5-'36 ப. 112
20 ஹ. 27-2-'37 ப. 18
21 ஹ. 9-10-37 ப. 293
22 ய.இ. 9-11-'29 ப. 364

அத்தியாயம் 5

1 ய.இ. 26-12-'29 ப. 420
2 ஹ. 29-8-'36 ப. 226
3 ஹ. 20-1-'40 ப. 413
4 பழைய கடிதங்களின் தொகுப்பு-1958 ப. 506-7 (5-10-'45)
5 ஹ. 26-7-'42 ப. 238
6 ஹ. 9-1-'37 ப. 383
7 பழைய கடிதங்களின் தொகுப்பு-1958 ப. 506-7 (5-10-'45)

அத்தியாயம் 6

1 ய.இ. 13-11-'24 ப. 378
2 ஹ. 18-1-'42 ப. 5
3 ய.இ. 15-11-'28 ப. 381
4 ய.இ. 26-12-'24 ப. 421
5 நடேசன், ப. 350
6 நடேசன், ப. 350
7 ஹ. 23-3-'47 ப. 79
8 ய.இ. 6-10-'21 ப. 314
9 ய.இ. 26-3-'31 ப. 49
10 ''எரவாடா மந்திரிலிருந்து'' 1957 ப. 34
11 ஹ. 29-6-'35 ப. 156
12 ய.இ. 13-10-'21 ப. 326
13 ஹ. 29-6-'35 ப. 156
14 ஹ. 23-2-'47 ப. 36
15 ய.இ. 13-10-'21 ப. 325
16 ஹ. 9-10-'37 ப. 292
17 ஹ. 15-1-'38 ப. 416
18 ய.இ. 17-3-'27 ப. 86
19 நிர்மாணத் திட்டம்,1961 ப.18
20 ஹ. 25-8-'40 ப. 260
21 ஹ. 30-12-'39 ப. 391
22 ஹ. 4-11-'39 ப. 331
23 நடேசன் ப. 336-42
24 ''எரவாடா மந்திரிலிருந்து'' 1957, அத்தியாயம் XVI ப. 64-67
25 ''புது அடிவானத்தை நோக்கி'' 1959 ப. 8
26 ஹ. 26-7-'42 ப. 238
27 ஹ. 27-7-'35 ப. 188
28 ஹ. 28-7-'46 ப. 236
29 ஹ. 26-7-'42 ப. 238
30 ஹ. 9-3-'47 ப. 58-59
31 ஹ. 26-7-'42 ப. 238
32 ஹ. 28-7-'46 ப. 236
33 ஹ. 26-7-'42 ப. 238
34 ஹ. 26-7-'42 ப. 238
35 'புது அடிவானத்தை நோக்கி' ப. 194
36 ஹ. 31-7-'37 ப. 197

அத்தியாயம் 7

1 ய.இ. 11-4-'29 ப. 114-15
2 ''எரவாடா மந்திரிலிருந்து'' 1957, அத்தியாயம் IX ப. 35-37

3 ய.இ. 8-1-'25 ப. 15-16
4 ய.இ. 26-3-'31 ப. 49
5 ஹ. 29-6-'35 ப. 156
6 ஹ. 1-6-'35 ப. 125
7 ஹ. 29-6-'35 ப. 156
8 ய.இ. 13-8-'25 ப. 282
9 ஹ. 11-5-'35 ப. 99

அத்தியாயம் 8

1 ய.இ. 26-11-'31 ப. 368
2 ஹ. 25-8-'40 ப. 260
3 ய.இ. 5-11-'31 ப. 384
4 ஹ. 13-7-'40 ப. 205
5 ஹ. 16-3-'47 ப. 67

அத்தியாயம் 9

1 ஹ. 3-6-'39 ப. 145
2 ''மாடர்ன் ரெவ்யூ'' 1935 ப. 412
3 ஹ. 3-12-'38 ப. 358
4 ஹ. 7-1-'39 ப. 417
5 ஹ. 16-12-'39 ப. 376
6 ஹ. 22-2-'42 ப. 49

அத்தியாயம் 10

1 நடேசன், ப. 336-44
2 ''எரவாடா மந்திரிலிருந்து'' 1957, அத்தியாயம் XVI ப. 66

அத்தியாயம் 11

1 சர்க்காவின் தத்துவம், 1951 ப. 86-88
2 ஹ. 30-11-'35 ப. 333
3 கதர்-ஏன், எப்படி? - 1959 ப. 166
4 ஹ. 19-10-'47 ப. 379
5 ஹ. 5-4-'42 ப. 107
6 ஹ. 27-7-'35 ப. 188
7 ஹ. 22-8-'36 ப. 217
8 கதர்-ஏன் எப்படி? - 1959 ப. 162
9 ஹ. 20-4-'35 ப. 80
10 ய.இ. 25-4-'29 ப. 135
11 ய.இ. 10-6-'26 ப. 214
12 ஹ. 6-10-'46 ப. 344

அத்தியாயம் 12

1 ய.இ. 28-5-'31 ப. 123
2 ஹ. 18-7-'46 ப. 236
3 ஹ. 18-1-'48 ப. 517
4 ஹ. 4-1-'48 ப. 499-500

அத்தியாயம் 13

1 ஹ. 21-12-'47 ப. 480
2 ஹ. 8-5-'37 ப. 104
3 ஹ. 5-6-'37 ப. 130
4 ஹ. 5-6-'37 ப. 131
5 ஹ. 28-8-'37 ப. 225
6 ஹ. 2-10-'37 ப. 282
7 ஹ. 31-7-'37 ப. 197
8 ஹ. 11-9-'37 ப. 256
9 ஹ. 18-9-'37 ப. 261
10 ஹ. 18-9-'37 ப. 42
11 ஹ. 9-10-'37 ப. 292
12 ஹ. 9-10-'37 ப. 293
13 ஹ. 11-6-'38 ப. 143
14 ஹ. 2-11-'47 ப. 393
15 ஹ. 18-2-'39 ப. 14-15
16 ''நிர்மாணத் திட்டம், 1961 ப. 18

அத்தியாயம் 14

1 கதர்-ஏன், எப்படி?-1959, ப. 162
2 கதர்-ஏன், எப்படி?-1959, ப. 181
3 ''எரவாடா மந்திரிலிருந்து'' 1957, ப. 35-37
4 ஹ. 25-8-'46 ப. 281-82
5 ஹ. 28-1-'39 ப. 439
6 ஹ. 28-1-'39 ப. 439
7 ஹ. 1-3-'35 ப. 21

8 ஹ. 16-5-'36 ப. 111
9 ஹ. 6-3-'37 ப. 29
10 ஹ. 6-3-'37 ப. 29
11 "பம்பாய் கிராணிகிள்", 28-10-'44
12 ஹ. 8-2-'48 ப. 21

அத்தியாயம் 15

1 "பம்பாய் கிராணிகிள்", 28-10-'44
2 ஹ. 2-1-'37 ப. 375
3 ஹ. 20-5-'39 ப. 133
4 ஹ. 20-4-'40 ப. 97
5 "அமிர்தபஜார் பத்திரிகை" 2-8-'34
6 ,, 3-8-'34
7 ,, 2-8-'34
8 ,, 2-8-'34
9 ஹ. 5-12-'36 ப. 338
10 ய.இ. 5-12-'29 ப. 396
11 ய.இ. 28-5-'31 ப. 120
12 ஹ. 4-5-'47 ப. 134
13 ஹ. 1-6-'47 ப. 172
14 ஹ. 2-1-'37 ப. 375
15 ஹ. 9-3-'47 ப. 58

அத்தியாயம் 16

1 ஹ. 15-2-'42 ப. 39
2 ஹ. 9-3-'47 ப. 59
3 ஹ. 9-3-'47 ப. 59

அத்தியாயம் 17

1 ஹ. 28-12-'47 ப. 484
2 ஹ. 28-12-'47 ப. 488
3 ஹ. 1-3-'35 ப. 20
4 ஹ. 15-3-'35 ப. 36
5 ஹ. 17-8-'35 ப. 213-15
6 ஹ. 24-8-'35 ப. 218-19, 224
7 ஹ. 26-7-'42 ப. 238

அத்தியாயம் 18

1 ஹ. 19-10-'47 ப. 376-77
2 ஹ. 25-1-'42 ப. 12
3 ஹ. 24-2-'46 ப. 19
4 ய.இ. 2-4-'25 ப. 118 & ஹ. 14-9-'35 ப. 244

அத்தியாயம் 19

1 நிர்மாணத்திட்டம், 1951 ப. 11-14
2 ய.இ. 17-9-'25 ப. 321
3 ஹ. 17-11-'46 ப. 404
4 ய.இ. 20-10-'21 ப. 329
5 ய.இ. 21-7-'20 ப. 4
6 ய.இ. 3-11-'21 ப. 350
7 ய.இ. 8-12-'21 ப. 405
8 ய.இ. 21-8-'24 ப. 277
9 ய.இ. 18-6-'25 ப. 211
10 ய.இ. 27-8-'25 ப. 299
11 ய.இ. 17-2-'27 ப. 52
12 ஹ. 27-4-'34 ப. 85
13 ய.இ. 27-5-'26 ப. 190
14 ய.இ. 27-5-'26 ப. 190
15 ய.இ. 30-9-'26 ப. 341
16 ஹ.13-4-'40 ப. 85
17 ய.இ. 8-12-'21 ப. 406
18 ய.இ. 29-6-'21 ப. 206
19 ய.இ. 21-5-'25 ப. 177
20 சர்க்கா மூலம் சுயராஜ்யம் 1945 ப. 8
21 சர்க்கா மூலம் சுயராஜ்யம் 1945 ப. 5
22 கதர்-ஏன், எப்படி? 1959 ப. 153-57
23 சர்க்கா தத்துவம் 1959 ப. 94
24 கதர்-ஏன்,எப்படி?1959 ப.149
25 கதர்-ஏன்,எப்படி? 1950ப.150
26 கதர்-ஏன்,எப்படி? 1959ப.151
27 கதர்-ஏன்,எப்படி? 1959ப.154
28 கதர்-ஏன்,எப்படி? 1959ப.181
29 கதர்-ஏன்,எப்படி? 1959ப.184
30 கதர்-ஏன்,எப்படி? 1959ப.185

31 கதர்-ஏன்,எப்படி? 1959ப.189
32 ஹ. 22-9-'46 ப. 320
33 ஹ. 22-9-'46 ப. 222
34 ஹ. 22-9-'46 ப. 322

அத்தியாயம் 20

1 நூற்றுக்கு நூறு சுதேசி 1968 ப. 4
2 ,, ப. 5
3 ஹ. 10-8-'34 ப. 204
4 ஹ. 28-9-'34 ப. 259
5 ஹ. 30-11-'34 ப. 332
6 ஹ. 16-11-'34 ப. 316
7 ஹ. 16-11-'34 ப. 316
8 ஹ. 16-11-'34 ப. 316
9 ஹ. 16-11-'34 ப. 316
10 ஹ. 16-11-'34 ப. 316
11 ஹ. 16-11-'34 ப. 316
12 ஹ. 16-11-'34 ப. 317
13 ஹ. 7-12-'34 ப. 340
14 ஹ. 7-12-'34 ப. 340-341
15 ஹ. 7-12-'34 ப. 341
16 நிர்மாணத்திட்டம் 1961 ப. 16-17
17 ஹ. 4-1-'35 ப. 372
18 கதர்-ஏன்,எப்படி? 1959ப.150
19 கதர்-ஏன்,எப்படி? 1959ப.151
20 கதர்-ஏன்,எப்படி? 1959ப.159
21 கதர்-ஏன்,எப்படி? 1959ப.162
22 கதர்-ஏன்,எப்படி? 1959ப.163
23 கதர்-ஏன்,எப்படி? 1959ப.177
24 கதர்-ஏன்,எப்படி? 1959ப.181
25 ஹ. 25-1-'35 ப. 400
26 ய.இ. 6-10-'21 ப. 138
27 ய.இ. 22-10-'25 ப. 361
28 ய.இ. 3-11-'27 ப. 367
29 ஹ. 26-10-'34 ப. 292
30 ஹ. 10-3-'46 ப. 34
31 ஹ. 2-9-'39 ப. 253
32 நூற்றுக்கு நூறு சுதேசி 1958 ப. 5
33 'ஆரோக்கியத் திறவுகோல்' 1960 ப. 33-34
34 ஹ. 1-2-'35 ப. 407
35 ஹ. 7-9-'34 ப. 236-37
36 கதர்-ஏன்,எப்படி? 1959ப.185
37 ஹ. 14-9-'34 ப. 234
38 ஹ. 14-9-'34 ப. 241
39 கிராம உத்தியோக் பத்ரிகா ஜூலை 1946

அத்தியாயம் 21

1 ஹ. 3-7-'37 ப. 168
2 ஹ. 16-9-'39 ப. 276
3 ஹ. 15-9-'40 ப. 289

அத்தியாயம் 22

1 ஹ. 2-11-'34 ப. 302
2 நடேசன், ப. 336
3 சர்க்கா மூலம் சுயராஜ்யம், 1945 ப. 5
4 ஹ. 2-2-'34 ப. 2, 6
5 கதர்-ஏன், எப்படி?-1959 ப.166
6 ஹ. 7-7-'46 ப. 209
7 ஹ. 18-1-'42 ப. 5
8 25-3-'39 ப.65

அத்தியாயம் 23

1 நிர்மாணத் திட்டம், 1961 ப. 15
2 ஹ. 8-2-'35 ப. 416

அத்தியாயம் 24

1 நிர்மாணத் திட்டம், 1961 ப. 21
2 ஆரோக்கியத் திறவுகோல், 1960 ப.3
3 நிர்மாணத் திட்டம், 1961 ப.22
4 ஹ. 7-4-'46 ப. 69
5 ஹ. 26-5-'46 ப. 153
6 ஹ. 2-6-'46 ப. 165

7 ஹ. 11-8-'46 ப. 257
8 ஹ. 11-8-'46 ப. 260
9 'ஆரோக்கியத் திறவுகோல்' 1960 ப. 57
10 ,, ப. 58-59
11 ,, ப. 59
12 ,, ப. 59-60
13 ,, ப. 60
14 ,, ப. 61
15 ,, ப. 61
16 ,, ப. 62
17 ,, ப. 63-65
18 ,, ப. 67-69
19 ,, ப. 71-72
20 ,, ப. 73-75
21 ,, ப. 75
22 ,, ப. 76
23 ,, ப. 77
24 ,, ப. 78
25 ,, ப. 79-81
26 ,, ப. 81-82
27 ,, ப. 82
28 ,, ப. 82
29 ,, ப. 83
30 ஹ. 5-4-'35 ப. 59
31 ஹ. 11-5-'35 ப. 100
32 ஹ. 9-11-'35 ப. 308

அத்தியாயம் 25

1 'ஆரோக்கியத் திறவுகோல்' 1960 ப.13-27

அத்தியாயம் 26

1 ஹ. 18-6-'38 ப. 152
2 ஹ. 1-9-'40 ப. 265
3 ஹ. 5-5-'46 ப. 113

அத்தியாயம் 27

1 ஹ. 23-5-'36 ப. 119
2 ஹ. 25-3-'39 ப. 64
3 ஹ. 15-2-'48 ப. 32
4 ஹ. 31-8-'34 ப. 227-30
5 ஹ. 9-1-'37 ப. 383
6 ஹ. 18-8-'40 ப. 252
7 ஹ. 2-11-'35 ப. 302
8 ஹ. 23-11-'35 ப. 324-25
9 ஹ. 29-2-'36 ப. 18-19
10 ஹ. 24-8-'35 ப. 223
11 ஹ. 2-3-'47 ப. 44
12 ஹ. 25-7-'36 ப. 187
13 ஹ. 11-4-'36 ப. 68
14 ஹ. 20-2-'37 ப. 16
15 ஹ. 22-3-'35 ப. 42
16 ஹ. 29-3-'35 ப. 49
17 ஹ. 17-3-'46 ப. 49

அத்தியாயம் 28

1 ஹ. 28-4-'46 ப. 104
2 ஹ. 1-9-'46 ப. 288

அத்தியாயம் 29

1 ய.இ. 2-7-'31 ப. 161
2 ய.இ. 26-3-31 ப. 51
3 ஹ. 23-9-'39 ப. 278
4 ஹ. 2-11-'34 ப. 302
5 ஹ. 24-2-'46 ப. 18
6 ஹ. 17-11-'46 ப. 404
7 ''சுயராஜ்யம் பெற இந்தியாவுக்குள்ள உரிமை'' 1932 ப. 209
8 ஹ. 5-10-'47 ப. 354
9 ஹ. 12-2-'38 ப. 2
10 ''புது அடிவானத்தை நோக்கி'', 1959 ப. 99
11 ,, ப. 200
12 ,,
13 ய.இ. 17-9-'25 ப. 321
14 ய.இ. 16-4-'31 ப. 79
15 ய.இ. 31-12-'31 ப. 427

கிராம சுயராஜ்யம்

காந்திய இலக்கியச் சங்கம்

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,

மதுரை – 625 020.

✆ : 0452-2533957

